JL
12HNO5
NO5·8
162413

# சக்ரவர்த்தினி.

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்,
மற்றீண்டு வாரா நெறி".

VOL VIII. தொகுதி - அ. | AUGUST & SEPTEMBER 1912. ஆகஸ்டு, செப்டம்பர்மீ 1912 | NO. 1-2. பகுதி க-உ.

## சக்ரவர்த்தினியின் ஏழாவ தாண்டு நிறைவும் எட்டாவதாண்டு விஜயமும்.

அயனரி யரன் என்னு மும்மூர்த்திகளின் பேரருளால் சக்ரவர்த்தினியின் ஏழாவதாண்டு (1912-ம் வருடம்) ஜூலை மாதத்துடன் இனிது முடிவுபெற்றது.

இவ்வருடத்து ஜனவரி மாதச்சஞ்சிகை முன்னர்ப் பத்திராதிபரும் பத்திராசிரியருமா யிருந்த பிரஹ்ம ஸ்ரீ P. அப்புசாமி ஐயரவர்களால் வெளியிடப் பட்டது. யாம் இதனை வாங்கியபோது 6-மாதத்துச் சஞ்சிகை நின்றிருந்தது. நின்றிருந்த சஞ்சிகையைப் பூர்த்திசெய்வது எமது கடமையாய் விட்டமையின், யாம் அதிக சிரமத்துடன் இரண்டிரண்டு மாதச் சஞ்சிகையைச்சேர்த்து வெளி விட்டனம். இவ்வாறு செய்தது சந்தாதாரர்களின் அநுகூலத்தை முன்னிட்டே யாதலின், அவர்கள் சஞ்சிகைகள்குறித்தகாலத்தில் வெளிவரத் தாமதப்பட்டமைக்குப் பெரிதும்மன்னிப்பார்களென்று நினைக்கின்றோம். முன் பத்திராதிபர் ஜூலைமாதம் வரைக்கும் சந்தாத் தொகையைச் சிலரிடமிருந்து முன்னரே வாங்கியிருக்கின்றமையின், யாம் வெளியிட்ட * 3 சஞ்சிகையும் சந்தாதாரர்கட்கு எமது செலவில் இலவசமாக அனுப்ப வேண்டியதாயிற்று. இதனால் எமக்கு 150-ரூபாய்வரையில் செலவாயிருக்

* பிப்ரவரி - மார்ச்சு 1. ஏப்ரல் - மே 1. ஜூன் - ஜூலை 1.

கிறது. அதைப் பொருட்படுத்தாது சஞ்சிகையைத் தொடர்ந்து வெளியிட்டு வந்தது சந்தாதாரர்கட்கு நஷ்டமுண்டாக்கக் கூடாதென்னும் நோக்கங்கொண்டேயாம்.

இப்போது வெளிவருமிச்சஞ்சிகை இவ்வருடத்து † முதலாண்டுமாதச் சஞ்சிகையாமாதலின், சந்தாதாரர்கள் முன்னர் இதனை ஆதரித்து வந்ததுபோல் மேலும் ஆதரித்து வருவார்களென்று எதிர்பார்க்கின்றோம். இனி இது நவம்பர்மாத முதலிலிருந்து கிரமமாக மாதந்தோறும் முதற்றேதியிலேயே வெளிவரும்

எமது வாயிலாக நடைபெறும் இச்சஞ்சிகையில் பெரும்பான்மையும், இகபரசாதனவேதுவாகிய கல்வி அறிவு ஒழுக்கம் அபிவிர்த்தி யாவதற்குரிய விஷயங்களும், மாதராடவர் தருமங்களும், மனோலய சாதனங்களும், பிறவும் பிரசுரஞ் செய்யப்படுமாதலின், இஃதத்தியாவசியகமாக ஒவ்வொரு வீட்டினு மிருத்தல்வேண்டுமென்பது முன்னர் யாம் வெளியிட்ட மூன்று சஞ்சிகையைப் படித்தவர்கட்கு நன்கு வெளியாம். சிரமங் கருதாது யாம் நடத்திவருமிச் சஞ்சிகையை யாவரும் ஆதரித்து வருவதே எமக்குச் செய்யும் உபகாரமாம். இச்சஞ்சிகையைக் கண்ணுறும் அன்பரும் சந்தாதாரர்களும் தத்தமது பந்துக்களுக்கும் சிநேகிதர்கட்கும் இதன் கண்ணுள்ள விஷயங்களை படித்துக் காட்டி அவர்களும் இப்பத்திரிகையை வாங்குமாறு செய்வார்களென்று வேண்டுகின்றோம்.

இதுகாறும் இப்பத்திரிகையைப் பெற்று வந்தோருக்கும் இதற்கு விஷயதானஞ்செய்து வந்தோருக்கும் மனப்பூர்த்தியாண் வந்தன மளிக்கின்றோம். சந்தாதாரரும் விஷயதானஞ் செய்வோரும் அன்புடன் இதனை ஆதரித்து வருமாறும், இச் சஞ்சிகையுடன் தொடங்கிய இவ்வருடம் இனிது முடிவுபெறுமாறும், எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம்தத்சத்.

162413

† சஞ்சிகையின் வருட ஆரம்பம் பிரதி வருடமும் ஆகஸ்டு மாதமாம் இஃது ஆகஸ்டு, செப்டம்பர் மாதச் சஞ்சிகை. ப-ர்.

# கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.

உலகங் காரிய வடிவமாக விருத்தலின், இதற்கொரு கர்த்தா வின்றியமையா திருக்க வேண்டுமென்பது ஆஸ்திகராவா ரியாவராலும் அங்கீகரிக்கப்பட்ட விஷயமாம். பழிபாவங்கட் கஞ்சி அறநூல் கூறியவாறு மனம் வாக்குக் காயங்களால் கடவுளைத் தியானித்தும் துதித்தும் தொழுதும் வருகின்றவர்களே ஆஸ்திகராவாரென்பது மிகுபிரசித்தமாம். பழிபாவங்கட்கஞ்சாதொழுகுகின்றவர்கள் ஆஸ்திகர் போன்று நடிப்பினும், அவர்களுண்மையிலாஸ்திக ராகாரென்பது பற்றிக் கூறுவ தநாவசியகமாம். நம்மனோருள் மிகவும்பெரும்பான்மையோர் பழிபாவங்கட் கஞ்சாதொழுகுகின்றமையை நோக்குமிடத்து, ஆஸ்திகப்போலிகள் மிகுதியாகவிருந் தாஸ்திகர்போன்று நடிக்கின்றனரென்பது நன்குவிளங்குவதாம். ஆஸ்திகப்போலிகளா யிருந்தவருள் ஒருவரும் கடவுள் கருணைக்குப் பாத்திரமாகா திம்மையில் பெருந்துன்பத்தையும் மறுமையில் நரகவேதனையையு மடைவரென்பதற்குத் துரியோதனன்முதலாயினோர் தக்க சான்றாவர்; துரியோதனன் வேள்விமுதலியவற்றைப் புரிந்தொழுகினனாயினும், அவன் மறுமையில் நரகத்தை யடைந்து பொறுத்தற்கரிய பெருந் துன்பத்தை யடைந்தானென்று பாரத முதலிய நூல்கள் கூறுவதை நோக்குமிடத்து, ஆஸ்திகப்போலிகள் இம்மையில் பெருந்துன்பத்தையும் மறுமையில் நரகவேதனையையு மடைவார்களென்பது நன்கு விளங்குதலின், ஆஸ்திகப்போலிகளாக வொழுகாது யதார்த்த ஆஸ்திகராக வொழுகினாற்றான் நாம் கடவுளருளுக்குப் பாத்திர ராதல்கூடும்.

நாமொவ்வொருநாளும் தீர்த்தற்கரியவயிற்றை நிரப்புதற்பொருட்டும், சிற்றின்பத்தை யநுபவித்தற் பொருட்டும், படாதபாடுபட்டுப் பொருளைத் தேடமுயலுகின்றோமே யன்றி, கடவுள் வழிபாட்டைப் பற்றி யொரு சிறிதுங் கருதாது கனவுலகம்போன்றுள்ள வுலகவாழ்வி லுவப்புற்றுக் காலத்தை வீணேயொழிக்கின்றோம். கடவுள் வழிபாட்டினால் கருதற்கரிய நலமெல்லா முண்டாம்; கடவுள் தம்மை நம்பினவரை யொருபோதுங் கைவிடுவதில்லை யென்பதை நன்குணர்ந்து, காலத்தைப் பயனுடையதாகச்செய்ய முயன்றாலன்றோ நாம் இம்மையிற்றானே

செம்பொருளை (கடவுளை) யினிதுறவுணர்ந்தேக்கமற்ற வாழ்வடைந்திருத்தல் சித்தியாம். கடவுளிருப்ப துண்மையாயின், அவரேன் நமக்கு விளங்கவில்லையென்றுகருதுதல் தவறுடைய கொள்கையாம். கடவுள் திருக்கு(அறிவு)வடிவமாக விருப்பவர்; அவரைச் சான்றோர்களருளிய முறையாக வறியமுடியுமேயன்றி, வேறெவ்வாற்றானுமறிதல் முடியாதென்று நிச்சயித்து, "தெய்வமிகழேல்" என்பதைஸ்திரமாகக்கொண்டு திரிகரணசுத்தியாகப்பழிபாவங்கட்கஞ்சியொழுகுபவரன்றே கடவுள் கருணைக்குப்பாத்திரமாதல்கூடும். கடவுள் நமக்குக் கருணைசெய்யாதிருப்பதற்கேது நம்முடைய தவறேயன்றி, அவருடைய தவறன்றாம். மாசுநீங்கிய கண்ணாடியில் நம்முடைய உடம்புநன்றாகப்பிரதிபிம்பிப்பதுபோன்று, காமக்குரோதமென்றற்றொடக்கத்துத் தீக்குணங்கள் நீங்கியமனத்தில் கடவுளினருள் பிரதிபிம்பிப்பதாமென்பதையறிஞர் வாயிலாகச் செவ்விதாகவறிந்து, காமக்குரோத முதலிய தீக்குணத்தை யொழித்தவர் தாம் எல்லாமாயு மல்லவாயும் விளங்குங் கடவுளது கருணைக்குப் பாத்திரராய் வாழ்வர். தீயாற்சூழப்பட்டகாடுபோன்றுகாமாதித்துர்க்குணங்களால்சூழப்பட்டுஉலகபோகமொன்றையேயடையக்கருதிப் பழிபாவங்கட் கேதுவாகிய வினைகளைப் பராமுகமின்றிச் செய்துவருகின்றவர்கள் ஒருவாற்றானுங் கடவுள் கருணைக்குப்பாத்திரமாயுய்யும் நெறிகண்டுய்வதில்லையென்பதை யுய்த்துணர்ந்தாலன்றே நாம் கடவுள் கருணைக்குப்பாத்திரமா யுய்தல்கூடும். எல்லாமுன்னுடைமை, எல்லா முன்னடிமை, உன்னையன்றியுண்மையிலொருசிறிதுமில்லை, உன்னுடைய மாயா விலாசத்தால் மயங்கிச்செய்வன தவிர்வன வுணராது தீயவழியி லொழுகு மென்னைச் சிறிதருள் புரிந்து காத்தருளல் வேண்டுமென்று சிந்தை நைந்து. திருவருளொன்றையே பிறவிக்கடலைக்கடப்பதற்குப் பெருந்தோணியாமென்று துணிந்து, மனத்தாலும் வாக்காலும் காயத்தாலும் பராமுகமின்றிப் பகவானைத் தியானித்துத் தோத்தரித்துத் தொழுதுவரும் பாக்கியத்தைப் பெற்று ஒவ்வொரு தினத்தையும் உயிர்க்குறுதி தருந் தினமாகச் செய்து வந்ததனாலன்றோ பிரகலாத வாழ்வார்; பாண்டவர், அப்பர், சுந்தரர்முதலியமகாத்துமாக்கள் கடவுள் கருணைக்குப் பாத்திரமாய்க் கலக்கமற்ற நிலையினைப்பெற்று இனிப் பிறவா நிலையையெய்துதற் குரியராயினார். மாயையின் சத்துவரசஸ்தமோ குணங்களின்வாயிலாக அயனரியரனென்னும் வடிவங்கொண்டு உலகத்தைப் படைத்தல் காத்தலழித்தல் செய்து பாரபட்ச



மென்பதொரு சிறிதுமில்லாம லுயிர்களைப் பாதுகாத்துவருகின்ற பகவானைத் தஞ்சமாகவடைந்து, வேறு துணையைவெறுத்துத் தீயவழியிற் செல்லுமனத்தைச் சிறிது சிறிதாக வடக்கிவந்தாற்றான் நாம் கடவுளால் கைவிடப்படாது சிந்தையு மொழியுஞ் செல்லா நிலைமைத்தாகிய அந்தமில் வீட்டை யடைதற் குரியவராவோம்.

"கண்ணிற் காண்பதுன் காட்சிகை யாற்றொழில், பண்ணல் பூசை பர்வது மந்திரம், மண்ணொடைந்தும் வழங்குயிர் யாவுமே, அண்ணலேநின் னருள்வடி வாகுமே" என்றுதாயுமானசுவாமிகள் நாம் நன்னெறியி லொழுகி ஞானாநந்த முறுமா றருளியதை நம்பியொழுகுவோமாயின், கடவுளருளுக்குப் பாத்திரமாய் அவரால் கைவிடப்படாமைக்குக் காரணமாவோம். துன்புற்ற காலத்தில் துரோபதை துரியோதனன்சபையில் அரிபரந்தாமனு லருள்செய்யப்பட்டதை நாம் நன்குசிந்திப்போமாயின், கடவுளை நம்பினோர் கைவிடப்படாரென்பது நன்கு விளங்குவதாம்.

## கல்வி.

இம்மைப் பயன், மறுமைப் பயன், வீடு என்னும் மூன்றையுந் தருவதற்குக் காரணமாயுள்ளன வற்றுள் கல்வி யென்பது மொன்றாம். கல்வியில்லாவிடத்து இல்லற வாழ்க்கையும், துறவற வாழ்க்கையும் செவ்விதாக முடிவு பெறுவதின்மையின், ஒவ்வொருவருக்குங்கல்வியின்றியமையாது கற்றற் குரியதாம். கல்வி யென்பதொன் றில்லாவிடத்து யாதுங் கடைபோகச் செய்தற்கு முடியாதாக விருத்தலின், செல்வத்தைத் தேடுதலினுங் கல்வியைத் தேடுத லத்தியாவசியக மானதாம். திருவள்ளுவர், ஒளவைப்பிராட்டியார், நக்கீரர், கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்திப் புலவர் முதலாயினோரை நம்மனோர் கொண்டாடிவருவதற்குக்காரணம் அவரது கல்வியுடைமையே யன்றிச் செல்வமுடைமை யன்றாம். ஒருவன் தனது தேகயாத்திரையைச் செவ்விதாகச் செய்வதற்குக் கல்விப் பொருள், செல்வப்பொருளென்னு மிரண்டு மின்றியமையாது வேண்டற்பாலனவாயிருப்பினும், அவற்றுள், கல்விப் பொருளே அவனது வாழ்நாளுக் குற்ற துணையாயிருந்து மனக் கிலேசத்தை மாற்றுவதற்குக் கிடைத்தற்கரிய அமிர்த சஞ்சீவி போல்வதாம். கேவலம் செல்வப் பொருளோ பலவகைக் கிலேசங்களைத் தந்து ஆடவிட்ட பம்பரம்போன்று தன்னை யுடையவனை யல்லலுறச் செய்தலின், அது வெறுக்கை (வெறுக்கப்படுவது) என்றறிஞர்களாற் கூறப்படுகின்றது. கல்விப்பொருள் செல்வப்பொருளென்னு மிரண்டனுள் கல்விப் பொருள் எழுபிறப்பளவுந் தொடர்ந்து சென்று, தன்னை

யுடையவனுக் கின்பத்தை விளைப்பதாம்; செல்வப் பொருளோ தன்னை யுடையவனுக் கிம்மையில் இன்பம் விளைப்பதுபோன் றிருப்பதாம். செல்வப்பொருளால் உண்மையில் மனக்கிலேச நீங்கி வாழ்ந்தவ ரொருவரு மின்மையின், மனக் கிலேசத்தை நீக்கி வாழச் செய்வதற் கேதுவாகிய கல்விப் பொருளைத் தக்காரிடத்துப் பெற்று வாழ்வதே நம்மனோர்க் கின்றியமையாத கடமையாம்.

"அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டும்—உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லைச்
சிற்றுயிர்க் குற்ற துணை."

என்று சண்முகப் பெருமானது சரணந் தொழுது செம்பொருள் கண்டு சிவமாய் விளங்கிய குமரகுருபர சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளி யிருத்தலை நோக்குமிடத்துச் சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினராகிய நம்மனோர்க்கு அறம் பொரு ளின்பம் வீடென்னும் புருஷார்த்த நான்கையுந் தருவதும், நல்லிசை (கீர்த்தி) யுண்டாக்குவதும், தீவினை வயத்தால் வருங் கவலையை மாற்றுவதும், கல்வியேயா மென்பது நன்கு விளங்குவதாம். புருஷார்த்தங்களைத் தருவதும் புகழை யுண்டாக்குவதும், மனக்கவலையை மாற்றுவதுமாகிய கல்விப் பொருளைத் தேடுவ தொழிந்து செல்வப் பொருளைத் தேடி வருந்துவோர் ஒரு காலத்துஞ் சீர்பெறுவ தில்லையாம். கல்வியைக் கற்பது கேவலம் பொருளைத் தேடிப் போகத்தை யனுபவித்தற் பொருட்டன்றாம். யான் யார்? இப்பிறவி யெனக்கேன் வந்தது? இஃ தொழியு முபாய மெப்படி? இவ்வுபாயத்தைப் போதிப்பவர் யார்? அவ ரெங்கிருக்கின்றார்? அவரிடத்து நாமெவ்வா றொழுகுதல் வேண்டும் என்றற்றொடக்கத்தனவற்றை யறிதற்பொருட்டே கல்வியைக் கற்றல் வேண்டும். அங்ஙனம் கற்றாற்றான் இம்மையிற்றானே செம்பொருள் கண்டேக்க மற்றிருத்தல் சித்தியாம்.

கல்வியாவது கற்றற்குரிய நூல்களைக் கற்றலாம். கற்றற்குரிய நூல் உலகநூல், அறிவுநூலென விருவகைத்தாம். உலக நூலைக் கற்றல் இம்மை யின்பத்தை யடைதற் கேதுவாகிய செல்வப் பொருளைப் பெறுதற்குக் காரணமாம். அறிவுநூலைக் கற்றல் மறுமை யின்பத்தைப் பெறுதற்குக் காரணமாகிய நல்வினைகளைச் செய்தற்கும், சிந்தையு மொழியுஞ் செல்லா நிலைமைத்தாகிய வீட்டினைப் பெறுதற்குக் காரணமாகிய தத்துவ விசாரஞ் செய்தற்குங் காரணமாம். கேவல முலக நூலையே கற்றுப்பொருளைத் தேட முயல்பவர் பெரும்பான்மையுந் தீவினைகளைச் செய்தற் கஞ்சுவதின்மையின், உலக நூலை மாத்திரங் கற்று, அறிவு நூலைக் கல்லாது விடுதல் எஞ்ஞான்றுந் தகுதியுடையதன்றாம். உலக நூலின் பொருளையும் அறிவு நூலின் பொருளையு மறிதற்கு இலக்கண நூலுணர்ச்சியும் தருக்க நூலுணர்ச்சியும் இன்றியமையாச் சாதனமாக விருத்தலின், அவற்றைத் தக்கார்பா



லுணர்ந்து சந்தேக விபரீத மற்றவர்க்கே உலகநூல் கூறியவா றொழுகுதலும், அறிவுநூல் கூறியவா றொழுகுதலுங், கடைபோகச் சித்தியாம்.

உலக நூலாவன.—அறம் பொரு ளின்பம் வீடென்னுமுறுதிப்பொருளை யுணர்த்தாது பிற பொருள்களை யுணர்த்துவனவாம்.

அறிவு நூலாவன.—அறம் பொரு ளின்பம் வீடென்னு முறுதிப்பொருளை யுணர்த்துவனவாம்.

"அலகுசால் கற்பி னறிவுநூல் கல்லா
துலகநூ லோதுவ தெல்லாங்—கலகல
கூஉந் துணையல்லாற் கொண்டு தடுமாற்றம்
போஒந் துணையறிவா ரில்."

என்று நாலடியார் கூறுவதால், அளவிறந்த நூல்களுள்ளே அறிவு நூலைக் கல்லாம லுலக நூலைக் கற்றவர்க்குத் தடுமாற்றம் நீங்குவதில்லை யென்பது பெறப்படுதலின், நாம் உலக நூலாகிய கணிதம், சிற்ப முதலியவற்றைக் கற்பதனோடு நில்லாமல் அறிவு நூலையுங் கற்க அத்தியாவசியகமாக முயலல்வேண்டும். அறிவு நூலையுங் கற்றாற்றான் நாம் இம்மைப்பயன், மறுமைப் பயன், வீடென்பன வற்றைப் பெறுதற்குரியவராவோம். அறிவு நூலாகிய ஈசங்கேன முதலிய வுபநிடதங்களையும், அவற்றின் பொருளைத்தொகுத்தும் விரித்துங்கூறும் நூல்களையும் தக்கவாறுணர்ந்து, உணர்ந்தவற்றிற் கேற்ப வொழுகுதல் வேண்டும்; அவ்வாறொழுகினாற்றான் "எழுந்தெழுந்து சீறுகின்ற இந்திரியப் பாம்புகளை" விவேகமென்னுந் தடியாலடித் தடக்கி யுபசாந்தத்தை யடைந்து, உதித்தலு மரித்தலு மில்லாத வுயர் நிலையினை யடைதல் கூடும்.

கண்டதைப் படிக்கப் பண்டிதனாவா னென்னும் பழமொழியின் பயனை யறியாது பலர் ஆசையைப் பெருக்கி யவலமுறச் செய்வதற் கேதுவாகிய நூல்களைப் படிக்க முயன்று, அறம் பொரு ளின்பம் வீடென்னும் புருஷார்த்தங்களின் றன்மையை யுணராது, குருடன் கூபத்தில் விழுந்தேறும் வகை யுணரா தேக்கமுறுவதுபோன் றேக்க முறுகின்றனர். கண்டதை யென்பதற்கு அறிஞர் பிரமாணமா மென்று கண்ட நூலை யென்றுணராமையாற்றான் அவர்க ளவ்வாறு வருந்துகின்றனர். நிகண்டு கற்று, இலக்கியப் பயிற்சிசெய்து, எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி யென்னு மைந்திலக்கணமு முணர்ந்து தருக்கநூ லோதியவர்க்கே இது பிரமாணம், இஃது அப்பிரமாண மென்னுமுணர்வுண்டாவதாகவிருத்தலின், மேற்கூறிய வாறுகக்கற்றவர் தாம் உலக நூலின் பொருளையும் அறிவு நூலின் பொருளையும் ஐயந் திரிபற வறிதற் குரியவராவர்; அவரிடத்துத் தான் கல்வி யறிவு பூரணமாக விளங்கும். கல்வி யறிவைப் பூரணமாகப் பெறுதற்குரிய துறைகளை யறிவ தொழிந்து, சில கற்றவளவிலே நிரம்பிய கல்வி யறிவு சித்தித்துவிட்டதெனக் கருதுதல் ஒருபோதுங் கூடாது. நிரம்பிய கல்வி

யறிவின் முக்கியப் பயன் சாந்தமுடைமையாம். இது "புகழ்க்குரியன் கற்றோ னெனினும் புவியில், இகழ்க்குரியன் சாந்தமில னேல்" என்பதனா லினிது விளங்கும். கல்வியின் முக்கியப் பயனாய சாந்தத்தைப் பெற முயலாது, கலக்கத்திற் கேதுவாவனவற்றைக் கடைப்பிடித்திருப்பவர் எவ்வளவு கல்வி யுடையவரா யிருப்பினும் அவர் நிரம்பிய கல்வி யுடையவராதலின்றாம். கல்வியைக் கற்றல் கற்பவனைக் காண்பதற்கென் றுணராது கல்வியையே கற்றுக் கற்பவனைக் காணாது காலத்தைப் போக்குதல் கடையாயவாது செய்கையாம். "கல்வியைக்கல், கற்றபடி நில்" என்னும் பழமொழியைக் கவனித்துக் கற்பதற் கேற்ப வொழுகுதல் வேண்டும்.

"கற்றதுங் கேட்டதுந் தானே யேதுக்காகக்
கடபடமென் றுருட்டுதற்கோ கல்லா லெம்மான்,
குற்றமறக் கைகாட்டுங் கருத்தைக் கண்டு
குணங்குறியற் றின்ப நிட்டை கூட வன்றோ"

என்று தாயுமானவர் திருவாய் மலர்ந்தருளியதைச் சாவதானமாகச் சிந்தித்துப் பார்க்குமிடத்து, கற்பதும், கேட்பதும், கடம்படத்தினும் வேறு; அருணனிடத்தி லாயிரம் புள்ளிகளுண்டு என்றற் றொடக்கத்தனவாகப் பேசிக் காலங் கழிப்பதற்கன்றாம்; பரமேசுவரன் திருக்கைக் குறிப்பின் படியே குணங்குறியற்றின்ப நிட்டை கூடி யேக்க மற்றிருப்பதற்கா மென்பது விளங்குதலின், உலக நூ லோதுவதோடு நில்லாது, அறிவு நூலையுங் கற்றுணர்ந்த வடிவாக விளங்க முயலுதல்வேண்டும். அறிவுநூலோதினும், அது கூறியவாறொழுகாவிடத்து, அதனாற் பெறும் பயனற்பமாம். இது பற்றித் தாயுமானவர் "வித்தை யென் முத்தி தருமோ" என்றனர்.

"ஓதுந் திறத்தி னுயர்ந்தோர்க டாழ்குவரெப், போது முயர் வெய்தற் பொருட்டு" என்று பெரியா ரருளியிருத்தலை நோக்கி நூல்களைக் கற்று மேம்பட முயல்பவர் பணிவு மின் சொல்லு முடையவராக வொழுகுதல் வேண்டும். பணிவு மின் சொல்லு மில்லாவிடத்து, கல்வியின் பயன் நன்கு விளங்குவதின்றாம். உலக நூலையும் அறிவு நூலையும் தத்தமாற்றற்கேற்ப வோதி, சாந்தமெய்தி, பணிவு மின்சொல்லு முடையவர்தாம், இம்மைப் பயன், மறுமைப் பயன், வீடென்பனவற்றை யடைதற் கருகராவர். கல்விக்குப் பயன் அறிவும், அறிவிற்குப் பயன் ஒழுக்கமுமா மென்பதை யுணர்ந்து, அறிவதறிந்து, அஞ்சுவதஞ்சிப்பெறும் பயனையுன்னிப் பேராநந்தமாக முயலாது போவோ மாயின், நாம் "விலங்கொடு மக்களனைய ரிலங்குநூல், கற்றாரோ டேனை யவர்" என்று தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் கூறியவாறு விலங்கினத்திற் சேர்ந்தவராவோ மென்பதற்குத் தடையொன்று மின்றாம்.

"ஓதாம லொருநாளு மிருக்க வேண்டாம்".
"கைப்பொரு டன்னின் மெய்ப்பொருள் கல்வி".



"கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை".
"தளர்ந்துழி யுதவுங் கல்வி."

என்றற் றொடக்கத்தனவற்றை நன்குணர்ந்து, கல்விச் செருக்கின்றி யொழுகுபவர் கருணாகரக் கடவுள் கருணைக்குப் பாத்திராவ ரென்பதற்கொரு சிறிது மையப்பாடின்றாம்.

## சூடாலை.

(முன்தொடர்ச்சி).

சிகி.—கவனியாமைக்குக் காரணம் தெரியவில்லை; கருணை செய்தருள வேண்டும்.

சிவ.—உடம்பைத் தவிர வுயிரென்ப தொன்றின்று; உலக மெஞ்ஞான்று மிருப்ப தென்னும் மயக்கமே கவனியாமைக்குக் காரணமாம்.

சிகி.—இம்மயக்க மெதனா லொழியும்?

சிவ.—அது ஞான சாஸ்திரவாராய்ச்சி செய்து, தன்மயமான விடத்தொழியும்.

"தோன்றி விளங்கும் பொருளெல்லாந்தொல்வே தாந்தவிசாரணையில்
ஊன்றி நோக்கி யனுதினமும் யூக மதனிற் பரிச யித்தால்
தோன்றி விளங்கு மறிவொன்றே சொன்மாத் திரமாய் விடுமுலகம்
ஊன்றி நோக்காதவர்கட்கே யுளது போலத் தோன்றியிடும்"

என்று பெரியாரருளியவாறு வேதாந்த சாஸ்திர ஆராய்ச்சியை யுள்ளவாறு செய்த விடத்து, "அறிவொன்றே கெட்டி, யயலனைத்தும் போலே" என்பது நன்கு விளங்கும். அறிவொன்றே கெட்டியென் றுணராதவர்க்கு விருப்பாலும் வெறுப்பாலும் வருத்த முறுவ தொழியாது. இவ்விசாரம் நிராசை யுடையவர்க்குப் பூரணமாகச் சித்தியாம்.

சிகி.—ஆசையின் வசப்பட்டு, மேலும் மேலும் போகத்தை யனுபவிக்க விரும்புகின்ற நமக்கு நிராசை யுண்டாவ தெவ்வாறு மென்று யோசித்து (வெளிப்படையாய்) அடிகாள்! அடியேனுக்கு நிராசை யுண்டா மார்க்கத்தைத் திருவாய் மலர்ந்தருள வேண்டும்.

சிவ.—(சூடாலையின் முகத்தைப் பார்த்து) அம்மணி! நமது வேந்தர்க்கு நிராசை யுண்டாகு மார்க்கத்தை முன் பொரு முறை யாம் கூறியது ஞாபகத்தி லிருக்கின்றதா?

சூடா.—(நமஸ்காரஞ் செய்து) சிவ சொரூபமாந் தேசிகமூர்த்தி! ஞாபகத்திலிருக்கின்றது.

சிவ.—அதனை நமது வேந்தர்க் கெடுத்துக் கூறலாமே?

சூடா.—யான் கூறினல் பயன் படாதென் றிதுகாறு மிருந்தேன்; சுவாமிகள் கட்டளை யிட்டமையா லினிக் கூறுகின்றேன்.

சிகி.—சூடாலை! பயன்படா தென்று கருதியா கூறு திருந்தனை? சுவாமிகள் கூறியவாறு கூறவேண்டும்.

சூடா.—(அரசன் முகத்தை நோக்கி) சுவாமிகள் சந்நிதானத்திற் கூறுவதற் கஞ்சுகின்றேன்; அரண்மனைக்குச் சென்று, அதுபற்றி விசாரிப்போம். சுவாமிகளிடத் துத்தரவு பெற்றுக்கொண்டு போவோம்.

சிகி.—எங்குமாய் நிறைந்த ஏக ஞானமூர்த்தி! எங்களுக்கு விடைதர வேண்டும்.

சிவ.—சுகமே போய் வாருங்கள்.

(இருவரும் போகின்றனர்கள்).

ஐந்தாங்காட்சி.

இடம்:—மாளவதேசத் தந்தப்புரம்.

பாத்திரங்கள்—சிகித்துவஜன், சூடாலை, பத்மாவதி, விகடகவி.

காலம்—பிற்பகல்—மாலை.

பத்மாவதியும், சூடாலையும் சிகித்துவஜனது விசாரத்தைப் பற்றித் தம்முட் பேசிக்கோள்ளுகின்றனர்.

பத்.—மாதரசி! நமஸ்காரம். காலையில் மகாராஜாவுடன் சிவப்பிரகாச சுவாமிகளின் சந்நிதானத்திற்குச் சென்றபோது, என்னையு மழைத்திருந்தால் வந்திருப்பேன்.

சூடா.—உன்னை யழைத்துப் போவது தகுதியன்றென் றழைத்துப் போகவில்லை.

பத்.—அங்கு நடந்த விஷயங்களை யடியாளுக்குத் தயவுசெய் தருள் செய்ய வேண்டும்.

சூடா.—சுவாமிகள் "உள்ளத்தின் முடிமேலே யில்லாமை வீற்றிருக்கும்" என்னுங் கவிக்குப் பொரு ளுரைத்ததோடு அநித்திய விவேகத்தைப் பற்றி விளங்கக்கூறி, நிராசையுள்ளவரே வேதாந்த விசாரஞ் செய்வதற் கதிகாரியாவரென்று திருவாய் மலர்ந்தருளினர்.

பத்.—அவற்றை விடாது கூறியருளுமாறு பிரார்த்திக்கின்றேன்.



சூடா.—அவற்றை விடாது தினசரிப் புத்தகத்தி லெழுதி வைத்திருக்கின்றேன்; அதனைப் படித்துப் பார்.

பத்.—(படித்துப் பார்த்து) கற்பிற்கரசாம் பொற்புடை நங்காய்! இன்றைய தினம் தாங்கள் செய்த விசாரம் அதி யற்புதமானது. நான் கூட விருந்து கேட்கும் பாக்கிய மில்லாமையைப்பற்றிப் பெரிதும் வருத்தமுறுகின்றேன். எதற்குங் கொடுத்துவைக்க வேண்டு மல்லவா?

சூடா.—அது பற்றிப் பேசுவது பயனற்றதாம். சுவாமிகள் ஒருநாள் இங்கு வந்தெழுந்தருளி யிருந்தபோது,

"இல்லாது வேண்டினும் வந்திசையா
வுள்ளது தள்ளினு மூட்டுமோனல்,
எல்லாம் வரக்கண்டோ ரிச்சை யின்றி
யிருந்த படியே யிருக்க வாரீர்."

என்றுள்ள கவியைக் கூறி, வருவது பற்றி மகிழ்ச்சியும், போவது பற்றி வாட்டமு மடைதல் கூடாதென்று திருவாய்மலர்ந்தருளியதை மறந்துவிட்டாய் போலும்!

பத்.—எனக்கு உடற்பற்று முதலியன முற்று மொழியவில்லை; அதனாற்றானவ்வாறு கூறினேன்; பொறுத்தருள வேண்டும்; உள்ள நிலையை யுள்ளபடி காணவு முபதேசஞ் செய்தருள வேண்டும்.

சூடா.—"விருத்தி (சங்கற்பம்) தானே பந்தமதாம் விருத்தி யொழிவே வீடாகும்" என்றன்று சுவாமிக ளருளிச் செய்ததைக் கவனித்துச் சங்கற்பத்தை நாசஞ் செய்து தானான தன்மயமாக விருப்பாயாயின், உடற்பற்று முதலியன முற்று மொழிதற் கொரு தடையு மின்றாம்.

பத்.—அங்ஙனமே செய்கிறேன்; மகாராஜா ஒரு பக்கத்தில் மறைந்து நின்று நமது சம்பாஷணையைக் கவனித்திருத்தலை நாமறியாது போனோம்; அதோ நிற்கின்றார் பாருங்கள்.

சூடா.—(விரைவாக வெழுந்து பணிவாக நின்று) தாங்கள் வந்து நின்றிருத்தலை நாங்க ளறியவில்லை; பிழைபொறுத்தருளவேண்டும்.

சிகி.—(தனக்குள்) நம்முடைய பத்மாவதியும் சூடாலைபோன்று நல்ல விவேகமுடையவளாக விருக்கின்றாள். இவளைத் தோழியாகவுடைய நமது சூடாலையின் பாக்கியமே பாக்கியம். ஜன்மாந்தர புண்ணிய கருமத்தின் பயனுற்றான் நாம் சூடாலையை மனைவியாகப்பெற்றனம்; இவள் வாயிலாகத்தான் நாம் முத்தி மார்க்கத்தைமுறையாகவுணரவேண்டும். (வெளிப்படையாய்) சூடாலை! நீ பத்மாவதியுடன் சம்பாஷித்ததைக் கேட்டுப் பரமானந்த மடைந்தேன். நல்ல மனைவி யில்லாதவன் நற்கதிபெறுதல் கூடுமோ? உன்னை யரசியாகப் பெற்ற மாளவதேசம் மகாபாக்கிய முடையதாம். நீ யிருத்தலாலன்றோ எனது தேசத்தில்

காலந் தவறாது மழை பெய்கின்றது. என் நிற்கவேண்டும்? இவ்வாசனத்தின்மீ திரு.

(இருவரு முட்கார்ந்தார்கள்)

சூடா.—தாங்கள் 'அடியாளைப் பற்றி யதிகமாகப் பேசியது அடியாள்மீதுள்ள ஆர்வத்தா (ஆசையா) லென்று நினைக்கின்றேன். இனி யவ்வாறு சொல்லா திருக்குமாறு வேண்டுகிறேன்.

சிகி.—அஃதிருக்கட்டும்; நிராசையைப் பற்றிப் பேசுவோம்; வேண்டுமானால், பத்மாவதியு மிங்கிருக்கலாம்

பத்.—அடியேனுடைய பாக்கியமே பாக்கியம்.

விகடகவி பிரவேசிக்கின்றான்.

விகட.—(தனக்குள்) மகாராஜா, மகாராணியோடு பேசுவதையும், பத்மாவதி பணிவாக நின்றதனைக் கேட்பதையும் பார்த்தால், இவர்கள் வேதாந்த விசாரஞ் செய்கின்றார்க ளென்று தோன்றுகின்றது. 'உனக்குக்கூட வேதாந்தப் பைத்தியம் பிடித்திருக்கின்றதுபோற் றெரிகின்றது' என்று நம்மை நோக்கிப் பரிகாசமாய்ப் பேசிய மகாராஜா வேதாந்த விசாரஞ் செய்கின்றா ரென்று நினைப்பதற் கிடமின்றாயினும், ஈகையால் ஈஸ்வரியையும், அழகால் அரிப்பிரி (இலக்குமி) யையும், கல்வியால் கலைமகளையு மொத்து விளங்கும் சூடாலையின் கற்பின் மகத்துவத்தால் வேதாந்த விசாரஞ்செய்தாலுஞ் செய்யலாம். (வெளிப்படையாய்) அம்பலத் தாடியும் அங்கே வரலாமோ? உத்தரவானால் வருகின்றேன்.

சிகி.—சிவபூசையிற் கரடி புகுந்தாற் போன்று, அகசியஞ் செய்தே தனதருமையான காலத்தை வீணே கழிக்கு மம்பலத்தாடி நிராசையைப் பற்றிப் பேச வாரம்பித்த இச்சமயத்தில் வந்துவிட்டான். இதற்கென்ன செய்யலாஞ் சூடாலே?

சூடா.—அரசே! அம்பலத்தாடி முன் போன்று விகடஞ்செய்வதொழிந்து, இப்போது சிறிதுள்ளுணர்வுடையவனாக விருக்கின்றான். அவனெப்போதுந் தனித்திருத்தலையே விரும்புகின்றா னென்றவன் மனைவி சொல்லக் கேட்டிருக்கிறேன்; அம்பலத்தாடி யெனக்குச் சகோதரமுறை யுடையவனாதலின், வந்தாற் குற்றமில்லை.

சிகி.—அம்பலத்தாடி! தடையின்றி வரலாம்.

விகட.—(தனக்குள்) இவ்வளவு காலந் தாமதித்து மகாராஜா 'தடையின்றி வரலாம்' என்று கூறியதை நோக்குமிடத்து, யாதோவொரு தடையிருக்கவேண்டும்; இல்லாவிட்டால் மகாராஜா இவ்வாறு கூறியிருக்கமாட்டார்; தடையில்லாது வரும் நமக்கின்று தடையுண்டாயது வியப்பாகவே யிருக்கின்றது. (வெளிப்படையாய்) ராஜ பூபதி! தடையின்றி வந்தேன். தாங்கள் கடலின் மடைவிண்ட தென்ன யான் கேட்பனவற்றிற் கெல்லாம் தடையின்றி விடைதரல்வேண்டும். விடை தந்தால் நான் தங்களுக்குப் படையைந்து தருவேன்.



ா.—(பத்மாவதியின் முகத்தைப் பார்த்து) அம்பலத்தாடியின் பேச்சு வெகு வழகாக விருக்கின்றது! விகடத்தின் வயப்பட்டு, நடலை வாழ்வை நம்பி, நானென்பதன் பொருளை நாடாது: சுடலைக் கேகு நிலையைச் சிறிதும்பாராது மடமைப்பட்டுள்ளவர்தாம் அம்பலத்தாடியின் பேச்சை யார்வமாகக் கேட்பர். இப்போ தெனக்கு அம்பலத்தாடி கூறுவது அழகாகத் தோன்றவில்லை; உனக் கெப்படியோ? மகாராஜாவிற் கெப்படியோ? (வரும்).

## விசார சூடாமணி.

(308 வது பக்கத்தின் தொடர்ச்சி.)

இங்கேயும் இன்னும் மாறுதல்கள் முற்றுப்பெறவில்லை. இங்கிலாந்து தேசத்தாரிடத்துப் பரவிவந்திருப்பதாக மேற்கூறியுள்ள அபிப்பிராயங்களுடன் அதேபோக்காகச்செல்லும்மிகப்பரவுதலில்லாத ஓர் அபிப்பிராயமு முள்ளது. இங்கிலாந்துதேசத்தைப்பார்க்கிலும் ராஜாங்கத்தினதுஎல்லையைஇன்னும்குறைந்த அளவாகவாக்கவேண்டுமென்றுவாதிப்போரையும்நாம்காணலாம். ஒருவனுடைய சுவாதீனம் பிறருடைய சுவாதீனத்தால் மாத்திரம் கட்டுப்படலாமேயன்றி வேறெதனாலுங்கட்டுப்படுத்தல் கூடாதென்றும், இத்தகையசுதந்தரம் பரிசுத்தமான தென்றும் அவர்கள் கொண்டிருக்கின்றனர். ராஜாங்கத்தாருடையமுக்கியக் கடமையாவது ஜனங்களை ஒருவர்க்கொருவர் தீங்குசெய்வதி னின்றும் இரட்சிப்பதும் அந்நிய எதிரிகளினின்றுங் காப்பதுமே என்று அவர்கள்வற்புறுத்திக் கூறுகின்றனர். இறுதியில் வாய்க்கக்கூடிய ராஜாங்க நிலைமையாவது தற்சுவாதீனம் மிகவிரிந்ததாயும் ராஜாங்க அதிகாரம் மிகச்சுருங்கியதாயுமிருப்ப தென்று அவர்கள் நம்புகின்றனர்.

இவ்விதமாகப் பலதேசங்களிலும் பலகாலங்களிலும் ராஜாங்கத்தின் உற்பத்திஅதிகாரம்தொழில்கள் முதலியவற்றைப்பற்றிப்

பலவேறு வகைப்பட்ட அபிப்பிராயங்கள்வழங்கி வருவதைநாமறிகின்றோம். இவ் வபிப்பிராயங்களின் மெய்ம்மை அல்லது பொய்ம்மையைப் பற்றி இப்பொழுது நாம் சொல்ல வேண்டியதென்ன இருக்கிறது? ஏதோ ஓரபிப்பிராயம்முற்றிலும் சரியென்றும் ஏனையவைமுற்றிலும் தப்பென்றும் நாம் சொல்லலாமா? அல்லது ஒவ்வோர் அபிப்பிராயமும் ஏதோ ஒருண்மையான அம்சத்தை உள்ளீடாகக்கொண்டு அவ்வுண்மை ஏறக்குறையகுற்றங்களால்மறைவுபட்டிருக்கின்றதென்று கூறலாமா? பிற்கூறியவகையே உசிதமென்பது அபிப்பிராயங்களை விபாகப்படுத்தி நோக்குவதனால் வெளியாகும். மேற்கூறிய பேதப்பட்ட அபிப்பிராயங்களுள் ஒவ்வொன்றும் கேள்விக் கிடமில்லாத ஒருண்மையைத்தன் உயிர் நிலையாகக் கொண்டுள்ளது. வெளிப்படையாகவாவது குறிப்பாகவாவது ஒவ்வொன்றும் பிரஜைகளுடைய தனித்தனிச்செய்கைகளைச் சமூக நியமங்களுக்கு உட்படுத்த வேண்டு மென்று வற்புறுத்துகின்றது. எந்த அதிகாரத்துக்கு இவ்வணக்கம் உரியதோ அவ்வதிகாரத்தைப்பற்றி அபிப்பிராய பேதமிருக்கலாம். எக்காரணத்தினால் அடக்கம் வேண்டுமோ அக்காரணம் பற்றியும் அபிப்பிராயபேதமிருக்கலாம். எவ்வளவு தூரம் அடக்கம்இருக்கவேண்டுமோ அதுபற்றியும் அபிப்பிராய பேதமிருக்கலாம். ஆனால் ஏதோ சிறிதாவது அடக்கம் இருக்க வேண்டு மென்பதுபற்றிமாத்திரம் எல்லோரும்ஒத்துக்கொள்வர். மிகக்கீழ்ப்படிதலுள்ளவர்களும்மிகவும்எதிர்க்குஞ் சுபாவ முடையவரும் நம்முடைய நடத்தையில் நாம் மீறக்கூடாத எல்லைகளுள என்று அங்கீகரிக்கின்றனர்; முற்சாரார் இவ்வெல்லைகள் ஓர் அதிபதியின் இஷ்டத்தினின்றுந் தோன்றியவையெனக் கொள்ளுகின்றனர். பிற்சாராரோ சமூகத்தில் ஒவ்வொருவனுக்குஞ்சமத்துவ சுதந்தரங்களுள வென்ற கொள்கையினின்றும் அநுமானிக்கத் தக்கவை யெனக் கொள்ளுகின்றனர். நாம் இந்தக் கட்டத்தில் தேர்ந்த தீர்ப்பு மிகவும் அப்பிரதான மெனச் சிலர் சொல்லக்கூடும். ஆனால், இவ்விஷயத்தில் நாம்பெற்ற தீர்ப்பு எவ்வளவு பிரயோஜனமுள்ளது, அல்லது எவ்வளவு நூதனமுள்ளது என்பதன்று; இவ்விடத்தில் கேள்வி. மிகவும் பேதப்பட்டுள்ள கொள்கைகளில் சாதாரணமாகப்பொதுவாயுள்ள ஓரம்சம் உண்டு. ஒவ்வொன்றும்தடுக்கமுடியாத ஒவ்வோருண்மையை உள்ளீடாகக் கொண்டிருக்கின்றது. இந்த ஒவ்வொன்றும் கேள்விக் கிடம்பெ



றாத உண்மையாயில்லாவிடினும் மிகவும் நம்பக்கூடிய தன்மையைப்பெற்றிருக்கின்றதென்கிற பெரிய உண்மையை விளக்குவதல்லவோ நம்முடையநோக்கம்? மேற்கூறிய சுவீகிருதபட்சம் வெளிப்படையாக வற்புறுத்திக் கூறப்படவில்லை; ஆனால் மர்மமாக உள்ளடங்கியிருக்கிறது. ஒரு மனிதனால் மாத்திரமல்ல, அல்லது ஒரு கூட்டத்தாரால் மாத்திரமல்ல; ஆனால் தங்களுடைய இதரக் கொள்கைளில் கணக்கிட முடியாத விதங்களாகவும் அளவுகளாகவும் பேதப்பட்டு பல்வகைப்பட்டுள்ளகூட்டத்தாரால் மர்மமாக அங்கீகரிக்கத்தக்க பட்சம் சாதாரணமாக நிரூபிக்கக் கூடிய எப்பட்சத்திலும் உத்கிர்ஷ்டமானதென்று கொள்ளத்தடையென்ன? தவறுள்ளன வென்று கொள்ளப்படும் விஷயங்களில் உண்மையான அம்சத்தைக் கண்டுபிடிக்க முயலும் முயற்சியில் நமக்கு வழக்கமாக உதவக்கூடிய ஒரு பொது விதியை நாம் இதுகாறுஞ் செய்தசோதனையால் பெறவில்லையா? மேற் கூறிய திருஷ்டாந்தத்தால் முற்றிலுந் தப்பாகக் காணப்படும் அபிப்பிராயங்களுள் ஏதோ ஒரு சரியான கொள்கையு மிருத்தல் கூடும் என்ற உண்மை நமக்கு மனதில் பதிந்தது மாத்திரமேயன்றி அச்சரியான கொள்கையைக்கண்டு பிடிக்கும் வழியையும் நாம் ஒருவாறு தெளிந்தவர்களானோம். இவ்வழியாவது:—

(1) ஒரே இனமாயுள்ள எல்லா அபிப்பிராயங்களையும் ஒத்துப் பார்த்தல் வேண்டும்.

(2) அவ்வபிப்பிராயங்கள் பேதப்படுவதற்குக் காரணமாயுள்ளவையாயும் தமக்கே யுரியனவாயுள்ளவையாயும், திரண்டு ஒன்றற்கொன்று ஒவ்வாம லிருப்பனவாயுமுள்ள பேத அம்சங்களை நீக்குதல் வேண்டும்.

(3) இவற்றை நீக்கியபின்னர் மிகுந்திருப்பதைக்கவனித்தல் வேண்டும்.

(4) தங்கியுள்ள அம்சத்திற்குப் பல வேறு வகைப்பட்ட பேதப்பொய்க்கோலங்களிலும் ஸ்திரமாய்நிற்கக்கூடிய வகையாக வெளியிடத்தக்க ஒரு வாக்கிய முறையைக்கண்டு பிடித்தல்வேண்டும்.

(வரும்)

சந்தோஷம்.

## கிண்டர் கார்ட்டன் என்னும் பாலபோதனுமுறை.

(300-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

### கிண்டர் கார்ட்டன் தோட்டம்.

ஒவ்வொரு பாடசாலைக் கருகிலும் ஒவ்வொருசிங்காரத் தோட்டம் அத்தியா வசியமாம். இங்ஙனம் அமைத்தல் இச்சென்னையைப்போன்ற பெரும் பட்டணங்கட்குப் பலகாரணங்களால் கடினமெனத்தோன்றியபோதிலும், இத்தோட் டங்களால்பெறப்படும் முக்கியப்பயன் இதுபோன்ற பெருநகரங்களிலுள்ள பாடசாலைகட்கேயுரியது. தோட்டங்களில் பாடசாலைகள் ஏற்படுவதால் பிள்ளைகளுக்குச் சுத்தமான காற்று வீசிக்கொண்டேயிருக்கும். பெரியபட்டணங்களில் ஜனநெருக்கத்தினுலும் நெருங்கியதெருக்களிலுள்ள சாக்கடைகளின் துர்நாற்றத்தாலும் சாயம்போடுதல்கலாய்பூசுதல் தோல்பதனிடுதல் முதலிய கைத்தொழில்களாலும் இன்னும்பற்பலகாரணங்களாலும் காற்று அசுத்தமாக்கப் படுகிறது. அசுத்தக் காற்றைச் சுத்தஞ்செய்யக் கடவுளால் ஏற்படுத்தப் பட்டசாதனங்களில் மரங்கள் முக்கியமானவை. இவை மனிதன் சுவாசிப்பதற்குப்பிரதிகூலமான அசுத்த காற்றை யுட்கொண்டு அவனுக்கு அநுகூலமான காற்றை வெளிவிடுகின்றன. ஆகவே, மரங்களைப்பெரியபட்டணங்களில் ஆங்காங்கு வைத்துப் பயிரிடுதல் அவசியமானது.

பாடசாலைகளில் மரங்களைப் பயிரிடுதல் அத்தியாவசிய மானது. இதுவேயுமன்றிப்பிள்ளைகளை மண்கொத்துதல், பாத்திகட்டுதல், தகுதியான எருவிடுதல், விதை விதைத்தல், தண்ணீர் பாய்ச்சுதல், புஷ்பம்பறித்தல் முதலிய தோட்ட வேலைகளிற் பழக்கலாம். மேற்கூறிய விவசாயத்தொழில்களெல்லாம் பட்டணவாசிகளுக்குப் புதுமையேயன்றிக்கிராமவாசிகளுக்குப்புதுமையல்ல. கிராமங்களில்வசிக்கும் பிள்ளைகளுக்கு நெல்லோ கேழ்வரகோ அல்லது எந்த வகைப்பயிரோ விதைத்த இத்தனையாவது நாளில்முளைக்குமென்றும், இந்தந்தப்பயிருக்குஇவ்வளவுஜலம் வேண்டுமென்றும், அவைகளுக்கு இந்தவிதமான உரம் வேண்டுமென்றும், இன்னும் இவ்விதமான பலவிஷயங்கள் தாங்கள் அடிக்கடி பார்த்துக்கொண்டும்செய்துகொண்டு மிருப்பதால் நன்ருய்த் தெரியும். ஆகவே தோட்டங்கள் ஏற்படுத்திஅவற்றில்பிள்ளைகளையே பற்பலவிதமானசெடிகளை



ப் பயிரிட்டு அவற்றின் வளர்ச்சியைக் கவனிக்கச்செய்வது பட்டணத்துப் பாடசாலைகளுக்கே அதிக நன்மையைத் தரும் என்று மேற்கூறியவாற்ருல் தெற்றென விளங்கும். ஆகவே, பாடசாலைகளுக்கருகே தோட்டங்களை ஏற்படுத்துதல் அவசியமென்பது பெறப்பட்டது.

### தோட்டத்தின் ஏற்பாடு.

பாடசாலைத் தோட்டத்தைச் சிறு சிறு பாத்திகளாகக்கட்டி, இடம் தாராளமாய் இருந்தால் நாலைந்து பிள்ளைகளுக்கு ஒரு பாத்தியும் இடம் நெருக்கமாயிருந்தால் ஒருவகுப்புக்கு ஒருபாத்தியும் ஏற்படுத்தி, அதில்பலவிதமான செடிகளைப் பயிராக்கி அவற்றின் வளர்ச்சியைப்பிள்ளைகளைக் கவனிக்கச் செய்வது நலம். பாத்திகளுக்கு இடையில் பிள்ளைகள் தாராளமாய் நடந்துசெல்ல ஒருபாதை ஏற்படுத்துவது அவசியம். தோட்டம் சதுரமாக வாவது வட்டமாகவாவது ஏற்படுத்தலாம். தோட்டத்தின் ஜலாதாரம் மத்தியில் இருப்பது நலம். வெயில் வேளைகளில் பிள்ளைகள் தங்குவதற்கு நிழல்தரு மரங்க ளில்லாவிடில் அங்கு மிங்கும் சிறு பந்தல்கள் போட்டுவைப்பது அவசியம்.

தோட்டத்தில் புஷ்பச்செடிகள் ஒருபுறமாயும் கறிகாய்ச்செடிகள் ஒருபுறமாயும் தானியவகைகள் வேறொரு பக்கமாயும் நாற்றுப்பயிர்கள் மற்றொரு பக்கமாயும் பயிராக்கலாம். தோட்டவேலை இயற்கைப்பாடத்திற்குச் சம்பந்தமாய்ச் செய்யப்படுவ தாகையால் உபாத்தியாயர் சமயம் வாய்க்கிற போதெல்லாம் சீதோஷ்ண ஸ்திதி, வெயில், மழை, காற்று, பனிமுதலிய வற்றின் மாறுபாட்டினுல் தோட்டத்தில் பயிரிடும் செடிகளுக்குள்ள அநுகூலங்களையும் பிரதிகூலங்களையும் பிள்ளைகளைக் கவனிக்கச் செய்துஅவற்றை ஒரு ரிஜிஸ்டரில் எழுதிவைக்கச் செய்தல் அத்தியாவசியமாம்.

இதுவேயுமன்றி ஒவ்வொரு பாடசாலையிலும் பிள்ளைகளின் மனதைக்கவரச்செய்யும் பலவிதப்பக்ஷிகள், பட்டுப்பூச்சிகள், முயல்கள், தவளை முதலிய ஜெந்துக்களை வளர்த்து அப்போதைக் கப்போது அவற்றின் சுபாவங்களையும் வாழ்நாளையும் கவனிக்கச் செய்வது நலம். இதனுல் பிள்ளைகளுக்கு அவற்றின் ஆகாரபேதங்களும் ஆகாரங்களுக்குத் தகுந்த சுபாவங்களும் அமைவது நன்கு புலப்படும்; ஜந்துக்க ளிடத்தில் அநுதாபமும் ஏற்படும்.

நாம் இதுகாறும் கிண்டர் கார்ட்டன் முறை என்பதியாது? பிள்ளைகளிடத்துள்ள சுபாவ வுணர்ச்சிகள் யாவை?, அவ்வுணர்ச்சிகளை விர்த்திசெய்ய நாம் கையாடவேண்டிய முறைகள்யாவை?, பாடங்கள் யாவை? கிண்டர் கார்ட்டன் முறையை யநுசரிக்க வேண்டியவயது யாது? கிண்டர் கார்ட்டன் முறைப்படி போதிக்கும் உபாத்தியாயரின் இலக்ஷணங்கள் யாவை? பாடசாலை, வகுப்புகளின் இலக்ஷணங்கள், "கிண்டர் கார்ட்டன் தோட்டமும் அதின் ஏற்பாடும்" என்னும்விஷயங்களைப்பற்றிக் கவனித்தோம். இனிநம்தேசத்தில் பொதுவாய்ப் பிள்ளைகள் கற்கவேண்டிய பாடங்களையும், அவற்றால் பிள்ளைகளின் சரீரம், மூளை, சன்மார்க்கம் முதலியவைகள் எப்படி விர்த்தியாகுமென்பதையும், அப்பாடங்களைப்போதிப்பதற்குத் தகுந்தமுறைகள் எவை என்பதையும் சற்றுச் சீர்தூக்கி நோக்குவாம். (வரும்)

N. சுப்பிரமணிய ஐயர்,
கிண்டர் கார்ட்டன் இன்ஸ்பெக்டர்,
சென்னை.

## தத்துவார்த்த சம்பாஷணை.

(278-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

இராமசாமி:—சொல்லவேண்டும்.

முனிசாமி:—(1) எத்தொழிலையும் பொறுமையாகச் செய்ய வேண்டும்.

(2) பெரியார் சென்ற முறைமை யறிந்தொழுகவேண்டும்.

(3) விரும்பியது வருவது பற்றி மகிழ்ச்சியும், விரும்பாதது வருவது பற்றி வாட்டமு மடையாதிருத்தல் வேண்டும்.

(4) உயர்திணைப் பொருள்களிடத்து நட்பும், அஃறிணைப் பொருள்களிடத்து அருளும் வைத்தொழுக வேண்டும்.

(5) உயர்வும் தாழ்வும் இராப்பகல் போல மாறி மாறி வருவனவாமென்றுணர்ந்து, மாநாபிமானம் விட்டுத் தாணுகி நின்றொழுக முயலவேண்டும்.



(6) கடல் கரையைக் கடவாதிருப்பது போன்று சாஸ்திர வரம்பைக் கடவா தொழுகுதல் வேண்டும்.

(7) மனம்போனவாறொழுகுதல் மாளாத் துன்பத்தை யோயாது தருவதாம்.

(8) பற்றின்றிப் பரமாநந்தமா யிருப்பவரது நேசம் கொள்ளத் தக்கது.

(9) தீயவழியிற் சென்று சிந்தை நைவோரது சிநேகம் தள்ளத் தக்கது.

(10) உலகத்தினிலையை யுள்ளவாறுணர்ந் தொருமுகப்பட்டிருத்தல் தகுதியுடையது.

(11) மாறுமின்பம் என்றும் நிந்திக்கத்தக்கது.

(12) மனோலய சாதனம் என்றுஞ் செய்யத்தக்கது.

(13) ஒவ்வொருநாளும் நானென்பதன்பொருளை நாடுதல் விரும்பத்தக்கது.

(14) நல்லோரிணக்கத்தாலும் தெளிந்த வறிவினாலும் நானென்பதன்பொருளை மாறின்றி யறிதல் தக்கது.

(15) தன்னை யறிகிற மார்க்கத்தில் வருத்தமுற்று முயற்சி செய்தல் வேண்டும்.

(16) உலகவியவகாரத்தில் தாமரையிலையின் தண்ணீர்போலக் கூடியுங் கூடாது மிருத்தல் வேண்டும்.

(17) நல்லோரைத் தஞ்சமாக வடைதல் வேண்டும்.

(18) இடைவிடாது நான் செய்தேன்,நான்போனேன் என்றற்றொடக்கத்தனவாக அழுத்தமா யெழு மகங்காரத்தை யகற்ற வேண்டும்.

(19) சரீரத்தில் நானென்றுண்டாகும் புத்தியைப் பிரயத்ன பூர்வகமாக நீக்குதல் வேண்டும்.

(20) பலவகையனவாயமணிமாலையில் நூலூடுருவிச் சென்றிருப்பது போன்று காணப்படும் பொருள்களுள் ஒவ்வொன்றினிடத்தும் ஞானமிருக்கின்றது; அதனைப் பிரயத்ன பூர்வகமா

வறிந்து தன்மய மானவர்க்குத் தானந்தநிலை தடையறச் சித்தியாம்.

ராம:—இன்னு மேதாவ தெழுதி வைத்திருக்கின்றாயா?

முனி:—இல்லை. அம்மகாத்மா சமயம் நேர்ந்தபோது கூறிய தத்துவ விஷயங்களைச் சங்கிரகமாக வவ்வப்போது தினசரிப்புத்தகத்தி லெழுதி வைத்தேன். ஒவ்வொருநாளும் அவ்விஷயங்களைப் படித்துக் கூடுமானவரையி லொழுக முயலுகின்றேன்.

ராம:—இரும்பைப் பொன்னாக்குவது போன்று அப்பெரியாருன்னைத் தத்துவ விசாரஞ் செய்பவனாக வாக்கி விட்டார். பிடித்ததையே சாதிக்குங் குணமுடைய நீ இவ்வாறு குணசீலனாயதை நோக்க வெனக்குப் பேராச்சரியமா யிருக்கின்றது.

முனி:—என்னுடைய புத்தியுத்திகளெல்லாம் அவர் சந்நிதானத்தில் சூரியன்முன் னிருள்போற் றொலைந்தன. அவர் ஒழுக்கத்தாலும், அறிவாலும், அடக்கத்தாலும், அளவிடற்கரிய கல்வியாலும் நிறைந்து பரமாநந்த சொரூபராகவிருத்தலின், அவர் சொல்வதைப் பரமேசுவரன் திருவாக்காக நம்பிவிட்டேன்.

ராம:—என்னை அம்மகாநுபாவரிடத்திற் கெப்போ தழைத்துக்கொண்டு போவாய்.

முனி:—அவர் இப்போது துறையூரிலிருக்கும் சின்னமடத்திலிருக்கின்றார். அவரைத்தரிசிக்கவும், அவருடைய தத்துவார்த்த சம்பாஷணையைக்கேட்கவு மிங்குள்ளார் பெரிதும் அவாவுற்றிருக்கின்றமையின், அவரையிங்குத் தருவிக்க ஏற்பாடு செய்திருக்கின்றேன். அவர் வந்தவுடன் உன்னைத் தவறாதழைத்துப் போய், அவருடைய தரிசனஞ் செய்விக்கின்றேன்.

ராம:—உன்னுடைய தினசரிப் புத்தகத்திலுள்ள அவ்விஷயங்களை யெனது தினசரிப் புத்தகத்திலெழுதிக்கொண்டு, நாளைக்கனுப்பிவிடுகின்றேன் ; அத்தினசரிப் புத்தகத்தைத் தருகிறாயா?

முனி:—அது கஷ்டமான காரியம். நாளையதினம் நானொரு பிரதியெழுதி யனுப்புகிறேன்; வெகு நேரமாயிற்று; வீட்டிற்குப் போகவேண்டும்.



ராம:—சுகமே போய்வரலாம். நான் சொன்ன விஷயம் ஞாபகத்திலிருக்க வேண்டும்.

(இருவரும் வந்தனத்தோடு பிரிந்து போயினர்.)

**அறிவானந்தம்.**

## உபநிஷதார்த்த தீபிகை.

## மகோபநிஷத்.

(276-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

ஒருகால் நிர்மலமான அறிவையுடைய அச்சுகர் மேரு பர்வதத்தில் ஏகாந்தத்திலிருந்து பக்தியுடன் தம் பிதாவாகிய கிருஷ்ணத்வைபாயன முனியைப்பார்த்துப் பின்வருமாறு கேட்டார்:—

(15) ஓ முனியே! இச்சம்சாரத்தின் ஆடம்பரமானது எவ்வாறு எழுந்தது? அஃது எவ்விதமாக எவ்வளவில் எவனுக்கு எப்பொழுது நாசமடையும்? அதைச் சொல்லவேண்டும்.

(16) இவ்வாறு கேட்கவே ஆத்ம ஞானியாகிய வியாசமுனியானவர் தமது புத்திரன் கேட்டவெல்லாவற்றிற்கும் சொல்லவேண்டுவனவெல்லாவற்றையும் உள்ளபடியே சொன்னார்.

(17) அச்சுகரானவர் இது நான் முன்னமே யறிந்தது தான் என்று தம் பிதாவின் வாக்கியத்தைத் தமது புத்தியால் நன்கு மதிக்க வில்லை.

(18-19) பகவான் வியாசரும் தம் புத்திரனுடைய இவ்வபிப்ராயத்தை யறிந்தவராய்ப் பின் வருமாறு சொன்னார்:—"நான் உண்மையாக வறிந்தவனல்ல; மிதிலாபட்டணத்தில் ஜனகரென்றொரு அரசனிருக்கின்றார்; அவர் உள்ளபடி யறிவார். அவரிடம் அறிய வேண்டுவனவெல்லாமறிவாய்".

(20) இவ்வாறு பிதா சொல்லவே, சுகர்மேருவைவிட்டுப் பூமிக்கு இறங்கி, ஜனகராலரசாளப்பட்ட விதேஹ நகரத்தை யடைந்தார்.

(21-22) மகாத்மாவாகிய ஜனகரிடம் காவற்காரர்கள் வியாசரின் புத்திரராகிய சுகர் வாசலில்வந்து நிற்கின்றார் என்று இவர்

வரவைச் சொல்லவே, (ஜனகர்) அவரைப் பரீக்ஷிக்கும் பொருட்டு "அவர் இருக்கட்டும்" என்று அவமரியாதையாய்ச் சொல்லிவிட்டு ஏழு தினங்கள் மட்டும் மௌனமா யிருந்துவிட்டார்.

(23) பிறகு ஜனகர் சுகரை அங்கணத்தில் பிரவேசிக்கும்படி செய்தார். அங்கும் ஏழு தினம் அவர் உன்மனத்தோடு † கூடினவரா யிருந்தார்.

(24-25) அதன் பிறகு ஜனகர் சுகரை அந்தப்புரத்தின் அங்கணத்தை யடையும்படி செய்தார். அப்பொழுதும் ராஜா வரவில்லை; இவ்வாறு ஏழு தினங்கள் அவ்விடத்தில் சந்திரனைப் போன்ற முகத்தையுடைய சுகரை அதியௌவனமான ஸ்திரீகளைக்கொண்டும் போஜனங்களைக் கொண்டும் பல போகங்களைக் கொண்டும் லாலனம் செய்தார்.

(26) இப்போகங்களும், போஜனங்களும், ஊன்றி நிற்கும் மலை மேற்படும் மந்தமாருதத்தைப் போல் வியாச புத்திரராகிய சுகரின் மனத்தை அபகரிக்கக் கூடாதாயின.

(27) அச்சுகர் கேவலமாய் மிகவும் சமத்துவமடைந்த மனதுடையராய், மௌனியராய், சந்தோஷமான மனத்தராய், பூர்ண சந்திரனைப்போல் குளிர்ந்து நிர்மலராய் நின்றார்.

(28-29) ஜனக ராஜாவானவர் சந்தோஷ மனத்துடன் கூடிய அச்சுகரின் சுபாவத்தை யறிந்து, அவரைவரவழைத்துப் பார்த்து நமஸ்காரம் செய்து, நல்வரவு சொல்லி, ஜகத்தில் சகல கார்யங்களையும் நிச்சேஷமாகச் செய்தவரும், சகல மனோரதங்களையுமடைந்தவருமாகிய தாங்கள் விரும்பியது யாது என்றார்.

(வரும்).

மு. கே. நாராயணசாமி ஐய்யர்,
பீ. ஏ., பீ. எல்.,
திருவல்லிக்கேணி.

† அஃதாவது பிரஹ்ம நிஷ்டையில் ஏகாக்ரமடைந்த மனத்துடன் இருந்தார் என்று சொல்லலாம், அல்லது உன்மனி யவஸ்தையிலிருந்தார் என்றும் சொல்லலாம்.

## செயற்கை யறிவு

### (இனத் தியல்ப தாகுமறிவு.)

மனிதர்களின் இயற்கைச் சுபாவம் ஸகவாசத்தால் மாறுபடும். துஷ்ட ஸகவாசத்தால் இருதயம் கெட்டுத் துன்மார்க்கனும் பாபியாயும் ஒருவன் எவ்வாறு ஆகின்றானோ அவ்வாறே நல்ல ஸகவாசத்தால் அவன் நற்குணமுடையவனும், ஸுஹிருதமுடையவனும் ஆகின்றான். ஸகவாசத்தின் வலிமை அதிகம். துஷ்டர்கள் சாந்தகுணமுடைய தெய்வபக்தர்களைப் பரிஹாஸம் செய்வதில் அத்யந்த பிரியமுடையவர்களா யிருக்கிறார்கள். நற்குணமுடையவர்களோ தெய்வபக்தர்களையும் பெரியோர்களையும் இகழாமல் அவர்களுக்கு ஊழியம் செய்வார்கள்.

இதற்குத் திருஷ்டாந்தமாக மகாபாரதத்தில் ஒரு கதையுண்டு. ஒருவன் இரண்டு கிளிகளை வளர்த்திருந்தான். சிறியவைகளா யிருக்கும் பொழுதே மற்றொருவன் அவைகளைப் பிடித்துக்கொண்டு போய்விட்டான். ஒரு கிளி தப்பித்துக்கொண்டு ஒரு பர்ணாஸ்ரமத்தில் ஒளிந்து கொண்டது; மற்றொன்றை அதிக ஜாக்கிரதையுடன் எடுத்துக்கொண்டுபோய் ஒரு கசாப்புக்கடைக்காரனுக்கு விற்றான். அந்தக் கசாப்புக்கடைக்காரன் அதிக அன்புடன் அதைப்பாதுகாத்துத் தன் அருகாமையிலேயே எப்பொழுதும் வைத்துக்கொள்வான். ஆகையால் கிளிக்கு எஜமானனுடைய வாடிக்கையும், குரலும்குணமும் பிடிபட்டன. ஒருநாள் அக்கடையை அடுத்து ஒரு பிரயாணிவந்தான். அப்பொழுது எஜமானன் கடையி லில்லாமையால் கிளி பிரயாணியைநோக்கி 'அயோக்கியா! கடையின்சமீபத்தில் வாராதே, அதிகமாய்ப் பேசினால் மண்டையை உடைத்துவிடுவேன். இந்த இறைச்சியின் விலை இரண்டணாயம். உன்கையினால் அதைத் தொடாதே. அதைவாங்குவது உனக்கு அசாத்தியம்; ஓடிப்போ; நிற்காதே; நின்றால் துண்டம் போடுவேன்' என்று பல பல நிந்தனைமொழிகளால் தூஷித்தது. பிரயாணி இதைப் பொறுக்காது விசனத்துடன் இளைப்பாற ஒரு மரத்தண்டைவந்தான். அ பொழுது பின்வருமாறு ஓர் இனியகுரலைக் கேட்டான்:—அஃதாவது தேவரீர் வரவேண்டும்; எங்கிருந்து வருகிறீர். தயவுடன் ஆசனத்தி உட்காரவேண்டும்; இக்கனிவர்க்கங்களைச் சாப்பிடலாம்" என்பதே. இ இனிய கோஷத்தைக்கேட்டு மனதுகுளிர்ந்த பிரயாணி மேல் நோக்கிப் பார்த்தனன். கசாப்புக் கடையில் பார்த்த கிளியைப்போலவே இதுவு மிருப்பதைக்கண்டு ஆச்சரியப்பட, கிளி பிரயாணியைப்பார்த்து "என் அ ணன் கசாப்புக்கடைக்காரனது பாஷையைப்பேசுகிறான். நான் என் எ மானர்களாகிய ஞானிகளின் பாஷையைப் பேசுகிறேன் என, பிரயாண யின் சந்தேகம் நிவிர்த்தியாயிற்று. பிரயாணி அதிசந்தோஷமடைந்து ஸ வாச தோஷத்தின் பயனைப்பற்றி ஆலோசனையில்அமிழ்ந்தான்.

இக்கதையினால் ஸகவாசத்தின் வலிமையை அறிகின்றோம். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளைச் சிறுபிராயமுதற்கொண்டே நல்ல ஸகவாசத்திலேயே கொண்டுவருதலவசியம். சிறுவயதில் பிடிபட்டகுணம் மாறுவது கடினமானதால், ஒவ்வொருவரும் சேர்க்கையின் வலிமையை அறிந்து தீக்குணங்கள் பிடிபடாமல் சிறுவர்களைப்பாதுகாக்க வேண்டும். "தொட்டிற்பழக்கம் சுடுகாடுமட்டும்" என்னும் பழமொழி யிங்கறிதற்பாலதாம்.

சங்கரன்.

# பெண்கல்வி.

(292 வது பக்கத்தின் தொடர்ச்சி.)

**பாடசாலையின் நோக்கம்:**—பெண்களைப் பாடசாலைகளுக் கனுப்பி வித்தியாப்பியாசம் செய்விக்கும் பக்ஷத்தில், அப்பாடசாலையானது யாவரால் எந்நோக்கத்தைக் கொண்டு ஏற்படுத்தப்பட்டதென்பதைக் கவனிப்பது அத்தியாவசியகமாம். ஏனெனின், பாடசாலையின் ஸ்தாபகர்கள் எந்நோக்கத்தைக்கொண்டு பாடசாலையை ஏற்படுத்தினார்களோ அதற்கிணங்கவே அதில் கற்பிக்கப்படும் விஷயங்களும் அமையும். சாதாரணமாய் நம் தேசத்தில் ஏற்படுத்தப்பட்ட பாடசாலைகள் எவரெவர்களால் ஏற்படுத்தப்பட்டனவோ அவரவர்கள் தழுவிய மதத்தை விருத்தி செய்வதற்கேயாம். இராஜரீக பாடசாலைகளோ பொது நன்மைக்காக வேற்படுத்தப்பட்டன. பொது நன்மை யெனின், எல்லா மதங்கட்கும் பொதுவான நன்னடக்கைகளைப் போதிப்பது. மற்ற யாவும் மதாபிமானம், ஜாதியபிமானம் இவைகளைப் பற்றியே யிருக்கும். உதாரணமாக, மிஷன் பாடசாலைகள் கிறிஸ்தவ மத அபிவிருத்தியின் பொருட்டும், ஹிந்து பாடசாலைகள் ஹிந்து மத அபிவிருத்தியின் பொருட்டும் ஏற்படுத்தப்பட்டவைகள். இந் நோக்கத்தின் ஈடேற்றத்திற்காக மிஷன் பாடசாலையில் கிறிஸ்தவ மதத்திற்கு அநுகுணமான பைபிலைப் பாடமாக வேற்படுத்திக் கிறிஸ்தவ மதஸ்தர்களையே உபாத்தியாயர்களாக்கி, அடிக்கடி அம்மதத்தின் சாரசங்கிரகங்களைக் குழந்தைகளின் மனதில் ஊன்றும்படி உபன்னியாசம் செய்யும்படி செய்வார்கள்.

இந்து மதாபிவிர்த்தியின் பொருட்டு ஏற்படுத்திய பாடசாலைகளில் ஹிந்து மத சாரசங்கிரகங்களான சநாதன தர்மம் பதிவிரதா சிரோமணிகளின் சரித்திரங்கள், முதலிய விஷயங்களை ஹிந்து உபாத்தியாயர்களைக் கொண்டு சிறுவர்களின் பரிசுத்தமான மனதில் பதியும்படி செய்விக்கிறார்கள். ஆகவே பாடசாலை ஏற்படுத்தப்பட்டதன் நோக்கம் மதாபிவிருத்தியின் பொருட்டா? அல்லது பொது நன்மையின் பொருட்டா? என்று ஆழ்ந்து யோசிப்பது அத்தியாவசியகமானது.



ஆனால், சில மிஷன் பாடசாலைகள் "இந்துப் பெண்கள் பாடசாலை" என்றும், "மகம்மதியப் பெண்கள் பாடசாலை" என்றும் பெயரிட்டு அழைக்கப்படுகின்றன. இவற்றின் பெயரினாலே பாடசாலையின் நோக்கம் இன்னதென்று ஊகிக்கமுடியாது. "இந்துப் பெண்கள் பாடசாலை" என்றால் இந்துப் பெண்களுக்கு மாத்திரம் அப்பாடசாலையில் பாடம்சொல்லக்கூடும்; மகம்மதியப் பெண்களை இந்துப் பெண்களுடன் சேர்த்துப் பாடங்கள் கற்பிக்கப்பட மாட்டாவென்பது மாத்திரமே ஊகிக்கப்படும். ஏனெனின், ஒவ்வொருமதத்தினரின் மனோதத்துவங்கள் வித்தியாசப்பட்டேயிருக்கும். இந்துப் பெண்களின் மனோ தத்துவங்களை யுணர்ந்து அவற்றிற் கிணங்கப் பிறிதொரு மதத்தைப் போதிக்கப் புகுந்தவர் அதே முறையை அநுசரித்து மகம்மதியப் பெண்களுக்கு அதே மதத்தைப் போதிப்பது சற்றுஞ் சாத்தியமன்று. ஆதலால், தாம் ஒரே மதப் பெண்களைச் சேர்த்துக் கற்பிக்கப்பாடசாலைகள் ஏற்படுத்தி அவற்றிற்கு அந்தந்த மதஸ்தரின் பாடசாலையென்று பெயரிடப்பட் டிருக்கின்றது; ஆகவே, பாடசாலைகள் யாவரால் ஏற்படுத்தப்பட் டிருக்கின்றன வென்பதையும் யோசிப்பது மிக அவசியமானது.

இனிப் பாடசாலையிற்கற்கும் மாணாக்கரின் குணங்களையும் கவனிப்பது ஆவசியகமென்பதைச் சற்று யோசிப்பாம். சகவாசத்தினால் ஒருவர் மேன்மையாவது தாழ்மையாவது அடையலாம். மேன்மக்கள் சகவாசத்தினால் மேன்மையையும் கீழ்மக்கள் சகவாசத்தினால் தாழ்வையும் அடைவது அநுபவசித்தமா யிருக்கிறது. மனதானது விஷயங்களால் மோகிக்கப்பட்டுச் சிற்றின்பங்களில் பிரவிர்த்திப்பது அதற்குச் சகஜமாதலால், சிற்றின்ப விஷயங்களிலேயே பிரவிர்த்திக்கும் கீழ்மக்களின் சகவாசம் படிவது மனிதர்களுக்குச் சுலபமாயிருக்கும். அநேக நாள் நல்லவர்களுடன் சகவாசஞ் செய்திருந்த ஒருவரைத் துன்மார்க்கர்கள் ஒரு நிமிஷத்தில் தங்கள் வசம் செய்து கொள்ளுவார்கள். இதுவும் அநுபவசித்தம். இங்ஙனம் ஒரு விஷயத்திலுள்ள நம்பிக்கையைப் பிறரால் சுலபமாய்மாற்றமுடியாத அவ்வளவு திடமன முடையாரெனச் சொல்லத்தகும் ஆடவரையே துன்மார்க்கர்கள் ஏமாற்றி விடுவார்களெனின், சகஜமாய்ச் சஞ்சலமான மனத்தையுடைய பெண்கள் துர்ச்சகவாசத்தினால் தீங்குறுவர்என்பதற்குச்சந்தேகமுண்டோ? சந்தேகமின்றாம். ஆதலால், நம் பெண்களைப் பாடசாலைக் கனுப்பவேண்டுமானால் அதிற்கற்கும் பெண்களின் குணாகுணங்களையுமறிதல் அவசியமாம். குழந்தைகளின் குணங்கள் ஏறக்குறைய பெற்றோர்களின் குணங்களை யநுசரித்தே யிருக்குமென்பது நம் யாவருக்கும் அநுபவசித்தமே. ஆதலால், பாடசாலையிற் கற்கும் மாணாக்கரது பெற்றோர்களின் நடை,உடை, பாவனைகளைக் கவனித்து அவை நமக்கு அநுகூலமா யிருந்தால், அப்பாடசாலையில் நம் பெண்களைப் படிப்பிக்கலாம்; அவை பிரதிகூலமா யிருந்தால் பல கெடுதிகளுக்கு ஏதுவாகும். உதாரணம்:—ஒரு ஏழை வீட்டுப் பெண்

ஒரு பிரபு வீட்டுப் பெண்ணுடன் சகவாசம் செய்தால் ஏழைப் பெண்ணுக்குப் பிரபுவீட்டுப் பெண்ணின் நடை யுடை பாவனைகள் படிந்து, தானும் அவளைப் போலவே நடக்க முயன்று, தான் அவ்விதம் நடப்பதற்கு வேண்டிய சௌகரியங்கள் தன் பெற்றோர்களால் செய்யக் கூடாமையால் அவர்களை வெறுப்பாள்; இங்ஙனம் வெறுப்பதற்குக் காரணம் பணமே யாதலால் தனக்குப் பணம் தருபவர் எத்தகையராயினும் அவர்களையே தாய்தந்தையர் என்று கருதி, அவர்களிடத்தில் நேசம் பாராட்டி அவர்களோ டிருக்க விரும்புகின்றாள். அதனா லவர்களோடிருத்த லவளுக்கு நேரிடுகிறது. "விரலுக்குத் தகுந்த வீக்க" மின்றித் தனக்கு மீறின அந்தஸ்துடையவரைப் போல் நடித்தல், தாய்தந்தையரை வெறுத்த பெண்கள் பிறரிடத்தில் காரணமின்றிப் பணம் பெறுதல், அந்நியர்களை யடைதல் முதலிய பல குற்றங்களுக்குக் காரணம் பிரதிகூல சகவாசமேயன்றோ? ஆதலால் இதைக் கவனித்தல் இன்றியமையாதென்பது தெற்றென விளங்கும்.

N. சுப்பிரமணிய ஐயர்.

## இந்துமத மாவதென்ன ?

280-வது பக்கத்தின் தொடர்ச்சி)

மதமென்பது இப்படிப்பட்ட தென்பதும் அதிலடங்கி யிருக்க வேண்டிய விஷயங்கள் இன்னவையென்பதும் பொதுவாய்த் தெரிந்துகொண்டபிறகே அதன் கருத்துக்களும் அபிப்பிராயங்களும் ஒன்றுக்கொன்று பேதப்பட்டாலும் எல்லாமதங்களும் ஒரே நோக்கத்தைக் கொண்டனவாய் முடிவாகின்றன வென்று தெரிந்து கொண்டோம்.

இப்போது இந்துமதமென்ப தென்ன வென்று ஆராய்ச்சி செய்ய வேண்டியதவசியம். மதமென்ப தின்னதென்றும், பொதுநோக்கால் எல்லா மதமும் ஒன்றென்றும், ஏற்பட்டபிறகு இந்துமத மென்ப தின்னதென்று தெரிவிக்க வேண்டியதில்லை; இருந்தாலும் சொல்வோம். கடவுள் தன்மையினையும், உலகசிருஷ்டியையும், மனிதன் நித்தியானந்தத்தை யடையவேண்டிய மார்க்கத்தையும்பற்றி இந்துக்கள்கொண்டிருக்கும் தீர்ப்புக்கள் அடங்கியது எதுவோ அதுவே இந்துமதமென ஏற்படும். இந்துமத மாவதென்ன என்கிறவினாவுக்கு இந்தவிடைபோதுமோவென்றால்போதாது. இந்தவிடை நான்கிலொரு பங்கானவிடையாம். இன்னமும் மூன்றுபங்கு இருக்கின்றன; அவற்றையு மிதனோடுசேர்த்தால்தான் பூர்த்தியான விடையாகும். எனக்குக் குறித்திருக்கும் கால அளவு 10-நிமிஷம். இப்போது அதிககாலமாய் விட்டது. என்னைப்பார்க்கினும் இப்படிப்பட்ட விஷயங்களில் அதிநுட்பக் கருத்துக்களை வெளியிடத் தக்கவர்கள் இன்னும் அநேகர் இருக்கின்றனர். அவர்களாலுண்டாகும் பயனை நான் நஷ்டப் படுத்துகிறேனென்கிற



பயம் எனக்கேதோன்றுகின்றது. அக்கிராசனாதிபதியினுடைய உத்திரவெப்படியோ அப்படி நான் நடந்து கொள்ளச் சித்தமா யிருக்கிறேன். (Cries of please go on, go on; take your own time). மற்ற ரூபங்களையும் ஒருவாறு சொல்லிமுடிக்க எனக்குச் சபாநாயகர் உத்தரவுகொடுக்கிற படியால் ஆரம்பிக்கின்றேன். கனவான்களே! இப்போது நாம் யோசிக்கப்போகிற சில விஷயங்கள் அதிக முக்கியமானவையும் அதிக நுட்ப விஷயங்களுமானபடியால், அதிக கவனத்துடன் நாம்இதை யோசிப்போம்.

உலக சிருஷ்டியையும் நம்முடைய இருப்பையும் பற்றி நாளது வரையில் மனிதர் கண்டுபிடித்திருக்கும் தீர்மானங்கள் சிலசில பாகங்களில் கொஞ்சம் கொஞ்சம் வித்தியாசப் பட்டாலும் மொத்தமாய் அவை மூன்று வகுப்பாய்ப் பிரிக்கப்படும்.

1-வது:—நம்மை நாம்படைத்துக் கொள்ளவேணும், உலகத்தைப்படைக்கவேணும் நமக்குச் சக்தியில்லை யென்று தெரிந்திருக்கிற படியால், இது நம்போலிகள்போ லல்லாமல் நம்மைப் பார்க்கிலும் விசேஷ சக்தியுடையவொருவரால் தான் படைக்கப்பட் டிருக்க வேண்டுமென்றும், அவர் நம்முடைய நல்வினை தீவினைக்களவாய்ச் சுவர்க்க நரகத்தைக் கொடுக்கிறார் என்றுந் தீர்ப்புச்செய்தவர் மேற்சொல்லவந்த மதஸ்தர். (Religionists).

2-வது:— உலகம் எவற்றா லமைக்கப்பட் டிருக்கின்றதோ, அந்தப்பூதங்களை ஆராய்ச்சிசெய்து, நம்முடைய சிருஷ்டிக்குக் காரணம் என்னவென்று நம்முடையவரலாற்றைப்பற்றி மிகுதியாகப் பிரத்தியட்சப் பிரமாணத்தை மேற்கொண்டு சில தீர்ப்புக்கொடுத்தவர் பூதபரி சோதகர். (Scientists).

3-வது:—வஸ்துக்களின் தத்துவத்தை (Essence or trueness) ஆராய்ச்சி செய்து தீர்ப்புகொடுத்தவர் சிலர் (Philosophers). இம்மூன்று வகுப்பாருக்கும் ஆராய்ச்சிக்கு இடங்கொடுத்தவஸ்து உலகம். அதுஒன்றாயிருந்தாலும், அவரவர்(தாம்)கொண்டதீர்ப்புக்களின்காரணமாய்மூன்று விதமாகப்பிரிக்கப்பட்டனர். கனவான்களே! முதல்வகுப்பில் கண்டிருக்கும் மதஸ்தரினிச்சயங்கள் இரண்டாவது வகுப்பாருடைய பூதசோதனைக்கும் மூன்றாவதுவகுப்பாருடைய தத்துவ பரிசோதனைக்கும் முரணும்; முதல்வகுப்பில் அநேக விவேகிகள் தத்தம் மதங்கள் மீது தாம்தாம் வைத்துள்ள அபிமானத்தால் ஒவ்வொரு மதத்திலும் யுக்திக்கொவ்வாத அநேக விஷயங்களிருந்தாலும் தங்களுடைய புத்தி சாமர்த்தியத்தால் ஒருவாறு அவற்றைஅர்த்தஞ்செய்துகொண்டு மதத்துக்கு முக்கியம் நம்பிக்கையே யன்றி நியாயமும் தர்க்கமும் கூடாவென்று சொல்லுவார்கள். அப்படிப்பட்ட நம்பிக்கை மாத்திரத்திலேயே சம்மதமில்லாமல் இரண்டாவது வகுப்பினர் பூதபரி சோதனையில் அடைந்த வியப்பின்காரணமாய் இவ்வாச்சரிய பூதங்களை யுண்டுபண்ணியவர் ஒருகர்த்தாவாயிருக்கத்தான் வேண்டுமென்றுசிலரும் (Materialists), உலகத்தின் அமைப்பு இவ்வளவு வியக்கத்தக்கதா யிருப்பினும், இது

கடவுள் இருப்புக்குப் போதுமான நியாயமாகாதென்று சிலரும் (Athiests)(Therefore all Materialists are not Athiests) இருவகுப்பானார். பூதபரிசோதனையினால் மாத்திரமே எல்லா விஷயமும் முற்றுப்பெறவில்லையென்று, பூதத்தின் தன்மை யென்னவென்று மூன்றாவது வகுப்பாராகிய தத்துவபரிசோதகர்புறப்பட்டனர். இவர்கள் தாம்செய்த சோதனையால் உலகத்துக் கதீதப்பட்டுச் சுயம்பான ஒருவஸ்து இருக்கத்தான் வேண்டுமென்றும், அவ்வஸ்து இதுவரையில் ஒருவராலும் அறியப்படவில்லை யென்றும், இனியொருவராலும் அறியப்படாத தன்மையுடையதென்றும் தீர்மானித்தார்கள்.

கனவான்களே! அனேக வருடங்களுக்கு முன் இந்துதேசத்தின் செழுமையான காடுகளிலும் வற்றாத சலப்பிரவாகம் பெற்றிருந்த நதி தீரங்களிலும் வாசஞ்செய்துகொண்டு உலகவின்பத்தை வெறுத்து உண்மையைத் தேடுவதே மானிடத் தன்மைக்கு பெரிய தொழிலென்று நிச்சயித்துக்கொண்டிருந்த மகரிஷிகள் உலகம் உயிர் பரமென்னு மிவற்றைப்பற்றி மதஸ்தர்கொண்ட தீர்ப்புகள்மாத்திரத்திலேயே திருப்தியடையாதவர்களாய்த் தங்களுக்குள் சில கேள்விகள்கேட்க ஆரம்பித்துக்கொண்டு அவற்றிற்குத் தக்க சமாதானங்களும் கண்டுபிடித்தார்களென்பதைக் கூடிய சீக்கிரத்தில் நாமறிவோம். கடவுளால் இவ்வுலகம் படைக்கப்பட்டதென்றால், அப்படியேயிருக்கட்டும். இந்தவுலகம் பலபொருளின்கூட்டம். ஒவ்வொருபொருளும் தனித்தனியே சுயம்பாகத்தோற்றுகிறது. இப்பொருள்களின்உண்மைத்தன்மை இன்னதென்று நாம்தெரிந்துகொள்ளாதபட்சத்தில், பொருள்களால் அமைக்கப்பெற்றுத் தோற்றுகிற இந்தவுலகம் ஒருவனால் படைக்கப்படுந் தன்மையுடையதென்றும், அல்லது அது தன்னுடைய இருப்புக்கந்நியமான ஒருவஸ்துவின் உதவியை யபேட்சியாமலே இருக்கக்கூடியதென்றும் எப்படிதீர்ப்புப்பெறலாம். ஆகையால் தோற்றும் பொருள்களின் உண்மையை விசாரிக்க வேண்டிய தாவசியகமாம். இங்கிலாந்து தேசவாசியும் மனத்தின் தொழில்களைப்பற்றி அதிநுட்பமான சாஸ்திரத்தை யெழுதினவருமாகிய Professor Bain என்பவருடைய அபிப்பிராயமு மிதுவேதான். (We cannot secure any practical end in this world without observing the natural conditions). இந்த அபிப்பிராயம் அக்காலத்திலேயே இந்துக்களுக் குண்டானது. இவர்கள் செய்த ஆராய்ச்சியின் விதத்தைநோக்குமிடத்து அது தற்காலத்தில் சாஸ்திர ஆராய்ச்சியில் அதிக தேர்ச்சியுடைய எல்லோராலும் வியக்கத் தக்கதாகவே யிருக்கும். அவர்கள் கேட்டுக்கொண்ட கேள்விகள்: பல நெல் ஓர் அம்பாரமாய்த் தோற்றுவது போல ஒரே இனமான வஸ்து அநேகஞ்சேர்ந்து ஒருமுதலாகக் காணப்படுகின்றதா? (வரும்).

ஹிதவசன்.

# பிராணி சாஸ்திரம்.

(286-வது பக்கத்தின் தொடர்ச்சி).

அசைபோடுவன:—

(b) மானினம்.

இவ்வினத்திற் சேர்ந்த ஜெந்துக்களுக்குத் தலையில் இரண்டு கொம்புகளுண்டு.

முன்கூறப்பட்ட ஒட்டகவினத்திற்கோ கொம்புகள்கிடையா. ஆனால், அதே யினத்தைச்சேர்ந்த ஒட்டைச்சிவிங்கி(Giraffe or Camelleopard)க்குத் தோலால் மூடப்பட்ட குறுகிய கொம்புகள் இரண்டுண்டு. இஃது ஒட்டையைப்போன்ற வடிவத்தையும் சிவிங்கியைப் போன்ற புள்ளிகளுடைய தோலையும் உடைய தாகையால், இதற்கு ஒட்டைச்சிவிங்கி யெனக் காரணப்பெயருண்டாயிற்று. இதன் பின்னங்கால்கள் முன்னங்கால்களைவிட அதிகசிறியவை யாகையால், இஃது ஓடும்போது பார்வைக்கு அவலக்ஷணமாயிருக்கும். இதற்கு உயரமான கழுத்தும் நீண்ட நாக்கு மிருப்பதால் பாலைவனங்களிலுள்ள விருக்ஷங்களின் தழைகளைமேய்ந்து ஜீவிக்கும். இஃது ஆப்பிரிக்காக்கண்டத்தில் விசேஷமாய் வசிக்கிறது. ஆனால், இஃது எல்லாக் கண்டங்களிலும் மிருகாசயங்களில் வளர்க்கப்படுகிறது. நாற்கால் மிருகங்களெல்லாவற்றிலும் அதிக உயரமானது இதுவே. இதன் உயரம்சற்றேறக்குறைய பதினேழு அல்லது பதினெட்டடி யிருக்கும். இதன் நாக்கு மூன்றடி நீளமிருக்கும். இதன்கழுத்து நாலாபக்கங்களிலும் திரும்பும். தாய் வயிற்றிலிருந்து அப்போது பிறந்தகுட்டி ஆறடி உயரமிருக்கும். மரங்களின் தழைகளே இதற்கு ஆகாரம். இவ்வொட்டைச்சிவிங்கியினமானது ஒட்டையினத்திற்கும் மானினத்திற்கும் இடையே யுள்ளதானதால், இதுபற்றி இங்குக்கூறப்பட்டது. மான்களுக்கோ நீண்டகொம்புகளுண்டு. ஆனால் அவை வருஷத்திற் கொருமுறை விழுந்துபோகும். இக்கொம்புகள் பசுவின் கொம்புகளைப்போல் போலாயிராமல் கெட்டியாயிருக்கும். மான்கள் சாதாரணமாய் மலைநாடுகளிலுள்ள காடுகளிலும், குளிர்ச்சியான தேசங்களிலுமே விசேஷமாய் வசிக்குமென்று ஊகிக்கப்படுகிறது. இவை ஆப்பிரிக்காக் கண்டத்துக் காடுகளிலும் விசேஷமாய் இருக்கின்றன.

தேகஅமைப்பு: இவற்றின் தேகம் பருத்துக் கனமாயிராமல் சிறிது இலேசாயிருக்கும்; கால்கள் உயரமானவை; ஆதலால், அதிவேகமாயோடும்.

கண்கள்: மிகக் கூர்மையாயிருக்கும்; நாலா பக்கங்களிலும் சுழன்றுகொண்டே யிருக்கும். அதிக சஞ்சலமானவை.

காதுகள்: மெதுவான சத்தத்தையும் கேட்கக்கூடிய அவ்வளவு கூர்மையானவை: நாலாபக்கமும் திருப்பக் கூடியவை.

மூக்கு: அதிக தூரத்திலுள்ள வஸ்துவையும் மோப்பத்தால் அறியக்கூடியது.

சுபாவகுணங்கள்: (1) எளிதில் பயப்படக் கூடியவை. ஆதலால் இவை எப்போதும் கூட்டங்கூட்டமாகவே வசிக்கும்.

(2) புதிதாய் ஒரு இடத்திற்குப் போகவேண்டுமானால் நாலாபக்கங்களிலும் பார்த்துத் தனக்குயாதொரு தீங்கும் நேரிடாதென்ற திட எண்ணம் உண்டானால் மாத்திரம் அங்குப்போகும்.

(3) பழக்கக் கூடியவை.

(4) வேட்டை நாய்களால் துரத்தப்படும்போது அந்நாய்கள் தங்கள் காலடிகளை மோப்பத்தால் அறிந்துபின் தொடர்ந்து வரக்கூடாதவாறுகாலடிகள்பூமியில்சரியாய்ப்பாயாதவண்ணம் குதித்துக்குதித்துஓடக்கூடியவை.

வகைகள்: அந்தந்தத் தேசத்திற்குத் தகுந்தவண்ணம் அநேகவகைகளுள; ஆனால் நம்முடையதேசத்தில் முக்கியமானவை புள்ளிமான், கலைமான், கறுப்புமான், கடம்பை, கஸ்தூரிமான் முதலியன. இவ்வகுப்புகளில் கஸ்தூரிமானுக்குக் கொம்புகள் கிடையா. கறுப்புமானுக்குக்கொம்புகள்உண்டு; ஆனால் அவை இவ்வினத்திற்கு இயற்கையாயுள்ளதுபோல் வருஷத்திற்கொருமுறை விழுந்து முளைக்காமல் எருது எருமைகளின் கொம்புகளைப்போல் எப்போது மிருக்கின்றன. இக்கொம்புகள் போலானவை.

கஸ்தூரிமான்: கஸ்தூரி என்னுமொரு வாசனைத்திரவியம் இதனுடையவயிற்றிலிருந்து எடுப்பதால், இதற்கு இப்பெயர்வாய்ந்தது. இஃது இமயமலையின் காடுகளிலும் சைனா திபேத்து முதலிய தேசங்களிலும் வசிக்கிறது. ஆண் மான்களின் வயிற்றில்தான் கஸ்தூரி அகப்படுகிறது. ஒவ்வொரு மானின் வயிற்றிலும் ஒருதுலாம் கஸ்தூரிக்குமேல் அகப்படுகிறதில்லை. வயதில் முதிர்ந்த ஆண்மான்களின் வயிற்றிலேதான் ஒருதுலாம் கஸ்தூரியகப்படும். ஆகையாற்றான் கஸ்தூரிக்கு அதிகவிலை.

பொதுவாய் எல்லா மான்களும் அதிகவேகமாய் ஓடக்கூடியவை யாதலால், இவற்றைப் பின்தொடர்ந்து வேட்டையாடுவதே சாமார்த்தியமெனக் கருதி அநேக ராஜாக்கள் மான்வேட்டை யாடினரென்று நம் புராணங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. இவை கூட்டமாய் வருவதால் அங்கங்கே இட்டிருக்கும் பயிர்களை மேய்வதுண்டு. இஃதொன்றே இவற்றால் மனிதருக்குச் செய்யக்கூடிய கெடுதி. இவற்றின்தோலை யோகிகள், சித்தர், உபாசகர்கள் முதலியவர் ஆஸனமாக உபயோகிக்கிறார்கள். இப்படி உபயோகிப்பது தாங்கள் சஞ்சலமற்ற மனமுடையவரெனப் பிறர்க்குத் தெரிவித்தற்காம்; எங்ஙனமெனின், பார்வையிலும், மோப்பத்திலும், கேள்வியிலும், நினைப்பிலும் அதிசஞ்சலமான மானை அவர்கள் கொன்று அதன்தோலை ஆஸனமாகச் செய்திருப்பதனால் சஞ்சலமான ஜெந்துக்களெல்லாம் அவர்களுக்கு விரோதமென் றூகிக்கப்படுகிறது. சஞ்சலமான ஜெந்துக்களிடத்தில் விரோதம் பாராட்டுகிறவர்களாதலால், அவர்கள் திடமான மனமுடையவராகத் தான் இருக்கவேண்டு மென்பது பெறப்பட்டது.

(வரும்)

N. சுப்பிரமணிய அய்யர்,
கிண்டர்கார்டன் இன்ஸ்பெக்டர்,
சென்னை.



# பூங்காவனம்.

(295-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

மற்றை நாட் பிற்பகல் அருட்பிரகாசம் வழக்கம்போல ஆற்றங்கரைக்குச் செல்லாது அருளானந்த முதலியாருக்கு முதநாள் வாக்குத்தத்தம் செய்திருந்தபிரகாரம் அவருடைய வீட்டுக்குச் சென்று நம்கதா நாயகியையும் வீட்டெசமானரையும் கண்டான். அவர்களிருவரும் தகுந்த மரியாதையுடன் சம்பாஷணைச்சாலைக்கு அழைத்துக் கொண்டுபோய் ஓர் ஆசனத்தில் இருக்கும்படி செய்து தாங்களும் ஒவ்வொரு ஆசனங்களில் இருந்து நெடுநாட்பழகிய சிநேகிதர்கள்போலச் சம்பாஷித்தார்கள். சிறிது நேரஞ் சென்றபின் அருளானந்தமுதலியாரின் வேலைக்காரனாகிய கோவிந்தன் வந்துபோசனம் தயாராகவிருக்கின்றது என்று அழைக்க, மூவரும் எழுந்து அசனசாலைக்குச் சென்றார்கள். அங்கு இவருண்ணும்படி அரம்பையிலைமீது பலகாரபக்ஷணங்கள்பரிமாறி வைக்கப் பட்டிருந்தன. இருவரும் உண்ணும் வரையும் பூங்காவனம் பணியாளிக்கு உதவியாக நின்று பரிமாறி உபசரித்து அவர்களுண்டபின் தானும் உண்டாள். விருந்துக் கொண்டாட்டம் செவ்வனேமுடிந்தது. சிறுதுநேரஞ் சென்றபின் அருட்பிரகாசம் அருளானந்த முதலியாரிடமும் பூங்காவனத்திடமும் பிரியாவிடை பெற்றுக்கொண்டு கலாசாலைக்குச் சென்று விட்டான். அன்றிரவு கதாநாயகனும் கதாநாயகியும் ஈசுரனால் தங்களுக்கு இயல்பாயமைந்துள்ள அந்தரங்கபாச முயற்சியினால் இன்பமான கனவு கண்டாரென்பது வாசகர்களுக்கு நாம்கூறாமல் விளங்கும் காலம் சில சென்றன. அருட்பிரகாசத்தின் மேம்பாடான சகல குணங்களையுங்கண்ட அருளானந்தமுதலியார் இவனைத் தன்மகளுக்கு நாயகனாக்கலாம்; அவன் அதற்கு இசைவானோ அல்லனோவென்னுஞ் சந்தேகத்துடன் இருக்கின்றார். ஆனால் இவர்கள் இருவரும் ஒருமித்தும் தனித்தும் நாடோறும் ஆற்றுக்குச்சென்று வங்கம் செலுத்திப் பொழுது போக்கிவருவார்கள். பூங்காவனம் இவனை மணமுடித்தல்வேண்டு மென்னும் எண்ணமுடையவளாகவிருக்கின்றாள்; இவனைப் போலவே அருட்பிரகாசமும் எண்ணியிருக்கிறான்; இவர்கள் மூவரும் இவ்வாறே தங்கள் தங்கள் மன எண்ணங்களை அடக்கிவைத்திருக்கிறார்கள்.

ஒருநாள் பூங்காவனம் தந்தையாரிடம் வழக்கம்போல் உத்திரவுபெற்றுக்கொண்டு மகாவலி கங்கையாற்றங்கரைக்குச் சென்று வங்கமேறிச் செலுத்திக்கொண்டு பொழுது போக்காக நெடுந்தூரம் சென்றுவிட்டாள். சிறிது நேரஞ் சென்றபின் அருட்பிரகாசம் அருளானந்த முதலியாரின் வீட்டிக்குச்சென்று எஜமானனையும் குமாரியையும் விசாரிக்கவீட்டெஜமான் நித்திரை செய்கின்றார், குமாரி ஆற்றங்கரைக்குச் சென்றுவிட்டாளென வேலைக்காரனால் அறிந்து தானும் அவ்விடத்திற்குச் சென்று துறைமுகக் காவலனிடம் தனது வங்கத்தைப் பெற்று அதிலேறிச் செலுத்திக்கொண்டு போனான். நேரம் ஐந்தரை மணியாய் விட்டது. இவர்களுக்குண்டாகும் துன்பத்தைக் காணக்கூடாதென்று ஆதவன் அஸ்தமன கிரியில் மூழ்கப்போகின்றான். மாலைக்கால இளம் வெயிலானது பொற்றிரளுருண்டாற்போல ஆற்று நீரிற்றோற்றுகின்றது. யோகிகளது இருதயம்போல யாதொரு ஆரவாரமுமின்றி ஆறானது நிச்சப்தமாயிருந்தது. அருட்பிரகாசம் வங்கத்தை நெடுந்தூரம் செலுத்திக்கொண்டு போகும்போது அரைமைல் தூரத்தில் பூங்காவனத்தின் வங்கம் வருவதைக்கண்டான். அப்பொழுது அவளின் பேரழகையும் வங்கம் செலுத்திவரும் இங்கிதத்தையுங் கண்டு மோகங்கொண்டு ஆஹா! பூலோக மோகினி போலிருக்கும் இப்பெண்மணி நமது ஆருயிரனைய பூங்காவனம் தானோ அல்லது நீரரமகளிர்களில் ஒருத்தியோ என் நேத்திரங்களே என்னை ஏமாற்றுகின்றனவே; நான் பல்லூழிகாலம் அரிய தவத்தைச் செய்திருந்தால் இவள் எனக்கு மனைவியாவாள். நெடுநாளாக நான் மனோராச்சியம் செய்துகொண்டிருப்பானேன்? இன்று அவளது மன எண்ணத்தைக் கேட்டு அறிந்துகொள்ளல் வேண்டும்; அதற்கேற்ற காலமும் இடமும் இதுவே. எனது எண்ணத்திற்கு உடன்படாவிட்டால் அவளுக்கு முன்பாக இவ்வாற்றில் வீழ்ந்து பிராணனை விட்டுவிடுகின்றேன் என்று பலவாறு தன்னுட் கூறிக்கொண்டு செல்லும்பொழுது பூங்காவனமும் கால் மைல் தூரத்தில் தனது வங்கத்தைச் செலுத்திக்கொண்டு எதிர்முகமாக வர இவன் அவளது பேரழகாகிய அமிர்தத்தை யுண்டு ஆராமையோடும்

பொன்னுலகினைவிட் டிறங்கியிவ் வுலகப்
புதுமையும் பார்க்கவந் தீரோ
பின்னிய திரைவா ருதிப்புவி யினில்வாழ்
பெண்களு மயங்கெழில் படைத்த
மென்மையானமே யுமதுபொன் னடித்தூள்
விழவென வளவறுங் கால
முன்னியின் நதிசெய் யருந்தவ நிறைவே
றுதற்கிவ ணுதித்துறைந் தீரோ.

மனமெனுங் கடலி லோடுமோர் காம
வங்கமே யிளைஞர்கண் மணியே



புனையிழை மடவார் மகுடமே யெனது
புண்ணியந் திரண்டபூ ரணமே
தினமொரு படத்தி லோட்டிநில் லாமற்
றிருமொழி பேசுமோ வியமே
வினவுமெப் பொழுதுங் கருகிவா டாது
மிகுமணந் தருமருக் கொழுந்தே
காற்றினில் வெயிலி லடிபடா தலைந்து
கண்முத்த மரும்பிலாக் கரும்பே
மாற்றரு மடவி வரையிடைத் தூங்கா
மஞ்சத்திற் றூங்குசெந் தேனே
யாற்றெனு தழற்செந் தீயடுப் பேற்றி
யட்டிடா நவரசப் பாகே
வேற்றேரு வின்கை புகுந்துநூ லதனால்
வீக்குற மெல்லிதழ் மலரே.

வாய்ந்தமுள் ளடவி தொருமலை யாது
மலரணை துலாவுவான் துயிலே
பெய்ந்தவோ ரிசையே பயின்றிடா தனந்த
விசைபயின் றிடுமிளங் குயிலே
யாய்ந்தசொற் றுளற திளைஞர்க ளிதய
மாங்குடம் பையிலுறை கிளியே
வேய்ந்தநால் வகைப்புட் பமிகச் சுமந்து
விளங்கெழில் வயங்குபூங் கொடியே
கம்மிய ருருக்கு நெருப்புலை புகுதாக்
கனகமே தமரிடா திலங்கித்
தம்மதி யதனில் விலைமதித் தெவருந்
சாற்றெணுத் தரளமே புடைத்து
விம்மிய களப முலைமலை சுமந்து
விரைகமழ் மறைபடா மின்னே
செம்மரை மலர்வேற் கொவ்வைமால் சுமந்த
செழுங்கதிர்ச் சீவரத் தினமே.

என்று இவ்வாறு கூறி ஆனந்தக் கண்ணீர் சிந்திக்கொண்டு வரும்பொழுது ஆகாயத்தில் இடி மின்னல் குமுறலுடனே ஊழிக்காற்றும் சுழிமழையும் உண்டாகப் பூங்காவனம் செலுத்திவந்த வங்கமானது ஆற்றில் மூழ்கிவிட்டது. எதிர்முகமாக வந்த அருட்பிரகாசம் தனது வங்கத்தை அதிக கஷ்டத்தோடு நடத்தி வரும்பொழுது தனது பிராணதாரமானவள்வங்கத்

துடன் ஆற்றில் மூழ்கியதைக் கண்டு வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு அழுது புலம்பி மயக்கமடைய, காற்றின் வேகத்தினுல் இவனது வங்கமும் இவனுடனே ஆற்றில் மூழ்கிவிட்டது.

முதலாம் அதிகாரம் முற்றிற்று.

சிவராமலிங்கம் பிள்ளை, யாழ்ப்பாணம்.

ஸ்ரீநீலகண்ட தீக்ஷிதரவர்கள் இயற்றியருளிய

## வைராக்கிய சதகம்.

(1) ஒரு பிக்ஷுகர் பத்து அவ்யயங்களைச் சேர்த்து வைத்துக்கொண்டிருக்கிருர். அவரிடம் சென்று (அவரிடத்திருந்து) ஃஃ (மம)என்னும் இரண்டு அவ்யயங்களை யாசிப்போம். வேறென்ன விருக்கிறது.

குறிப்பு:—பரமேசுவாருக்கே " தசாவ்யயஃ " என்றுபெய ராதலால் அவரிடம் சென்று அகங்காரத்தைப் போக்கக் கூடிய இந்த இரண்டு அவ்யயங்களை யாசித்து அதனுல் வைராக்யத்தை ஸம்பாதித்துக் கொள்ளுவோம். இவ்வித மடைந்து விட்டால்,உலகத்தில் நமக்கு ஆகவேண்டுவது ஒன்றுமேயில்லை என்பது கருத்து.

(2) மனதை மந்திரியாக வுடையதாயும், தைர்யத்தின் பலத்தையுடையதாயும், ஸங்கல்பங்களுக்கு விரோதியாயும், சாந்தியைத் தனமாய் உடையதாயும் இருக்கிற வைராக்கிய மென்னும் இந்தஸாம்ராஜ்யமானது மூன்று லோகங்களையும் தனக்குடையதா யிருக்கிறது.

(3) ஜனங்கள் ராஜாவினிடத்துப் பயமுறுகின்றனர். அவ்வாறே அரசரும் விரோதிக ளிடத்துப் பயமுறுகின்றனர். ஆனுல், இந்தவைராக்கியமோ பிர்ம்மாமுதல் யமன்வரையில் யாவரிடத்தும் பயத்தை யுண்டுபண்ணுததாயும் இச்சைகளை யொழிக்கக் கூடியதாயும் இருக்கிற ராஜ்யமாம்.

(4) விரக்தனுக்கு (வைராக்யத்தை யடைந்தவனுக்கு) பிக்ஷை கொடுக்கிறவர்கள் தாய்கள்; உபதேசிக்கின்ற குருக்களே தந்தைகள்; சிஷ்யர்களே குமாரர்கள்; மிகுதியாக மானஸோல்லாஸத்தை யுண்டுபண்ணுவதற்கு ஹேதுவான சாந்தியே பத்னி.

(5) கார்யம் பிரதி கார்யம் ஒன்று மில்லாமையால் யாவர் ஒன்றும் செய்யாம லிருக்கின்றனரோ அப்படிப்பட்ட ஸத்துக்களே முக்தர்கள். ஸந்தேக மில்லை; கௌதமர் ஸாக்ஷி.



குறிப்பு:—" துக்கம், ஜன்மம், பிரவிருத்தி,தோஷம், மித்தியாஞான மென்னுமிவை உத்தரோத்தரம் (பின் பின்) நாஸத்தை யடைந்து விட்டால் மோக்ஷமாம் " என்று கௌதமர் ஸூத்ரம் செய்திருப்பதால்,மனோவ்யாபார மற்றிருப்பதே மோக்ஷத்திற்குக் காரணம் என்பது அவர் அபிப்பிராயம் என்பது கருத்து.

(6) ஆகாயம் வீழினும், பூமிவெடிக்கினும், பர்வதங்கள் சலிக்கினும், ஸமுத்திரங்கள் எல்லாம் ஒன்ருகச் சேரினும், உலகமே கீழ்மேலதாயினும், அவற்ருல் விரக்தனுக்கு என்ன குறைவு?

(7) திருடர்யார்? கோள் சொல்லுகிறவர் யார்? சத்துருக்கள் யார்? பந்துக்கள் யார்? கெட்ட இந்தமனஸ்ஸானது எவனுக்கு வசப்பட் டிருக்கிறதோ அவனுக்கே இவ்வுல கெல்லாம் வசமாயிருக்கும்.

(8) விஷயஸுகங்கள் ஸமீபத்தில் வரட்டும்; அப்படியே இந்திரியங்களும் விஷயங்களோடு எப்போதும் ஸம்பந்தப் பட்டிருக் கட்டும்; மனம் என்னும் ஓர் இந்திரிய மாத்திரம் சாந்தியை யடைந்து விட்டால் பிறகு கவலை என்ன?

(9) விஷயஸுகங்களை ஒழிக்க வேண்டுவதற்காக மூடர்கள் மேருபர்வதத்தின் குகைகளில் வஸிக்க வேண்டுமா? ஜலத்தின் ஸம்பந்தம் இல்லாவிட்டால் புழுதியில் தாமரை முளைக்கா தல்லவா?

குறிப்பு:—மனம் இவ்விஷயங்களுக்கு இடங்கொடா விட்டால், இருந்த விடத்திலேயே ஸாதிக்கலாம் என்பது கருத்து.

(10) ஸம்ஸாரமாகிய ரோக விஷயத்தில் அஞ்ஞானம் ஆதிகாரணம்; பிறப்பதுமுதல்ருபம்; ஜனனமரணங்களை யடைவதே பரிபக்குவதசை;நிஷ்டையால் உண்டாகக்கூடிய சாந்திதான் ஔஷதம்.

(11) பன்றியின் ஜாதியை ஸ்மரிக்கிற மனிதன்போலத் தீரன் தன்னுல் அனுபவிக்கப்பட்ட விஷயங்களைக்கண்டு வெகு தூரத்தில் வெறுப்பை யடைந்து வைராக்யத்தை யாதரிக்கின்ருன்.

(12) பால்யத்தில் குழந்தைப்பருவம் போலவும், யௌவனத்தில் பால்யபருவம்போலவும், விருத்ததசையில் யௌவனபருவம் போலவும் தீரர்களுக்குச் சாந்திவந்தவுடன் காமத்தின் சேஷ்டையானது ருசிக்கிறதில்லை.

(13) ஏதோ சிலவிடங்களில் பெரியோர்கள் அநேக முறை விஷயங்களைப் பரீக்ஷித்து அவற்றை விட்டுவிடுகிருர்கள். வாந்திசெய்த அன்னத்தைக் காக்கைகள் தின்பதுபோல மற்றவர்கள் அந்தவிஷயங்களையே ஸேவிக்கிருர்கள்.

(14) தாய்தந்தைகள் கடைசி யானவர்கள்; பத்னி கடைசியானவள்; பிள்ளைகளும் கடைசியானவர்கள் ; இவர்களிடத்தில் அதிகப்பிரியத்தைக்

கொள்ளும் போது இவ்வுலகில் தீரர் எவ்வாறு விரக்தி யடைகிறார்கள்.

குறிப்பு:—அப்படிப்பட்ட தீரருக்குத் துன்பமே ஒழிந்து போவதால் அந்தஜன்மத்திலுள்ள தாய்தந்தையரிடத்திலும் பிரியம் வைக்காமல்வைராக்யத்தை யடைகிறார்க ளென்பது கருத்து.

(15) ஸ்திரீஎன்னும் பெயருள்ள பெருங்காற்று அடிக்கும்போது சலனசித்தமுள்ளவர்கள் புற்போல் சுற்றுகிறார்கள்; ஸத்துக்களான தீரரோ பர்வதம்போல் அச்சமயம் சிறிதுஞ் சலிப்பதே யில்லை.

N. ராமநாத சாஸ்திரி, பண்டிதர்,

அடையாறு லைப்ரெரி, சென்னை.

## வல்லாள மகாராஜன் சரித்திரம்.

(288-வது பக்கத்தின் தொடர்ச்சி).

ஆயினும், எக்குற்றத்தால் விளைந்த வெப்பவுமுந் தீர்க்கவோர் வழியுண்டு. அஃதென்னெனின், இரப்போர்க்கும் சித்த சுவாதீனம் கொண்டில்லாதார்க்கும் உளமகிழ்ந்தீதலேயாம். இவ்விதங் கொடுத்துவருங்காலத்து நல்வினைப் பயனால் தக்கோரடைவர். அவரன்புக்குரியவ ராவோம். அவரது அருள்வாய்க்கும். இதுவாய்ந்தழி இதனாற் கிடைக்காததென்னுளது? ஆதலாலிதுவே தக்கவாறு என மதிக்கின்றனன் என மந்திரி மிகவினயமொடு சொல்லினன். இதுகேட்டு இயல்பாகவே ஈகையில் நற்காதல்கொண்ட வல்லாளவள்ளல் அகமகிழ்ந்து அமைச்சரேறே! நற்றிறமே நவின்றீர். இதற்குத் தலையாய் நான் யோசிக்கத்தக்கது என்னுளது? நாளென்றுகூறுகின்றனன் கேண்மின்; எவரேனும் எக்காலத்தேனும் எதுகேட்பினும் அவர்க்கு அக்காலத்து அது மகிழ்ந்துகொடுப்பமென யாவருமறியும்படி முரசறைவித்து மூக்கணனை வணங்கித் துவசநாட்டும்; இச்செயல் முட்டின்றி முடியுமாறு சகல உத்தியோகத்தவரும் முன்னின் றுதவிபுரிந்து சிறப்பாகச் செய்ய வேண்டுகின்றேன் என்று அரசன் விநயமோடு ஆணையிட்டனன். இது கேட்ட அமைச்சரு மற்றுமுள்ளோரும் எழுந்து நின்று வணங்கி நிற்க, பிரதம மந்திரி சில கூறப்புகுந்தனன்.

எமது தலைவா! தாங்கள் அமைத்தவாறியற்ற என்ன தடையுளது? ஆயினும் ஒரு சங்கை தமியேன் மனத்திற்றோன்றுகின்றது. அதனை விண்ணப்பிக்கின்றேன் செவிசாய்த்தருளல்வேண்டும். எவரெது கேட்பினுங் கொடுக்கத்தக்கவர் தாரணியிலாருளார்? வார்த்தையின் வாய்மைக் கழிவுறு வண்ணங்காத்துக்கொள்வது நங்கடனன்றோ? குறைவென்னுங் குற்றத்து நீங்கிநிறைவென்னும்பெரும்பேறுபெற்றிருத்தலன்றோ நல்வாழ்க்கையாகும். ஏனையோரினும் அரசர் நிலைமையதிக மென்பதற் கையமின்று. ஆயினும் உலகத்துள்ளாருக்கு எவ்வெக்காலங்களில் என்னவென்னவோ வேண்டியிருக்கும்; அவ்வக்காலங்களில் அதுவது கொடுக்க நம்மால் ஆகாதும்போகும். ஆதலால் கேட்டதுகொடுக்க வல்லமல்லம் நாம் என்பதுகருதி நம்மாற்கூடியது காவாது அகமகிழ்ந்து கொடுப்பமென முரசறைவிப்பது பின்னிகழ்வுக்கிடங் கொடாக் காரியமாகும். இதுவேயெமது கருத்து. தங்கள் திருவுளம் உத்தரவளிக்க வேண்டுகின்றனன் என்றான். மந்திரி சொன்னவுரை மன்னன்கேட்டுப் பதிலுரைப்பானானான்.



அறிவினிற் சிறந்த அமைச்சரேறே! நீவிருரைத்த துண்மையே ஆயினும், எவர்க்கேனும் உலகப்பொருள்களிலன்றி உலகத்திலாத பொருள்களில் எங்ஙனம் ஞானமுண்டாகும்? ஒவ்வொருவருக்கும் சிற்சில பொருள் ஞானமே யுண்டாகும். அவ்விதம் ஞானத்திற் குட்பட்ட பொருள்களில் எல்லாப்பொருள்களும் சகசாலத்தில் வேண்டியிரா. யாராவதொருவருக்கு ஒருபொருள் ஒருகாலத்தில் அவசியமாகும். அப்பொருட் சம்பாதனை அவருக்குக் கூடாததாகும். அக்காலத்தில்தானவர் மற்றொருவர் பாலடைந்து அப்பொருள்கேட்கவேண்டிவரும். கேட்கப்பட்டவன் தன்னால் கூடுமாயின் மனமிரங்கிக் கொடுப்பன்; கூடாவிடத்து, அப்பொருள் கிடைக்கத்தக்க வேதேனும் ஒரு வழி சொல்வன். இஃது உலகவழக்கம். உலகத்தார்க்கு விரும்பியபொருள் கிடைப்பது கூடாதாயினும், அரசனுக்குக் கிடைப்பது கூடாதாமோ? அரசனுக்குங் கூடாதாயின், மற்றெவர்க்குக் கூடும்? எளிதிற் கிடைக்கக் கூடியதை ஒருவர் மற்றொருவரைக் கேட்கத் துணிவரோ? ஒருவன் ஆசையின் மிகுதியாற் கேட்கத் துணியினும், அப்பொருளைக் கேட்கப்பட்டோர் ஈவது அறமாகுமா? அல்லது அவர் அஃதுடையோரென வறியாமல் கொடுப்பினும் எளிதில் கிடைப்பது கொடுப்பதோ அறத்தின் சிறப்பு. ஒருவர் நம்மைக் கேட்ட பொருள் நம்மால் உதவக்கூடாது போமெனத் தோன்றினும் கேட்டவர் மனம் புண்படாதுபோமாறு எவ்விதத்தானும் முயன்று கருதியதைப் பெற்று அவருக்கு நாம் கொடுத்தருள்வதே அறத்தின் சிறப்பென்று அதைப்பெற்ற காரணத்தால் அவரடையும் மகிழ்ச்சியைக்கண்டு நாம்மகிழ்வதேமகிழ்ச்சியுளெல்லாம் பெருமகிழ்ச்சியெனயான் கருதுகின்றேன். இதுபற்றி நுங் கருத்தை எனக்கறியச் சொல்ல வேண்டுமென வல்லாள வள்ளல் சொல்லக்கேட்ட அமைச்சர் அடிவணங்கிச் சொல்வார்:—

தருமநெறிதவறாது தாரணியாளும் எம்மிறைவ! தாங்கள் மொழிந்தது மொருறுதியே; ஆயினும், நம்மளவுக்குட்பட்டதும் நம்மாலன்னியர்க்கு அதிசுலபமாய் உதவத்தக்கதுமான பொருளும் சிலசமயத்தில் பலவிதக் காரணத்தால் நம்மால் உதவமுடியாது போவதை நாம் பன்முறை அனுபவத்திற் காண்கிறோமன்றோ? ஆதலால், "செய்வன திருந்தச்செய்" என்னும்

வாக்கியத்திற் கிணங்க நமது முயற்சிசெல்லுமாயின், அதனாலாயபயனை நாமடைவதுகூடும். இதனைத்தரியலரேறே! தாங்கள் இனியோர்முறை சற்றுக் கவனித்துக்கட்டளை யிடவேண்டுகிறேன் என்னு மமைச்சருரைகேட்டுப் பார்த்திபன் பேசலுற்றனன்:—அருமையான பொருள்கள் வேண்டியபொழுதுகிடைக்குமாறு தக்கவேற்பாடு செய்து வைத்துக்கொண்டால்நீவிர் சொல்லிவந்த தவறுதலுண்டாகுமோ? ஏதோ ஒரு காரணத்தால் தவறுதல் நேரிடினும் அத்தவறுதல் நம்முயற்சியின் குறைவால் நேராவிடின் நம்மீது குற்றமின்றாகும்; நம்மாலியன்ற முயற்சி செய்வம். மேலும் நாமிப்போது செய்யத்துணிந்தகாரியம் அறிவாளரால் மதிக்கத்தக்ககாரியமாதலால் இக்காரியத்திற்குத்தவறுதலுண்டாகின், மதியுடையோர் அதனைக்குறையெனக் கருதுவரோ? இதனைச்சீர்தூக்கிநீவிர் புகலவேண்டும் என, மன்னன் மாற்றங்கேட்டமந்திரித்தலைவன் வணங்கிச்சொல்வான்:—பூபதியே! தங்களாணையை யேற்காது அடிக்கடி யெதிர்த்துப் பேசுகிறோமென்று முனியாது கிருபைகூர்ந்து செவிசாய்த்தருளல் வேண்டும் எனவணங்கிப் பிரதான மந்திரி அருகேநின்று மிருதுவாய் வசனிக்கத்தொடங்கினன். யாம்செய்யத்தொடங்கிய இக்கருமம் சற்கருமமாங் காரணத்தாலேயே தடைகள் நேரிடாவென்பதற்கு ஞாயம் என் மனதிற்றோன்றவில்லை. எக்காரியத்திற்கும் தடையுண்டென்பதே நம்மனுபவம். ஞாபகமாய் அருமையான பொருள்கள் யாவும் முன்னதாகவே சேகரித்து வைத்துக்கொள்ளினும் நாம்மறதியின்றி யெல்லாப்பொருளையும் தேடிவைப்பமென்று துணிந்துபேசவியலாது. சற்கருமமியற்றத்துணிந்தவர் கூடியவரையில் வரும் முட்டுகளை நிவிர்த்திக்க வெகு ஏற்பாடாக இருக்கவேண்டுமென்பதென்கொள்கை. "தெள்ளுற்ற நல்லறத்தின் சிரத்திலே யெங்ஙனுந் தீமைவாழும்" என்பது தாங்கள் அறியாததன்றே என, வல்லாளபதிகேட்டு அமைச்சர்தலைவ! நீயறைந்தன வனைத்தும் உத்தமமே. அரசவைச்சாரும் இகழும் புகழும் நினையுஞ்சாருமென்ற உறுதிகொண்டிருப்பதால் மீண்டும் மீண்டும் தக்கமொழிபல வுரைக்கின்றனை. இதுவலவோ அமைச்சுத்திறம்; அறிவாளர் செயல்.

உத்தமவமைச்சரேறே! ஒருசற்கருமஞ்செய்யத்துணியுங்காலத்து நடுவண் வந்துறும் இடையூறுகளுக்கஞ்சாது அது வருங்காலத்து அதனைப் போக்கிச் செய்வன செய்து முடிப்பதே கடனென்பதும், எப்பயன்பிராப்தமானாலும் அப்பயனை அனுபவித்தே தீரவேண்டுமென்பதும், தக்கோர்கொள்கையாம். நாம் விரும்புஞ் செய்கைபொது நலங்கருதியேயன்றி என்னொருவனைப்பற்றியதன்றே. "நல்லா ரொருவருளரே லவர்பொருட்டெல்லார்க்கும் பெய்யு மழை" என்பதுபோல் அரசுக்குள்ளடங்கிய ஜீவகோடிகளுக்குள் ஒன்றன் பொருட்டாய வொருநன்மை நமக்கெல்லார்க்கும் நன்மைவிளைவிக்குமன்றோ! நாமியற்றத் துணிந்ததினால் இன்பதுன்பங்களில் எது பிராப்தமானாலும் நாமெல்லாம்அனுபவிக்கத்தக்கவர்களே. "நன்மை கடைப்பிடி" என்னும் அருமைத்திருவாக்கின்படி நம்மாலியன்றவரையினும்



முயற்சிப்பம்; நாம்வாய்மையராயின், அண்ணாமலையாரருள்செய்வர். நம்மெண்ணம் நன்றதாயின், உண்ணாமுலையாளுடனிருப்பார். அய்யனருள் முன்னிட்டுநம்முயற்சி பின்னிட்டு எடுத்தகாரியம் பூரணமாகும். அய்யனுமருள் செய்வன். ஈதுண்மை உண்மை யென்றனன்.

இவையாவுங்கேட்ட வமைச்சன் எமது தலைவ! தெய்வசகாயத்தால் எடுத்தகாரியம் அனுகூலப்படுமென்று துணிந்து மொழிவதால் நாங்கள் எதிர்நின்று பேசத்தக்கதென்னுளது? இதற்குமேற்பட்டு யாது யோசிக்கப்போகிறோம்? இதுவு மொருவா றுண்மையே யாதலின், தங்கள் உத்தரவுப்படியே இப்பணி யியற்றச் செல்கின்றோம்; வள்ளலே! விடைதர வேண்டுமென வணங்கி நிற்க, அமைச்சர் முகநோக்கி மதிமிக்கமனத்தினரே! எடுத்ததொழில் இடையூறுறாது முடியுமாறு அத்திமுகன் தாள்போற்றி அண்ணாமலையானடிமனத்திருத்தி உண்ணாமுலையாள் துணைவேண்டி வள்ளிமணாளனை வழிபட்டு என்னுரைபோல் பறைசாற்றித் துவசநாட்டி இதற்காய செயல் யாவும் முன்னின்று நடத்தவேண்டும்.

பூமியில் நாம் ஜனித்தநாள் முதலாய் நம் கருத்திற்குட்பட்ட பொருள்கள்யாவும் எத்தேசத்திருப்பினும், தக்க முயற்சி செய்து தேடிச்சேகரித்து அவற்றைக்காவலுடன் பாதுகாத்துத் துவசக்கருத்தைநிறைவேற்று வீரெனத் துணிகின்றோம் என்றான். பின் அமைச்சரும் இறைவனை வணங்கி விடைபெற்றுப் போயினர்.

கோகிலாம்பாள் அம்மாள்,
புரசை, சென்னை.

# நீதிசதகம்.

(290-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

20. சௌர்ய பந்ததி:—மதங்கொண்ட யானையின் மஸ்தகத்தைப் பிளந்து அதன் மாம்ஸத்தைப் புஜிப்பதில் ஆதரவுள்ளதும் அதிக அபிமானமுள்ளதுமான ஸிம்ஹம் பசியாலும்ஜரையாலும்இளைத்துத் தளர்ந்த சரீரமுடையதாய்க்கஷ்டமான நிலைமையை யடைந்திருந்தாலும் காந்திகளெல்லாம் குறைந்தாலும் ஜீர்ணமான திருணத்தை (பழம்புல்லை)ப்புசிக்குமா? இல்லையே!

21. நாயானது கோவினுடைய அற்பமான நரம்பு இரத்தமென்னுமிவற்றால் மலினமாயும் மாம்ஸமற்றதாயுமுள்ள எலும்பை வாயிற் கவ்விக்கொண்டு ஸந்தோஷத்தை யடைகின்றது. அந்த எலும்போ அந்த நாயின் பசியை நிவிருத்திக்குந் தன்மையுடையதாவதில்லை. ஸிம்ஹமோ அருகே வந்த நரியைவிட்டுத் தூரத்திலுள்ள மதங்கொண்ட யானையைக் கொல்லு

கிறது; ஆகையால் உலகத்திலே ஸர்வ ஜனங்களுங் கஷ்டத்தை யனுபவித்தாலும், தமது சக்திக்குத் தக்கவாறு பலத்தை விரும்புகிறார்கள்.

அவதாரிகை.

(முன் சுலோகத்தில் கூறிய அர்த்தத்தையே
வேறு பிரகாரமாகக் கூறுகிறார்).

22. நாயானது அற்பமான நரம்பு, வசை யென்பவற்றின் சம்பந்தத்தினால் மலினமுற்று மாம்சமற்றதான கோலினெலும்பை யடைந்து சந்தோஷத்தை யடைகிறது. அந்த வெலும்போ அந்த நாய்க்குப் பசியை நிவிர்த்தித்தற் பொருட்டாவதில்லை. சிம்மமோ நரிதன்னருகே வந்திருந்தாலும் அதை விட்டு யானையை யடிக்கிறது. ஸர்வ ஜந்துவும் கஷ்டத்தை யடைந்திருந்தாலும், தம்முடைய சக்திக்குத் தகுந்த பலத்தை யிச்சிக்கின்றன.

(நாயின் சேஷ்டா விசேஷத்தைக் கூறுகிறார்).

23. நாயானது ஆகாரங் கொடுக்கிறவன் முன்னர் வாலை யசைக்கிறது; பூமியைக் காலாலே பறிக்கிறது; பூமியில் புரண்டு முகத்தையும் வயிற்றையும் காட்டுகிறது. யானையோ கம்பீரமாகப் பார்க்கிறது; அநேக நல்வார்த்தைகளினாலும் ஆகாரத்தைப்புசிக்கிறது.

24. ஜனனமரண வடிவ ஸம்ஸாரத்தில் யார்தான் பிறக்கவில்லை, மரிக்கவில்லை? எவன் பிறப்பதால் வம்சம் விருத்தி யடைகிறதோ அவன்தான் பிறந்தவனாவான்.

(உத்தம புருஷனது வியாபாரத்தைக் கூறுகிறார்).

25. தைரியசாலியான புருஷனுக்குப் பூங்கொத்துப்போல் இரண்டு வியாபார மிருக்கின்றன. அஃதாவது பூங்கொத்து யாவரது சிரசிலுமிருக்கிறது அல்லது வனத்திலேயே மடிந்து விடுகிறது அதுபோல.

(முன்கூறிய அர்த்தத்தையே வேறு திருஷ்டாந்தங்களால்விவரிக்கின்றார்).

26. பூஜ்யர்களான பிருஹஸ்பதி முதலிய ஐந்து தேவர்க ளிருக்கிறார்கள். ஆயினும், அதிக பராக்ரமத்தில் ஆசையுள்ள அஸுரர்களுக்குப் பதியாயும் சிரஸ்மட்டும் உடையவனுமான ராகு அவர்களுடன் விரோதத்தை யடைவதில்லை; அதிக தேஜஸுடைய சந்திர சூரியர்களை மாத்திரம் பர்வங்களில் (கருவாக்களில்) கிரகிக்கிறான்.

(மகான்களுடைய மாகாத்மியத்தைக் கூறுகிறார்).

27. ஆதிசேஷன் பலகைபோன்ற படத்திலிருக்கிற உலகங்களைச் சுமந்து கொண்டிருக்கிறார்; அவரையும் ஆதி கூர்மம் தனது முதுகில் எப்போதும் சுமந்துகொண்டிருக்கின்றது; அந்த ஆதி கூர்மத்தையும் பிரளய காலத்தி லிருக்கிற சமுத்திரம் ஆயாசமின்றி ஆதிவராஹத்திற்கு அதீன



மாகச் செய்கிறது. ஆகையினால், மகத்துக்களின் சரித்திர மாகாத்மியங்களெல்லையற்றனவாம். ஆச்சரியம்.

(மான சௌர்ய முள்ளவனுக்கே மஹிமையன்றி மற்றவனுக்கஃதில்லை யென்பதில் மைனாக பர்வதத்தைத் திருஷ்டாந்தமாகக் கூறுகின்றார்).

மதங்கொண்ட இந்திரனது மிகுந்த நெருப்புப் பொறிகளோடு கூடிய வஜ்ராயுதத்தி னடியினால் ஹிமவானனபிதா கிலேசத்தை யடைந்து கொண்டிருக்கும்போது, அந்த ஹிமவானது புத்திரனான மைனாகனுக்கு இந்திரனால் விடப்பட்ட வஜ்ராயுதத்தின் அடியினால் பிராணனை விடுகிறது உசிதமே தவிர, ஸமுத்திர ஜலத்தில் முழுகி மறைவது உசிதமன்று.

29. ஸூர்யகாந்தச் சிலை யசேதனமாயினும் அது ஸூர்யனுடைய பாதஸ்பர்சம் (ஸூர்யகிரணஸ்பர்சம்) ஏற்பட்டால், உடனே ஜ்வலிக்கிறது; ஆகையால், தேஜஸுடைய புருஷன் பிறனால் ஏற்பட்ட அவமானத்தை யெப்படி ஸஹிப்பன்?

30. ஸிம்ஹம் சிசுவாயிருந்தாலும் அது மதம்பிடித்த யானையின்மீது பாய்ந்துவிழுகிறது. சௌர்ய முள்ளவர்களுக்கும் இதுதான் ஸ்வபாவம்; வயஸ் காரணமன்று.

## உறுதிமொழிகள்.

தீயாரோ டிணங்கேல்.
சொன்னசொற் றவறாதே.
தீயனவற்றைக் கருதாதே.
எத்தகைய மேன்மை வருவதாயினும், பொய்யுரை யாதே.
உள்ளும் வெளியும் ஒத்திருக்க நட.
என்றென்றும் மரியாதையாக வொழுகு.
வாங்கிய கடனை யுடனே கொடுத்துவிடு.
பெற்றோர் கூறும் புத்திமினைக்கேள்.
பொருள்வருவதுபற்றி யுன்கொள்கையை மாற்றாதே.
ஒவ்வொரு விஷயத்திலும் அளவாகவே நட.
ஓய்வுள்ளபோது உயர்நிலை யடைதற் குரியவற்றைச் செய்.
ஆசாபாசத்தை யடக்கி யொழுகு.
யாவரிடத்தும் வணக்கமுடையவனாக விரு.
சத்காரியத்தைச் சட்டெனச் செயமுயல்.

## இந்திரியபீடம் கரபாத்திரசுவாமிகளின் சம்பிரதாய சிந்தனைவாக்கியம்.

(1) மோக்ஷமடையச் சொரூபவியாபக முழுதுமறிய வேண்டாமோவெனின், அப்படி தேவையில்லை. சமுத்திரஸ்நானம்பண்ண விரும்பினவன் அதனது ஆழமும் நீளமும் அறியவேண்டிய தில்லையே; ஒருபக்கத்தில் முழுகினாற் போதும்; அதுபோல ஒருவிஷயத்திற் றன்னைக்கண்டால் சொரூபவியாபகமுழுதும் மறிந்ததேயாம்.

(2) சற்குருவைவிட்டு நீங்காமலிருத்தல் பிறவியறும் வகையாமென்ப தெப்படி யெனின், புலிவாயி லகப்பட்ட வொருவன் தன்னைப் பிடுங்கிக்கொண்டு வந்தவன் பிறகே யொடுங்கித் திரிவது போல அஞ்ஞானத்தை நீக்கின சத்விருத்தியானவிளக்கத்துடனே கூடியிருந்தால் பிறவி நீங்கும்; சத்விருத்தியை விட்டால் வாதனை பிடிக்கும்; அஃதெப்படி யெனின், வேறொருபுலி பாய்ந்தது போலவாம்.

(3) நஷ்டமெதிலே, லாப மெதிலே யெனின், பதார்த்தத்தில் நஷ்டலாபமில்லை. நினைப்பிலேதான் நஷ்டலாப சுகதுக்கங்களிருக்கின்றன.

(4) பக்குவமில்லாதவருக்கு அநுபவஞ் சொல்வது தகாதென்ப தெப்படி யெனின், கன்னிப் பெண்ணுக்குக் கொக்கோகஞ் சொல்லுவது போலவாம்.

(5) ஆத்மானுபவ மெங்கு மிருக்கின்றமையின், அது யாராலே யனுபவிக்கப் படுமெனின், அஃது அரசனுடைமையைப்போல வெங்கு மிருக்கின்றது; யாராலு மனுபவிக்கப்படாது; ஆனால் அதனைச் சிம்மாசனபதியாய்க் கிரீடந்தரித்தவ னனுபவிக்கலாம். அதுபோலப் பக்குவப்பட்ட புருஷர்கள் எங்கு மிருப்பதை யனுபவிப்பார்கள்.

(6) விசாரிக்கின்றவனுக்கு எல்லாக்கற்பனையு முண்டாம்; அவை நசித்தபோது தான் விளங்குமென்ப தெப்படியெனின், தன்னை யறிகிற சமயத்தில் பாபபுண்யமுண்டு; தத்துவமுண்டு; மாயை யஞ்ஞானமுண்டு; ஜீவனீஸ்வரனுண்டு; தத்துவமசியுண்டு; சமஸ்தமுமுண்டு; எத்தனையுண்டானாலுந் தன்னைக் காட்டிவிட்டு, இத்தனையும் நழுவிப்போம்; தான்மாத்திரம் விளங்கும்.



(7) ஒளியால் இருள் விளங்குகின்றதென்ப தெப்படி யெனின், சூரியன்விளங்கும்போது பதார்த்தம் விளங்குகின்றதென்பது போல அநுபவம்விளங்கும்போது ஆகாரம் (சொரூபம்) விளங்குகின்றது, இது பிரத்தியக்ஷ விருட்டுப்போலவாம்.

(8) விஷயஞ் சுகமல்ல வென்ப தெப்படி யெனின், புசிப்புப் போக மதிகயானால், அது துக்கமாகித் தன்னுடைய நிசசுகத்தில் திருப்பி விடுமெனவறிக.

(9) கடத்தை நினைத்துக் கடாகாரமாகி யறிகிறது சித்தென்றறிந்தால் அப்போது கடமெப்படி யிருக்கு மெனின், கடம் சத்தாமாத்திரமா யிருக்கும்.

(10) மறைப்பதும் பிடிப்பதும் எப்படியெனின், சூரியனிடத்துண்டான மேகம் சூரியனைமறைக்கும், கிரணத்தைப்பிடிக்கும்; அதுபோலச் சொரூபத்தி லுண்டான விருத்தி சொரூபத்தை மறைக்கும், அநுபூதியைப் பிடிக்கும்.

(11) நாள் நடுவேயிருந்து இருபுறமும் புரளுவதெப்படி யெனின், சகல பிராணிகளுக்கும் பசியின் துக்கமில்லாவிட்டால் போஜனம் சுகமாகாது. துக்கமா யிருக்கிற தென்று சொன்னால் சுகமா யிருக்கிறதென்றுஞ் சொல்லலாம். ஞானியென்று சொன்னாலஞ்ஞானி யென்றும் சொல்லலாம்.

(12) சுருதியுங் குருவுஞ் சுவானுபவமு மெப்படியெனின், சுருதியாவது ஸ்தூல சூட்சும காரணந் துரியமென்னு மிவற்றை இன்ன தின்ன தென்று சொல்லும்; குருவானவர் ஸ்தூலமுதலைந்திற்கும் ஸ்தூலம் வியாபகம், நினைப்பு வியாப்யம்; சூக்கும அறிவு வியாபகம் இன்பம் வியாப்பியம்; காரண ஆநந்தம் வியாபகம், அறிவு வியாப்பியம்; துரியவிளக்கமும் வியாபகமும் சமமென்று யுத்தியோடு சொல்லுவர்; சுவானுபவமாவது குரு சீடனிருவருமொத்துச் சாதனம் பண்ணி அநுபூதியாய் விளங்குவது. இன்னும் நூலால் விளங்குவது யாணுக்கனுகிய அறிவு; அறிவால் விளங்குவது அநுபூதி; குருவால் விளங்குவது சாட்சாத்காரமாம்.

(13) சித்தசுத்திவரும்வழியெப்படி யெனின், நித்ய நைமித்திய கருமங்களைப் பலத்தை விரும்பாமல் செய்தால் வரும்.

(14) ஏகாக்கிரமெப்படி வருமெனின், உபாசனையினால் வரும்.

## உலகத்தியல்பு.

(283-வது பக்கத்தின் தொடர்ச்சி).

ஒவ்வொரு பொருளுமொவ்வோரிடத்திலேதானிருக்குமென்றஇப்போது செய்த இவ்விசாரணையால் யாம்கண்டோம்; ஆகவே, பொருள்களை இடத்தைவிட்டுப் பிரித்து வைக்க அஃதாவது இடத்திலில்லாமலிருக்கச் செய்ய இறைவனுக்கும் கூடாதகாரியமாம். ஒவ்வொரு பொருளும் தனதிருப்புக்கு இன்றியமையாததாகப் பெற்றிருக்கும் இடமோ நமது கண் முதலிய இந்திரியங்களுக்கு விஷயமாகிறதில்லை. ஆனாலது சோதனை மூலமாக அறியப்படுகிறது. அதனை இன்னதென்று சொல்லுவதற்குக் கூடாது. ஆனால் ஒன்று நமது கண்ணுக்கு முன்னருள்ளவெளியில் பொருள்கள் எப்படிஎப்படி உலாவுகின்றனவோ அப்படிஅப்படி அவை செல்ல அவ்வெளி அவகாசம் கொடுக்கிறது. அவ்வாறு அவகாசம் கொடுக்கும் அது தன்னிடத்தில் அந்தப் பொருளுள்ள அளவுக்கு வெளியெனப்படுகிறதில்லை; ஆனால், அந்த அளவுக்கு உள்ள பொருளின் நாமத்தை ஏற்கிறது. நமக்கு முன்னுள்ள ஒரு பொருளுமில்லாத இடத்தை ஆகாயம் என்கின்றோம்; அங்குஒருபொருளையிருக்கும்படி செய்யின், அந்தவெளி ஆகாயமெனப் பெயரிடப்படாது, அங்குள்ள பொருட்பெயராலேபேசப்படும்; அப்போது அந்தஅளவுக்குவெளி என்னும் பேர்போயிற்று; அதனால் ஆகாயம் என்னும் பேர்போயின போது அங்கிருந்த அவ்விடம் எங்கேனும் ஓடிவிட்டதா? ஓடிற்றெனின், அது போகஅஃது இல்லாதவிடம் வேண்டும்; அஃதில்லாதவிடமிருப்பதாக எவராலும் சொல்லுதலும் காட்டுதலும் முடியா; இதற்குஎப்பிரமாணமும் உதவாது. ஆதலால் ஆகாயம் என்னும் பேரையிழந்து தன்னிடத்திலுள்ள பொருளின் பெயரை அந்தப்பொருளுள்ள அளவுக்குள்ள வெளியேற்கினும் அங்கும் இடம் இருக்கிறது. இவ்வாறே ஆராய்ந்து செல்லின், ஆகாயமாகிற இடம் எங்குமிருக்கிறதென்று ஏற்படும்; அதனால் அது வியாபகமாம். இவ்வியாபகப் பொருள் ஒன்றா? பலவா? பலவெனின், அவை யிருக்குமிடங்கள் சிலவென்றும் இல்லாவிடங்கள் சிலவென்றும் ஏற்படும். முன்னர் இடமென்பது இல்லாவிட மில்லவேயில்லை என்று சோதனைமுகத்தால் தேர்ந்துள்ளோம். மேலும், அஃதில்லையென்று சொல்லவந்த போதும் இல்லா விடமென்று இடப்பெயரால் குறிக்க நேரிடுகின்றது; ஆகவே அஃது இல்லாதிருக்க முடியாது. இவ்வாறு எங்குமிருப்பதுஒன்று என்பதுபற்றிச்சொல்லவேண்டியதில்லை. இடமெனப்பட்டு வழங்கிவந்தது எவ்வளவுபெரிதாயினும்ஆகுக. அதுபொருள் இருக்கப்பெற்றும், பொருளை யிருக்கச்செய்யக்கூடியதாயும் இருக்கும். இஃது எப்போதாவது பொருள்கள் மூலமாய் அநுமா



னிக்கப்படுகிறது. மேலும் பொருள்கள் இதனைவிட்டிருக்க வியலாவாம். ஆகவே, இவை ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டுப் பிரிக்க முடியாதிருக்கின்றன. பொருள்களின்சமுதாயத்திற்குஉலகமெனப் பெயரிடப்பட்டிருக்கிறதென்று முன்னரேகூறியுள்ளோம்; ஆகவே உலகமெனப்படுவது பொருள்களைமாத்திரம்கொண்டிருக்கவில்லை, ஆனால்பொருள்களையும்அவையிருக்கக்கூடிய இடத்தையும்கொண்டிருக்கிறது. இச்சோதனையால் பொருள்களும் அவையிருக்கும் இடமும் சேர்ந்து, உலகமென்னும் நாமத்தையேற்கும் அம்முதலுக்குக் காரணமாகின்றதென்று பெறப்படும். முன்னர்ப் பேசியுள்ள பொருள்களின் இயல்பும் இப்போது கூறிய இடத்தின் இயல்பும் கூடி உலகத்தின் இயல்பாகின்றன.

ஆதலால், இடமெனப்படும் அஃதொன்றாயும் வியாபகமாயுமிருந்து, எவ்வெப்பொருள் எப்படிஎப்படியிருப்பினும் அப்படியப்படியிருக்கும் அவ்வப் பொருள்களோடு சம்பந்தப்பட்டுத் தான் ஒரு கேட்டையுமடையா திருக்கின்றது; சட்டி, சால், குடம், அண்டா முதலிய வற்றில் பெய்யினும் அதன் அதன் உருவத்தை அந்த அவசரத்தில் ஏற்றதனால் ஒரு கேட்டையும் தன்னியல்பில் மாறுதலையும் சிறிதும் அடையாத ஜலத்தை ஒத்திருக்கின்றது.

ஆகவே, ஒருபொருளைக் குறித்துப் பேசும்போதெல்லாம் அதற்கு அவகாசம்கொடுக்கும் இடத்தைக் குறித்தும் பேசாமல் பேசுகின்றோம். பொருள்களின் சமுதாயத்தைக் குறித்துப் பேசும்போது அவை யிருக்கக்கூடிய விடத்தின் சமுதாயத்தினைக் குறித்தும் பேசாமலே குறிப்பிக்கின்றோம். இதனால், ஏற்படுவது உலகமென்பது பொருள்களின்தொகுப்பையும் அகண்டமாகவிருக்கும் இடத்தையும் இயல்பாகக் கொண்டுள்ள தொன்றேயாம்.

வா. ஆறுமுகசெட்டியார்,
முத்தியாலுபேட்டை, சென்னை.

பிறர்பெயரையும் வர்த்தகத்தையுங் கெடுக்காதே.

அநியாய வழியில் பிரவேசியாதே.

பிறர்கூறுங் கொடுஞ்சொல்லால் சோர்வுறல் வேண்டாம்.

நண்பன் யாதாவதொன்று கூறினால் அஃதுண்மையாவென்று வினவாதே.

நல்லவரோ டிணங்கு.

## நீதி வாக்கியத் திரட்டு.

1. மலை எவ்வளவுக்கெவ்வளவு உயரமாக இருக்கின்றதோ அவ்வளவுக்கவ்வளவு அதில் மேகங்கள்வந்து தங்குமென்பது உண்மை. அதுபோல ஒரு புருடனிடத்தில் எவ்வளவுக்கெவ்வளவு நல்லொழுக்கங்கள் இருக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு கடவுளின் கருணை அவனுக்கு வரும் என்பதும், அவன் பிறரால் நன்கு மதிக்கப் படுவானென்பதும், தான் உள்ளுறகமாகிச் சாந்தம் அடைவானென்பதும் கட்டுரை.

2. நல்லொழுக்க மற்றபுருடன் இந்திரியங்களின் வயமாகின்றான்; ஆதலால், அவனதுசரீரம் அவனுக்கு நரகமும்சிறைச் சாலையும் ஆகின்றது.

3. இயற்கைப் பொருள்களெல்லாம் மனிதனின் ஸ்தூல எண்ணத்தினால் உண்டானவையே. தீமை செய்வதற்குக் கொண்ட கருத்தும், அதற்குரிய முயற்சியும், அதனைச் செய்தலும் ஆகிய இவை துர்ரெண்ண முடைய மனோநிலைமையாம்.

4. இடைவிடாதெழுங் கெட்ட எண்ணங்கள் கெட்டசெய்கைகளைச்செய்விக் கின்றன; இடைவிடாதெழும் நல்ல எண்ணங்கள் நற் செய்கைகளைச் செய்விக் கின்றன. ஆகையால்,ஒவ்வொருவரும் தத்தஞ்செய்கைக்குத்தக்கவாறு நல்லவர்களாகவும் தீயவர்களாகவும் தாங்களேதங்களை யாக்கிக் கொள்ளுகிறார்கள். ஆதலால், ஒவ்வொருவனும் தனது தனது மோட்சத்தையும் நரகத்தையும் தன் தன் கையிலேயே கொண்டுள்ளான்.

5. கடவுள் ஒழுக்கத்தில் பிரிய முடையா ரென்று கண்டவன் தான் ஒழுக்க முடையவனாகின்றான்; கடவுள் பொறுமையில் விருப்புடையார் என்று கண்டவன் தான் பொறுமை யுடையவனாகின்றான். கடவுள் கடமையைச் செலுத்துவதில் பிரியப்படுகின்றார் என்று எண்ணினவன் தனதுகடமைகளைச் சரியாகச் செலுத்துகின்றான். கடவுள் ஆநந்த மயனென்று கண்டவன் ஆநந்தசொரூபியாகின்றான்.

வா. ஆறுமுகசெட்டியார்,
முத்தியாலுபேட்டை,சென்னை.

# வர்த்தமானம்.

### விலையுயர்ந்த புஸ்தகம்.

சில மாதங்களுக்குமுன் லண்டன் நகரத்துள்ள ஓர் ஏலச்சாலையில் ஒரு புத்தகம் 400 பவுண்டிற்கு ஏலம் போடப்பட்டது. அப்புத்தகம் வைர முதலியன வைத்திழைத்துள்ள பொன் பயிண்டுடையதாம்.

### மரக்கட்டைகளிலிருந்து சாராய மிறக்குதல்.

அமெரிக்காவைச் சேர்ந்த போர்ட் ஹாட்லா என்னுமூரில் மரக்கட்டைகளிலிருந்து ஒருவயையான சாராயம் இறக்கப்படுகிறது.

### அக்கினிக்காவடி யெடுத்தல்.

இரங்கூனைச் சேர்ந்த கப்பை யென்னு மூரில் சென்ற சித்திரை மாதம் சித்திரா பருவத்தன்று துரைசாமி நாயுடு என்பவரால் அக்கினிக் காவடி மிகச் சிறப்பாக வெடுக்கப்பட்டது.

### கடலின் ஆழம்.

டிடானிக் கப்பல் முழுகிய விடத்தில் கடலின்ஆழம் இரண்டு மைலாம். அட்லாண்டிக் கடலில் ஐந்துமைலாழமும் பசிபிக் மகா சமுத்திரத்தில் ஆறுமைல் ஆழமும் சில விடங்களி லிருக்கின்றனவாம். இவ்வாறாக ஆழமுள்ளவிடங்களெல்லாம் பூமியின் அருகேயேயிருக்கின்றனவாம்.

ஒரு நோவாக் கப்பல்:—கோப்பனேகனிலுள்ள இஞ்சினீய ரொருவர் நோவாக் கப்பலைப்போன்று பத்தி லொரு பங்கு அளவாக ஒரு கப்பல் செய்திருக்கின்றனர். இக்கப்பல் பைபிலிற் கூறியுள்ள ஒழுங்கின்படியும் கி. மு. 300-ம் வருட மிருந்த அபாமியன் நாணயத்தின் மீது போட்டிருக்கும் நோவாக் கப்பலின் விவரத்தின் படியும் செய்யப்பட்டிருக்கின்றது. இஃது இரண்டு டன் பளுவுசுமக்கக்கூடியது. இது முடிந்தவுடன் கடலில் விடப்பட்டபோது நேர்த்தியாகவே இருந்ததாம். இது தற்கால நாகரீகத்தை யநுசரித்து உந்நதமான வமைப்புடன் செய்யப்பட்டிருக்கின்றது.

லண்டனுக்கும் இந்தியாவிற்கும் 8 நாள்பிரயாணம்:—ஏப்ரல் மாதம் 20-ந்தேதி மாலை 8-35 மணிக்குச் சிலர் லண்டனிலிருந்து புறப்பட்டு 25-ந் தேதி மாலை 7-30 மணிக்குப் பாக்குவிற்குச் சென்றனர்; 27-ந் தேதி காலை 6 மணிக்கு அன்சாலியைப் போய்ச்சேர்ந்தனர். $6\frac{1}{2}$ நாள் பிரயாணஞ் செய்தனர்; பால்க்ஸ்டோன், பிளஷிங், பெர்லின், வார்சா, ஸநாமென்காராஸ்டாப், பெஸ்லான் மார்க்கமாகப் பிரயாணஞ் செய்தனர். இவ்வாறு பிரயாணஞ் செய்தபொழுது வார்சாவில் 10 மணி நேரமும், மற்றுஞ்சில இடங்களில் 12 மணிநேரமும்தங்கவேண்டியதாயிற்றும். இதனைப்பிரித்துப் பார்க்குமிடத்து, மேற்படி பிரயாணம் $5\frac{1}{2}$ நாள் பிடித்ததென்று தெரிகின்றது. ரயில்வே கிரமமாகப் போகும் போது இந்தியாவிலிருந்து லண்டனுக்கு 8 நாளிற் போய்ச் சேர்வது கூடும்.

**வைரக்கல் செய்யு முறை.**— பெர்லின் நகரத்தி லிருக்கும் ஒரு தத்துவ சாஸ்திரி நிலக்கரி வாயுவி னின்றும் வைரஞ் செய்திருக்கின்றார். இது மேற்படி வாயுவினுடன் பாதரசங்கலந்து செய்யப்படுகின்றது. பாதரசக் கலப்பினால் வாயுகெட்டிப்பட்டு வைரமாகின்றதாம். இவ்வாறு கெட்டிப்பட்டகரிய நிலவாயு வெகு நேர்த்தியா யிருக்கின்றதாம். இதனுடன் ஒருதுண்டு வைரத்தைச் சேர்க்க அதனைச்சுற்றிலும் வைரக்கற்களுண்டாகின்றனவாம்.

புருஷனை விஷம் வைத்துக்கொல்லும் பாதகி.

ஹங்கேரியாவைச் சார்ந்த பிரௌகப்ரு ஜான் என்பவள் தன்னுடைய கணவனை விஷமிட்டுக் கொன்று வேறொரு புருடனை விவாகஞ் செய்து கொள்ளுவது வழக்கமாம். இவ்வாறு இவள் நான்குமுறை விவாகஞ்செய்து நான்கு கணவர்களைக் கொன்று ஐந்தாவது புருஷனை விவாகஞ் செய்திருக்கின்றனளாம். தான்கெடுவது மன்றி அங்குள்ள ஸ்திரீகளையு மிவள் கெடுத்து வருகின்றனளாம். மேலும் இவள் அடுத்தகிராமத்திலுள்ளவர்கட்கும் விஷத்தை விற்றும் வருகின்றனளாம். இவ்விஷயத்தை அதிகாரிகள் தெரிந்து இவளையும் இவளைச் சேர்ந்தவர்களையும் பிடித்து ஜெயிலில் வைத்திருக்கின்றார்கள். இவ்வாறு நடப்பது விதவா விவாகத்தின் கெடுதிகளு ளொன்றாம்.

**30-வருஷம் நித்திரையின்றி யிருப்பவர்:**— பிரான்சின் பிரதான நகரமாகிய பாரிஸில் இருக்கும் ஆல்பர்ட் ஹெர்பின் என்பவர் தம்மனைவியை யிழந்த 30-வருஷ காலமாக நித்திரை யென்பதின்றி யிருக்கின்றார். இவர்க்கிளைப்பென்பதே யில்லையாம். இவரெப்போதும் ஏதாவதொரு வேலைசெய்தே யிருப்பாராம். அதனால் இவர்க்கு ஒரு தொந்தரவு மில்லையாம். இதனால் இலட்சுமணர் 14-வருஷம் நித்திரையின்றி யிருந்தாரென் றிராமா யணங் கூறுவது அங்கீகரிக்கத் தக்கதாமென்பது நன்கு பெறப்படும்.

**ஒருவர் உயிருடன் புதைக்கப்பட்டனர்:**— காலீஷ்யா சூராவிக்காவிலிருக்கும் மாஸ்னி என்னும் ஒரு போலீஸ் தனவான் வலிபினால்கீழேவிழுந்துவிட்டார். ஊரில் டாக்டர் ஒருவரு மில்லாமையின் ஒரு வெட்டிரினெரி சர்ஜன் அவர் இறந்து போயினரென்று சர்டிபிகேட் கொடுத்தனர். அவருடைய பந்துக்க ளெல்லோருங் கூடி அவரைப் பெட்டியிற் சேமஞ் செய்து கல்லறைக்குக் கொண்டு போயினர். அங்குக் கிரியைக ளெல்லா முடிந்தவுடன் பிரேத மிருந்த பெட்டி கல்லறையில் வைக்கப்பட்டது. அப்போது பெட்டியிலிருந்து ஒருசத்த முண்டாயிற்று உடனே பெட்டியைத் திறந்துபார்த்தனர். மாஸ்னி என்பவர் உயிரோ டிருக்கக் கண்டனர். அவர்எழுந்திருந்து தமது வீட்டிற்கு யாவரும் அதிசயிக்குமாறு சென்றனர்.

**ஒருபெருமீன்:**— கொச்சித் துறைமுகத்தில் கிளைவலையொன்றில் 202 பவுன் நிறையுள்ள ஒருபெருமீ னகப்பட்டது. அதைப்போட்டோ எடுத்திருக்கின்றனர்.



**101-வயதுடையவர்:**— இங்கிலாந்தில் 101-வயதுடைய எம்-எஜி ஹேக்என்னும் ஒருபாரிஸ்ட ரிருக்கின்றார். இவரிப்போதும்கண்ணாடிபோடாது புஸ்தகங்களைப்படிக்கிறார். இவர்பிறரது சகாயத்தை விரும்பாது தம் வீட்டில் உலாவி வருகின்றார். சமீபகாலத்திற்கு முன் இவரது 101-வது வயதுக் கொண்டாட்டம் மிகுவிமரிசையாக நடைபெற்றது.

**நான்கு கண்ணுள்ள பிள்ளை:**— பாலக்காட்டைச் சேர்ந்த காயல்மன் என்னுமூரில் சில மாதங்கட்கு முன் ஒருஸ்திரீ 4 கண்களையுடைய ஒருபிள்ளை பெற்றாள். அப்பிள்ளையை அநேகர் சென்று பார்த்து வருகின்றனராம்.

**ஒரு சுத்தபோஜன சீலர்:**—லண்டன் கந்தமூல பலாதி பட்சண சங்கத்தின் செக்ரிடெரி மிஸ்டர் F. நிக்கல்ஸன் பீ. ஏ. என்பவர் தாம் சென்ற 21 வருடங்களாக மச்சம், மாமிசம், கோழி என்னு மிவற்றைப் புசிப்பதில்லை யென்றும், தினந்தோறும் பதினான்கு மணிநேரம் வேலைசெய்வது தமக்கு வழக்கமா யிருக்கிறதென்றும் கூறுகின்றார்.

**5-குட்டியீன்ற ஆடு.**—கார்டிப் கருகிலிருக்கும் லானெடாரனில் மிஸ்டர் ஜான் தாமஸ் என்பவருடைய ஆடு 5 குட்டிகளீன்றதாம். ஆடு இரண்டு குட்டிபோடுவது சகஜம்; மூன்று குட்டி போடுவது அருமை; ஐந்து குட்டி போடுவது அபூர்வமே.

**ஓரதிருஷ்டம்:**— காட்டன் என்னும் பெயரையுடைய மூன்று சகோதரர்கட்குக் கல்கத்தா டர்ப் கிளப் லாட்டரியில் 40,000 பவுண்டு மதிப்புள்ள முதல் பிரைஸ்வந்தது. ஒவ்வொரு சகோதரருக்கும் இரண்டிரண்டு லட்சம் ரூபாய் கிடைத்தது. இது பேரதிர்ஷ்டமே.

**23-பாஷை பேசுபவர்:**—ஹாங்காங் யூனிவர் ஸிட்டிக்குத் தலைவராக நியமிக்கப்பட் டிருக்கும் சர் சார்லஸ் எலியட் என்பவர் 23 பாஷைகள் பேசுவாராம்.

**வியாபார விவாகம்:**— ஆர்கவியைச் சேர்ந்த ஆரானிலிருக்கும் சிசன் என்பவன் மூன்று முறை தன்னுடைய மனைவியை நீக்கி மீண்டும் நான்காவது முறை யவளையே கலியாணஞ்செய்திருக்கின்றான். எட்டு வருடத்தி லிவ்வாறு செய்திருக்கின்றான். இதற்கிடையில் வேறொரு ஸ்திரீயை விவாகஞ் செய்து கலியாணஞ் செய்தநான்கு மாதத்தில் அவளையும் நீக்கிவிட்டான். மேற்குத் தேசத்துச் சாதியாரின் விவாகமுறை விநோதமே?

**பெருந்தாடி யுடையவர்:**—மிஸ்டர் S. C. பிரின்கிலி என்பவர் 5 அடி 4 அங்குல நீளமுள்ள தாடி வைத்திருக்கின்றனராம். இவ்வளவு நீளமுள்ள தாடி உலகத்தி லொருவருக்கு மில்லையாம். இதனால் அவருக்கு வருமான மிகுதியாம்.

**குடியர்களுக்குத் தண்டனை:**—ருஷியாவைச் சேர்ந்த செயின்ட் பீட்டர்ஸ் பர்க்கி லிருப்பவர் குடியர்களாக விருப்பார்களாயின் அவர்கட்குத் தண்டனை வீதிகளை விளக்குவதேயாம். சில சமயங்களில் நல்லுடை யுடுத்திக்கொண்டிருக்குங் கனவான்களும் வீதிகளைப் பெருக்குவதைக் காணலாம். எத்துணைக் கௌரவமுள்ளவர்களாயினும் அவர்கள் குடிப்பார்களாயின் அவர்கட்கும் தெருவைப் பெருக்கும் தண்டனையே விதிக்கப்படுமாம். இது மதுவிலக்கிற்குத் தக்க ஏற்பாடாகவே யிருக்கின்றது.

**ஒரு சாப்பாட்டுரோமன்:**—இரண்டு புறா, ஒரு சுருட்டு, ஒரு ஷில்லிங் (பன்னிரண்டு அணா) ஆகிய விலைகளை வெகுமதியாகப் பெறும் பொருட்டு, ஒரு பராமார்க்கெட் போர்ட்டர் 15 நிமிடத்தில் பன்னிரண்டு ரொட்டியைத் தின்றதுடன் மூன்று பைண்டு சாராயமுங் குடித்தனனும்.

**ஒரு பெருங் கப்பல்:**—பெல் பாஸ்ட்டில் ஹாலண்டு உல்பஸ் ஓர்க்கில் ஒருபெருங் கப்பல் செய்யப்பட்டு வருகின்றது. அது டிடானிக்கப்பல் சேதமடைந்ததனா லுண்டாகிய அநுபவத்துடன் இது சீர்பெற வமைக்கப் பெறுமாம். இக்கப்பல் ஒருவருடத்தில் முடிவாகும்.

**120 வயதளவிருந்து இறந்த ஒருவர்:**—டாக்காவில் வசித்திருந்த பாபு நவக்கிஷோர்தத் என்பவ ரிறந்து போகும்போது அவருக்கு வயது 120 ஆம். அவர் இறப்பதற்குச் சில மாதங்கள் முன் வரையிலும் நன்றாக வெளியேசென்று திடகாத்திரத்தோடு உலாவி வருவாராம். அவருடைய பற்களில் ஒன்றும் அவர் சாகும் பரியந்தமும் விழுந்ததில்லையாம்.

**ஒரு முறையில் 4 பிள்ளைகளைப் பெற்றவள்:**—இங்கிலாந்தில் ஒரு ஸ்திரீ ஒரேமுறையில் 4 பிள்ளைகளைப்பெற்றாள்; அவற்றுள் 3 பெண்ணும், 1 ஆணும்.

**தும்மினவரைச் சிட்சிக்கும் தேசம்:**—ஜர்மன் தேசத்துப்பட்டணங்களிலுள்ள தெருவில் போகின்றவர்கள் தும்முதல் கூடாதாம். தும்மினால் சிட்சையுண்டாம்.



**பிரீவிகவுன்சில் தீர்ப்பு:**—மைமன்சிங் மாஜிஸ்டிரேட் மிஸ்டர் கிளார்க் என்பவர் ஒரு ஜமீன்தார் வீட்டை அக்கிரமமாகச் சோதனை செய்தாரென்று அவர் மீது ஜமீன்தார் கல்கத்தா ஹைக்கோர்ட்டில் ஒரு நஷ்ட ஈடு கேசு தொடுத்தார். அக்கேசை ஜஸ்டிஸ் மிஸ்டர் பிளெச்சர் ஜமீன்தார் பட்சம் தீர்மானஞ் செய்தனர். அவ்வாறே ஷை ஹைகோர்ட்டுப் புல் பெஞ்சும் தீர்மானஞ் செய்தது. அது பற்றி மிஸ்டர் கிளார்க்கு பிரீவி கவுன்சிலுக்கு அப்பீல் செய்திருந்தார். அந்த அப்பீல் லார்ட் மக்னுட்டன்முன்னர் விசாரணைக்கு வந்தது. அவர் ஹைகோர்ட்டுத் தீர்மானம் நியாய விரோதமாமென்றும் மிஸ்டர் கிளார்க்கு சோதனை செய்தது நியாயமாமென்றும் தீர்மானஞ் செய்தனர். இவ்வாறு பிரீவி கவுன்சிலில் செய்த தீர்மானம் வியப்பாகவே யிருக்கின்றது.

**ஒருயானைக்குட்டி:**—ஏப்ரல்மீ 6-ந்தேதி கோப்பனேகனிலுள்ள மிருகக்காட்சிச் சாலையிலிருக்கும் இந்துதேசத்து யானையொன்று ஓர் ஆண்குட்டி போட்டிருக்கின்றதாம். சிறையில் வைத்திருக்கும் யானைகள் குட்டி போடுவது மிகவும் அபூர்வமாம். ஐரோப்பாக் கண்டத்தில் 1903-ம் வருடத்தில் லண்டனிலொன்றும் கோப்பனேகனில் 1907-ம் வருடத்திலொன்றும்1912-ம் வருடத்திலொன்றும் மிருகக்காட்சிச் சாலைகளிலிருக்கும் யானைகள் குட்டிபோட்டனவாம். இந்தியா பர்மா சயாம் முதலியவிடங்களில் சிறையிலிருக்கும் யானைகள் குட்டிபோட்டதில்லையாம். யானை குட்டிபோடுவதற்கு 23-24 மாதம் சூல்கொண்டிருக்கின்றதாம்.

**இன்டர் மீடியேட் பரீட்சையிற்றேறிய2வங்காளிப் பெண்கள்.** கல்கத்தா நீலரத்ன சர்க்காரவர்களுடைய குமாரத்தி நளினி சர்க்கார் என்பவள்லிட்டரேட்சரிலும் வஸ்துதத்துவ சாஸ்திரத்திலும் முதல் வகுப்பிற்றேறி யிருக்கின்றனள். இவளுடைய சிறிய பிதாவின் குமாரத்தியும் வஸ்து தத்துவ சாஸ்திரத்தில்முதல் வகுப்பிற்றேறி யிருக்கின்றனள்.

**கட்டாயப் படிப்பு:**—பரோடா ராஜ்ஜியத்தில்கல்விகற்கக்கூடிய வயது வந்தவர்களையெல்லாம்கட்டாயமாய்க் கல்விச்சாலைகளுக்கனுப்புதல் வேண்டுமென்னு முத்தரவை மீறிநடந்த பெற்றோர்களிடமிருந்து 72000-ரூபாய்க்குமேல் அபராதம் வாங்கப்பட்டிருக்கின்றதாம்.

இரண்டு தந்திரசாலிகள்:—டிடானிக்கப்பல் மூழ்கியபோது அதிலிருந்த டாக் ஓன், சிட்ஹேமென்னு மிரண்டு சூதாடிகள் தாம் தப்புவதெப்படி யென்று வெளியே வந்து யோசித்துக்கொண்டிருந்தனர். அப்போது ஸ்திரீகளைமாத்திரம் படகுகளில் ஏற்றுவதைக்கண்டு தாமும் ஸ்திரீ வேஷம் பூண்டு படகிலேறிக் கொண்டார்கள். படகு செல்லும்போது அதனை இடையே ஸ்திரீகளும் தள்ளும்படி யிருந்தமைநோக்கி, அவர்கள் தம்வேஷத்தை மாற்றிப் படகைத் தள்ளினார்கள். இவர்களி னுதவி யில்லாதிருந்தால் படகு மூழ்கிப்போயிருக்குமாம்.

இங்கிலாந்தில் சிலபாகம் கடலோடு சேருதல்:—இங்கிலாந்து தேசத்தின் சமுத்திரக்கரை யோரத்திலுள்ள பூமி அலையால் கரைந்து சமுத்திரத்தோடு சேர்ந்து வருகின்றது. ஒவ்வொரு வருஷமும் ஜிப்ரால்டரின் அளவுள்ள பூமி சமுத்திரத்தோடு சேருகின்றதாம். கிழக்குக் கரையில் மாத்திரம் ஒவ்வொரு வருஷமும்ஹெலிகொண்டு தீவவ்வளவு பூமி சமுத்திரத்தோடு சேருகின்றதாம். சென்ற நூறுவருஷங்களுள் லண்டன் நகரமளவுள்ள பூமி சமுத்திரத்தோடு சேர்ந்து விட்டதாம். இவ்விதமாகச் சிறுகச்சிறுக இங்கிலாந்து முழுமையும் 400 வருடங்களில் கடல் கொண்டு போய்விடுமென்று ஒரு தீர்க்கதரிசி கூறியிருக்கின்றார்.

ஒரு வெங்கல வீடு:—சுவிட்சர்லாந்தைச் சார்ந்த நியூசாற்றலென்னும் நகரில் ஆஸ்பத்ரி கட்டக் கடைக்கால் தோண்டுகையில் வெங்கலத்தால் கட்டிய ஒரு வீடு காணப்பட்டது. அதில் ஒரு ஸ்திரீயின் முழுவெலும்பு அழிவின்றி யிருந்தது. அதன் பைகளில் ஆறுவளையல்களிருந்தன. அவற்றுள் நான்கு வெண்கலத்தாற் செய்யப்பட்டவை. இந்த வீடு 600 வருஷங்கட்கு முன்னரமைக்கப்பட்டிருக்க வேண்டுமென்று அங்குள்ள பூதத்துவ சாஸ்திரிகள் கூறுகின்றார்கள்.

109 வயதுடைய ஒரு ஸ்திரீ:—உட்கிரீனி லிருக்கும் ரெபெக்கா கிளார்க் கென்னும் நாமதேயமுடைய ஒரு ஸ்திரீ சில மாதங்கட்கு முன்னர் 109 வயதடைந்தாள். அவள்தான் நமது சக்கிரவர்த்தியாருடைய குடிகளுள் வயது முதிர்ந்தவளாம்; பென்ஷன் (உபகாரச் சம்பளம்) வாங்குபவர்களுள் நீண்டகாலம் பென்ஷன் வாங்குபவளாம். அவளுடைய கடைசிப் பிள்ளையின் வயது 67 ஆம். அவள் டன்ஸ்டெபிலில் 1803-வது வருடத்தில்பிறந்தவளாம்; அவளுக்கு 69 வருடங்கட்குமுன்னர்க் கலியாணமாயிற்றாம்.

ஒரு தங்க விக்ரகப் பரிசு:—திபேத்திலிருக்கும் புத்த லோககுருவான டாலேலாமா அவர்கள் ஓரடி யுயரமுள்ள ஒரு தங்கப் புத்தவிக்ரகத்தை ஜப்பான் சக்ரவர்த்திக்கு இனாமாக அனுப்பியிருக்கின்றனர். ஜப்பான் சக்ரவர்த்தியின் நட்பைவிரும்பி இவ்விக்கிரகம் அனுப்பப்பட்டதுபோலும்.



நரிகளின் விசேஷ குணம்:—அமெரிக்காவின் அலாஸ்கா என்னும் பிரதேசத்தில் வசிக்கும் நரிகள் கற்பிற் சிறந்தனவாம். ஆண் நரி இறந்துபோனால் பெண் நரி மற்றோராண் நரியை விரும்புவ தில்லையாம்; ஆண் நரியும் பெண்நரி யிறந்து போனால் மற்றொரு பெண் நரியை விரும்புவ தில்லையாம். எவ்விடத்தும் நரிகளது சுபாவ மிவ்வாறேயாம்.

ஸ்திரீ புருஷர்களுள் பெரும் பான்மையார் மறுமண முடையவராக விருப்பது நரிகளின் குண விசேஷத்தை நோக்கும்போது நியாயமாகத் தோன்றுவதாமோ.

ஒரு விநோதவரி:—காகேசிய தேசத்தைச் சேர்ந்த டிராக்கென்னும் பிரதேசத்தி லிருப்பவர் இதுகாறும் தமது மனைவியரை விற்கும் வழக்கத்தை விட்டார்களில்லை. அதனாலங்குக் கலக மடிக்கடி யுண்டாய் வருகின்றது. அவர்களுள் இங்குஷிச னென்னும் ஒரு வகுப்பார் இப்போது ஒருங்கு கூடி நன்கு யோசித்து மேற்படி கலகத்தை யொழிக்க வெண்ணி ஒருவனுடைய மனைவியை வாங்கும் மற்றொருவன் அவனைச் சேர்ந்தவர்களுக்கு 11 பவுண்டு வரியாகக் கொடுக்க வேண்டுமென்றும், புருஷனிழந்த ஸ்திரீயை விவாகஞ் செய்து கொள்ளுபவன் அவளைச் சேர்ந்தவர்க்கு 5½ பவுண்டு வரியாகக் கொடுக்க வேண்டுமென்றும் தீர்மானித்திருக்கின்றனர்.

பறக்கும் பைசிகல்:—பிரான்சின் பிரதான நகரமாகிய பாரிஸில் சென்ற மாதம் 23-ந் தேதி லாவாவேட் என்பவர் 400 பவுண்டு வெகுமதியுள்ள ஒரு பைசிகல் பந்தயத்தில் தமது பைசிகல் வண்டியை 3 அடி 7 அங்குல முதல் 8 அடி பரியந்தம் பூமியின் சம்பந்தமின்றிச் செலுத்தினாரென்று தெரிகின்றது. அவர் அந்த வண்டிக்கு ரக்கை போன்ற கருவிகளிரண்டைத் தந்திரமாகத் தகட்டாற்செய்தமைத் திருக்கின்றனராம். அது செல்லும்போது பட்சி பறப்பதுபோ லிருக்கின்றதாம்.

இந்தியாவில் கல்வியின் நிலைமை:—பிரிட்டிஷ் இந்தியாவில் சர்க்கார் பிரைவேட் பள்ளிக்கூடங்களில் 1910-11ல் கல்வி பயின்று வந்தவர்களின் தொகை 6,358,665 ஆம். இவர்களுள் 5,492,422 புருஷர்களும், 866,243 ஸ்திரீகளும் ஆம். பத்து வருடங்கட்கு முன்னர் 4084,130 புருஷர்களும், 446,382 ஸ்திரீகளும் வசித்திருந்தனராம். கல்வியின் அபிவிருத்தி பத்து வருடங்கட்கு முன்னர் இருந்ததற்கு இப்போதிருப்பது புருஷர்களுள் நூற்றிற்கு 34 வீதமும், ஸ்திரீகளுள் நூற்றிற்கு 94 வீதமும் அதிகமாகி யிருக்கின்றன. 1910-11ம் வருடத்தில் 172,478 கல்விச் சாலைக ளிருந்தன. அவற்றுள், 157,401 புருஷர்களுக்கும், 15,077 ஸ்திரீகளுக்கும் ஆம்.

## Tit Bits.

It is stupid to affect to be other than you are. You cannot improve upon natures work. She made a man of you; you can only make an ass of yourself.

The man who imagines that he is not dependent upon the world is greatly mistaken, but not so greatly mistaken as the man who imagines that the world is dependent upon him.

Two is company, three makes a witness.

It is often better to be deceived by those who love than undeceived about them.

A man who never smiles should not necessarily consider himself the centre of gravity.

Hypocrisy is the tribute vice pays to virtue.

Those who make a living by curing obesity may be said to live on the fat of the land.

The voice of conscience is soft and fairly easy to ignore, but to bear ones sins quoted clearly by comrades or sung by scandal is intolerable.

A good listener is rare ; most men are too busy thinking of their answers to notice your argument.

A good action is often spoiled by a bad motive and a play's good motive is often spoiled by bad acting.

The generality of friends put us out of conceit with friendship just as the generality of religious people put us out of conceit with religion.

In public life it is almost impossible to gain a reputation without losing one.

Many are called but few are chosen.

Flattery is a sort of bad money to which vanity gives currency.

Man is disappointed if he does not get what he wants and dissatisfied if he does.

He who is pleased with nobody is much more unhappy than he with whom nobody is pleased.



Youth without beauty is of as little consequence as beauty without youth.

We live in an age that reads too much to be wise and thinks too much to be beautiful.

Old age gives good advise when it is no longer able to give bad example.

A necessity is a luxury you can do without.

**P. S. Sundram & Co.**

Electro-Platers, Gilders and
General Commission Agents.

உயர்ந்த தங்கம் வெள்ளிப் பதக்கங்களும் முதல் தாமான அநேக யோக்கியதா பத்திரங்களும் வெகுமானமாக அளிக்கப்பட்ட பெயர் பெற்ற

பி. எஸ். சுந்தரம் கம்பெனி,
எலக்டிரிக் தங்க நகை வியாபாரிகள்.
107-பெரியதெருவு திருவல்லிக்கேணி, சென்னை,

எலக்ட்ரிக் தங்கநகை விலைவிவரம்.

32" நீளம் $\frac{3}{4}$" அகலம் 150. } அரும்பு சிலங்கை கட்டிய
32" நீளம் $\frac{5}{8}$" அகலம் 210. }

| | | | |
|---|---|---|---|
| 5 வருஷம் காரண்டியுள்ள | மல்லிகை ஒட்டியாணம் | ரூ. 25 | 8 |
| | நாக ஒத்து பெரியது | 12 | 0 |
| | நாகஒத்து சிறியது | 9 | 0 |
| | காரை பெரியது | 10 | 0 |
| | காரை சிறியது | 7 | 8 |
| | வங்கி பெரியது | 10 | 0 |
| வருஷம் காரண்டியுள்ள | மல்லிகை ஒட்டியாணம் | 19 | 8 |
| | நாகஒத்து பெரியது | 9 | 0 |
| | ஷை சிறியது | 6 | 12 |
| | காரை பெரியது | 7 | 8 |
| | ஷை சிறியது | 5 | 12 |
| | வங்கி சிறியது | 8 | 0 |
| | $1\frac{1}{2}$-வருஷம் காரண்டி யுள்ள மல்லிகை ஒட்டியாணம் ... ... | 13 | 8 |
| | மல்லிகை ஒட்டியாணம் காரண்டியில்லாதது ... ... | 8 | 8 |
| | ஜாமந்திப்பூ | 1 | 8 |
| | ரோஜாப்பூ | 1 | 8 |

## 170-பக்கப் புத்தகம் இனாம்!

இது நல்ல ஆரோக்கியமும் நீடித்த சுகவாழ்வும் தரும் இயற்கையாயுள்ள சில விதிகளை அனுசரிப்பதைப் பொறுத்திருக்கிறது. இச்சிறந்த புத்தகம் சுகவழியைக் காட்டி, நல்ல ஆரோக்கியத்தோடும் எப்பொழுதும் திடகாத்திரத்தோடும், நீண்ட ஆயுளோடு மிருக்கும்படி செய்து நல்ல அதிர்ஷ்டத்தைக் காட்டும். இப்புஸ்தகம் இனாமாகவும் தபாற் செலவில்லாமலும் அனுப்பப்படும்.

☞ இப்புத்தகத்திற்கு இன்றைக்கே எழுதுங்கள்.

வைத்திய சாஸ்திரி,

**மணிசங்கர் கோவிந்தஜி,**

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

22, பிராட்வே & 96. மவுண்ட்ரோட், மதராஸ்.

ஏஜெண்டு:—M. A. நேல்லையப்ப முதலியார்,

38 சின்னகடைத்தெருவு, திருச்சினாப்பள்ளி.

## சக்ர வர்த்தினி.

### ஒரு வேண்டுகோள்.

அடுத்த சஞ்சிகை நவம்பர்மாதம் முதல் தேதியில் வெளியாகும். இனி இச்சஞ்சிகை ஒவ்வொரு மாதமும் முதல் தேதியிலேயே வெளியாகும். இவ்வருடத்துச் சந்தாவைப் பத்திரிகாபிமானிகள் தயவுசெய்து முன்னரே அனுப்பிவைக்குமாறு வேண்டுகின்றோம். சந்தாதாரர்கள் அங்ஙனஞ் செய்து பத்திரிகையை யாதரிப்பார்களென்று எதிர்பார்க்கின்றோம்.

இவ்வெட்டாவது வருடமுதல் சஞ்சிகை தருவிக்க இஷ்டமில்லாதவர்கள் முன்னரே தெரிவித்து விட்டால் எமக்குப் பொருள் நஷ்டமும் சிரமமுமில்லாமற்போம்.

ப - ர்.

# சக்ரவர்த்தினி.

" கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்,
மற்றீண்டு வாரா நெறி".

VOL VIII. தொகுதி அ. | OCTOBER 1912. அக்டோபர்மீ 1912. | NO. 3. பகுதி - ௩.

## முயற்சி.

மெய், வாய், கண், மூக்கு, செவி மனமென்னும் ஆறிந்திரியங்களையும் வாய்ப்புடையனவாகப் பெற்றுள்ள மக்கள்தேவர் நரகரென்னும் மூவருள் மக்களை புண்ணியவிசேடத்தால் தேவராயும், பாவவிசேடத்தால் நரகராயும் பிறக்கின்றனரென்பது கர்மத்தின் கூறுபாடுகளை நன்குணர்ந்தவராதுதுணிபாம். மக்கள் தேவராதற்கும் நரகராதற்கும் காரணம் நல்வினை செய்வதில் முயற்சியுடைமையும், தீவினைசெய்வதில் முயற்சியுடைமையுமாக விருத்தலின், நாம் தீவினைசெய்வதில் முயற்சிப்ப தொழிந்து நல்வினை செய்வதில் முயற்சியுடையவராக வொழுகுதல் வேண்டும். முயற்சியின்றி வருவது வருக, ஒழிவதுஒழிக வென்றிருப்பது ஞானிகளுக்கன்றி மற்றவர்க்கொருவாற்றானு முடியாதகாரியமாக விருத்தலின், நாமெப்போது முயற்சியுடையவராக விருந்து, செய்யத்தக்கனவற்றைச்செய்து, செய்யத்தகாதனவற்றை மனத்தாலுஞ் செய்யக்கருதா திருத்தல்வேண்டும். நம்மனோருள் பெரும்பான்மையோர் பிறர்க் காகாதனவற்றையும் தமக்காகாதனவற்றையுஞ் செய்வதில் பெரிதுமுயற்சியுடையவராக விருக்கின்றனர்; இம்முயற்சி இம்மையிற் பழியையும், மறுமையிற் பாவத்தையுந்தருவதாக விருத்தலின் இம்முயற்சியை யெவ்வாற்றாலேனும் விடவேண்டுமென் றவரொருசிறிதுங் கருதாதுகாலத்தைக் கழித்துவருதல் மிகவும் பரிதபிக்கத்தக்க விஷயமாம்.

நம்மனோருட்பலர் "அவன் சோம்பேறி; ஒருகாரியத்தையுஞ் செய்யாதெப்போதும் எருமைபோன்று மந்தமாக விருக்கின்றனன்" என்று சோம்பேறியாயிருப்பவனைக்குறித்துப் பேசுவது பெருவழக்கன்றோ? அவன் தனக்கும் பிறர்க்கு மாவனவற்றைப்பற்றிச் செய்யாது வாளாவிருப்பது பற்றித்தான் அங்ஙனங் கூறுகின்றனர். எவனைக் குறித்தவர் இவன் சோம்பேறி

என்றற்றொடக்கத்தனவாகக் கூறுகின்றனரோ அவனுமேதாவதொரு காரியத்தைச் செய்வதில் முயற்சியுடையவனாகத்தா னிருப்பானென்பது சிறிதூகித்து நோக்கின் மலைமிசைத்தோன்று மதியம்போன்று செவ்விதின் விளங்குவதாம். இத்தீ முயற்சியை முயற்சியெனக் கொள்ளாது நன்முயற்சியையே முயற்சியெனக் கொள்ளுதல்வேண்டும். நாற்றமென்பதும் மணமென்பதும் வாசனையென்னுமொரு பொருட் கிளவியாயினும், உலகவழக்கில் நாற்றமென்பது துர்க்கந்தத்தையும் மணமென்பது சுகந்தத்தையுமுணர்த்துவதுபோன்று தீயகாரியங்களைச்செய்யக் கொள்ளுமுற்சாகம்சோம்பலென்றும் நற்காரியங்களைச் செய்யக் கொள்ளு முற்சாகம் முயற்சி யென்றும் சொல்லப்படுகின்றன. ஒருவன் தனக்கும் பிறர்க்கும் நன்மைதரத்தக்ககாரியஞ் செய்ய உற்சாகங்கொள்ளாது, தனக்கும் பிறர்க்கும் தீமைதரத்தக்க காரியமாகிய சோம்பிக்கிடப்பதில் உற்சாகங்கொள்வதும் ஒருவகை முயற்சியேயாம். பிறர்பொருளை யபகரித்தல் பிறர்மனைவியைவிரும்புதல் முதலியவற்றிற் கொள்ளுமுயற்சி யெவர்க்கும் தமக்கும்பிறர்க்கு மாகாததாக விருத்தலின், அம்முயற்சியை யறவேவிட்டொழிதல்வேண்டும். தீயகாரியங்களைச் செய்யக்கொள்ளு முற்சாகத்தை முயற்சியென்னாது, நற்காரியங்களைச் செய்யக்கொள்ளு முற்சாகத்தையே முயற்சியென்று வியவகரித்துவருதல்வேண்டும். "முயற்சி யுடையா ரிகழ்ச்சி யடையார்" என்னும் பழமொழியைக்கருத்தூன்றி நோக்குமிடத்து, நற்காரியங்களைச் செய்யக்கொள்ளு முற்சாகமே முயற்சியென்னும் பதத்தாற் சொல்லப்படுகின்றதென்பது நன்குவிளங்கும். தீயகாரியங்களைச் செய்யக்கொள்ளு முற்சாகமுடையார் பழிப்பையேயடைந்து, பாவத்தை யதன் சம்பளமாகப் பெறுதலின், தனக்கும் பிறர்க்குமாவனவாகிய புண்ணியகருமங்களைச் செய்யக்கொள்ளு முற்சாகமே நன்மக்களியாவராலும் முயற்சியென்று கூறப்படுகின்றதென்பதாம். ஊக்கம், முயற்சி, உற்சாகம் பிரயத்தனமென்பன வொருபொருட்சொற்களாம்.

மக்களாகப் பிறந்தவ ரின்றியமையாதடையத்தக்க பொருள்கள் நான்காம். அவை அறம், பொருள், இன்பம், வீடென்பனவாம். இந்நான்கு பொருளையுமடைவதற்கு முயற்சி யின்றியமையாதகருவியாகவிருத்தலின், முயற்சியுடையவரே, இந்நான்கு பொருளையும் தவறாது பெறுதற்குரியவராவர். நல்லனவற்றைச் செய்வதில் முயற்சிகொள்ளாது, வீணே யாதும் வரும்போது வரும்; போம்போது போமென்றிருப்பவர் ஒருகாலத்தும் மேன்மையுற்று விளங்குவதேயில்லையாம்.

"முயற்சி திருவினையாக்கு முயற்றின்மை, யின்மை புகுத்தி விடும்" என்னுந் தமிழ்மறைச்செய்யுளை நோக்கும்போது, செல்வத்திற்கேது முயற்சியும், அஃதின்மைக்கேது அஃதின்மையுமாமென்பது தோன்றுதலின், நாமுயற்சியுடையவராயினாற்றான் முன்னுக்கு வருதல் கூடும்; இன்றேல், பின்னுக்குப்போவது நிச்சயமாம்.



சிலர் "அவனரு ளாலே யவன்றாள் வணங்கி" என்றற்றொடக்கத் தனவாக வென்பெலாம் நீங்கி யின்புருவாய மாணிக்கவாசகர் முதலிய மகாத்துமாக்க ளருளியிருத்தலின், நமக்கு முயற்சியெற்றிற்கு? என்றுவிதண்டைபேசி வீணாகின்றனர். 'நமக்கு முயற்சி எற்றிற்கு' என்று கூறுதலும் ஒரு முயற்சியின் காரியமாக விருத்தலின் முயற்சியில்லா விடத்தொன்று முடிவுபெறுவ தில்லையாம். "தெய்வத்தானாகா தெனினு முயற்சிதன், மெய்வருந்தக் கூலி தரும்" என்று பொதுமறை கூறுதலின், முயற்சி பயன்படாது போவதொருவாற்றானு மின்றாம்; ஆகலின், நல்லோர் கூறியவற்றை யுற்சாகத்தோடு செய்துவருபவர் நன்மையென்பனவற்றை யெல்லாம் பெறுவர் என்பது திண்ணமாம்.

உலகந்தோன்றிய நாள்முதற்கொண் டிதுகாறும் மேன்மைபெற்று விளங்கியவரியாவரும் முயற்சியால் முன்னுக்குவந்தவரேயாவர்; உதாரணமாக—நமது பிரிட்டிஷ்ராஜாங்கத்தார் உலகத்துள் ஐந்திலொருபாகத்தையாண்டு ஒப்புமுயர்வுமின்றி விளங்குவதற்கேது, அவரது முயற்சியன்றிப் பிறிதென்னும்? அவர்வளர்பிறைபோல வளர்ந்துவருவதும், அவரும் அவர் போன்றவரு மொழிந்த மற்றவர் தேய்பிறைபோலக் குறைந்துவருவதும் எதனால்? முயற்சியினாலும் அஃதின்மையினாலு மன்றோ?

மிருகவர்க்கங்களுள் யானைபெரியதும் கூர்ங்கோட்டதுமாக விருந்தும், சிறியதும் கூர்ங்கோட்டில்லதுமாகிய புலிக்கஞ்சுவதற்கேது, யாது? முயற் சியின்மையேயன்றோ? சிற்க. (கோடு - கொம்பு).

முயற்சியானது இகலோகசாதனத்திற்கும், பரலோக சாதனத்திற்கும், மோட்ச சாதனத்திற்குங் காரணமாக விருத்தலின் முயற்சியே ஒருவர்க்குப் பெரும்பாக்கியமாம்: முயற்சிவிலைகொடுத்துவாங்கும் பொருளதன்றாகலின், அதுபற்றி வருத்த முறுவதற்குக் காரணமின்று. நாம் நம்முடைய வாற்றலுக் கேற்றவாறாகச் செய்வனவற்றைச் செய்தும், தவிர்வனவற்றைச் செய்யாதும் வருவோமாயின், இம்மையில் புகழ்பொருள் புண்ணியங்களையும், மறுமையில் சுவர்க்கவின்பத்தையும், காலக்கிரமத்தில் மோட்சத்தையும் பெறுவோமென்பதற்கு யாதொரு தடையுமின்றாம். கடவுள் நமக்கு மனிதவுடம்பைக் கொடுத்ததோ டமையாது, இது நன்று, இது தீது எனப் பகுத்தறியும் புத்தியையுங் கொடுத்ததற் கேது, நாம் முயற்சியினாலே முன்னுக்கு வருதற் பொருட்டன்றோ? ஒவ்வொருவனு முயர்வதற்கும் தாழ்வதற்கு மேது அவனவனது முயற்சியேயாமென்பது கடைபோக வுற்று நோக்குவார்க்கினிது விளங்குவதாமாகலின், இனியேனும் நல்லனவற்றைச் செய்வதில் சோம்பியிராது, அவற்றைச் செய்ய முயற்சிகொண்டு முன்னுக்குவர முயலவேண்டும். படித்து முன்னுக்கு வருவதற்கும், பொருளைச் சம்பாதிப்பதற்கும், போகத்தைத் துய்ப்பதற்கும், புராணேதி காசங்களைப் படித்தோ கேட்டோ பரலோகசாதனங்

களைத் தேடுவதற்கும், பிறவற்றிற்கும் முயற்சியே மூலகாரணமாக விருத்தலின், அதனைப்பெற்று, அதன்வழி யொழுகு கின்றவ ரொருகாலத்தும் அல்லலடைவதின்றாம். முயற்சியால் முன்னுக்குவந்து பின்னுளாரியாவரும் போற்றவாழ்ந்தவர் பலரென்பதற்கு மார்க்கண்டேய முனிவர் முதலாயினோரே தக்க சான்றோராவர். மார்க்கண்டேய முனிவர் முயற்சியால் முன்னுக்கு வந்தவரென்பது,

"உலையா முயற்சி களைகணா வூழின்
வலிசிந்தும் வன்மையு முண்டே - யுலகறியப்
பான்முளை தின்று மறலி யுயிர்குடித்த
கான்முளையே சாலுங் கரி" என்று நீதிநெறி விளக்கங் கூறுவதனா லினிது விளங்குவதாம்.

"யான் பிரயத்ந வடிவமுயற்சி யுடையோனென்னு மனுபவத்திற்கு விஷயம்யாதோ அவ்விஷயத் திருப்பதும், குணத்தன்மைச் சாதியின் வியாப்பியமான சாதியாதோ அச்சாதியை யுடையதுமான குணம் முயற்சி யெனப்படும்" என்று நியாயப்பிரகாசம் முயற்சிக் கிலக்கணங் கூறுகின்றது.

## சூடாலை.

### முதலங்கம்-ஐந்தாங்காட்சி.

(13-வது பக்கத்தின் தொடர்ச்சி).

பத்மாவதி:—(சூடாலையின்முகத்தைப்பார்த்து) பங்கயவல்லி! அடியேனது மனமிப்போது விகடகவியின் வார்த்தையால் விகாசமடையா திருக்கின்றது. காணப்படுவதெல்லாம் கனவுலகம் போன் றழியு மியல்பினவாக விருத்தலின், அழியும் பொருளை விட்டு, ஆநந்த நிலையைப்பெற வேண்டுமென்று விரும்புகிறேன்; அதற்கு என் மனம் ஒத்துவராமை பற்றி மிகவும் வருத்தமுறுகின்றேன். பெரியார் கூறியவாறு தனித்திருத்தலே தடையற்ற ஆநந்தம் விளங்குவதற்குத் தக்கசாதனமாமென்று தாங்க ளொரு சமயங் கூறியதைத்தமியே னடிக்கடி சிந்தித்து வருகிறேன்.

சிகித்துவசன்:—சூடாலை! பத்மாவதியின் வார்த்தை மிக வுத்தமமாக விருக்கின்றது. நான் பத்மாவதியைச் சாதாரணமாக



வெண்ணியிருந்தேன். இப்படிப்பட்ட தோழி யுனக்குக் கிடைத்தது பெரும்பாக்கியமே.

பத்மாவதி நாணியொரு புறமாக நிற்கிறாள்.

சூடாலை:—(விகட கவியை நோக்கி) அம்பலத்தாடி! விகடஞ் செய்வதொழிந்து நீ மேன்மையுறுவ தெப்போதோ? நாம் நம்முடைய வாழ்நாள் முழுதும் விகடமாக விருக்கின்றனவென் றுணர்ந்தாலன்றோ விகடத்தினின்றும் நீங்கியுய்தல் கூடும்.

விகடகவி:—அம்மணி! தமியேன் வார்த்தையிப்போது சபைக்கேற்காததாக வாயிற்று; தாங்கள் முன் பொருமுறை எனக்குத்தத்துவமாகக் கூறிய விஷயம் ஞாபகத்திலிருக்கின்றது; ஆனாலும், வாசனைப்பழக்கத்தால் விகடஞ் செய்வதே மேற்பட்டு நின்றது. இஃதொழிவ தெப்படியோ?

சூடாலை:—(சிகித்துவசனைப்பார்த்து) வேந்தர் வேந்தே! விகடகவி கூறுவதைக் கேட்கக் கேட்க மிக வியப்பாக விருக்கின்றது.

சிகி:—ஆம், ஆம். பாழும் விடகத்திலழுந்தித் தன்னையே யன்றிப் பிறரையும் பாராமுகமாக்கும் இவ்விகடகவிக் கிவ்வெண்ண முண்டாயது பேராச்சரியமே.

விக:—(அடக்கமாக நின்றுள்ள பத்மாவதியை நோக்கி) அதோ நிற்கின்ற பத்மாவதியைப்போல என்னையுமாக்க ஒருவழி கூறவேண்டும்.

சூடாலை:—விகடகவி! ஆநந்தாசிரமத்தில் ஆதிவாரந்தோறும் ஆத்துமதத்துவத்தைப்பற்றிச் சிவப்பிரகாச சுவாமிக ளுபந்நியாசஞ் செய்கிறாரென்பது உனக்குத் தெரிந்ததே யன்றோ? அதற்கு யான் மகாராஜாவுடன் போகும் போது நீயுமொரு சமயம் வந்திருக்கின்றாயன்றோ? அங்குச்சென்று அம்மகாத்மாவினது உபந்நியாசத்தைக்கேட்டு, கேட்டவாறு நடப்பையாயின், நீகேட்ட வழி யுள்ளவாறு விளங்கும்.

சிகி:—சூடாலை! அவரைப்பற்றி நல்லபிப்பிராயங் கொள்ளாத இவ்விகடகவிக்கு, அவர் கூறுவது தகுதியுடைய தாமோ?

சூடா:—உண்மையே. ஆயினும், எனக்குத் தெரிந்ததைக் கூறினேன்.

பத்:—கருணை நிரம்பிய கற்புடை நங்காய்! அடியேன் கூறுவதொன்றைக் கவனித்தல்வேண்டும். சுவாமிகளைப்பற்றித் தாங்களொரு சமயம் வியந்து பேசியிருந்தபோது தற்செயலாக விகடகவிவந்து, சிவப்பிரகாச சுவாமிகளிடத்துள்ள மகிமையாது? அவர் சாப்பிடாமலிருக்கின்றனரா? மல ஜலப்பிரவர்த்தியில்லாமலிருக்கின்றனரா? என்றற்றொடக்கத்தனவாகவிகழ்ந்து கூறியவிஷயம் ஞாபகத்தி லிருக்கக்கூடும்.

பத்:—ஞாபகத்திலிருக்கின்றது! இரும்பும் பரிசனவேதியால் பொன்னா மன்றோ? இவ்விகடகவி குணவானாகலாமென்று கருதித் தான் இவ்வாறு கூறினேன். ஞானியின் சிறந்தவிலக்கணம் நிராசையென்பதை யறியாது பலர் பலவிதமாகக் கூறுகின்றனர். "உலைவாயை மூடலாம்; ஊர்வாயை மூடமுடியுமா?" என்னும் பழமொழி யுனக்குத் தெரியாததன்றே.

விக:—"கற்புடைத் தன்பு முடித்துநாண் மெய்ப்பூசி, நற்குண நற்செய்கை பூண்டு" உள்ள மாதரசியே! தமியேன் வாழ்நாள் எல்லாம் வீழ் நாளாக்க, விகடஞ் செய்து வீணானது பற்றிப்பெரிதும் வருத்த முறுகின்றேன். இனித் தாங்கள் கூறியவாறு ஆநந்தாசிரமத்திற்குப்போய் வருகிறேன்.

சிகி:—சூடாலே! பரபரப்பினோடே பலபல செய்துஇரவு பகல் பாழுக்கிறைக்கும் விகடகவியையும் நீ கணப்போது கூறிய வார்த்தையால் ஓரதிகாரி புருஷனாக்கி விட்டாய். உன் மதியே மதி!

சூடா:—சூரியோதயத்தால் (மலரும் பக்குவம் வாய்ந்த) தாமரைப்போது மலர்வதுபோல நல்லோர் வார்த்தையால் புண்ணிய கர்ம பரிபாக முடையவரது சித்தம் உபசாந்தத்தை யடைகின்றது. நானிங்குப் புதுவதாக வொன்றுங் கூறவில்லையே! சுவாமிகள் கூறியவற்றுள் இரண்டொரு வார்த்தையே யன்றோ கூறினேன். இவ்வார்த்தைகளே விகடகவியை விவேகியாகச்செய்வேதுவாயினவென்று நினைக்கின்றேன்.

சிகி:—(பத்மாவதியை மிக அன்பாக நோக்கி) திருவினும் நல்ல செல்வமே! இங்கு விகடகவியு மிருக்கட்டும்; நாம் நிராசையைப்பற்றிப் பேசுவோம்.



பத்:—பாக்கிய வதி! அடியேனும் அருகே வந்திருக்கலாமோ?

சிகி:—சூடாலே! தடையென்ன? வரச்சொல்?

(பத்மாவதி ஒருபுறம் வந் தடக்கமாக உட்கார்ந்தாள்.)

சூடா:—விகடகவி! நாங்கள் பேசும்போது நீயொன்றும் பேசுவதுகூடாது. "அவள் சந்து விட்டாள் நான் வந்து விட்டேன்" என்பதுபோல இடையே புகுந்து பேசுவதாக விருந்தாலிப்போதே எழுந்துபோய்விடு; இடையிடையே வந்து சிரிப்புண்டாகுமாறு ஏதேதோ பேசிப்போகும் வழக்கத்தை யின்று முதற்கொண்டு விட்டொழி.

விக:—வேந்தர் வேந்தரே! மகாராணி கூறுவதைக் கேட்டீர்களா? நானினி யொருபோதும் அந்தப்புரத்தில் விகடஞ் செய்யமாட்டேன்.

சூடா:—இன்று முதற்கொண்டெங்கும் விகடஞ் செய்வதை விட்டொழிந்தால் நீ பிழைக்கும் வழி கண்டு பிழைக்கக் கூடும்.

விக:—நான் பிழைக்காமலா யிருக்கிறேன். உயிருடனிருக்குமென்னைப் 'பிழைக்கும் வழிகண்டு பிழைக்கக்கூடும்' என்று கூறுவது பேராச்சரியமாகவிருக்கின்றது.

பத்:—(அரசனை நோக்கி) விகடகவி கூறுவதெப்படி யிருக்கின்றது பாருங்கள்.

சிகி:—விகடகவி! உனக்குப் பழைய வாசனை சிறிதும் நீங்கவில்லை. சூடாலையின் வார்த்தைப்படி நடப்பதானால், இங்கிரு; இல்லாவிட்டால், எழுந்து வெளியே போய்விடு.

விக;—மகாராஜாவே! நானென்னசெய்வேன்; பழக்கவாசனையால் அவ்வாறு பேசும்படி சம்பவித்தது; இனி வாயைக்கெட்டியாக மூடிக்கொண் டிருக்கிறேன்.

சூடா:—விகடகவி! பேசாதிரு.

சிகி:—சூடாலே! நிராசையென்றாலென்ன? அஃதெப்படி வரும்! நிராசையினால் வரும்பயன்யாது? என்பதுபற்றி விசாரிப்போம்.

சூடா:—அப்படியே செய்வோம்.

சிகி:—சிவப்பிரகாச சுவாமிகள் "ஒருபற்றுமின்றியிருப்பவர் சுகக்கடலாக விளங்குவர்; பற்றுக்களைக் காயத்தால் விடுவதினும் மனத்தால் விடுவதுநன்று; மனத்திற்பற்றற்றிருப்போர் ஆசையென்னும் பேயையழிக்குந் திறத்தினராவர்; ஆசையென்னும் பேயொழிவதே பேரானந்தமாக விளங்குவதற் கேதுவாம்" என்று சென்ற பௌர்ணமியன்று திருவாய் மலர்ந்தருளியது கண்ணுக் கினிய கட்டழகி! உன் ஞாபகத்திலிருக்கின்றதா?

சூடா:—ஒருவாறு ஞாபகத்தி லிருக்கின்றது. அவர் கூறியவா றொழுகினால், நிராசை யுண்டாகுமென்பது என்னுடைய கருத்து.

சிகி:—சூடாலை! நிராசையென்பதுயாது? ஆசையில்லாதிருத்தலன்றோ? ஆசையில்லாதிருக்க முடியுமோ? நிராசையாயிருப்பதென்பது கூடாதகாரியமாமென்று தீர்மானிக்கின்றேன்.

சூடா:—காணப்படும் பொருள்களுள் யாதும் இன்பமு மாவதன்று; இன்பசாதனமு மாவதன்று. காணப்படும் பொருள்களுள் சிலவற்றால் இன்பமுண்டாவதாகத் தோன்றினும், முடிவில் அவ்வின்பம் துன்பந்தருவதாமென்று விளங்கினாலன்றோ, நிராசையுண்டாகும்? நிராசையென்பது இது வேண்டுமென் றழுத்தமான வெண்ணமில்லாமையேயாம். தன்னையறிந்தின்பவடிவமாக விளங்கிய சாதுக்கள் தாம் வாஸ்தவமான நிராசையையுடையவர்களாகவிருப்பர்.

"ஏதேது வந்தாலு மேதேது செய்தாலும்
ஏதேதி லின்புற் றிருந்தாலும் - ஏதேதும்
தானாகா வண்ணந் தனியே தெரிந்திருக்கும்
ஞானாகா ரந்தானே நாம்".

என்று பெரியார் கூறியவாறு எதுவந்தாலும் எதுசெய்தாலும் என்ன வின்புற்றாலும் அவற்றுள் ஒன்றும் தானாகாது தனித்து, அவற்றிற்குச் சாட்சியாக விளங்குமுத்தமரன்றோ நிராசையின்பயனான சுட்டற்ற சுகாதீதநிலையை யுறுவர்.

சிகி.—விகடகவி! சூடாலை கூறியவிஷயம் விளங்கியதா?



விக:—என்னவிளங்கியது? மகாராணியார் கூறிய சொற்றொடர்கள்தாம் விளங்கின; அச்சொற்றொடர்களின் பொருள் பத்மாவதிக்கும் தங்களுக்கும் விளங்கியிருக்கலாம்.

சூடா:—"எனக்குமிக் கவிதனக்கும் எத்தனை தூரமாமால்" என்றவாறு இவ்விசாரத்திற்கும் விகடகவிக்கும் இப்போது வெகு தூரமாம். நாம் இனி அதுபற்றித் தொடர்ந்து பேசுவோம்.

விக:—ராஜபூஷணி! 'இப்போது வெகுதூரமாம்' என்று தாங்கள் திருவாய்மலர்ந்தருளியதனால், வேறெப்போ தெனக்கது சித்தியாம்?

சூடா:—காமக் குரோதம் கடும்பற்றுள்ளம் மானம் உவகை மதமென்பன வொழிந்தவிடத்துச் சித்தியாம்.

சிகி:—வனப்பிற்கரசி! நிராசையின் சொரூபம், ஏது, பயனென்பனவற்றைச் சுருக்கமாகக் கூறவேண்டும். விரிவாகக் கூறினால், என்மனம் அவற்றைச் சிந்தித்தல் முடியாது?

சூடா:—மகிதலபதி! அவ்விஷயந் தங்களுக்குத் தெரிந்ததேயாம்; எத்தனையோமுறை சுவாமிகள் கூறக்கேட் டிருக்கின்றீர்கள்; ஆனாலும், ஞாபகப்படுத்துகிறேன்.

(1) உடம்பிலும் அதுசம்பந்தமான பொருளிலும் யானெனதென்னு மபிமானமின்றி யிருத்தல் நிராசையின் சொரூபமாம்.

(2) உடம்பும் பொருளுமுண்மையில் துக்கசாதன மென்றுணருதல் நிராசைக் கேதுவாம்.

(3) ஒருவாற்றானும் மனந்தடுமாறுதலின்றி ஆநந்தக் கடலாக விளங்குதல் நிராசையின் பயனாம்.

சிகி:—செவிக்கினிய செஞ்சொல்லுடையாய்! உன்வார்த்தை தேவாமிருதம்போன் றிருக்கின்றது. இதுபற்றிச் சிந்தனைசெய்து பிறகுன்னோடுசம்பாஷிக்கின்றேன். நேரமாயிற்று; போவோம்.

(எல்லோரும் போகிறார்கள்).

முதலங்கம் முற்றிற்று.

## உபநிஷதார்த்த தீபிகை.

## மகோபநிஷத்.

(22-வது பக்கத்தின் தொடர்ச்சி).

(30) அதற்குச் சுகர் இச்சம்சார ஆடம்பரமானது எவ்வாறெழும்பியது! எவ்வாறு நாசமாகும். இதை உள்ளபடி எனக்குச் சீக்கிரம் சொல்ல வேண்டு மென்றார்.

(31) அப்பொழுது ஜனகரால் சொல்லப் பட்டன வெல்லாம் முன்னரே மகா மேதாவியாகிய வியாசரால் சொல்லப் பட்டனவே.

(32-33) (சுகர் சொல்லுகின்றார்) இதுமுன்னர் எனக்குவிசேஷமாகத்தெரிந்ததே; இதையே என்பிதாவும் நான்கேட்டபொழுது சொன்னார். வாக்குப் பெற்றவர்களுக்கெல்லாம் சிரேஷ்டரானதங்களாலும் அவ்வர்த்தமே(பொருளே) சொல்லப்பட்டது. சாஸ்திரங்களிலும் அவ்வாக்கியார்த்தமே காணப்படுகின்றன.

(34) (இச்சம்சாரம்) மனோ விகல்பத்தா லுண்டானது; அவ்விகல்பம் நாசமடைந்தால் அதுவும் நாசமடையும். இவ்வாறு (ஞானாக்கினியால்) எரிக்கப்பட்ட சம்சாரமானது சாரமற்றதென்பது நிச்சயம்.

(35) இது (இவ்விகல்ப மானது) என்ன? அதை ஓ மஹானே! சத்தியமாகவும் சலனப்படா(சந்தேக விபரீதங்களுண்டாகா)வண்ணமும் சொல்ல வேண்டும். பிராந்தி யடைந்த மனதாலுண்டாகிய ஜகமானது தங்களால் சாந்தியடையும்.

(36) (ஜனகர் சொல்லுகின்றார்) ஓ சுகரே! நான் இப்பொழுது சொல்லப் போகின்றது புத்தியின் சாரத்துக்கு உள்ளுக்குள்ளானதாம், எதை யறிவதால் ஜீவன் முக்தி தசையை யடையலாமோ அத்தகைய ஞானத்தின் விரிவைக் கேள்.

(38) திருசிய மென்பதில்லை யென்னும் ஞானத்தால் மனதிற்குத் திருசியத்தின் ஒழிவு உண்டாகும்; அதனால் மேன்மையாகிய நிர்வாணசுக முண்டாகும்.



(39) வாசனைக ளெல்லாவற்றையும் மிச்சமின்றிச் சிரேஷ்டமாகப் பரித்தியாகஞ் செய்தலே (விடுதலே) மோக்ஷமென்று சத்துக்கள்சொல்வர். அதுவே நிர்மலத் தன்மையை யடையும்வழி.

(40) சுத்தவாசனையைப் பெற்றவரெவரோ அவர்மறுபடியும் ஜன்மமாகிய அநர்த்தத்தை யடையமாட்டார். அவர்கள் அறிய வேண்டுவனவற்றை யறிந்தவ ரென்றும், ஜீவன் முக்தரென்றும், மகா புத்திமான்க ளென்றும் சொல்லப் படுவார்.

(41) ஓ சுகப்பிரஹ்மமே! பதார்த்தங்களின் பாவனை திட்மாயிருத்தலே பந்த மென்று சொல்லப்படும்; (அவ்வசுத்த) வாசனை மெலிவடைதலே மோக்ஷ மெனப்படும்.

(42) தபசுமுதலிய காரணமொன்று மின்றியே எவனுக்குப் போகங்கள் ருசிக்கவில்லையோ அவன் ஜீவன் முக்தனென்று சொல்லப்படுவான்.

(43) எவன் எப்பொழுதும் காலக்கிரமத்திலுண்டாகும் சுக துக்கங்களில் சந்தோஷத்தையாவது துக்கத்தையாவது அடைவதில்லையோ அவன் ஜீவன் முக்தனென்று சொல்லப்படுவான்.

(44) எவனுடைய உள்ளமானது சந்தோஷம், கோபம், பயம், குரோதம், காமம், லோபம் என்பனவற்றின் பார்வையால் தொடப்படாம லிருக்கின்றதோ அவன் ஜீவன் முக்தனென்று சொல்லப்படுவான்.

மு. கே. நாராயணசாமி ஐயர் B.A., B.L.

தவத்தைச் செய்வா ரவத்தை யடையார்.
மறைவழிப் படுவார் பழிவழி விடுவார்.
நெஞ்சை யடக்குவார் புன்செயல் மடக்குவார்.
திருக்குற ளோதின் கருக்கொளல் மாறும்.
தெய்வநிந்தை தீமை யெலாந்தரும்.
நல்லன செய்வார் அல்லன காணார்.
வாழ்நாட் கழகு வாய்மை யுடைமை.
பிறன்மனை செல்வார் பெருமை யிழப்பார்.

## இந்திரபீடம் கரபாத்திர சுவாமிகளின்
## சம்பிரதாய சிந்தனை வாக்கியம்.

(43-வது பக்கத்தின் தொடர்ச்சி).

(15) வைராக்கியம் பத்தி ஞான மென்பதெப்படி யெனின், (1) பஞ்ச இந்திரிய விஷய நினைவெல்லாந் தானல்லவென்று விட்டு நீங்கின நினைவே வைராக்கியமாம்; (2) அந்தநினைவேதானாகிய வறிவிலே யாசை வைத்ததே பத்தியாம். (3) அந்த அறிவு தானே சச்சிதாநந்த சொரூப மென்று நினைத்துச் சிந்தனஞ் செய்தறிவதே ஞானமாம்.

(16) அஞ்ஞானத்திற் பிறந்த அறிவு நித்தியமல்ல வென்பதெப்படி யெனின், இந்தத்தேகம் முன்னே யிருந்ததா? இல்லை. இப்படி யிருக்கிறதென்றால், இந்தத் தேகம் வெளியிலே தோன்றும் போது உள்ளே ஞான மிருந்ததா? இல்லை. இந்த அறிவு முன்னே யிருந்ததா?இல்லை. என்னமா யிருக்கிறது? அஞ்ஞானமா யிருந்தது. ஆனா லிப்போது அஞ்ஞானத்திற் பிறந்த அறிவு நித்திய மல்லவே; ஆகையாலிது சொரூப வறிவன்று.

(17) விஷயம் வந்தடுத்தாலெப்படி போமெனின், (1) தன் னினைப்பென்று பார்த்தால் போம்; போகாவிடில், (2) தன்னிச்சையென்று பார்த்தால் போம்; அதற்கும் போகாவிடில் (3) தனதனுபூதியாற் போம்; அதற்கும் போகாவிடில் (4) புசித்தாற் போம்.

(18) 1. இன்னுங் கெட்டவனென்று தோன்றுவதும், 2. நல்லவனென்று தோன்றுவதும், 3. பாம்பு புலியென்று தோன்றுவதும், 4. இன்னு மனேகந்தோன்றுவது மிந்த நான்கு விதத்தாற் போம்.

(19) இன்னும் விவேகமெங்கே? அனுபூதியெங்கே? எனின், உள்ளே விவேகபோதம்; வெளியி லனுபூதி.

(20) அவித்தையை வித்தை கெடுக்குமானால், வித்தை எதனாற் கெடுமெனின், அந்தகாரத்தைக் கெடுத்த தீபப் பிரகாசம் ஆதித்தன் சன்னிதானத்திற் கெட்டாற்போலச் சுபாவஞான மகலாத சோதியிற் கெடும்.



(21) இன்னுந் தானாயிருக்கத் தன்னை மறந்ததெப்படியெனின், சம்புவைச் சமபாவனை பண்ணாது பிரித்துப் பாவிப்போர்க்கு அதன் மயமாதலேயாம்; அன்றி வேறு பிரிக்கக்கூடா தாகையால், சம்புவை மறந்தாய்.

(22) உள்ளது மில்லதும் போய் விலக்ஷணஞ் சிந்திப்பதெப்படி யெனின், அறிவை நாடினால் ஆகாரம் போம்; ஆகாரம் போகவே அறிவுங் கூடப் போம்; அப்போது உள்ளதுமில்லதும் போம்; போகவே, தானாயிருக்கிற விலக்ஷணஞ் சித்திக்கும்.

(23) இன்னும் நீ என்னமா யிருக்கிறாயெனின், தேகாகாரமாயிருந்த நான் அறிவைத் தவிர இல்லை யென்கையால், அறிவாயிருக்கிறேன். அந்த அறிவு எப்படி யிருக்கிறதெனின், அஃதவயவ ரகிதமான படியினால் அகண்டமான ஈஸ்வரசொரூபமாகவிருக்கிறேன்; அப்படியே யிருக்கின்றனையா வெனின், ஆகாரம் போகும்போது அறிவுங் கூடப்போகும்; அப்பாலெப்படி யிருக்கிறா யெனின், சுகமாயிருக்கிறேன்; சுகமா யிருக்கிறே னென்று சொல்லுகிற வகங்காரவறிவு இருக்கிறபடியினால் அது கூடாதெனின், என்னிடத்தி லுண்டான அறிவு நான்தானே.

(24) இன்னுஞ் சொரூபமாவது யாதெனின், எந்த நினைவு தன்னை மறந்ததோ அந்த நினைவை நினைக்கிறதுதானே சொரூபம்.

(25) இன்னுந் தன்மை, முன்னிலை, படர்க்கை எப்படி யெனின், தன்மை-தானாயுள்ள வனுபூதி; முன்னிலை-அறிவிலனுபூதி; படர்க்கை-ஆகாரத்திலனுபூதி.

(25) இன்னும் அஸ்தி யென்று அறிந்த அறிவு தானென்பதெப்படி யெனின், அஸ்தியாவது ஆகாரம்; அறிந்தது போதம்; அறிவென்பது பூரணம்; தானென்பது சொரூபம். ஆகாரமு மறிவுங் கூடிக்கெடுவது பூரணமுந் தானுங்கூடி விளங்கிப்போம்.

சத்தியநெறி செலின் சித்தியாதில்லை.
தெய்வ மில்லென்பார் தீவினைக் கஞ்சார்.
கொண்டாற் கிணங்கியாள் பெண்டாட்டி யாவாள்
இன்சொற்கூறல் எவர்க்கு நன்று .

# நீதிசதகம்.

(41-வது பக்கத்தின் தொடர்ச்சி).

(அ) (தனத்தையே பெரிதாக நினைத்து அதிலேயேகருத்துள்ளவர்களுடைய அபிப்பிராயத்தைக் கூறுகிறார்).

31. பிராம்ஹண்ய முதலிய ஜாதி ரஸாதலத்தை அடையட்டும்; தைரியசௌரியமுதலாகிய குணகணங்கள் ரஸாதலத்திற்குக்கீழான பாதாளத்தை அடையட்டும்; நல்லஸ்வபாவமானது பர்வதத்தின் உச்சியிலிருந்து கீழேவிழுந்து நாசத்தை யடையட்டும்; வம்சமானது அக்னியினால் தகிக்கப்படட்டும்; சத்ருவாயிருக்கிற சௌரியத்தின் தலையில் சீக்கிரமாக இடி விழட்டும். (உன்னுடைய அபிலாஷிதம் யாது? எங்களுக்குத்தனம் ஒன்றேபோதும். இந்த ஒருதனமன்றிச் சௌரியம் முதலிய ஸமஸ்தகுணங்களும் திருணலேசத்திற்கு ஸமானமே.

(அ) (குணம் இராத பக்ஷத்தில் கேவலம் தனத்திற்குப் பிரயோஜனமில்லை யெனின், தன மிருந்தால் ஸகல குணங்களும் உண்டாகுமென்று கூறுகிறார்).

32. எவனுக்குத் தனமிருக்கிறதோ அவன் தான் நல்ல குலத்திற் பிறந்தவன்; அவனே பண்டிதன்; அவனே சாஸ்திரக்ஞன்; அவனே குணக்ஞன்; அவனே பேசுகிறவன்; அவனே பார்க்கத் தக்கவன். ஸகல குணங்களும் தனத்தையே ஆச்ரயித்துக்கொண் டிருக்கின்றன.

(அ) (இரண்டு சுலோகங்களால் தனத்திற்கு நாசப்பிரகாரத்தைக் கூறுகிறார்).

33. அரசன் துர்மந்திரியினால் நாசமடைகிறான்; ஸந்யாஸி ஸங்கத்தினால் நாசமடைகிறான்; † லாலனத்தினால் நாசமடைகிறான்; பிராம்ஹணன் வேத சாஸ்திரங்களை அப்யாஸம் பண்ணாமையால் நாசமடைகிறான்; குலம் துஷ்டபுத்திரனால் நாசமடைகிறது; நல்ல ஸ்வபாவமானது துர்ஜனங்களுடைய சேர்க்கையால் நாசமடைகிறது; லச்சையானது (நாணமானது) மத்தியபானஞ்செய்வதால் நாசமடைகின்றது; கிருஷியானது (பயிரானது) பாராமையினால் நாசமடைகிறது; ஸ்நேகமானது (அந்நியதேச சஞ்சாரத்தினால் நாசமடைகிறது; மித்திரபாவமானது பிரீதியிராமையினால் நாசமடைகிறது; ஸம்பத்தானது நீதியிராமையினால் நாசமடைகிறது தனமானது கொடுப்பதாலும் பிரமாதத்தாலும் (தவறுதலாலும்) நாசமடைகிறது.

34. தனத்திற்குத் தானம் போகம் நாசம் என்னுமிம்மூன்று வழிகளுண்டு. எவன் கொடுக்காமலும் புஜிக்காமலும் இருக்கிறானோ அவனது தனத்திற்கு மூன்றாவது வழி ஏற்படும். அஃதாவது திருடர் முதலியவர்களால் நாசம் ஏற்படும்.

(அ) எப்பொழுதும் தானம் பண்ணுகிறவனுக்குத் தனவிரயத்தினாலுண்டான கிருசத்தன்மையும் (மெலிவும்) சோபகரமாமென்று கூறுகின்றார்).

35. சங்கணம் சாணை பிடித்த ரத்னமும், ஆயுதத்தால் காயத்தை யடைந்த யுத்தவீரனும், மதத்தால் இளைத்த யானையும், சரத்காலத்தில் சிறிதுமணற் குன்றோடு கூடிய நதியும், ஒரு கலைமாத்திரம் மிஞ்சியுள்ள சந்திரனும், மன்மத யுத்தத்தினால் சிரமமடைந்த யுவதியும், கிருசத்தன்மையால் சோபிக்கிறார்களோ அங்ஙனமே யாசகர்களுக்குக்கொடுத்துச் செலவழிந்த தனத்தையுடைய புருஷர்கள் கிருசத்தன்மையாலேயே சோபிக்கிறார்கள்.

(அ) (புருஷர்களுக்குத் தனம் இராத காலத்திலும் தனத்தையடைந்த காலத்திலுமுள்ள விசேஷத்தைக் கூறுகிறார்).

36. ஒரு புருஷன் தெய்வவசத்தினால், தரித்திரனானால், அக்காலத்தில் ஒருகைப்பிடியளவு நெல்லேனும் வேண்டுமென்று நினைக்கிறான். அவனேபிறகுதெய்வ வசத்தினால் ஸம்பூர்ணமான விபவத்தை (செல்வத்தை) யடைந்தானேயானால் பூமியைத் திருணமாக நினைக்கிறான். ஆகையினால், தன விஷயத்தில் குருத்தன்மையும் லகுத்தன்மையும் நியதமன்று (எப்பொழுதும் ஒருவிதமாக இருப்பதன்று). ஆகையினால், தனிகர்களுக்குத் தனவிஷயத்தினாலுண்டான வியாபாரமானது தான்யம் பூமி முதலிய அல்பமஹத்தான வஸ்துக்களைப் பிரகாசம்பண்ணுகிறது. தனமிராத காலத்தில் அல்பமான வஸ்துவையும் பெரியதாக நினைக்கிறான். தனமிருக்குங் காலத்தில் மஹத்தான வஸ்துவையும் அற்பமாக நினைக்கிறான்; தரித்திரர்களுக்கும் தனிகர்களுக்கும் இப்படிப்பட்ட அவஸ்தை பிரத்தியக்ஷஸித்தமாகவிருக்கிறது.

(அ) (ராஜாவை ஸம்போதனம் பண்ணிக்கொண்டு (விளித்து) அவனுக்குத் தனோபாயத்தை யுபதேசிக்கிறார்).

37. ஓ அரசனே! நீ கோ (பசு) போலிருக்கிற இந்தப்பூமியிலிருந்து தனமாகிய க்ஷீரத்தை (பாலை)க் கறக்க விரும்பினையேயாயின், அந்தக்காரணத்தால் இப்பொழுது கன்றுபோலிருக்கிற ஜனங்களைப் போஷணம்செய். அந்த ஜனமானது எப்பொழுதும் நன்றாகப்போஷிக்கப் பட்டால் இந்தப் பூமியானது கல்பகலதை (கொடி) போலப் பலவிதமான பலத்தை யுண்டுபண்ணுகிறது. (ஆகையால், பலவிதமான பலத்தையடைய வேண்டியதற்காக லோக ஸம்ரக்ஷணம் அவசியம் செய்யத்தக்கது என்று கருத்து).

வி-ஸா-ராமச்சந்திர சாஸ்திரியார்,
விஷ்ணுபுரம்.

† லாலனம் - பிரியம்.

## நீலகண்ட தீக்ஷிதரவர்கள் இயற்றியருளிய
## வைராக்கிய சதகம்.

(36 - பது பக்கத்தின் தொடர்ச்சி).

16— சமஸுகத்தில் ரஸத்தை யறிந்த பெரியோர்கள் † ஸூகரான்ன விஷயத்தில் தேவர்கள்போலக் காமிய ஜனங்களால் ஆவலோடு அனுபவிக்கப் படுகிற காமஸுகத்தில் வெறுப்பை யடைகிறார்கள்.

17— விக்ஷேபத்தையேயடைந்து மிகவும் விகாஸத்தை யடைகின்ற ஞானத்தை யுடையவர்கள் தமது சேஷ்டைகளைப் பிறருடைய சேட்டைகளைப் போலப் பார்க்கிறார்கள்.

18— அகாரணமாய்ப் பிரியத்தையும் அவ்வாறே அகாரணமாய்ச் சந்தோஷத்தையும் அடைகிற மூர்க்கர்களைத் தீரர்கள் விளையாடுகிறகுழந்தைகளைத் தந்தைகள் அனுசரிப்பது போல அனுஸரித்துக்கொண் டிருக்கிறார்கள்.

19— ஜலத்தால் போஷிக்கிறவ னிடத்திலும் புஷ்பம் பழமென்னு மிவற்றை அபஹரிப்பவ னிடத்திலும் விருக்ஷங்கள் ஸமமாயிருப்பது போலப் பெரியோர்கள் உபகாரியி னிடத்திலும் அபகாரியி னிடத்திலும் ஸமமா யிருக்கிறார்கள்.

20— யாவர்க்கும் கடம் கடத்தன்மை மென்னுமிவற்றில் நித்யாநித்ய விவேகமிருக்கின்றது. சாந்தியை எது உண்டாக்குகிறதோ அது விவேகம்; மற்றவை யெல்லாம் அவிவேகமே.

(21) யௌவனமுள்ள ஒருவன் காமஸுகம் தனக்குத்தெரியாதபோது காலக்கிரமமாக அதில் எவ்வாறு பிரவிர்த்திக்கிறானோ அவ்வாறு பிரும்ம ஸுகத்திலும் யாரோ ஒருவன் பாக்ய வசத்தால் பிரவிர்த்திக் கின்றான்.

(22) விரக்தியையடையும் ஒருவன் ஸ்வாதந்திரத்தில்புத்திராதுகுணங்களையும், வேறுவிவாஹஞ்செய்யும்போது பத்னியின் குணங்களையும், பாகம்பண்ணுகிற காலத்தில் ஸஹோதரருடைய குணங்களையும் பார்க்கலாம்.

(23) கடைசிச் சுவாஸம் விடுங்(மரண)காலத்திலும் "எங்கட்கு என்ன கதி" என்று எந்த ஜனங்கள் கேட்கிறார்களோ அவர்கள் விஷயத்திலும் பாபிகள் பாபங்களைச் செய்கிறார்கள்.

(24) தாய் தந்தையரோடு சண்டை யிட்டுக்கொண்டே புத்திரருக்குப் பித்ருபக்தியைக் கற்றுக் கொடுக்கிறார்கள்; அவ்வாறு பரஸ்திரீகமனம் செய்துகொண்டே பத்னியினிடத்துச் சாஸ்திரங்களைப் படிக்கிறார்கள்.

†பன்றியின் உணவு.



(25) அடைய முடியாததி லிருந்து ஒழிவையடைவதே சாந்தி; பாத்ரமில்லாததே தானம் வாங்காததற்குக்காரணம்; துர்ப்பலமாயிருப்பது க்ஷாந்தி; ஆகிய இவையே இந்தக்கலியில் நிவிர்த்திதர்மங்கள் (வைராக்யத்தை யுண்டாக்கக் கூடியதர்மங்கள்).

(26) நீதியை யறிந்தவர்களும், தெய்வத்தை யறிந்தவர்களும், வேதமறிந்தவர்களும், சாஸ்திரமறிந்தவர்களும் இருக்கிறார்கள்; பிரஹ்மஞானிகளும் அநேகமாகக் கிடைக்கலாம். தமது அஞ்ஞானத்தைத் தெரிந்து கொண்டவர்கள் கிடைப்பதரிது.

(27) தனதுமனம் கலியின் கல்மஷத்தை(தோஷத்தை)யடைந்திருக்கும்போது உலகம் எப்படி ருஜுத் தன்மையை யடைதல்கூடும்? கண்ணில்தோஷமிருக்கும்போது சந்திரனைப்பார்த்தால் அஃது எப்படி இரண்டாகத் தோற்றுது?

(28) விஷயங்களை யனுகூலப் படுத்துவதற்கு விஷயமுள்ள மனதின் விஷயத்தில் யத்னம் செய்யட்டும்; நேத்திரத்தில் போடவேண்டிய ஔஷதத்தைப் பார்க்கப்படும் வஸ்துவினிடத்திற் போட்டு எவன் ஸமர்த்தனாகவிருப்பான்?

(29) பத்னி பிள்ளைகளிடத்தாசையோடிருக்கிறாள்; பிள்ளைகளோ தகப்பனது தனத்தையடைவதில் வெகு பரபரப்புள்ளவர்களா யிருக்கிறார்கள்; தாயாரழுது கொண்டே யிருக்கின்றாள்; பரலோகம் போகிறவனுக்கு யார் பந்து?

(30) சாகிறவர்களைப்பார்க்கிறார்கள்; மற்றவர்களையுஞ் சாகிறவர்களாகவே யூஹிக்கிறார்கள்; செத்தவர்களைநினைக்கிறார்கள்; இப்படி யடிக்கடி சொல்லுகிறார்கள். ஆனால், நித்தியமானவர்கள் போலவே கார்யங்களை நடத்துகிறார்கள்.

*N.* இராமநாதசாஸ்திரி, பண்டிதர்,
அடையாறு லைபிரெரி, சென்னை.

பயனில கூறல் பழிப்பெலாம் பயக்கும்.
அன்புளார் காண்பர் அச்சுதனடியை.
சிந்தனை யற்றால் பந்தனை மாறும்.
அகப்பகை யார்க்கும் அறியாமை யாகும்.
மெய்ப்பயன் கொண்டார் துய்ப்பன கருதார்.
இல்லாட்கழகு நல்விருந் தோம்பல்.

# பூங்காவனம்.

(34-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

## இரண்டாம் அதிகாரம்.

மகாவலி கங்கையானது மாறுபாடுடன் மிதமிஞ்சி மீறி முரண்டு கொண்டு மூர்க்கத்துடனே மெல்லியலார்மனம்போல இருண்டு பிரவாகித்துச் செல்லுகின்றது. தன்னுடைய வங்கம் கவிழமூழ்கிய பூங்காவனம் இதன் பிரவாகத்துளகப்பட்டு அல்லோலகல்லோலப்படும் பொழுது கரையிலிருந்து இவற்றையெல்லாங் கண்ட துறைமுகக் காவற் கிழவன் கூச்சலிட்டு அவ்வழியே சென்ற சிலரை உதவியாக அழைத்து வேறொரு பெரிய வங்கத்திலேற்றிக்கொண்டு போய்ப் பிரேதம்போல உருண்டுவந்த அவளை வெகு பிரயாசையுடன் மீட்டுக் கரைக்குக்கொண்டு வந்து பலவித் உபாயங்களினால் உண்ட நீரை வெளியேகும்படி செய்து அறிவுவரப் பண்ணி ஒரு வாடகை வண்டியிலேற்றி அவளது வீட்டுக்குக்கொண்டு போய்த் தந்தையாராகிய அருளானந்த முதலியார் வசம் விடுத்து நிகழ்ந்த சம்பவத்தைக் கூறினான். அவர் பதைபதைத்து உடனே அவளை வண்டியினின்றும் இறக்கி உள்ளே கொண்டுபோய் ஒரு சயனத்தில் வளர்த்தித் தமது குடும்ப வயித்தியரை அழைத்து வந்து ஔஷதப்பிரயோகஞ் செய்வித்துச் சமீபத்திலிருந்து கண்ணை இமைகாப்பதுபோற் பாதுகாத்துக் கொண்டுவந்தார். இடையிடையே இவளுக்கு மயக்கம் வந்து கொண்டேயிருந்தது; பக்கத்தேயிருந்த முதலியார் அன்னாகாரம் இல்லாமல் அழுது புத்திரியுடன் ஆற்றில் மூழ்கியிறந்த அருட்பிரகாசத்தின் எண்ணமுண்டாக ஆ! பரோபகாரங்குடிகொண்ட சற்குண வாலிபனே! என் குடும்ப மரியாதையைக் காத்தருணவானே! நீ ஜனன தேசம்விட்டு இந்நாட்டிற் கல்விகற்க வந்தது கொடிய ஆற்றில் மூழ்கி இறத்தற்கோ என்று பலவாறுபுலம்பிக் கண்ணீர் சிந்திக்கொண்டிருக்கும் பொழுது தற்செயலாகக் கண்விழித்த பூங்காவனம் துக்க நிலைமையை யுணர்ந்து தன் நேசனைப் பற்றி வினவினாள். அப்பொழுது அவர் அவன் ஆற்றில் மூழ்கி இறந்து போனான் என்றனர். இதைக்கேட்டவுடன் அன்னம் போன்ற நடையையுடையவளான பூங்காவனம் கூரிய அஸ்திரமானது தேகத்திற்பாயப் பெற்ற மஞ்ஞையைப்போல மயக்குற்று அவருக்கு முன் வீழ்ந்து சகித்தற்கரிய கொடிய துன்பமாகிய கடலுள் அமிழ்ந்தி முன்போல அறிவு மயங்கினாள். முதலியார் மீட்டும் உபசரித்து அறிவுவரப்பண்ண அவள் அழுதுபுலம்பி என்னுருயிரே! எனது கண்ணினுண்மணியே! தேவரீர் அடியாளை நட்டாற்றிற் கைவிட்டு யாண்டுச் சென்றீரோ! அந்தோ என் பாழும் விதி இப்படி முடிந்துவிட்டதா! கருணைவாரிதியே! அந்நாளில் தேவரீர் அடியாளைக் கொடுந்துயரினின்று மீட்டது இதற்குத்தானோ பாவியாகிய நானும் உம்மைத் தொடர்ந்து வருகிறேன்! வருகின்றேன்!! என்று பலவாறு புலம்பிக்கொண்டிருந்தாள். இது நிற்க,

ஆற்றில் மூழ்கிய அருட்பிரகாசம் நீர்ப்பிரவாகத்தில் எடுபட்டு நெடுந்தூரம் செல்லும்பொழுது அவ்வழியே சென்ற இருவழிப்போக்கர் வெண்மையான ஒருவஸ்து மிதந்துவரக்கண்டு விரைவாக நீந்திச் சென்று பார்த்தபோது உருண்டுவந்த வஸ்து ஒரு மனிதனாக இருக்கக் கண்டு தூக்கிக்கொண்டுவந்து அவர்களிலொருவன் அவனதுவயிற்றைத் தனதுதலையில் வைத்து அழுத்திச் சுழற்றுதலும் உட்புகுந்த நீரெல்லாம் வெளியேவந்து விட்டன. நமது அருட்பிரகாசம்ஆற்றில்திடதைரியத்தோடுநீந்திவந்தமையாலும் நெடுநேரம் ஆற்றில் மூழ்கியிராமையினாலும் சீக்கிரம் அறிவுவந்து கண்விழித்து நடந்து செல்லும்படியான தைரியமுடையவனாய்த் தன்னைமீட்டுவிட்டவர்களுக்கு வந்தனஞ்செய்து அவர்களைவிட்டு நீங்கித்தனது பிராணதாரமாகிய பூங்காவனம் ஆற்றில் மூழ்கி இறந்துவிட்டனளென்று துணிந்து அழுதுவருந்தி வழி நடந்து வரும்பொழுது கண்களினின்றும் சோகபாஷ்பஞ் சொரிய அழுது அன்னநடையாளே! வஞ்சிக்கொடியே! தெவிட்டாத செந்தேனே! அழகார் பசுங்குயிலே! பெண் அரசே! என் கண்ணே! என் கருத்தே! உன் கதியுமிப்படியாயிற்றே! பாவியாகிய என்னை மறந்தாயோ! அன்றி எந்தப் புண்ணிய சீலர்களால் மீட்கப்பட்டாயோ! அன்றி ஆற்றில் மூழ்கி மடிந்தாயோ! அந்தோ! உன் மதிமுகத்தைக் காணேன்! என் மனம் ஊசலாடக் கொடிய நதியில் என்னை ஒன்றியாக விட்டுச்சென்றாயே! ஐயையோ! நான் இந்தப்பழியை எங்கே போய்த் தொலைக்கப்போகின்றேன்! நானும் என்னை மனிதனென்றே நினைத்திருக்கின்றேன். என் பிராணவல்லபியே! நீ யன்றோ உத்தமி! நீயன்றோ கற்பரசி! ஆஹா! நான் என்னவோ வெல்லாம் எண்ணியிருந்தேனே! உன்னைக் கைப்பிடித்து விவாகஞ்செய்வேனென்று ஆசை கொண்டு எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி உழன்றேனே! உன் சாதுரிய வார்த்தையில் மயங்கி மாய்ந்தேனே! உன்னைப்போலும் உத்தமப் பெண்கள் உலகத்திலுண்டோ, காந்தாமணியே நான் யாது செய்யப்போகின்றேன்? நீ ஆற்றில் மூழ்கி இறக்கும் பொழுது பாவியாகிய என்னையும் நினைத்தனையோ! என்று பலவாறு புலம்பிக்கொண்டு வாயுவேகமும்மனோவேகமும் பின்னிட ஓட்டமும் நடையுமாக ஓடிப்போய் இச்சம்பவத்தைப் பூங்காவனத்தின் தந்தையாருக்குக் கூறுவோமென்று அவள் வீட்டுவாயிலையடைந்து உள்ளே போதலும் வேலைக்காரனாகிய கோவிந்தன் தற்செயலாகக்கண்டு ஆற்றில் மூழ்கி இறந்த அருட்பிரகாசத்தின் ஆவி இங்கே வந்துவிட்டதுபோலுமென்று அஞ்சி ஓலமிட்டுக்கொண்டு எசமானரும் அவர் புத்திரியும் இருக்கும் அறைக்குள் ஓடிப்போய் ஐயா! பிசாசு! பிசாசு!! என்று கூறிக்கொண்டு அவரது காலடியில் வீழ்ந்து மூர்ச்சையானான். பலவித ஆலோசனையிலுமிருந்தமுதலியார் திடுக்கிட்டு அவனது முகத்திற்றண்ணீரடித்து அறிவுவரப்பண்ணிவிட்டு நிமிர்தலும் தமக்குப்

பின் அருட்பிரகாசம் நிற்கக்கண்டு தம்பி ஆற்றில் மூழ்கிய நீ எப்படி மீண்டுவந்தாய் என்று கூறி அவனைக்கட்டித்தழுவி ஆசனத்திலிருத்தினார். துக்கத்துடனே சயனித்திருந்த பூங்காவனம் ஆகர்ஷணசக்திகொண்டெழுந்து அவனது காலடியில் வீழ்ந்து கதறினாள். அன்புடனே சிநேகமாகி ஆபத்திற் பிரிந்தவர்கள் கூடிடிற் பேசல்வேண்டுமோ? பூங்காவனம் தனது ஆன்மநேசன் தப்பியதற்காகவும் அருட்பிரகாசம் பூங்காவனம் தப்பியதற்காகவும் ஒருவர்க்கொருவர் ஆனந்தசாகத்தில் மூழ்கினார்கள். சிறிது நேரஞ்சென்றபின் அருட்பிரகாசம் அருளானந்த முதலியாரிடமுங்குமாரியிடமும் பிரியாவிடைபெற்றுக்கொண்டு கலாசாலையை யடைந்து உள்ளே போவதற்கு உண்டாக்கியிருந்தஇரகசியவாயிலாகச் செல்லும்பொழுது முன்னேன் கண்டு அவனை இவ்வளவுநேரமும் எங்கேசென்றாய் என்று வினவுவதற்கு உண்மையை மறைத்து அண்ணா! நான் ஒரு நாடகத்திற்குச்சென்று இதுகாறும் தங்கிவிட்டேன். இதுவிஷயம் கலாசாலையார் அறியாமல் இரகசியமாக இருக்கட்டுமெனக் கூறித் தனது இடத்திற் சென்று சயனித்து விட்டான்.

(வரும்).

சிவராமலிங்கம் பிள்ளை,

யாழ்ப்பாணம்.

# விசாரசூடாமணி.

(15-வது பக்கத்தின் தொடர்ச்சி)

3. மேற்காட்டியவழியை ஒழுங்கோடும் ஸ்திரத்தன்மையோடும் நாம் அநுசரித்து வருவோமாயின், நாட்பட்டவிரோதமாயுள்ள கொள்கைகளைக் கையாளுவது நமக்கு மிகவும் அநுகூலமாயிருக்கும். நமக்குச் சம்பந்த மில்லாதகருத்துக்களை இம்மார்க்கத்தின் உபயோகத்தால் விசாரித்தறிவதே யல்லாமல் நம் சொந்த அபிப்பிராயங்களையும் எதிரிகளின் அபிப்பிராயங்களையும் அளந்தறிந்து சரியான தீர்ப்புகளைப் பெறுவதற்குச் சக்தியுடையவர்களாவோம்; நாம் கொண்ட எண்ணங்கள் முற்றுஞ் சரியானவையல்ல வென்றும், எதிரிகளின் அபிப்பிராயங்கள் முற்றும் தப்பிதமானவையல்லவென்றும் ஐயப்பாடுடையவர்களாவோம்; ஒருபக்கம் ஆலோசனை யென்பது சிறிதுமில்லாத பெருந்தொகையாயுள்ள புல்லறிவாளரைப் போல ஏதோ ஒருகாலத்தில் இவ்வண்டப் பரப்பின் ஏதோ ஒருபாகத்திற் பிறந்துள்ள காரணத்தினாலேயேஒருவிதச்சமயக்கோட்பாட்டையுடையவர்களாகோம்; மற்றொரு



...லுஞ் சாராமல் நுட்பமாய்ப் பிழைபார்த்துச் சமயக்...ண்டிக்கும் பலரும் விரும்பபடியான எக்கொள்கைகளையும் (!) நாட்... முற்றிலுந் திரஸ்கரிக்கும் பிழையான மார்க்கத்தினின்றும் ...கின்றன... ...சிக்கப் படுவோம்.

...ளும் ...கொள்கைகளுக் குள்ள விரோதங்கள் பலவற்றுள்ளும் மிகப்பழைமை...னதும் மிக விரிவானதும் மிகக் கம்பீரமானதும் மிகப்பிரதானமானதும் எதுவெனின், மதம் என்பதற்கும் கலைஞானம் அல்லது விஞ்ஞானம் (Science) என்பதற்கு முள்ள விரோதமேயாம். நம்மைச்சுற்றிலுமுள்ள வஸ்துக்களில் பொதிந்துகிடக்கும் ஒரு தன்மையாயுள்ள நியமங்களை மனிதன் கண்டுபிடித்து, அதனால் அதற்குமுன் யாண்டும்பரவிவந்தமூடபக்திக்கொள்கைகள் தவிர்ந்து அதனால் அவற்றிற்கு ஒருவித எல்லை ஏற்பட்டது முதற்கொண்டு இவ்விரோதம் ஆரம்பித்தது. மனித அறிவின் எல்லைமுற்றிலும் ...யாண்டும் இவ்விரோதந் தலைகாட்டி நிற்கின்றது. சர்வசாதாரணமாகத்தற்...செயலாக நிகழுங் காரியங்களினுண்மையையும், தேசத்தாரின் சரித்திரங்களில் நிகழும் எளிதாயறியக் கூடாத மிகக்கடின விஷயங்களின் ஸ்வார்த்தத்தைக்கிரகிக்க முயலும் மானிடமுயற்சி எத்தகையதையும் இவ்விரோதந் தாக்குகின்றது. பல வேறுவகைப்பட்ட மனப்பாங்கை யுடையோர் தாம் பலவிதமாகச் சிந்திக்கும் பழக்க வழக்கங்களில் இவ்விரோதம் ஆழ்ந்து வேரூன்றி நிற்கின்றது. உலகத்தைப் பற்றியும் உயிரைப் பற்றியும் இப்பலவகைப்பட்ட சிந்தனாவழக்கங்களை உண்டுபண்ணும் முரணுள்ள அபிப்பிராயங்கள் நன்மைக்காவது அல்லது தீமைக்காவது நம் உணர்ச்சியின் குணத்தையும் அநுதின நடத்தையையும் ஆட்சிசெய்கின்றன.

மதத்தின் விருதுக்கொடியின் கீழும் கலைஞானத்தின் விருதுக்கொடியின் கீழும் யுகயுகமாகச் செய்யப்பட்டுவந்த இவ்வபிப்பிராயப் போரானது இருதிறத்தாருள்ளும் ஒருவரை யொருவர் செம்மையாய்ப் பட்சபாதமின்றி மதிப்பிட்டு அறிவதற்குப் பிரதிகூலமான பகைமையை யுண்டுபண்ணிவிட்டது. சுபக்குறியாகத் தற்காலத்திலோ ஜனங்கள் நாளுக்குநாள் அபிவிர்த்தி யாகிவரும் பொதுநோக்கை யுடையோராயிருக்கின்றனர். நாம்கூடுமானவரையில் இப்பொதுநோக்கை யனுசரிப்பது உசிதமாம். நாம்எவ்வளவுக்கெவ்வளவு வெற்றியைக்குறைவாகவும் உண்மையை யதிகமாகவும் விரும்புகிறோமோ அவ்வளவுக் கவ்வளவு நம்மெதிரிகள் தாங்கள் நினைப்பது போல அவர்களை நினைக்கச் செய்வதெது வென்பதைத் தெரிந்துகொள்ள ஆவலுடையவர்களாவோம். அவர்கள் தாங்கள்கொண்ட கொள்கையைச் சாதிப்பதிற் காட்டும் பிடிவாதம் நம்மாலறியப்படாத ஏதோ ஓர்உண்மையை அவர்களறிந்ததன் பயனாகத்தா னிருக்கவேண்டுமென்று நாம் சம்சயிக்க வாரம்பிப்போம்; நம்மால் கண்டுபிடிக்கப்பட்ட உண்மையின் அம்சத்தோடு அவர்களால் கண்டு பிடிக்கப்பட்ட உண்மைப்பாகத்தையுஞ் சேர்த்து ஒருமுதலாக்குங் குறிப்புடையோ ராவோம்; மானிட மேற்கோள்களை நியாயவாயி

லாக மதிப்பிட்டறிந்து தகாத தாழ்மை அடாதஅடக்க முமீ எப்படி வித எல்லைகளினின்றும்நீங்கிநிற்போம்; சிலருடையதீர்ப்பிலிருந்தி நல்லவையென்றும் சிலருடைய தீர்ப்புக்களை முற்றிலுங் கொண் மெண்ணு திருப்போம்; ஆனால், இவற்றிற்கு மாறாய் எக்கொள்கை யிலுஞ் சரியானதல்லவென்றும் முற்றிலுந் தப்பானதல்லவென்றும் வாயிலாய்க் காக்கக்கூடிய இப்பொதுநோக்கோடு கூடிய கொள்கை சார்ந்தொழுகுந் தன்மையராவோம்.

நாம் கூடுமான வரையிற் பாரபட்சமில்லாது இந்நடுநிலைமையை ஓம்பி மேற்குறிப்பிட்ட விவாதத்தின் இருகட்சிகளையு மாராய்வோமாக. படிப்பால் சேர்ந்தபட்சபாதம் நம்மையணுக வொட்டாமல் காத்தும், பேத சமயிகட்கடுத்த ஒருபக்கஞ்சாரும் உணர்ச்சியின் பயனாக உண்மையின்னதெனத்தெரிந்தும், அதை அங்கீகரிக்கவொட்டாது தடுக்கும் இரகசியதுர்ப்போதனைகளைக் காதில்விழாதபடி நீக்கியும், ஒவ்வொருகட்சிக்கும் அநுகூலமாய் இயற்கையிலேயே யமைந்து கிடக்கும் அநுமான சங்கைகளை யாலோசிப் பாம்.

(வரும்).

சந்தோஷம்.

## சற்போதம்.

(1) சூரியன், சந்திரன், பூமி யென்னு மிவற்றுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வேலை செய்கின்றது; அதனால் இளைப்படைகின்றதில்லை; அதுபோலச் சுத்த மனிதனும் வேலை செய்வதனால் இளைப்படைகிறதில்லை. கொடிய மனிதனோ தீயனவே செய்கின்றான்; அதனால் இளைப்பை யடைகின்றான்.

(2) இப்பிருதிவி அண்ட முதல் எல்லா அண்டங்களும், சூரியன் சந்திரன் நட்சத்திர முதலியனவும், நம்முள் ஒவ்வொருவரும் சுத்தராகிய ஈசுவரனின் பரிணாமங்களேயாம்; ஆனால், உலகத்தில் செய்யப்பட்டுத் தோன்றும் பொருள்கள் மனித வர்க்கத்தால் ஆகியனவாம்.

(3) உண்மையாக உழைக்கும் உழைப்பு உழைப்போனைப் பலவீனப் படுத்தாது; அவனுக்கு மேன்மேலும் உற்சாகத்தைக் கொடுத்து அவனிடத்துள்ள வஞ்சனை முதலியவற்றை யொழிக்கிறது. ஆகையால் சத்திய உழைப்பாளன் தன்னுடைய கடின உழைப்பால் தளர்ச்சி யடைவதில்லை.



(4) நாய்கள் தம்மீது எறியப்பட்டகற்களை நோக்கிக் குரைக்கின்றன; எறிந்தவனை விட்டுவிடுகின்றன; அறிவில்லாத மனிதர்களும் தங்களுக்குத் தீங்குசெய்ய ஏவினவர்களை விட்டு விட்டுத் தீங்கு செய்தவர்களை வெறுக்கின்றார்கள். அதுபோல நாமும் நமது தௌர்ப் பாக்கியத்திற்குக் காரணமாகிய நம்மை வெறுத்துக் கொள்ளாது நமது தௌர்ப்பாக்கியத்தை வெறுக்கின்றோம்.

(5) ஒருவனுக்கு எவ்வளவு அதிகமாக அறிவில்லாத நண்பர்கள் உண்டோ அவ்வளவுக்கு அவனும் அறிவில்லாதவனாவான். ஒருவனுக்கு எவ்வளவு அதிகம் அறிவுடையார் நட்புண்டோ அவ்வளவுக்கு அவனும் அறிவுடையவனாவான். ஆதலால், நாம் அறிவிலாரை நீக்கி அறிவுடையாரை நண்பராகக் கொள்ள வேண்டும்.

(6) சூரியன் இருட்டின் மத்தியில் இருக்கிறபடியால் பிரகாசிக்கின்றான்; வீரன் சாதாரண ஜனங்களின் மத்தியில் இருக்கின்றமையால் பிரகாசிக்கின்றான்; கவிஞன் வியாசம் எழுதுகிறவர் மத்தியில் இருக்கின்றமையால் பிரகாசிக்கின்றான். இது போன்று தன்னிடத்தில் வைராக்கிய முடையான் இந்திரியங்களுக்கு அடிமைப்பட்டுள்ளோர் மத்தியில் இருக்கின்றமையால் விளங்குகின்றான்.

(7) எது காலத்தால் கட்டுப்படவில்லையோ அது நித்தியமாம்.

(8) நாளுக்கு முடிவு மாலை; வித்தைக்கு முடிவு புத்தி; வாழ்க்கைக்கு முடிவு விருத்தாப்பியம்; பக்திக்கு முடிவு நல்லொழுக்கம்; பரஞானத்திற்கு முடிவு சம்பந்தம்.

(9) யான் எனக்கே நியாயாதிபதியாக இருந்து எனக்கே சிட்சைதரத் தலைப்பட்டால், அப்பொழுதே யான் பிரஹ்ம பதவி யடையத் தக்கவனாவன்.

(10) இந்திரியங்களோடு கூடிய சரீரம் ஒரு குப்பைமேடு; ஆதலால், சரீரம் துர்க்குணங்களைச் சீக்கிரம் ஏற்றுக் கொள்ளுகின்றது.

வா. ஆறுமுக செட்டியார்,
முத்தியாலுபேட்டை, சென்னை.

# Tit Bits.

1. Arise, Awake and stop not till the goal is reached.
2. Renounce gold and lust and religion will dawn of itself.
3. The Kingdom of Heaven is within you.
4. In the quiet of the mind, the higher thought asserts itself.
5. It is better and nobler if you can make yourself a eunuch for the Kingdom of God.
6. Who desires Svarga, let him sacrifice.
7. Who desires freedom, let him meditate on the Brahman.
8. Fools live to eat, whereas the wise eat to live.
9. Heaven helps those who help themselves.
10. Think not of the morrow, let the morrow think of itself.
11. Do good and be good.
12. He works best who works without any motive power.
13. He who knows the Supreme Being attains Supreme Bliss.
14. Polish a diamond and the brightness cometh of itself; in a similar way make pure thy mind and God will shine there of his own accord.
15. Attachment to worldly things is productive of evil. The silk worm is finally destroyed by the Cocoon that itself weaves.
16. A wise man on earth is a man fallen among wild beasts.
17. Body is the boat by which we must cross the river of life. Forgiveness is the oar by which it is to be propelled. Truth is the ballast that is to steady it. The practice of righteousness is the rope for dragging it along difficult waters, and the wind to urge its sail onwards is chastity.
18. Man is a compound of brutality, humanity and divinity (Tamas, Rajas and Satva).

# வல்லாள மகாராஜன் சரித்திரம்.

(39-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

அமைச்சர் முதலாயினோர் மன்னன்மொழிந்தபடியே "எவ்வெக்காலத்தெதுவெது கேட்பினும் அவர்க்கு அவ்வக்காலத்து அதுவது இல்லையென்னாது கொடுக்கப்படும்" மெனப்பறைசாற்றித் துவசமும் நாட்டினர். கிடைப்பதற் கரிதான பொருள்களும் எளிதிற் கிடைக்கும் பொருள்களும் பல சேகரிக்கவேண்டி எவ்வெத்தேயத்தில் எவ்வெப்பொருள் கிடைக்குமோ அவ்வத்தேயத்தில் அவ்வப்பொருளைத் தக்கவர் மூலமாய் வரவழைத்து வைத்தனர். இவ்வல்லாள மஹாராஜன் தன் எண்ணத்தை முற்றுவிப்பான் பொருட்டுச் செய்த முயற்சி நம் வாயாற் சொல்லவு மியலுமோ! அவ்வமைச்சர் முதலாயினோர் அரசனுக்குற்ற இன்பதுன்பங்கள் தமக்குற்றனவாகக்கொள்ளும் மனத்தினராய தொழிலாளரை நியமித்துத் தருமந் தவறாதியற்றக் கட்டளையிட்டனர். மேலும் தொழிலாளரும் அரசன் பால் வைத்த அன்பின் மிகுதியால் தம்மரசனதாக்கம் அளவற்றுக் குறைகின்றதே யென எண்ணிக்கேட்ட பேருக்கு அவர் விரும்பியபடி கொடா தொழிவரோவென ஐயமுற்றுச்சிற்சில சமயங்களில் அரசனே தருமசாலைகளில் சென்றிருந்து தருமத்தை நடத்தி வந்தான்.

இவ்வாறுமன்னனியற்றுந்தான விசேஷத்தைத்தூரதேயத்திலுள்ளாருங் கேள்வியுற்றனர். ஆதலின் அநேகர் வல்லாளவள்ளலையடைந்து வேண்டியவை பெற்றுப் போற்றிப் புகழ்ந்து போகத்தலைப்பட்டனர். அந்தணர்கள் தம்மக்களுக்குரிய பருவத்தில் உபநயன முதலியன செய்விக்கப் பொருளிலாமையைத் தெரிவித்துத் துக்கித்துத் தமக்கு வேண்டிய பொன்பெற்று மன்னனை யாசிகூறிப்போவர். வேற்றரசரால் வெல்லப்பட்டு அவரால் விடப்பட்ட சிறுகிராமங்களைக்கொண்டு அதன் ஆதாயத்தால்,வெற்றியடைந்த அரசர்க்குக் கப்பஞ்செலுத்தி மிகுந்த வாதாயத்தில் உயிர் பிழைக்க முடியாத சிற்றரசர் பலர் வந்து முறையிட்டுக்கொள்வர். வல்லாள அரசன் அது கேட்டு மனமிரங்கி அவர்களுக்கு வேண்டுமான பொருளுதவி செய்வன். கால பேதத்தால் நஷ்டமடைந்த வைசியரும் நெருங்கித்தமக்கு நேர்ந்த இன்னலைக் கூறிப்பொருளுதவி பெற்றுப்போவர். மழையின் மிகுதியாலும் அல்லது மழையின்மையாலும் அல்லது அகால மழையாலும், மிருகங்களாலும், கள்வராலும், நல்விளைவு இழந்த குடிகள் பலர் வந்து தங்கட்கு நேரிட்ட குறைகளை யுரைத்துத் தானியம் பெற்று மனங்களித்துக் கைகூப்பி வணங்கிப் போவர். வல்லாள மகா

ராஜன் உலகம் நன்மையடையும் பொருட்டு மறைவிதிப்படி வேள்விகள் புரிய அந்தணரை யழைத்து அதற்கான வுபகாரணங்கள் யாவு மவர்கட்குதவி அவ்வேள்விகளை நிறைவேற்றி வைப்பன்; புராதன ஆலயங்களைச் சீர்திருத்தி அவற்றிற்குத் தக்கோரைக் காரியஸ்தராக நியமித்து நித்தியநைமித்திய பூஜைகள் குறைவுறாது நடக்குமாறு ஆங்காங்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்விப்பன்; கர்மவியாதி, தாய் தந்தையர் மூலமாய்வந்த வியாதி, தானாகத்தேடிக்கொண்ட வியாதிமுதலியவற்றால் நலிவுறுவோர்களின் சிகிச்சைக்காக ஔஷதச்சாலைகள் பல நியமித்து, வருணாச்சிரம தரும விரோதமின்றிச் சீலந்தவறாதிருக்குமாறு நடத்திவைப்பன்; பிணிகொண்டுள்ளனவும் வயதால் முதிர்ந்தனவுமான கால்நடைகளுக்குத் தக்கவாறு உபசாரம்புரியவேண்டிச் சாலைகளுங்கட்டுவிப்பன்; ஆதரவற்றகுருடர், செவிடர், முடவர், ஊமையர், வயோதிகர், பாலர் முதலாயினோர்க்கும்பசியாறவன்னங் கொடுத்துபசரிக்குமிடங்கள் கட்டுவிப்பன்; அயன் முகத்துதித்த அந்தணச் சிறுவர் அருமறை யோதித் தெளியக் கல்விச்சாலை யேற்படுத்தி அதில் தக்கசாஸ்திரிகளை நியமித்து வைப்பன்; க்ஷத்திரிய குலத்துதித்த பாலர் வில்வித்தை கற்றுப் பயிலவிசாலமான சாலைகள கட்டி துரோணரனைய பண்டிதரை யேற்படுத்தி வேண்டிய ஆயுதங்களுமுதவுவன்; வைசியச் சிறுவர்கள் தக்கவாறுதங்கள் தொழிலை நடத்துவதற்கு வேண்டிய அறநெறியும் கணிதப் பயிற்சியும் அடைவதற்குரிய கணிதசாலைகள் நியமிப்பன்; சூத்திரர் பயிரிடும் தொழிலில் சிறக்க உழவுத் தொழிலும் பயிர்த் தொழிலும் தக்கவாறு பயிலும் சாலைகளும் அமைப்பன்; வழிப்போக்கர்கள் தங்குவதற்கு ஆங்காங்குச் சிறு கட்டடங்களும் சோலைகளும் அமைத்துத் தண்ணீர்ப்பந்தலும் சிற்றுண்டிச் சாலைகளு மமைத்துவைப்பன்; கடுங்கானகங்களில் நீரிலாது நாவுலர்ந்து அவதிப்படும் மிருகங்களுக்காகக் குளங்கள் பலவெட்டி வைத்தனன்; குடிகளுக்கு வரி நீதிமுறை தவறாது விதிக்கும்படி உத்தரவளித்தனன். இவ்வாறவன் சற்கருமங்கள் பல புரிந்து எவர்க்கும் ஒரு குறைவு நேரிடாதபடி ராஜரீகம் நடத்தி வந்ததால் இவனது நீதியும், நெறியும், சீலமும், சீரும் தன்தேயத்தோடு நில்லாது பிற தேயத்திலும் நாளுக்கு நாள் பரவலாயின. தன்னையடைந்வர் அகமகிழுமாறு இல்லையெனாது வேண்டியதுகொடுத்துப் பெரும்புகழ் பெற்ற வள்ளலின் உதாரகுணம் பாரெல்லாம் விளம்பரமாயது. இவ்வாறாகப் பலவாண்டுகள் கழிந்தன.

கோகிலாம்பாள் அம்மாள்,
புரசை, சென்னை,

## கிண்டர் கார்ட்டன் என்னும் பாலபோதன முறை.

(18-வது பக்கத்தின் தொடர்ச்சி).

பொதுவாகப் பிள்ளைகள் கற்கவேண்டிய பாடங்கள் யாவை? என்பதுபற்றி யோசிக்கு முன்னர் அப்பாடங்களைக் கற்பதனாலுண்டாகு மறிவிற் குறைவிடமாகிய மூளை சிறுபிள்ளைகளுக் கெவ்விதமா யிருக்கிறதென்பதுபற்றி யறிவது ஆவசியகமாம்.

### பிள்ளைகளின் மூளை.

மூளை யென்பது ஒவ்வொரு மனிதனுடைய மண்டையிலுள்ள ஒரு பாகமாம். இது மண்டையோட்டின்கீழ் இருக்கின்றது; இதன் மேற்பாகம் மிருதுவாயும் சாம்பல் நிறமாயும் மடிப்பு மடிப்பாயு மிருக்கும்; இதன் உட்பாகம் போலா யிராமல் பற்பல நரம்புகள் மடிப்பு மடிப்பாய் மடிந்திருக்க உருண்டையா யிருக்கும். முற்காலத்தில் சிலர் சிறுபிள்ளையின் மூளை காலியாயிருக்கின்றதென்றும், அது நாளாவட்டத்தில் அந்தப்பிள்ளை லோகாநுபவம் பெறப்பெற நிரப்பப்படுகிறதென்றும், அபிப்பிராயப்பட் டிருந்தனர். இது தவறு. குழந்தைகள் பிறக்கும்பொழுதே, அவர்களின் மூளை பல நரம்புக் கூட்டங்களால் நிரம்பப்பட்டிருக்கின்றது. மேலும், ஜனன கிரமாநுசாரமாகப் பெற்றோர், அவர்கள் முன்னோர்களுடைய மனோவிசாலத்தை யடுத்துச் சிறு குழந்தையின் மூளையும் ஜனனகாலத்திலேயே சில விசேஷங்களைப் பெற்றிருக்கிறது; நரியின் குட்டி நரியின் யுக்தி புத்தியையும், புலியின் குட்டி தன்னினத்தின் யுக்தி புத்தியையும், இவற்றிற்குள்ளேயே வெவ்வேறு ஜாதிகள் தத்தமக்குத் தக்கவாறு யுக்தி புத்தி விசேஷங்களையும் ஜனனகாலத்திலேயே பெறுகின்றன. இவ்விதம் அமைந்த மூளையை நாம் பிரத்தியக்ஷம், அநுமானம் முதலிய பிரமாணங்களால் விருத்திசெய்கிறோமே யல்லாமல் காலியாயிருக்கும் மூளையை நிரப்புவதில்லை. மூளையிலிருந்து முதுகெலும்பின் மூலமாக ஒரு நரம்பு வந்திருக்கின்றது; அதிலிருந்து பல நரம்புகள் தேகத்தின் பற்பல பாகங்களுக்குச் செல்லுகின்றன. கண் காது, மூக்கு, நாக்கு முதலிய இந்திரியங்களுக்கும் மூளைக்கும் சம்பந்தமாக இந்நரம்புகள் ஓடுகின்றன. இவ்விந்திரியங்களின் மூலமாக அறியப்படும் ஒளி, நிறம், சப்தம், வாசனை, பரிசம், உருசி முதலிய உணர்ச்சிகள் இந்நரம்புகளின் மூலமாய் மூளைக்குச் சென்று அறிவிக்கின்றன. நெருப்பை ஸ்பரிசித்தபோது அது பரிசித்த அவயவத்தைச் சுடுகின்றது; அதனால் நெருப்புச்சூடுடையதென்று அறிவதே அநுபவஞானம். இதுவே ஸம்ஸ்காரமா யமைகின்றது. இது மூளையிலிருக்கும். நன்றாய் உற்றுப்பார்க்கும் மனிதனுடைய மூளையில் எண்ணிறந்த ஸம்ஸ்காரங்கள் நிலைதிருக்கும், நாளாவட்டத்தில் புதிய புதிய ஸம்ஸ்காரங்கள் உண்டாகப் பழைய பழைய ஸம்ஸ்காரங்கள்

மழுங்கும். இது பல நாளுக்குமுன் நடந்த விஷயம் மறந்துவிடுவதால் பிரசித்தமாம்.

ஒருவன் பிரத்தியக்ஷமாய் நெருப்பைத் தொட்டு அது சூடுடையதென்று அறிந்தபின், அவன் நெருப்பைக் கையினால் தொடாமல் கண்ணால் பார்த்த மாத்திரத்தில் அது சூடுடையதென்றறிகின்றான். இந்தஞானம் அவன் முன்பு பிரத்தியக்ஷமாய் அநுபவித்ததினால் உண்டாயது. ஆகவே, முதலில் பிள்ளைகளுக்கு லௌகிக விஷயங்களைக் கூடியவரையில் பிரத்தியக்ஷமாய்க் காட்டி அநுபவிக்கச்செய்து அவற்றின் ஸம்ஸ்காரங்களை மூளையில் நிலைக்கச் செய்வது நலம்.

அநுபவத்தின் ஸம்ஸ்காரம் எவ்வளவுக்கெவ்வளவு திடமாயிருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு ஸம்ஸ்கார ஞானம் திடமாயிருக்கும். ஸம்ஸ்காரமானது பலவீனமாயிருந்தால் ஸ்மிருதி ஞானம் சந்தேக விபரீதங்களால் விழுங்கப்படும். எங்ஙனமெனின்? ஒருவன் ஒரு எலுமிச்சம் பழத்தைக் கடையில் பார்த்து அதைத்தொட்டு, முகர்ந்து உருசித்து, பார்வைக்குப் பசுமையாயும் உருண்டையாயுமிருக்கிறதென்றும், மிருதுவாயிருக்கிறதென்றும், ஒருவித வாசனையுடையதென்றும், புளிப்பாயிருக்கிறதென்றும் அறிகிறான். இது பிரத்தியக்ஷ அநுபவமாம். இவ்வநுபவத்தின் ஸம்ஸ்காரம் (வாசனை) மனதில் (மூளையில்) நிலைத்திருக்கிறது. பிறகு எப்போதாவது அவனுக்கு அப்பழத்தின் நினைப்பு வருமாயின், அதன் நிறம் (பசுமை) வடிவம் (உருண்மை) ஸ்பரிசம் (மிருது) வாசனை (எலுமிச்சம்பழ வாஸனை) உருசி (புளிப்பு) முதலியன உற்பூதமா (வெளியா)கின்றன. அவன் அவ்வெலுமிச்சம்பழத்தை இந்திரியங்களின் மூலமாய் அறியும்போது மனமானது இந்திரியங்களுடன் கூடாதாயின், கண்ணின் அநுபவமாகிய நிறம், வடிவம், மூக்கின் அனுபவமாகிய வாஸனை, துவக்கின் அனுபவமாகிய மிருதுத்தன்மை, நாக்கின் அநுபவமாகிய உருசி முதலியவற்றின் சமஸ்காரம் மனதில் நிலைத்திராது; இராதாகவே, தான்பார்த்த பழத்தின் நிறம் சிவப்போ பசுமையோ என்றும், மிருதுவோ கடினமோ என்றும், புளிப்போ இனிப்போ என்றும் சந்தேகமுண்டாகின்றன. சந்தேகமுண்டாகவே, மறுபடியும் அதேபழத்தைத் தான் பார்த்தாலும் அதுசிச்சிலிப்பழம் என்று விபரீதமாக அறிகிறான். ஆகவே, ஸம்ஸ்காரங்கள் (வாசனைகள்) மனதில் எவ்வளவுக்கெவ்வளவு திடமாய்ப் பதிகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு அவை எழும்பொழுது ஸ்மிருதி - (நினைப்பு) விளக்கமாய் இருக்குமென்று முன் கூறப்பட்டது.

(வரும்).

N. சுப்பிரமணிய ஐயர்,
கிண்டர் கார்ட்டன் இன்ஸ்பெக்டர்,
சென்னை.

# வர்த்தமானம்.

## புனர்விவாகம் செய்துகொள்ள விருப்பமில்லாதவொரு விதவை.

இருபது வயதுடைய சூரபொண்டின் டெபி என்னும் ஒரு பிராமணவிதவை தனக்கு விரோதமாகத் தனது தகப்பனார் விதவாவிவாகஞ் செய்துகொள்ள வேண்டுமென்று தொந்தரவு செய்கின்றனரென்று கல்கத்தா பிரெசிடென்சி மாஜிஸ்டிரேட் மிஸ்டர் சுவின்ஹோ முன்னர்ப் பிரையாது செய்தனள். இம்மாது 7 வயதில் சந்திரநாகூரிலிருக்கும் புரோபாஷ்சந்திர சக்கர்ஜீக்குவிவாகஞ் செய்து கொடுகப்பட்டனள். அவன் அவளுக்குப் பதினோராவது வயதிலிறந்து விட்டனன்; அது முதல் அவள் தனது தகப்பனார் வீட்டில்சிலகாலமும் மாமனார் வீட்டில் பலகாலமுமாக வசித்து வந்தனள். புருஷனிறந்த காலமுதல் அவளுடைய பிதா பாபுநாகேந்திர நாத் முக்கர்ஜி என்பவர் பொருளாசையால் அவளை மறுமணஞ்செய்து கொடுக்க முயற்சிசெய்து வந்தமையின், அவள் தனது குருவின் வீட்டில் போய்ச் சிலமாதந் தங்கியிருந்தனள். ஜூன்மாதம் 16ந் தேதி அவளுடையதகப்பனார் 4 பேருடன்சென்று அவளைத் துராக்கிருதமாகத் தனது வீட்டிற்குக் கொண்டுபோய் விட்டனர்; பின்னர் அவளைப் புரோபாஷ் சந்திரராகிட் என்பவருக்கு விவாகஞ் செய்து கொடுக்கப் பிரயத்தனஞ் செய்தனர். அதனால், அவள் தன் தகப்பனார் அறியாதபடி வீட்டை விட்டுப் போய்விட்டனள்.

பெண்ணின் தமையன் பிரம்ம சமாஜத்தில் சேர்ந்தவனாகையால் அவனும் அவளை விவாகஞ்செய்துகொள்ளுமாறு தொந்தரவு செய்துவந்தனன். இத்தொந்தரவையெல்லாம் சகிக்க முடியாது, அவள் தன்தகப்பனாரும் புரோபோஷ் சந்திர ராக்கிட்டும் தன்னைத் தொந்தரவு செய்யாதிருக்குமாறு மாஜிஸ்டிரேட்கோர்ட்டில் பிரையாதுசெய்தனள். மாஜிஸ்டிரேட் அவ்வாறே உத்தரவுசெய்தனர். தகப்பனாரிஷ்டப்படி ஏன் நடத்தல் கூடாதென்று மாஜிஸ்டிரேட் பெண்ணைக்கேட்டதற்கு அவள் தான் இந்து விதவையானபடியால் மறுமணஞ் செய்தல் கூடாதென்று மறுமொழிகூறினள்.

நகவளர்ச்சி.

நகங்கள் வேனிற் (வெயிற்) காலத்தில் மிகுதியாக வளரும்.

ஒரு கடிகார விசேஷம்.

குருடர்க் குபயோகமாமாறு புதுவதாக ஒருவகைக் கடியாரங் கண்டுபிடிக்கப்பட் டிருக்கின்றது.

நார் வஸ்திரம்.

சைனாதேசத்தார் அன்னாசி நாரினாலும்வாழைநாரினாலும் வஸ்திரங்கள் செய்கிறார்கள். நம் தேசத்தாரவற்றைப் பயனாக் காது விடுகின்றனர்.

வாழைப்பழத்தோல் சோப்.

ஆப்பிரிக்காவின் மேற்குப் பாகத்துள்ள சுதேசிகளும் ஐரோப்பியரும் வாழைப்பழத்தோலைச் சுட்டுச்சாம்பலாக்கி அதனோடு தண்ணீரையும் பாம் ஆயிலையும் சேர்த்து ஒருவகையான சோப் செய்து, அதனால்சரீர சுத்தஞ் செய்துகொள்ளுகின்றனர்.

புஸ்தகத்தைப் பாதுகாக்கு முறை.

சுத்திசெய்த சாராயம் 1-ஔன்ஸ், கர்ரோசிவ் ஸப்ளிமேட் 10-கிரெயின், கர்ப்பூரம் 20கிரெயின்; சுட்ட படிகாரம் ஒரு சிட்டிக்கை ஆகிய இவற்றைநீரிற்சேர்த்துக் கலக்கி யொன்றாக்கி அதை மெல்லிய புருசாலெடுத்துப் புஸ்தகத்தின் மீதும், அதனுள்ளேயிரண்டு முன்றேடுகள் மீதும் தடவினால், அந்தப் புஸ்தகத்தில் பூச்சிப் புழுக்கள் சேராவாம்.

குப்பைமேனியின் விசேஷம்.

அம்மைவார்த்துள்ளபோது குப்பைமேனியைவேப்பிலையோடு சேர்த்து வாயிற்கூறைபிற் சொருகிவைப்பதும் விசுறுவதும் செய்தால், அம்மைப் புண்ணில் ஈ மொய்க்காதாம். பிளைக்கிற்கும் குப்பைமேனி தக்கமருந்தாக விருக்கின்றதாம்.

பெரிய வம்மைக்கொரு மருந்து

பெரியவம்மை வார்த்துள்ளபோது கிரீம் ஆப்டார்ட்டர் என்னு மருந்தை ஒரு அவுன்சு ஒரு பயிண்டுத் தண்ணீரில் கலந்து, நன்றாகக் குளிர்ந்த பிறகுஅடிக்கடி குடித்து வரவேண்டுமாம். இவ்வாறுசெய்துவந்தால், அம்மை எவ்வளவு குரூரமாக விருந்தாலும் 3-நாளில் இலகுவாய் விடுமாம்; அம்மைவடுவென்பதுவிழுவதே யில்லையாம்; கண் குருடாவதே யில்லையாம்.



**170-பக்கப் புத்தகம் இனாம்!**

இது நல்ல ஆரோக்கியமும் நீடித்த சுகவாழ்வும்தரும்; இயற்கையாயுள்ள சில விதிகளை அனுசரிப்பதைப் பொறுத்திருக்கிறது. இச்சிறந்த புத்தகம் சுகவழியைக் காட்டி, நல்ல ஆரோக்கியத்தோடும் எப்பொழுதும்திடகாத்திரத்தோடும், நீண்ட ஆயுளோடு மிருக்கும்படி செய்து நல்ல அதிர்ஷ்டத்தைக் காட்டும். இப்புஸ்தகம் இனாமாகவும் தபாற் செலவில்லாமலும் அனுப்பப்படும்.

☞ இப்புத்தகத்திற்கு இன்றைக்கே எழுதுங்கள்.

வைத்திய சாஸ்திரி

**மணிசங்கர் கோவிந்தஜி,**

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

22, பிராட்வே & 96. மவுண்ட்ரோட், மதராஸ்.

ஏஜெண்டு:—M. A. நெல்லையப்ப முதலியார்,

38 சின்னகடைத்தெருவு, திருசினாப்பள்ளி

## சக்ரவர்த்தினி.

### ஒரு வேண்டுகோள்.

அடுத்த சஞ்சிகை டிசம்பர்மாதம் முதல் தேதியில் வெளியாகும். இனி இச்சஞ்சிகை ஒவ்வொரு மாதமும் முதல் தேதியிலேயே வெளியாகும். இவ்வருடத்துச் சந்தாவைப் பத்திரிகாபிமானிகள் தயவுசெய்து முன்னரே அனுப்பிவைக்குமாறு வேண்டுகின்றோம். சந்தாதாரர்கள் அங்ஙனஞ் செய்து பத்திரிகையை யாதரிப்பார்களென்று எதிர்பார்க்கின்றோம்.

இச் சஞ்சிகை தருவிக்க இஷ்டமில்லாதவர்கள் முன்னரே தெரிவித்து விட்டால், எமக்குப் பொருள்நஷ்டமும் சிரமமு மில்லாமற்போம்,

ப - ர்.

சிவப்பிரகாசப்

பெருந்திரட்டு.

சொருபானந்தரால் திரட்டப்பட்டது.

இதுகாறும் வெளிவராதது.

விலை ரூபாய் மூன்று—வி. பி. முதலிய சார்ஜ் பிரத்தியேகம்.

மானேஜர், சக்ரவர்த்தினி ஆபீசு,
கோமளேசுவரன் பேட்டை, சென்னை.

**P. S. Sundram & Co.**
Electro-Platers, Gilders and
General Commission Agents.

உயர்ந்த தங்கம் வெள்ளிப் பதக்கங்களும் முதல் தரமான அநேக யோக்கியதா பத்திரங்களும் வெகுமானமாக அளிக்கப்பட்ட பெயர் பெற்ற

பி. எஸ். சுந்தரம் கம்பெனி,
எலக்டிரிக் தங்க நகை வியாபாரிகள்.
107-பெரியதெருவு திருவல்லிக்கேணி, சென்னை.

எலக்ட்ரிக் தங்கநகை விலைவிவரம்.

32" நீளம் ¾" அகலம் 150. } அரும்பு சிலங்கை கட்டிய
32" நீளம் ⅝" அகலம் 210. }

| | | | |
|---|---|---|---|
| 5 வருஷம் காரண்டியுள்ள | மல்லிகை ஒட்டியாணம் | ரூ. 25 | 8 |
| | நாக ஒத்து பெரியது | 12 | 0 |
| | நாகஒத்து சிறியது | 9 | 0 |
| | காரை பெரியது | 10 | 0 |
| | காரை சிறியது | 7 | 8 |
| | வங்கி பெரியது | 10 | 0 |
| வருஷம் காரண்டியுள்ள | மல்லிகை ஒட்டியாணம் | 19 | 8 |
| | நாகஒத்து பெரியது | 9 | 0 |
| | ஷை சிறியது | 6 | 12 |
| | காரை பெரியது | 7 | 8 |
| | ஷை சிறியது | 5 | 12 |
| | வங்கி சிறியது | 8 | 0 |
| 1½-வருஷம் காரண்டி யுள்ள | மல்லிகை ஒட்டியாணம் … … | 13 | 8 |
| மல்லிகை ஒட்டியாணம் | காரண்டியில்லாதது … … | 8 | 8 |
| | ஜாமந்திப்பூ | 1 | 8 |
| | ரோஜாப்பூ | 1 | 8 |







# சக்ரவர்த்தினி.

" கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்,
மற்றீண்டு வாரா நெறி".

VOL VIII. } தொகுதி அ. } NOVEMBER 1912. நவம்பர்மீ 1912. { NO. 4. { பகுதி - ச.


## கற்பு.

"குலனுடைமையிற் கற்புச் சிறந்தன்று", "இருள் தீர்ந்த கண்ணாராச் செய்வது கற்பு", "கற்பெனப் படுவது சொற்றிறம்பாமை" என்றற் றொடக்கத்தனவாயுள்ள பிரயோகங்களைச் சீர்தூக்கிப் பார்க்குமிடத்து, கற்பென்பது ஆண் பெண் என்னுமிருதிறத்தாருக்கும் பொதுவாயுள்ள தருமமாமென்பது நன்கு விளங்குவதாம். நற்குடிப்பிறப்பினும், கற்புச் சிறப்புடையது; மயக்கநீங்கிய வறிவினையுடையவராகச் செய்வது கற்பு; சொன்ன சொற்றவறுமை கற்பு என்று கூறப்படுமாயின், கற்பு பெண் பாலுக்கேயுரியதன்றி ஆண்பாலுக் குரியதன்றென்பது எவ்வாறு பொருந்துவதாம்? கற்பு, பெண்பாலுக்கே யுரியதாயின், ஆண்பாலுக்குரிய சிறப்பென்னும்? மயக்கந்தீர்ந்த வறிவினையுடையவராதல், சொற்றவறுமை முதலியன ஒவ்வொருவர்க்கு மின்றியமையாது வேண்டப்படுவனவாயிருத்தலின், கற்பு, பெண்பாலுக்கே யுரியதென்பது பொருந்துவதாமோ? இம்மையில் மேம்பாடுறுவதற்கும் மறுமையில்மேம்பாடுறுவதற்கும்வீடுபெறுவதற்கும் கற்புஇன்றியமையாத சாதனமாகவிருத்தலின், கற்பின்றி மேன்மை யுறுதலொருவாற்றானும் எவர்க்குமாகாததாம். கற்பென்பதற்குப் பதிவிரதையாயிருக்குந்தன்மை யெனப்பொருள் கொண்டு, அது பெண்பாலுக்கே யுரியதெனக் கூறப்படுகின்றது. விபசாரஞ் செய்யாமை பெண்பாலுக்கே யன்றி ஆண்பாலுக்கும் வேண்டப்படுவதாக

விருத்தலின், ஆண்பாலுக்கும் கற்புடைமை யத்தியாவசியகமானதாம். இது "அறன்கடை நின்றாருளெல்லாம் பிறன்கடை, நின்றாரிற் பேதையாரில் (காமங்காரணமாகப் பாவத்தின்கணின்றாரெல்லாருள்ளும் பிறனில்லாளைக் காதலித்து அவன் வாயிற்கட்சென்று நின்றார்போலப் பேதையாரில்லை)" என்றும், "நிறைநெஞ்சமில்லவர் தோய்வர் பிறநெஞ்சிற், பேணிப் புணர்பவர் தோள் (நெஞ்சினுற் பிறவற்றை யாசைப்பட்டு அவைகாரணமாகக் கொடுப்பாரை மெய்யாற் புணரும் மகளிர் தோள்களை நிறையாற்றிருந்திய நெஞ்சமில்லாதார் தோய்வர்)" என்று முள்ள குறள்களாலும் பிறவாற்றாலும் நன்கு விளங்குவதாம்.

ஆண்பால் வியபிசாரஞ் செய்வது குற்றமன்றென்றும், பெண்பால் வியபிசாரஞ் செய்வது குற்றமென்னும் நம்மனோருள் வெகுகாலமாக வழங்கிவருகின்ற வழக்கம்பற்றி, பெண்பாலுக்கே கற்புச் சிறந்ததென்று சொல்லப்பட்டு வருகின்றது. பெண்பால் வியபிசாரஞ் செய்வது தவறுவதுபோல ஆண்பால் வியபிசாரஞ் செய்வதுந் தவறும்; இவ்விருவரும் வியபிசாரஞ் செய்யாதிருத்தல் வேண்டுமென்றுணர்ந்தால், ஆண் பெண்ணென்னு மிருதிறத்தாருக்குங் கற்பு அத்தியாவசியகமானதென்ப தினிது புலனும்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந், தெய்வத்துள் வைக்கப் படும் (இல்லறத்தோடுகூடி வாழுமியல்பினால் வையத்தின்கண் வாழ்பவன் வையத்தானே யெனினும் வானின்கணுறையுந்தேவருள் ஒருவனாக வைத்து நன்குமதிக்கப் படும்)" என்றும், "பெற்றாற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப், புத்தேளிர் வாழு முலகு (பெண்டிர் தம்மை யெய்தியகணவனை வழிபடுதல் பெறுவராயின், புத்தேளிர் வாழுமுலகின்கண் அவராற் பெருஞ்சிறப்பினைப் பெறுவர்)" என்று முள்ள குறள்களால் ஆண்பாலுக்குச் சிறப்புவகையான கற்பு, வையத்துள் வாழ்வாங்கு வாழ்தலும், பெண்பாலுக்குச் சிறப்புவகையான கற்பு பெற்றாற் பெறுதலுமாம். இக்கற்பே ஆண்பால் பெண்பாலென்னு மிருதிறத்தினரையும் இம்மைப்பயன், மறுமைப்பயன், வீடென்னு மூன்றையு மடையச் செய்வதாம். இக்கற்பினையுடைய மக்களே மக்களாவர்; ஏனையோர் மாக்களாவர். ஆண்மக்கள் மனம் பெரும்பான்மை கடினமாகவும், பெண்மக்கள் மனம் பெரும்பான்மை தளர்வுடையதாகவு மிருத்தல் பற்றிப் பெண்களுக்குக் கற்புடை-



மை சிறப்பாமென்று கூறப்படுகின்றது. இது நாயனார் "பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந், திண்மையுண் டாகப் பெறின்" என்றருளிய குறளில் 'கற்பென்னுந் திண்மை' என்று வற்புறுத்தி யிருத்தலிங்கு நன்குணர்தற் பாலதாம். இவ்வொரு காரணம் பற்றியே கற்புப் பெண்பாலுக்கே யுரியதென்று கூறப்படுகின்றது. இதனையுய்த்துணர்ந்து நோக்குவார்க்கு அடிக்கின்ற காற்று அஃறிணையுயிர்க்கும் உயர்திணையுயிர்க்கு மத்தியாவசியகமாகவேண்டப்படுவதுபோலக்கற்பும் ஆண்பாலுக்கும்பெண்பாலுக்கும் அத்தியாவசியகமாக வேண்டப்படுவதா மென்பது தெற்றென விளங்குவதாம். நம்மனோர் வியபிசாரஞ்செய்யும் பெண்களை நிந்தித்து விலக்குவதுபோல வியபிசாரஞ்செய்யும் புருஷர்களையும் நிந்தித்து விலக்குவாராயின், அப்போது கற்பு, பெண்பாலுள் சிறந்து விளங்குவதுபோல ஆண்பாலுள்ளும் சிறந்து விளங்கும். நம்மனோரது செய்ய முயன்றாற்றான் புருஷர்களுள் கணக்கிறந்தவர் வியபிசாரஞ்செய்து, பகை, பாவம், அச்சம், பழி முதலாயினவற்றிற்காளாவதொழிந் துய்தல்கூடும். கற்பு, பெண்பாலுக்கே யுரியதென்னும் பிரயோகம் ஆண்பாலின் கற்பின்மையை நன்கு விளக்கும். புருஷர்களுள் பலர் பிறர்மனைவியரை விரும்பி யொழுகுதல், பொதுமகளிரோடு நேசித்தலென்னும் வியபிசார வியாபாரத்தால் தம் பேதை மனைவியரை வியபிசாரஞ் செய்ய ஏவுகின்றவராக விருக்கின்றனர். வியபிசாரஞ்செய் தொழுகுகின்றவரது மனைவியருள் பலர் வியபிசாரஞ் செய்கின்றவராகவே யிருப்பாரென்பது சிறிது நுட்பமாக நோக்குகின்றவர்கட்கு விளங்காமற் போவதன்றாம். புருஷர் கற்புடையவராக வொழுகுதல் பெண்களைக் கற்புடையவராக வொழுகச்செய்வதற்குப் பெரும்பான்மையுந் தக்கவேதுவாம். தன்னைக்கொண்ட கணவன் குறிப்பறிந்தொழுகி, அவனுக்கும், அவனது தந்தை முதலாயினோருக்கும், விருந்தினருக்கும் உவப்போடு முபசாரத்தோடும் அன்னம்படைத்தல், தன் கணவன் செய்யும் வைதிககாரியங்களுக்குத் துணையாக நிற்றல், தன்னைக்கொண்டவனது கருத்திற்குப் பிரியமாக வொழுகுதல், அவனையன்றி வேறு தெய்வத்தை வணங்காமை, அவன் கட்டளைப்படியே வேறு தெய்வத்தை வணங்குதல் முதலியன செய்து மனந் தடுமாறுதலின்றி யிருத்தல் பெண்பாலுக் குரிய கற்பாம். பழிபாவத்திற்குப் பயந்து, அந்தணர் சான்றோர் அருந்தவத்தோர் கூறியவாறொழுகி, தன் மனைவியை யன்றி வேறு பெண்களைப்

புணரக் கனவிலு மெண்ணுதிருத்தல் ஆண்பாலுக்குரிய கற்பாம். பெண்பாலுக்குரிய கற்பு "தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற, சொற்காத்துச் சோர்விலாள் பெண் (கற்பினின்றும் வழுவாமற் றன்னைக்காத்துத் தன்னைக் கொண்டவனையும் உண்டி முதலியவற்றாற் பேணி, இருவர் மாட்டும் நன்மையமைந்த புகழ் நீங்காமற்காத்து, மேற்சொல்லிய நற்குண நற்செய்கைகளினுங் கடைப்பிடி யுடையாளே பெண்ணாவாள்)" என்னுங் குறளாலும்,

ஆண்பாலுக்குரிய கற்பு "அறனெனப் பட்டதே யில்வாழ்க் கை யஃதும், பிறன்பழிப்ப தில்லாயின் நன்று" (இருவகை யறத் தினும் நூல்களான் அறனென்று சிறப்பித்துச் சொல்லப்பட்டது இல்வாழ்க்கையே; ஏனைத் துறவறமோ வெனின், அதுவும் பிறனாற் பழிக்கப்படுவதில்லை யாயின், அவ் வில்வாழ்க்கையோடு ஒரு தன்மைத்தாக நன்று) என்னுங்குறளாலும் நன்கு விளங்கு வனவாம்.

ஆண்பால் பெண்பாலென்னு மிருதிறத் தாருக்கும் கற்புடை மையோடு கூடியவொழுக்கம் நன்மை யென்று சொல்லப்படுவன வெல்லா வற்றையுந் தருவதாக விருத்தலின், அதனைப் பிரயத்தன பூர்வகமாகப் பெற்றொழுகுதல் ஒவ்வொருவருக்கு மின்றியமை யாததாம்.

கற்புடைமையாவது கற்றவாறொழுகு மொழுக்கமாம். இங் குப் புருஷன் இம்மைக்கும் மறுமைக்கும் வீட்டிற்குமேதுவாய சாதனங்களைப்பெற அந்தணர் சான்றோர் அருந்தவத்தோரிடத் துக் கற்றொழுகு மொழுக்கம் ஆண்பாலுக்குரிய கற்புடைமை யாம்; பெண் அறிவு ஆசாரங்களைக் கணவன் வாயிலாக வேனும், தாய்தந்தையர் வாயிலாகவேனும், செவிலி (வளர்த்ததாய்) வாயி லாகவேனும் சான்றோர் வாயிலாகவேனும், கற்றொழுகு மொழுக் கம் பெண்பாலுக்குரிய கற்புடைமையாம்.

கற்புடைய புருஷனிடத்து அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப் பிடியென்பன சிறந்து விளங்குவனவாம்.

(1) அறிவாவது எப்பொருளெத்தன்மைத் தாயினும், அப் பொருளில் மெய்ப்பொருளைக் காண்பதாம்.

(2) நிறையாவது காப்பனவற்றைக் காத்துக் கடிவனவற் றைக் கடிந்தொழுகு மொழுக்கமாம்.



(3) ஓர்ப்பாவது எப்பொருளையு மாராய்ந் துணர்தலாம்.

(4) கடைப்பிடியாவது அந்தணர் சான்றோர் முதலாயினு ரிடத் தறிந்துகொண்ட பொருளை மறவாமையாம்.

கற்புடைய பெண்ணிடத்து நாணம், மடம், அச்சம், பயிர்ப் பென்பன சிறந்து விளங்குவனவாம்.

(1) நாணமாவது விரும்பியவாறு வெளியேவந் துலாவுவதற் கும், பிறரோடு பேசுவதற்கும் வெட்கமுறுதலாம்.

(2) மடமாவது வஞ்சகஞ் செய்தல் முதலியவற்றை யறியா மையாம்.

(3) அச்சமாவது தான் காணுததாயும் விகாரமாயு முள்ள பொருளைக் கண்டவிடத்துப் பயப்படுதலாம்.

(4) பயிர்ப்பாவது அந்நியரது பரிசம் நேர்ந்தபோ தரு வருத்தலாம்.

இக்குண முடைமையாலும் இல்லாமையாலும் கற்புடைமை யையும் இல்லாமையையு மெளிதாக வறிதலாம். ஆண் பெண் ணென்னு மிருதிறத்தாருள் கற்பில்லாதவர் ஒருவாற்றானும் மேம் பாடடையா ரென்பதை நன்குணர்ந்து கற்பின் வழியொழுக நமக் குப் பரமேசன் கருணை புரிவா னாக.

## இந்துமத மாவதென்ன?

(28-வது பக்கத்தின் தொடர்ச்சி).

வெவ்வேறு வகைப்பட்ட மரங்கள்சேர்ந்தது தோப்பு என்று வழங்கப்படு
இன்றதல்லவா? மரங்களின் கூட்டமாகிய தோப்பைப்போல, பலவகையா
னபொருள்களின் கூட்டமா? அஃதாவது இவ்வுலகம் ஒன்றன் கூட்டமா?
பலவி னீட்டமா? ஒன்றன் கூட்டமானால் நெல் அம்பாரத்தில் எதை யெடு
த்தாலும் நெல்லா யிருப்பதுபோல, எல்லாம் ஒரே இனமான பொருளாயி
ருக்கவேண்டுமே? அப்படியில்லையே! வெவ்வேறுவகைப்பட்ட பொருள்கள்
தோற்றுகின்றனவே! ஆகையால் இவ்வுலகம் பலவினீட்டமாம். பலவகைப்
பட்ட பொருள்கள் என்னுமிடத்து அங்கங்கேயுண்டான சிறப்புத்தன்மைக
ளையெல்லாம் நீக்கிப்பொதுத்தன்மையைமாத்திரங்கணித்துப்பொருள்களை
ஆறுவகையாகப் பிரித்துக்கொண்டனர் முன்னோர்; அவைகளில் ஒரு பொ
ருளும் சுயம்பாயிராமல்,பூதக்கலப்பால் உண்டான தென்று கண்டுபிடித்த
னர். ஆனல், தற்காலத்தில் இங்கிலாந்து, அமெரிக்கா, ஜப்பான் முதலாகிய

தேசங்களில் பூத பரிசோதகர்கள் இவ்வளவு விருத்தி யடைவதற்கு இப்போது உதவியாயிருக்கிற கருவிகளைப்போல அக்காலத்தில் இந்துக்களுக்கு ஏதேனும் இருந்ததா இல்லையாவென்று உண்மையாய்த் தெரிந்துகொள்ளத் தேச சரித்திரங்க ளில்லாவிட்டாலும், மேற்சொன்ன சாஸ்திரிகள் கருவிகளின் உதவியால் கண்டுபிடித்திருக்கிற வானசாஸ்திரத்தின் நிச்சயங்களை யெல்லாம் அக்காலத்திலேயே இந்துக்கள் கணித்திருந்தார்க ளென்பதற்கு இந்துக்களுக்கும், ஐரோப்பியருக்கு முள்ள பஞ்சாங்க ஒற்றுமையே சாட்சி பகரும். இதுவுமல்லாமல் இந்துக்கள் வெகு காலங்களுக்கு முன் கணிதசாஸ்திரத்தில்(Mathematics)தேர்ச்சியுடையவர்களென்பது ஒரு பட்சமிருந்தாலும், இந்த வித்தையைத் தினப்பழக்கத்தில் கொண்டுவந்து தற்காலத்தில் இங்கிலீஷ் பாஷையை வாசித்துப்பட்டம் பெற்றவர்கள் கடிதத்தில் எழுதிக் கணக்குப்பார்த்துச் சொன்னால், தவறமுடியாத கணக்குகளை இன்றைக்கும் சுதேச கணக்கில் பழக்கமுடையவர்கள் அதி சீக்கிரத்தில் வாய்ப்பாடமாகவே சரியாய்ச்சொல்லிவிடுகிறார்கள். இதுவுமன்றிச்சம்ஸ்கிருதத்தைச் சுயபாஷையாக வகித்த B. A. பட்டம்பெற்ற வொருவர் ஆல்ஜிப்ரா, யூக்லிட் (Algebra-Euclid) என்பனவற்றை மேற்படி பாஷையிலும் சொல்ல நான் கேட்டிருக்கிறேன். தற்காலத்தில் பூத பரிசோதனையானது கொல்வதற் கருமையான விருத்தியையடைந்திருக்கிறதென்பதற்கு நம்முடைய நகரில் முக்கியப்பாட்டைகளில் ஓடுகிற *Electric Tramway, Motor Car, Motor cycle* முதலியவையே சாட்சி பகரும். ஐரோப்பியர் முதலானவர்கள் தற்காலத்தில் பூத சோதனை செய்து வருகிற நோக்கத்துக்கும், இந்துக்கள் அக்காலத்தில் பூத சோதனை செய்த நோக்கத்துக்கும் வித்தியாசமுண்டு. முதல் வகுப்பாருடைய ஆராய்ச்சியில் மனிதர் பிரத்தியட்சத்தில் அடையத்தக்க சுகம் எங்கே எங்கே யென்றும் எப்படி எப்படியென்றும் தேடுவதாலும், விடாமுயற்சியாலு மல்லவா எவ்வளவோ சுகங்கள் பிரத்தியட்சத்தி லகப்பட்டுவிட்டன. பல தினங்களிலும், அநேகருடைய பிரயாசையாலும் செய்யக்கூடிய வஸ்துக்களை யெல்லாம் சொற்ப காலத்திலும் சொற்பஜன சகாயத்தாலுமே முடிவுபெறத்தக்கனவாய் ஏழைகள் அநுபவிக்கும் விதங்களும், அந்தந்தக்காலத்துக்கும் அந்தந்த இடத்துக்கும் தக்க உணவும் உடையுந் தெரிந்து கொண்டமையால் சீவகால விருத்தியும், வியாதி சம்பவித்துத் தேகத்தை அறுத்துச் சோதிக்குமாறு நேரிட்டகாலத்துத் தேகபாதை கொஞ்சமேனும் தோற்றாம லிருக்கும்படியான மருந்துகளும், யந்திரங்களின் சகாயத்தால் வானத்தில் போகவும், அதுவுமின்றி ஆள் ஆகாயத்தில் பறக்கவும், இன்னு மிவைபோன்ற அருமையான விஷயங்களுங் கண்டுபிடித்து விட்டார்கள். இந்த நன்மைகளை யெல்லாம் சொல்லப் புகுந்தால் எவ்வளவோ காலமாகும்.

இந்துக்களின் நோக்கமோ வென்றால், அஃது இவ்வுலகம் இப்படியே ஒருசுயம்பாக வில்லாமல், சோதனைக் கிடங்கொடுக்கிறதென்று தெரிந்து



கொண்ட பிறகு எங்கே, எப்போது இதனுண்மை வெளியாகும் என்னும் அதி தீவிரத்தன்மை யுடையதா யிருந்தபடியால், பூதங்களின் அதிநுட்பப் பரிசோதனையா லுண்டாகும் பிரத்தியட்சப் பிரயோசனத்தை அவர் தேடவில்லை யென்று தெரியவருகிறது. இந்துக்கள் செய்த பூதசோதனை ஸ்தூலமெனவும் தற்காலத்தில்செய்துவரும் சோதனை அதிநுட்பமுடையதெனவுந் தெரியவருகின்றன.

இந்துக்கள் பிருதிவி, அப்பு, தேயு, வாயு என்னும் நான்குங் கூடவும், பிரியவும் இடங்கொடுத் திருப்பது ஆகாய மாகையால், பூதங்கள் 5 எனத் தேர்ந்தார்கள். தற்காலத்துச் சாஸ்திரிகள் ஆகாயம் பூதத்தி லொன்றல்ல வெனத் தள்ளிவிட்டனர். தற்காலத்திய சாஸ்திரிகள் தனிப்பூதங்கள் இந்துக்களால் ஐந்தெனக் கணிக்கப்பட்டன போலல்லாமல் 70 க்கு மேற்பட்டிருக்கின்றன வென்று உண்மையான தீர்ப்பைக் கண்ணெதிரில் கருவிகளால் நிரூபிக்கும்படியான தன்மையிற் கண்டுபிடித்தனர்; அதுவுமல்லாமல் ஒவ்வொருபொருளிலிருக்கிற ஒவ்வொருபூதத்தின் அளவையும் கண்டுபிடிக்கத்தக்க சாஸ்திரத்தையும் (*Chemistry*) கண்டு பிடித்திருக்கிறார்கள். இந்துக்கள் செய்த சோதனைக்கும் இவர்கள் செய்துவரும் சோதனைக்கும் அவரவர்களின் நோக்கத்தின் காரணம் வெவ்வேறு வகைப்பட்டாலும், இருதிறத்தவர்களுடைய முடிவு எப்படியாயின வென்று பார்ப்போம்.

(1) முதலில் இந்துக்கள் தீர்ப்பைப் பார்ப்போம். ஒவ்வொரு தனிமுதலைப்போலத் தோன்றியிருந்த பொருள்களையெல்லாம் பிரித்த 6 வகுப்புக்களாக்கி அவ்வவ்வகுப்பிலுள்ள பொருள்களெல்லாம் பூதங்களின் கூட்டத்தால் உண்டாயிருக்கக்கண்டு, அப்பூதங்களின் தொகை 5 எனவும் அவற்றுள் முதல் நான்கு பூதங்களில் ஒவ்வொரு பூதத்தின் சுயதர்மம் எதுவென்று சோதிக்கத்துணிந்து ஒவ்வொரு பூதமும் தன்னுருவங் கலைந்து சிதைவுக் கிடந்தந்து, சிதைவுற்ற வொவ்வொன்றும் மறுபடியும் சிதைவுண்டு போகும்போது கண்ணால் பார்க்க முடியாததாய்ப் போய்ப்பிறகு மனதால் சிறிது கணித்துக் கொள்ளக்கூடியதா யிருந்து அதவுந்தவந்து இன்னும் பிரிவுக்கே இடங்கொடுத்துக்கொண்டு போகின்றதெனவுங் கண்டார்கள். கண்ணால்பார்க்கவும், கருத்தால் கணிக்கவும் முடியாமற்போனாலும், எவ்வளவுதான் பிரிக்கப்படுவதற் கிடங்கொடுத்துக் கொண்டுபோனாலும், முடிவில் இனி இரண்டாய்ப் பிரிதலுக்கு இடம்பெறாத ஒ சுயம்பு இருந்துதானே அத்துடன் அதைப்போல மற்றொன்றுசே அத்துடன் மற்றொன்றுசேர, இப்படிப் பேருருவங்களாய் அவை முடிவி தோற்றுகின்றன. இவ்வணுக்களின் கூட்டமே சிருஷ்டியென்றும், கூடி பின்னும் கலைவதற்கு முன்னும் ஒரு சுயம்புபோலத் தோற்றுவது தி, (இருப்பு)என்றும், கூட்டம் கலைவதே லயமென்றும், அணுக்கள்கூடுவது கலைவதுமன்றி உலகமென்பதற்குத்தனியாய் ஒருமுதலிருப்பதாய்க் கா ப்படவில்லை யென்றும், இருப்பது அணுவே யென்றுந் தீர்மானித்தனர்

(வரும்). ஹிதவசனி.

## இந்திரபீடம் கரபாத்திர சுவாமிகளின் சம்பிரதாய சிந்தனை வாக்கியம்.

(69-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

(27) என்ன தோன்றுகின்றதெனின், அனுபூதி தோன்றுகின்றது. நாமரூபந்தோன்றவில்லையா வெனின், என்னிடத்தில் தோன்றிய விருத்தி நாமரூபமாய்த் தோன்றுகின்றது; அதுவும் போகவேண்டுமே; எப்படியெனின், ஆகார மெப்போதுமில்லை; விருத்தியாகிய தோற்றமே யொவ்வோராகாரமாய்த் தோன்றியழியும். கடைசியில் ஒன்றுதோன்றுகின்றதே அதுவும் போகவேண்டுமே; எப்படியெனின், முன் தோன்றிய வெல்லா மெப்படிப்பொய்யோ அப்படியே இதுவும் பொய். எப்படியெனின் அவளுக்குஅவலக்ஷணம், அவளுக்கு அவலக்ஷணம் என இப்படிப் பத்துப்பேரைச்சொல்லும்போது கடைசியிலிருந்தவள் லக்ஷணமுடையவளாவள்; அவள் திரும்பினால் முடிய லக்ஷணம் ஒன்பது பேர்க்குமில்லை. இதுபோல இருக்கிறது வியாபகம்; அது தன் விளக்கமாம்.

(28) இன்னும் ஆய்ந்தறியாவிடின், † ஆயறியாதென்பதெப்படியெனின், எதுவுந்தானாகி யறிந்தது ‡ விரத்தம். விரத்தம் விளங்காவிடின், இகலற (மாறுபாடற) விசாரித்தறிந்ததல்ல வென்றறிக.

(29) இன்னும் அனுபூதி தோற்றுவதும் ஆகாரந்தோற்றுவது மெப்படியெனின், அறிவி லனுபூதி யடங்கி யிருந்தால் ஆகாரந்தோற்றும்; ஆகாரம் அறிவிற்கரைந்தால் அனுபூதி தோற்றும்.

(30) யாதொன்றினு மாரம்பிக்கு முறைமையெப்படியெனின், ஒன்றைவிட்டு மற்றொன்றை யாரம்பிக்கப்போம்போது சைதன்னிய துரியம் விளங்கப் பார்த்துக்கொண் டாரம்பிக்க வேண்டும்.

(31) மாயை யுண்டான தெப்படி யெனின், நித்தியமாய்த்தானே தானாய் விளங்கி நித்தியாநந்த சொரூபமாயுள்ள அறிவு தானே பிரபஞ்சமாகவேண்டுமென்று நினைத்தது; அந்த அறிவிற்கே சுத்த மாயையென்று பெயர். அந்த அறிவு சொரூபமாகிய மாயையானது, தன்னுடைய நிசாநந்தத்தை மறந்ததே அவ்வியக்தமாகிய ஈஶ்வரனுடைய காரணதேகமாம்.

(32) இன்னும் மாயையுண்டாவதெப்படி யெனின், சொரூபத்தை விட்டு நீங்கின அறிவு எதிரிட்ட விஷயசுகத்தைத் தனது சுகமாய்க்கண்டு தன்சுபாவ சுகத்தை மறந்ததையால், அதமொரு முதலான துமாயையாம்.

† ஆயறியாது-எவற்றினுஞ் சிறந்த பரம்பொருளையறிய முடியாது; ஆய் - சிறப்பு.

‡ விரத்தம் - அறிவு.



(33) இன்னும், மாயை யறியப்படாத தென்பதெப்படி யெனின்; காரியமான பிரபஞ்சத்திற்கும் காரணமான*சொரூபத்திற்கும் விலட்சணமாய்ச் சிந்திக்கில், நிர்ணய மாகாதது மாயையென விளங்கும்.

(34) இன்னும் மாயை யென்பதெப்படி யெனின்; தேகமாயும் விளங்குவதில்லை: அறிவாயும் விளங்குவதில்லை யென்று கண்டால், ஒன்றுந் தோன்றாது. ஆகையாலிதுவே மாயையாம்.

(35) மாயையுண்டென்பதும் இல்லையென்பதுமெப்படி? ஸ்புரித்த (விளங்கிய) அறிவிற் றான்விளங்கினால் மாயையில்லை; தானும் வியாபகமும் அறிவிலடங்கினால் அது மாயையாம்; அந்த அறிவிற் றான்விளங்காவிடில் அது பிரகிருதியாம்.

(36) மாயை யேகமென்ப தெப்படி யெனில்; சகல (சர்வப்பிரபஞ்ச) மா யிருப்பதாலென வறிக.

(37) அவித்தை அநேகமென்பதெப்படி யெனின்; ஆகார (தனித்தனி வடிவ)மாக விருத்தலாலெனவறிக.

(38) இன்னும் மாயையிற்றான் வசமானது, மாயை தன் வசமானது எப்படியெனின்; விஷயத்திற் றான்மறைபட்டதும் தன்னில் விஷயம் மறைபட்டதுமாம்.

(39) இன்னும் மாயையில்லை யென்பதெப்படியெனின்; சுகந்தனக்கு வஞ்சகமாகாது (மறையாது) தானறிவாய் நின்றால், சொரூபம் விளங்கும்; மாயை யில்லையாம்.

(40) இன்னும் மாயை மாளுவதெப்படி யெனின்; (அகண்டாகார) விருத்தியிற் றன்னைக் கண்டால் மாளும்.

(41) பிரகிருதி, மகத்தத்வம், அகங்காரதத்துவம், பிரபஞ்சமெப்படி யெனின்; (1) மாயாதீதம் பிரகிருதி,(2)மாயாகாரியம் மகத்தத்வம்,(3)மகத்தத்வகாரியம் அகங்காரம், (4) அகங்காரகாரியம் இத்துவிதப் பிரபஞ்சமாம். துரியன் வெளிப்பட்டா லிவை கரைந்து மூன்று மொன்றாம்.

(42) சைதன்னியத்திலும் லோகத்திலும் நடுநின்றிலவதுவே யுள்ளமென்பதெப்படியெனின்; அகத்தைக்கொண்டு இதத்திலும் இதத்தைக் கொண்டு அகத்திலுந்திரிவது ஒன்றாயிருத்தலின், அகம் அறிவென்றும், இதஞ்சடமென்றும், மத்தியம் விளங்காது நடுநின்றிலவதுவே யுள்ளமென்றமறிக. (அகம்-நான்; இதம்-இது).

(43) விளக்கமும் மாயையுமெப்படியெனின், மாயை சர்வதா சூனியமல்ல? சொப்ன தேகம் போற்றோன்றியது. விசாரியாவிடில் அது மாயையாம். விசாரிக்கில் தான் விளக்கமானபடியினாலே அப்படியென் றொன்றில்லையாம். (சர்வதா-எப்போதும்).

* சொரூபம்-மாயாசகித சேதனம்.

(44) இன்னும் ஸ்புரிப்பில் விளக்கமும் மாயையு மெப்படியெனின்; தானே அறிய வந்தால் விளக்கமாய்; அறிகிறோமென்றால் போத மில்லை; அறியவில்லையென்றொரு மயமுமில்லை. நானறிந்தேனென்றால் அது மாயையாம்.

(45) துக்கமெதுவரைக்கு மிருக்கு மெனின்; தேகந் தானென்பது போமளவு மிருக்கும்.

## உபநிஷதார்த்த தீபிகை.

## மகோபநிஷத்.

(67 - பது பக்கத்தின் தொடர்ச்சி).

(45) அகங்காரமயமாகிய வாசனையவிளையாட்டாகவே (சிரமமின்றியே) விடுத்துத் த்யேயத்தையும் (த்யானிக்கப்படும் பொருளையும்) த்யாகஞ் செய்தவன் (விடுபவன்) ஜீவன் முக்தனென்று சொல்லப்படுவான்.

(46) எவன் உலக திருஷ்டிகளில் விருப்பு வெறுப்புக்களில்லாமல் சுஷுப்தியுடையவன் போலச் சஞ்சரிக்கின்றானோ அவன் ஜீவன் முக்தனென்று சொல்லப்படுவான்.

(47-48) எவன் ஆத்மாவினிடத்தே பிரீதியுள்ளவனாய்ப் பூர்ணனாய்ப் பரிசுத்தமாகிய மனத்தையுடையோனாய்ப் பரமவிஸ்ராந்தியை யடைந்தவனாய் இங்கு ஒன்றையும் இச்சிக்காமல் பற்றில்லாதவனாய் ஜீவிக்கின்றானோ அவன் ஜீவன் முக்தனென்று சொல்லப்படுவான்.

(48-49) அறியப்படும் பொருளால் எவனுடைய ஹிருதயாகாசத்தில் சிறிதேனும் மலினமடையாதோ, எவனுடைய சம்வித் (அறிவு) ஜடமில்லாமல் (பிரகாசிக்குமோ) அவன் ஜீவன் முக்தனென்று சொல்லப்படுவான்.

(49-50) ராகத்வேஷம், சுகதுக்கம், தர்மாதர்மம், லாபாலாபம் என்னுமிவற்றை அபேக்ஷையில்லாமலே எவன் (கர்மத்தைச்) செய்கிறானோ அவன் ஜீவன் முக்தனென்று சொல்லப்படுவான்.

(50-51) மௌனியாகவும் அகம்பாவ மில்லாதவனாயும் பெருமையில்லாதவனாயும் பொறாமையில்லாதவனாயும் பற்றுசலற்றவனாயும் எவன் (கர்மத்தைச்) செய்கின்றானோ அவன் ஜீவன் முக்தனென்றுசொல்லப்படுவான்.

(51-52) எங்கும் ஸ்நேகத்தை (பற்றுதலை) விட்டவனாய்க்கார்யங்களில் இச்சையில்லாமல் சாக்ஷியைப்போல நிற்கின்றானோ அவன் ஜீவன் முக்தனென்று சொல்லப்படுவான்.



(52-53) எவனால் தர்மமும் அதர்மமும் மனமும் மனத்தின் நினைப்பும் ஆசையும் (ஆகிய) சர்வமும் உள்ளே விடப்பட்டனவோ அவன் ஜீவன் முக்தனென்று சொல்லப்படுவான்.

(53-54) திருசியபாவனை (திருசியத்திற்கு வசப்படுதல்) எதுவரையிலுண்டோ அது வரையில் இந்த (ஜகத்து) எல்லாம் தோற்றும்; அவை எவனால் நன்றாய் விடப்பட்டனவோ அவன் ஜீவன் முக்தனென்று சொல்லப்படுவான்.

(54-55) காரம், புளிப்பு, உப்பு, கசப்பு, அசுத்தம், சுத்தம் என்னுமிவற்றைச் சமமாக எவன் போஜனஞ் செய்கிறானோ அவன் ஜீவன் முக்தனென்று சொல்லப்படுவான்.

(55-56) மூப்பு, மரணம், ஆபத்து, ராஜ்யம், தாரித்திரியம் என்னுமிவையெல்லாம் நல்லனவேயென்று அனுபவிப்பவனெவனோ அவன் ஜீவன் முக்தனென்று சொல்லப்படுவான்.

(56-57) தர்மம், அதர்மம், சுகம், துக்கம், ஜன்மம், மரணம் என்னுமிவையெல்லாம் எவனால் நன்கு விடப்பட்டனவோ அவன் ஜீவன் முக்தனென்று சொல்லப்படுவான். (வரும்)

மு கே. நாராயணசாமி அய்யர், B. A., B. L.

## பூங்காவனம்.

(76-வது பக்கத்தின் தொடர்ச்சி).

ஒரு வருடஞ் சென்று விட்டது. பூங்காவனம் அருட் பிரகாசத்தை விவாகஞ் செய்துகொள்ளுவதற்கு உடன் பட்டுவிட்டாள். இப்பெரும் பேறு எப்போது கிட்டுமோவெனக் காத்திருந்த அவளுடைய தந்தையாரும் இவ்விஷயத்தைக் குமாரியாலறிந்து அதற்குப் பூரண சம்மதமுடையவராய் ஆனந்தக்கடலுள் மூழ்கினார். பனிக்காலம் நீங்கி இளவேனிற்காலம் தொடங்கிய மாதத்தில் ஒரு நாள் இவர்கள் இருவரும் மகாவலிகங்கையாற்றுக்குப் பக்கத்தேயுள்ள ஒரு பூஞ்சோலையை யடைந்து விநோதமாகப் பொழுது போக்கிக் கொண்டிருக்கின்றார்கள். பெரியோர்களை அடுத்தவர்களும் அந்தப் பெரியோர்களைப்போலவே உயிர்களுக்கு இன்பத்தைச் செய்பவரென்பது போல வருகின்ற தென்றற்காற்றானது குளிர்ச்சியும் மணமும் பொருந்த யாவரும் விரும்பும்படி மெல்லென வீசியது. குளம் பொய்கை ஓடை மஞ்சனவாவி முதலியவைகளின் நீர் சுருங்கிப் பலமலர் பூத்து நீர் வாழ் பறவைகளின் கூட்டங்கள் பல நெருங்கி ஒலி சிறந்தன.

நீரானது யோகிகளது உள்ளம் போல மிகத்தெளிந்து ஒருபக்கத்தே யருகி யொழுகியது. வெண்மணற் குன்றமும் பரந்த மணற்பரப்பும் மருநிழல்களோடு அழகு மிகுந்தன. இச்சாட்டிலுள்ளவர்களெல்லாரும் சோலைகளிற் சென்று நறுமணங்கமழும் தென்றற்காற்றையேற்றும் மகாவலிகங்கையாற்றிற் புனலாடியும் வெப்பத்தைப்போக்கும் பொருட்டுத் தங்கள் தங்களுக்கு வசதியாக வமைக்கப் பட்ட இடங்களில் வசிப்பாராயினர். பல இரத்தினாபரணங்களும், பூம்பட்டாடைகளும், சந்தனமும், பனிநீரும், உண்டிவகைகளும் பெண்கள் வேறு வேறாகத் தாங்கி இடங்கடோறுஞ் செல்லுகின்றார்கள். அன்புடையவர்களாகிய ஆடவர்களும் மகளிர்களும் மகாவலி கங்கையில் இறங்கி நீர் விளையாடலைச்செய்து கரையேறி வஸ்திரம் அணிந்து இனிய உணவுகளையுண்டு மகிழ்ந்து வேனில் வெப்பத்தைப் போக்குகின்றனர். அன்று பிற்பகல் இவர்களிருவரும் இருந்த இடத்திற்கு ஒருவன் வந்து அருட்பிரகாசத்திற்கு வந்தனஞ்செய்து ஐயா! மூன்றுநாளாக அன்னாகாரமில்லாமல் வருந்துகின்றேன். பசியினால் என்னுயிர் போய்விடும்போ லிருக்கின்றது. தேவரீர் கருணை செய்தல் வேண்டுமென்று வேண்டினான். அப்பொழுது அவன் இரக்கங் கொண்டு பக்கத்தேயிருந்த பூங்காவனத்தை நோக்கிக்கண்மணி! இரு; இதோ வந்து விட்டேனென்று அவனைச் சிறிது தூரம் அழைத்துச் சென்று ஒரு பக்ஷணக்கடையிற் போசனஞ் செய்யும்படி விடுத்து அவனுக்கு ஒரு ரூபாயுங் கொடுத்துத் திரும்பும் பொழுது அம்மனிதன் பசியா லிறக்கவிருந்த எனக்கு உயிர்ப்பிச்சை தந்த உத்தமனே! நான் தங்களுக்கு நன்றியறிதலான வந்தனம் செய்கின்றேன் என்று கூறிப் பக்ஷணக்கடைக்குட்சென்று போசனஞ்செய்துவிட்டு வெளியே வந்து தனக்காகக் காத்து நின்ற அருட்பிரகாசத்தைச் சந்தித்து இருவரும் குறித்த பூஞ்சோலையை யடைந்தார்கள். இதற்கு முன்பாகவே பூங்காவனம் தனது வீடு சென்றுவிட்டாள். இவர்களிருவரும் நெடுநாட் பழகிய சிநேகிதர் போல அன்புடன் சம்பாஷித்துக்கொண்டிருந்து அருட்பிரகாசம் கலாசாலைக்குச் செல்லும் வேளையாய் விட்டமையினால் மறுநாள் ஆறுதலாகச் சந்திக்கிறேனெனக் கூறிவிட்டு விடை பெற்றுச் சென்றுவிட்டான்.

மற்றைநாட் பிற்பகல் நம் கதாநாயகன் வழக்கம்போல ஆற்றங்கரைக்கு வந்து உலாவும்போது அவ்வழியே எதிர்முகமாக முதனாட் சந்தித்த மனிதன்வர இருவரும் க்ஷேமம் விசாரித்து அவ்விடத்தில் ஒரு மணற்பரப்பில் இருக்க, வந்தமனிதன் ஐயா! நான் என்னுடைய வரலாற்றைக் கூறுகின்றேன்; அக்கம் பக்கம் செவி கொடாது பக்குவமாகக் கேட்டருள்க என்று விளம்புகின்றான்.

ஐயா! தரித்திராதேவி நண்பனாகிய நான் வீரஞானபுரத்திற் பெருங் கீர்த்தியுடன் வசித்த ஞானாநந்த முதலியாரின் ஏக புத்திரன். எனது தாய் தந்தையார் என்னைப் பெறுவதற்கு எத்தனையோ விரதங்கள் தவங்கள் இரு



ந்தனராம்? அவற்றின் பெரும் பேறாக நான் பிறந்து எனக்கு ஆறுவயதாக இருக்கும் பொழுது வித்தியாரம்பம் செய்யப் பெற்று எனதூருக்குப் பக்கத்தூரிலுள்ள ஒரு கத்தோலிக்க ஆங்கில கலாசாலைக்கனுப்பப்பட்டேன். அங்கு என்னை அனுப்புவது தந்தையாருக்கு எள்ளளவும் விருப்பமில்லாமலிருந்தும் அக்காலில் அவ்விடங்களில் வேறு சைவ கலாசாலைகள் இல்லாமையினால் தாம் ஒரு சிவபூசா துரந்தராயிருந்தும் வேறு விதியின்றி யனுப்பினார். அந்தக் கத்தோலிக்க கலாசாலையில் விடுதி விட்டு, கலைபயிலும் மாணவர்களுக்கு வசதியாக மாமிச போஜனஞ் செய்பவர்களுக்கு வேறாகவும் தாவர போஜனஞ் செய்பவர்களுக்கு வேறாகவும் அடுத்த அடுத்த இரு அறைகளில் பாகசாலை அமைக்கப்பட்டிருந்தது. இந்த நியதிப்படி நான் சைவப் பாக சாலையிற் சேர்க்கப்பட்டேன். அதிற் பாகம் பண்ணும் பரிசாரகனாகிய சிவனடியானென்பவன் வைதீகமாக சாஸ்திரப் படி எள்ளளவேனும் தவறாமல் பாகம் பண்ணும் ஆற்றல் அமைந்தவன். மற்றைப் பாகசாலையில் சாமுவேல் என்னும் பெயரையுடைய கிறிஸ்தவனொருவன் நியமிக்கப்பட்டிருந்தான். ஒருநாள் குறித்த பாகசாலையில் ஆச்சரியமான ஒரு சம்பவம் நிகழ்ந்தது.

(இன்னும் வரும்)

மா சிவராமலிங்கம் பிள்ளை,
"ஆறுமுக நாவலர்" அச்சக சாலை,
யாழ்ப்பாணம்.

162413
00 008.

## எலிமெண்டரி பாடசாலைகளில் போதிக்கவேண்டிய பாடமுறை.

(Scheme of studies for Elementary Schools).

எலிமெண்டரி பாடசாலையென்பது B. A., M. A. முதலிய உயர் தரப்பரீக்ஷைகளுக்கு வாசிக்கச் சக்தி யற்றவர்களைத் தங்களுக்கும் தங்கள் குடும்பத்தாருக்கும், இராஜாங்கத்தாருக்கும் உபயோகமான வியவகாரத்திலும் அதற் கேற்ற கல்வியிலும் தயார்செய்யும் பிரதம வித்தியாப்பியாஸ பாடசாலைகளாம்.

இப்பிரதம வித்தியாப்பியாஸ பாடசாலைகளில் சிலவருஷங்களுக்கு முன் இச்சென்னை இராஜதானியின் எல்லா ஜில்லாக்களிலும் ஒரேவிதமான பாடங்கள் கற்பிக்கப்பட்டு வந்தன. இங்ஙனம் பல விடங்களிலுள்ள பல ஜாதிப்பிள்ளைகளுக்குப் பலவகைப்பட்ட திறமைகளுடைய உபாத்தியாயர்களால் ஒரே விதமான பாடங்கள் கற்பிக்கப்படுவது அவ்வளவு உபயோக

மா

m 211 Nos
Nos-8

மாகவில்லை யென்று இராஜாங்க வித்தியா விசாரணைத் தலைவர்கண்டு 1907-ஹு ஒரு புதிய போதனைமுறை பிரசுரித்தனர். அம்முறைப்படி ஒவ்வொரு பாடசாலையிலும் அதனதன் இடங்களுக்குத் தக்கபடியும் அதிலதில் கற்கும் மாணாக்கரின் ஜாதி தொழில் இஷ்டங்களுக்குத்தக்கபடியும் கற்பிக்கும் உபாத்தியாயரின் திறமைக்குத்தக்கபடியும் பாடப்பட்டியேற்படுத்திப் பரீக்ஷாதிகாரிகளின் (Inspecting officers) அங்கீகாரம் பெற்று அதன்படி போதிப்பது அவசியமாம்.

இந்தப் போதனைமுறை (Scheme of studies) வழக்கத்திற்கு வந்து சுமார் நாலைந்து வருஷ காலமாயும் அநேக பாடசாலைகளில் உபாத்தியாயர்களால் தங்களுக்கேற்ற பாடப்பட்டிகள் தயாரிக்கப்படவில்லை யென்று தெரியவருகிறது.

இவ்வாறு தயாரிக்கப் படாமைக்குக் காரணங்கள் பலவுள. ஆயினும், இதற்குப் பாடசாலைத்தலைமை உபாத்தியாயர்கள் உதவி உபாத்தியாயர்களுடைய சிரத்தையின்மையே முக்கிய காரணமெனக் கொள்ளலாம்.

சிரத்தை யின்மைக்கு அறியாமையே காரணமாயிருப்பதால், அவ்வறியாமையை நீக்கும்பொருட்டுக் கீழ்குறித்தபடி பாடப்பட்டிகள் எழுதப்பட்டுள்ளன. இவற்றில் எப்பாடசாலைகளுக்கு எவ்விஷயங்கள் தகுதியென்று தோன்றுகின்றனவோ அவ்விஷயங்களை அப்பாடசாலைகளில் போதிக்கலாம்.

## (Classification of Schools according to locality).

### இடத்திற்குத் தக்கபடி பாடசாலைகளின் வேறுபாடு.

1. நகரப்பாடசாலைகள்.
2. கிராமப் பாடசாலைகள்.

சென்னை, மதுரை, கும்பகோணம் முதலிய பட்டணங்களிலுள்ள பாடசாலைகளைப் பற்றிக் கவனிக்கையில், அப்பட்டணங்களில் உயர்தரப் பரீக்ஷைகளுக்குப் படிக்காமல் எலிமெண்டரி பாடசாலைகளில் கற்போரின் போஷகர்கள் பொதுவாக வியாபாரிகளாகவேனும், கைத்தொழில் செய்பவர்களாக வேனும், தாழ்ந்த உத்தியோகங்களாகிய குமஸ்தா, சேவகர் முதலியவற்றைப்பெறுபவர்களாக வேனும், அல்லது ஐரோப்பியர் வீடுகளில் சமையல் வேலைசெய்பவர்களாக வேனும் இருப்பார்கள். இதற்கிணங்க நகரப்பாடசாலைகளில் பாடப்பட்டியேற்படுத்துவது நலம்.

கிராமப் பாடசாலைகளைப்பற்றிக் கவனிக்குங்கால், அவற்றில் கற்பவரின் போஷகர்கள் சாதாரணமாக வியவசாயிகளாகவேனும், வியாபாரிகளாகவேனும், கைத்தொழில் செய்பவர்களாகவேனும் இருப்பார்கள். இதற்கிணங்க இப்பாடசாலைகளில் பாடப்பட்டியேற்படுத்துவது நலம்.



இடபேதத்தினாலும் கற்போரின் ஜாதி கைத்தொழில் முதலியவற்றின் வேறுபாட்டினாலும் சிலபாடங்களே பேதப்படுவதல்லது எல்லாப் பாட சாலைகளுக்கும் பொதுவாய் எழுதுதல் படித்தல் கணக்கு முதலிய பாடங்கள் பேதப்படுவதில்லை; ஆனால் இடத்திற்கும் கற்போரின்தொழில் உபாத்தியாயரின் திறமைமுதலியவைகளுக்கும்இணங்கக் கற்பிக்கும் மற்றப்பாடங்களுக்கும் மேற்கூறிய எழுத்து படிப்பு கணக்குமுதலியபாடங்களுக்கும் பரஸ்பர சம்பந்த முண்டாக்கும் முறை பேதிக்கும். ஆகவே, மேற்கூறியவற்றையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டு பாடப்பட்டிகளை ஏற்படுத்துவது நலம். கவர்ன்மெண்டு வித்தியா விசாரணைத் தலைவர் ஏற்படுத்திய பாடமுறையில் (Scheme of studies) (1) சுயபாஷை (2) கணக்கு (3) பொது அறிவ (4) சித்திரம் (5) பட்டு (6) சரீர அப்பியாசம் என்னும் ஆறு பாடங்கள் கட்டாயமாய் ஒவ்வொரு பாடசாலையிலும் கற்பிக்கப்பட வேண்டுமென்றுகாட்டியிருக்கிறார். மேற்கூறிய பாடங்களில் எந்தெந்த விஷயங்கள் கற்பிக்கப்பட வேண்டுமென்பதை அவ்வப்பாடசாலை உபாத்தியாயர்களே கவனிக்கவேண்டும். இவையன்றிப் பூகோளம், சரித்திரம், இராஜாங்கமுறைமை, இயற்கைப்பாடங்கள் இதர இரண்டாவது பாஷை முதலியவைகளில் ஒன்று அல்லது பலவற்றை இஷ்டானுசாரமாய்ப்போதிக்கலாம். நாம் இப்போது ஒரு நகரப்பாடசாலையில் எல்லாப்பாடங்களும் (கட்டாயமாகவும் இஷ்டமாகவும்) போதிக்கவேண்டியனவாக வைத்துக்கொண்டு ஒரு பட்டியேற்படுத்துவோம்.

## 1 சுயபாஷை.

### முதல் வருஷப்பிள்ளைகள் (பாலர் வகுப்பு)

(a) சம்பாஷணை: பாலர்வகுப்பிற் குரிய பாடபுத்தகத்திலுள்ள ஒவ்வொரு படத்தைப்பற்றியும் நேரில் காட்டிய இதரவஸ்துக்கள், ஜந்துக்கள் முதலியவற்றைப் பற்றியும் (அவற்றின் நிறம் அவயவங்கள் ஆகாரம், சாமானிய குணங்கள் முதலியவற்றில்) சம்பாஷிக்கப் பழக்குவித்தல்.

குறிப்பு: இப்பாடத்தின் முக்கியநோக்கம் பிள்ளைகள் உபாத்தியாயருடன் தாராளமாய்ப்பேசப்பழகுதலே. ஒருவருஷத்திற்கு என்னென்னபாடங்கள் சம்பாஷிக்கப் படவேண்டுமோ அவற்றின் பட்டி ஒன்று தயார் செய்து வைப்பது அவசியம். (உதாரணம்) ஒருமாதத்திற்கு அணில், ஆமை, இலை, ஈ, உளி, உரல், ஊசி, எலி, ஏணி, ஏர் முதலியவை.

(b) வாசிப்பு: உயிரெழுத்து மெய்யெழுத்துக்களைக் கூட்டி யுச்சரிக்கவும், சிறுபதங்களை வாசிக்கவும், சிறு வாக்கியங்களைப் படிக்கவும் பழக்குவித்தல்,

(c) எழுத்து: எழுத்துக்கள் வார்த்தைகள் முதலியவற்றை மணலிலாவது கற்பலகையிலாவது அல்லது கறுப்புப்பலகையிலாவது பெரிதாய் எழுதப்பழக்குவித்தல்; சிறுவாக்கியங்கள் அல்லது பதங்களைப் பாராமல் எழுதப்பழக்குவித்தல்.

(d) வியாசம்; சம்பாஷணையின் விஷயங்களை வாய்மொழியாய்ச் சொல்லப் பழக்குதல்; சொல்லிக்கொடுத்த கதைகளில் கேள்விக்குப் பதில் சொல்லப் பழக்குவித்தல்; ஒரு படத்தைப் பிள்ளைகளுக்குக்காட்டி அதிலுள்ள விஷயங்களைச் சொல்லச்செய்தல்.

N. சுப்பிரமணிய அய்யர்,
கிண்டர் கார்டன் இன்ஸ்பெக்டர், சென்னை.

## பிராணி சாஸ்திரம்.

(31-வது பக்கத்தின் தொடர்ச்சி).

அசைபோடுவன:—

(c) ஆட்டினம்.

இவ்வினத்தில் செம்மறியாடு வெள்ளாடு குறும்பாடு முதலியவை அடங்கும். சாதாரணமாய் எல்லாத் தேசங்களிலும் ஆடுகள் வசிக்கும். ஆனால் உஷ்ண தேசத்திலிருப்பனவற்றிற்கும் சீதள தேசத்திலிருப்பனவற்றிற்கும் சிறிது பேதமுண்டு. உஷ்ணதேசத்திலிருப்பனவற்றிற்கு நீண்ட ரோமம் கிடையாது; ஆனால் சீதளதேசத்திலிருப்பனவற்றிற்கு அவை வயல் வெளிகளிலும் மலைப்பிரதேசங்களிலும் மேய்வனவாகையால் அவற்றின் தோல் தடிப்பாயும் நீண்ட ரோமத்தால் மூடப்பட்டு மிருக்கும். வெள்ளாடும் செம்மறியாடும் பரிமாணத்தில் ஏறக்குறையச் சமமாகவிருக்கும். இவ்விரண்டு ஜாதிகளின் குளம்புகளும் செங்குத்தான மலைகளின் மேல் ஏறத்தகுந்த விதமாக அமைக்கப்பட்டிருக்கின்றன.

வெள்ளாட்டினம் யாவற்றிற்கும் கொம்புகளுண்டு; செம்மறியாட்டிற்கோ சிலவற்றிற்குத்தான் கொம்புகள் இருக்கும். வெள்ளாட்டின் கொம்புகள் நேராயும் செம்மறியாட்டின் கொம்புகள் முறுக்காயு மிருக்கும். வெள்ளாடு புல், பூண்டு, தழைகளைமேயும்; செம்மறியாடு புல்மாத்திரம் மேயும்.

இவற்றிற்கு வெட்டும் பற்களும் மேல்வாயில் கடிக்கும் பற்களும் கிடைவாய் கடைவாய்ப் பற்களும் கீழ்வாயில் கடிக்கும் பற்களும் உண்டு. இவ்வாறு இவற்றின் பற்கள் அமைக்கப்பட்டிருப்பதாற்றான் இவை புல் பூண்டுகளை மாத்திரம் மேய்ந்து ஜீவிக்கின்றன. வெட்டும்பற்களும் கடிக்கும் பற்களு மிருந்தால் மாமிசபட்சிணிகளாயிருக்கும்.



சுபாவகுணங்கள்:—(1) தங்களைத் தாங்களே காப்பாற்றிக்கொள்ளச் சக்தியற்றவையாகையால், இவை தனித்தனியா யிராமல் கூட்டங் கூட்டமாய் இருக்கப் பிரியப்படும்.

(2) மனிதரால் பழக்கப்படாத காட்டாடுகள் மந்தைகளாக மேயும் போது எல்லாம் ஒரே முகமாய் நின்று மேயும். இவை எந்த முகமாய்க் காற்று வீசுகின்றதோ அந்த முகமாய்த்தான் மேயும்; காற்றிற்கு எதிர்முகமாய் நிற்கா. ஏனெனின், இவற்றின் சத்துருக்களாகிய ஓநாய், நரி, சிறுத்தை, புலி, குடத்தை முதலிய மாமிசபக்ஷணிகள் பதுங்கி வேட்டையாடினாலும் அவற்றின் காலடிகளின் மெதுவான சப்தத்தையும் தமக்குப்பின்பக்கமாயிருந்து வரும் காற்றின்மூலமாய்க் கேட்கும். இதற்காகவே இவற்றின் காதுக்கள் பின்பக்கமாய் வைக்கப்பட்டிருக்கின்றன. முன்பக்கமாய் வரும் சத்துருக்களைக் கண்களால் பார்த்துத் தப்பித்துக்கொள்ளும். இதற்கு மாறாக வடக்கேயிருந்து தெற்கே வாடைக்காற்று வீசுகிறபோது இவை காற்றிற்கு எதிர் திசையான வடக்கே பார்த்து மேயுமானால் தெற்கேயிருந்து இவற்றிற்குப் பின்னால் வரும் இவற்றின் சத்துருக்களின் காலடிகளை யாவது மற்றும் எந்த அடையாளங்களை யாவது கேட்கவாவது அறியவாவது கூடாது. எதிரில் வடக்கிலிருந்து தெற்கே வருவனவற்றைப் பார்க்கத் தங்கள் கண்கள் உதவுகின்றன; காதுகளால் உபயோகமே யில்லை. ஆதலாற்றான், இவற்றின் தற்காப்பு அவயவங்களான கண்களையும் காதுகளையும் சமமாய் உபயோகப்படுத்த இவை காற்றடிக்கும் திசையை நோக்கியே மேயும்.

(3) ஒவ்வொரு மந்தைக்கும் ஒவ்வொரு அதிகாரியை ஏற்படுத்திக்கொண்டு அதன் கட்டளைப்படி மற்றவை நடக்கும். இந்த அதிகாரம்பெற்றது அதிக அநுபவமுடையதாயும் கிழமாயுமிருக்கும். இஃது எப்போதும் மந்தைக்கு முன் நடக்கும். இஃது எந்த விதமாக நடக்கிறதோ குதிக்கிறதோ மற்றும் என்ன செய்கிறதோ அதேவிதமாய்ப் பின்னால் வரும் ஆடுகளும் அதேயிடத்தில் செய்யும்.

(4) மிக்கசாதுவானவை (5) மலைகளின் மேலும் செங்குத்தான பாறைகளின் மேலும் நிர்ப்பயமாய்த் தாண்டும்.

வகைகள்:—வெள்ளாட்டின் பிரிவுகள்.

(1) பள்ள ஆடு (2) காஸ்மீரத்து ஆடு (3) நாட்டு ஆடு. பள்ள ஆடு அதிக பால் கறக்கும். காஸ்மீரத்து ஆட்டின் மயிரால் கம்பளங்கள் நெய்யப்படுகின்றன.

குறும்பாடு மைசூர் பல்லாரி, கோயம்புத்தூர், நீலகிரிமுதலிய ஜில்லாக்களில் வசிக்கும். இதன் மயிராலும் கம்பளங்கள் செய்யப்படுகின்றன. காஸ்மீரத்து ஆட்டின் மயிர் நாணயமாயும் மிருதுவாயுமிருக்கும். குறும்பாட்டின் மயிர் சுறசுறப்பாயிருக்கும்.

உபயோகம்:-இவற்றின் பால் தயிர் நெய் முதலியவை ஆகாரமாகின்றன. இவற்றின் சாணம் நிலத்திற்கு நல்ல உரமாகின்றது. ஆட்டுப்பால் சீக்கிரத்தில் ஜீரணமாவதால் ரோகிகளுக்கும் குழந்தைகளுக்கும் ஆகாரமாகக் கொடுக்க மிகஉபயோகமாம்.

(d) எருமையினம்:—

எருமைகள் தங்கள் பருமைக்கும் ஆகார (உருவ)த் திற்கும் தகுந்த உயரமில்லாமல் குட்டையாயிருக்கின்றன;இவற்றின் கொம்புகள் நீளமானவை; இக்கொம்புகள் திரண்டிராமல் தட்டையாய் இருக்கின்றன. எருமைகளுக்கு முதுகின்மேரில் மாடுகளுக்கிருப்பது போல முசுப்புக்கிடையாது. இவற்றின் சரீரம் பருத்திருப்பதால் அதைத் தாங்குவதற்குப் பருத்துக் குறுகிய கால்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.சாதாரணமாய்இவை கறுப்பு நிறமுடையவை. இவை அசைபோடுவன வற்றிற் சேர்ந்தவை யாகையால் இவற்றின்பற்களும் வயிறு (Stomach)ம் முற்கூறிய அசைபோடுஞ் செந்துக்களுக்கிருப்பது போலவே அமைக்கப்பட்டிருக்கின்றன.

சுபாவகுணங்கள்:—மிகமந்தமானவை; இவை நடக்கும்போது தலையைநிமிர்த்திக்கொண்டு மோப்பத்தினால் செல்லும்; சாதுவானவை;கோபமூட்டப்பட்டால் அதிகமூர்க்கத்தன முள்ளவை; அதிகபாரமான சுமைசுமக்கும். இவற்றிற்குஜலமும் சேறும் நிரம்பிய குட்டைகளைக்கண்டால் அதிகப்பிரியமாம்.ஏனெனின்,இவற்றின் சரீரம் கறுப்பாயிருப்பதால் உஷ்ணத்தைத் தாங்காது. கறுப்புநிறமானது உஷ்ணத்தைச்சீக்கிரம் கிரகிக்கும் தன்மையுடையது. வெள்ளைக்குடையும் கறுப்புக்குடையும் வெயிலிற்கொண்டுபோகப்பட்டால் வெள்ளைக்குடையானது உஷ்ணத்தை நாலாபக்கங்களிலும் சிதறச்செய்து சீக்கிரத்தில் சூடாக்கப்படாது; ஆனால் கறுப்புக்குடையோ உஷ்ணத்தை அதிசீக்கிரத்தில் கிரகித்து உஷ்ணிக்கப்படுகிறது. இதுபோல் இவற்றின் சரீரமும் கறுப்பாயிருப்பதால் உஷ்ணத்தைத் தாங்காமல் வெயில்நேரத்தில் இவை ஜலத்திலும் சேற்றிலும் அமிழ்ந்துகிடக்கும். இவை நன்றாய் நீந்தும். காடுகளில் கூட்டமாக வசிக்கும். காட்டெருமைகள் அதிக மூர்க்க குணமுள்ளன. இவற்றிற்குச் சிவந்தகண்களும் மயிரையுடைய பருத்த புஜமும் சிறுத்ததலையும் குட்டையான கொம்புகளுமுண்டு. இவை அமெரிக்கா ஐரோப்பா காக்கேசியமலைநாடுகள் முதலிய தேசங்களிலுள்ள சதுப்பு நிலக்காடுகளில் வசிக்கும்.காட்டெருமை(Bison)க்கூட்டங்களைக் கண்டால் புலியும் பயந்து ஓடிப்போம். இவை புல்பூண்டுகளை மேயும். தங்கள் சத்துருக்களிடத்திலிருந்து தங்களைக்காப்பாற்றிக்கொள்ளுவதில் தங்கள் கொம்புகளை உபயோகப்படுத்திக்கொள்ளுகின்றன.

உபயோகம்:-ஆண் எருமைகள் (கடாக்கள்) ஏர் உழவும் வண்டி இழுக்கவும் பொதிசுமக்கவும் உதவுகின்றன. எருமைகள் பால் தருகின்றன. எருமைப்பாலில் நெய் அதிகம்.

(வரும்)

N. சுப்பிரமணிய அய்யர்.

# சூடாலை.

## இரண்டாவதங்கம்.

## முதற்காட்சி.

இடம்:—அரசனது அந்தப்புரம்.

**பாத்திரங்கள்—சூடாலை, பத்மாவதி, விகடகவி, சிகித்துவசன், கனகசுந்தரன், திருவண்ணாமலைச் சோதிடர்.**

**காலம்=பிற்பகல்—மாலை.**

சூடாலை:—(தனித்திருந்து) நாம் எவ்வளவுகாலம் இவ்வரசபோகத்தை யனுபவித்தாலும், இதனால் நிரம்பிய திருப்திவரக்காணோம். மகாராஜாவோ நம்முடைய கருத்திற்கு முற்றும் ஒத்துவாராது உலகபோகத்தையே பெரிதாக வெண்ணி, மேலும் மேலும் அப்போகத்திற்குரிய பொருள்களைச் சேர்க்கவிரும்புகின்றார். சிவசொரூபமாந் தேசிகமூர்த்தியாகிய சிவப்பிரகாசசுவாமிகள் திருவாய்மலர்ந்தருள்வது அவர்விஷயத்திற் சுவரெறிபந்துபோலாகின்றது. நேற்றையதினம் சம்பாஷித்த தத்துவார்த்தங்களை யின்று மறந்து விட்டனர். செல்வர்க்குத் தத்துவஞானமுண்டாவது ஊசியின்காதில் ஒட்டகம் நுழைவது போலாமென்பதற்கு நம்மரசரே இலக்கியமாகவிருக்கின்றார். நிலவுலகமுழுவதையு மொருகுடை நிழலின்கீழாளும் நம்மரசருக்கு வேதாந்தஞான மெப்போது வாய்க்குமோ? நாம் சொல்வதை அவர் நம்மீதுள்ளவாசையால் கேட்கின்றாரென்றே கொள்ளல்வேண்டும்; அவ்வாறன்றாயின்,இன்றவர் போக வேதுவான விஷயங்களை நம்முடன் பெருக்கிப்பெருக்கிப்பேசுவதற் கிடமுமுண்டாமோ? சற்றுத்தனித்துட்கார்ந்து சாதனஞ் செய்வதென்பதவர்க்குத் தலைப்பாரமாகின்றதே!நம்மரசர் தத்துவஞானியானால் நமதுகுலம்விண்ணிடைவிளங்கும் நிறையுவா (பூரணசந்திரன்) போலவிளங்குமன்றோ! (வெளிப்படையாகப்) பத்மாவதி! இங்கேவா.

பத்மாவதி:—ராஜராஜேஸ்வரி! வந்துவிட்டேன். அடியாள் செய்யத்தக்ககாரியம் யாது? கட்டளையிடவேண்டும்.

சூடா.—பத்மாவதி! நமது சக்ரவர்த்தி யவர்கள் இனிப்பிறவாநிலையை யிங்கிருந்தே யெய்துதற்குரியவராவரென்று நீ நினைக்கின்றாயா?

பத்:—உலகம்போற்றுங் கற்பிற்கரசியே! அதுபற்றிக் கூறுவதற்கு யான் அதிகாரியன்றாயினும், மகாராணி கட்டளையிட்டமையால் கூறுகின்றேன்; துறவறம் பூண்டாலன்றி அவர் தத்துவஞானியாகாரென்று நினைக்கின்றேன். பிழையிருந்தால் மன்னித்தருளல் வேண்டும்.

சூடா;—ஆ! அப்படியா? அவர் இல்லறத்திலிருந்தே தத்துவஞானியாதல் கூடாதோ?

பத்:—அவரிடத்து வைராக்கியம் சொல்லளவாக விருத்தலால், அவரிங்கிருந் தெவ்வாறு தத்துவஞானியாதல் கூடும்? உலகபோகத்தை வாந்தியெடுத்த அன்னம்போலவும் காக்கையின்மலம்போலவும் கண்டாலன்றோ வைராக்கியம் பிறக்கும்? வைராக்கியமில்லாதவர்க்குத் தத்துவஞானம் எளிதில் வருவதில்லையென்று தாங்களெத்தனையோ முறைகூறியிருக்கின்றீர்கள். வைராக்கியம் வந்தாலன்றோ அதுவாயிலாக அவர் தத்துவஞானியாவர். ஒருபொருளினுஞ்சிறிதேனும் பற்றுவிடாதிருக்கும் நம்மகாராஜா தங்களுடைய பிரீதிக்காக ஆநந்தாசிரமஞ் சென்று சிவப்பிரகாச சுவாமிகளிடத்து வேதாந்தங் கேட்கிறாரென்று நினைக்கின்றேன்; நேற்றையதினம் இங்கிருந்தவர் நிராசையைப்பற்றி விசாரஞ்செய்தது தங்களது வார்த்தையை மறுக்க முடியாமையாலென்றும் நினைக்கின்றேன்.

சூடா:—பத்மாவதி! குறிப்பறிந்துரைப்பதில் நீவெகு கெட்டிக்காரி; தொல்காப்பியத்திலுள்ள மெய்ப்பாட்டியலை நச்சினார்க்கினியருரையோடு நீ நன்றாகக் கற்றவளல்லவா? யானெண்ணியபடியே நியெண்ணி யுரைத்தாய்.

விகடகவி.—நானுமப்படித்தான் நினைக்கின்றேன்.

சூடா:—(பத்மாவதியைப்பார்த்து) விகடகவி யிங்குவந்ததெப்படி?

பத்:—(பயந்து) நான் விகடகவிவந்ததறியேன்; இங்கிவரிப்போது வருவதற்கொரு காரணமுமில்லை; அவர் அரண்மனை முழுவதும் தடையின்றிவருவதற்குச்சுதந்தரமுடையவராதலால், அதுபற்றி, இங்குவந்திருக்கின்றனரென்று நினைக்கின்றனன்.

விக:—(பத்மாவதியைப்பார்த்து) நான்வரக்கூடாதோ? தூண்பக்கத்திருப்பவர்யார்? அவருனக்குத் தெரியுமா?



பத்:—(நடுக்கத்துடன்) அம்மணி! மகாராஜா விஜயஞ்செய்திருக்கின்றார்.

சூடா:—எங்கே?

விக:—அமெரிக்காவிற் கல்ல; ஆப்பிரிக்காவிற் கல்ல; அவர் விஜயஞ் செய்தது; தூணின்பக்கத்தேதான்.

சிகித்துவஜன்:—ஆ! ஆ!! என்ன ஆச்சரியம்! சூடாலையும் பத்மாவதியும் எவ்வளவு புத்திசாலிகளாக விருக்கின்றனர்? நம்முடைய விஷயத்திலவர்கள் பெரிதுங்கவலைகொண்டிருக்கின்றனர். நாம் தத்துவஞானியாக வேண்டுமென்றவர்கள் பேசிக்கொள்ளுவது நாமுயர்நிலையை யடைதற்பொருட்டன்றோ? சூடாலையாற்றான் நாம் உயர்நிலையையடையவேண்டும். (வெளிப்படையாய்) சூடாலை! நானும் வந்திருக்கின்றேன்.

விக:—(அவனை நோக்கி) ஏனங்கிருக்கின்றீர்? இங்கேவரலாமே!

(ராஜா அருகேவந்து விட்டார்; சூடாலை யெழுந்து நின்றாள்; பத்மாவதி யொருபுறத் தொதுங்கினின்றாள்).

சிகித்துவசன்:—என் கருமணியிற்பாவாய்! நீயும் பத்மாவதியும் பேசியவற்றைச் சிறிதும் விடாது நமது விகடகவியோடு பொறுமையாயிருந்து கேட்டேன். நீவிரிருவரும் இப்போது பேசியவற்றுள் ஒன்றுந் தவறுடையதன்று. இனியான் தத்துவஞானியாதற்பொருட்டு வைராக்கியத்தைச் சம்பாதிக்க முயலுகின்றேன்.

சூடா:—எங்கிருந்து வைராக்கியத்தைப் பெறமுயலப் போகின்றீர்,

விக:—எங்கிருந்து? காட்டிலிருந்துதான். நாட்டிலிருந்து வைராக்கியத்தைச் சம்பாதித்தல் முடியுமோ? நானும் காட்டிற்குப் போய்த்தான் வைராக்கியத்தை வாங்க நினைத்திருக்கின்றேன்; விலைதான் தெரியவில்லை.

சூடா:—(பத்மாவதியை நோக்கி) "ஓயாது மழைபெய்தாலும் ஓட்டாங்குச்சுக் கரையாது" என்னும் பழமொழிக்கு நமது விகடகவி தக்க விலக்கியமன்றோ?

பத்:—(மெதுவாக) அதற்குத் தடையுண்டோ?

விக:—பத்மாவதி! நீயுங் கூடஞானியாய்விட்டாய். இப்படியானாலினிராஜ்யபாரம் நடப்பதெப்படி; மகாராணியாரோ மகா

ராஜாவைத்தத்துவஞானியாக்க முயற்சிசெய்கின்றார்; நீயோ அதற்குற்றதுணை யாகவிருந்து பேசுகின்றாய். மகாராஜாவோ இதற்கிணங்கியவர் போலக் காணப்படுகின்றார். மகாராஜா தத்துவஞானியாக வைராக்கியத்தைப்பெற முயன்றால் ராஜ்யபாரம் கிரமமாக நடைபெறுவதாமோ?

பத்:—(விகடகவியை நோக்கி)விகடம்பேசிச்சகடம்(சக்கரம்) போன்று சுழன்று வருதலை யொழிக்கவேண்டுமென்று நேற்றையதினம் பலவாறாகக் கூறியதை மறந்து போனீரோ?

விக:—ஆம்; ஆம். தாங்கள் கூறியது தக்கதுதானென்று துணிந்து சென்றயான் நேற்றிரவு என்மனைவி சந்திரமுகியிடத்தில் யான் சந்நியாசியாகப்போகவேண்டுமென்பதுபற்றிப்பேசினேன்; அவள் அதற்குத்தரவு தரமாட்டேனென்றாள். அதனால் தாங்கள் கூறியதை யப்போதே மறந்துவிட்டேன்.

சூடா:—பத்மாவதி! விகடகவியின் விகடம் எப்படியிருக்கின்றது? பார்த்தாயா?

பத்:—(மிகவும் மெதுவாக) நமது விகடகவி சாதல்பிறப்பெனுஞ் சங்கடந்திர விகடத்தைவிட்டுக் குணமடைவதொருபோதுமில்லை. அவரோடு பேசாதிருப்பது நலமென நினைக்கின்றேன்.

சூடா:—நீ கூறுவதுண்மையே!

விக:—பத்மாவதி; நான்நோயா யிருந்தேனோ? நான் நோயாயிருந்தாலன்றோ குணமடைய வேண்டும்? மலையோரத்தில் விளைந்த வள்ளிக்கிழங்குபோன்றிருக்கும் என்னை நீ நோயாளியாக நினைப்பது மிகவுந்தவறாம். இதையென்மனைவி சந்திர முகி கேட்டாலுன்னை யிலேசாக விடமாட்டாள். பத்திரம்! பத்திரம்!! இனி யிவ்வாறு சொல்லாதே?

(பத்மாவதி விகடகவிக் கெதிரே நிற்றல் தகுதியுடைய தன்றென்று தூணின்பக்கத்தில் மறைந்து நின்றாள்.)

சூடா:—மதிமதன மகாராஜாவே! நமது விகடகவியின் வார்த்தையெவ்வாறிருக்கின்றது பாருங்கள். பிறவி யென்னும் நோயினும் பெரியநோ யாதிருக்கின்றது? அந்நோயைத்தீர்க்கத் தத்துவஞானமென்னும் மருந்தைத் தேடுவதன்றோ அறிவுடைமை!

# எலிமெண்டரி பாடசாலைகளும் கைத்தொழில்களும்.

## Manual occupations in Elementary Schools.

எலிமெண்டரி பாடசாலைகளில் கற்கும் மாணாக்கர்களின் பிற்காலப்பிரயோஜனத்தை யுத்தேசித்தே அவற்றில் பல பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன வென்பது யாவருக்கும் தெரிந்த விஷயமே. கிண்டர் கார்ட்டன் அல்லது பாலபோதனா முறையின்ஸ்தாபகரும் ஆசிரியருமாகிய ப்ரோபெல் (Froebel) என்னும் மகா புருஷரும் சிறுவர்களின்பிற்காலத்தின் உபயோகத்தை யுத்தேசித்தே பல கொடைகளை (Gifts) யேற்படுத்தி யிருக்கிறார். அவற்றில் முக்கியமானவை சித்திரம் வரைதல், குத்தித்தைத்தல், (Embroidery) பாய் முடைதல், பட்டாணி, நெல், பால்மணி முதலியவற்றால் பலநேர்த்தியான சாமான்கள் செய்தல், பல வர்ண காகிதங்களால் புஷ்பங்கள் கத்தரித்தல், களிமண்ணால் பற்பலகாய்கள் ஜெந்துக்கள் பொம்மைகள் செய்தல் முதலியனவாம். இத்தொழில்களெல்லாம் போதனையில் முறைகளாக விருப்பதோடு பிள்ளைகளின் பிற்காலத்தில் உபயோகமாகும்படியும் இருக்கின்றன. இவ்வேலைகள் எப்படி பிற்காலத்தில் உபயோகப்படுகின்றன வென்பதனையும், எப்படி பிரதம வித்தியாப்பியாஸத்தில் போதனாமுறைகளாக உபயோகப்படுகின்றன வென்பதையும் ஆராய்வாம்.

### 1. சித்திரம்.

சித்திரமென்பது ஒருவன் கண்ணால் பார்த்த அல்லது மனத்தால் நினைத்த வஸ்துக்கள் அல்லது ஜெந்துக்கள் முதலியவற்றின் உருவங்களை (வடிவங்களை)க் கையால் பலகோடுகளால் எழுதுவதே. சித்திரத்தின் மூலமாய் வஸ்துக்களின் உருவம் மாத்திரமேயன்றி அதன் நிறம், இருப்பிடம் சுற்றுப் பக்கங்களிலுள்ள வஸ்துக்கள், அவ்விடத்திலுள்ள வெளிச்சம் அல்லது இருள், வெளிச்சம் வரும் பக்கம், பிராணிகளாயிருந்தால் அவை அப்போது செய்துகொண்டிருக்கும் தொழில் முதலிய பற்பல விஷயங்களும் தெரிவிக்கக் கூடும். முற்காலத்தில் ஒரு தேசத்துப் பாஷை மற்றொரு தேசத்தாருக்குத் தெரியாதபோது தங்கள் தங்கள் எண்ணங்களைச் சித்திரங்களின் மூலமாகத்தெரிவித்திருந்தாரென்று தெரிகின்றது. ஆகவே இவ்வுலகத்திற்கே இது ஒரு பொதுப் பாஷை (Universal language) யெனச் சொல்லலாம். கண்ணும் கையும்ஒத்து வேலை செய்யும்படி அவற்றைப் பழக்குவதற்குத் தகுந்த பாடம் சித்திரமேயாம். பென்சிலால் காகிதத்தில் எழுதுவதும் சித்திரமே; உளியினால் மரக்கட்டையில் செதுக்குவதும் சித்திரமே; உளியினால் கற்களில் துளைப்பதும் சித்திரமே; சிற்றுளிகளால் வெள்ளி அல்லது செப்புத்தகடுகளில் செதுக்குவதும் சித்திரமே; கொல்லத்துக்காரன் வீடு கட்டுவதும் சித்திரமே; குயவன் மண்ணால் பிரதி

மைகள் செய்வதும் சித்திரமே; தையற்காரன் சட்டைத் தைப்பதும் சித்திரமே. ஆகையால் எல்லாத் தொழிலாளிகளுக்கும் சித்திரங்கற்றுக் கொள்வது எவ்வளவு ஆவசியக மென்பது சொல்லாமலே விளங்கும்.

போதனாமுறையாக உபயோகப்படும் விதம்.

எல்லாப் பாடங்களும் உத்தம பக்ஷமான பிரத்தியக்ஷப் பிரமாணத்துடன் கற்பிக்க உபயோகப் படுகின்றன.

எங்ஙனமெனின், பிரத்தியக்ஷமாய் இல்லாத பொருள்களின் அல்லது ஜெந்துக்களின் உருவம் முதலியவற்றைச் சித்திரத்தினால் உதாகரித்துப் பிரத்தியக்ஷமாய்ப் பிள்ளைகள் பார்க்கும்படி செய்தலாம்.

(2) பிள்ளைகளுக்கு உற்றுப்பார்க்கும் சக்தியை விர்த்தி செய்வது.

(3) கண் பார்த்தபடி கை எழுதுவதால் உண்மை (accuracy) திருத்தம் விர்த்தியாகும்.

(1) மணிக்கட்டை மாத்திரம் அசைத்து எழுதுவது (Free hand drawing)

(2) புஜம், முழங்கை, மணிக்கட்டு முதலியவற்றையெல்லாம் அசைத்து எழுதுதல் (Free arm Drawing)

வகைகள்.

பாடங்களுக்குத் தகுந்தவிதமான வகைகள்.

(1) வஸ்துக்களைப் பார்த்து எழுதுதல் (Object drawing)

(2) ஞாபகத்தினால் எழுதுவது (Memory drawing)

(3) எழுதிய சித்திரத்தைப் பார்த்து எழுதுவது (Drawing from flat examples)

(4) வாக்கியங்கள் அல்லது கதைகளை உதாகரித்து எழுதுவது Illustrative drawing).

உபகரணங்களுக்குத் தகுந்தவிதமான வகைகள்.

(1) கரி டிராயிங்கு (Charcoal drawing).
(2) பிரஷ் டிராயிங்கு (Brush drawing).
(3) சாக் டிராயிங்கு (Chalk drawing)

Free hand Drawing from flat.

மணிக்கட்டுச் சித்திரம்.

பாலர் வகுப்பு.

அனுபந்தத்தில் காட்டியுள்ள சித்திரங்களைக் கற்பிக்கவேண்டும்.

(வரும்).

N. சுப்பிரமணிய அய்யர்.

## நீதிசதகம்.

(71-வது பக்கத்தின் தொடர்ச்சி).

(அ) (ராஜநீதி எப்படிப்பட்டதெனின், அஃது அநேகவிதம் என்று கூறுகின்றார்).

38. ஒருசமயம் ஸத்யவாதியாகவும், †அநிருதவாதியாகவும், கடோவாதியாகவும், பிரியவாதியாகவும், ஹிம்ஸை பண்ணுவதில் ஸ்வபாவமுள்ளவளாகவும், தயாளுவாகவும் தனத்தில் ஆசையுள்ளவளாகவும், கொடுப்பதுள்ளவளாகவும், தனத்தைச் செலவழித்துக்கொண்டும் அதிக தனப்பிராப்தியையுடையவளுமான வாரஸ்திரீபோல ராஜநீதியானது அநேகரூபமாக இருக்கிறது.

(அ) (இந்தச் சுலோகத்தாலும் ராஜனுக்குப் போதிக்கிறார்).

39. ஓ! அரசனே! துஷ்டர்களைச் சிட்சிக்கவேண்டியதற்காக ஆக்ஞையும், யசஸ்ஸும், பிராம்மணர்களைப் பரிபாலிப்பதும், ஸத்பாத்திரத்தில் தானமும், சந்தனமுதலியவற்றாலுண்டான சுகானுபவமும், மித்திர ஸம்ரக்ஷணமுமாகிய இந்தக் குணங்கள் எந்த ராஜாக்களுக்கு உண்டாகவில்லையோ அவர்களைப்போய் அடைவதால் என்னபிரயோஜனம்?

(அ) (லாபாலாபங்கள் தெய்வாதீனமாயிருப்பதால் அவ்விஷயத்தில் சிரமம் வேண்டாமென்று கூறுகிறார்).

(40) பிரஹ்மாவினால் இவனுக்கு அற்ப ஐஸ்வரியம் அல்லது அதிக ஐஸ்வரியம் உண்டாகுமென்று இவனுடைய நெற்றியாகிய பட்டையத்தில் யாது எழுதப்பட்டிருக்கிறதோ அஃது ஊஷர பூமியிலுங் கிடைக்கும். ஸ்வர்ணமயமான மேருபர்வதத்திற்குப் போனாலும் இதைவிட அதிகமாகக்கிடைப்பதொன்றுமில்லை. ஆகையினால் நிச்சலசித்தமாக இரு. தனிகர்களிடத்தில் வீணாகக் கார்ப்பண்ய (லோப)த்தைக் காட்டாதே. கூபத்திலும் (கிணற்றிலும்), ஸமுத்திரத்திலும் கடமானது துல்யமாக (சமமாக)ஜலத்தைக் கிரஹிக்கிறது பார்.

துர்ச்சனபத்ததி.

(41) தயையில்லாமையும், காரணமின்றிப் போர்செய்வதும், பரதனத்திலும் பரஸ்திரீயிடத்திலும் இச்சையும், ஸாதுக்களையும் பந்து ஜனங்களையும் பார்த்துப் பொறாமைப்படுதலும் ஆகிய இவையெல்லாம் துஷ்டர்களுடைய ஸ்வபாவமாம்.

† அநிர்தவாதி - பொய்பேசுகிறவன்.

(அ) (துர்ஜனன் வித்வானாயிருந்தாலும், பரிகரிக்கத்தக்கவனென்று கூறுகின்றார்).

(42) துர்ஜனன் வித்வானாயிருந்தாலும் பரிகரிக்கத் தக்கவனே. ஸர்ப்பம் மாணிக்கத்தோடு கூடியிருப்பினும், பயத்தைத் தரத்தக்கதே.

(அ) (துஷ்டனுடைய ஸ்வபாவத்தைக் கூறுகின்றார்).

(43) துர்ஜனன், லஜ்ஜையுடன் கூடியபுருஷனை ஜடனென்று நினைக்கின்றான்; விரதாநுஷ்டானஞ் செய்து சுத்தனாக இருக்கின்றவனை இடம்பனென்று நினைக்கின்றான்; சுத்தபுருஷனைக் கபடனென்று நினைக்கிறான்; சூரனைத் தயைபற்றவனென்று நினைக்கின்றான்; முனிவரைப் பக்தியற்றவனென்று நினைக்கிறான்; பிரியமாகப் பேசுகிறவனைத் தீனனென்று நினைக்கிறான்; ரூபவானைக் கர்விஷ்டனென்று நினைக்கின்றான்; பேசுஞ்சக்தியுள்ளவனை அஸம்பந்தமாகப் பேசுகிறானென்று நினைக்கிறான். துர்ஜனனால் தூஷிக்கப்படாத குணம் யாதிருக்கின்றது?

(44) லோபமிருந்தால் (தனுதிகளில் விசேஷஇச்சை யுண்டானால்) துர்க்குணத்தினால் யாது பிரயோஜனம்? கோள்சொல்லுந் தன்மையிருந்தால் பிருஹ்மஹத்தி முதலிய பாபங்களால் யாது பிரயோஜனம்? ஸத்யம இருந்தால் தபஸினால் யாது பிரயோஜனம்? மனச்சுத்தி இருந்தால் தீர்த்தயாடனத்தினால் (தீர்த்தமாடுவதால்) யாதுபிரயோஜனம்? ஸௌஜன்யம் (அன்பு அல்லது இரக்கம்) ஸாதுத்தன்மையிருந்தால் பலத்தினால் யாது பிரயோஜனம்? மஹிமையிருந்தால் ஆபரணத்தினால் யாதுபிரயோஜனம்? நல்லவித்தையிருந்தால் தனத்தினால் யாதுபிரயோஜனம்? அபகீர்த்தி யிருந்தால் மிருத்யுவினால் யாதுபிரயோஜனம்?

(45) ஒருவன் தன் மனத்தில் தோன்றிய கஷ்டத்தைக்கூறுகிறான்:—பகலில் தேஜஸ் அற்றசந்திரனும், யௌவனமற்ற ஸ்திரீயும், தாமரையற்ற ஓடையும், ஸுந்தர புருஷனுடைய அக்ஷரமற்ற முகமும், தனத்தில் ஆசையுள்ள பிரபுவும் எப்பொழுதும் ஆபத்தையடைந்த ஸஜ்ஜனமும் ராஜகிருஹத்திலிருக்கிற துஷ்டனும் ஆகிய இவ்வேழும் என்மனதில் சல்யம் (அம்பு) போல உபத்திரவம் செய்துகொண்டிருக்கின்றன.

வி-ஸா-ராமச்சந்திர சாஸ்திரியார், விஷ்ணுபுரம்.

நீலகண்ட தீக்ஷிதரவர்கள் இயற்றியருளிய

# வைராக்யசதகம்.

(73-வது பக்கத்தின் தொடர்ச்சி).

(31) மூடர் சண்டைசெய்கின்றனர். நாளைக்குப்பொழுதுவிடியும் என்பதில் யார் உத்தரவாதி? அந்தராத்திரியிலே தான் இருப்பதில் யார் உத்தரவாதி?

(32) உள்ளங்கால் முதற்கொண்டு உச்சந்தலை வரையில் கலியின் மலம் உள்ளே வியாபித்திருக்கும்போது கள்ளுக்குடத்தின் மீது தர்ப்பைக் கட்டை வைத்தாற்போல் கங்காஜலங்கூடப் பயனற்றதாய்விடும்.

(33) எந்தச் சரீரத்தைத் தண்டிக்கவேண்டுமோ அதையே ஜனங்கள் ஸுகத்திற்காக ஏன் எவ்வாறு போஷிக்கிறார்கள்? சர்க்கரையைவிரும்புகிறவர்கள் கருப்பங்கழிகளைப் பூஜிப்பார்களா?

(34) அகலமாய் வாய்க்கால் வெட்டிவிட்டோம்; கற்களால் சுவர்களை வைத்து விட்டோம்; கொழுத்த எருதுகள் வாங்கிவிட்டோம்; ஆதலால் நாம் செய்யவேண்டியதை முதலில் செய்துவிட்டோம் என்று ஸந்தோஷப்படுகிறார்கள்.

(35) பிராணிகளுக்குப் பிராணன்போகும்போது அநேகமாகப் புத்தி மாறுபாட்டையடைகின்றது. புண்ணியவசத்தால்பிரஞ்ஞைமாறாவிட்டால் பிள்ளைகளை நினைத்துக்கொண்டே சாகிறான்.

(36) வயிற்றிலுள்ள பசியென்னும் அக்னியை அணைக்க ஸம்ஸாரமென்னும் ஸாகரத்தில் மூழ்குகின்றனர். பனியால் உண்டாகும் கஷ்டத்தை நிவிர்த்திக்க வீட்டில் நெருப்பு வைக்கலாமா?

(37) அதிகமாய்ப் பணமிருந்தால் அரசனாலாவது திருடனாலாவது நாசமுண்டாவது நிச்சயம். அதிகமாக அன்னத்தையுண்டால் வாந்தியாவது எடுக்கவேண்டும், பேதியாவது ஆகவேண்டும்.

(38) பணத்தைச் சம்பாதித்து இவ்வுலகத்தில்பயனையுத்தேசித்துச்செலவிட்டால் சிறிது சிற்றின்பம் உண்டாகும்; ஒன்றையும் எதிர்பாராது செலவிட்டால் அது பரமாநந்தத்தை யுண்டாக்குகின்றது.

(39) பேராசைக்கு வசமான புருஷன் பிசாசுபிடித்தவன் போல நமஸ்கரிக்கிறான், நல்லவார்த்தை சொல்லுகிறான், உளறுகிறான், யாசிக்கிறான், அலைந்து திரிகிறான்.

*N.* இராமநாதசாஸ்திரி, பண்டிதர்,
அடையாறு லைபிரரி, சென்னை.

### ஆங்கிலேய ஆசிரியர்களது

## சற்போதத்திரட்டு.

சென்ற வாரப்பத்திரிகையில் பனைஞானத்துக்கு முடிவு "சம்பந்தம்" என்றிருக்கிறது. சம்பந்தமென்பதனைச் "சாந்தம்" எனத் திருத்தி வாசிக்க வேண்டும்.

(1) துர்க்குணங்களை சீக்கிரமாக ஒருவன் கற்றுக் கொள்ளுகின்றான். நற்குணங்களை எளிதாக ஒருவன் கற்கிறதில்லை. இவற்றிற்குக் காரணம் துர்க்குணங்கள் சரீர சம்பந்தப்பட்டனவாயும் நற்குணங்கள் ஆத்மாவோடு சம்பந்தப்பட்டனவாயும் இருத்தலேயாம்.

(2) துர்க்குணங்களும், துர்செய்கைகளும் சீக்கிரம் வெளியாகும்; நற்குணங்களும் நற்செய்கைகளும் சீக்கிரம் வெளியாகா.

(3) அறிவுடையான் தனக்கு வரும் எல்லாக் கஷ்டங்களையும் ஆராய்ச்சி செய்து நிவிர்த்தித்துக்கொள்ளுகின்றான். அறிவிலான்கஷ்டம் வருந்தோறும் அதன் வயப்பட்டுத் துன்பம் அடைகின்றான்.

(4) ஒரு குடும்பத்தில் சுய அறிவுடையோர் மூவரும், திருத்தக்கூடிய சாதாரண புருடர் இருவரும், சுத்த மௌடீகமான ஒருவனும் இருப்பின், அக்குடும்பம் விருத்தி அடையும். அப்படியல்லாது மூன்றாவது வகையினர் மூவரும் இரண்டாவது வகையினர் இருவரும் முதல் வகையினர் ஒருவனும் இருப்பின், அக்குடும்பம் விருத்தியாவது கடினம்

(5) சிலர் சிறிய லாபம் வந்தபோதும் மிக மகிழ்ச்சி யடைகின்றனர்; சிலர் அதிக லாபம்வந்தபோது மிக மகிழ்ச்சி யடைகின்றனர்; ஆனால் இவ்விரண்டும் கெடுதியைத் தருவனவேயாம்.

(6) சட்டம் மேலான ஒழுங்குடையார் பொருட்டுச் செய்யப்படவில்லை. ஆனால் ஒழுங்கைவிட்டு மாறி நடப்பவர் பொருட்டே செய்யப்பட்டிருக்கின்றது. (டிமோதி-Timothy).

(7) மனிதர்கள் சுத்தமான மனோவாக்குக்காயங்களால், கோபதாபங்களும் சந்தேக விபரீதங்களும் இன்றி இறைவனை வணங்க வேண்டும் (டிமோதி Timothy).

(8) கற்பு, நாணம், நற்புத்தி யென்னுமிவற்றையே பெண்கள் தக்க ஆபரணமாக அணியவேண்டும்; பொன், பவளம் முத்துமுதலிய விலை யுயர்ந்தபொருள்களும் பின்னிய மயிரும்ஆபரணம் அல்ல (டிமோதி-Timothy).

வா - ஆறுமுக செட்டியார்,
முத்தியாலுபேட்டை, சென்னை.

# வர்த்தமானம்.

### பணப் பையை விழுங்கிய ஒரு பெருந் தவளை.

மலையாளம் ஜில்லா வள்ளுவ நாடு கீழத்தூரைச்சேர்ந்த ஒரு நாயர் ஒரு குளத்தில் ஸ்நானஞ்செய்யச்சென்று தம்மடியிலிருந்த 5 ரூபாய்வைத்துள்ள ஒரு சிறு பையைக்குளப்படிக்கட்டின் மீது வைத்துவிட்டுக் குளத்திலிறங்கி ஸ்நானஞ் செய்தார். அதை யங்கிருந்த ஒருபெருந் தவளை விழுங்கி விட்டது. அவர்மேலேவந்து பணப்பையைக்காணாது சுற்று முற்றும் பார்த்து ஒருவரையுங் காணாமையால், தாம்பணப்பை வைத்தவிடத் தருகே யிருந்த அத்தவளையின்மீது சந்தேகங்கொண்டு அதைக்கல்லாலடித்துக் கொன்றபோது, அதன் வயிற்றிலிருந்து பணப்பை வெளிப்பட்டது. தவளை பணப்பையை யுணவுப் பொருளென்றுவிழுங்கியது போலும்!

### பனிக்கட்டி யுண்பவர்க்கும் பிராயச்சித்தம் விதித்தனர்.

குல்னாஜில்லாவைச் சேர்ந்த ஸோனதாங்கதி யென்னுங் கிராமத்தில் ஒருபிராமணர் வீட்டில் நடந்த விருந்தில் பனிக்கட்டி சேர்ந்தநீர் தாகத்திற்குக் கொடுக்கப்பட்டது. அதையுண்டவர்கள் பிராயச்சித்தஞ் செய்துகொள்ள வேண்டுமென்று அங்குள்ள வைதிகர்கள் கூறுகின்றனர். இவ்வாறு கூறுபவர் இனிச்சர்க்கரை முதலியவற்றை யுண்பவர்க்குப் பிராயச்சித்தஞ் செய்துகொள்ள விதிப்பார்போலும்!

### 111 வயதுடைய ஒரு மகம்மதியன்.

கல்கத்தாவில் ஷேக்ஸ...ா னென்னும் ஒரு வயோதிகப் பழவியாபாரி யிருக்கின்றான். அவனுக்கிப்போது வயது 111 ஆம். மகாராணி விக்டோரியா பட்டத்திற்கு வந்தபோது இவனுக்கு 30 வயது ஆம். இவனிப்போதும் பழக்கூடை தூக்கிக்கொண்டு வந்து தெருத்தோறுஞ் சுற்றி வியாபாரஞ் செய்கின்றான். இவனுக்கிப் போது பார்வை சிறிது குறைந்திருக்கின்றது.

### கைக்கடியாரங்கள்.

கைக்கெடியாரங்கள் முதல் முதலாக 1477 வருஷத்தில் ஜர்மனியிலுள்ள நியூரம்பர்க் என்னு மூரில் செய்யப்பட்டனவாம்.

## 170-பக்கப் புத்தகம் இனாம்!

இது நல்ல ஆரோக்கியமும் நீடித்த சுகவாழ்வும்தரும்; இயற்கையாயுள்ள சில விதிகளை அனுசரிப்பதைப் பொறுத்திருக்கிறது. இச்சிறந்த புத்தகம் சுகவழியைக் காட்டி, நல்ல ஆரோக்கியத்தோடும் எப்பொழுதும்திடகாத்திரத்தோடும், நீண்ட ஆயுளோடு மிருக்கும்படி செய்து நல்ல அதிர்ஷ்டத்தைக் காட்டும். இப்புஸ்தகம் இனாமாகவும் தபாற் செலவில்லாமலும் அனுப்பப்படும்.

☞ இப்புத்தகத்திற்கு இன்றைக்கே எழுதுங்கள்.

வைத்திய சாஸ்திரி

**மணிசங்கர் கோவிந்தஜி,**

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

22, பிராட்வே & 96. மவுண்ட்ரோட், மதராஸ்.

ஏஜெண்டு:—M. A. நெல்லையப்ப முதலியார்,

38 சின்னகடைத்தெருவு, திருச்சிறாப்பள்ளி.



## ஆனந்த ராமாயணம்.

இதுவரையில் தமிழில் வெளிவராதது.

இது வால்மீகி மகாரிஷியால் வடமொழியில் இயற்றப்பட்டுள்ளது. இதில் வால்மீகி ராமாயணத்தில் இல்லாத அநேக விஷயங்கள் அடங்கியுள்ளன; ஸ்ரீராம லக்ஷ்மணருடைய ஜனனமும், வளர்ப்பும், சீதாதேவியினுடைய ஜனனமும், அத்தேவிக்குப் பல பெயர் வந்ததற்குக் காரணமும் விளக்கி யிருப்பது வெகு இனிமையாயிருக்கும். இஃது ஆனந்த ராமாயணமென்னும் பெயருக்கேற்றவாறு படிப்போர் மனதிற்கு உற்சாகமும், ஆனந்தமும் உண்டாக்கும்; இதில் அநேக சித்திரப் படங்களடங்கியிருக்கின்றன. விலை ரூபாய் **5**.

தபாற் கூலி வேறு.

மானேஜர்:—

சக்ரவர்த்தினி ஆபீஸ்,

சென்னை



சிவப்பிரகாசப்

## பெருந்திரட்டு.

சொருபாநந்தரால் திரட்டப்பட்டது.

இதுகாறும் வெளிவராதது.

விலை ரூபாய் மூன்று—வி. பி. முதலிய சார்ஜ் பிரத்தியேகம்.

மானேஜர், சக்ரவர்த்தினி ஆபீசு,

கோமளேசுவரன் பேட்டை, சென்னை.



## P. S. Sundram & Co.

Electro-Platers, Gilders and
General Commission Agents.

உயர்ந்த தங்கம் வெள்ளிப் பதக்கங்களும் முதல் தரமான அநேக யோக்கியதா பத்திரங்களும் வெகுமானமாக அளிக்கப்பட்ட பெயர் பெற்ற

பி. எஸ். சுந்தரம் கம்பெனி,

எலக்டிரிக் தங்க நகை வியாபாரிகள்.

107-பெரியதெருவு திருவல்லிக்கேணி, சென்னை.

### எலக்ட்ரிக் தங்கநகை விலைவிவரம்.

32" நீளம் $\frac{3}{4}$" அகலம் 150.
32" நீளம் $\frac{5}{8}$" அகலம் 210. } அரும்பு சிலங்கை கட்டிய

| Group | Item | Rs. | As. |
|---|---|---|---|
| 5 வருஷம் காரண்டியுள்ள | மல்லிகை ஒட்டியாணம் | ரூ. 25 | 8 |
| | நாக ஒத்து பெரியது | 12 | 0 |
| | நாகஒத்து சிறியது | 9 | 0 |
| | காரை பெரியது | 10 | 0 |
| | காரை சிறியது | 7 | 8 |
| | வங்கி பெரியது | 10 | 0 |
| 3 வருஷம் காரண்டியுள்ள | மல்லிகை ஒட்டியாணம் | 19 | 8 |
| | நாகஒத்து பெரியது | 9 | 0 |
| | ஷெடி சிறியது | 6 | 12 |
| | காரை பெரியது | 7 | 8 |
| | ஷெடி சிறியது | 5 | 12 |
| | வங்கி சிறியது | 8 | 0 |
| | 1½-வருஷம் காரண்டியுள்ள மல்லிகை ஒட்டியாணம் … … | 13 | 8 |
| | மல்லிகை ஒட்டியாணம் காரண்டியில்லாதது … … | 8 | 8 |
| | ஜாமந்திப்பூ | 1 | 8 |
| | ரோஜாப்பூ | 1 | 8 |

# பட்டுப் பீதாம்பர கம்பெனி, காசி.

திருப்தி யில்லாதவைகள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படும்.

பட்டுப் பீதாம்பர காட்லாக்கு இனாமாக அனுப்பப்படும்.

உருத்திராக்ஷங்கள் !! ஜபமாலைகள் !!

## பரிசுத்தமானவை.

108 உள்ள மாலை 1-க்கு 6-அணா முதல் ரூபா 12-வரை. விலை அதிகப்படுவதுபோல் மணிகள் சிறிதாக இருக்கும். 6-முகக் கண்டிகள் 33-உள்ளது; கண்டி 1-க்கு ரூபா 1-முதல் 10-வரை. 5-முகக்கண்டி 32-உள்ளது; கண்டி 1-க்கு அணா 10-முதல் ரூபா 10 வரை. விலை அதிகப்படுவது போல் மணிகள் பெரிதாக இருக்கும்.

## வெண்பட்டு வேஷ்டிகள்.

சுத்தமான வெண்பட்டு வேஷ்டிகள் கோயமுத்தூர் வேஷ்டிகள் மாதிரி சன்னகம்பி, ருத்திராக்ஷ கம்பி, ஜரிகை கம்பி போட்டவை.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | முழம் | 2 | அகலம் | 1-க்கு | ரூபா | 4-8-0-முதல் | | 7 | வரை |
| 6 | ,, | 2½ | , | 1-க்கு | , | 7 | ,, | 9 | ,, |
| 6 | ,, | 3 | ,, | 1-க்கு | ,, | 10 | ,, | 12 | ,, |
| 7 | ,, | 2½ | ,, | 1-க்கு | ,, | 8 | ,, | 12 | ,, |
| 7 | ,, | 3 | ,, | 1-க்கு | ,, | 10 | ,, | 14 | ,, |
| 8 | ,, | 3 | ,, | 1-க்கு | ,, | 12 | ,, | 18 | ,, |
| 9 | ,, | 3 | ,, | 1-க்கு | ,, | 14 | ,, | 20 | ,, |
| 10 | ,, | 3 | ,, | 1-க்கு | ,, | 15 | ,, | 22 | ,, |

## பனி ! பனி !! பனி !!!

பனிக்கு அடக்கமான சுத்தமான கம்பளி ரோமத்தால் செய்து உறுதியும், நைஸூம், நேர்த்தியுமான கம்பளிப் போர்வைகள், 6-முழம் நீளம் 3-முழம் அகலம் சிகப்பு முதலிய சகலநிறத்திலும் தயாராக இருக்கின்றன. உருப்படி 1-க்கு ரூபா 5-8-0. ஷை சிறிது 1-க்கு ரூபா 4-8-0. மேகவர்ணப் போர்வைக்கு ரூபா 6 8 0. தபாற் செலவு பிரத்தியேகம்.

## காசி வயிரவர் கயிறு.

1-வது நெம்பர் 100-க்கு... 3 0 0 3-வது நெம்பர் 100-க்கு...2 0 0
2-வது நெம்பர் 100-க்கு... 2 8 0 4-வது நெம்பர் 100-க்கு...0 6 0

## குழந்தைகள் !

குழந்தைகள் விளையாடக் கூடிய பித்தளை வெங்கலத்தால் செய்த செம்பு, குடம், கரண்டி முதல் 32 சாமான்கள் அடங்கிய அழகும் நேர்த்தியும் நைஸூம் பளபளப்புமுள்ள அழகிய பாத்திரங்கள் 32 உள்ள சிறு செட்டு 1-க்கு ரூபா 2 0 0. பெரிய செட்டு 1-க்கு ரூபா 4 0 0.

உடனே எழுதுங்கள். விலாசம்—மானேஜர்,
பட்டுப் பீதாம்பர கம்பெனி, தாராநகர் தெரு, காசி.

*MANAGER,*
*Silk Patamber Co., Daranagar Street, Benares City.*




5




6
11-5


7
N-S


8
K·S




N-S


2


3
N·S

# சக்ரவர்த்தினி.

" கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்,
மற்றீண்டு வாரா நெறி".

VOL VIII. தொகுதி அ. | DECEMBER 1912. டிசம்பர்மீ 1912. | NO. 5. பகுதி - ரு.


## பொறுமை.

"பொறுத்தவர் பூமியாள்வார்; பொங்கினவர் காடாள்வார்" என்று வழங்கும் பழமொழியை நன்கூகித்து நோக்குமிடத்துப் பொறுமை யுடையார்க்கு நன்மையென்று சொல்லப்படுவன வனைத்து முண்டாமென்றும், அஃதில்லார்க்குத் தீமையென்றுசொல்லப்படுவன வனைத்து முண்டாமென்றும் விளங்குதலின், பொறுமை யுடையவராகப் பழகுத லொவ்வொருவர்க்கு மின்றி யமையாத கடமையாம். பொறுமையுள்ளாரிடத்துத் தக்காரைக் கண்டவிடத்து மரியாதை செய்தல், மெய் வாய் கண் மூக்குச் செவி யென்னும் புறவிந்திரியங்களும், மனமென்னு மகவிந்திரியமும் பழிபாவங்களை யுண்டாக்கும் விஷயங்களில் பதறிச் செல்லா தடங்கி நிற்றல், அறிவுடையாரால் நன்கு மதிக்கப்படுதல் முதலிய குணங்கள் விருத்தியாவனவா மாதலின், பொறுமையுடையவரே நன்மையென்பன வெல்லாம் பெறுதற்குத் தகுதியுடையவராவ ரென்பதற் கொரு சிறிதும் ஐயப்பாடின்றாம்.

பாவங்க ளெல்லாவற்றிற்கும் தாய்தந்தையாயும், குடியைக் குறையா தழிப்பதாயும், மேற்கொண்ட காரியத்தைக் கூடிவரச் செய்யாததாயும், இம்மையிலேயன்றி மறுமையிலும் துக்கத்தைத் தொடர்பாகத்தருவதாயும், மேன்மையை யழிப்பதாயும், உறவினரை யாபத்து நேர்ந்தபோது உதவிசெய்யாவாறு தடுப்பதாயும், அருளை யடியோ டழிப்பதாயும், பலரையும் பகையாக்குவதாயும்,

எமலோகஞ் சென்று நரகவாசஞ் செய்வதற்குத் தக்க ஆணையாயும், ஆபத்தை யடிக்கடி தருவதாயுமுள்ள கோபத்தினும் பெரும் பகையாளி யெவ்வுலகத்தினு மின்மையின், அதனைப் பொறுமையாற் கெடுத்து வாழ்வதே மக்களுக்கழகும் அணியுமாம். பொறுமை யென்னும் பூஷணம் பூண்டவர் தத்துவஞான வாயிலாக உபசாந்தமென்னு முத்தம நகரை யடைந்து வாழ்வதற்குத் தடையென்ப தொன்று மின்மையின், பொறுமையைப் பெறப் பெரிதும் முயலுதல் வேண்டும். பொறுமை யுடையவனுக்கு மரியாதையாக வொழுகுதலே மனைவியாம்; அடக்கம் சன்மான மென்பன புத்திரர்களாம். ஒருவன் பொறுமை யுடையவனாக விருத்தல், அவன் யாவரிடத்தும் மரியாதையாக வொழுகுவதாலும், அடக்கமும் சன்மானமு முடையவனாயிருத்தலாலும் அறியப்படுவதாம். மரியாதை அடக்கமுதலியன வில்லாதவர் பொறுமை யில்லாதவராவர். மரியாதை அடக்கமுதலாயின வில்லாமையால் இம்மையிற் பழியை நிறுத்தி, மறுமைக்குரிய பாவத்தைத் துணைக்கொண் டழிந்தவருடைய சரித்திரத்தைப் பலகாற் படித்துச் சிந்தித்து நோக்குதலும் பொறுமை யுண்டாவதற் கொருகாரணமாம். பொறுமையாவது ஒருவர் தமக்குக் காரணத்தாலாவது அறியாமையாலாவது பிறர் தீமை செய்தவிடத்து, அவர்க்குத் தீமை செய்யாது பொறுத்திருத்தலாம். அவ்வாறிருத்தலரிதாகத் தோன்றுமாயினும், கூடுமானவளவு பொறுமையாக விருக்க அதனைப் பொறுமை யுடையவரோடு கூடிப்பழகிக் கற்றுக்கொள்ள முயலுதல் வேண்டும். பொறுமை தருமபுத்திரரிடத்துப் பூரணமாக விருந்ததென்பது அவர் தமது தர்மபத்தினியாய துரௌபதியைப் பாவித் துரியோதனன் துச்சாஸனன் வாயிலாகத் துகிலை யுரியுமாறு கட்டளையிட்டு, அவமானஞ் செய்ததைப் பொறுத்திருந்ததே நன்கு விளக்குவதாம். எமனுக்குமஞ்சாத வீமனும், எவரும் அஞ்சத்தக்க வில்வித்தையுடைய அருச்சுனனும் தமது துணைவராக விருக்கவும், அவர் துரியோதனன், விதுரர் வாயிலாகத் தம்மைக் கபடமாக அழைத்து, சகுனி வாயிலாகச் சூதாட்டத்தில் சகல பொருள்களையும் கவர்ந்து, தம்மோடு தமது துணைவரையும் மனைவியையும் அடிமையாக்கி, தீண்டற்குத் தகாத நிலையிலிருந்த துரௌபதியைச் துச்சாஸனனைக்கொண்டு தலைமயிரைப்பிடித்திழுத்துவரச் செய்து, சபையில் நிறுத்தி, சொல்லத்தகாதவற்றை யெல்லாஞ் சொல்லி, நிர்வாண



மாக்கத் துகிலையுரிய முயன்றதைத் தடுக்காதிருந்தது, அவர்க் காண்மை யில்லாமையாலென்று சொல்லமுடியுமோ? அவர்க்கதனு லுண்டாயது யாது? புகழன்றோ? பொறுமை என்பதித்தன்மையதென்றுணர்த்தற் பொருட்டன்றோ தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார் பிறனில் விழையாமையின்பின் பொறையுடைமையை வைத்தருளினார். பொறையுடைமை யதிகாரத்தின் அவதாரிகையில் பரிமேலழகர் "நெறியினீங்கிய செய்தாரையும் பொறுக்கவேண்டுமென்றற்கு, இது பிறனில் விழையாமையின்பின் வைக்கப்பட்டது" என்று கூறியதுமிங்கு நன்குணர்தற்பாலதாம். தம்முடைய பாதுகாவலிலுள்ள மனைவியின் தீயவொழுக்கத்தைக் கண்டவிடத்தாவது அவள் பிறரா லவமானப் படுத்தப்படும்போதாவது தான் கோபம் அளவுகடந்தெழுந்தோங்கி, அல்லல் பலவற்றைச் செய்வதற் கேதுவாகின்றது. அவ்விடத்துத்தான் பொறுமை அத்தியாவசியகமாக விருத்தல்வேண்டும்; அவ்விடத்தில்லாது, ஏனையவிடத்துள்ள பொறுமை பெரும்பான்மையுஞ் சிறந்து விளங்குவதன்றாம். தருமபுத்திரர் பொறுமையில் மிக்காரென்று பெரும்பேர் பெற்றமைக்குக் காரணம் அவர் தம் மனைவியைப் பாவித்துரியோதனன் துச்சாஸனனைக் கொண் டவமானப் படுத்தினமைக்காகச் சினங்கொள்ளாது பொறுத்திருந்தமையேயாம். அவர் அச்சமயம் பொறுமை கொள்ளா திருப்பாராயின், அருச்சுனன் தவஞ்செய்து பசுபதியோடு (சிவனோடு) போர் செய்து புகழ் பெற்றுப் பாசுபதாஸ்திரத்தைப் பெறுவதும், இந்திரவுலகஞ் சென்று, இந்திரனது பகைவரைவென்று கீர்த்திபெறுவதும், பிறவும் எவ்வாற்றானும் சம்பவிப்பனவேயில்லையாம். பீமன், அருச்சுனன் முதலாயினோர் பெரும் பேர் பெற்று விளங்கினமைக்குக் காரணம் தருமபுத்திரரது பொறுமையேயாம். தருமபுத்திரர் துச்சாஸனன் துரௌபதியைத் தன தன்னை யென்று கருதாது, ஆடையை யவிழ்த்து நிர்வாணமாக்க முயன்றபோது கோபித்திருப்பாராயின், பாண்டவர் துரியோதனன் முதலியவரை வென்று அஸ்தினாபுரத்திற் குரிமையுடையவராவது முடியுமோ? பொறுத்திருந்தமையாற்றான், பாண்டவர் பகைவரைப் பற்றற வெல்லும் நற்றவமுடையவராயினர். இதனாற்றான் திருவள்ளுவ நாயனார் "ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப், பொன்றுந் துணையும் புகழ்" என்றருளிச் செய்தனர்.

பிரபோத சந்திரோதயம்.

"தன்னமி மானமாந் தையல் கோவென
மன்னவை யூடவள் வனைந்த பூந்துகில்
உன்னிடுஞ் சுயோதன னுரிய நோக்கியும்
அன்னதற் கென்செய்தா னறத்தின் பாலனே."

என்று பொறுமையுடையார்க் குதாரணங் கூறியவிடத்துத் தருமபுத்திரரை எடுத்துக்கூறியதை நோக்குமிடத்துப் பொறுமைக் குறைவிடம் தர்மபுத்திரரே யென்பது நன்குபுலனும். தருமபுத்திரரது சரித்திரத்தைப் பலகால்படித்துணர்பவர் பொறுமைக் குறைவிடமாக விளங்கும் திறத்தினராவரென்பது திண்ணமாம்.

சுதர்சன ரென்பவர் தமது மனைவியாகிய ஓகவதி அதிதியாக வந்த ஓரந்தணரோடு, ஓரறையில் தாம் வரும்போ திருக்கக் கண்டு, பதறாது பொறுத்திருந்தாரென்று பாரதம் அநுசாஸநப் பருவத்திற் கூறுவதும், சிகித்துவஸன் மதனிகை யென்னும் தனது மனைவி சந்திரோதய காலத்தில் ஒரு தூர்த்தனோடு ஒரு புதரில் கூடி யிருந்ததைக்கண்டு, ஒன்றுஞ் சிந்தைசெய்யாது பொறுமையாக விருந்தானென்று ஞானவாசிட்டங் கூறுவதும் நன்குணர்வோமாயின், பொறுமை யெவற்றினும் பெரிதாமென்பது விளங்குவதாம்.

ஓகவதியும், மதனிகையென்னும் பெயர் கொண்டுவந்த சூடாலையும் கற்புடைய மங்கையருள் மிக்கவரென்று அக்கதைகளைப் படிப்பதால் விளங்குவதால், எத்தகைய விஷயத்திலும் பொறுமையாக விருக்க நாம் பழகுதல் வேண்டும். இதனாற்றான் "பொறுமை கடலினும் பெரிது" என்னும் பழமொழி வழங்கப் படுகின்றது. இப்பழமொழியைப் பொன்போல் மனத்தில்வைத்து எதையுந் தீர விசாரித்துச் செய்பவர்தாம் காணப்படு மிவ்வுலகத்திலும் கேட்கப்படு மவ்வுலகத்திலும் மேன்மையடைவர்.

"கண்டுகிரு பந்தனைத் தள்ளுவோர் குருசுவாமி காரியக் குறைசெய்குவோர், காணு விடத்திற் பழித்துளோர் வஞ்சகங் கருதுவோர் பொய்யுரைப்போர், சண்டைகொடு தந்தைதாய் சுற்றமுட னனுதினந் தவிராத கலகமிடுவோர், தம்முடைய வலுமையா லெளியார் வழக்கினைத் தள்ளிய மதங்களுடையோர், அண்டிவரு துஷ்டரொடு கூடிவினை செய்குவோ ராகுமிவ ரெண்மர்தமை



யும், ஆறுபோன் மூன்றுபிழை கண்டபின் கண்டிப்ப தரசர்மனு நீதிகண்டாய்" என்று திருவேங்கட சதகம் கூறுவதால், பிறர் செய்ததீமையைப் பலமுறை பொறுக்கா விடினும், மூன்று முறையாவது பொறுக்கவேண்டு மென்பது நன்கு விளங்குதலின், பிறர் காரணத்தாலாவது அறியாமையாலாவது செய்த தீமையை மூன்று முறையாவது பொறுத்திருக்கக் கற்றல் அத்தியாவசியகமாம். "தண்ணீரும் மூன்று முறை பொறுக்கும்" என்பதை நன்கு சிந்தித்து, பிறர் காரணத்தாலாவது அறியாமையாலாவது செய்தபிழையை அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல (தன்னைத் தோண்டு வாரை வீழாமற் றாங்கும் பூமிபோல)ப் பொறுத்து, அவர்க் குறுதிதருவனவற்றைச் செய்து, அவர் நாணுமாறொழுகுவது நம்மனோர்க்கின்றியமையாத கடமையாம். கிருஷ்ண பரமாத்மா தருமபுத்திரர் செய்த ராஜசூயயாகத்தில் சிசுபாலன் தம்மை வரம்புகடந்து வைததை நூறுமுறை பொறுத்திருந்து பின் அவனைச் சக்கராயுதத்தால் கொன்றாரென்று பாரதம் சபாபருவத்தில் கூறுவதைச் சிந்திப்போமாயின், பிறர்செய்யுந் தீமையைப் பலமுறை பொறுத்திருந்து, பின் செய்யத்தக்கது செய்யவேண்டு மென்பது நன்கு விளங்குவதாம். பொறுமையாற்றான் சம்சாரக்கடலைக் கடக்கவேண்டும்; பொறுமை யில்லாதவிடத்துண்டாவது தீங்கேயாம் என்று செவ்வையாகச் சிந்தித்து, கூடுமானவளவு பொறுமையுடையராக முயலக் கடவுள் நமக்குக் கருணைசெய்வாராக.

"பொறுத்த விறப்பினை யென்று மதனை, மறத்த லதனினு நன்று" என்று திருக்குறள் கூறுவதும்,

"தான்கெடினுந் தக்கார்கே டெண்ணற்க தன்னுடம்பின், ஊன்கெடினு முண்ணார்கைத் துண்ணற்க—வான்கவிந்த, வையக மெல்லாம் பெறினு முரையற்க, பொய்யோ டிடைமிடைந்த சொல்" என்று நாலடியார் கூறுவதும்,

" வெட்டெனவும் பேசார் வெகுளார் முகங்கோணு
ரிட்டபதார்த் தம்பெரியோர்க் கேற்றுவைப்பார் - துட்டர்களைச்
சேரா ரியாவர்க்குந் தீங்குரையார் கண்சிவந்து
பாரார் பிறவிதீர்ப் பார்."

என்று சொரூபசாரங் கூறுவதும் இங்குணர்தற் பாலனவாம்.

## சூடாலை.

(110-வது பக்கத்தின் தொடர்ச்சி).

விகடகவி:—வாய்மைதவறா மன்னவரேறே! வைராக்கியமடைய முயலவேண்டுமென்று நீங்களும் பத்மாவதியுங் கூறியவற்றைப்பற்றி எண்ண வெண்ண வென்மனம் பதறுகின்றது.

சூடாலை:—வைராக்கியம் பெறுவதென்பது நாட்டைவிட்டுக் காட்டிற்குப் போவதன்று; இல்லறத்திருந்தேனும் துறவறத்திருந்தேனும் மனத்துறவடைவதாம். மனத்தால் அநுகூலமான பொருள்களின் மீதுள்ள விருப்பத்தை விடுவதுதான் உத்தமமான வைராக்கியமாம்.

விக:—சாவித்திரியன்ன சற்குண பூஷணி! தாங்கள் கூறுவது இருட்டுச் சூரியன்என்பதுபோன்றிருக்கின்றது. இல்லறத்திலிருந்து வைராக்கியமடைவது கூடுமா?

சூடா:—(அரசனை நோக்கி) அரசர்க்கரச! காட்டிற்குச்சென்று வைராக்கியத்தை விலைக்குவாங்க வெண்ணும் விகடகவிக்கும் வைராக்கியத்திற்கு மெவ்வளவோ தூரமுண்டு. வைராக்கியத்தினியல்பை யுள்ளவாறுணர்ந்து, உணர்ந்தவாறொழுகுதல் இல்லறத்தார்க்குங் கூடும். அதற்கு ஜனகர்பிரான் முதலிய சற் புருஷர்கள் தக்கசான்றாவர். தாங்களிங்கிருந்தே யொருதடையு மின்றி வைராக்கியத்தைப் பெறலாம்.

சிகித்துவஜன்:—கண்மணி! யான் வைராக்கிய மடைவது உனக் கிஷ்டமாயிருக்குமா? யோசித்துச் சொல்லவேண்டும்.

சூடா:—தாங்கள் காட்டிற்குச்சென்று கடுந்தவம்புரிய வெனக் கிஷ்டமில்லை; ஆனால், இங்கிருந்தென்னோடு கூடியே வைராக்கியமுடையவராக விருக்கவேண்டுமென்பதெனதிஷ்டமாம்.

சிகி:—நற்குண நற்செய்கைகட் குறைவிடமாகிய நங்காய்! நான் இல்லறத்திருந்து வைராக்கிய மடைவதெப்படியாம்? என் மனம் எப்போதும் விஷயபோகத்தை விரும்பி ஆடிக்காற்றி லலையுங்கறங்கு(காற்றாடி)போல அலையுந்தன்மையதாக விருக்கின்றது? ஒருகணநேரமேனும் ஓய்வுறாது யாதாவதொன்றை நாடி இந்திரியவாயிலாக வோடி யிளைப்படைந்து கலக்கமுறுகின்றது; கரபாத்



திர சிவப்பிரகாச சுவாமிகள் கருணையோடு கூறுவதைக் கவனியாதொழிகின்றது; காமவின்ப வேதுவான விஷயங்களை யுன்னுடன் அடிக்கடி யான் பேசுவதற்குக் காரணம் என்மனம் விஷயத்தைக் கக்கிய சோறுபோன்று கண்டு வெறுப்புறாமையேயாம். நீ யெத்தனையோமுறை வைராக்கியம் பெறுவதற் கேதுவை வற்புறுத்தினும், என் மனம் பாராமுகப்பட்டுப் பதைப்புற்றுத் துடிக்கின்றது. விகடகவி இல்லறத்திருந்து வைராக்கிய மடைவது கூடாதென்று கூறுவது உண்மையுரையென்றே கருதுகின்றேன்.

விக:—மகாராஜாவே! தாங்கள் கூறுவது கிணறுவெட்டப் பூதம் புறப்பட்டதுபோன்றிருக்கின்றது! தாங்கள் காட்டிற்குச் சென்று வைராக்கியத்தைச் சம்பாதிக்கப்போகின்றீர்; பெரும்போகத்தை யனுபவிக்கும் தாங்கள் காட்டிற்குச் சென்று கடுந்தவம்புரிவது எவ்வாறு கூடும்? மழை வெயில்களைச் சகித்தல் தங்கட்குக் கூடுமான தாமோ? ஏகாதசி முதலிய புண்ணிய தினங்களில் உபவாசமிருப்பது தங்கட்கு எவ்வளவோ கஷ்டமாக விருக்கின்றதென்றெனக்குத் தெரியாதோ? ஒருநாளுபவாசமிருப்பதற்குப் படாதபாடுபடும் தாங்கள் காட்டிற்குச்சென்று கடுந்தவம் புரிந்து வைராக்கியத்தைச் சம்பாதிப்பதெவ்வாறு? உண்டி உறையுள் முதலியவற்றைத் துறந்து காட்டிற்குச் சென்று கோடைக்கண் வெயில்நிலை நிற்றலையும் மாரியினும் பனியினும் நீர்நிலை நிற்றலையு மேற்கொண்டு, அவற்றால்வரும் துன்பங்களைப் பொறுத்திருத்தல் தங்கட் கியலுவதாமோ? "உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை (உண்டிசுருக்குதல் முதலியவற்றால் தம்முயிர்க்கு வரும் துன்பங்களைப் பொறுத்தலும் தாம் பிறவுயிர்கட்குத் துன்பஞ்செய்யாமையும்)" ஆகிய தவத்தை மேற்கொண்டாலன்றோ வைராக்கியம் சித்திக்கும்? பெருஞ்சுகத்தைப் பிழையின்றி யநுபவித்துவரும் தாங்கள் காட்டிற்குப்போய்க் கடுந்தவம் செய்து வைராக்கியத்தைச் சம்பாதிக்க வேண்டுமென்று கருதுவது தகுதியுடையதாகாது. தாங்கள் வைராக்கியத்தைச் சம்பாதிக்கக் காட்டிற்குச் சென்றால் தேசத்தையாள்வது யார்? தங்களை யரசராகப் பெற்று நிர்ப்பயமாய் வாழும்குடிகள் இனி யெவ்வாறாவரோ? தாங்கள் காட்டிற்குப் போவதென்பதை மறந்துவிடுங்கள்.

சிகி:—(சூடாலையை நோக்கி) மங்கையர் போற்றும் வான்மதி முகத்தாய்! நமது விகடகவி கூறுவது எனக்குத் தகுதியாகத் தோன்றவில்லை. இல்லறத்திருந்து வைராக்கியத்தைச் சம்பாதிப்பதெப்படி? உன் கருத்தோ யான் வைராக்கியத்தையடைந்து ஞானவானாகவேண்டுமென்பது. வைராக்கியமின்றி ஞானம்வருதல், வாய்ப்பேச்சேயாம். எனக்கோ இப்போது இனிப் பிறவாநிலையை யெவ்வாறாகவாவ தடையவேண்டுமென்னு மெண்ணம் அதிகரித்து வருகின்றது. நான் வைராக்கியத்தை யெப்படி பெறுவது கூடும்? அதற்கோ ருபாயத்தைக் கூறவேண்டும்.

சூடா:—மன்னவர்திலக! விகடகவி கூறுவது பொதுவிதியேயன்றிச் சிறப்புவிதியன்று; இல்லறத்திருந்தே அளவிறந்த பெரியார் வைராக்கியத்தைச் சம்பாதித்து, அது வாயிலாகத் தத்துவஞானிகளாகியிருக்கின்றனர். ஜனகமகாராஜா சரித்திரந்தங்கட்குத் தெரியாததன்றே! அவர் தத்துவஞானி யல்லரென்று கூற யாவர்க்கேனும் சாத்தியமாமா? வசிட்டர், ஸ்ரீராமர், கிருஷ்ணர், திருவள்ளுவர் முதலிய தெய்வப் பிறப்பினர் துறவறத்தைக்கொள்ளாமலில்லறத்திருந்து ஒழுகினமைக்குக்காரணம் இல்லறத்திலிருந்தும் வைராக்கியத்தை யடைந்து அதனால் தத்துவஞானம் பெற்றுச் சாதல் பிறப்பற்ற நிலையைச் சாரலாமென்பதை யுணர்த்துவதற்கேயாம். நமது சுவாமிகளும் பலமுறை யில்லறத்திருந்தும் ஞானிகளாதல் கூடும் என்றருளியிருப்பது தங்கட்கு ஞாபகத்திற்கு வரக்கூடுமென்று நினைக்கின்றேன். காசிதேசத் தரசராகிய அஜாத சத்துரு பரமாத்வைத ஞானியாகவிருந்து, பாலாகி யென்னும் அந்தண இரேட்டருக்குப் பிரஹ்மோபதேசதானஞ் செய்தாரென்று பிருஹதாரண்ய கோபநிஷத் கூறுவதைத் தாங்கள் எத்தனையோ முறை படித்திருக்கின்றீர்களே! அதனை ஞாபகத்திற்குக் கொண்டு வந்தால், இல்லறத்தாரும் தத்துவவித்துக்களாதல் கூடுமென்பது செவ்விதாகத் தோன்றும்.

விக:—அம்மணி! தாங்கள் சொல்வது உண்மையே! ஆனால், இல்லறத்திலிருந்து வைராக்கியம்பெறுவது அருமையினுமருமையாமென்பதற் காட்சேபமுண்டோ?

சூடா:—மந்தபுத்தி யுடையவர்கட்கு இல்லறத்திலிருந்து வைராக்கியம் சம்பாதிப்பது வருத்தமாகத் தோன்றுமேயன்றிச் சூக்குமபுத்தி யுடையவர்க்கு அஃதுஎளிதானதேயாம். வைராக்கிய



மாவது பிரமலோகபரியந்தமான போகங்களில் இச்சையில்லாமையாம். அதற்கேது தவமாம். தவமாவது "மனம்பொறிகட் கொருமையே தவமாம்" என்று பெரியார் கூறியவாறு இந்திரியங்களையும் மனத்தையும் அசாரமான விஷயங்களிற் செல்லாவாறு தடுப்பதாம். ஆதலால், மகாராஜா இங்கிருந்தே வைராக்கியத்தைச் சம்பாதித்து, அது வாயிலாகத் தத்துவஞான மடைந்து தத்துவஞானியாகலாம். "அறந்தா னியற்று மவனிலுங் கோடி யதிகமில்லந், துறந்தா னவனிற் சதகோடி யுள்ளத் துறவுடையோன்" என்றும், "நலமுறு மோர்சிவ ஞானியில்லில்வாழ், நிலையற மாகினு நீத்து நிற்குமோர், தலையற மாகினுந் தரித்து ஞாலமேல், இலைமறை காயென விருக்கு மென்பவே" என்றும், "இல்லறந் துறவற மிரண்டு மேன்மையே" என்றும் பெரியாரருளியிருத்தலை நோக்குமிடத்து அறிவுடையார் இல்லறத்திலிருந்தும் வைராக்கியத்தை யடையலாமென்றும், தத்துவஞானி யாகலாமென்றும் நன்கு விளங்குமன்றோ? உள்ளத்துறவுடையோன் என்பது இல்லறத்திருந்து வைராக்கியத்தைப் பூரணமாக அடைந்துள்ள புமானைக் குறிக்குமன்றோ?

பத்மாவதி:—(மெதுவாக) நற்றவமெனத்திகழ் பொற்புடைய தேவி! தாங்கள் கூறுவது தேவாமிருதம்போன்றிருக்கின்றது. சிவப்பிரகாச சுவாமிகள் இப்பாடல்களுக்குப் பொருள் விரித்துரை கூறியபோது எனக்குத் தோன்றிய ஐயப்பாடெல்லா மிப்போது சூரியனைக்கண்ட பனிபோலத் தொலைந்துபோயின.

விக:—புவிமன்னர் போற்றும் தவமுடைய வேந்தே! பத்மாவதி வேதாந்தப் பழமாக விளங்குவதைப் பாருங்கள். பழமானதினி அழுகத்தான் வேண்டும்.

சிகி:—(சூடாலையை நோக்கி) எழில்வனப்புடைய வேந்திழையாளே! யானினி யாது செய்யவேண்டும். அதனைச்சொல்லவேண்டும். வாதம் பேசுவது வழக்காக முடிகின்றது.

சூடா:—எனக்கென்ன தெரியும்; யாது சொல்லப்போகின்றேன். சுவாமிகள் அடிக்கடி நமக்குக் கூறுவதொன்று ஞாபகத்திலிருக்கின்றது. அதை ஞாபகத்திற்காகச் சொல்லலாமென்று நினைக்கின்றேன்.

சிகி:—விகடகவி! கவனிக்கவேண்டும்; நானும் கவனிக்கின்றேன். சூடாலே! அதைச் சொல்.

சூடா:—அரசே! அது

"ஒன்றென் றிருதெய்வ முண்டென் றிருவுயர் செல்வமெல்லாம்.
அன்றென் றிருபசித் தோர்முகம் பார்நல் லறமுநட்பும்
நன்றென் றிருநடு நீங்கா மலேநமக் கிட்டபடி
யென்றென் றிருமன மேயுனக் கேயுப தேசமிதே"

என்பதே யாம்.

சிகி:—நானதைச் சிலநாளாகக் கவனித்து வருகிறேன்; விகடகவி! அச்செய்யுளைக் கவனித்தனையா?

விக:—கவனித்தேன். தாங்க ளில்லறத்திருந்தே யொழுக வேண்டுமென்பது எனது பூரண தாற்பரியமாகையால், யான் அதற்கு மாறாகப் பேசுவனோ!

சூடா:—(அரசனை நோக்கி) உத்தமர் துதிக்கும் நற்குணசீல! விகடகவி சொல்வது ஏற்புடையதே!

பத்மா:—(சூடாலையை நோக்கி) தேவி! நமது வாயிற் காவலனான கனகசுந்தரன் வந்திருக்கின்றான்.

சூடா:—வரச்சொல்.

கனகசுந்தரன்:—(பத்மாவதிவர உத்தரவாயிற்றென்று கூறிய பிறகு உள்ளே வந்து பணிவோடு நின்று) திருவண்ணாமலைச் சோதிடர் வந்திருக்கின்றார்.

சூடா:—கொடையிற் சிறந்த கொற்றவரேறே! நல்லசமயத்தில் சோதிடர்வந்து சேர்ந்தார்; அவர் வருமாறு உத்தரவு தரல் வேண்டும்.

சிகி:—தடையென்ன? அடே! கனகசுந்தரா! அவரை உள்ளே யனுப்பு.

(திருவண்ணாமலைச் சோதிடர் வந்ததும் யாவரு மெழுந்திருந்து வந்தனஞ் செய்தனர். அவர் ஆசிகூறி யுட்கார்ந்த பின்).

சிகி:—(சோதிடரை நோக்கி) சுவாமிகளே! இப்போ தெனக்கொரு சந்தேகந்தோன்றி யிருக்கின்றது. அதை யொழிக்க வேண்டும். இனி என்னுடைய வாழ்நாள் எவ்வாறு முடியும்? எனது



ஜாதகபத்திரம் தங்கட்கு நன்றாகத் தெரியுமே! கவனித்துச் சொல்லுங்கள்.

சோதிடர்:—(ஜாதக நிலையை நன்றாகக் கவனித்துப்பார்த்து) சிங்கமன்ன திறலுடைவேந்தே! ஜாதகப்படி நீர் சீக்கிரமாக நாட்டைவிட்டுத் தனியாகக் காட்டிற்குச் சென்று பல வருஷ மங்கிருந்து கடுந்தவஞ்செய்து வைராக்கியம் நிரம்பி ஒருபெண்வாயிலாகத் தத்துவஞானமடைந்து, உத்தமஞானியாகி நாட்டிற்கு வந்து நல்லரசாட்சி செய்வீரென்று தெரிகின்றது. சாஸ்திரம் பொய்யாது. எல்லாம் திருவருட்படி நடக்கும். விதியைவெல்ல முடியுமோ? (சூடாலை அது கேட்டு, ஒரு பக்கத்தில் சோர்வாக நின்றாள்; விகடகவி விசனத்தோடு நின்றனன்; பத்மாவதி பரிதாப மடைந்தனள்).

(அரசன் வாட்டமும் மகிழ்ச்சியு மடைந்து அவர்க்குத் தருவனவற்றை மரியாதையாகத் தந்தனுப்பினான்).

விக:—(முகவாட்டத்துடன்) ஆ! ஆ! என்ன கஷ்டகாலம்! சூரியன் திசைமாறி யுதயமாவதாயினும் திருவண்ணாமலைச் சோதிடர் சோதிடம் மாறுவதன்றே! நமது மகாராஜா காட்டிற்குக் கடுந்தவஞ் செய்யச் சென்றால் நாட்டை நன்றாகக் காப்பவர் யார்? மாளவதேசத்தில் கள்வரும், ஈகையில்லாதவரும், மதுபானஞ் செய்பவரும், அக்னி ஹோத்திரத்தை விட்டவரும், வேதாத்தியயனஞ் செய்யாத வேதியரும், அன்னியர் மனைவியரை விரும்பி யொழுகுகின்றவரும் இல்லாமையால் யாவரும் சுகமே மகிழ்ந்து வாழ்ந்து வந்தனர். இனி ராஜ்யம் எவ்வாறாமோ! ஆ! தெய்வமே! உன் வல்லமையைக் கடப்பவரெவர்! எல்லாம் ஈசன் செயல்! நாம் யாதுசெய்யலாம்? அம்மணி! சூடாலே! தங்காய்! பணிவிடை செய்வதில் அடியாள் போன்றும், ஆலோசனை கூறுவதில் அமைச்சன் போன்றும், அழகிற் சீதேவிபோன்றும், பொறுமையிற் பூமிதேவிபோன்றும், அன்பில் அன்னையைப் போன்று மிருந்தொழுகு முன்னை நம்மரசர் எவ்வாறு மனந்துணிந்து விட்டுக் காட்டிற்குச் செல்லுவாரோ? கருணாதேவி! அரசரது முகக்குறியை நோக்குமிடத்து, அவர் நம்மையும் ராஜ்பத்தையும் விட்டுத் துணிந்து காட்டிற்குச் செல்லுவாரென்று தோன்றுகின்றது. நாம் விதியை நோக்கிப் பொறுத்திருக்க வேண்டும்! என்மனம் பதறுகின்றது! என்ன செய்வேன்.

சூடா.—(பெருமூச்சுவிட்டு) என்ன செய்யலாம்? எல்லாம் உள்ளபடி முடியும்! கவலை யடைவதால் வரும்பயன் யாது? இப்போது மனந்தேறிச் சாந்தமாக விருப்பதே நன்றாம்.

விக:—மாதேவி! பொறுமையாக விராது யாதுசெய்வது! நான் போய் வருகிறேன்.

(யாவரும் போகின்றார்கள்).

## உபநிஷதார்த்த தீபிகை.

## மஹோபநிஷத்.

(99-வது பக்கத்தின் தொடர்ச்சி).

57-58. துக்கம் சந்தோஷமென்னு மிரண்டு மில்லாது சமத்துவமடைந்த ஸ்வச்சமான அறிவால் எவன் துக்கமும் சுகமும் அடைவதில்லையோ அவன் ஜீவன் முக்தனென்று செல்லப்படுவான்.

58-59. சகல இச்சைகளும், சகல சந்தேகங்களும், சகல ஆசைகளும், சகல நிச்சயங்களும் * அறிவால் எவனால் தள்ளப்பட்டனவோ அவன் ஜீவன் முக்தனென்று சொல்லப்படுவான்.

59-60. சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரங்களிலும், உதயாத்தமனங்களிலும் எவனுடைய மனம் சமமாகவே யிருக்குமோ அவன் ஜீவன் முக்தனென்று சொல்லப்படுவான்.

60-61. எவன் ஒன்றையும் சிறிதேனும் த்வேஷிப்பதில்லையோ, ஒன்றையும் விரும்புவதில்லையோ, பிரகிருதமான (கர்மானுசாரமாக வந்த) போகங்களை அனுபவிக்கின்றானோ அவன் ஜீவன் முக்தனென்று சொல்லப்படுவான்.

61-62. சம்சாரதாபம் சாந்தமானவனாய்க், கலைகளோடு கூடியும் நிஷ்களனாய், சித்தத்தோடு கூடியும் சித்தமற்றவனாய் இருப்பவன் ஜீவன் முக்தனென்று சொல்லப்படுவான்.

62-63. எவன் சமஸ்த அர்த்தஜாலங்களிலும் (பிரயோஜனங்களிலும், விஷயங்களிலும்) பிறரது பிரயோஜனம்போல் ஆசை

* நிச்சயமென்பது புத்திதத்துவத்தின் தொழிலாலாகியது; ஒருவிஷயத்தை இன்னதெனத் தீர்மானித்தல்.



யற்றவனாய், பூர்ணாத்மாவாய் இருக்கிறானோ அவன் ஜீவன்முக்தனென்று சொல்லப்படுவான்.

63-64. தன் சரீரம் காலாதீனமாகவே ஜீவன்முக்த பதத்தை விடுத்து, வாயு சலனத்தை விடுத்து (ஆகாசத்தன்மையை) அடைவதுபோல விதேகமுக்த பதவியை யடைகின்றான்.

64-65. விதேகமுக்தனானவன் உதிக்கின்றதுமில்லை; அஸ்தமிக்கின்றதுமில்லை; நாசமடைவதுமில்லை; சத்துமில்லை அசத்துமில்லை தூரத்திலுள்ளவனுமல்ல, நானுமல்ல, வேறொருவனுமல்ல.

65-66. மேலும், நிச்சலமானதும் கம்பீரமானதும் (ஆய) அது (அந்நிலை) பிரகாசமுமல்ல, இருளுமல்ல; எங்கும் வியாபகமானதும், கூறக்கூடாததும் அவியக்தமானதுமான சத்து மாத்திரமாக மிஞ்சுகின்றது எதுவோ அது.

66-67. (அது) சூன்யமுமல்ல, ஆகாரம் (ரூபம்) உள்ளதுமல்ல, திருசியமுமல்ல, தரிசனமுமல்ல, பூதபதார்த்த சமூகங்களுமல்ல, சத்தாகவும் அந்தமில்லாததாகவும் இருப்பது.

67-68. சிறிதேனும் குறிப்பிடக் கூடாத ஸ்வரூபமானதும் பூர்ணத்திலும் பூர்ணாகிருதியானதும் அது. அது சத்துமல்ல, அசத்துமல்ல, சதசத்துமல்ல, பாவமுமல்ல, அபாவமுமல்ல.

68-69. சின்மாத்திரமானது, † சைத்தியமற்றது, அநந்தமானது, மூப்பில்லாதது, சிவமானது (மங்களகரமானது), அநாதிமத்தியாந்தமானது, அநாதியாக நிராமயமானது.

69-70. திருஷ்டா (பார்ப்பவன்), தரிசனம் (பார்வை), திருசியம் (பார்க்கப்படும் பொருள்) என்னுமிவற்றுள் தரிசனம் என எது சொல்லப்படுமோ, எதற்கு மேலானதாக வேறு யாதொன்றும் இல்லையோ, எதைப் பார்க்கிலும் வேறு நிச்சயமானதில்லையோ, அப்பொருளை நீர் தானேயாக அறிந்திருக்கிறீர். பிறகு குருமுகமாகவும் கேட்டிருக்கிறீர்.

71. தனது சங்கல்பவசத்தால் பத்தனாகிறான்; சங்கல்பமின்மையால் முக்தனாகிறான். மகாத்மாக்களால் அறியப்பட்டதெதுவோ அது உம்மால் தானாகவே அறியப்பட்டது.

† "சைத்திய" மென்பது ஜீவனையும், ஓர் அடையாளத்தையும் குறிக்கும்.

72. இங்குப் போகங்களிலும், சகல திருசியங்களிலும் விரக்தி பிறந்திருக்கின்றது. பூர்ண அறிவுடைய வும்மால் அடைய வேண்டுவன வெல்லாம் அடையப்பட்டன.

73. ஓ பிராமணரே! நீர் ஸ்வரூபதபஸில் முக்தரானவர். ‡ பிராந்தியைத் தள்ளும். (அது) புத்திக்கு மிகவும் பாஹ்யமானது எட்டாதது; ஆயினும், பாஹ்யமல்லாதது; அந்தரத்திற்கும் அந்தரமானது.

‡ வேறு பாடப்படி "நீர் ஸ்வரூபத்தை யடைந்தவர், முக்தர்."

74. ஓசுகரே! நீர் பார்த்தும் பாக்கவில்லை. நீ சாக்ஷி. சம்பூர்ணன், கேவலன் என்று ஜனகர் சொல்லவே, சுகரானவர் மௌனமாய், தம்மிடத்து நிற்கும் பரவஸ்துவின்கண் விசிராந்தியை யடைந்தார்.

75. சோகம், பயம், ஆயாசம் என்னு மிவையெல்லாம் தீர்ந்து, ஆசையற்றவராய், சம்சயமற்றவராய் அகண்டமாகிய சமாதியின் பொருட்டு மேருவின் சிகரத்தை யடைந்தார்.

76. அங்கு ஆயிரம் வருஷம் நிர்விகல்ப சமாதியி லமர்ந்து எண்ணெயில்லாத தீபம் போல ஆத்மாவின்கண் சாந்தியை (அல்லது முடிவை) யடைந்தார்.

77. கல்பனையாகிய களங்கமற்றுச் சுத்தராய் நிர்மலமாகிய ஆத்மாவென்னும் பரம பரிசுத்த பதத்தில் மகாத்மாவாகிய சுகர், ஜலத்திவலைகள் சமுத்திரத்தில் ஐக்கியமாவது போல ஐக்கிய மடைந்தார்.

மஹோபநிஷத் இரண்டா மத்தியாயம்
முற்றிற்று.

மு. கோ. நாராயணசாமி ஐயர்,
பி. ஏ., பி. எல்.

---

நாணைய முள்ளார் நலமெலாம் பெறுவர்.
அண்டப் புரட்டர் மாட்சிமை யடையார்.
கணக்கறிந் தொழுகுவோன் கலங்கா திருப்பன்.
வீண்செல வாளர் வேதனை யடைவர்.
கடன்படா வாழ்க்கை கண் மணி யாகும்.

## நீலகண்ட தீக்ஷிதரவர்கள் இயற்றியருளிய
## வைராக்யசதகம்.

(115-வது பக்கத்தின் தொடர்ச்சி).

(40) பிறந்த அதிர்ஷ்டத்தால் தாய் தந்தையர்கள்; செலவு செய்த அதிர்ஷ்டத்தால் பிள்ளைகளும் மாப்பிள்ளைகளும்; கலஹத்தின் அதிர்ஷ்டத்தால் ஞாதிகள் என்று நிச்சயமாய் இருக்கும்போது எதற்காக ஸம்பாதித்தல் வேண்டும்.

இவர்கள் எல்லாரும் ஒருகாரணத்தை அதிர்ஷ்டமாகக் கொண்டு நம்மை ஆசிரயித்திருப்பதால், நமது ஸத்கதிக்கு இவர்கள் பிரயோஜனப்பட மாட்டார்கள். ஆதலால், இவர்களைப் போஷிக்க நாம் கஷ்டப்பட்டுப் பணம் ஸம்பாதிப்பது பயனற்றது என்பது கருத்து.

(41) நமது தகப்பனுருடைய பரலோகத்துக்கு உபயோகமாகுமாறு தினந்தோறும் நாம் எதைச் செய்கிறோமோ அதை உபமானமாக வைத்துக் கவனித்துப் பார்த்தால், அதுவே புத்திரனிடத்து வைராக்கியத்தை யுண்டாக்கப் போதுமான தல்லவா.

(42) தாரித்ரியத்தை (வறுமையை) அனுபவிக்காவிட்டால் அனுபவிக்கக்கூடிய லக்ஷணம் யாது காணப்படுகின்றது? இதிலும் காமம் பூர்த்தியாகாவிட்டால், உலகமானது பிரம்மாபரியந்தம் தரித்திரமானதே.

குறிப்பு:—உலகத்தில் ஜீவராசிகளெல்லாம் எவ்வளவு தரித்திரத்தன்மையை யனுபவித்தாலும், காமங்கள் பூர்த்தியாகவில்லையே என்று கவலை யடைகின்றனவே யொழிய அதனால் மனம் வசப்பட்டு நல்வழிக்காளாவதில்லை என்பது கருத்து.

(43) தனமிருப்பதே ஜாதியன்று; எவனுக்கு எது இஷ்டமோ அதுவே அவனுக்குத் தனமாம். பாமரர்களுக்கு (விவேகமற்றவர்களுக்கு) அந்தந்தப் பதார்த்தங்கள் தனமாய் இருப்பது போல வித்வான்களுக்குத் தரித்திரத்தன்மையே தனமாம்.

(44) பேராசையை யடைந்து விட்டால், எல்லா வுலகங்களையும் அடையவேண்டுவது தான். அவ்வாறு சாந்தியை யடைந்து விட்டால் அவனுக்குத் தனது ஆத்மாவும் இருக்கிறதோ இல்லையோ?

அஃதாவது பேராசையை யடைந்தவனுக்கு இவ்வுலகத்தையே யடையவேண்டு மென்னு மெண்ண முண்டாவதுபோல மனோசாந்தியையடைந்தவனுக்குத் தனது ஆத்மாவினிடத்திலும் ஆசை போய்விடுகின்றதென்பது கருத்து.

(45) எது கொடுக்கிறவனை வசப்படுத்துகிறதோ, எது அவனது பரிஜனங்களுக்கு நல்லவார்த்தை சொல்லுகிறதோ, எது உள்ளேயே வெட்கத்தை யடைகிறதோ, அப்படிப்பட்ட லாபமானது எதற்கு ஸமமானது.

அஃதாவது மனம் தான் அடங்காதபரியந்தம் பணம் ஸம்பாதிக்கவேண்டிய உபாயங்களையெல்லாம் செய்கிறது. அதுவே சாந்தியை யடைந்துவிட்டால், தனக்குள்ளேயே ஒருவித வெட்கத்தை யடைகிறது. அவ்விதம் கிரமமாய்ப் பழக்கத்தை யடைந்து விட்டால் அதுவே ஆத்மலாபத்திற்கு ஹேதுவாகின்றது. இந்த ஆத்மலாபத்திற்கு ஸமமானதுகிடையவே கிடையாது என்பது கருத்து.

(46) ஒரு சாண்வயிற்றை நிறைக்க எவ்வளவு பிரயத்னம்? ஆசமனம் செய்யவேண்டிய ஜலத்திற்காகக் குளம் வெட்டவேண்டுமா?

(47) அரைஜாமம் ஸம்ஸ்காரம்செய்யாவிட்டாலும், இரண்டு ஜாமம் ஆகாரம் இல்லாவிட்டாலும், நன்றாகத்தெரிகின்ற சரீர சௌந்தரிய விஷயத்தில் மூடர்கள் எவ்வளவு ஆசைவைத்திருக்கின்றனர்?

(48) யௌவனமுள்ளவளை மலடி என்கின்றனர். பல பிள்ளைகளுடையவளைக் கிழவி யென்று தள்ளிவிடுகின்றனர். குழந்தை குறைவாயிருப்பவளை விலக்கிவிட்டு வேறு விவாகம் செய்துகொள்ளுகின்றனர். ஆதலால், காமிகளுக்கு எந்தப்பத்னி தான் பிரியமானவளோ?

குறிப்பு:—எவ்விதமிருந்தாலும் மனிதருக்கு ஸ்திரீ விஷயத்தில் திருப்தியுண்டாவதில்லை என்பது கருத்து.

(49) விவாகமில்லாதவர் ஸ்திரீ இல்லையே என்று வருத்தமடைகின்றனர்; விவாகம் செய்துகொண்டவர் இரண்டு பத்னிகள் இல்லையே என்று வருத்தப்படுகின்றனர்; இரண்டு பத்னிகள் உள்ளவர் பரஸ்திரீ இல்லையேயென்று வருத்தமடைகின்றனர். ஆதலால், உலகத்தில் ஸ்திரீ விஷயமாய்த்திருப்தியடைந்தவர்களைக் காண்பதரிதாயிருக்கின்றது.

(50) மன்மதனுடைய கட்டளையை நிறைவேற்றுவதில் இவ்வுலக முழுவதும் ஒரே மாதிரியானது. அதில் மிருகங்கள் மனிதர் தேவரென்னும் பேதம் சொல்மாத்திரமேயாம்.



குறிப்பு:—யாராயிருந்தாலும் அவர் மன்மதனுடைய காமரூபமான ஆக்ஞைக்கு உட்பட்டவரே என்பது கருத்து.

(51) நாம் மலம் மூத்ரம் முதலியவற்றை விஸர்ஜனம் பண்ணுவதற்காக ஒரு இடத்தை ஏற்படுத்திக்கொண்டிருப்பதுபோல ரேதஸ்ஸை விடுவதற்காக ஒரு ஸ்தானமாக ஸ்திரீகளைப் பிரம்மா ஏற்படுத்தியிருக்கிறார்; இவ்விஷயத்தில் ஜனங்கள் எவ்வளவு மோஹத்தை யடைகின்றார்கள்?

(52) விதிப்பிரகாரம் வேதங்களை அத்யயனஞ்செய்து அவற்றின் அர்த்தத்தையும் விசாரம்செய்து, பத்னிகளை விவாஹம் பண்ணிக்கொள்ள வேண்டுமென்று இந்தப் பிரஹஸனத்தை (சிரிக்கும்படியான காரியத்தை) யார் சொன்னது?

(53) இரண்டு பங்குச்சுகத்தை யநுபவிக்கிற ஸ்திரீகள் குரூரர்களாயிருந்தபோதிலும், அவர்களையே மூடர்கள் துக்கப்பட்டு ஸம்பாதிக்கிறார்கள், காப்பாற்றுகிறார்கள், தினந்தோறும் பாலனை செய்கிறார்கள்.

(54) சாப்பிடுங்கள், குடியுங்கள், தின்னுங்கள், விழித்துக்கொண்டிருங்கள், தூங்குங்கள், ஸஞ்சாரம்பண்ணுங்கள், நின்றுகொண்டிருங்கள். (ஆனால்) தேஹபந்தம் முடிவுடன் கூடியது என்பதை மாத்திரம் தினம் ஒரு தடவை யாவது நினைத்துப் பாருங்கள்.

(55) பிரம்மா சாவையெழுதியிருக்கும்போது பூமியை ஜயித்துத்தான் பயனென்ன? ஸ்வர்ணபர்வதமான மேருபர்வதம் கையில் இருந்தால்தான் என்ன? திவ்யமான அப்ஸரஸ் ஸ்திரீகள் இருந்தாலுமென்ன பிரயோஜனம்?

(56) சில நிமிஷங்களே பிழைத்திருக்கிறான். அந்நிமிஷங்களுக்குள் ஒருவன் வேதங்களையெல்லாம் அத்யயனம் செய்தவன் போலாகிவிடுகின்றான்.

*N.* இராமநாத சாஸ்திரி, பண்டிதர்,
அடையாறு லைப்ரெரி, சென்னை.

## நீதிசதகம்.

(114-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

(அ) (துஷ்டராஜாவினுடைய லக்ஷணத்தைத் திருஷ்டாந்தத்துடன் கூறுகின்றார்).

(46) உக்ரகோபிகளான அரசர்களுக்குத் தம்மைச் சேர்ந்தவனென்று ஒருவனும் இல்லை; அக்னி, ஹோமம் பண்ணுகிற யஜமானனையுந் தஹிக்கிறது.

(அ) (துஷ்டப் பிரபுக்களை ஸேவிப்பது அதிகப்பிரயாஸம் என்று கூறுகிறார்).

(47) ஸேவகன் மௌனமாக இருந்தானாயின், அவனை ஊமையென்றும், பேசுவதில் ஸமர்த்தனாயிருந்தானாயின் பஹுபாஷியென்றும் அல்லது அஸம்பந்தமாகப் பேசுகிறவனென்றும், என்ன சொல்லப்போகிறார் என்று நினைத்துப் பக்கத்தில் நின்றானாயின் பயமற்றவனென்றும், பயந்து விலகிநின்றானாயின் அஸமர்த்தனென்றும், உதாஸீனமான வார்த்தைகளைக் கேட்டுப் பொறுமையால் கோபத்தை யடையாதிருந்தால் பயந்தவனென்றும், உதாஸீனமான வார்த்தைகளை ஸஹிக்காதிருந்தால் நற்குலத்திற் பிறந்தவனன்று என்றும் (கூறுகின்றனர்). ஆகையால், ஸேவாதர்மமானது மிகவும் சிரமத்தைக் கொடுக்கக்கூடியது; யோகிகளாலும் அறியத்தக்கது அன்று.

(அ) (எறக்குறைய எதற்காகச் சொல்லவேண்டும்; துஷ்டன் முன் ஒருவரும் நிற்றல்முடியாது என்று கூறுகிறார்.)

(48) துஷ்டர்களியாவரையும் பிரகாசம் பண்ணினவனும், தங்குதடையற்றவனும், தனது கெட்ட காரியத்தை மிகவும் மறந்தவனும், தெய்வவசத்தால் ஐச்வர்யத்தை யடைந்தவனும், குணத்வேஷியுமான துஷ்டனான இந்த ராஜாவினுடைய தேசத்தில் வசிக்கிற எந்த ஜனங்கள் ஸுகமாக வசிப்பார்கள்?

(அ) (துர்ஜன ஸஜ்ஜனர்களுடைய ஸ்நேகப் பிரகாரத்தைக் கூறுகின்றார்.)

(49) துர்ஜனர்களுடைய ஸ்நேகமானது ஆரம்பகாலத்தில் அதிகமாக விருந்து கிரமமாகக் குறைந்து விடும்; ஸஜ்ஜனர்களுடைய ஸ்நேகமானது ஆரம்பத்தில் இலகுவாக விருந்து பிறகு விருத்தியடையும். ஒரு தினத்தின் பூர்வபாகத்திலிருக்கிற சாயை போலத் துஷ்டர்களுடைய ஸ்நேகம் இருக்கிறது; அத்தினத்தின் உத்தரபாகத்திலிருக்கிற சாயைபோல ஸஜ்ஜனர்களுடைய ஸ்நேகம் விருத்தியடைகிறது.

(அ) (துஷ்டர்களுக்குக் காரணமின்றி விரோதமுண்டு என்பதைக் கூறுகிறார்.)

(50) உலகில் புல்லை யாஹாரமாக வுடைய மான்களுக்கும், ஜலத்தால் ஜீவித்துள்ள மத்ஸ்யங்களுக்கும், யதிருச்சையாய்க் கிடைத்ததைக்கொண்டு ஸந்தோஷத்தை யடைந்துள்ள ஸாதுக்களுக்கும், வேடன் வலைக்காரன் வஞ்சகன் என்னுமிவர்கள் நிஷ்காரணமாகவே வைரிகளாகின்றனர்.

### ஸஜ்ஜன பத்ததி.

(அ) (இந்த ஸ்லோகத்தில் மஹத்துக்களுக்கு நமஸ்காரம் பண்ணுகிறார்.)

(51) எவர்களுக்குச் சாதுக்களுடைய சேர்க்கையில் இச்சையும், அந்நியரது குணத்தில் பிரீதியும், வித்யாப் யாஸத்தில் ஆஸக்தியும், தமது பத்னியினிடத்தில் ரதியும் (போகமும்), லோகாபவாதத்தில் பயமும், சிவபெருமானிடத்தில் பக்தியும், மனதை யடக்குவதில் சக்தியும், துஷ்டர்களுடைய சேர்க்கை யின்றியிருப்பதும் ஆகிய நிர்மலமான இந்தக் குணங்கள் இருக்கின்றனவோ அந்த மஹத்துக்களுக்கு நமஸ்காரம் செய்கிறேன்.

(அ) (மஹத்துக்களின் ஸ்வாபாவிகமான குணத்தைக் கூறுகிறார்.)

(52) விபத்காலத்தில் தைர்யமும், ஸம்பத்காலத்தில் பொறுமையும், ஸதஸ்ஸில் (சபையில்) தீரமாகப் பேசுவதும், யுத்தத்தில் பராக்ரமும், யசஸ்ஸில் (கீர்த்தியில்) பிரீதியும், வேதசாஸ்திராப்பியாசங்களில் ஆஸக்தியும் ஆகிய இவையெல்லாம் மஹாத்மாக்களிடத்து ஸ்வபாவமாக இருக்கின்றன.

வி-ஸா-ராமச்சந்திர சாஸ்திரியார், விஷ்ணுபுரம்.

## காரியசித்தியில் விருப்பமுள்ளவன் செய்யவேண்டியவை யாவை?

ராத்ஸ் சைல்ட் என்னும் கனவான் தமது நாணயச்சாலையில் பின்வரும் கட்டுரைக ளடங்கிய அட்டைகளைச் சட்டம்போட்டு ஒவ்வொரு சுவரி லும் தொங்கவிட் டிருந்தாரென்று சொல்லப்படுகிறது. அவை:—

(1) உன் வேலையின் ஒவ்வொரு அம்சங்களையும் ஜாக்கிரதையோடு கவனி.

(2) எவ்விஷயத்திலும் ஊக்கமா யிரு.

(3) நன்றாக யோசனை செய்து உறுதியாய்த் தீர்மானஞ் செய்.

(4) சரியான வற்றைத் துணிவோடு செய்; குற்ற முள்ள வற்றைச் செய்யப் பயப்படு.

(5) துன்பங்களைப் பொறுமையுடன் சகி.

(6) இவ்வுயிர் வாழ்க்கையின் போரைத் தைரியத்தோடும் ஆண்மை யோடுஞ் செய்.

(7) துன்மார்க்கரின் சகவாசத்தை நீக்கிவிடு.

(8) சத்தியத்தைப் பரிசுத்தமுள்ளதாகக் காப்பாற்று.

(9) அந்நியருடைய கீர்த்தியையாவது வர்த்தகத்தையாவது கெடுக் காதே.

(10) சன்மார்க்க முள்ளாரோடு மாத்திரம் கூட்டுறவு செய்.

(11) உன் மனதைக் கெட்ட எண்ணங்களி னின்றும் நீக்கி யிரு.

(12) எவ்வித லாபத்தைக் கருதியாவது பொய் சொல்லாதே.

(13) உனக்கு அறிமுகமானவர்கள் சொற்பமா யிருக்கட்டும்.

(14) நீ உண்மையில் எப்படி யல்லவோ அப்படி பிறர்க்குக்காணும் படி எக்காலமும் பிரயத்தனஞ் செய்யாதே.

(15) நல்ல பழக்க வழக்கங்களை யநுசரி.

(16) உன் கடன்களைத் தீவிரமாய்ச் செலுத்தி விடு.

(17) ஒரு சிநேகிதனுடைய சத்தியத்தைப் பற்றிச் சந்தேகிக்காதே.

(18) உன் பிதா மாதாக்களின் வார்த்தைகளைக் கனம் பண்ணு.

(19) பணம் போனாலும் போகட்டும்; நல்லொழுக்கத்திற் கேதுவாய உன் கொள்கைகளை நழுவ விடாதே.



(20) எவ்விஷயத்திலும் மிதமுள்ளவனா யிரு.

(21) உனக்கு ஒழிந்த நேரத்தை உன்னை விருத்தி செய்து கொள்ளு வதில் பிரயோஜனப் படுத்திக் கொள்.

(22) தீய செய்கையின் வாயிற்படியிலுங் கால் வைக்காதே.

(23) உன் மனோ விகாரங்களை ஜாக்கிரதையுடன் கவனி.

(24) எல்லோருக்கும் அன்போடு உபசாரஞ் செய்பவனா யிரு.

(25) நிலை குலைந்து முயற்சியழிந்து தைரிய ஹீனனாய்த் தயங்காதே.

(26) சரியான வொன்றைச் சாதிக்க வைராக்கியத்தோடு பாடுபடு.

பா. சந்தோஷநாதம் பிள்ளை.

பொருளால் புகழைப் பெறுவது நன்று.
தவத்தைச் செய்பவன் பவத்தை யொழிப்பான்.
நன்னெறி யொழுகான் அல்லவ னாவான்.
மெய்ப்பொரு ளுணர்ந்தவன் மெய்ஞ்ஞானியாவான்.
அகங்கா ரத்தை யழிப்பது நன்று.
உலகந் துதிக்க வொழுகுவோ னுத்தமன்.
பேதைமை யுடையான் மாவிபத் துறுவான்.
அரசரைப் பகைப்பா னடியோ டொழிவான்.
இறந்தபின் வருந்துணை யின்றே தேடுக.
பேராசை யுடையான் பெருந்துன் புறுவன்
தத்துவ மென்பது தன்னை யறிவதாம்.
விகடப் பிரசங்கம் விரும்புவ தொழிக.
கண்ணிலா னென்பான் கல்வியி லாதான்.
அளவாப் பேசுவா னுபத் தடையான்.
பணமுள் ளாரொடு பகைப்ப தொழிக.
சொன்ன சொற்றவ றுதவன் சுத்தன்.
கொடையுளா னின்பந் தடையிலா தடைவான்
ஏகபத் தினியோ டிருப்ப துத்தமம்.
பதிவிர தையின்சொல் பழுதுற வின்று.
கோபப் பகையைக் கெடுப்பவன் குணவான்.
அல்லன செய்யான் நல்லன வுடையான்.
கீழோர் நேசங் கேட்டினை விளைக்கும்.
ஒற்றுமை யிருந்தா லுறுதன வில்லை.
ஊனுண் டொழுகுவா னுபசாந்த மடையான்.
செய்ந்நன்றி மறந்தான் சிதட னாவன்

# கிண்டர் கார்ட்டன் என்னும் பால போதனுமுறை.

(84-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

ஆதலால், ஞானத்திற்குச் சாதனம் விஷயத்திற்கும் இந்திரியங்களுக்குமுள்ள சம்பந்தமே யாம். லௌகிக விஷயங்களின் ஞானம் உண்டானுற்றுன் விஷயங்களைக் குறித்து ஊகித்தலும் தர்க்கித்தலும் கூடும். ஆதலால், நாம் பிள்ளைகளுக்குக் கற்பிக்கும் விஷயங்கள் அவர்களின் பஞ்சேந்திரியங்களுக்கும், உற்றுப்பார்த்தல், யோசித்தல், தர்க்கித்தல் முதலிய சக்திகளை விருத்தி செய்வனவா யிருப்பது அத்தியாவசியகமாம்.

## பஞ்சேந்திரியங்களை விர்த்திசெய்யும் விஷயங்களாவன:—

| இந்திரியங்கள் | | விஷயங்கள் |
|---|---|---|
| கண் | (பார்வை) | வடிவம், நிறம், பரிமாணம், சங்கியை, ஸ்தல பேதம் முதலியன. |
| மூக்கு | (வாசனை) | நல்ல வாசனை, கெட்ட வாஸனை. |
| காது | ( சப்தம் ) | பற்பல ஜந்துக்களின் சப்தங்கள், எழுத்துக்களின் ஒலிகள், பாஷை, பாட்டு முதலியவைகள். |
| நாக்கு | ( ருசி ) | இனிப்பு, புளிப்பு, கசப்பு முதலிய ருசிகள். |
| துவக்கு | (ஸ்பரிசம்) | வெம்மை, குளிர்ச்சி முதலியவைகள். |

சிறு பிள்ளைகளின் மூளையானது உலக விஷயங்களின் சம்ஸ்காரங்களால் நிரப்பப்பட வேண்டுமானுல், அவற்றைப் பிரத்தியக்ஷமாய் அநுபவித்தல் இன்றியமையாதது. உற்றுப்பார்த்தலும் பிரத்தியக்ஷமாய் அநுபவிப்பதெனின், கண் காது முதலிய இந்திரியங்களின் மூலமாய்த்தான் அதனை அநுபவிக்க வேண்டும். இவ்விந்திரியங்கள் தாம் ஞானத்திற்குச் சாதனம். ஆகையாற்றுன், இவற்றிற்கு ஞானேந்திரியங்களென்று பெயரிருக்கின்றது. விஷயங்கள் ஞானேந்திரியங்களின் மூலமாய் மனதால் (மூளையால்) அறியப்படுகின்றன. மனமானது ஒரு இந்திரியத்தோடுசேர்ந்து யாதாவதொரு விஷயத்தை யறிந்துகொண் டிருக்கும்போது மற்ற இந்திரியங்களின் மூலமாய் அவற்றிற்குரிய விஷயங்களையறிதல் அசாத்தியமாம்.

இங்ஙனம், ஒவ்வொரு இந்திரியத்தின் மூலமாயும் மனம் விஷயங்களை யறிதலுக்குத் தான் கவனித்தல் என்று பெயராம். இதைத்தான் அவதானித்தல் அல்லது உற்று நோக்குதல் (Observation) என்றும் சொல்லுவார்கள். உற்று நோக்குதல்தான் சிறுபிள்ளைகளுக்குச் சிறந்த உபாத்தியாயர். இதனை இந்தச் சிறுவர்களிடத்தில் விருத்திசெய்து விட்டால் அவர்களுக்கு உபாத்தியாயர் சொல்லிக் கொடுக்க வேண்டியது ஒன்றுமில்லை.



இந்தச் சக்தி (Power of Observation) பிள்ளைகளுக்கு அவசியமானது. ஆகவே, இதைப் பிள்ளைகளிடத்தில் விர்த்திசெய்யத் தகுந்த பாடங்களைத் தகுந்தமுறையாய்ப் போதிப்பது அவசியம். எவ்வெவ்விஷயங்கள் எவ்வெவ் விந்திரியங்களுக்கு யோக்கியமாகின்றனவோ அவ்வவ்விந்திரியங்களால்தாம் அவை யுற்று நோக்கப்படும். உதாரணமாக:—கண்ணுக்கு வடிவம், நிறம்; காதுக்குச் சப்தம்; மூக்குக்கு வாஸனை; நாக்குக்கு ருசி; கைக்கு (துவக்குக்கு) சீதோஷ்ண ஸ்பரிசம் யோக்யமாம். ஆகவே, நிறம், சப்தம், வாஸனை, ருசி, ஸ்பரிசம் முதலியவை முறையே கண், காது, மூக்கு, நாக்கு, துவக்கு (கைவிரல் முனைகள்) முதலியவற்றுல் அறியப்படுவதாம். ஒரு மேஜையின் மேல் ஒருமாம்பழம் வைக்கப்பட் டிருக்கிறது. இதை ஒரு குழந்தை உற்று நோக்க வேண்டுமானுல் தன்னிந்திரியங்களில் எவற்றிற்கு எவ் விஷயங்கள் யோக்கியமானவையோ அவற்றை யெல்லாம் அறிவது அவசியமாம். சிறுவன் முதலில் பார்க்கிறபோது பழம் இருப்பது தான்நின்று பார்க்குமிடத்திற்கு வலது பக்கத்திலா? இடது பக்கத்திலா? தனக்குச் சமீபமான ஓரத்தின் மூலையிலா? தூரமான ஓரத்தின் மூலையிலா? தன் பார்வைக்கு எதிராயிருப்பது பழத்தின் (காம்பையுடைய) அடிப்பாகமா? நுனிப்பாகமா? பக்கங்களா? பழம் எந்த நிறமுடையது? பழம் முழுமையும் ஒரே நிறமுடையதா? பல நிறமுடையதா? பல நிறமானுல் எந்தெந்த நிறங்கள்? வடிவம் யாது? உருண்டையா? முட்டை வடிவமா? நுனி நீண்டு கூர்மையாயிருக்கிறதா? தட்டையா யிருக்கிறதா? என்று பற்பல விஷயங்கள் அவன் கண்களுக்கு யோக்கியமா (புலப்படு) கின்றன. அப்பழமானது மிருதுவா யிருக்கிறதா? சுற சுறப்பா யிருக்கிறதா? சூடாயிருக்கிறதா? குளிர்ச்சியா யிருக்கிறதா? என்ற விஷயங்கள் துவக்கு (விரல்களின் நுனி) இந்திரியத்தினுல் அறியப்படுவனவாம். இங்ஙனமே அதன் ருசி, வாசனைகள் முறையே நாக்கு மூக்குக்களுக்கு யோக்கியமானவையாம். ஆதலால், மேஜை மேல் வைக்கப்பட்ட மாம்பழத்தையுற்று நோக்குங்கால் அப்பழம் கண், நாக்கு, மூக்கு, துவக்கு என்னும் நான்கிந்திரியங்களுக்கும் விஷயமாகின்றது. செவி யிந்திரியத்திற்கு விஷயமாகிறதில்லை. இங்ஙனம் எவ்வெவ் விஷயங்கள் எவ்வெவ் விந்திரியங்களால் அறியப்படுகின்றனவோ அவற்றை யெல்லாம் கவனித்து அறிதலே உற்று நோக்குதலாம்.

*N.* சுப்பிரமணிய அய்யர்,
கிண்டர்கார்டன் இன்ஸ்பெக்டர், சென்னை.

## வல்லாள மகாராஜன் கதை.

(82-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

எம்பெருமானடியில் அன்பு பூண்ட நாரத முனிவர் பூலோகமடைய பல புண்ணிய நதிகளில் மூழ்கி மூர்த்திகளைத் தரிசித்து ஆங்காங்குள்ள சோலைகளில் தங்கித்தங்கிப் போகுங்காலத்தில் இவ்வருணையம்பதிக்கடுத்த நகரங்களில் இவ்வல்லாள அரசனியற்றும் தரும விசேஷத்தைக் கேள்வியுற்றனர். உடனே அவ்விறைவனைக்காணவேண்டுமென்றும், இவ்வறநெறியில் அவனது சிந்தை மாறாதிருக்கச் சில நீதி புகட்ட வேண்டுமென்றும் திருவுளங்கொண்டு அருணையம்பதியைநோக்கிச்சென்று அந்நாட்டைஅடைந்தனர். அக்காலத்தில் நடக்கும் தரும விசேஷத்தையும், ஜீவகோடிகள் வல்லாளவள்ளலைப்புகழ்ந்து போற்றுவதையும் கண்டும் கேட்டும் மனமகிழ்ந்து ஆச்சரியமடைந்து இவ்வாறு சிந்திக்கத் தொடங்கினார்.

இதுகாறும் யான் இரவிகுல, மதிகுல மன்னர் பலரைக் கண்டுள்ளேன்; அவரும் அறமியற்றியது முண்டு. சேரசோழ பாண்டியர்கள் மனு நீதி தவறாது செங்கோல் செலுத்தியதுங் கண்டுளேன். இவ்வல்லாள மன்னனியற்றும் கரையிலாத் தருமம் போன்று வேண்டியவர் வேண்டியபடியே மன மகிழுமாறு கொடுத்து எவரும் தானம் புரிய யான் யாண்டும் கண்டதுமின்று, கேட்டதுமின்று. மூவருணத்தாரும் வேதவிதிப்படி அளவற்ற யாகங்கள் செய்வதால் இவ்வருணைபம் பதியிலியங்கும் யாகம் கணக்குள்ளடங்காது போலும்! கொடிய வறுமையே யலைவதலது அவ்வறுமையால் அலைபவர் யாருமில்லை போலும்! அறம் வளர்க்கும் அம்மையே இவ்வல்லாளனுக்கு முன்னின்று இவ்வறங்கள் யாவும் வழாது நடத்துகின்றனர்போலும் எனப் பலவாறு எண்ணி மகிழ்ந்துபோய் அரண்மனை சேர்ந்தனர். அவ்வரண்மனை வாயிற்காப்போரருகிற் சென்று அவரை நோக்கி வாயிற்காவலரே நான் சொல்வதைக் கவனிக்கவேண்டும். நும் தலைவனைக் காண எண்ணங் கொண்டு யான் யீண்டுவந்தனன். என்வரவை நும்மவர் மூலமாக அரசனுக்குத் தெரிவிக்கலாமெனக் கேட்கிறேன் என்றனர். கேட்ட வாயிலாளரும் முனிவரரே தங்கள் ஆணை சிரமேற் கொண்டனம் என வணங்கி யுள்ளே போய்த் திருவோலக்கத்தில் உன்னத ஆசனத்து வீற்றிருக்கும் அரசனைக் கண்டு அடிவணங்கிக் கைதொழுது ஒரு புறமொதுங்கி நின்றனர். இவர்களைக் கண்ட அரசனுங் கண்ணோக்கினான். இக்குறிப்பறிந்து காவலர் எமது தலைவரே நம் மரண்மனை வாயிலில் ஒருவர் வந்தனர். அவர் தம்வரவைச் சமுகத்திற்கு விண்ணப்பிக்கும்படியெம்மை யேவினர். அவருருவங் காணின் பரமனடியவர்போல் தோன்றுகிறது. ஆதலால் சீக்கிரத்தில் தங்கள் திருமுன் வந்து அவர் வரவு அறிவித்தோம். தேவர் ஆணைக்கெதிர் நோக்குகின்றனம் எனக்கூறி வணங்கினர். காவலர்காள்! முக்கணனடியவர்போன்ற உருவினராயின் நம்முன்வர



அவருக்கு எத்தடையுமில்லை என்பது அறிவீரன்றோ. ஆதலால் நீவிர் அவ்வடியவர் நடந்துவந்த திருவடி வருந்தா முன்னம் கடிதினில் போய் அழைத்து வருக என்றனன். கேட்ட காவலரும் பணிந்து விடைபெற்றுப் போய் முனிவரர் அடி வணங்கித் தவமுனிவரேறே! தங்கள் வரவைஎமதிறைவன் நல்வரவாகக்கொண்டு எதிர் நோக்குகின்றனன். தாங்கள் எழுந்தருள வேண்டுமென்றனர். நாரதரும் அவர்களுடன் பலவாயில்களைக் கடந்து கோமானிருக்கை நண்ணினர். காவலன் கண்டு தன்னாசனம் நீத்து அன்றலர்ந்த மலரனைய முகத்தினனாய் முனிவர்முன் வந்து தொழுது அழைத்துப்போய் ஆசனத்திருத்தி வணங்கினான்; அருக்கிய மாதி நல்கி யுபசரித்து ஒருபுற மொதுங்கி யிவை புகல்வான்.

கலை மிலைந்த தம்பிரானருளே தலையெனக்கொண்டு துணிந்த எம்தலைவ! எம்முன்னோர் பெருந்தவத்தால் அடிகள் நோக இவண்கிருபை புரிந்தீர்கள், தேவரீரையான் தரிசித்தனன். ஜன்மபலன் அடைந்தனன். பாபவிமோசனனாயினேன். அடியனேன் உரைக்குத் தேவரீர் செவிசாய்த்தருளல் வேண்டும். மனோவாக்குக்காயங்களால் இயற்றப்படும் தபசியர் தபசு தீயவராலுமிருகங்களாலும்விக்கினமாகாது அழிவின்றி நிறைவேறுகின்றனவோ; தபசியர்பசியாறப் பலந்தரும் தருக்கள்வனங்களில்தழைத்து வளர்கின்றனவா? தேவரீர் விதிப்படி புரியும் நித்தியானுஷ்டானங்களுக்கு உபகரணமான தண்ணீர்குறைவின்றி பொய்கைகளில் நிறைந்திருக்கின்றதா? தபோதனர்கள் மனமிசைந்து உண்பதற்காதாரமான நீவாரதானியக்கள் விலங்குகளால் அழிவடையாது செழிப்பாய் வளர்கின்றனவா? பால் பொழியும் இலக்கணமமைந்த ஆவினங்கள் விருத்தியாகித் தீம்பால் பொழிந்து முனிசிரேட்டருக்கு வுதவிபுரிகின்றனவா? சிறந்தகுணம் வாய்ந்தசிட்டர் ஆசிரியர் மொழிக்கெதிர்மொழிகூறாது நடந்து வருகின்றனரா? அவ்ர்கள்சீலமொடு ஆசிரமந்தங்கி உதவுகின்றனரா? தங்களுக்கு அடியேன் செய்யத்தக்ககாரியமேதேனு முளதா? திருவுளங்கூர்ந்து கட்டளையிட வேண்டுமென்று கூறி அடிவணங்கினன்.

இது கேட்ட நாரதமுனிவர் மன்னர்சென்னி மணிமுடி யிடருந் தாளோய்! பனுவலறிந்து தெளிந்து பாராளும் பார்த்திபனாதலால் நீபாங்காய் வினவினை, மிகமகிழ்ந்தனம். விற்றழும்பு வாய்ந்ததடந் தோள்வேந்தே! வல்லாளபூபாலா! நீவாழி நின்னரசுவாழி; நின்னமைச்சும், கோலும், குடியும் வாழி. நின்னிருதுணைவியர்வாழி. நீடூழிவாழி வாழியென ஆசி கூறி அரசனை யாசனத்தமரச்செய்து பின்னுங் கூறுவர்.

அறமலாதவை புரியாது மறைநூற்படி மகிதலமாளும் மன்னவா? நின்னரசுக்குள் எவர்க்குமொரு குறையின்றாயின் எம்மனோருக்குக் குறையெங்ஙனம் நேரும்?

கோகிலாம்பாள் அம்மாள்.
புரசை, சென்னை.

## இந்திரபீடம் கரபாத்திர சுவாமிகளின்
## சம்பிரதாய சிந்தனை வாக்கியம்.

(98-வது பக்கத்தின் தொடர்ச்சி).

46. சுகமெப்போது? துக்கமெப்போது? எனின், (விஷய) அபாவத்தி லெப்போதுஞ் சுகமாம்; பாவப்பட்டால் துக்கமாம்.

47. சுகமெங்கே யிருக்கிறதெனின், நினைவிற் சுகமிருக்கின்றது; விஷயத்திலில்லை.

(48) இன்னுஞ் சுகதுக்கமெப்படி வருமெனின், மொத்தமா யொருசுகம் பிறக்கும்; அந்தச் சுகத்தையறிய வரவே, (விஷய) ஆகாரமாய்ச் சுகதுக்கமாகும்.

(49) இன்னும் † பாமரகாலத்திலும் பாமர நீங்கிய காலத்திலும் சுகமெப்படி யெனின், பெண்சாதியின் மீது முழுப்பிரியமிருந்தது; அதனால் அப்போது சுகம்; அவள் சோரம்போனால் துக்கம்; அப்போதவள் செத்தால் சுகம். இப்படி பிரபஞ்சமுன்னே சுகமாயிருந்தது; தாபத்திரயத்தினாலே பிரபஞ்சந் துக்கமாய்த் தோன்றி விசாரிக்க (பிரபஞ்ச) இச்சை போயிற்று! சுகமிச்சமாயிற்று.

(50) பொன்னும் ஓடுஞ் சரியாவதெப்படி யெனின், தன் வியாபக ‡லகிரி யேறியிருந்தால், உள்ளத்திற்குச்சமத்துவம்வரும்; அதனால், துக்கத்திலும் அனுபூதி, சுகத்திலும் அனுபூதியாயிருக்கும் § திரணீகரம் வரும்.

(51) சுகதுக்க வேதனை பிடியாமல் சுகவறிவு தானாய் விளங்குவதெப்படி யெனின், பொய்யைப் பொய்யென்று மெய்யாய் மெய் நினைவு பிடித்தால், சுகதுக்க வேதனை பிடிக்காது. மெய்யை மெய்யென்று மெய்யாய் மெய்நினைவுபிடித்தால் சுகவறிவு தானாய் விளங்கும்.

(52) சஞ்சிதவாகாமிய பிராரத்துவ முண்டாவதும் நீங்குவது மெப்படி யெனின், சஞ்சிதத்திலிருந்து போசிக்க வந்தது பிராரத்

† பாமரகாலம் - அஞ்ஞானதசை. ‡ லகிரி - பெருக்கு.
§ திரணீகரம்-உலகம் துரும்பெனத் தோன்றல்.



துவம், இந்தப் பிராரத்வம் போசிக்கும்போது வினையேறுவது ஆகாமியம். அது சஞ்சிதத்திற்சேரும். சஞ்சிதமாவதுகட்டுப்பட்டிருப்பது. அது முன்னிச்சைப்பட்ட வகைப்படியே வருமல்லாமல்வேறாக வாராது. இவை தன்னிச்சையென்று கண்டால் மேற் சொன்ன மூன்றும் நீங்கும்.

(53) வாசனைத் தொடக்கினால் பிறவியுண்டென்ப தெப்படி யெனின், எந்த வித்தையும் எந்தப் பழக்கமும் எந்த வாசனையும் ‡ சத்தியமாயிருந்தால் தேகம் விட்டபோது விருத்தியிலடங்கி ஈஸ்வர அறிவிலிருந்து தேகம் வரும்போது வெளியில்வரும்.

(54) அநாதிவினையாவதே தெனின், ஒருவன் வினையை முன்னே நிற்கச் சொன்னால் நிற்கும். அதற்குப் பூர்வபட்சி, அப்படிப் பட்டகருமம்அவன்பண்ணான் (என்றான்). ஆனால், வினையை விசாரிப்போம் § பச்சோந்தியாகிய விஷயத்திற்குத் துரியமாகிய மயில் தான் சமர்த்தாயிருந்தும் தன்னைப் பாராமல் தன் கண்ணைக் கொடுத்து விட்டது; தன்னைப்பார்த்தால் கொடாது. தன்வியாபகத்தைப் பார்த்தபோது அது தன்னிச்சை யென்று தெரியும். தன்னிச்சை யென்று பார்ப்பதற்கு வினை தேவையில்லை.

(55) வீடுபெற்றாவ தேதெனின், உடலைவிட் டுயிர்போம் போது மலர்போன விடத்து அதன் வாசனையுங் கூடப்போவது போலக் கருத்து எந்தவாசனையாயிருக்கிறதோ அந்த வாசனைக்குத் தக்க தேகத்தையே தரிக்கும்.

(56) அசைவி லசைவில்லாமை யெப்படியெனின், அறிவில் நிறைவானால் அசைவில்லை; † போதமிராது.

(57) சூரியனுடைய சந்நிதானத்திலே ¶ சகத்துத் தொழிற் படுவதுபோல அறிவினுடைய சந்நிதானத்தில் சகத்துத்தொழிற் படுவதெப்படி யெனின், (அறிவின் அதிஷ்டானத்தால்) அநித்திய மான சடம் நித்தியமாயிருப்பதுபோலத் தோன்றுகின்றது; அறிவில்லாத சடம் அறிவதுபோல விளங்குகின்றது; துக்கரூபமாகிய சடம் சுகமயம்போல இருக்கின்றது. ஆகையால் அறிவு சொரூப சந்நிதானத்தில் சடந்தொழிற் பட்டாலும் சடம் பொய். சடத்தி லெல்லாம் சச்சிதாநந்த சொரூபம் விளங்குகின்றது.

(58) அத்தியாரோபமாவது யாது? அபவாதமாவது யாது? எனின், தானே நவநவமாய் விளங்கவேண்டுமென்று ஸ்புரித்த

‡ சத்தியமாயிருத்தல் - அழுத்தமாயிருத்தல்.
§ பச்சோந்தி - பச்சையோணான்.
† போதம் - உலககாட்டம்.
¶ சகத்து - பிராணிகள்.

அறிவை மறந்தாகாரமானதே அத்தியாரோபமாம்; அதிற்றானிறைந்ததே அபவாதமாம்.

(59) சட்வித லிங்கத்தில் உபக்கிரம உபசங்காரமாவதேதெனின், (1) சிருஷ்டிக்கு முன்னே சத்தாமாத்திரமாயிருந்ததில் தன்னையறிய வியாபகஸ்புரணமுதித்தது சிருஷ்டி; ஸ்திதிகாலத்திலுந்தானே விளக்க வியாபகமாயிருக்கின்றது ஸ்திதி; ஸ்புரணத்தில் தான் விளங்கிப்போனது உபசங்காரம். (2) அப்பியாசமாவது யாது? சச்சிதானந்தத்தை யொன்பது பிரகாரமாயனுசந்திப்பது அப்பியாசம். (3) அபூர்வதையாவது யாது? கடமில்லையென்பதுபோலஅபாவமான அறிவில்லை; இருக்கிறது பிரத்தியக்ஷ வியாபக விளக்கமான அறிவென்பது அபூர்வதை. (4) பலமாவது யாது? சர்வமுந்தானென்றறிந்ததே பலமாம்(5) அர்த்தவாதமாவது யாது? தோன்றினபோதம் தன்னை விளக்கிவிட்டுக் கெட்டுப்போனது அர்த்தவாதமாம். (6) உபபத்தியாவது யாது? காரணமான வியாபக விளக்கமாகிய தன்னைத் தவிரக் காரியமில்லை யென்பது உபபத்தியாம்.

(60) உற்பத்தி ஸ்திதிலயமுண்டாயிருக்க இல்லை என்பதெப்படி யெனின், ஸ்புரணம் வந்ததே யுற்பத்தி; இந்த உற்பத்தியான ஸ்புரணந்தானாயிருக்கிறதென்பதைக் காட்ட வந்தபடியாலுற்பத்தியில்லை. ஸ்திதியேனில்லை யெனின், மோனாதீதமான சொரூபம் மோனத்திற்றானாய் விளங்குகின்றது; துரியத்தில் விளக்கந்தானாயிருக்கின்றது; ஆனந்தத்திற் பிரியந் தானாய் விளங்குகின்றது; ஞானத்திற்றான் தெரிவாய் விளங்குகின்றது; பாவனை விஷயத்திற்றானே தானாய் விளங்குகின்றது. ஆகையால், எங்குந் தானே தானாய் விளங்குகின்றபடியால் ஸ்திதியில்லை. எல்லாம் ஒடுங்க, லயமேனில்லை யெனின், எல்லாந் தானான வியாபகமானபடியால் லயமில்லை. இப்படி உற்பத்தி ஸ்திதி லயமிருக்கையிற்றானே தான் பிரமானந்த ரசமாய் விளங்குகின்றபடியால் உற்பத்திஸ்திதிலயமில்லை. இதற்குச் சாத்திரம் "புத்தோக முத்தோகம் பூரணானந்தோகம்" என்றிருப்பதே. இதற்கர்த்தம்:—புத்தோகமென்பது புதிது புதிதாயிருக்கிறபடியாலும் எப்போதும் புதிதென்றபடியாலும் சிருஷ்டியில்லை; முத்தோகமென்பது முன்னிருந்ததே இப்போதும் இனிமேலும் மூன்று காலத்திலும் விளங்குகின்றபடியாலும் எப்போதும் பழையதுஎன்றபடியாலும்வேறே ஸ்திதியில்லை; பூரணானந்தோகமென்பது தான்தானே எங்கும் வியாபகமாய் † நிபிடீகரித்திருக்கின்றபடியாலும், இந்தப்படி யனுபவிக்கின்றபடியாலும், ஒரு காலத்திலும் லயமில்லை.

வரும்.

† நிபிடீ கரித்தல்-(கடத்தில் மண்போல) நெருங்கியிருத்தல்.

# உலகத்தியல்பு.

(44-வது பக்கத்தொடர்ச்சி).

ஆகாயமென்று நாமெப்போதும் வழங்கிவரும் அது நமது கண்ணுக்குத் தோற்றிக் கொண்டிருக்கும் வானத்தின் கூடாரத்தால் அளவு படுத்தப்பட்டிருப்பதே. அவ்வாறு வரையறுக்கப்பட்டுள்ள அஃது எவ்வாறு வியாபகமாகி வரையறைக் குட்படாதிருக்கும் என்று ஒரு சங்கை சிலருக்கு உதித்தல் கூடும்.

பொருள்களை மனமானது இந்திரிய வாயிலாக அறிகின்றது. அவற்றை யறியும்போது அந்தந்த ஆகாரத்தை மனம் ஏற்கின்றது. ஆதலால் அகண்டமென்று மேலே சொன்ன ஆகாயத்தின் முழுச் சொரூபத்தையும் ஒருவன் காண அல்லது அறியவேண்டின், அவனது மனமும் அகண்டமாக வேண்டும்; அத்தன்மையை மனம் அடையுமாயின் அதற்குச் சொரூபம் அற்றுவிடவேண்டும். அப்போது அஃது ஆகாயத்தை யறியாது. மேலும் மனம் ஆகாயத்தைத் தனியாக அஃதாவது ஒரு பொருளின் சம்பந்தமுமின்றி அறிந்ததாக எவருக்கும் அனுபவமின்று, ஆதலால் அஃது அகண்ட சொரூபத்தை அடையாதென்பது விளங்குகிறது. மேலும் எவ்விதச் சாஸ்திரிகளும் அஃது அகண்டத் தன்மையை யடையக்கூடுமென்று ஏற்காமையானும், அநுபவத்தில் அவ்வாறு நிகழ்ந்ததாக எக்காலத்திலும், எவ்விடத்திலும் எவரும் கூறாமையானும் அஃது அறியப்பட்டதன்று. ஆனால் ஆகாயமாகிய இடம் நமது கண்ணுக்குத் தோற்றுகின்ற மேல் கூடார அளவுடையதன்றென்று பின்வரும் விஷயத்தாலும் சோதனையாலும் விளங்கும்:

இரண்டொரு வருடங்களுக்கு முன்னர் ஹேலெக்ஸ் என்று ஆங்கிலேயபாஷையில்வழங்கிவரும்ஒருதூமகேதுவைக்கண்டோம்; அஃது அநேக கோடி யோசனை (யோசனை 10 மைல்) நீளமுள்ளதென்றும், அது மணி ஒன்றில் ஆயிரம் யோஜனை யோடிக்கொண்டிருக்கின்றதென்றும் நட்சத்திர சாஸ்திராராய்ச்சி யுடையார் கூறுகின்றனர். மேலும் இது தனது சஞ்சாரத்தில், இப்பூமியிலுள்ள நமது கண்ணுக்குத் தோற்றக் கூடிய அவ்வளவு நெருக்க நிலையில் 75 வருடத்திற் கொருமுறை வந்து நமக்குத் தோன்று

மாம். இது 75 வருடத்திற்கு முன்னரும் ஒரு முறை தோன்றியிருக்கின்றதென்று வயது முதிர்ந்த வயோதிகர்கள் (அஃதாவது 90 க்கு மேற்பட்ட வயதுடையவர்கள்) நேரே பார்த்ததாகச் சொல்லுகின்றார்கள். இது நமது பூமியினருகில் 75 வருடத்திற்கொருமுறை வந்து போகின்றமையால், இஃது இதனருகில் வந்தநாள் முதல் சுமார் 38 வருடம் வரை இப்பூமிக்கு அப்பாற்பட்டோடுகின்றதென்றும், பிறகு பூமியை நோக்கி யோடுகின்றதென்றும் ஏற்படுகின்றன. இதனது அளவையும், வேகத்தையும் கருதினால் இஃது ஓடித்திரும்பும் அளவுக்குள்ள ஆகாயமாகிய இடத்தை யோசிக்கின் என்னென்றுசொல்லுவது? இஃது ஒன்றேயோ; இல்லை. இத்தூமகேதுவைப் பார்க்கிலும் எத்தனையோ கோடி மடங்கு விஸ்தீரணமுள்ளனவும், ஒரு க்ஷணகாலத்தில் பல்லாயிரம் யோசனை ஓடிக்கொண் டிருக்கின்றனவுமான தூமகேதுக்கள் எண்ணிறந்தன ஆகாயத்திலுண்டென்று வானசாஸ்திராராய்ச்சி யுடையார் கூறுகின்றனர். இவ்வாறுள்ள அவற்றில் இப்போதுள்ள கருவிகளின்(Telescopic Instrument) சகாயத்தால் கண்டுபிடிக்கப்பட்டன 39 தாம். இவையும் ஒன்றோடொன்று நெருங்காது அநேக கோடி கணக்கான தூரத்திலேயே சென்றுகொண் டிருக்கின்றனவாம். இவை நமது கண்ணுக்குப் புலப்பட்டு நட்சத்திரமென்று வழங்கிவரும் அவ்விசேடங்கள் அல்ல. இவ்வாறுள்ள இவற்றுள் ஒவ்வொன்றும் எண்ணிறந்த நட்சத்திரங்களும் தனக்குத் தனக்கென்று உரிமை கொண்டுள்ள ஆகாயமாகிய வெளியை நோக்கின், ஆகாயத்தின் அளவை என்னென்று சொல்லுவது? இப்படி அளவு கடந்து கண்ணுக்கும் கருத்துக்கும் எட்ட முடியாதிருக்கும் ஆகாயத்தைச் சுற்றியுள்ள மேற்கூடாரம் எங்கே யிருக்கிறதென்று சொல்லுவது ? அளவு கடந்துள்ள ஆகாயத்தின் கூடாரம் ஆகாயத்தின் முடிவானவரம்பியிருக்கிறதென்று சொல்லின், அதுவும் பின்வரும் சோதனையால் பொருந்தாதென்று விளங்கும்.

வ. ஆறுமுக செட்டியார்,
முத்தியாலுபேட்டை, சென்னை.

# பெண் கல்வி.

(26-வது பக்கத்தின் தொடர்ச்சி)

நமது பெண்களைப் பாடசாலையிற் கற்பிப்பது நலமா என்னும் விஷயத்தில் பாடசாலையின் இருப்பிடம், அது வைக்கப்பட்டதன் நோக்கம், அதிற்கற்கும் பெண்களின் பெற்றோர்களின் தொழில், குணாகுணங்கள் முதலிய விஷயங்களைப் பற்றியும், நமது பெண்கள் எத்தகைய உபாத்திமார்களால் கற்பிக்கப்படுவது நலம் என்பதைப் பற்றியும், இதுவரையும் கவனித்தோம். இதற்கு மாறாகப் பாடசாலையானது தகுந்த விடத்திற் கட்டப்படாமலும் நமது நோக்கத்திற்கு அநுகூலமாய் ஸ்தாபிக்கப்படாமலும், நம்முடைய அந்தஸ்துக்கு மீறின அல்லது தாழ்ந்தவர்களின் பெண்களை மாணாக்கர்களாக வுடையதாயும், யௌவன புருஷர்களையும், உபாத்தியாயர்களுக்குரிய இலக்ஷணங்களைப் பெறாதவர்களையும், பதிபக்தி, தெய்வபக்தி, மரியாதை, சத்தியம், தயை, பொறுமை முதலிய நற்குணங்களைப் பெறாத ஸ்திரீகளையும் உபாத்தியாயர்களாக வுடையதாயும் இருக்கும் பக்ஷத்தில் நமது பெண்களை யதிற் கற்பிப்பதைக் காட்டிலும் கற்பிக்காமலிருப்பதே நலமாம். பெண்களுக்குக் கல்வி கற்பிப்பதன் நோக்கம் அவர்கள் சன்மார்க்கத்தில் ஒழுகித் தங்கள்குடும்பங்களுக்கு உபயோகமுள்ளவர்களாக இருப்பதற்கே யன்றி, நல்லொழுக்க மென்பது சிறிதேனு மில்லாமலும் தமது கணவரிடத்துப் பக்தியில்லாமலும் மாமனார் மாமியார் முதலிய பெரியவர்களிடத்தில் மரியாதை சிறிதேனு மில்லாமலும் இருப்பதற்கன்று. இதனால் ஸ்திரீகளுக்குக் கல்வி கற்பிப்பதன் நோக்கம் அவர்களை நல்வழியில் பழக்குவதற்கே யென்பது பெறப்பட்டது. இந்நோக்கத்தின் ஈடேற்றத்திற்குத் தகுந்த பாடசாலைகள் இராமையாற்றான் சிலர் பெண்களுக்கு (ஒழுக்கமின்றிய) கல்வி தீங்கைத் தருமேயன்றி நன்மையைத் தராதென்று அபிப்பிராயப்பட் டிருக்கின்றனர். எழுதப்படிக்கத் தெரியாவிடினும் நல்லொழுக்க மிருந்தால் அதுவே பெண்களுக்குப் போதுமானதாம். ஒழுக்க மில்லாதவரின் கல்வி கள்வன் கையிலிருக்கும் வாளாயுதத்திற்கும், ஒழுக்கமுடையவரின் கல்வி சுத்தவீரன் கையிலிருக்கும் வாளாயுதத்திற்கும் நிகராகும். எங்ஙனமெனின்,

கள்வன் தனக்குக் கிடைத்த வாளாயுதத்தினால் காட்டு வழிகளில் வரும் ஏழைகளையும், நோயாளிகள், வயோதிகர், சிறுவர் முதலிய பலவீனர்களையும் பழிபாவங்கட்கஞ்சாது துன்பப்படுத்துவான். சுத்தவீரனோ தன் வாளாயுதத்தைத் தன் தேசத்தையும் தன்னையும் நல்லோரையும் காத்தற் பொருட்டும், தீயோரைத் தண்டிக்கும் பொருட்டும் உபயோகிப்பான். இங்ஙனமே நல்லொழுக்கம் சிறிதுமின்றிய ஸ்திரீகளின் கல்வியோ தாங்கள் விரும்பிய ஆடவருக்குக் கடிதமெழுதுவதிலும், பெரியோருக்கு முன் அடக்கமின்றிப் பேசுவதிலும், தம் கணவனை உதாசீனம் செய்வதிலும் உபயோகப்படுகிறது. நல்லொழுக்கம் நிரம்பிய ஸ்திரீகளின் கல்வியோ தமக்கும் தங்குடும்பத்திற்கும் இகபரஸாதனமான தர்மங்களுக்கும் உபயோகமாயும் தேசக்ஷேமத்திற்குக் காரணமாயும் இருக்கின்றது. ஸ்திரீகளுக்குக் கல்வி கற்பிப்பது பெரிய வித்வத் சபைகளிற் சென்று பிரசங்க மாரி பொழியவும், கோர்ட்டுகளிற் சென்று வாதாடவும், பகிரங்கமாய் ஆடவருடன் பேசித்திரியவும், இன்னும் இவ்வித அடக்கமற்ற பற்பல தொழில்கள் செய்யவும் அன்று. கல்வி அடக்கமுடைமைக்கே யன்றி அடக்கமின்மைக் கன்று. ஸ்திரீகள் எவ்வளவு கற்றவர்களாயினும் "பேதைமையென்பது மாதர்க் கணிகலம்" என்பதைச் சிந்தித்து அடக்கமுடையவரா யிருப்பது அவசியமாம். ஆகவே, பெண்களுக்கு எழுதவும் படிக்கவும் தெரிவதைக் காட்டிலும் சன்மார்க்கப் பழக்கமே முக்கியமானதாம். சன்மார்க்கப் பழக்கத்திற்கு நல்லோர் வசிக்குமிடத்திற் கட்டப்பட்ட பாடசாலையில் பல நற்குணங்களமைந்தவர்பால் கற்கும் சிறுமிகள், பதிபக்தி, தெய்வபக்தி, அடக்கம், சத்தியம், பொறுமை முதலிய பல சற்குணங்களைப் பெறுவர். இந்நோக்கத்துடன் ஸ்தாபிக்கப்பட்ட பாடசாலையும், சத்சகவாஸமும், தகுதியான உபாத்தியாயர்களுமே பெண்கல்விக்குத் தகுந்தகாரணங்களாம். பாடசாலையின் இடம், நோக்கம், சகவாசம் முதலியவை பிரதிகூலமா யிருக்கும் பக்ஷத்தில் தகுந்த உபாத்தியாயர்களைக் கொண்டு பெண்களுக்கு வீட்டிலேயே கற்பிப்பது மிகவும் நலமாம். இது நிற்க "எத்தகைய விஷயங்களை நமது பெண்களுக்குக் கற்பிப்பது நலம்" என்னும் விஷயத்தை இனிக் கவனித்தல் அவசியமாம்.

*N.* சுப்பிரமணிய அய்யர்,
இண்டர்கார்டன் இன்ஸ்பெக்டர், சென்னை.

# டெல்லி நகரப்பிரவேசத்தில் ராஜப்பிரதிநிதிக்கு நேர்ந்த விபத்து.

23 - 12 - 12 ந் தேதி பகல் 11 மணிக்கு ராஜப்பிரதிநிதி லார்ட் ஹார்டிஞ்ச் அவர்கள் டெல்லிக்கு ரயில்வே ஸ்டேஷனில் வந்திறங்கி நௌபத்கானாவிற்குச் சென்று அங்குச் சிங்காரித்திருந்த "மாடுஜாஜ்" என்னும் யானையின்மீது தமது பத்தினியாரோடேறி டெல்லி நகரப் பிரவேசஞ்செய்ய ஊர்வலம் வந்தபோது சந்தினிசௌக்கில் ஒரு மெத்தைவீட்டின் மீதிருந்து யாரோவொரு படுபாவி, ராஜப்பிரதிநிதிமீது வெடிகுண்டெறிந்தான். ராஜப்பிரதிநிதிக்கும் அவர் மனைவியார்க்கும் பின்னேயிருந்த ஒரு ஜமேதார் அதனாலிறந்துபோனார்; லேடி ஹார்டிஞ்சு சிறிதுகாயமுமின்றித் தப்பினார்; ராஜப்பிரதிநிதிக்கோ பலமாய் இரத்தமொழுகக் காயமுண்டாயிற்று. அதனை அவர் சிறிதும் பாராட்டாமல் ஊர்க்கோலத்தை நிறுத்தவேண்டாமென்று கூறினார். லேடி ஹார்டிஞ்ச், ராஜப்பிரதிநிதிக்குப் பலமாகக் காயம்பட்டிருப்பதையும், அறிவுமயங்கி யிருப்பதையு மறிந்து, ஊர்க்கோலத்தை நிறுத்தினார். அவர் யானையினின்றும் இறக்கப்பட்டு வைஸ்ரீகல் அரண்மனைக்கு மோட்டார் வண்டியின்மீது கொண்டுபோகப்பட்டு, அன்றுமாலை அவரது வலது தோள்பட்டையின் பின்பக்கத்திலிருந்து மூன்று சிறிய ஆணிகளும் சில இரும்புச் சன்னங்களும் ரணவைத்தியஞ்செய் தெடுக்கப்பட்டன. அவரது வலது தோள்பட்டையின் பின்பக்கத்தில் 4 அங்குல நீளமாகப் பலத்தகாயம் பட்டது. கழுத்தின் வலப்பக்கத்திலும் இடுப்பின் வலப்பக்கத்தின் நான்கிடங்களிலும் சொற்பமாகக் காயமுண்டாயிற்று. அவருடைய தேகஸ்திதி இப்போது சௌக்கியமாகி வருகின்றது. அவர் ரணகாயம் ஆறி யுட்காரக்கூடிய நிலையிலிருக்கின்றார். அவர்க்கு இடுக்கண் நேர்ந்த அன்று அங்கு யாவரும் அடங்காத ஆத்திரமும் துக்கமுங் கொண்டனர். ஆனாலன்று டில்லி நகரப்பிரவேசம் ஒருவாறாக முடிவுபெற்றது. ஸர்-ஹென்றி மெக்மோஹன் தர்பாரின் ஆரம்பத்தை விளம்பரப்படுத்த, பஞ்சாப்-லெப்டினண்ட் கவர்னரான ஸர்-லூயிடேன் ஒரு நீண்ட உபந்நியாசஞ் செய்து, இதுகாறும் எம்முடைய ஆளுகையிலிருந்த

டெல்லிமாநகரை இனி ராஜப்பிரதிநிதியின் ஆளுகைக்கொப்புவித்தேனென்று கூறினார். ராஜப்பிரதிநிதி நிருவாக சபையின் முதல்மெம்பரான ஸர் கை ப்ளீட்வுட் உல்சன் அவர்கள் தர்பார் ஹாலில் ராஜப்பிரதிநிதியின் ஆசனத்தில் வீற்றிருந்து அப்போது ராஜப்பிரதிநிதி செய்யவேண்டியதைச் செய்தனர். ராஜப்பிரதிநிதியின் டெல்லி நகரப்பிரவேச ஊர்க்கோலத்திற்குக் காஷ்மீர் மகாராஜா முதலியவர்கள் விஜயஞ் செய்திருந்தனர். அவர்கள் யாவரும் அன்று பெரிதும் வருத்தமுற்றுப் பரிதாபமடைந்தனர்.

ராஜப் பிரதிநிதியின்மீது வெடிகுண்டெறிந்தவனைக் கண்டுபிடிப்பவர்க்குக் கவர்ன்மெண்டாரால் 50000 ரூபாயும், டெல்லியில் பொதுமீட்டிங்கில் வசூலாகுந் தொகையில் 8000 ரூபாயும் இனாம் கொடுக்கப்படுமென்று விளம்பரஞ் செய்யப்பட்டிருக்கின்றது. ராஜப்பிரதிநிதிக்கு நேர்ந்த விபத்தைப்பற்றிய அனுதாபத்தந்திகள் அளவிறந்து வந்துகொண்டிருக்கின்றன. வெடிகுண்டெறிந்த பஞ்சாப் நாஷனல்பாங்கியின் கட்டடம் போலீசாரா லுடனே காவல் செய்யப்பட்டது. அங்குச்சிலர் சந்தேகத்தின்மீது பிடிக்கப்பட்டிருக்கின்றனர். போலீசார் மூடிய அறையில் அவர்களை விசாரணை செய்துவருகின்றனர். இரண்டு சிறுவர்கள் மெத்தையிலிருந்து தெருவிலோடினார்களென்றும், ஒருவன் ஏணியொன்றை நாஷனல்பாங்கியின் கட்டடத்திற்குக் கொண்டுபோனானென்றும் போலீஸாரால் பிடிக்கப்பட்டிருக்கின்றனர். வெடிகுண்டு போட்டபோது 12-பேர் காயமடைந்தனரென்றும், அவர் குணமடைந்து வருகின்றனரென்றும் சொல்லப்படுகின்றன. வெடிகுண்டெறிந்தவனைக்கண்டுபிடிப்பவர்க்கு 5 ஆயிரம் 10 ஆயிரம், 30 ஆயிரமாக வெகுமதிதரச் சுதேசவரசர்களும் மற்றவர்களும் முன்வந்திருக்கின்றனர். ராஜப்பிரதிநிதியவர்கள் வெடிகுண்டுபட்ட அவஸ்தையோடு (வெடிகுண்டுபட்டவன்று) என் பிராணனை வாங்கச்செய்த முயற்சியால் எனக்கு இந்தியாவிடத்திலும் இந்தியரிடத்துமுள்ள நேசப்பான்மை நீங்காது; அஃது எனது ராஜ்யமுறையிலும் ஆளுகையின் தன்மையிலும் மாறுதலைச் செய்யாது; இந்தியாமுற்றும் திகிலும் வெட்கமுமடைந்து மகிமைகுறைந்துபோகுமே யென்று நான் அநுதாபமடைகின்றேன் என்றுகூறினார். டில்லியில் அநேகரிடத்தில் வாக்குமூலம் வாங்கப்பட்டுவருகின்றது.

# வர்த்தமானம்.

பிரிட்டிஷ் ராஜாங்கத்தின் ஜனத்தோகை :—பிரிட்டிஷ் ராஜாங்கத்தி லுள்ள ஜனத்தொகை 4040,00000 ஆம். இத்தொகையுள் பிரிட்டிஷார் தொகை ஐந்து கோடியே 60 இலட்சமாம்.

கொசுக்கடியினின்றுந் தப்பும் வழி:—மஞ்சள்நிற வுடை தரித் திருப்பவரைக் கொசுக்கள் கடிப்ப தில்லையாம்; சிகப்பு நிற வுடை தரித்திருப்பவரை மிகுதியாகக் கடிக்குமாம்.

இரண்டு குரங்குகளின் விசேஷ அறிவு:—ஹிப்பொடிரோம் என்னும் சர்க்கஸ் கம்பெனியாரிடத்து மாக்ஸ், மாரிட்ஸ் என்னும் பெயருள்ள இரண்டு வாலில்லாக் குரங்குக ளிருக்கின்றனவாம். அவை 6 பாஷைகளிற் பேசக் கற்றிருக்கின்றனவாம்; சுருட்டுப் பிடிக்குமாம்; ஒயின் முதலியன குடிக்குமாம்; பைசிகலின்மேலறிச் சவாரி செய்யுமாம்; துரைகளைப்போல மேஜையி லுட்கார்ந்து சாப்பிடுமாம்; சட்டைகளைத் தாமே தரித்துக்கொள்ளுமாம்; இரவில் கட்டிலில் போர்வையினால் உடம்பை மூடிக்கொண்டு படுத்துக் கொள்ளுமாம்; வெந்நீரில் ஸ்நானஞ் செய்யுமாம்; பல் விளக்குமாம்; படங்கள் நிறைந்த புஸ்தகங்களைக் கண்டால் மிகு பிரியமாகப் பார்க்குமாம்; முன்னறிந்தவனைப் பின்னு மறிந்து கொள்ளுமாம்; மயிராற் செய்த எந்தக் கம்பளியையும் தொடமாட்டாவாம்.

பெண் ஜட்ஜ்.—அமெரிக்கா ஐக்கியமாகாணத்தில் அதஸ் ஸ்கோட் என்னு மொரு பெண்மணி ஜட்ஜாக விருக்கின்றனர். இவர்தாம் ஸ்திரீகளுள் ஜட்ஜாக நியமிக்கப்பட் டிருப்பவர்.

பட்சிகளும் முட்டைகளும் சேர்த்துவைத் திருப்பவர் :—மிஸ்டர் A. O. ஹியூம்என்பவர் இந்தியாவிலிருந்து 82000 வகையானபட்சிகளும், 16000 வகையான முட்டைகளும் சேர்த்து வைத்திருக்கின்றார். இவை 1862-1885 வருடங்களில் சேர்க்கப்பட்டனவாம். ஷை பட்சிகளுள் 285 வகையான விசித்திரப் பட்சிக் கூட்டங்களிருக்கின்றனவாம்.

தீக்குச்சி :—உலகத்தில் 37 கோடி பவுண்டு விலையுள்ள தீக்குச்சிகள் செலவாகின்றன.

**வாழைப்பழம் :**—168000 குலை வாழைப்பழம் வெஸ்ட் இண்டீசிலிருந்து இங்கிலாந்திற்கு ஏற்றுமதி யாயின. அவை அங்கு ஒரே தினத்தில் செலவாய் விட்டனவாம்.

**கால் நடைகளின் மரண விகிதம் :**—சென்னை ராஜதானியில் சென்ற௵ மார்ச்சு மாதம் 31-ந்தேதியோடு முடிவான ஆறுமாத காலத்தில் 4593 கால் நடைகள் கோமாரியா லிறந்தன; இதற்கு முன் ஆறு மாதத்தில் 5961 கால் நடைகளும், அதற்கு முன் ஆறு மாதத்தில் 9282 கால் நடைகளும் இறந்து போயின. இவ் விகிதத்தினால் கோமாரியால் கால் நடைகளிறத்தல் குறைவுப்பட்டு வருகின்றதென்று தெரிகின்றது. இதற்குக்காரணம் கோமாரி பரவுமிடங்களி லெல்லாம் வெட்டிரினரி ஆபீஸர்கள் சென்று நோய்பரவவொட்டாது செய்த முயற்சியேயாம். இவ்வியாதியினால் கஞ்சம், கிருஷ்ணா, மலபார், சித்தூர், அநந்தபூர், சேலம், தென்கன்னடம், மதுரை, ராமநாதபுரம் என்னும் ஜில்லாக்களில் கால்நடைகள் மிகுதியும் சேதமாயின.

இங்கிலாந்திலுள்ள இந்தியமாணவரின் தொகை.—இப்போது இங்கிலாந்தில் இந்திய மாணவர் 1000-க்கு மேற்பட் டிருக்கின்றனர்.

## விக்கலுக்கு மருந்து.

(1) விக்கல் கண்டிருப்பவர்களுக்குச்செம்பருத்தியின் விதையைச்சட்டியிலிட்டுப் பொன்வறலாக வறுத்துப் பன்னீர்விட்டு உடனே இறக்கி ஆறிய பிறகு அரைக்கால் ஆழாக்கு அளவாக ஒருமணி நேரத்துக் கொருமுறை கொடுத்துக் கொண்டுவந்தால் விக்கல் நின்றுவிடும்.

(2) அல்லது குளவியின் அரக்குக் கூண்டைச் சுத்தஜலத்தில்காய்ச்சி அரை ஆழாக்கு அளவாக ஒருமணி நேரத்திற்கு ஒருமுறை கொடுக்க வேண்டும்.

(3) அல்லது ஒரு பலம் சித்தாமணக் கெண்ணெயையும் அவ்வளவு முலைப்பாலையும் வெண்ணெய்போல் குழைத்துக் கொண்டு, அதில்பாதி உள்ளுக்குக் கொடுத்து மற்றப்பாதியைத் தொண்டையிலிருந்து தொப்புள் பரியந்தம் மெல்லீஸ்துணியை இரண்டு விரற்கடை அகலத்தில் போட்டு அதன்மீது விடாமல் தடவிக்கொண்டு வரவேண்டும். அப்படி செய்து வந்தால் விக்கல் நின்று விடும்.

(4) அல்லது நண்டுவளைக்குள் இருக்கும் ஜலத்தை மண்கலவாமல் எடுத்துக் கொண்டுவந்து அடிக்கடி கொடுத்துக்கொண்டு வந்தாலும் விக்கல் நின்றுவிடும்.

(5) அல்லது கரும்புரசத்தை அடிக்கடி கொடுத்துக்கொண்டுவந்தால் விக்கல் நின்றுவிடும்.

டி. எஸ். குமாரசுவாமி பிள்ளை, சூளை, சென்னை.

# Wise Sayings.

19. Know this Atman, give up all other vain words and hear no other.

20 Unity in variety is the plan of the universe.

21. None has power to destroy the unchangeable.

22. Death is better than a vegitating ignorant life; it is better to die on the battlefield than live a life of defeat.

23. Be not in despair, the way is very difficult; it is, as it were, walking on the blade of a razor. Yet, despair not, arise, awake, and find the ideal the goal.

24. Without birth or death, eternal, ever existing is the soul of man.

25. In this world of many he who sees that One in this ever changing world, he who sees Him who never changes as the soul of his own soul, his existence, his own self, he is free, he is blessed, he has reached the goal.

26. Men of childish intellect, ignorant persons, run after desires, which are external, and enter the trap of far-reaching death, but the wise, understanding immortality, never seek for the eternal in this life of finite things.

27. He goes from death to death who sees the many here. See that ONE and be free.

28. As water which falls upon a mountain breaks into pieces, and so many various streams run down the sides of the mountain, so all the energies which you see here are that ONE UNIT beginning.

சிவப்பிரகாசப்

## பெருந்திரட்டு.

சொரூபானந்தரால் திரட்டப்பட்டது.

இதுகாறும் வெளிவராதது.

விலை ரூபாய் மூன்று—வி. பி. முதலிய சார்ஜ் பிரத்தியேகம்.

மானேஜர், சக்ரவர்த்தினி ஆபீசு,

கோமளேசுவரன் பேட்டை, சென்னை.

**P. S. Sundram & Co.**

Electro-Platers, Gilders and General Commission Agents.

உயர்ந்த தங்கம் வெள்ளிப் பதக்கங்களும் முதல் தரமான அநேக யோக்கியதா பத்திரங்களும் வெகுமானமாக அளிக்கப்பட்ட பெயர் பெற்ற

பி. எஸ். சுந்தரம் கம்பெனி,

எலக்டிரிக் தங்க நகை வியாபாரிகள்.

107-பெரியதெருவு திருவல்லிக்கேணி, சென்னை.

### எலக்ட்ரிக் தங்கநகை விலைவிவரம்.

32" நீளம் $\frac{3}{4}$" அகலம் 150. }
32" நீளம் $\frac{5}{8}$" அகலம் 210. } அரும்பு சிலங்கை கட்டிய

| | | ரூ. | |
|---|---|---|---|
| 5 வருஷம் காரண்டியுள்ள | மல்லிகை ஒட்டியாணம் | 25 | 8 |
| | நாக ஒத்து பெரியது | 12 | 0 |
| | நாகஒத்து சிறியது | 9 | 0 |
| | காரை பெரியது | 10 | 0 |
| | காரை சிறியது | 7 | 8 |
| | வங்கி பெரியது | 10 | 0 |
| 3 வருஷம் காரண்டியுள்ள | மல்லிகை ஒட்டியாணம் | 19 | 8 |
| | நாகஒத்து பெரியது | 9 | 0 |
| | ஷை சிறியது | 6 | 12 |
| | காரை பெரியது | 7 | 8 |
| | ஷை சிறியது | 5 | 12 |
| | வங்கி சிறியது | 8 | 0 |
| 1½-வருஷம் காரண்டி யுள்ள மல்லிகை ஒட்டியாணம் | ... ... | 13 | 8 |
| மல்லிகை ஒட்டியாணம் காரண்டியில்லாதது | ... ... | 8 | 8 |
| ஜாமந்திப்பூ | | 1 | 8 |
| ரோஜாப்பூ | | 1 | 8 |

## *170*-பக்கப் புத்தகம் இனாம்!

இது நல்ல ஆரோக்கியமும் நீடித்த சுகவாழ்வும்தரும்; இயற்கையாயுள்ள சில விதிகளை அனுசரிப்பதைப் பொறுத்திருக்கிறது. இச்சிறந்த புத்தகம் சுகவழியைக் காட்டி, நல்ல ஆரோக்கியத்தோடும் எப்பொழுதும் திடகாத்திரத்தோடும், நீண்ட ஆயுளோடு மிருக்கும்படி செய்து நல்ல அதிர்ஷ்டத்தைக் காட்டும். இப்புஸ்தகம் இனாமாகவும் தபாற் செலவில்லாமலும் அனுப்பப்படும்.

இப்புத்தகத்திற்கு இன்றைக்கே எழுதுங்கள்.

வைத்திய சாஸ்திரி

**மணிசங்கர் கோவிந்தஜி,**

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

22, பிராட்வே & 96. மவுண்ட்ரோட், மதராஸ்.

ஏஜெண்டு:—M. A. நெல்லையப்ப முதலியார்,

38 சின்னகடைத்தெருவு, திருச்சிறாப்பள்ளி.

## ஆனந்த ராமாயணம்.

இதுவரையில் தமிழில் வெளிவராதது.

இது வால்மீகி மகாரிஷியால் வடமொழியில் இயற்றப்பட்டுள்ளது. இதில் வால்மீகி ராமாயணத்தில் இல்லாத அநேக விஷயங்கள் அடங்கியுள்ளன; ஸ்ரீராம லக்ஷ்மணருடைய ஜனனமும், வளர்ப்பும், சீதாதேவியினுடைய ஜனனமும், அத்தேவிக்குப் பல பெயர் வந்ததற்குக் காரணமும் விளக்கி யிருப்பது வெகு இனிமையாயிருக்கும். இந்த ஆனந்த ராமாயணமென்னும் பெயருக்கேற்றவாறு படிப்போர் மனதிற்கு உற்சாகமும், ஆநந்தமும் உண்டாக்கும்; இதில் அநேக சித்திரப் படங்களடங்கியிருக்கின்றன. விலை ரூபாய் **5**. தபாற் கூலி வேறு.

மானேஜர்:—

சக்ரவர்த்தினி ஆபீஸ்,

சென்னை.

# பட்டுப் பீதாம்பர கம்பெனி, காசி.

திருப்தி யில்லாதவைகள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படும்.
பட்டுப் பீதாம்பர காட்லாக்து இனாமாக அனுப்பப்படும்.
உருத்திராக்ஷங்கள் !! ஜபமாலைகள் !!

பரிசுத்தமானவை.

108 உள்ள மாலை 1-க்கு 6-அணு முதல் ரூபாய் 12-வரை. விலை அதிகப் படுவதுபோல் மணிகள் சிறிதாக இருக்கும். 6-முகக் கண்டிகள் 33-உள்ளது; கண்டி 1-க்கு ரூபாய் 1-முதல் 10-வரை. 5-முகக்கண்டி 32-உள்ளது; கண்டி 1-க்கு அணு 10-முதல் ரூபா 10 வரை. விலை அதிகப்படுவது போல் மணிகள் பெரிதாக இருக்கும்.

வெண்பட்டு வேஷ்டிகள்.

சுத்தமான வெண்பட்டு வேஷ்டிகள் கோயம்புத்தூர் வேஷ்டிகள் மாதிரி சன்னகம்பி, ருத்திராக்ஷ கம்பி, ஜரிகை கம்பி போட்டவை.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | முழம் | 2 | அகலம் | 1-க்கு | ரூபாய் | 4-8-0-முதல் | | 7 | வரை | |
| 6 | ,, | 2½ | ,, | 1-க்கு | ,, | 7 | ,, | 9 | ,, | |
| 6 | ,, | 3 | ,, | 1-க்கு | ,, | 10 | ,, | 12 | ,, | |
| 7 | ,, | 2½ | ,, | 1-க்கு | ,, | 8 | ,, | 12 | ,, | |
| 7 | ,, | 3 | ,, | 1-க்கு | ,, | 10 | ,, | 14 | ,, | |
| 8 | ,, | 3 | ,, | 1-க்கு | ,, | 12 | ,, | 18 | ,, | |
| 9 | ,, | 3 | ,, | 1-க்கு | ,, | 14 | ,, | 20 | ,, | |
| 10 | ,, | 3 | ,, | 1-க்கு | ,, | 15 | ,, | 22 | ,, | |

பனி ! பனி !! பனி !!!

பனிக்கு அடக்கமான சுத்தமான கம்பளி ரோமத்தால் செய்து உறுதியும், நைஸும், நேர்த்தியுமான கம்பளிப் போர்வைகள், 6-முழம் நீளம் 3-முழம் அகலம் சிகப்பு முதலிய சகலநிறத்திலும் தயாராக இருக்கின்றன. உருப்படி 1-க்கு ரூபாய் 5-8-0. ஷை சிறிது 1-க்கு ரூபாய் 4-8-0. மேக வர்ணப் போர்வைக்கு ரூபாய் 6 8 0. தபாற் செலவு பிரத்தியேகம்.

காசி வயிரவர் கயிறு.

1-வது நெம்பர் 100-க்கு... 3 0 0 3-வது நெம்பர் 100-க்கு...2 0 0
2-வது நெம்பர் 100-க்கு... 2 8 0 4-வது நெம்பர் 100-க்கு...0 6 0

குழந்தைகள் !

குழந்தைகள் விளையாடக் கூடிய பித்தளை வெங்கலத்தால் செய்த செம்புக்குடம், கரண்டி முதல் 32 சாமான்கள் அடங்கிய அழகும் நேர்த்தியும் நைஸும் பளபளப்புமுள்ள அழகிய பாத்திரங்கள் 32 உள்ள சிறு செட்டு 1-க்கு ரூபாய் 2 0 0. பெரிய செட்டு 1-க்கு ரூபாய் 4 0 0.
உடனே எழுதுங்கள். விலாசம்—மானேஜர்,

பட்டுப் பீதாம்பர கம்பெனி, தாராநகர் தெரு,

*MANAGER,*
*Silk Petamber Co., Daranagar Street, Benares City.*




# சக்ரவர்த்தினி.

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்,
மற்றீண்டு வாரா நெறி".


VOL VIII. தொகுதி அ. JANUARY 1913. ஜனவரிமீ 1913. NO. 6. பகுதி - கூ.


## உலோபம்.

காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், மானம், உவகை, மதமெனப்படும் உட்பகையாறனுள், கடும்பற்றுள்ளமென்னும் உலோப குணமே பெருந்தீங்கினை விளைப்பதாகலின், அக்குணத்தை யொழிக்கமுயலுதல் மிகவும் நன்மையைத் தருவதாம். உலோபகுணத்தால் தீமையென்பன வெல்லாவற்றையுமடைந்து, நன்மையென்பனவற்றை யிலவலேசமுமடையாது கலக்கமுற்றவர் கதையை யடிக்கடி யெண்ணுதலும், அதனை யொழித்தற்குரிய உபாயத்தை நாடுதலும் ஒவ்வொருவருக்குமின்றியமையாத கடமையாம். காமம், வெகுளி முதலிய தீக்குணங்கள் நெய்விட்ட நெருப்புகொழுந்துவிட்டோங்கி வளர்வதுபோல வளர்வதற்குக் காரணம் உலோப குணமேயாம். உலோபகுணமுடையாரிடத்தன்றி யேனையோரிடத்துக் காமம் வெகுளி முதலிய தீயகுணங்களைக்காண்பது மிகவுமரிதாம்.

"பற்றுள்ள மென்னு மிவறன்மை யெற்றுள்ளு, மெண்ணப் படுவதொன் றன்று (பொருளை விட்த்தகுமிடத்து விடாது பற்றுதலைச் செய்புமுள்ளமாகிய உலோபத்தினது தன்மை குற்றத்தன்மைக ளெல்லாவற்றுள்ளும் வைத்தெண்ணப் படுவதொன்றன்று, மிக்கது)" என்று தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனர் திருவாய்மலர்ந்திருத்தலைச் சிறிது சிந்தித்து நோக்குவார்க்கு உலோபகுணம் தீய குணங்களெல்லாவற்றிலும்

தீயதென்பது நன்கு விளங்குமன்றோ? உலோப குணமாவது பொருளை விடத் தகுமிடத்து விடாது பற்றுதலைச் செய்யுஞ் சித்தவிருத்தியாம். பொருளை விடத்தகுமிடத்து விடாது பற்றுதலைச்செய்யுஞ் சித்தவிருத்தி யுடையவர்தாம் உலோபியரென்று சொல்லப்படுகின்றனர். அறநூல் கூறியதற்கு மாறாகப் பொருளைத் தேடுவதே உலோபகுணத்தை வெளிப்படுத்துவதற்குச் சிறந்த கருவியாம். இம்மைக்குரிய பழிக்கும் மறுமைக்குரிய பாவத்திற்குஞ் சிறிது மஞ்சாது பொருளை யிறுகப்பிடித்து வைத்திருப்பதற்குக் காரணம் உலோபகுணமா யிருத்தலின், அதனை யெவ்வாற்றாலேனு மொழித்தல் வேண்டும்; உலோபகுணத்தை யொழி… முயலாது, காமம் வெகுளிமுதலிய தீக்குணங்களை யொழிக்க …லுதல் எய்வானை யொழிக்க முயலாது அம்பை யொழிக்க …ல்வது போலவாம்.

காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், மானம், உவகை, மத…ன்னு முட்பகை யாறனுள், காமம், வெகுளி, உவகை யென்பன மனோர் முற்று மொழித்தற்குரிய குற்ற மாகாமையின், நாம் …த்தியா வசியகமாகக் கடும்பற்றுள்ளம், மானம், மதமென்பன …ற்றை யொழிக்க முயலுதல் வேண்டும். மானம் மதமென்பன …ம்பற்றுள்ள (உலோபகுண)முள்ள பரியந்த மொழியாதனவாக …ருத்தலின், உலோபத்தை ஒழித்தாற்றான் மானத்தையும், மதத்தையும் ஒழித்தல் கூடும்.

(காமம்-புணர்ச்சி பற்றிய விருப்பம்; வெகுளி-கோபம்; உவகை-பெருந்தாட்சண்யம்.)

அந்தணர் சான்றோர் முதலாயினோரை வணங்காமையும் நினைத்த காரியத்தை நினைத்தபடியே செய்து முடித்தலும் மானமாம்; கல்வி, செல்வ முதலியவற்றால் தம்மை யுயர்வாகவெண்ணிக் களித்தல் மதமாம். இவ்விரண்டும் உலோபகுண மொழிந்த விடத்து நிற்பதற்கிடம்பெறாதொழிதலின், உலோபகுணத்தை யொழித்தவரே பெரும்பான்மையும் மானத்தையும் மதத்தையும் ஒழித்தற்குரியவராவரென்பது திண்ணமாம். ஒருவர்க்கு மொருகாசளவேனுஞ் செலவுசெய்யாதும், நன்றாக உண்ணாதும் உடுக்காது மிருப்பவரிடத்து எந்த நற்குணங்கள் நிலைபெறும்? கொலைத்தொழிலால் சீவிப்பவனது வீட்டில் கருணையுடையவன் தங்குவதற்குடன்படுவானோ? உலோபகுணமானது



வெகுளி முதலிய தீயகுணங்களை வெளிப்படையாகவேனும் மறைவாகவேனும் வளரச் செய்து வருதலின், அக்குணமுள்ள விடத்து, ஞானம், தவம், மேன்மை, அருள், மோனம், வாய்மை, பொறுமை, புலனடக்கம், தானம், தருமம், கல்வி, கேள்வி முதலிய நற்குணங்கள், நிலைபெறுவதெவ்வாறும்? பொய், வஞ்சகம், பொறாமை, புறங்கூறல் முதலிய தீக்குணங்களன்றோ நிலைபெற்றிருக்கும்? உலோப குணமுடையார் உண்மை நோக்கில் நாஸ்திகரேயாவர். உடம்பிற்கு வேறாக உயிரொன் றிருக்கின்றது; அது மறுமையில் அறம் பாவத்திற்கேற்றவாறு சுவர்க்கத்தையோ நரகத்தையோ யடைகின்றது; தனக்கு இம்மையிலேயன்றி மறுமையினுமுற்ற துணையாயிருப்பது தருமமே; தருமத்தினாற்றான் சதாசிவனை (எப்போதும் ஆநந்தவடிவமாயுள்ள கடவுளை) அடைதல் கூடும்; தருமத்தினுதவியில்லாதவ ரெவ்வாற்றானும் சதாசிவனை யடைதல் கூடாது; ஈசன் தீமை செய்தவரைத் தவறாது தண்டிப்பான்; நன்மை செய்தவருக்குத் தவறாது நல்லுலகு தருவன் என்னு முணர்ச்சியுடையவர் உலோபகுண முடையவராய் உயர்ந்தோர் பழிக்கத்தக்க காரியங்களைச் செய்பவர்களாவரோ? கொலை, பொய், பொறாமை முதலிய தீக்குணங்கட் குறைவிடமாய், எல்லாம் வல்ல ஈசனை யெப்போதும் நினைப்பதின்றித் தர்ம விரோதமாகப் பிறர் பொருளை யடைய விரும்புதல், தம்மிடத்துள்ள பொருளில் ஒரு காசளவேனும்பிறர்க்குதவிசெய்யாதிருத்தல், நன்றாக வுண்ணாதும் உடுக்காதுமிருத்தல் முதலியவற்றை யுடையவர் நாஸ்திகராகாது, ஆஸ்திகராதல் கூடுமோ? ஆஸ்திக புத்தியுடையவர் ஒருவாற்றானு முலோபகுணத்தை மேற்கொள்ளுவதே யில்லையாம். உடம்பைத் தவிர உயிரென்பதில்லை; தவறுசெய்தவரைத் தண்டிக்க ஈசனென்பவனில்லை. நாமென்றுமிருப்போம்; நம்மிடத்துள்ள பொருள்களை அறத்தின் பொருட்டுச் செலவிட்டால் நாம் பிழைப்பதெவ்வாறு? என்றற்றொடக்கத் துணர்ச்சி யுடையவரிடத்து உலோபகுணம் மழைக்காலத்தில் சுரைக்கொடி விரைந்து வளர்வதுபோன்று வளர்ந்து பெருகுவதைச் சிறிது கவனித்து நோக்கினால் நன்கு விளங்குவதாம்.

"பிறன்கைப் பொருள்வெளவான் வாழ்த லினிதே", "கடன்கொண்டுஞ் செய்வன செய்த லினிதே", "வருவாயுட் கால்வழங்கி

வாழ்தல்" என்றுள்ள பிரயோகங்களைக் கவனிப்போமாயின், உலோபகுணம் எவர்க்கு மேற்காததா மென்பது நன்கு புலனும். உலோபகுண முடையவர் தம்முடைய மேன்மையைத் தாமே குறைத்துக் கொள்ளுகின்றனர்; பிறரிடத்தொன்று பெறுவதாக விருந்தால், எத்தகைய இழிதொழிலையுஞ் செய்யவிசைகின்றனர்; தம்முடைய குலகோத்திர முதலியவற்றைச் சற்றேனுஞ் சிந்தியாது, 'என்ன செய்வேன், என்னிடத்தொன்றுமில்லையே, ஏதாவதெனக்கொன்று கொடுங்களென்று கூறி ஈனரிடத்துஞ்சென்றிரக்கின்றனர்; தம்முடைய பொருளை யொருவருமறியாவாறு புதைத்துவைத்துப் பொன்காத்த பூதம் போலவிருக்கின்றனர்; எப்போதும் பொருளையே நினைத்து, பேய்போலலைகின்றனர்: பெரும்பான்மையு மவர்க்கு முக்காடே முடியணியாம்; நடந்து செல்லுவதே வாகனமாம்; பல்லெலாந் தெரியக் காட்டிப் பருவரல் (துன்பத்தை) முகத்திற்கூட்டிப் பிறரையாசிக்கும் வார்த்தையே ஈசுவர வாழ்த்தாம்; "ஈனர்பால் சென்றிரப்பது தீது, எதுவுமிறந்தபின் கூடவருவதில்லை, உள்ளதைக் கொண்டு திருப்தியடைந்து, உத்தமர்க் குபகாரஞ்செய்து, உயிர்க் குறுதி தருவனவற்றை விரைந்து தேடே" னவுத்தமர் கூறுமொழி நஞ்சாம். ஓயாக்கவலைக் குறைவிடமாகித் துன்புற்றுத் துடிப்பதே இப்பிறப்பின் இன்பப் பயனும். இத்தகைய அல்லல்களை ஆர்கலி (கடல்) அலைபோன்றோயாது தருமுலோப குணத்தின் நன்மையை யொருசிறிது முணராது, உலோபகுணத்தா லுன்மத்தராகி, உலகங் கடந்த நிலையைப் பெறுவதுபற்றிக் கருதாதிருப்பவர் உயிரோடிருப்பதினும் இறப்பதே நன்றாம். மனிதவுடம்பால் பெறுவதுபெற முயலாது நடுக்கந் தருவதாகிய உலோபகுணத்தைப் பெறுவது நியாயமாகுமோ?

தாய் தந்தையர்க்கும் சகோதரர்கட்கும், சுற்றத்தார்க்கும், சிநேகிதர் முதலாயினோருக்கு மொருசிறிதுமுதவிசெய்யாதுபொருளையிறுகப் பற்றியிருப்பவர்மறுமையிலேதண்டனையடைவதன்றி இம்மையிலும் நல்ல தண்டனை யடைகின்றனர். கள்வர் சென்று கவரும் பொருள் பெரும்பான்மையும் உலோபிகளுடையதே. கள்வர்க்குத் தம்முடைய பொருள்களை உலோபிகள் தரும்போது அவர்களிடத் தடியுதை முதலியன வாங்கிய பிறகேயாம். கள்வர் தருமஞ்செய்வா ரில்லத்திற்கு ஒருபோதும்செல்லுவதேயின்றாம்; உலோபியின் வீட்டிற்கே விசாரித்து வருகின்றனர்;



"செய்யத் தகாதன வற்றையுஞ் செய்து பணத்தைத்தேடி உண்ணாதும் உடுக்காது முடம்பை வருத்திப்புதைத்துக் காத்துக்கேடுகெட்ட நிலைமையிலுள்ள கீழ்மகனே ! பொருளைப் புதைத்துவைத்த விடத்தைச் சொல்"லென்று வருத்துகின்றனர். நாம் உண்பது நாழி, உடுப்பது நான்கு முழம் என்றுள்ளவாறு கருதுதலுண்டானாலன்றோ உலோபகுண மொழிவதாம்.

" பெற்றார் பிறந்தார் பெருநாட்டார் பேருலகில்
உற்றா ருகந்தா ரெனவேண்டார்—மற்றோர்
இரணங் கொடுத்தா லிடுவ ரிடாரே
சரணங் கொடுத்தாலுந் தான்."

என்று நல்வழியில் ஞானத்தாயாகிய ஔவைப் பிராட்டியார் நம்மனோருய்ய நவின்றிருப்பதைக் கருதுவார்க்கு உலோபியர்க்கு இம்மையிலுண்டாந் துன்ப மின்னதென வினிது விளங்குவதாம். காம முதலிய குற்றங்களா லுண்டாகுந் தீமையினும் உலோப குணத்தா லுண்டாகுந்தீமை அதிகமாயிருத்தலின், அதனையறவே ஒழித்தல் நன்றென்ற எவற்றுள்ளும் நன்றானதாம். அன்புஅருள் வாய்மை முதலிய நற்குணங்களை யெல்லாம் கீழ்ப்படச் செய்து, பொய் கொலை பொறாமை முதலிய தீக்குணங்களை யெல்லாம் பெருகச் செய்வதற்குத் தக்க காரணமாயுள்ள கடும் பற்றுள்ள மென்னு முலோப குணத்தைப் பெரியாரைத் துணைக்கொண்டு அவர் கூறும் நல்வழியில் நின்றொழிக்க முயன்றாற்றான் எக்காலத்திலாவது பரமேசுவரன் கருணைக்கு நாம் பாத்திரமாதல் கூடும்.

உடம்பில் யானென்னும் புத்தி ஸ்திரமாயிருப்பது காரணமாக உலோப குணம் பெருகி வளர்கின்றது; அதனால் இங்கு நன்மையென்று சொல்லப்படுவனவெல்லாம் நமக்கே வேண்டுமென்னும் இச்சை யெழுகின்றது; அதனால் தம்மிடத்தில்லாத குணங்களை யிருப்பதாகக் காட்டி நடிக்கும் இடம்பமுண்டாகின்றது; அதனால் பிறரை வஞ்சித்தலும் பொய்ம்மொழி கூறுதலுமுண்டாகின்றன. இவை யுண்டாவதால் பழிபாவங்களெல்லாம் நிரம்பி விடுகின்றனவென்பதை யடிக்கடி சிந்தித்து, உலோப குணத்தின் காரணமாயுள்ள உடம்பில் யானென்னும் புத்தியான அகங்காரத்தைத் தக்கவாறொழித்தால் உலோபகுணம் தானே யொழிவதாம். மண்ணொழிந்த போது அதன் காரியமாகிய கடமொழிவது

போல உலோபகுண மொழிந்த விடத்து, இச்சை முதலியன வெல்லாம் தாமே யொழிவனவாம். உலோபம், அதன் காரணம், உலோபத்தின் காரியம், உலோபத்தை யொழிக்குமுபாயம், அதனை யொழித்தலா லுண்டாகும் பயனென்பனவற்றை நூல் வாயிலாகவும் பெரியார் வாயிலாகவும் நன்குணர்ந்து உலோபத்தின்வசமாகாதிருக்கும் நிலையினைப் பெறுவது பற்றி முயலுதல் அத்தியாவசியகமான கடமையாம். பொருளால் தமக்கு அறம் பொருளின் பங்களைச் செய்துகொள்ளாமல் உலோபகுணத்தின் வசப்பட்டிருப்பவர் இம்மையிற் றம்பொருளைக் கள்வர் முதலாயினோருக் கிழந்து வருந்துவதையும், மறுமையில் நரகத்துக்கத்தை யனுபவிக்க வேண்டியவராக விருத்தலையும் நாம் அடிக்கடி யெண்ணிப் பார்ப்போமாயின், நம்மை மீளா அடிமையாக்கி வருத்தும் உலோபகுணத்தினின்றொருவாறு நீங்கி யுயர்நிலையடைதற்குரியவராவோம்.

உலோபகுணத்தின் வசப்பட் டொழுகியதனால் துரியோதனன் பிராணஹானி, பந்து நாசம், ராஜ்யஹானி, இம்மைக்குரிய பழி, மறுமைக்குரிய பாவமென்பனவற்றைப் பெற்றான்? உலோபகுணத்தால் துரௌபதையின் தந்தையான துருபத வேந்தன் துரோணாசாரியர்க்கு அக்னிவிஸ்வ ரிஷியினிடத்துவில்வித்தை கற்றபோது தருவதாகக் கூறிய பாதிராஜ்யத்தைத் தராது அவரைப் பழித்துக்கூறியதனாலன்றோ பாண்டவருள் ஒருவனான அருச்சுனனால் போர்முகத்தில் கட்டுப்பட்டுப் பரிதாபமடைந்தான்? இவ்வாறு உலோபகுணத்தால் கேடடைந்தவ ரெண்ணிறந்தவராவர். தாம் கேடடைய விரும்புவோர்தாம் உலோப குணத்தை விரும்புவர். நாம் உலோபகுணத்தைப் "போது மென்ற மனமே பொன்செய்யு மருந்து" என்னும் பழமொழியைக் குரு உபதேசமாகக்கொண்டு, வருவது வரும், போவது போம் என்று தீர்மானித்து,

"பயில்தீக் கொடுங்கள்ளர் பயமுண்டு பொருளோர்க்
கயில்வாய்த்த பகையச்ச மரசாள் பவர்க்குண்
டுயிர்வேட் டவர்க்குண் டுறுங்கால பயநம்
வைராக்கி யர்க்கேதில் வருமங்கொர் பயமே"

என்று பிரபோதசந்திரோதயம் உலோபகுணத்தை யொழிக்குஞ் சாதனம் வைராக்கியமா மென்று கூறுவதை யூகித்து நோக்கி, யொழிக்க முயலுவோமாக.



பெரும்பான்மையும் உலோபிகளது புத்திரர் இடம்பாசாரிகளாய் "அப்பன் தேடிவைத்த அரும் பொருளனைத்தும் அழிக்க வந்த சிகாமணி" என்பதற்கிலக்கியமாய் நின்று தாம் "தேடாப்பொன்னுக்கு மாற்றுமில்லை உரையுமில்லை" என்னுமிப் பழமொழியை நிரூபிக்கத் தம்தந்தையார் தேடிவைத்த பொருளைத் தீயவழியிற் செலவு செய்து தின்பதற்குச் சோறு பெறாது தெருவூடு சென்று திருவோடு ஏந்துந்திறத்தினராக விருப்பதைக் கவனிப்போமாயின், உலோபிகளது பொருள் ஒரு தலைமுறையளவேனும், நிலைத்திருப்பதன்றென்பது குன்றிடையிட்ட விளக்குப் போலத் தோன்றும். அரிவர்க்கம், அல்லது பகைவர்க்கம், அல்லது உட்பகையென்று கூறப்படும் காமமுதலிய தீக்குணங்களாறனுள் தலைமையாய் விளங்கித் தன்னையுடையாரைச் சதா துன்பக்கடலி லழுத்திச் சோகமுறச் செய்யும் உலோப குணத்தைத் தூயவர் தொடர்பாலும், செந்நெறி செல்வதாலும் ஒழித்துச் சுத்தராகக் கடவுள் நமக்குத் துணைசெய்வாராக.

"உலோபமே யுன்னை யுறவுகொண்டே னுன்னுருவம்
பாவமே யென்பருண்மை பற்றாதார் — நீ பெருக
ஆர்ச்சிக்க வேபடுவா யாபாவி யுன்னாலே
ஆர்ச்சிக்கப் பட்டே னமைவு"

என்று சொரூப சாரங் கூறுவதிங்கு நன்குணர்தற்பாலதாம்.

---

உன் வேலையின் ஒவ்வொரு சிறிய விஷயத்தையும் ஜாக்கிரதையாகக் கவனி.

ஒரு விஷயத்திலும் காலதாமதஞ் செய்யாதே.

ஒவ்வொருவிஷயத்தையும் நன்றாயாலோசனைசெய்து, பிறகு தீர்மானஞ்செய்.

தகுதியான காரியங்களைத் தைரியமாகச்செய்; தவறான காரியங்களைச் செய்யப் பயப்படு.

கஷ்டம்வந்தபோது பொறுமையாகவிரு.

வாழ்நாளிலுண்டாகும் இடையூறுகளைக் கௌரவமாகவும் தைரியமாகவும் மேற்கொண்டிரு.

# மஹோபநிஷத்.

## மூன்றாமத்தியாயம்.

1. நிதாகர் என்னும் முனிசிரேஷ்டர் சகல வித்தைகளையுங் கற்றவர், சிறுவர். இவர் தமது பிதாவின் அனுமதி பெற்றுத் தீர்த்த யாத்திரையின் பொருட்டுத் தாமாகவே சஞ்சரித்துக்கொண் டிருந்தார்.

2. மூன்றரைக்கோடி தீர்த்தங்களில் ஸ்நாநம் செய்து வீட்டிற்குத் திரும்பி வந்து மகா கீர்த்திமானாகிய (நிதாகர்) (தமது தகப்பனாராகிய) ரிபுவை நமஸ்கரித்து, (கீழ்வருமாறு சொன்னார்.)

3. மூன்றரைக்கோடி தீர்த்தங்களில் ஸ்நாநம் செய்த புண்யத்தின் மகிமையால் இவ்வாறாகிய விசாரணை என் மனதில் உதயமாயிற்று.

4. (அது வருமாறு:—) உலகத்தில் ஜனங்கள் சாகும்பொருட்டு ஜனிக்கின்றார்கள்; பிறக்கும் பொருட்டு மரிக்கின்றார்கள். சகல சராசரங்களாகிய இவையெல்லாமே ஸ்திரமல்லாதனவா யிருக்கின்றன.

5. பாபமாகிய † பாவங்களெல்லாம் சகல ஆபத்துக்களுக்கும் இருப்பிடமாகும்; ஐசுவரியங்களோ இருப்புக்கம்பிலையைப்போல (துக்கத்தைக் கொடுப்பன). அவை பரஸ்பரம் (ஒன்றற்கொன்று) சம்பந்தமில்லாதன.

6. இம்மனோ கல்பனையால் கேவலபாவங்களெல்லாம் சோஷித்துப் போகின்றன. ‡ பாதையில் நடப்பவனுக்குப் பாலை நிலத்தில் வெறுப்புண்டாவதுபோலப் பாவங்களில் எனக்குப் பிரியமின்மை யுண்டாகி விட்டது.

7. இத்துக்கம் எவ்வாறு போகுமென என் மனது எரிந்து கொண்டிருக்கின்றது. பெருஞ் சிந்தையை (ஆலோசனையை) சக்கரங்களாகவுடைய தனங்களும் எனக்கு ஆநந்தத்தைக் கொடுக்க வில்லை.

8. நல்ல குலத்திற் பிறந்த மனைவியும் பெரும் ஆபத்துக்களுக்கெல்லாம் இருப்பிடமாவள்; இந்தச் சம்சாரத்திலிருக்கும் இந்த மனைவி மிகுந்த துக்கத்திற் கிடமானவள்.

9-10. ஓ முனியே! லக்ஷ்மியோ (சம்பத்தோ) மோஹத்தைக்கொடுப்பதேயன்றி ஆநந்தத்தை (அல்லது நன்மையை)க்கொடுப்பதல்ல. ஆயுளோ ஓரிலையின் நுனியிலிருக்கும் நீர்த்திவலையைப்போல க்ஷீணமடையக் கூடியது; சரீரத்தைத் திடீரென்று பித்தனைப்போல விடுத்துச் செல்லும்.

† "பாவம்" மனோ சங்கல்பம், விஷயம், பொருள் என்பனவற்றை குறிப்பிக்கும்.

‡ கூடிக்கொண்டிருக்கின்றன என்றும் பாடமுண்டு.



10-11. விஷயத்தில் ஆசையென்னும் விஷத்தின் சம்பந்தத்தால் சிதிலமான மனத்தை உடையவரும் ஆழ்ந்த ஆத்மஞானமில்லாதவருமாயிருப்பவர்க்கு ஆயுள் ஆயாசத்திற்கே காரணமாகும்.

11-12. வாயுவைச் சுற்றி வளைத்துப்பிடித்தலும், ஆகாயத்தைக் கண்டித்தலும் (இல்லாமற் செய்தலும்), அலைகளை (மாலையாய்)க் கோத்தலும் எவ்வாறு அயுக்தமான காரியமோ அவ்வாறே ஆயுளினிடத்து ஆசையும் அயுக்தமானது.

12-13. எவனுடைய வேண்டுவது (மோக்ஷம்) அடையப்பட்டதோ, எவன் சோகத்தை யடைவதில்லையோ, எது பரம நிர்விருதிக்கு (ஆநந்தத்திற்கு) இடமோ அதுவே ஜீவிதம் (சபலமாய் ஜீவித்திருத்தல்) எனப்படும்.

13-14. மரங்களும் ஜீவிக்கின்றன; மிருக பக்ஷிகளும் ஜீவிக்கின்றன. எவனுடைய மனம் மனனத்தால் ஜீவித்திருக்கின்றதோ அவனே (உண்மையில்) ஜீவிக்கின்றவனாவன்.

14-15. உலகத்தில் நன்றாக (ஞானத்துடன் கூடி) ஜீவித்து இங்குமறு ஜன்மம் அடையாத ஜனங்களெவரோ அவரே (உண்மையிற்) பிறந்தவர்களாவர்; மற்றவர் கிழக்கழுதைகளே.

15-16. அவிவேகிகளுக்குச் சாஸ்திரம் பாரமாகும்; இராகமுள்ளவர்க்கு (ஆசையுள்ளோருக்கு) ஞானம் பாரமாகும்; சாந்தமில்லாதவனுக்கு மனம் பாரமாகும்; ஆத்மஞான மில்லாதவருக்குச் சரீரம் பாரமாகும்.

16-17. அகங்காரத்தால் ஆபத்துக்கள் (உண்டாகும்); அகங்காரத்தாற்றான் கெட்ட * ஆதிகளும் (உண்டாகும்); அகங்காரத்தாற்றான் ஆசை (உண்டாகும்). அகங்காரத்தைப்பார்க்கிலும் வேறு சத்துருவில்லை.

மு. கோ. நாராயணசாமி ஐயர்,
பி. ஏ., பி.எல், திருவல்லிக்கேணி.

* ஆதியென்பது மனதில் வாசனாரூபமாயிருக்கும் குற்றங்கள்; ஆதிவியாதி யென்னுமிவற்றின் லக்ஷணத்தை ஞான வாசிஷ்டம் புசுண்டர் கதையிற் பார்க்க.

கள்ளுங் களவுங் காமமு மொழிக.
இல்லார்க் கழகு நல்வழி யொழுகல்.
ஆவன செய்யான் அரச னாகான்.
கொழுநனைப் பணியாள் குலமக ளாகாள்.

# வல்லாள மகாராஜன் கதை.

(145-வது பக்கத்தின் தொடர்ச்சி,.

வற்றா நீர்பரப்பும், தெருக்களின் செழிப்பும், உம்மனோர் பொருட்டு யாமியற்றும் வேள்விகளும், உம்மவரால் ஈயப்பெற்ற ஆவினமும் ஒரு குறைவுமின்றி யோங்குகின்றன ஒருகுறைவுமிலாது எமது தபசு நிறைவேறுகின்றது. ஆதலின் இப்போது நும்மால் யான் பெறத்தகு முதவியொன்று மின்று. நின்னைக் காணவேண்டுமென்னும் விருப்பங்கொண்டு வந்தனன். அவ்வாறே நின்னைக்கண்டனன் யான் போக விடை தருவாய். ஆயினும் மன்னனே, பல கலைகள் தக்கவர் பால் கற்றுணர்ந்து அவ்வழியே நடக்கும் நினக்கு யானும் சில வுரைக்கின்றேன்; உற்றுக்கேண்மோ என நாரதமுனிவர் சொல்லத் தொடங்கினார்.

உலகத்தில் உயிர்கள் தம்மைத்தாக்குந் துன்பம் விலக்கி யின்புற்றிருக்க முயலுங்கால் சிற்சில சமயம் நேரிடும் தடைகளால் சோர்வு பூண்டு மனங்கலங்கி எடுத்த முயற்சியைக் கைவிடுகின்றார்கள். ஆகையால் துன்பமொழியாதிருக்கவும் நாம் காண்கின்றோம். துன்ப நிவிர்த்தியின் பொருட்டு இயற்று முயற்சி யிருவகைத்து. ஒன்று தனக்குள்ள செல்வப்பெருக்கத்தின் துணை கொண்டு பலகாரியஞ் செய்தல். மற்றையது கல்வியின் உதவிகொண்டு செய்வதாம். இவ்விரு முயற்சியும் ஊக்கத்துடன் செய்யின் எக்காலத்திலாவது செய்த முயற்சிக்குரியபயன் வாய்க்கு மென்பதற்கு ஐயம்சிறிது மின்று; சிலர் உலகத்தில் செல்வங்கொண்டு மனம்போனபடி வாழ்வதால் அதுவே துக்கநிவிர்த்தியாகுமென்று எண்ணுகின்றார்கள். செல்வம் ஈட்டல், காத்தல், அதன் பயன் கோடல் முதலியன சாதாரணமாய் அறிவுடையோர்க்காகுமல்லது ஏனையோர்க்கு லகுவாகாது. இதனால் செல்வம் அறிவின் தொடர்பை வேண்டுகின்றதென ஏற்படுகிறது. அது தான் தனியாகத் துக்கநிவிர்த்திக்குக் கருவியாகாதெனத் தெளிவாய்த் தெரிகின்றதன்றோ? அவ்வறிவின் விருத்திக்குக் காரணம் நன்னூற் பயிற்சியாகும். அந்நன்னூற் பயிற்சி கல்வியின்றி யமையாதாகலின் கல்விப்பொருளே துக்க நிவிர்த்திக்குத்தக்க கருவியாகின்றது. ஆயினும் பொருள், கல்வியால் வரக்கூடு மனுகூலங்கள் பலசெய்கின்றமையாலும், பொருளில்லான்கல்வியுடையனாயினும் "எனைத்துணைய வேனு மிலம்பாட்டார்கல்வி, தினைத்துணையுஞ் சீர்ப்பா டிலவாம்" என்னும் ஆன்றோர் வாக்கை உண்மையாக்குகின்றான். ஆதலால் பொருள் கல்வி என்னும் இரண்டனுள் ஒன்றை மாத்திரமுடைத்தாயிருப்பதனாலேயே யின்பம்வாய்க்காது என்று ஏற்படுகின்றது. கல்வியுடையார் செல்வராகாமலும், செல்வமுடையார் கல்வியுள்ளாராகாமலும் இருக்கப் பெரிதும் காண்கின்றோம். இவ்விரு செல்வமும் ஒக்கப்பெற்றுவாழ்பவர் மிகச் சிலரே. நீ இவ்விரு செல்வமும் ஒருங்கு பெற்றுள்ளனாதலின், மிகச்சிறந்தவனே; புண்ணிய சீலன். ஆயினும் இவைபெற்ற காரணத்தானே நீ துக்க மற்றுச் சுக புருஷனாகமாட்டாய்; அவற்றைத்தக்கவாறு அனுபோகப்படுத்தாவிடின், அவை, தம்மைப் பெற்றவர்க்குப் பயன்படாது கூற்றாய் முன்னிற்பதும் கண்டுளோம். ஆதலால் அதியூகமாய் உன் வாழ்நாளை நீ இதுகாறும் கழித்துவந்ததுபோல் கழிக்கவேண்டும். இதன்பொருட்டு நீ செய்யத்தக்ககாரியங்கள் பலவுள்ளனவாயினும் அவற்றுள் சிலமுக்கியமானவையும் அவற்றின் சம்பந்தப்பட்டவையுமான நீதிகளும், யுக்திகளும், இராஜாங்கமுறைகளும் கூறுகிறேன் கேட்கவேண்டும். அரசுக்கங்கம் பலவுள; அவற்றுள் தலையாய அங்கம் அமைச்செனஅறிவாய். அவ்வமைச்சர் தமக்கு இன்பம் பயப்பினும் அறமலாத செயல் புரியாதவராயும், அதனை நினையாதவராயும், அரசுக்கோர் இடுக்கண் வந்துழித் தம்மின்னுயிரேனும் விடுத்து அவ்விடுக்கண் ணீப்பவராயும், பரம்பரையாக அமைச்சுத்தொழில் பூண்ட நற்குலத்துதித்தவராயும், தம்மனோவாக்குக் காயங்களால் செய்யும் செயல்கள் யாவும் அரசனுக்கு நன்மை பயப்பனவாகவே செய்பவராயும் இருத்தல் வேண்டும்.

(வரும்.)

கோகிலாம்பாள் அம்மாள்,
புரைசை, சென்னை.

# பெண்கல்வி.

(152-வது பக்கத்தின் தொடர்ச்சி).

நமது தேசத்திற் கற்கும் பெண்களுக்குக் கற்பிக்கவேண்டிய விஷயங்களாவன:—

(1) ஸ்வயபாஷை.
(2) கணிதம்.
(3) மதசம்பந்தமான விஷயங்கள்.
(4) நல்லொழுக்கத்தைத் தரத்தக்க பல உபாக்கியானங்கள்.
(5) கிருஹ பரிபாலன சாஸ்திரம்.
(Household Economy).
(6) ஆரோக்கிய சாஸ்திரம்.
(Hygiene).
(7) பாலபோஷண மர்மங்களும் சாதாரண வைத்தியமும்.
(8) தேகதத்துவ சாஸ்திரம்.

(Physiology).

(9) சித்திரம்.

(10) சட்டை, ரவிக்கை முதலியவைகள் தைத்தல் சித்திரத் தையல் (Embroidery) முதலிய கைத்தொழில்கள்.

(11) பாகசாஸ்திரம் (Cookery).

(12) சங்கீதம் முதலியன.

மேற்கூறியவை யாவும் ஒவ்வொரு ஸ்திரீக்கும் இன்றியமையாதன வென்பது கீழ்வருவன வற்றால் நன்கு புலப்படும்.

(1) ஸ்வயபாஷை:—சாதாரணமாய் ஒரு பாஷையை யெழுதப் படிக்கத் தெரியாவிடில் பல விஷயங்களைத் தெரிந்துகொள்ளுவது அசாத்திய மாதலால் தனக்குச் சொந்தமான பாஷையைக் கற்பது அத்தியாவசியகமாம்; கூடுமானால் இதர பாஷைகளை அப்பியசிக்கலாம்.

(2) கணிதம், "எண்ணுமெழுத்துங் கண்ணெனத் தகும்" என்றஆன்றோர் வாக்கியத்தின்படி கணிதம் முக்கியமானதென்று ஏற்படுகிறது. கணக்குத் தெரியாவிடில் பெண்கள் வீட்டுக் கணக்குகளைப் பார்த்தல் முடியாது. ஆதலால் கணிதஞானம் பெண்களுக்கு அவசிய மிருக்கவேண்டும்.

(3) மதசம்பந்தமான விஷயங்கள். பெண்களுக்குக் கல்வி பயிற்றுவிப்பதன் நோக்கம் அவர்கள் தங்கள் தங்கள் மதங்களின் விஷயங்களைத் தெரிந்து கொண்டு ஈசுவரபக்தி செய்து கிருதார்த்தர்களாகவேண்டு மென்பதே. இதுவேயுமன்றிப் பெண்கள் தங்கள் மதத்தைப்பற்றி நன்றாய்த் தெரிந்திருக்கும் பக்ஷத்தில் தங்கள் குழந்தைகளுக்கும் அதனைப் போதித்தல் கூடும். தங்கள் புருடர்கள் மதாசாரங்களை விட்டுத் தேக சிரமத்தினாலோ, வேலை மிகுதியினாலோ அல்லது எந்த சந்தர்ப்பத்தினாலோ வழுவுங்காலத்து அவர்களையும் திருத்துதல்கூடும். மேலும் நம் தேசத்து மதங்களில் பெரும்பான்மை சரீராரோக்கிய சம்பந்தமாயும், நல்லொழுக்க சம்பந்தமாயுமுள்ள, விஷயங்கள் அடங்கியிருப்பதால் மதவாராய்ச்சி பெண்களுக்கு அத்தியாவசியகமானதே.

(4) நல்லொழுக்கம். இது பெண்கல்வியின் முக்கிய நோக்கமென்று முன்னமே கூறப்பட்டிருக்கிறது. ஸ்திரீகளுக்கு நல்லொழுக்கமிருந்தால்தான் அவர்கள் தங்கள் குடும்பங்களுக்கு உபயோகமுள்ளவர்களாயிருப்பார்கள். நல்லொழுக்கமின்றிய பெண்ணின் கல்வி கள்வன்கையிற் கிடத்த வாளாயுதத்தைப்போல் கெட்டவழியில் உபயோகப்படுமேயன்றி ஈசுவரபக்தி பதிபக்தி முதலிய நல்லொழுக்கங்களில் உபயோகப்படாது. ஆகவே நல்லொழுக்கம் பெண்களுக்குக் கல்வியைக்காட்டிலும் சிறந்தது.



(5) கிருஹ பரிபாலன சாஸ்திரம். இது குடும்ப சம்ரக்ஷணையைக் குறைந்த செலவில் செய்வதற்கு அநுகூலமான விதிகளைப் பற்றிக் கூறும் நூல். குடும்பத்திற்கு வேண்டிய உணவுப்பொருள்கள் எந்தெந்தக்காலத்தில் எந்தெந்தவிடத்தில் மலிவாய்க்கிடைக்கக்கூடுமோ அவற்றைச் சேகரித்துக் காப்பாற்றும் வகையும், வீட்டுச் சாமான்களையும் தட்டுமுட்டுச் சாமான்களையும், (ஒவ்வொரு வஸ்துவும்) இருக்கவேண்டிய இடத்தில் இருக்கும்படி பார்க்கும் விதமும், பழுதாய்ப்போன சாமான்களை அப்போதைக்கப்போது சீர்படுத்தும்முறையும் மற்றுமுள்ள விஷயங்களும் இந்தச் சாஸ்திரத்தில் தெளிவாய்க் கூறப்பட்டிருக்கின்றன. இது பெண்களுக்கு அவசியமானதே.

(6) ஆரோக்கிய சாஸ்திரம். இவ்வுலகத்தில் ஒவ்வொருவரும் அடையக்கூடிய சுகங்களில் தேகாரோக்கியமே சிறந்தசுகம். ஆரோக்கியமின்றி எவ்வளவு பொருளிருப்பினும், உணவிருப்பினும், மற்று மெவ்வகையாக சுகசாதனங்களிருப்பினும் அவற்றையநுபவித்துச் சுகம்பெற நல்ல ஆரோக்கியத்தோடுகூடியசரீரமின்றேல் அத்துணைச் சுகசாதனங்களும் ஒருவனுக்கு அளவிலாத் துன்பசாதனங்களேயாம். ஆதலால் சரீரத்தில் பல வியாதிகள் அணுகாவண்ணம் நல்ல ஸ்திதியில் வைத்துக்கொள்ளும் விதிகளைக் கூறும் ஆரோக்கிய சாஸ்திரத்தை அப்பியசித்தல் அவசியம்.

N. சுப்பிரமணிய அய்யர்,
கிண்டர்கார்டன் இன்ஸ்பெக்டர், சென்னை.

---

போக்கறு கல்வி புகழ்பொருள் பயக்கும்.
சிவனடி சேவை தீவினை போக்கும்.
தன்னை வியத்தல் தடுமாற் றந்தரும்.

## பிராணி சாஸ்திரம்.

(106-வது பக்கத்தின் தொடர்ச்சி).

அசைபோடுவன:—

(e) மாட்டினம்.

இவ்வினத்திற் சேர்ந்த பிராணிகள் (எருது பசு முதலியன) இவ்வுலகத்தின் எல்லாத் தேசங்களிலும் காணப்படுகின்றன. ஆனால் அவ்வத்தேசங்களிலுள்ள சீதோஷ்ண ஸ்திதிக்குத் தக்கவாறு ஆங்காங்குள்ள பசுக்களும் எருதுகளும் உருவத்திலும், ஆகாரத்திலும் (food) உபயோகத்திலும் மாறுபட்டிருக்கின்றன. இந்த இனமானது உலக முழுமையும் காணப்படுவதால் மனிதனுடைய உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாததாகவே யிருக்க வேண்டுமென்று ஊகிக்கப்படுகிறது. இவ்வினத்திற் சேர்ந்த பிராணிகள் ஆணாயிருந்தால் எருது என்றும் பெண்ணா யிருந்தால் பசுவென்றும் வழங்கப்படும். எல்லா அசைபோடுஞ் செந்துக்களுக் கிருப்பதுபோலவே இவ்வினத்தின் பிராணிகளுக்கும் ஆஹாரத்திற்குத் தகுந்தவாறு இவற்றின் தேகமும் அமைக்கப்பட்டிருக்கின்றது. இவற்றின் ஆஹாரம் புல், வைக்கோல் முதலியவைகளே. இவை சாகபக்ஷிணி யாதலால் வழக்கப்படுத்தக் கூடியவை. இவை மனிதருடைய உபயோகத்திற்காகவே கடவுளால் சிருஷ்டிக்கப் பட்டன வாதலால் மனிதரோடு தான் வசிக்கின்றன.

சுபாவகுணங்கள். (1) அதிக சாதுவானவை யாதலால் மந்தை மந்தையாய்க்கூடி மேயும்.

(2) கொம்புகளால் தங்கள் சத்துருக்களை யிடித்துத் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளும்.

(3) தமது தேகத்தின்மேல் ஈ, கொசுகு, மூட்டுப்பூச்சி, உண்ணிமுதலிய பூச்சிகள் கடித்துத் தொந்தரவு செய்தால் தமது வாலால் வீசித்துரத்த முடியாதபோது எந்த இடத்தில் அவை கடிக்கின்றனவோ அந்த இடத்திலுள்ள தசையை மாத்திரம் குலுக்கி அப்பூச்சிகளைத் துரத்தும்.



(4) ஓடும்போது வாலைத் தூக்கிக்கொண்டு போகும்.

உபயோகம். எருதுகள் வண்டி யிழுக்கவும், ஏர் உழவும், பொதி சுமக்கவும், கவலை யடிக்கவும் உதவுகின்றன.

பசுக்கள். பால் கொடுக்கின்றன. பயிரிடுந் தேசமாகிய நமது இந்தியாவில் இவ்வினத்து ஜெந்துக்களால் உண்டாகும் உபயோகங்கள் எண்ணிறந்தன. ஆதலால் தான் பசு பூஜிக்கத் தக்கதென்று கருதப்படுகின்றது. "கேட்டதைக் கொடுக்கும் காமதேனு" என்று நம் புராணங்களில் வழங்கப்படுவது பசுவே. முற்காலத்தில் நம்முன்னோர்களாகிய ஆரியர்களின் சிறந்த செல்வம் ஆடுகளும் மாடுகளுமே யென்று வேதங்கள்மூலமாய்த்தெரிய வருகிறது. எருதுகளைக் கொண்டு நிலத்தை யுழுது பயிரிட்டுச் சாப்பாட்டிற்கு வேண்டிய தானியத்தைச் சேகரித்துக்கொண்டு, பசுவின் பாலால் தயிர் நெய் முதலியவற்றைச் செய்துகொண்டு ஜீவித்திருந்தார்கள். இவை ஆரியர்களின் ஜீவனோபாயத்திற்கு முக்கியசாதனங்களா யிருந்தமையால் அவர்களால் நன்றாய்ப்போஷிக்கப்பட்டு அதிகபக்ஷமாய்ப் பாதுகாக்கப்பட்டுவந்தன. நம் தேசத்தில் பசுவைக் கொல்லுதல் மகா பாவமென்று ஒவ்வொருவராலும் கருதப்படுவது அதன் உபயோகத்தை யுத்தேசித்தேயாமென்பது தெற்றென விளங்கும். (வரும்.)

*N.* சுப்பிரமணிய அய்யர்,
கிண்டர் கார்ட்டன் இன்ஸ்பெக்டர், சென்னை.

## Scheme of studies for Elementary schools.

## எலிமெண்டரி பாடசாலைகளின் பாடஜாபிதா.

(104-வது பக்கத்தின் தொடர்ச்சி).

பாலர் வகுப்பு. இடத்தையும் எண்ணையும் சார்ந்த வேலை.

(Space & number works).

Psychological basis. சிறு குழந்தைகளுக்கு எண்ணிக்கையின் ஞானமும் பரப்பின் ஞானமும் அவர்களின் மனதில் அதி பால்யத்திலேயே உண்டாகின்றன. உதாரணமாக ஒரு சிறு குழந்

தைக்கு நாலைந்து கோலிகளையோ அல்லது விளையாட்டுச் சாமான்களையோ கொடுத்து அதற்குத் தெரியாமல் ஒரு சாமானையோ அல்லது கோலியையோ எடுத்துவிட்டால் அது எண்ணிக்கையில் குறைந்திருப்பதை யறிந்து அழுகிறது. இதுவேயுமன்றி ஒரு முழுத்தோசையை யொரு குழந்தைக்குக்கொடுத்து அதுபாராதபோது அதில் கொஞ்சம் கிள்ளியெடுத்துவிட்டால் அத்தோசையின் பரப்புக் குறைந்திருப்பதையறிந்து அழுகிறது. ஆதலால் எண்ணிக்கையின் ஞானமும் பரப்பின் ஞானமும் சிறு குழந்தைகளுக்கும் இருக்கின்றனவென்று பெறப்பட்டது. அவர்களிடத்தில்இயல்பாயுள்ள இந்த ஞானத்தை விர்த்திசெய்ய இடத்தையும் எண்ணையும் சார்ந்தவேலை அதிக உபயோகமா யிருக்கிறது.

எண்மனனம் எண்குறிப்பு. 1 முதல் 50 வரையில், கூடுமானால் 100 வரையில்.

குறிப்பு. 1 to 9.................... 10.......................... 11 to 19—20,30,...100. } கொட்டைகள், ஓரங்குல சதுர அட்டைகள், குச்சிகள், இந்து நாணயங்கள், கனவடிவங்கள், படிகள், குண்டுகள் (weights) முதலிய உபகரணங்களைக்கொண்டு கற்பிக்கவும் பத்து என்னும் ஸ்தானபேதத்தை பைகளைக்கொண்டு கற்பிக்கவும்.

எண்ணுதல் — Counting.

(a) ஏற்றியும்

(b) இறக்கியும்

ஒவ்வொன்றை, இவ்விரண்டை, மும்மூன்றை, நான்னான்கை, ஐவைந்தைக் கூட்டி எண்ணுதல்.

குறிப்பு:—ஏற்றி யெண்ணுதல் கூட்டலென்றும், இறக்கியெண்ணுதல் கழித்தலென்றும் பிரத்தியக்ஷமாய்ப் பொருள்களைச் சேர்த்தும், நீக்கியும் போதிக்கவும் பொருள்களைக்கொண்டே பெருக்கலும் வகுத்தலும் கற்பிக்கவும்.

பரப்பின் ஞானம்—Space Knowledge.

வகுப்பறையின் பரப்பையோ, கரும்பலகையின் பரப்பையோ, அல்லது மேஜையின் பரப்பையோ, எழுதும் பலகையால் அளந்து அல்லது அப்பலகையைப்போல் இத்தனைமடங்குபெரிது என்று சொல்லுதல்.



கனவடிவத்தின் பரப்பால் சிலேட்டின் பரப்பை அளந்து இத்தனை அங்குலகனவடிவங்கள் (Cubits) இந்தப்பலகையின்மேல் வைக்கலாமென்றுசொல்வது; ஒரு சிறுபெட்டியில் இத்தனைகனவடிவங்கள் வைக்கலாமென்றுசொல்வது; பலகையின் ஓரங்களை ஒருகுச்சியால் அளந்து இத்தனை குச்சிகள் நீளமென்றும் இத்தனைகுச்சிகள் அகலமென்றும் சொல்வது.

குறிப்பு:—இடத்தைப்பற்றிக் கற்பிக்கையில் (Cubic measure of solids) கனப்பொருள்களின் அளவு, (Square measure of surfaces) மேற்பரப்பின் அளவு, ((Leniar measure of lengths &breadths) நீள அகலங்களின் நீட்டலளவு முதலிய எல்லா அளவுகளும் பிள்ளைகளால் பிரத்தியக்ஷமாய் அளக்கப்படுவது அவசியம்; அங்குலமென்றும் அடியென்றும் சொல்லவேண்டிய அவசியமில்லை. ஏதாகிலும் ஒரு குச்சியாலோ, ஒரு பரப்புள்ள அட்டையாலோ, அல்லது ஒரு கனப்பொருளாலோ அளந்து சொல்லுதல் போதுமானது.

இந்து நாணயம்.

பை
காலணா 3 பை.
1 அணா 12 பை
அல்லது 4 காலணா } இவற்றில் சிறு சிறு கடைக்கணக்குகள்.

N. சுப்ரமணியஐயர்,
கிண்டர்கார்டன், இன்ஸ்பெக்டர், சென்னை.

சுகஸ்நாநம்.

புங்கன்விதையுடன் கசகசாவைச் சேர்த்துக் காடிநீர்விட் டரைத்துச் சிரசில் தடவிக்கொண்டும் உடம்பெல்லாம் பூசிக்கொண்டும் ஸ்நாநம்செய்தால் கண்ணெரிச்சல் சொறிசிரங்குகள் வரா.

தைலம்.

வில்வப்பழம், கார்போகத்தரிசி,நல்லெண்ணெய் இம்மூன்றும் சம அளவு சேர்த்துத் தைலம்காய்ச்சி வைத்துக்கொண்டு ஸ்நாநம்செய்யவேண்டும்.

சுகபேதி.

இளநீரைக் கொணர்ந்து மேல்மூடியைச்சீவித் துளைசெய்து நற்சீரகம் கல்லாய்ந்து உட்சேர்த்து மேல்மூடியால் காற்று உட்செல்லாவாறு பந்தனை செய்து மறுநாள் உதயத்தில் அதிலுள்ள சீரகத்தை மென்றுதின்று இளநீரைக் குடித்து விட்டால் சுகமாய்ப் பேதியாகும். இச்சாயத்தியம்.

## சூடாலை.

(132-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

### இரண்டாவதங்கம்.

### இரண்டாங்காட்சி.

இடம்:—*அரசனது அத்தாணி (கொலு) மண்டபம்.*

பாத்திரங்கள்:—*சிகித்துவசன், சுமந்திரி, சுமதி, காடன், மாடன், வீரன், கறுப்பன், சோமநாதசாஸ்திரி.*

காலம்:—*முற்பகல்.*

*(அத்தாணி மண்டபத்து வாயிற்காவலர் தம்முள் பேசிக் கொள்ளுகின்றனர்.)*

**காடன்:**—*மாடா! நேற்றிரவு நமது சிகித்துவச மகாராஜா அவர்கள் அரண்மனையின் அந்தப்புரத்தில் களவுபோனதென்றும், களவு செய்தவர் சோதிஷ சாஸ்திரத்தில் சிறந்த பெயர் பெற்று விளங்கிய சொக்கலிங்க சாஸ்திரியாரது குமாரரான சோமநாத சாஸ்திரியாரென்றும், அவரை வீரனும் கறுப்பனும் நடு ஜாமத்தில் நகர் சுற்றி வரும்போது பிடித்துக் காவற்கூடத்தில் வைத்தனரென்றும், அவரிப்போது மகாராஜா சந்நிதானத்தில் விசாரணை செய்ய அழைத்து வரப்படுவாரென்றும் கேள்விப்படுகின்றேன்.*

**மாடன்:**—*காடா! சோமநாதசாஸ்திரியாரா திருடியகப்பட்டார்? என்ன ஆச்சரியம்! சோமநாத சாஸ்திரியார் எதில் குறைந்தவர்? ஒன்றிலுங் குறைந்தவரன்றே? எதற்காகத் திருடப்போகின்றார்? நீ சொல்வதை நான் நம்பமாட்டேன்.*

**காடன்:**—*சோமநாத சாஸ்திரிதான் திருடியகப்பட்டிருக்கின்றாரென்று அரண்மனைக் காவற்காரர் சொல்லுகின்றனர். அவர்களெதற்காகப் பொய் சொல்லப்போகின்றார்? நமது மகாராஜாவிற்கு மிகவும்வேண்டியவராகவிருந்து காலஞ்சென்றசொக்கலிங்க சாஸ்திரியாரின் குமாரர் மீதா தோஷங் கூறுவார்கள்?*

**மாடன்:**—*(மூக்கின் மீது விரலை வைத்துச்சிறிது நேரம் ஒன்றுஞ் சொல்லாதிருந்து) தலைவிதி யாரை விடும்? தெய்வப் பிறப்*



*பினரென்னும் திருக்கச்சி நம்பியாரும் காஞ்சிபுரத்து வரதராஜப் பெருமாள் சந்நிதியிலிருந்த பொன்வட்டிலைத் திருடிச் சோழராஜனால் சிட்சிக்கப்பட்டாரென்று சொல்லப்படுகின்றதன்றோ? உண்மையில் அவர் திருடாதிருந்தும், திருட்டுக்குற்றம் அவர் மீது சாற்றப்பட்டதுபோல இவர் மீதும் திருட்டுக் குற்றம் சாற்றப்பட்டிருக்கலாம்? நமக்கென்ன தெரியும்?*

**காடன்:**—*சோமநாதசாஸ்திரியார் கையும் பிடியுமாக அகப்பட்டிருத்தலால், அவர் தப்பித்துக்கொள்ளல் முடியாது. நமது மகாராஜா மனுநீதி சோழனும் நீதியை யுணருமாறிருந்து அரசு புரிபவராதலின், இவரைத் தண்டியாது விடார்! இவருக்கென்ன கேடுகாலம்? எதற்காக இந்த அற்பப் பொருளைத் திருடினரோ?*

**மாடன்:**—*அவர் திருடிய தென்ன? சொல்லு! சொல்லு!!.*

**காடன்:**—*தூ! அஃது அடுப்பில் நெருப்புத்தள்ளும் ஓர் இருப்புக்கரண்டி! அதுவும் ஓட்டையா யிருப்பது!*

**மாடன்:**—*இதனையா திருடினர். விதியை வெல்ல முடியாதென்பது இதனால் நன்றாகத் தெரிகின்றது.*

**காடன்:**—*பகல் பத்து நாழிகையாயிற்று? ராஜா வருகிற சமயம்! விழிப்பாக இருக்கவேண்டும்.*

*(சிகித்துவசன் வண்டி அத்தாணி மண்டபத்தருகே வந்து விட்டது.)*

**மாடன்:**—*மகாராஜாவின் வண்டி வந்து விட்டது; வாய்மூடியிருப்போம்.*

*(அரசன் அத்தாணி மண்டபத்துள் போகின்றான்.)*

*(அரசன் கிழக்கு முகமாக வீற்றிருக்க, வந்திப்போர் முன்னின்று துதிக்க, மந்திரிகள் சேனைத் தலைவர் காய (பாட)கர் புராணிகர்தார்க்கிகர் சோதிடர் முதலாயினோ ரிடப்பக்கத்திருக்க,*

*சாமரம், நிறைகுடம், கண்ணாடி, தோட்டி, முரசு, விளக்கு, கொடி, இணைக்கயலென்னும் அஷ்ட மங்கலம் பிரகாசிக்க, உருத்திரகணிகையர் கவரிவீச, கப்பங்கட்டுமரசர் வலப்பக்கத்திருக்க, வீணை வல்லோர் பாட, கவிஞர் கவிபாடக் கடல்போன்று பூரணமாக விளங்கும் அத்தாணி மண்டபத்தின் வாயிலினருகே அரசன் வண்டி மெய்க்காப்பாளர் புடைசூழவந்து நின்றது. வாயிற்கா*

வலர் வணங்கி நின்றனர். அரசன் வண்டியிலிருந்திறங்கி, உள்ளே சென்றான்; அங்கு வணங்குதற்குரியவராயுள்ளார் யாவரும் எழுந்து வணங்கி நின்றனர். அரசன் அரியணைமீ தமர்ந்தான். நின்றவர் யாவரும் அரசன்குறிப்பறிந் தமர்ந்தனர்.)

சிகித்துவசன்:—(வழக்கம் போல மகிழ்ச்சியாயிருந்து உலக விசாரணை செய்வதொழிந்து வாட்டத்தோடு) மந்திரி! சுமந்திரி! நமது மாளவதேசத்தில் குடிகள் யான் அரசனாக வந்தது முதற்கொண் டிதுகாறும் ‡ ஐவகைப் பயமுமில்லாது வாழ்ந்து வருகின்றனரன்றோ? மழையின்மை அதிக மழையென்பன இல்லையன்றோ? புத்திரனது மரணத்தைப்பார்க்கும் பிதா ஒருவருமிலரன்றோ? கணவனுக்குப்பின்பு இறந்த ஸ்திரீகளைக் காண்பது கூடாதன்றோ? அகாலமரணமென்பதரிதன்றோ? விஷநோய் வந்து விதனப்படுபவரைக் காண்போ ரில்லையன்றோ? எல்லாமதமும் ஏகனையே (கடவுளையே) நோக்கிச் செல்லுகின்றனவென்னுங்கொள்கை யெவர்பாலுமறியலாமன்றோ? பகைமன்னரென் றிருப்பவரைப் பார்த்தல் கூடுமோ? அவ்வாறெல்லாமிருக்க, நேற்றிரவோரதிசயமான விஷயம் நமதரண்மனையி லந்தப்புரத்தில் நடைபெற்றது? அதனையெண்ணுந் தோறு மென்மனந் திடுக்கிட் டேங்குகின்றது? ஒரு நாளும் என்மனம் இவ்வாறு துடிப்புற்றுச் சோர்வடைந்ததில்லை.

சுமந்திரி:—(சுமதியென்னு மந்திரியை நோக்கி) சுமதி! நமது மகாராஜாவி னரண்மனையில் நடந்த விஷயம் யாதோ? தெரியவில்லை.

அஃது எனக்குத் தெரியாது. அதனை மகாராஜா வாயிலாகவே தெரிந்துகொள்ளல் வேண்டும்.

சிகி:—நமது சமஸ்தானத்துப் பண்டிதராக விருந்து காலஞ்சென்ற சொக்கலிங்க சாஸ்திரியாரது குமாரர் சோமநாத சாஸ்திரியார் நம தரண்மனையி னந்தப்புரத்தில் நேற்றைய யிரவு நடுச்சாமத்தில் எவ்வாறுகவோ வந்து, ஓரோட்டை யிருப்புக் காண்டியைத் திருடி, அந்தப்புரத்தைக் கடந்து வரும்போது, நகரைச் சுற்றிவந்த வீரன் கறுப்பனென்னும் சேவர்களிடத்தகப்பட்டிருக்கின்றார். ஒரு சிறந்த சாஸ்திரியார் குமாரரும் வேதவித்துமான ஓரந்தணர் ஓரோட்டை யிருப்புக்காண்டிக் காசைப்பட்டு, நம தாக்கினைக்குச் சிறிது மஞ்சாமல், அந்தப்புரத்தில், வாயிற்காவல ரறியாமல் பிரவேசித்து, அதனைத் திருடி யகப்பட்டாரென்னு மிது வியப்பினும் வியப்பான தன்றோ? நம தந்தப்புரத்துக் காவலரது காவல் மிகு நன்றாக விருக்கின்றதன்றோ?

சுமந்திரியும் சுமதியும்:—(பேராச்சரிய மடைந்து) அப்படியா சமாச்சாரம்? சோமநாத சாஸ்திரியார் திருடி யகப்பட்டிருக்கின்றன ரென்பது ஆச்சரியமே!

சிகி:—"அவனன்றி யோரணுவு மசையா"தன்றோ! சோமநாத சாஸ்திரியா ரிப்போது விசாரணைக் கிங்கழைத்துக்கொண்டு வரப்படுவார். விசாரணையில் உண்மை வெளியாகும். நாம் எக்காரியத்தையும் பொறுமையாக விசாரிக்கவேண்டும்.

(அரசன் அவ்வாறு பேசுஞ் சமயத்தில் சோமநாத சாஸ்திரியாரை வீரனும் கறுப்பனும் அத்தாணி மண்டபத்திற் கழைத்து வந்து விசாரணைப் * பஞ்சரத்துள் நிறுத்தினர். சோமநாத சாஸ்திரியார் தாஞ்செய்த செயலுக்காக விதனமடைந்து, தலையிறங்கிக்கொண்டு நின்றனர். சிகித்துவசன் சாஸ்திரியாரின் முகத்தைப் பாராது பராமுகமாகவிருந்தான்).

சுமந்திரி:—(சுமதியை நோக்கி) சுமதி! இவர் அத்தாணி மண்டபத்திற்கு வரும்போது, இவர்க்கு மகாராஜா செய்யும் மரியாதை யெவ்வளவு சீக்கிரமாக மாறிவிட்டது பார். இதனால் பேர்புகழ்முதலியனவெல்லாம் க்ஷணகாலத்தில் மாறிப்போந் தன்மையனவென்பது நன்கு விளங்கவில்லையா?

சுமதி:—வெளிநாட்டங் கொண்டு உலகபோகத்தை விரும்புகின்றவர்க்கு வருவதெல்லாம் துன்பமேயன்றோ? நமது சாஸ்திரியார் தாங்கற்ற கல்வியைப் பரலோகசாதனமாகப் பயன்படுத்தியிருந்தால் இத்தகைய இழிதொழிலிற் கொருபோது முடன்பட்டிரார்! இரார்!!

சிகி:—கடந்ததைப்பற்றிக் கவனிப்பானேன்? இனி விசாரணைசெய்து, தக்கவற்றைச் செய்வோம்.

(வரும்).

‡ (1) அரசனாலும், (2) அவனைச் சார்ந்தவராலும், (3) பகைவராலும், (4) கள்வராலும், (5) துஷ்டமிருக முதலியவற்றாலும் வரும் பயம் ஐவகைப்பயமாம்.

* பஞ்சரம் - கூண்டு.

# நீதிசதகம்.

(139 வது பக்கத்தின் தொடர்ச்சி)

(அ) (மஹாத்மாக்களின் ஸ்வாபாவிகமான ஆபரணத்தைக் கூறுகிறார்).

(53) கையில் சிலாக்யமான தியாகமும் சிரஸில் குருபாதத்தில் பிரீதியும், முகத்தில் ஸத்யமான வார்த்தையும், கைகளில் அஸதிருசமும் (ஒப்பற்றதும்) ஜயமுடையதுமான வீர்யமும், மனத்தில் ஸொச்சமான விருத்தியும், செவிகளில் அறியப்பட்ட சாஸ்திரமும் ஆகிய இவையெல்லாம் மஹாத்துக்களுக்கு ஐசுவரியமன்றி ஆபரணமுமாயிருக்கின்றன.

(அ) (நற்குணம் ச்ரேயஸ்ஸுக்குக் காரணமென்று கூறுகிறார்.)

(54) பிராணிஹிம்ஸையிலிருந்து நிவிருத்தியும், அந்நியரது தனத்தை அபஹரிப்பதில் உண்டான மனோவிருத்தியை யடக்குவதும், பேச வேண்டிய காலத்தில் ஸத்யவசனமும், தன்னுடைய சக்திக்குத் தக்கபடி தானமும், பரஸ்திரீ கதை நேரிட்டகாலத்தில் மௌனமும், தனவிஷயமான இச்சையை யடக்குவதும், குருக்களிடத்தில் வணக்கமும், ஸர்வ பூதங்களிடத்திலும் தயையும் ஆகிய இவை சகல சாஸ்திரங்களிலும் விரோதமற்ற பொது விதியாம். இவை ஸ்ரேயஸ்ஸையடைய மார்க்கமாம்.

(அ) (ஆபத் காலத்திலும், ஸம்பத் காலத்திலும் மஹான்களுக்குள்ள மனோவிருத்தி பேதத்தைக் கூறுகிறார்.)

(55) ஸம்பத்துநேரிட்ட காலத்தில் மஹான்களுடைய சித்தமானது உத்பலம் (கருநெய்தல் மலர்) போல மிருதுவாகின்றது; ஆபத் காலத்தில் மலையினுடைய சிலைபோலக் கடினமாகின்றது.

(56) நீதியிலே தவறாமல் இருக்கிற ஜீவனம் ஸாதுக்களுக்கு இஷ்டமேயன்றிப் பாவகர்மம் செய்யத் தக்கதன்று; அஸத்துக்கள் ஒரு சமயத்திலும் பிரார்த்திக்கத் தக்கவர்களன்று; தனங் குறைந்தகாலத்தில் மித்ரர்களையும் யாசித்தல் கூடாது. ஆபத் காலத்தில் தைர்யத்தை மேற்கொள்ளுதல் வேண்டும். ஸாதுக்களுக்கு இந்த விரதம் யாராலே உபதேசம் பண்ணப்பட்டது. இது கத்தி முனையில் ஸஞ்சரிக்கிறதற்கு ஸமானமாம்.



(57) மற்றவர்களுக்குத் தெரியாத தானமும், அதிதி கிருஹத்திற்கு வந்தால் அவர்களுக்குரிய உபசாரங்களைப் பரபரப்பாய்ச் செய்தலும், பிறர்க்குப் பிரியமான உபகாரத்தைச் செய்து மனதில் அதுபற்றி மௌனமாயிருப்பதும், பிறர்செய்த உபகாரத்தை ஸதஸ்ஸில் சொல்லுவதும், ஐஸ்வர்யம் வந்தபோது கர்வமடையாமலிருப்பதும், பிறருடையகதை நேரிட்ட காலத்தில் நிந்தியாமலிருப்பதுமான இந்த விரதம் கத்திமுனையில் ஸஞ்சாரத்திற்கு ஸமமாம். இது ஸாதுக்களுக்கு யாரால் உபதேசம் பண்ணப்பட்டது.

(அ) (அதம, மத்யம, உத்தமர்களுடைய விருத்திகளைக் கூறுகின்றார்.)

(58) தீயிற் சிவக்கக்காய்ச்சிய இரும்புத் துண்டில் விழுந்தஜலத்தின் பேரும் கேட்கப்பட மாட்டாது. அந்த ஜலமே தாமரையிலையி லிருந்தால் முத்தின் ஆகாரம் போலக் காணப்படுகிறது. ஸமுத்திரத்தினுள்ளேயிருக்கிற முத்துச் சிப்பியின் மத்தியில் விழுந்த ஜலம் முத்தாகவே யாகின்றது. ஆகையினால் அதமர்கள் மத்யமர்கள் உத்தமர்கள் என்னுமிவர்களை ஸேவிக்கிறவர்களுடைய விருத்திகள் அநேகவிதமாக விவ்வாறுகின்றன.

(அ) (ஸத்புத்ராதி ப்ராப்தி புண்யசாலிக்கே கிடைக்குமென்று கூறுகின்றார்.)

(59) எந்த புத்திரன் தனது நல்ல சரித்திரங்களினாலே பிதாவைத் திருப்தி செய்து வைக்கிறானோ அவன் தான் புத்திரனாவன். எவள் தனது பர்த்தாவுக்கு ஹிதத்தை விரும்புகிறாளோ அவளே மனைவி ஆவள். எவன் ஆபத்துக் காலத்திலும் ஸம்பத்துக் காலத்திலும் சமமாக இருக்கிறானோ அவன் தான் மித்திரனாவன். ஜகத்தில் இம்மூன்றையும் புண்யசாலிகள் தாம் அடைவர்.

(அ)(ஸாதுக்கள் எல்லாராலும் பூஜிக்கத்தக்கவர் என்று கூறுகின்றார்.)

(60) வணக்கத்தால் உயர்வை யடைந்தவர்களாயும் பிறருடைய குணத்தைச் சொல்லுவதால் தமது குணங்களைப் பிரசித்தஞ் செய்பவர்களாயும் அன்னியர்கள் விஷயமாகப் பெரியகாரியங்களை ஆரம்பித்துத் தமது காரியங்களை முடிப்பவர்களாயும், பொறுமையினாலேயே கடோரமான வார்த்தைகளைப்பேசுந் துஷ்டர்களுக்குத் துக்கத்தை யுண்டுபண்ணுபவர்களாயும் ஆச்சரியமான சரித்திரமுடையவராயும் அளவிறந்த பேர்கட்கு ஸம்மதமானவராயுமுள்ள ஸாதுக்களை உலகத்திலே எவர் தாம் அர்ச்சிக்காது விடுவர் ? யாவரும் பூசிப்பரன்றோ ?

## பரோபகார பத்ததி.

(61) விருக்ஷங்கள் பழங்களின் பாரத்தினாலே வணங்கி விடுகின்றன; நீருண்ட மேகங்கள் மழை பெய்வதனால் கீழிறங்கி விடுகின்றன;

ஸத் புருஷர் ஐஸ்வர்யங்களால் கர்வமற்றவர்களாக ஆகின்றனர். பரோபகாரிகளுக்கு இவையே ஸ்வபாவமாம்.

(62) காதானது வேதசாஸ்த்ர முதலியவற்றாலே பிரகாசிக்கிறதே யன்றிக் குண்டலத்தால் பிரகாசிக்கவில்லை; கரமானது தானத்தாற் பிரகாசிக்கின்றதே யன்றிக் கடகத்தால் பிரகாசிக்கவில்லை; தயையுடையவர்களான மஹா புருஷர்களது சரீரம் பரோபகாரத்தால் பிரகாசிக்கிறதே யன்றிச் சந்தனத்தால் பிரகாசிக்கவில்லை.

(63) சூர்யன் தாமரைகளை மலரச்செய்கிறான்; சந்திரன் அல்லி முதலான வற்றை மலரச்செய்கின்றான். மேகம் பிறர் யாசிக்காமலே ஜலத்தைக் கொடுக்கிறது; ஸாதுக்களும் பிறர்க்கு ஹிதத்தைச்செய்வதில் சுயமாகவே முயற்சியுடையவராக இருக்கின்றனர்.

(64) எவர்கள் தமது காரியத்தை விட்டுப் பிறரது கார்யத்தைச் செய்கிறார்களோ அவர்தாம் ஸத்புருஷர்கள்(உத்தமர்). எவர்கள் ஸ்வகார்யத்திற்கு விரோதமில்லாது பிறரது கார்யத்தைச் செய்கிறார்களோ அவர்கள் ஸாமான்யர்கள் (மத்யமர்கள்); எவர்கள் தமதுகார்யத்திற்காகப் பிறருடைய ஹிதத்தைக் கெடுக்கிறார்களோ அவர்கள் மானுஷராக்ஷஸர்கள் (அதமர்கள்). எவர்கள் தமக்குப் பிரயோஜனமின்றிப் பிறருடைய ஹிதத்தைக் கெடுக்கிறார்களோ அவர்களையாரென்று (சொல்லலாம்; சொல்ல) அறியோம்.

(அ) (ஸத்மித்ர லக்ஷணத்தைக் கூறுகிறார்.)

(65) எவன் தன்னுடைய ஸ்நேஹிதனைப் பாபத்திலிருந்து நிவிருத்தியாகும்படி செய்கிறானோ ஸத்காரியங்களை யனுஷ்டிக்கும்படி செய்து வைக்கிறானோ ரஹஸ்யமான கார்யத்தை வெளியிடா திருக்கிறானோ, குணங்களை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறானோ, ஆபத்துடையவனை விடா திருக்கிறானோ காலங்களில் விரும்பியபலனைக் கொடுக்கிறானோ அவன் தான் நல்ல மித்திரனாவன். அதையே வர்ணிக்கிறார் திருஷ்டாந்தத்துடன்.

(66) பால் தன்னையடைந்த ஜலத்திற்கு முன்னர் தன்னுடையவெண்மை மாதுர்யம்முதலிய குணங்களெல்லாவற்றையும் கொடுத்துப், பிறகு ஜலம் தனது உபகாரியான க்ஷீரத்திற்கு விசேஷதாப முண்டானதைப் பார்த்துத் தான் அக்னியில் பிரவேசித்து விட்டதற்காக க்ஷீரம் தனது மித்ரனுடைய ஆபத்தைப் பார்த்துத் தானும் அக்னியில் பிரவேசிக்க மேல் நோக்கிக் கிளம்பிற்று. பிறகு ஜலத்தோடே சேர்ந்து சமனத்தை அடைந்து விட்டது; சாதுக்களுடைய ஸ்நேகமும் இவ்வாறாயதே.

வி-ஸா-ராமச்சந்திர சாஸ்திரியார், விஷ்ணுபுரம்.

# கிண்டர் கார்ட்டன் என்னும் பால போதனமுறை.

(143-வது பக்கத்தின் தொடர்ச்சி).

## Observation—The great Instructor of Children.

உற்று நோக்குதல்தான் பிள்ளைகளுக்குச் சிறந்த உபாத்தியாயரென்பது கீழ் வருவனவற்றால் நன்கு புலப்படும். ஒரு குழந்தை பிறந்தது முதல் அஃது ஓருபாத்தியாயரிடத்தில்சென்று பாடங்கள் கற்கும் வரையில் அறிந்த விஷயங்களுக்கு உபாத்தியாயர் யார்? என்று சற்று யோசித்தால் தெரியும். அஃது ஒருகுழந்தை பிறந்த சிலமணி நேரங்களுக்குப்பின் தான் புதிதாய் வந்திருக்கும் உலகத்திலிருக்கும் ஒவ்வொரு வஸ்துவையும் பார்த்துச் சந்தோஷிக்கின்றது. முதல் முதல் பார்க்கிறபோது அதற்கு வஸ்துக்களின் தனிமை தான் (Individuality)புலப்படும்;பிறகு முறையே வடிவம் நிறம் முதலியன தோன்றும். பிறகு பார்க்கும் வஸ்துக்களின் தன்மைகளை யறியும் ஆவல் பிள்ளைகளுக்குச் சுபாவமா யிருப்பதா லப்பிள்ளைகள், அவற்றைத் தங்கள் இந்திரியங்களால் தொட்டு உருசித்து, உடைத்து, முகர்ந்து பார்க்கிறார்கள்.

ஆதலால், பிள்ளைகளிடத்தில் உற்று நோக்குஞ் சக்தியை விர்த்தி செய்ய வேண்டுமானால், ஒவ்வொரு பொருளையும், அப்பிள்ளைகள் தங்கள் தங்கள் இந்திரியங்களின் மூலமாய் அறியச் செய்தல் அவசியமென்பது பெறப்பட்டது.

உலகத்திலுள்ள பொருள்களெல்லாம் கட்டிப் பொருள்கள் (Solids), திரவப் பொருள்கள் (Liquids), காற்றுப் பொருள்கள் (Gases) என்று மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

கட்டிப் பொருள்கள் (Solids) யாதொரு உதவியுமில்லாமல் தம் வடிவத்தையும், பரிமாணத்தையுமுடைய கனப்பொருள்கள். உதாரணம்:—கல், கட்டை, இரும்பு முதலியன. திரவப் பொருள்கள் (Liquids) மேடான விடத்திருந்து பள்ளத்திற்குப் பாய்வதும், சமதரையில் தேங்குவதும், எந்தப் பாத்திரங்களில் வைக்கப்படுகிறதோ அவற்றின் வடிவத்தையும் பரிமாணத்தையுமடைவதுமான நெகிழ்ச்சிப்பொருள்கள். உதாரணம்—ஜலம், எண்ணெய், பாதரஸம் முதலியன.

காற்றுப்பொருள்கள் (Gases) நிரப்பப்பட்ட பாத்திரங்களின் வடிவத்தை யுடையதும், பாத்திரங்களின் மூடியைத் திறந்தால் வெளியே எழும்பப்பிரயத்தனப்படுவதுமான பொருள்கள் காற்றுப் பொருள்கள். உதாரணம்: காற்று, புகை முதலியன. முற்கூறியவற்றில் கட்டிப் பொருள்களின் உருவம் (Form or Shape), நிறம் (Colour), அவயவங்கள் அல்லது பாகங்கள் (Organs or Parts), அமைப்பு (Structure), வாஸனை (Smell), உருசி (Taste), சீதோஷ்ணஸ்பரிசங்கள் (Cold or Hot touch), மிருதுவு அல்லது சுறசுறப்பு (Soft or Hard or Rough), பரிமாணம் (Bulk or Size), எடை (Weight) முதலிய குணங்களையும், ஜலப்பொருள்களின் உருவம் நிறம், வாஸனை, உருசி, சீதோஷ்ண பரிசங்கள், எடை முதலிய குணங்களையும், காற்றுப் பொருள்களின் வாஸனை (Odour) எடை முதலிய குணங்களையும் கவனிக்கச் செய்தல் அத்தியாவசியமாம்.

### உருவம் (Form).

உருவம் என்பது ஒரு பொருளின் வடிவம். காற்றைத் தவிர மிகவும் நுட்பமான அணுக்கள் உட்பட எல்லாப் பொருள்களும் உருவத்தை யுடையனவா யிருக்கின்றன. நம்மால் காணப்படும் ஜடப்பொருள்களுக்கு வடிவம் இல்லாவிடில் நாம் அவற்றைப் பார்த்தலே முடியாது.

(1) ஒவ்வொரு பொருளும் இன்னின்ன உருவத்தையுடையதென்று அறிதல், (2) அறிந்த வடிவத்தை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுதல், (3) முகக்குறிகளை (கோபமா யிருத்தல் சந்தோஷமா யிருத்தல், விசனமா யிருத்தல் முதலியவைகளை) ஊகித்தறிதல், (4) வஸ்துக்களைப்பார்த்த மாத்திரத்திலேயே இவை இன்ன உருவத்தை யுடைமையால் இன்ன வஸ்துவென்று உருவத்தின் அநுபவ ஞானத்தின் மூலமாய் அறிதல், (5) மகனுடைய முகம் தகப்பனுடையமுகத்தைப்போ லிருக்கிறதென்று ஒப்பிடுதல் முதலிய சக்திகள் நமது மனதிற்குண்டு. பொருள்கள் உருவத்தையுடையனவா யிருத்தலால்தான் மேற்கூறிய பற்பலஉணர்ச்சிகள் நம் மனதிற் றோற்றுகின்றன. உருவமானது பொது உருவமென்றும் சிறப்பு உருவமென்றும் இருவகையாம். எந்த உருவத்தை யுடைத்தா யிருப்பதால் மனிதன் விலங்கினத்திலிருந்து வேறு படுத்தப்பட்டு அறியப்படுகிறானோ அவ்வுருவம் பொது உருவமாம்.

N. சுப்பிரமணிய அய்யர்,
திருவேட்டீசுரன் பேட்டை,
எலிமெண்டரி ஸ்கூல் எட்மாஸ்டர், சென்னை.

## உலகத்தியல்பு.

(139 வது பக்கத்தின் தொடர்ச்சி).

நாம் நமது சென்னையில் சமுத்திரக்கரைக்குப் போய்ச் சற்றுக் கிழக்கு, தெற்கு முதலிய திக்குக்களில் திரும்பிப் பார்ப்போமாயின், அங்கு முப்புறமும் ஆகாயத்தின் கூடாரம் சமுத்திர ஜலத்தைத் தொடுவதாகக் காணப்படும். நமது சமுத்திரக் கரையிலிருந்து கிழக்கே சுமார் ஆயிரம் கல் (மைல்) தூரத்திலும் இன்னும் மத்தியிலும் அநேக தீவுகளும் நிலமும் அவ்விடங்களில் மனுஷ சஞ்சாரமும் இருக்கின்றன. இவற்றை நமது கண்ணுக்குத் தோன்றும் அக்கூடாரம் மறைத்திருக்கின்றதென்று தோன்றுகின்றது. நாம் ஒருகப்பலேறிக் கிழக்கே போவோமானால், இக்கூடாரமும் சமுத்திரத்தைத் தொடுவதாகக் காணப்படும். அந்தச் சம்பந்தத்துடன், நம்மோடு அதுவும் கிழக்கே போய்க் கொண்டிருக்கின்றது. இப்படியே சென்னைக்குத் தெற்கேயும் அதிகசமீபத்தில் சிலவிடங்களில் நிலத்தின் ஓட்டம் சமுத்திரத்தில்சென்று அவ்வூர்களின் கடற்கரைகள் சற்றுச் சென்னையைப் பார்க்கிலும் கிழக்கிலிருக்கின்றன. அவையும் சுமார் 50 கல் (மைல்) தூரத்திற்குள்ளேயே யிருக்கின்றன. அவையும் நமது கண்ணுக்குத் தோன்றுகிறதில்லை. ஆனால் அவற்றிற்கும் நமதுகண்ணுக்கும் மத்தியில் இக்கூடாரம் தோன்றுகின்றது; நாம் தெற்கே செல்லச்செல்ல இக்கூடாரமும் ஓடி ஓடிப்போகிறது. அஃதாவது சற்று அவ்வூர்களை நெருங்கநெருங்க அவற்றின் தோற்றமுண்டாகிறது. அப்போது அத்தோற்றத்திற்குப் பின்னர் நிற்கின்றது அக்கூடாரம். இக்கூடாரத்தின் இயல்பும் இருப்பும் இவ்வாறானால் அதனை என்னவென்று சொல்லுகிறது? எங்கிருக்கின்றதென்று மொழிவது? ஓரிடத்தில் இருப்பதாக மாத்திரம் காணப்பட்டு அருகில்போவோமாயின் அங்கில்லாது வேறோரிடம் போனதுபோலக் காணப்படும். இவ்வாறேதோன்றிக்கொண்டிருக்கும் இதனை உண்மையாகஇருக்கிறதென்றும் ஒரு பொருளென்றும் சொல்லுதல் சிறிதும் எவர்க்கும்எக்காலத்திலும் முடியாது. ஆகவே, அருகிலிருப்பதாகவும் மிகத்தூரத்திலிருப்பதாகவும் காணப்பட்டு ஒரு நிலையிலில்லாத இவ்வெறுந்தோற்றத்தை எப்படி அப்பெரும் வெளியினது வரம்பிலே அளவாக இருக்கிறதென்றும் அதற்கு வேறாகிய அதனை யளவுபடுத்துகிறதென்றும் சொல்ல முடியும்? முடியாதாகவே, ஆகாயம் இந்த அளவுக்குட்பட்டதா வென்றும் அதனால் அஃது அகண்டமென்றும் வெளியாகிறது. இவ்வாறாக உள்ள ஆகாயம் எங்கெங்கும் எவ்வெப் பொருளுக்கும் இடம் கொடுத்து அப்பொருள்களைத் தரிக்

கின்றது என்ற விஷயம் மேலே சொல்லப்பட்டது. ஆனால் ஒன்று; பொருள்களைப்பற்றிப் பேசும்போதெல்லாம் சில விஷயத்தைவிடாது கவனிக்கின்றோம்; அவையாவன; சென்ற தீபாவளிப்பண்டிகையன்று சில விலையுயர்ந்த வேஷ்டிகள் வாங்க ஜவுளிக்கடைக்குப் போனோமென்று வைத்துக் கொள்ளுவோம்; அங்கு அக்கடைக்காரன் காட்டும் சரக்குகளில் சிலவற்றைப்பொறுக்கி அவற்றில் ஒவ்வொன்றாக எடுத்து ஒவ்வொன்றையும் இது என்னவித நாணயமான (நம்பருள்ள) நூலால் ஆக்கப்பட்டதென்று ஆராய்ந்து அதுதேர்ந்த பிறகு இஃது எந்தஊர்ச்சரக்குஅஃதாவதுகாஞ்சிபுரத்ததா, சேலத்ததா அல்லது மதுரையதா அல்லது உப்பாடையதாவென்று பார்த்துத் தீர்மானம் செய்கின்றோம். பிறகு இது பழையமாதிரி(மோஸ்தர்)அல்லது புதுமாதிரி சரக்கென்கின்றோம். இவ்வாறே ஒவ்வொரு வேஷ்டியும் சோதிக்கப்பட்டுப் பழையமாதிரி அல்லது புதுமாதிரியென்றுதீர்மானிக்கப்பட்டு, தள்ளவாவது அல்லது கொள்ளவாவது படுகிறது. இவ்வாறு சோதனைக்குட்படுத்தப்பட்ட அந்தப் பொருள்களைக் குறித்து மேலேசொன்ன விஷயம் மூன்று; அவற்றில் இது என்ன நூலால் எங்குச் செய்யயப்பட்டது என்னும் விஷயங்கள் அதனை ஆக்கியபொருள் மேலும் அதனது இடசம்பந்தத்தின் மேலும் சாரும். இவைபற்றிப் பாக்கமுன்னரே பேசியுள்ளோம். ஆதலால் அவற்றை நீக்கி அவ்வேஷ்டியோடு நியதமாய்ச் சம்பந்தப்பட்டு இதுவரையிற் பேசப்படாத "பழையமாதிரி" "புதுமாதிரி" என்பது பற்றி யோசிப்பாம்.

பழையமாதிரி புதுமாதிரி என்னும்போது அதனது கருத்து இதுவாம். சூரியன் உதயாசலத்தில் உதித்துப் பிறகு மறைந்து மீட்டும் தோன்றும் வரையிலுள்ள ஓர் அளவின் நீட்டமாகிற அதனை ஓர்நாளெனக் கொள்ளுகின்றோம். இத்தகைய நாட்கள் பல சென்றால், அந்நாள்களில் இருந்தது பழையது என்றும், இந்நாட்கள் சிறிது சென்றால் அவற்றி லிருந்தது புதியது என்றும் பேசப்படுகின்றன. (பழைய மாதிரி வஸ்திரங்கள் அநேகநாள் முன்னர்ச் செய்யப்பட்டனவே. மாதிரிகள் ஒருகாலத்திலுள்ளன மற்றொரு காலத்தில் இராது மாறிக்கொண்டே யிருக்கின்றன வென்பது வெளிப்படை). ஆகவே வஸ்திரம், சூரியனால் அளக்கப்பட்டு அதனால் இருப்பைஅடைந்து பிரத்தியட்சமாகி வருகின்ற நாள்கள் என்ற ஒருவிசேடத்தின் சம்பந்தத்தையும் சிறப்பாகக் கொண்டுள்ளதென் றேற்படுகிறது. இப்படியே புத்தகத்தை ஆராயுமிடத்தும் இது பழையகாலத்திய அஃதாவது 19-ம் நூற்றாண்டில் வெளிவந்த புத்தகமென்றும் இந்நூற்றாண்டின் புத்தகமென்றும், அதனை அச்சுவாகன மேற்றிவெளியிட்ட நாள்கொண்டும் குறிக்கின்றோம். இதனால் ஏற்படுவது இந்தப் புத்தகம் வெளிவந்த அந்த நாள்முதல் இந்த நாள்வரை, சூரியன்தோன்றி மறைந்து மீட்டும் தோன்றும் அந்த நீட்டங்கள் பல சென்றனவென்பதேயாம். இதனால் புத்தகமும் நாள்கள் என்ற நீட்டத்தின் சம்பந்தத்தைச் சிறப்பாகப் பெற்



றிருக்கின்றதென்று தெற்றென வேற்படுகிறது. இவ்விதமாகச் சோதிக்கின், எல்லாப்பொருள்களும் நாள்கள் என்ற ஏதோ ஒன்றைவிட்டிருக்க முடியாதிருக்கின்றனவென் றேற்படுகிறது. அங்ஙனமாயின், இந் நாட்கள் என்பன யாவை என விசாரிக்கவேண்டும். அது பற்றி விசாரிப்பாம்.

(வரும்).

வ - ஆறுமுகசெட்டியார்,
முத்தியாலுபேட்டை, சென்னை.

## Space & Number Work.

## எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.

பாலர் வகுப்பிற்கு எண் கற்பிக்கு முறை வருமாறு:—

வேண்டும் கருவிகள்:—கோலிகள், மணிகள், பந்துகள், பைசாக்கள், மிட்டாய், பலபம், விதைகள், கட்டைகள்.

4 வரையில் எண் கற்பிக்கும் முறையை ஓர் உபாத்தியாயர், ஒரு பாலர் வகுப்பை, எதிரில் வைத்துக்கொண்டு உபாத்தியாயருடைய கேள்விகளும் பிள்ளைகள் சொல்லும் உத்தரங்களும் வினாவிடை மூலமாகக் காட்டி இருப்பதைக் காண்க.

உபாத்தியாயர்களுக்குக் குறிப்பு:—

பாலர் வகுப்பிற்குப் பொருள்கள் இல்லாமல் கணிதபாடத்தைப் போதித்தலே கூடாது. கணிதத்தில் பிள்ளைகளுக்குச் சந்தேகம் உண்டாகாதபடிக்கும், மனதில் நன்றாய்ப் பதியும் படிக்கும் உறுதியாய்ச் சொல்லும்படிக்கும் உற்சாகம் உண்டாகும் படிக்கும் போதித்தல் வேண்டும். மேல் சொன்ன ஒவ்வொரு பொருளையும் பிள்ளைகளுக்குக் கொடுத்துக் கையாடச் செய்து கேள்விகளுக்கு உத்தரங்களைத் தங்கள் அனுபோகத்தினால் சொல்லும்படி செய்ய வேண்டும். கணிதபாடத்தை ஒவ்வொருபாடத்திலும் சிற்சில சமயங்களில் அப்பியாசங்களைக் கொடுத்துக் கணிதத்தை விருத்தி செய்ய வேண்டும். சில உபாத்தியாயர்கள் "பாலர் வகுப்பிற்குத் தாமே போதிக்கப் போகிறோம்; இதற்குப் பாடக்குறிப்பு என்னத்திற்கு" என்று எண்ணுகிறார்கள். அவ்வாறு எண்ணுவது கூடாது. எந்தப் பாடத்தைப் போதித்தபோதிலும் போதிக்கும் உபாத்தியாயர் முன்னதாகவே வீட்டில் பாடக்குறிப்பு தயார் செய்துகொண்டு வந்து போதித்தல்வேண்டும். கணிதம் போதிக்கும்போது தாமும் ஒரு பிள்ளையாகப் பாவித்துப் பிள்ளைகளுக்கு உற்சாகம் உண்டாகும்படி போதிக்கவேண்டும். பிள்ளைகளுக்குக்கூட்டல் இன்னதென்றும், கழித்தல் இன்னதென்றும், பெருக்கல் வகுத்தல் இன்னின்னவையென்றும் சொல்லாமலே போதிக்கவேண்டும்.

மேற்சொன்ன அப்பியாசங்களைப் பாலர் வகுப்பிலேயே அறிந்தால் மேல் வகுப்பிற்கு வருங்காலத்தில் பிள்ளைகள் கணிதத்தை நன்றாய் அறிவார்கள்.

### ஒன்று என்பதைக் கற்பிக்க.

ஒன்று என்பது பிள்ளைகளுக்கு ஏற்கெனவே தெரிந்த விஷயம். உதாரணமாக:—பிள்ளைகள் அவரவர்களின் தாய் மார்களை அம்மா எனக்கு ஒரு பழம் கொடு? எனக்கு ஒரு காசு கொடு? என்று கேட்பதை நாம் பார்த்தும் கேட்டும் இருக்கிறோம்.

உபாத்தியாயர்:—ஒன்று என்பது பிள்ளைக்குத் தெரிந்ததா இல்லையா என்பதை அறிந்து கொள்ளவும் ஒன்று என்பதை விளக்கவும்.

உ-ப. ஒரு பிள்ளையைப் பார்த்து உனக்கு எத்தனை தலை?

பிள்ளைகள். அய்யா! எனக்கு ஒரு தலை என்பார்கள்.

அப்பியாசம். (உப) ஒரு கோலி எடு? ஒருமணி எடு? என்று இவ்விதமாய்ப் பல அப்பியாசங்களைக் கொடுத்து ஒன்று என்பதை விளக்க வேண்டும்.

### 2 என்கிற எண்ணைக் கற்பிக்கும் முறை.

(உப) பிள்ளைகளே! வலது கையில் ஒரு விதை எடுங்கள் என்றவுடன் பிள்ளைகள் எடுப்பார்கள். அப்பொழுது உபாத்தியாயர் பிள்ளைகளுக்குத் தெரியும்படி தாமும் ஒரு பிள்ளையாகத் தமது வலது கையில் ஒரு விதையை எடுக்கவேண்டும்.

(உப) பிள்ளைகளுக்கு மேற்சொன்னபடி இடது கையில் ஒரு விதையை எடுக்கும்படி சொல்லவேண்டும். உபாத்தியாயரும் பிள்ளைகளைப் போலத் தாமும் இடது கையில் ஒரு விதையை எடுத்துக்கொள்ள வேண்டும்.

(உப) பிள்ளைகளே! இப்பொழுது எத்தனை விதைகள்? பிள்ளைகள் பேசாமல் இருந்தால் பிள்ளைகளை இடது கையில் ஒரு விதை வலது கையில் ஒரு விதை என்பதைச் சொல்லும்படி தகுந்த கேள்விகளைக் கேட்டு உபாத்தியாயர் சொல்லும்படி முயலவேண்டும்.

பிள்ளைகள் இரண்டு விதைகள் என்றால் அப்பொழுது தப்பு என்று ஆக்ஷேபனை செய்து

(உப) பிள்ளைகளை நோக்கி வலது கையில் எத்தனை விதை.

(பிள்) ஒரு விதை.

(உப) இடது கையில் எத்தனை விதை.

(பிள்) ஒரு விதை.

(உப) பிள்ளைகளே! நீங்கள் இப்பொழுது இரண்டு விதை என்று சொன்னது தப்பு தானே.

1 விதை, 1 விதை சேர்ந்தது அஃதாவது இரண்டு ஒரு விதை சேர்ந்து இரண்டு விதை என்பதை உபாத்தியாயர் கற்பிக்க வேண்டும்.

2-ல் ஒன்றைவிட எத்தனை அதிகமாய் இருக்கிறது?

(பிள்) ஒன்றைவிட ஒன்று அதிகமாய் இருக்கிறது.



### 3 என்பதைக் கற்பிக்க.

(உப) பிள்ளைகளே! வலது கையில் 2 கோலிகள் எடுங்கள்.

(பிள்) வலது கையில் 2 கோலிகள் எடுப்பார்கள்.

(உப) இடது கையில் ஒரு கோலி எடுங்கள்.

(பிள்) இடது கையில் ஒரு கோலி எடுப்பார்கள்.

(உப) இப்பொழுது இரண்டு கையிலுள்ள கோலிகளை ஒன்றாய்ச் சேருங்கள்.

(உப) இப்பொழுது எத்தனை கோலிகள்? பிள்ளைகள் பேசாமல் இருந்தால்

(உப) 2 கோலியுடன், ஒரு கோலியைச் சேர்த்தால் 3 கோலிகள் என்பதை உபாத்தியாயர் கற்பிக்கவேண்டும்.

அப்பியாசம்;—

1 விதை, 1 விதை, 1 விதை மூன்று ஒருவிதை. மூன்று ஒரு விதை சேர்ந்தது மூன்று விதைகள்.

(வரும்)

வி-வ-இராமசாமி.

## ஓநாயும் நாரையும்.

ராகம் பார்ஸீ கோட்

(மெட்டு ஸ்ரீராமச்சந்திரனே.)

ஓநாய். இந்த ஆட்டுக் குட்டியதனை ஆத்திரமாய் தின்றதாலே
மாட்டிக் கொண்ட தோரெலும் பையையோ
தாட்டிக மாகவிதை யெடுத்தாலே
கேட்டதெல்லாங் கொடுப்பேனவர்க்கே. (இந்த-ஆ-ஐயையோ)

நாரை. நான் ஆசை பட்டதெல்லா மளிப்பதா யுரைத்தாலே
அலகினாலெடுப்பேன் பார்-பார்-பார்
காசு கொடாமல் கஷ்டம் நீங்குமோ
நேசம் நீகொண்டாடினால் போதுமோ. (நான் ஆசை-பார்)

ஓநாய். நான் காசைக்கொடுத்து உன்றன் கால்தனில் விழுகிறேன்
கஷ்டத்திலிருந் தென்னைக் கா-கா-கா
நான் மோசஞ் செய்வேனென்று எண்ணாதே
எமபாசம் வந்திருக்குது இப்போதே. (நான்-காசை-கா)

நாரை. நீ சொல்வது உண்மையானால் சீக்கிரமாக வுன்றன்
சுந்தரவாயை யங்காந்து கொள்-கொள்-கொள்
பல்தனில் கொஞ்சமும் படாமலே
பாரிதோஎடுத்தேன் பகட்டாலே (நீ சொல்வது-கொள்)

நாரை. எலும்பை எடுத்ததற்கு ஈகுதலாய்ச் சொன்ன
இனாமெங்கே யிப்போது தா-தா-தா
தராவிடி லுனக்குத் தகாதே
தப்பு சால்சாபு இங்குச் செல்லாதே. (எலும்பை-தா)

ஓநாய். உன்றன் அலகு என்றன் கண்டத்தி லிருந்தப்போ
தூக்கக் கடியாததே யினா-மினாம்
மந்த புத்தியுள்ள மூடமே
மதிகெட்டு நீ என் முன்னே நில்லாதே. (உன்றன்-இனாம்)

(மெட்டு-சீரார் சபையில் வாழும் சபையோர்களே வந்தனம்.)

நன்றி யொருவர்க்கு நட்பாய்ப் புரிந்தோர்க்கு
நலம் வீணாமென்று நாம் எண்ணலாகாது
இதற்கோர் சிறுகதை இயம்புகிறேன் கேளாய்
எறும்பு நீரோடையில் இறங்கி நீரருந்தையில்
சறுக்கியதில் விழுந்து தத்தளிப் பதையொரு
சாதிபுறாக் கண்டிதைத் தற்காத்திடக் கருதி
சிறியகிளை முறித்துச் சீக்கிரத்தில் முன்னிடத்
திரமாயதின் மீதேறி கரைவந்து சேர்ந்தது
அந்நேரம் ஒருவேடன் அந்தப் புறாப்பிடிக்க
அருகில் வலைவிரித்து அதையவன் பிடிக்கையில்
எறும்பு பார்த்திதைக் காக்க எண்ணமிட் டோடிவந்து
அவனது குதிக்காலில் அழுந்தக் கடித்தது
அதைப் பொறாமல் வேடன் அலறி நின்று குதித்தான்
அவ்வோசை கேட்டுப் புறா அப்போ தோடிப்போயிற்றே
தளரா வளர்தெங்கு தானுண்ட நீரைத்
தலையாலே தான் சுமந்து தான் தருதலாலே
ஆகையால் நாம் ஒருவர்க்கு அன்பாய்ப் புரிந்தநன்றி
அழியா தொருகாலும் என்றறிந்து நடப்போமே.

T. K. ஸ்ரீனிவாச அய்யங்கார்.

## உன்னால் முடியுமா?

1. காற்று லடிக்கப்பட்டுச் சிதைந்து போன சிலந்தியின் கூட்டை முன்னிருந்த நிலைமையில் வைக்க உன்னால் முடியுமா?

2. கிளையிலிருந்து விழுந்த பழத்தைப் பழையபடி மரத்தில் ஒட்டவைக்க உன்னால் முடியுமா?

3. தாமரை மலரிலிருந்து விழுந்த அதன் இதழை அதனிடத்தில் மறுபடியும் வைத்து வளரச்செய்ய உன்னால் முடியுமா?

4. நீ பதட்டமாய் நசுக்கிவிட்ட வண்டின் இரக்கையை அதனிடத்தில் ஒட்டச்செய்ய உன்னால் முடியுமா?

5. வற்றிப்போன திராக்ஷப் பழத்திற்கு ரஸம் உண்டாக்கி அதை அதன் கொடியில் ஒட்டிக்கொள்ளச் செய்ய உன்னால் முடியுமா?

6. உலர்ந்துபோன பனித்துளியைப் புஷ்பங்களின் மீது மறுபடியும் வைத்துப் பிரகாசிக்கச் செய்ய உன்னால் முடியுமா?

7. ரோஜாவிலிருந்து விழுந்த இதழ்களை அதில் மறுபடியும் ஒட்டிக் கொள்ளச் செய்ய உன்னால் முடியுமா?

8. மாவை அரிசியாக்கி அதை உமிக்குள் வைத்துப் பழையபடி அதை நெல்லாய்ச் செய்ய உன்னால் முடியுமா? அப்படிநீ செய்தாலும் அந்த நெல்லைப் பூமியில் விதைத்தால் அது முளைக்குமா?

9. உடைந்த முட்டையை அதன் பூர்வஸ்திதிக்குக் கொண்டுவர உன்னால் முடியுமா?

10. மெழுகிலிருந்து பிழிந்தெடுத்த தேனை மறுபடியும் மெழுகில் வைத்துத் தேன்கூட்டை முன்னிருந்த உருவத்தில் அமைக்க உன்னால் முடியுமா?

11. என் கேள்விகளெல்லாம் அற்பமானவையென்று நீ நினைக்கலாம். இன்னும் ஒரே ஒரு கேள்வி கேட்கின்றேன்.

12. ஆத்திரத்தோடு உன் வாயை விட்டு வெளியே வந்த ஒரு வார்த்தையை நீ அழிக்க முடியுமா?

13. அல்லது கோபத்தினால் செய்த ஒரு கொடூரமான கிரியையை உன்னால் அழிக்க முடியுமா?

Translated from the "Light of Reason"

K. Rangaswami Aiyangar, *Madras.*

நன்னடக்கை அல்லது நேர்மையினும் மேலான தர்மம் ஒன்றுமில்லை. நாம்கற்றல் கேட்டலினால் அடைய வேண்டிய பயன் அதுவே. ஆகையால், ஒவ்வொருவரும் நன்னெறி பற்றியே ஒழுகக் கடவர். அணுவளவும் பிசகாமல் நன்னெறியில் நிற்பவனுக்குண்டாகும் ஆநந்தம் அவ்வழி விலகி நடப்பவர்களுக்கு ஒருபொழுதும் உண்டாகாது.

ஸ்வாமி தயாநந்த ஸரஸ்வதி.

## நீலகண்ட தீக்ஷிதரவர்கள் இயற்றியருளிய
## வைராக்யசதகம்.

(137-வது பக்கத்தின் தொடர்ச்சி)

(61) அகஸ்தியருடைய கோபத்தையும் கௌதமருடைய சாபத்தையும் நினைத்துப்பார்த்தால் சத்துருவுக்கும் இந்திர பதவி வேண்டுவதில்லையாம்.

(62) இந்திர லோகமாகிய அமராவதிக்குப் போகட்டும், அப்படியே பிரஹ்மாவின் நகரமான ஸத்யலோகத்திற்குப்போகட்டும்; மறுபடியும் திரும்பி இங்கேயே வரவேண்டுவதென்றால், மனிதன் எதை ஸாதிக்கிறான்.

(63) அநேகம் பத்னிகளை அனுபவித்தோம்; புத்திரர்களையும் பேரன்மார்களையும் அடைந்தோம்; நூறு வயதையும் பேர்க்கிறோம். சாவதற்கு மனமிருக்கிறதா? உண்மையாகச் சொல்.

அஃதாவது இந்த லோகத்தில் இவ்வளவும் அனுபவித்துத் தீர்க்கமான வயதிருந்தாலும், சாவதற்கு மனம்வராமல் இங்கேயே அதிக அஞ்ஞானத்தால் அபிமானம் அதிகமாகி வருத்த மடைகின்றோம் என்பது கருத்து.

(64) பிரியும் ஸ்வபாவத்தை யுடைய விஷயங்களைப் பார்த்துத் தெரிந்துகொண்டவன் அவை தமக்கு வேண்டுமென்று எப்



படி நினைப்பான்? சாகுந் தருணத்திலிருக்குங் குதிரையை எவன் பணங் கொடுத்து வாங்குவான்.

(65) * அன்னம் இல்லாவிட்டால் மரணம் வந்து விடும்; நெற்பயிரால் அன்ன முண்டாகின்றது; பயிரோ மழையினால் விருத்தியடைகிறது; மழை தபஸால் உண்டாகின்றது என்று நன்றாய்த் தெரிந்துகொண்டு, மரணம் உண்டாகாம லிருத்தற்பொருட்டு அந்தத் தபஸ்ஸைச் செய்யவேண்டும்.

(66) ஜனங்கள் மனத்தையடக்க வில்லையா? ஸர்வேச்வரனைச் சரணமாய் அடையவில்லையா? இருந்தாலும், இச்சை வெவ்வேறாய்ப் பிரிந்திருப்பதால், (அவர்கள்) மோக்ஷ சித்தியின் பொருட்டு, அதன் சாதனத்தால் கட்டப்படுகின்றார்கள்.

(67) பாமரர்களுக்கு (மூடர்களுக்கு) இந்தச்சரீரம் போகத்திற்கு உபயோகமாயிருக்கின்றது; விவேகிகளுக்கோ யோகத்திற்கு உபயோகமாயிருக்கின்றது. விவேகிகளென்று நினைத்துக்கொண்டிருப்பவருக்கு இந்தத் தேஹமோ போகத்திற்கும் பிரயோஜனமாவதில்லை; யோகத்திற்கும் பிரயோஜனமாவதில்லை.

(68) முனிகள், எந்த மஹா யாத்ரிகர்களைப் பிராம்மணசண்டாளர் என்று சொன்னாரோ அது ஸம்ஸாரமாகிய மார்க்கத்திற் செல்லும் மஹா யாத்ரிகர்களை யுத்தேசித்தே பிரவிர்த்தித்தது.

(69) உலகத்தில் அரசரிடத்து ஒன்று இரண்டும், தேவரிடத்து இரண்டு மூன்றும், பிரஹ்மாவினிடத்து ஐந்தும் ஆறும் ஆகியஇவை தாம் பிரம்மாநந்தமாகிய ஸமுத்திரத்தின் திவலைகள்.

(70) ஞானமானது அஞ்ஞானத்தால் மறைக்கப்பட் டிருக்கும் போது எக் காரியத்தைச் செய்யமுடியும். இருட்டால் நேத்திரம் பிரயோஜனமில்லாமலிருக்கும்போது நேத்திரத்தைத் திறந்து பார்க்கக் கூடுமா.

(71) ஞான மில்லாத பிராணி ஸ்நேஹம் செய்வதில்லை, த்ரோஹம் செய்வதில்லை, சிரிப்பதில்லை, ஆச்சர்யப் படுவதில்லை, கல்லுப்போல் இருக்கிறது. அதனால் பயன் என்ன?

---

* "மழையின்றி மாநிலத்தார்க் கில்லை மழையும், தவமிலா ரில்வழி யில்லை தவமும், அரசிலா ரில்வழி யில்லை யரசும், இல்வாழ்வா ரில்வழி யில்" என்பது நான்மணிக் கடிகை.

(72) மிகவுங் கலங்கியதாயும் சீக்கிரம் நசிக்கக் கூடியதாயும் பிரகாசிப்பது போன்றதாயும் பிரகாசப் படுத்துவதாயும் இருக்கும் ஞானமாகிய மின் மினிப்பூச்சியை யடைந்த ஜனங்கள் எப்படி ஸந்தோஷத்தை யடைவார்கள்?

(73) மூடர்கள் அற்பமான போகத்திற்காக லக்ஷம் கோடியானாலும் அவற்றைச் செலவழிக்கின்றார்கள்; ஆனால் ஐந்தாறு பில்வ தளங்களால் கைவல்யத்தின் ஸாதனத்தை ஸம்பாதிப்பதே யில்லை.

(74) எதுவரையில் சேஷ்டை செய்கிறீர்களோ அதுவரையில் பாசத்தில் முடிச்சு கட்டப்படுகின்றது. நீங்கள் ஒரு சேஷ்டையும் செய்யாம லிருந்தால் காலத்தால் பாசம் விழுங்கப் படுகின்றது.

அஃதாவது நமது கர்மங்களால் பந்தம் அதிகமாகிறது; நாம் கர்மம் செய்யாவிட்டால் அது காலக் கிரமத்தில் தொலைந்து விடும் என்பது கருத்து.

(75) முனிகள் சுவாஸத்தை அடக்குகிறார்கள், சாப்பிடுவதில்லை, பானம் செய்வதில்லை. ஆனாலும் இவர்களை ஸ்தோத்திரம் செய்யலாமா? ஏனெனின், இவர்கள் தங்க பாசத்தை (பொன்னாலாகிய கயிற்றை)க் கழுத்தில் கட்டிக்கொள்ளுகிறார்களே.

இராமநாத சாஸ்திரி, பண்டிதர்,
அடையாறு லைபிரேரி, சென்னை.

## பிரார்த்தனையும் அனுஷ்டானமும்.

வானத்தை நோக்கிக் கோடிக் கணக்கான ஜனங்கள் பாபம், துக்கம் என்னு மிவற்றினின்றும் விடுபட்டு மனச் சாந்தி கிடைக்கவேண்டுமென்று பிரார்த்திக்கின்றார்கள். ஆயினும், பிரபஞ்சத்திலோ பாபமும் துக்கமும் குறையாமலே வந்துகொண்டிருக்கின்றன. அதற்குக் காரணம் என்ன? நம்மிடத்திலே பிரார்த்தனையில் குறைவில்லை; ஆனால் பின் எதில் குறைவு? அனுஷ்டானம் பூஜ்ஜியம்.

வெகு விநயத்தோடு, பூரணமான மனதோடு தேவாலயங்களிலோ ஏகாந்தத்திலோ பரவசமாய் மெய்மறந்து நாம் செய்யும் ஆயிரக்கணக்கான பிரார்த்தனைகள் நம் வாயை விட்டு அகன்ற நிமிஷத்திலேயே நம் மனத்



தை விட்டகன்று விடுகின்றன. இவற்றினும் லோகோபகாரார்த்தமாய்ச் செய்யும் ஒரு சிறு கருமம் சிரேஷ்டமானதாகும்.

உதாரணமாக:—ஒருவன் மெய்ப் பொருளைநோக்கித் தன்னிடத்தில் கருணை பாராட்ட வேண்டுமென்று பிரார்த்திக்கின்றான். இவன் பிரார்த்தனை முடிந்தவுடன் துப்பாக்கியைக் கையில் எடுத்துக்கொண்டு எந்தக் கடவுளை நோக்கிக் கருணை யடைய வேண்டுமென்று பிரார்த்தித்தானோ அவராலேயே சிருஷ்டிக்கப்பட்டு அநாதைகளாயுள்ள ஜந்துக்களைச் சுட்டு அவைகள் படும் மரணவஸ்தையைப் பார்த்து ஸந்தோஷப்படுகிறான். கடவுளுடைய கருணைக்குத்தான் பாத்திரனாக வேண்டுமென்று பிரயத்னம் செய்த இவனிடத்தில் கருணை அணுவளவும் இல்லை.

ஒரு ஸ்திரீயானவள் தானிருக்கும் நிர்ப்பாக்கிய நிலைமையிலிருந்து தன்னை விடுவிக்க வேண்டுமென்று ஆதியைத் தொழுகிறாள்; தொழுதெழுந்தபின் தன் காதலனுக்குத் தான் பாத்திரமில்லாத மனைவியாக நடந்துகொள்ளுகிறாள். ஜகதீசனுடைய அருள் தனக்குண்டாக வேண்டுமென்று பிரார்த்தித்த இவன் தன்னிடத்தில் அன்பு பாராட்டினவனுக்குத் தான் நெறியாய் நடந்துகொள்ளவில்லை.

ஒரு வாலிபன் தனக்கு மெய்யறிவு பிரஸாத மாகவேண்டுமென்று கருதி ஈசுவரனைப் பிரார்த்தித்தான்; வாயை மூடி எழுந்தவுடனே ஒரு விலை மாதின் வலையில் சிக்கி நன் மார்க்கத்தை உதைத்து நரக வழியை நோக்கிச் சென்றான். ஒளி உண்டாக வேண்டுமென்று பிரார்த்தித்த இவன் அந்தகாரத்தில் விழுந்தான்.

ஒரு வர்த்தகன் தன் வாணிபம் விர்த்தியடைந்து தான் பெரிய தனிகனாக வேண்டுமென்று பிரார்த்தித்தான். இலாபத்தை உத்தேசித்த இவன் ஒருவனுக்குத் தப்புவிலை சொன்னான்; இன்னொருவனுக்குக் குறைத்து அளந்தான்; வேறொருவனை மோசம் செய்தான். இலாபம் வரவேண்டுமென்று விரும்பிய இவனுடைய கிரியைகள் இவனுக்குக் கஷ்டத்தையே விளைவித்தன.

துக்கத்திலும், பாபத்திலும்மூழ்கின ஜனங்கள் "மெய்ப்பொருளே! எங்கள் பேரில் கருணைவையும், எங்களை ரக்ஷியும்" என்று கதறி ஓலமிடுகிறார்கள். இது ஒருநாளல்ல, பல நாளல்ல; இன்றல்ல, நேற்றல்ல; பகுத்தறிவுமனிதனுக்கு ஏற்பட்ட காலந்தொன்றி நாளதுவரையில் இம்மாதிரிப்பிரார்த்தனை ஆதிவஸ்துவை எட்டியும், பிரபஞ்சத்திலோ துக்கமும் பாவமும் அப்படியே இருக்கின்றன; இப்பேர்ப்பட்டவர்களைப் பார்த்து பகவான் "என்னைப் பணிவதால் மாத்திரம் யாது பயன்? என் பிரீதிக்குப் பாத்திரமாக உன் மன வாக்குக் கிரியைகளை நேர்படுத்திக்கொள்" என்று சொல்லுகிறார்.

From the Light of Reason
Translated by K. Rangaswami Aiyangar.

# பூங்காவனம்.

(129-வது பக்கத்தின் தொடர்ச்சி).

அங்கு நடந்த அதிசயம் யாதெனில் சைவப்பாகுகனாகிய சிவனடியான் என்பவன் தனது பாக சாலை யறையில் கழுத்திற் சுருக்குப்போட்டுத் தூக்கப்பட்டவனாய்க் காணப்பட்டான். பயங்கரமும் துக்கமுமான இக்காட்சியானது எவர்களுக்கும் பரிதபிக்கத்தக்கதாகவே இருந்தது. ஆனால் இக்கொலை நிகழ்ச்சியானது எவ்வாறு உண்டாகியதோ வென அறியும்படி அக்கலாசாலைத் தலைமை ஆசிரியரும் குருவானவருமாகிய "பறஞ்ஞாந்து" என்பவர் பலவேறு வகையான தந்திர உபாயங்களினால் பகீரதப்பிரயத்தனம் செய்து ஆராய்ந்தும் வாய்க்கவில்லை. கலாசாலையார் இறந்துபோன பாகுகனது இடத்துக்கு வேறொருவனை நியமித்தற்காகத் தினப்பத்திரிகையில் விளம்பரப்படுத்தியும் மதவிகற்பத்தினால் அதற்கு ஒருவரும் வந்திலர். "வந்ததே சிறுக்கி பந்தடித்தாள் வரவரச் சிறுக்கி கழுதை மேய்த்தாள்" என்றபடி கலாசாலையார் கிறிஸ்தவப்பாகுகனாகிய சாமுவேல் என்பவனைக்கொண்டு சில நாள் இரகசியமாகப் பாகம் பண்ணுவித்து வந்து சில நாளில் வெளிப்படையாக அமைப்பித்து வந்தார்கள். சமயபேதமும் மித்திரபேதமும் நம்பிக்கைத் துரோகமுமான செய்கை இது என்பதை நான் அறியக்கூடிய அறிவுள்ளவனாயிருந்தும் கொண்ட மதமாறுபாட்டினால் பொருட்படுத்தாது விட்டேன். அந்தோ! என்பகுத்தறிவு பாழாய்ப்போக விசிட்டம் பெற்ற சைவசமயத்தில் எள்ளளவும் அபிமானமின்றிக் கிறிஸ்துமார்க்கமாகிய பொய்வலையிற் சிக்கிச்சிறிது காலம் நம்மவர் இகழ்ச்சிக்குப்பயந்து அந்தரங்கத்தில் கிறிஸ்தவனாக நடித்துப் பின் உண்மையான கிறிஸ்தவப்பழமாகி விட்டேன். அக்கலாசாலையில் நம்மோடுடன் கற்ற நண்பர்கள் நான் மனந்திரும்பித்தங்கள் மதானுசாரியாய் விட்டதற்காக அளவு கடந்த அன்பும் அபிமானமும் கொண்டார்கள். இதையறிந்த நமது சுற்றத்தார்கள் எம்மை எதிர்த்துப் பகை சாதிக்கத்தொடங்கி விட்டார்கள். எனது அன்னையையும் என்னுடன் உரிமைபாராட்டிக் கொண்டாடக்கூடாதென்று எனது மாதுலர்கள் கட்டளை செய்தார்கள். அப்பொழுது என் மனமிருந்த நிலைக்கு எனது தாயார் உறவினரின் கொண்டாட்டம் வெறுப்புடையதாகவே யிருந்தது.



ஆனால் எனது தாயார் சுற்றத்தார்கள் அறியாமல் இரண்டொருமுறை அந்தரங்கமாகக் கலாசாலைக்கு வந்து கிறிஸ்துமார்க்கத்தையும் கலாசாலையையும் விட்டு வீட்டுக்கு வந்து விடும்படி எவ்வளவோ மன்றாடியும், அதற்கு மறுத்து "பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு" என்று உலகினர் கூறும் முதுமைவாக்கியத்தை ஸ்திரப்படுத்திவிட்டேன். நான் கலாசாலையிற் சேர்ந்த பத்தாவது வருஷத்தில் கல்வி கற்பதை நிறுத்தி அக்கலாசாலைக் கீழ்தர மாணவகர்களுக்குக் கல்வி கற்பிக்கும் ஒரு சிறு உபாத்தியாயராக நியமிக்கப்பட்டேன். மாசம் ஐந்து ரூபாய் வேதனம் கிடைத்தது. அந்நாளில் எனது சிநேகிதனான ஒரு கிறிஸ்தவ அபிமானியினுடையபிரயாசையினால் திருச்சபை யென்னும் பெயருடைய ஆபாச சபையார் முன்னிலையில் ஒரு பெண்மணியைப் பாணிக்கிரகணம் செய்தேன். அவளது பெயர் மாக்கிறற் பொன்னம்மாவாகும். என்னைப்போலவே அவளும் விடுதிப் பெண்பாடசாலையிற் கல்வி கற்றவள். சிறு வயது முதற்கொண்டு அகம்பாவமும் பிடிவாதமும் உடையவள். இவைகளெல்லாம் அமைந்திருந்தும் பசுத்தோல்போர்த்தபுலிபோலத் தானொருஉத்தமமானபெண்ணென்று கண்டோர் கூறும்படி நடித்துவந்தாள். சிறிது காலம் செல்லவே அதாவது விவாகஞ்செய்த இரண்டு மூன்று மாசத்தின்பின் தனது இருதயமாகிய பெட்டியில் அடக்கிவைத்திருந்த துர்க்குணங்களைச் சிறிது சிறிதாக வெளிவிடத்தொடங்கினாள். "ஒரு பெண்மணியின் உண்மைக்காதலை ஒருவன் அடைந்து விட்டானாயின் அதைவிட அவன் இவ்வுலகத்தில் அனுபவிக்கக்கூடிய மேலான இன்பம் வேறொன்றில்லை" என்று கூறிய ஆன்றோர் வாக்கியத்தை உள்ளத்தடக்கி, அப்பெண்மணியின் வெளித்தோற்றத்தில் மயங்கி மோசம் போயினேன்.

அந்தோ! கடந்த ஆறு வருடகாலமாக அவளால் அடைந்த கஷ்டநிஷ்டூரங்களை இப்பொழுது நினைத்தாலும் என் அங்கம் நடுநடுங்குகின்றது. கருடனுக்கும் பாம்புக்குமுள்ள அன்னியோன்னியம் போல வாழ்ந்துவரும் நாளில் எனது தாயானவள் தனது சகோதரர்களாகிய எனது மாதுலர்களின் கட்டாயத்தினாலும், பிடிவாதத்தினாலும், நான்கிறிஸ்வதனாகிவிட்டமையால் தனக்குச் செய்யவேண்டிய அந்திய கருமங்களைச் செய்யமாட்டேன் என்று தாயார் எனக்குச் சேர வேண்டிய முப்பதினாயிரம் ரூபாய்

மதிப்புள்ள தாவரசங்கமப் பொருள்களை யெல்லாம் வன்னை ஐக்கியப்பிரவிர்த்திச் சங்கத்தார் அடையும்படி சாசனஞ் செய்துவிட்டு மனக்கவலையுடன் சில நாள் வசித்து, சென்ற சாதாரண வருஷம் தை மாசத்தில் இறந்துவிட்டனர். பத்துமாதம் சுமந்து பெற்று வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும் கட்டிலிலும் வைத்து, காக்குக் குருவி பறவாமல் கோதாட்டித் தாலாட்டிப் பாராட்டிச் சீராட்டிக் காப்பாற்றிய எனது அன்னையின் மரணத்தைக் கேள்விப்பட்டேன். அப்பொழுது என்னை அறியாமல் ஒருவித கவலையுண்டாக அவளது பிரேதத்தையாவது கண்டு மன ஆறுதலடைய விரும்பிக் கொடும்பாவியாகிய என் மனைவி அறியாமல் இரகசியமாக எனது வீட்டுக்குப் போனேன். அங்கே சுற்றத்தவர் அயலவராதியோர்களின் கூட்டமும் பிணப்பறை யோசையும் பொருந்தியிருந்தன. என்னைக் கண்ட சுற்றத்தவர்களும் அயலவர்களும் துர்வார்த்தை பேசி இகழ்ந்து அன்னிய மதத்தவனாகிய நீசனே ! உனக்கு இங்கே என்ன அலுவல் ஓடிப்போவென்று துரத்தினார்கள். அந்தோ! உலகத்தில் ஒருவனது இருமுதுகுரவர்கள் இறந்த காலங்களில் அவனதுசுற்றத்தவர்கள் அயலவராதியோர்கள் தேற்றரவு கூறி ஆதரிப்பது வழக்கம். ஆனால் இவ்வழக்கம் என்னளவில் மாறிவிட்டது. காரணம் என்னை யெனில் நான் அறியாமையினால் பரமதப்படுகுழியில் வீழ்ந்து அழுந்தினமையேயாகும். பின் நான் கண்ணீர் சிந்திக் கதறியழுது அங்கு நின்றோரின் காலடியில் வீழ்ந்து வணங்கித்தாயாரின் பிரேதத்தையாவது பார்த்தற்கு உத்தரவுதரும்படி வேண்டினேன். தர்மிஷ்டர்களாகிய அவர்களும் இரக்கமுற்று உள்ளேபோய்ப் பிரேதத்தைப்பார்க்கும்படி உத்தரவு செய்தார்கள். நான் அவ்வண்ணமே உள்ளேபோகும்போது அங்குப் பிரேதத்திற்கு அபிஷேகித்துக்கிரியைநடக்கின்றது. பக்கத்தே நின்று தேவார திருவாசகங்களை ஓதிக்கொண்டு நின்ற ஒருவர்,

"திருநாம மஞ்செழுத்துஞ் செப்பாராகிற்
    றீவண்ணர் திறமொருகாற் பேசாராகி
லொருகாலுந் திருக்கோயில் சூழாராகி
    லுண்பதன்முன் னலர்பறித்திட் டுண்ணாராகி
லருநோய்கள் கெடவெண்ணீ றணியாராகி
    லளியற்றார் பிறந்தவா றேதோவென்னிற்
பெருநோய்கண் மிகநலியப் பெயர்த்துஞ் செத்தும்
    பிறப்பதற்கே தொழிலாகி யிறக்கின்றாரே."

என்னும் அருள்தாண்டகத்தை ஆராமையோடும் ஓத அது என் செவிவழியே புகுந்து மனதைப் பரவசப்படுத்தி விட்டது. ஆனந்தக் கூத்தாடினேன். ஓடினேன். பிரேதத்தின் காலடியில்



எழுந்து கதறியழுது புலம்பினேன் ; தேற்றுவா ரொருவரின்றி நானே தேறினேன். உலகத்தவர்களுக்கு அவ்வக்காலங்களில் தோற்றும் பலவகை வைராக்கியங்களில் ஒன்றாகிய மயான வைராக்கியம் என்னைப்பற்றாமல் விடவில்லை.

சிறிது நேரம் சென்றபின் பிரேதத்தை மயானத்துக்குத் தூக்கிச் சென்றார்கள். அவர்களுடன் நானும் உடன்சென்று பிரேதத்தைச் சிதையிலடுக்கித் தழல் மூட்டி எரிக்கும்வரைநின்று பின் ஒருவாறு மனந்திரும்பி எனது வீட்டுக்கு வந்து விட்டேன். எவ்வகையாகவோ இதை அறிந்த கொடும்பாவியாகிய எனது மனைவி பல துர்வார்த்தைகள் பேசிக் கலகம் பண்ணினாள். நான் பொறுமையென்னும் பூஷணத்தை ஆபரணமாகக் கொண்டிருந்தேனாகலின், கலகம் பெருகாது தன்னளவில் அடங்கிவிட்டது. அவளுடன் கூடி வாழ்ந்த துக்க வாழ்விலும் மரணமே நல்லதென்றாய்விட்டது இவ்வாறு ஆறுமாசம் சென்றுவிட்டன. எனது தாயாரின் மரணதினத்தன்று ஓதிய தேவாரத்தைக்கேட்ட நாட்டொடங்கிக் கிறிஸ்துமார்க்கத்தில் ஒருவித வெறுப்பும் சைவசமயத்தில் ஒருவித விருப்பும் உண்டாக அச்சமய சாஸ்திரங்களைக் கற்கவிரும்பி எனது மனைவி அறியாமல் இரகசியமாகச் சங்கர பண்டிதர், முதலிய மததாபகர்களால் வெளிப்படுத்தப்பட்ட சமய சாஸ்திரங்களைக்கற்றுச் சைவசமயத்தின் மகிமையையும் மேன்மையையும் அதன்வழி யொழுகுதலாலுண்டாகும் பெரும் பேற்றினையும் அறிந்து கொண்டேன். என்னுடைய மனமாறுதலை அறிந்த நாயகியானவள் பலவகைநயத்திலும் பயத்திலும் மனதைத் திருப்பப் பாடுபட்டும் வாய்க்காமையினால் அதேகவலையாக விருந்து சில நாளில் மாண்டாள். இல்லறமாகிய பெரும் பாந்தள் வாயினின்றும் விடுபட்ட தேரைபோன்ற நான் அவள் இறந்ததற்குத் துக்கப்படாமல் ஆனந்த முற்றுத் தேச சஞ்சாரமாகப்புறப்பட்டு ஊர்தோறும் சென்று

ஆற்றோடு தும்பை யணிந்தாடு மம்பல வாணர்தமைப்
போற்றா தவர்க்கடை யாளமுண் டேயிந்தப் பூதலத்திற்
சோற்றாவி யற்றுச் சுகமற்றுச்சுற்றத் துணியுமற்று
ஏற்றாலும் பிச்சை கிடைக்காம லேக்கற் றிருப்பர்களே

என்றபடி யாசகம் பண்ணித் திரியும்போது நேற்றுத் தங்களைச் சந்தித்தேன் ஐயா ! இதுவே என்வரலாறு என்றுகூறிமுடித்தான்.

வரும்

இரண்டாம் அதிகாரம் முற்றிற்று.

மா. சிவராமலிங்கம் பிள்ளை.
"ஆறுமுகநாவலர்" வாசகசாலை.

## ஒரு ஜோதிடத்தைநம்பாது துன்புற்றோன் கதை.

மகாபலிபுரமென்னும் மூரில் வீரசேகரனென்னு மொரு வேட்கோவன் (குயவன்) சுமார் 150 வருஷத்திற்கு முன்பிருந்தான். அவன் தன் குலத்தொழிலில் கீர்த்தி பெற்றுச் சிறிது பொருளுடையவனா யிருந்தமையின், யாவரையும் அசட்டை செய்யுங் கர்வியா யிருந்தான். அவன் ஒருநாள் தன் வீட்டிற்கு வந்த சாம்பசிவ ஐயரென்னும்புரோகிதரை நோக்கிச் சுவாமி! யான் பிள்ளையார் மேட்டுக்கொல்லையில் எள்ளு விதைக்க எண்ணியிருக்கின்றேன்; அதற்கு ஒரு நாள் வைத்துக்கொடுக்கவேண்டுமென்றுகேட்டான். சோதிடத்திற் பெயர்பெற்ற அந்தப் புரோகிதர் இந்த வருடம் உனக்கு எள்விளைவு கிடைக்கமாட்டாது. அதுபற்றி நீ பிரயத்தனம் படவேண்டாம் என்றார். வேப்பங்காய்க்குக் கசப்பு இயல்பாயிருப்பதுபோல இயல்பில் கருவியாயுள்ள அந்தவீரசேகரன் போங்க போங்க சாமி! நீங்க சொன்னதெல்லாம் பலிச்சதோ? நான்எள்ளுத்தான் விதைக்கப்போறேன் என்று உக்ரமாகப் பேசினான். அந்தப் புரோகிதர் தமது சுபாவத்திற் கேற்றவாறு சாந்தமாயிருந்து இவன். தன் னியல்பிற்கேற்றவாறு மூடத்தனமாய்ப் பேசுகிறான்; இவனோடு நமக்கேன் பேச்சென்று போய்விட்டார். கர்வத்திற் பேர்போன அந்தக் குயவன் கொல்லையை உழுது எள்ளை விதைத்துப் பாது காத்து வந்தான். அவ்வெள்ளும் நன்றாய் விளைந்தது. விளைந்தவுடன் அந்தக்கர்வி அப்புரோகிதர் வீட்டிற்குச்சென்று சாமி, சாமி எள் விளையாதென்று சொன்னீர்களே கொல்லைக்கு வாருங்கள்; எள் விளைந்த நேர்த்தியைப் பாருங்கள் என்று சொன்னான். அப்புரோகிதர் சிறிதுநேரம் சோதிட வாராய்ச்சி செய்து அப்பா! எள் விளைந்தாலும் பலன்வராது; வீணாய் ஏன் பேசுகின்றாய்; போ என்று கூறினார். அவன் நீங்கள் கூறிய சோதிடத்தைப் பார்க்கலாம் என்று தருக்கோடு சென்று எள்ளை யறுத்து அடித்துக் களத்தில் அம்பாரஞ் செய்து வேகமாகப் புரோகிதர் வீட்டிற்கு வந்து இப்போதாவது எள்ளு அம்பாரத்தை வந்து பாருங்கள் என்று சொன்னான். புரோகிதர் துள்ளினமாடு பொதி சுமக்காது, எதற்கும் பொறுமை வேண்டும், நாம் கூறியது முடிவிற்றெரியும், சும்மாபோம் என்றார். அதற்கக் குயவன் உறுமிக் கொண்டு பார்ப்போம், பார்ப்போமென்று களத்து மேட்டிற்குச் சென்று எள் அம்பாரத்தைப் பார்த்துச் சந்தோஷித்து வீட்டிற்கு எள்ளாகக் கொண்டு போவதைப்பார்க்கிலும் எண்ணெயாகக் கொண்டுபோவது நல்ல தல்லவா என்று எண்ணி எள்ளைச்செக்கு மேட்டிற்கு எடுத்துச்சென்று எள்ளையாட்டி எண்ணெயைப்பெரிய குடத்தில் வார்த்து எடுத்துத் தலை மீது வைத்துக்கொண்டு புரோகிதர் வீட்டிற்குச்சென்று சுவாமி! சுவாமி! எள்விளையாதென்று சொன்னீர்களே! என் தலை மீதில் இருக்கும் எண்ணெய்க் குடத்தைப் பார்த்தீர்களாவென்று மிடுக்காகப் பேசினான். அதற்கவர் இதுவரையில் யான் கூறிய சோதிடங்களில் ஒன்றும் பொய்யானதில்லை; இன்னும் பார்க்கவேண்டும்; ஒன்றும் பேசாதே; போ என்றார். அவன் சோதிடம் பழுத்துவிட்டது. இனிமேல் உங்கள் சோதிடத்தை யாரும் நம்பமாட்டார்கள்; இதை எங்குஞ்சொல்லி விடுகிறேன் என்று போனான்.

குயவர்கள் கடமுதலியன செய்யக் களிமண்ணைத் தலைமீது எடுத்துக் கொண்டுபோய் வீட்டில் தொப்பென்று போடும் பழக்கமுடையவரானபடியால், அப்பழக்கத்தின்படியே அவன் தன்தலை மீது வைத்திருக்கும் எண்ணெய்க் குடத்தை சந்தோஷ மிகுதியால் மறந்து மண்ணென்று நினைத்து வீட்டிற்குப் போனதும் தொப்பென்று போட்டான். உடனே அவன் ஐயோ புரோகிதர் சொன்னது மெய்யாய் விட்டது. நாம் சோதிடத்தை நம்பாமல் வீணே கெட்டோம்என்று துக்கமடைந்து தன் மடத்தனத்துக்கு வருந்திப் புரோகிதரைக்காண வெட்கமடைந்து வெளிவராமலே வீட்டுக்குள்ளேயேயிருந்தான். இதனால்“தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்; ஜன்மத்திற் பிறந்தது சிரச்சேதஞ் செய்தாலும்போகாது”என்னும்பழமொழிகளின் பொருள் நன்கு விளங்குவதாம்.

நல்லோர் கூறியதை நம்பாதவன் தீங்குறுவா னென்பதை இக்கதை நன்கு விளக்கும்.

ஆ. மே துணபூஷணம்.
சிந்தாதிரிபேட்டை, சென்னை.

---

### சிவப்புவர்ணத்தின் விசேடம்.

சிகப்புவர்ணமுடைய வஸ்திர மூலமாய்ச் சூரிய கிரணத்தின் உஷ்ணம் ஊடுருவிச் செல்வதில்லை. ஆதலால், வெயிலிற்போகும் ஜனங்கள் தலைக்காப்பாகச் சிகப்புக்குடை பிடித்தலும் குதிரைகளின் தலையில் சிகப்புமூடி போடுதலும் நலமாம்.

# வர்த்தமானம்.

## மு. கோ. நாராயணசாமி ஐயரின் தேகவியோகம்.

### சென்னை.

திருவல்லிக்கேணி, துளசிங்கப் பெருமாள் கோயில் வீதியில் வாசஞ் செய்து வந்த பிரஹ்மஸ்ரீ மு. கோ. நாராயணசாமி அய்யரவர்கள் பிப்ரவரி மாதம் 12-ந் தேதி மாலை சில நாட்களாகச் சுரத்தால் பீடிக்கப்பட்டிருந்து மார்பு வலியால் தேகவியோக மெய்தினர். அதுபற்றி யாம் மிகுதியும் வியசனமடைகின்றோம். சென்ற 5 வருட காலமாக யாமிவருடன் பழகி வந்தோம். அங்ஙனம் பழகி வந்ததில், இவர் வேதாந்த விசாரத்தில் மிகுதியும் பிரீதி யுள்ளவரென்றும் சன்மார்க்க சீலரென்றும், சமதமாதி குண சம்பத்துடையவரென்றும், அறியலானோம். இவர் வக்கீல் தொழிலை மேற்கொண்டவரா யிருந்தும் அதுவிஷயத்தில் தமதுகாலத்தை அற்பமாகவேசெலுத்திவந்தார். பெரும்பான்மையாகத் தமது காலத்தை யெல்லாம் வேதாந்த விசாரத்திலேயே செலுத்தி வந்தார்; யாம் பலகாலும் அவர் வீட்டிற்குச் சென்றிருக்கின்றோம். அக்காலங்களி லெல்லாம் அவர் உபநிஷத் விசாரமே செய்துகொண்டிருக்கக் கண்டனம். உயர்தரக் கல்விகற்று வக்கீல் வேலை செய்யு மொருவர் பொருள் சம்பாதிப்பதில் பராமுகமா யிருந்து ஆத்ம சாட்சாத்கார மடைதற் பொருட்டு உழைப்பதைக்காண்பது இக்கலி காலத்தில் மிகவு மருமையாம்; மேலும் சாதுக்கள் சேவை செய்யும் விருப்புற்றிருப்பதும் அருமையினு மருமையாம். நம்முடைய அய்யரவர்களோ உபநிஷத்துக்களைத் தமிழில் மொழி பெயர்ப்பதிலும், சாதுக்கள் சேவை செய்வதிலுமே சதாகாலமும் ஈடுபட்டு வருவாராயினர். நமது பத்திரிகையில் வெளிவரும் உபநிஷத் விஷயங்களை மொழி பெயர்த்துத் தந்தவருமிவரேயாவர். இவருடையதேகவியோகம் நமதுபத்திரிகைக்கொரு பெரிய நஷ்டமாமென்றே கருதுதல் வேண்டும். இவருடைய மொழிபெயர்ப்பை நமது பத்திரிகையின் சந்தா நேயர்கள் அதிக ஆவலாக எதிர்பார்ப்பவரா யிருந்தனர். அவர்களும் அவருடைய தேகவியோகத்திற்கு மிகுதியும் வியசன மடைவார்களென்றே கருதுகின்றோம். நமது பத்திரிகையில் ஆத்மோபகாரமான விஷயங்களையே வெளியிட்டுவந்தநமது அய்யரவர்களின் பிரிவைப்பற்றி நாம் மிகுதியும் வியசன மடைகின்றோம். இதுகாறும் தமிழில் வெளிவராத உபநிஷத்துக்களிற் பலவற்றை மொழிபெயர்த்திருக்கின்றனர். இவர் தேகவியோக மெய்தியது தமிழுலகத்திற்குப் பெரிதும் நஷ்டமேயாம். இவரைப்போன்றே இவர் பத்தினியாரும் சன்மார்க்க வழியிலீடுபட்டிருப்பவர். தருண மல்லாத வயதினிற் றலைவரை யிழந்த இவ்வம்மையாருக்கும், சிறு பிராயத்திற் பிதாவை யிழந்த அவருடைய பிள்ளைகட்கும் அநுதாப முறுகின்றோம். சிவன்செயலாலே யாதும் வருவதா



யிருக்கின்றமையானும், அதனைத் தடுப்பது நம்மா லியலாத காரியமா யிருக்கின்றமையானும் நாமும் நம்முடைய நாட்களை நமனுடைய நாளாகாது நலனுறச் செய்வோமாக.

இவர் தமிழில் வெளிவராத உபநிஷத்துக்களை மொழி பெயர்க்கத் தொடங்கியது எமது வேண்டுகோளுக் கிணங்கேயாம். நமது பத்திரிகை வாயிலாக வெளிவந்திருக்கும் உபநிஷத்துக்களையும் நம்மிடத்துத் திருத்திக் கொடுத்திருக்கும் வேறு சில உபநிஷத்துக்களையும் கூடிய சீக்கிரத்தில் புத்தக ரூபமாக வெளியிட உத்தேசித்திருக்கின்றோம். இது வாயிலாக நமது அய்யரவர்களின் புகழுடம்பு என்றும் நிலைத்திருக்கச்செய்ய விரும்பியே அம்மொழி பெயர்ப்புக்களை அச்சு வாகனமேற்ற அவாவுற்றிருக்கின்றோம். இவர் 12 வருஷ காலம் சென்னை ஐக்கோர்ட்டில் வக்கீலாக இருந்தார். இவர்க்கிப்போது வயது 36.

---

### உயரமுள்ள ஸ்திரீ.

உலகத்துள்ள ஸ்திரீகளுள் பிரேசிலியின் பிரனெல்ட் என்பவள் மிகவுயரமுள்ளவளாம். அவள் 1 - அங்குலங்குறைய 8 அடி உயரமாக இருக்கின்றனள். அவளுக் கிப்போது வயது 18 ஆம்.

### ஒரு பெருங்கடியாரம்.

ருஷியாவின் பிரதான நகரமாகிய செயின்ட்பீட்டர்ஸ்பர்க்கில் 95 முகமுடைய ஒரு பெருங்கடியார மிருக்கின்றதாம். அஃது உலகத்துள்ள முப்பது பிரதான தேசங்களின் காலங்களையும், கிரகங்களின் இயக்கங்களையும், தெரிவிக்கின்றதாம்.

### அமெரிக்காவும் மோட்டார் வண்டிகளும்.

அமெரிக்காவில் பத்து லட்சம் மோட்டார் வண்டிகள் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கின்றன. அங்கு 93 பேருக்கு ஒரு மோட்டார்வண்டி வீதமிருக் கின்றதாம். நியூயார்க்கில் மாத்திரம் லட்சம் மோட்டார்வண்டிகள் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கின்றன. அமெரிக்காமுற்றும் சென்றவருடம் முதல் 9 மாதத்தில் 266670 வண்டிகள் ரிஜிஸ்டர் செய்யப்பட்டனவாம். இத்தேசத்தின் மார்க்கங்களில் ஜனங்களின் போக்கு வரத்து அபாயமாகவே இருக்கும்.

### கடற்பூண்டுத் துணி.

இங்கிலாந்து தேசத்தார் ஒரு வகையான கடற்பூண்டிலிருந்து துணி செய்கின்றனர்.

### ஒரு கட்டுப்பாடு.

உருகுவே ஸ்டேட்டில் ஆசியாக்கண்ட வாசிகள் பிரவேசித்தல் கூடாதென்னும் நிபந்தனை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றதென்று இந்தியா ஸ்டேட் செக்ரிடெரி அறிக்கை செய்திருக்கின்றார். இவ்வாறு செய்திருப்பது இருபதாவது நூற்றாண்டின் நாகரீகம் போலும்!

பிரான்சு தேசத்தில் ஆகாய விமானமீதேறிச் சென்று தபால்கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

அமெரிக்காவில் ஒரு மோட்டார் கம்பெனியார் 50-பவுண்டிற்கு (750 - ரூபாய்க்கு) நல்ல மோட்டார் வண்டி விற்பதாக விளம்பரஞ் செய்திருக்கின்றனர்.

### குழாங்கல் செடிகள்.

தென்னாப்பிரிக்காவில் குழாங்கல் போன்ற ஒரு வகைச் செடிகளிருக்கின்றன; இவற்றுள், ஒரு வகைச்செடி ஸ்படிகம்போலிருக்குமாம். இது ஸ்படிகமுள்ள இடங்களில்உண்டாகின்றதாம்.

### கண்ணாடிக் கடியாரம்.

ஜர்மன் தேசத்துள்ள பவேரியா நாட்டில் கண்ணாடிக்கு மெழுகிடுமொருவன் ஆறுவருஷம் சிரமப்பட்டுக் கண்ணாடியால் ஒருகடியாரஞ் செய்திருக்கின்றான். அக்கடியாரத்தில் கண்ணாடி தவிரப் பிறபொருள்களின் சேர்க்கை சிறிதுமின்றாம்.

### பொன் சுரங்கம்.

ஜப்பானில் 58000 அடி யுயரமுள்ள ஷினானோ என்னும் மலைப் பக்கத்தில் இப்போது புதுவதாக ஒரு பொன் சுரங்கம் கண்டு பிடிக்கப்பட்டது. இதில் விசேஷமாகப் பொன் அகப்படுகின்றது.

### இரும்பு மலை.

அமெரிக்காவிலுள்ள மெக்ஸிகோவைச் சேர்ந்த டுராங்கோ என்னுமிடத்தில் 400 அடி உயரமுள்ள ஓர் இரும்புமலையிருக்கின்றது. அது $1\frac{1}{2}$ மைல் நீளமும், $\frac{1}{2}$ மைல் அகலமுமுடையதாம்.

### பர்மா-ஒரு பிரேதம்.

மெர்குவி டிஸ்டிரிக்ட் போஸ்ட் மாஸ்டர் மிஸ்டர் கங்கூலியின் மனைவியின் பிரேதம் சென்ற டிசம்பர் மாதம் 29ந் தேதி ரங்கோன் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப்பட்ட [illegible]



பிரேதம் துணியால் சுருட்டப்பட்டு ஸ்பார்க் வீதியின் ஒருபுறத்திலிருந்ததைப் போலீசு சார்ஜண்டு குளோவர் கண்டனர். அவர் போஸ்டுமாஸ்டரைக்கண்டு விசாரித்தபோது இறந்தவள் போஸ்டு மாஸ்டரின் மனைவியென்றும், அவள் நெடுங்காலம் சீதபேதியால் வாதைப் பட்டுக்கொண்டிருந்தனளென்றும், அவர் பேகவிபானபடியால் இறந்தவளைப் பற்றி அவருக்கு யாதொரு சம்பந்தமுமில்லையென்றும், ஸ்டீமர் அன்று புறப்படுவதால் அவர் போகின்றாரென்றும் தெரிந்துகொண்டார். உடனே அவர் ஒரு கான்ஸ்டேபிலைக் கூப்பிட்டு அவரைக் கவனித்து வருமாறு கட்டளைசெய்து, இச்சமாச்சாரத்தைப் போலீசு டிஸ்டிரிக்டு சூப்பரின்டெண்டெண்டிற்கு அறிவித்தார். அவர் போஸ்டு மாஸ்டரையும் அவருடைய பிள்ளைகளையும் போலீசு ஸ்டேஷனில் பிடித்துவைக்குமாறு உத்தரவு செய்தனர். பிரேதமோ பரிசோதனை செய்யப்படவில்லை; அவள் காமாலையால் இறந்தாளென்று டாக்டர்கள் நினைக்கின்றனர். மனைவியரின் ஈமக்கிரியை செய்யாத மாபாவிகளும் உலகிலிருக்கின்றனரே!

### ஈஜிப்டும் பெண்கல்வியும்.

ஈஜிப்டில் பெண்கல்வி சென்ற 10 வருடங்களில் விர்த்தியடைந்திருக்கின்றதென்று தெரிகின்றது. 1903 வது வருடத்தில் கவர்ன்மெண்டு பெண்கல்விச் சாலைகளில் 6542 மாணவர்கள் வாசித்து வந்தனர்; அவர்களுள் 2710 பேர் 5 எலிமெண்டரி கல்விச் சாலைகளில் வாசித்து வந்தனர்; அவர்களுக்கு 28 உபாத்தியாயினிகளிருந்தனர். இப்போது உபாத்தியாயினிகளைத் தயார் செய்ய ஒரு கலாசாலை ஏற்படுத்தப் பட்டிருக்கின்றது; 25000 பெண்கள் கல்விகற்று வருகின்றனர். உபாத்தியாயினிகளும் 129 பேர் இருக்கின்றனர். 3 கவர்ன்மெண்டு பெண் பாடசாலைகளுள் உபாத்தியாயினிகளே கல்விகற்பிக்க ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனர். கவர்ன்மெண்டார் ஆண் உபாத்தியாயர்களை நீக்கிப் பெண் உபாத்திமார்களையே பெண்கல்விச் சாலைகளில் நியமிக்க ஏற்பாடுசெய்து வருகின்றனர்.

### ரப்பர் விதை யெண்ணெய்.

ஜப்பானியர் ரப்பர் விதையிலிருந்து எண்ணெயெடுத்து, அதனைக் காகிதக் குடைகளின் மீது பூசிவருகின்றனர். இக்குடைகள் துணிக்குடைகள் போல அங்குபயோகப்படுத்தப்படுகின்றன.

ஜப்பான் தேசத்தார் தம் வீட்டில் ஆண்பிள்ளை பிறந்தால் அதையறிவிக்குங் குறியாகத் தம் வீட்டின் வாயிலில்காகிதத்தாற் செய்த மீன்களைக் கட்டித் தொங்கவிடுவார்களாம். நம்மவர்கள் பிள்ளை பிறந்தால் வேப்பிலையை வாயிலில் சொருகிவைப்பது வழக்கம்.

### இலவம் பஞ்சு யந்திரம்.

இலவம் பஞ்சை ஒரு விதை கூட இல்லாது சுத்தஞ்செய்யும் யந்திரமொன்று ஜர்மன் தேசத்தில் கண்டு பிடிக்கப்பட் டிருக்கின்றது.

### ஒரு பெரிய மோசம்.

பூடாபெஸ்ட் - ஜனவரி 19-ந்தேதி - இக்னஸ்ராலாஸ் என்னும் ரயில்வே வாராவதி கண்டிராக்டர் கைது செய்யப்பட்டிருக்கின்றார் அவர் டைரெக்டராயிருந்த அநேக ரயில்வேக் கம்பெனிகளையும் வேறு பல வியாபார ஸ்தலங்களையும்எட்டுமில்லியன் குரோனன் மோசஞ் செய்திருக்கின்றாராம். அவர் லண்டனிலிருக்கும் ஒரு கம்பெனியை மாத்திரம் 1½ லட்சம் குரோனன் வரையில் மோசஞ் செய்திருக்கின்றனர்.

ஜர்மனியிலிருக்கும் பெர்லின் நகரத்தில் இரவில் வெளியாகும் பத்திரிகையொன்று பிரசுரிக்கப்பட்டு வருகின்றது.

### கண் வைத்தியம்.

அமெரிக்காவில் டாக்டர் டிநேலரென்பவர், கொலை செய்து மரணதண்டனை விதிக்கப்பட்டிருக்கு மொருவனது இரண்டு கண்களையும், அவனைத் தூக்கிலிட்டுக் கொன்ற பிறகு பிடுங்கிக் குருடராகவிருக்கும் அப்ராப்ஸ் என்பவரது கண்களில் வைத்துச் சிகிச்சைசெய்யப் போகின்றார்.

### சோம்பேறிகளைக் காப்பாற்றல்.

கொழும்பு முனிசிபாலிடியார் சோம்பேறிகளைத் திருத்தி முன்னுக்குக் கொண்டுவர ஒரு தொழிற்சாலை யேற்படுத்த முயன்று வருகின்றனர். அவ்வாறு இங்கு மேற்படுமாயின், நன்மை தருவதாம்.



### தானிய மறுக்கும் யந்திரம்.

இப்போது இத்தாலிய தேசத்தில் தானிய மறுக்கப் புதுவதாக ஒரு யந்திரங் கண்டு பிடிக்கப்பட் டிருக்கின்றது. அது 10 மணி நேரத்தில் 7½ ஏக்ரா தானியத்தை யறுக்கின்றதாம்.

இங்கிலாந்திலுள்ள விஸ்கன் நகரில் 1028 பேருக்கொருவர் போலீஸ் உத்தியோகத்தி லிருக்கின்றனர்.

யுனைடட் ஸ்டேட்டில் சிலர் ஒரு சபை கூடித் தித்திப்பான வஸ்துக்கள் தேகத்திற்குக் கெடுதி செய்வதாக இருத்தலால், அவற்றை யுண்ணக் கூடாதென்று தீர்மானஞ் செய்தனர்.

### வண்ணாத்திப் பூச்சி வியாபாரம்.

காலிபோர்னியா தேசத்தில் கிலாஸ்ஸனென்னுமொரு ஸ்திரீ கோடைக்காலத்தில் 6200 வண்ணாத்திப் பூச்சிகளைப் பிடித்து 6 வாரம் வளர்த்து, அவற்றை 80 பவுண்டிற்கு விற்றனள். இவளுக்கு வண்ணாத்திப் பூச்சிகளைப் பிடித்து வளர்த்து விற்பதே தொழிலாம்.

### கள்வரைப்பிடிக்கும் யந்திரம்.

நியூயார்க் நகரிலுள்ள ஓர் இஞ்சினீயர் இப்போது திருடர்களைப் பிடிக்குமொரு யந்திரத்தைக் கண்டுபிடித் திருக்கின்றார். அது திருடர்கள் பெட்டியை யெடுக்கமுயன்றாலும், கதவைத் திறக்க முயன்றாலும், வெடித்துச் சத்தஞ் செய்யுமாம்.

### மின்சாரசக்தியால் தூங்கச்செய்தல்.

ஒரு ஜர்மன் டாக்டர் நாய்களையும், முயல்களையும், மின்சார சக்தியை அவற்றின் மூளையில் புகச்செய்து தூங்கச்செய்கின்றனர். அவ்வாறு செய்வதால் ஒருகெடுதியு முண்டாகவில்லையாம். வியாதியால் தூக்கம்வராது வருந்துகின்றவர்க்கு இது மிகவும் பயன்படுவதாம்.

### வானசித்திரம்.

ஒரு பிரான்சு தேசத்து வானசாஸ்திரி 25வருஷமாக மிகு ஊக்கத்தோடு ஆகாயத்தின் மேற்பரப்பை முற்றும் விபரமாய்ச் சித்திரித்து எழுதிவருகின்றனர். இது முடிவுபெற இன்னும் 25வருஷமாகுமாம். இது முடிவுபெற்றால் நட்சத்திர நிலை முதலியவற்றை நன்றாக அறிதல் கூடுமாம்.

### பௌத்தாலயம்.

1910 வது வருடம் மார்ச்சுமாதத்தில் லார்டுமிண்டோவிடத்திருந்து வாங்கிய பௌத்தரது அஸ்தியை மாண்டலே மலையில் சேமித்து அதற்கொரு கோயில் கட்ட ஒரு லட்சரூபாய் செலவாகுமாம். அதுபற்றிப் பொருள் சேகரஞ்செய்யப் பலருடைய உதவி வேண்டப்பட்டிருக்கின்றது.

மேரி மகாராணியாரும், அலெக்சாண்டிரா மகாராணியாரும் ஒருவருடத்தில் தமது உடையின் பொருட்டுத் தனித்தனியே 2000 பவுண்டு செலவு செய்கின்றார்களாம்.

1553-ம் வருடம் தேம்ஸ் நதியில் முழுகிப்போன கப்பல் இப்போது அகப்பட்டிருக்கின்றதாம். இக்கப்பல் 1512-ம் வருடத்திற் செய்யப்பட்டதாம்.

### ஒரு குரங்கு வேலையாள்.

ஒரு பிரான்சுப் போர் வீரர் தமது வீட்டுவேலை செய்யுமாறு ஒரு குரங்கைப் பழக்கியிருக்கின்றாராம். அது பால் கறக்கின்றது, கொல்லையைக் காத்து வருகின்றது, மாடு மேய்க்கின்றது, இன்னும் அநேக வேலைகள் செய்கின்றதாம்; இதனால் இராமாயணம், குரங்குகள் ஸ்ரீராமருக்கு உதவிசெய்தன வென்று கூறுவது பொய்யென்று கருதுவதற் கிடமில்லையாம்.

### சென்ற வருடத்தில் நேர்ந்த கப்பல் விபத்துக்கள்.

சென்ற வருடத்தில் சேதமடைந்த கப்பல்களால் நேர்ந்த கஷ்டம் ஏழுமிலியன் பவுண்டாம். சேதமடைந்த டில்லி ஓஷியானுக் கப்பல்களிலிருந்து எடுத்த சாமான்களினால் பொருள்நஷ்டம் குறைவு பட்டதாம். கப்பல்களின் சேதத்தினால் 1032 பேர்உயிர் துறந்தனர். 228 கப்பல்கள் முற்றும்சேதமடைந்தன. அவற்றுள், பிரிட்டிஷ் கப்பல்கள் 82-ஆம்.

### சீனாவில் கஞ்சா குடிப்பவருக்குத் தண்டனை.

சீனாவில் 40 வயதிற்குட்பட்டவர்கள் கஞ்சா குடிப்பார்களாயின், அவர்களத் தார்ப்பழக்கத்தை நோடீசுக் கொடுத்த மூன்று வாரகாலத்தில் ஒழிக்கவேண்டுமாம். அங்ஙனஞ் செய்யார்களாயின், அவர்கள் சுட்டுக் கொல்லப்படுவார்களாம். 40 வயதிற்கு மேலும் 60 வயதிற்குட்பட்டு மிருப்பவர்கள் நோட்டீசுக்கொடுத்த



8 வாரத்திற்குள் கஞ்சாகுடிக்கும் தார்ப்பழக்கத்தை விட்டுவிட வேண்டுமாம். அவர்கள் அங்ஙனஞ் செய்யார்களாயின், தீபாந்தர தண்டனை யடைவார்களாம். 60 வயதிற்கு மேற்பட்டவர்கள் கஞ்சா குடிப்பார்களாயின், அவர்கட்குக் கடுந்தண்டனையும், அபராதமும் விதிக்கப்படுமாம்.

சீனாவில் கஞ்சாகுடியை நிவிர்த்திக்கச் சீனாக் கவர்ன்மெண்டார் தகுதியான ஏற்பாடு செய்திருக்கின்றனர்; இவ்வாறு நமது தேசத்திலும் நமது ராஜாங்கத்தார் குடியர்கட்குத் தண்டனை விதிப்பார்களாயின், நமது தேசம் க்ஷேமமடையும்; ஜனங்களும் சன்மார்க்கராவர். குடியினால் எத்தனையோ குடும்பங்கள் பட்டினிகிடக்க நேருகின்றன. குடியைத் தண்டனையினால் விலக்க முயற்சி செய்தாலன்றி அஃது ஒழியுமார்க்க மில்லையாம்.

### 39 குஷ்டரோகிகள் கொளுத்திக் கொல்லப்பட்டனர்.

சீன தேசத்தில் 39 குஷ்டரோகிகளைக் கவர்ன்மெண்டார் கருணை யென்பதொரு சிறிது மின்றி ஒரு பள்ளத்தில் தள்ளி அதில் விறகிட்டுக் கிரோசினாய லூற்றிக் கொளுத்தி விட்டனர். ஒரு ராஜாங்கத்தார் இங்ஙனஞ் செய்யத் துணிந்தது பெருங்குறைவாம். இவ்வா றநியாயஞ் செய்யும் ராஜாங்கம் செழித் தோங்குவதேயின்றாம்.

---

### மனிதன் வரலாறு.

மனிதன் 4 லட்சம் வருஷங்கட்குமுன் தோன்றினானென்று ஒரு பிரான்சு தேசத்துச் சாஸ்திரி கூறுகின்றார். அங்கு மற்றொருவர் 30 லட்சம் வருஷங்கட்குமுன் தோன்றினானென்று கூறுகின்றார்; பிரமஞான சங்கத்தார் ஒருகோடி எண்பதுலட்சம் வருஷங்கட்குமுன் தோன்றினானென்று கூறுகின்றார்.

### ஸ்திரீயினும் புருஷன் மேம்பட்டிருத்தற்குக் காரணம்.

புருஷனுடைய உடம்பில் ஸ்திரீயினுடம்பி லிருக்கும் உப்பினும், அதிகமான உப்பிருத்தலால் புருஷனே ஸ்திரீயினு முயர்ந்தவனென்று பாரிஸ்நகரில் பிரசுரமாகும் பாடின் என்னும் பிரஞ்சுபத்திரிகை கூறுகின்றது. பிராணிகோடிகளுள், எவற்றினுடம்பில் உப்பு அதிகமாக இருக்கின்றதோ அவையே மற்றப்பிராணிகளிலும் புத்தியிலும் பலத்திலும் மேம்பட்டிருக்குமாம்.

### செழிப்புள்ள கரும்பு.

கோதாவரி ஜில்லா ஸாமல்கோட்டையைச் சேர்ந்த காத்திர்வல்பல்லிக் கிராமத்தில் ஒரு குடியானவனது கரும்புப்பயிர் சராசரி 20 அடி யுயரமுடையதாக விருக்கின்றது. அக் கரும்புகளுள் சில 29 அடி யுயரமுள்ளன வாகவு மிருக்கின்றன.

### ஒரு நன்கொடை.

திருவூர் ஜமீன்தார் தெலுங்கு அகடெமிக்கு 1000 ரூபாய் நன்கொடைதந்திருக்கின்றார்.

### மதமாறினார்கள்-

கல்கத்தாவிற் சருகேயுள்ள சிராம்பூரில் இம்மாதம் 1ந் தேதி இரண்டு இந்துக்கள் கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்தனர். அவர்களுள் ஒருவர் எம்-ஏ-பரிட்சைக்கு வாசித்துக் கொண்டிருப்பவர்; பிராமண குலத்தினர். இவர்கள் மதமாறியதற்குக் காரணம் தெரியவில்லை; தம்முடைய மதத்தினுண்மையை ஆராய்ந்தறியாமையேயாம்.

### கரடிவாயினின்றுந் தப்பினார்.

கயா டிஸ்டிரிக்ட் கலெக்டர் மிஸ்டர் விட்டி என்பவர் நௌடா டிவிஷனில் சுற்றுப் பிரயாணஞ் செய்து கொண்டிருக்கும்போது கௌஹோல் காட்டில் வேட்டையாடச் சென்றார். அங்கு அவர் ஒரு கரடியைச் சுட்டனர். அது குறிதப்பிப் போயினமையின், கரடி அவர் மீதுபாய்ந்து அவரைக் கீழே தள்ளிமிதிக்கவாரம்பித்தது. அருகிலிருந்த கௌலா ஜாதியானொருவன் விரைந்தோடி வந்து கரடியை நன்றாகப் புடைத்தான். அது கலெக்டரைவிட்டுக் கௌலாவைத் தாக்கி அவனைப் பலமாகக்காயப்படுத்தியது. அவன் ஆஸ்பத்திரியில் அபாயமான ஸ்திதியி லிருக்கின்றான். கலெக்டருக்குக் காயம்படவில்லை.

### பினாங்கிற்கு ஆடேற்றுமதி.

சென்னை - நாகபட்டணம் துறைமுகங்களினின்று ஆடுகள் பினாங்கிற்கு ஏற்றுமதி செய்தல் கூடாதென்று உத்தரவு செய்யப்பட்டிருந்தது. அவ்வுத்தரவு இப்போது தள்ளிவிடப்பட்டது. ஆடுகளை இப்போது பினாங்கிற்கு ஏற்றுமதி செய்யலாம்.



### கோயம்புத்தூர் டிஸ்டிரிக்டில் சென்ற மூன்று வருடங்களில் நடந்த கொலையும் களவும்.

| | 1909 | 1910 | 1911 |
|---|---|---|---|
| கொலை | 67 | 68 | 77 |
| தீவர்த்திக்கொள்ளை | 50 | 34 | 24 |
| களவு | 77 | 46 | 49 |
| கன்னக் களவு | 435 | 294 | 327 |
| திருட்டு | 868 | 650 | 486 |
| கால்நடைகளின் திருட்டு | 650 | 530 | 437 |

### மைசூரும் சிவில் சர்விஸ் பரீட்சையும்.

மைசூரில் இவ்வருடம் சிவில் சர்விஸ் பரீட்சை நடைபெறுமென்று தெரிகின்றது. அதில் மைசூரில் ஜனித்தவரும், மைசூரை வாசஸ்தலமாக்கிக் கொண்டவர்களும் சேரலாம். அவர்கள் 25 வயதிற்குட் பட்டவர்களாக இருத்தல் வேண்டும். யாவராயினும் 5 வருட காலம் தொடர்ந்து மைசூரில் வாசஞ் செய்வர்களாயின், அவர்கள் மைசூரைத் தமது வாசஸ்தானமாக்கிக் கொண்டார்களென்று கருதப்படுவார்கள்.

### நீரிழிவு விசாரணை.

சென்னைக் கவர்ன்மெண்டார் நீரிழிவுவியாதியின் காரணத்தைக் கண்டுபிடிக்க முயற்சிசெய்து வருகின்றனர். இதுபற்றி விசாரிக்க ஒருவரை இங்கிலாந்திலிருந்து வரவழைத்து 3 வருஷம் இங்கு உத்தியோகத்தில் வைக்கப்படுமென்று தெரிகின்றது.

ஒவ்வொரு வருஷமும் பிரிட்டிஷ் இந்தியாவில் சுமார் 72 கோடி கடிதங்களும், $9\frac{1}{2}$ கோடி பத்திரிகைகளும் தபால் மூலமாகச் செல்லுகின்றன.

சென்ற வருஷம் இந்தியாவில் 63, 932, 000 ஏக்கர்நிலத்தில் நெல் சாகுபடி செய்யப்பட்டதென்று கணக்கெடுக்கப்பட்டிருக்கின்றது.

### போபால் பீகம் சாகிபாவின் தருமங்கள்.

போபால் பீகம் சாகிபா அவர்கள், மகம்மதிய யூனிவர்ஸிட்டி நிதிக்கு 1, 00, 000 ரூபாய் தந்திருக்கின்றனர்; அலிகரிலுள்ள மகம்மதியப் பெண் பாடசாலைக்கு வருஷந்தோறும் 1400

ரூபாய் தந்து வருகின்றனர். அலிகர் மகம்மதியக் கல்விக் கான்பரென்சிற்கு மாதந்தோறும் 200 ரூபாய் கொடுக்கின்றனர்; இப்போதவர் அலிகர் காலேஜிக்கு மாதந்தோறும் 500 ரூபாய் நிரந்தரமாகத் தரப்படுமென்று வாக்களித்திருக்கின்றனர். இவரது தருமம் எல்லா வகையாலும் மேம்பாடுடையதாம்.

### உணவுப் பொருள்களின் பாதுகாப்பு.

திருவனந்த புரத்தில் ஷாப்புக்களிலும் கடைகளிலும் விற்கப்படும் உணவுப் பொருள்களில் தூசும், கொசுக்களும் சேர்ந்து கெடுத்துவிடுகின்றன வென்றும், அதற்குப் பரிகாரந் தேடுவதற்குரிய மார்க்கங்களைப்பற்றி யோசித்துக் கவர்ன்மெண்டாருக்குத் தெரிவிக்குமாறு 4 பேரடங்கிய ஒருகமிட்டி நியமிக்கப்பட்டிருக்கின்றது.

### பம்பாய்க்குப் புதுக்கவர்னர் வருகை.

பம்பாயின் புதிய கவர்னர் லார்டு வெல்லிங்டன் ஏப்ரல்மாதம் 4-ந்தேதி பம்பாய்க்கு வருகின்றார். பழைய கவர்னராகிய லார்டு சைடன் ஹாம் மறுநாள் இங்கிலாந்து செல்லுகின்றார்.

### ஒரு மூடவிவாகம்.

சிந்து டிஸ்டிரிக்டைச் சேர்ந்த கிப்ரோவில் 65 வயதுடைய ஒரு பிராமணன் 14 வயதுள்ள ஒரு பரதேசிப் பெண்ணைக் கல்யாணஞ் செய்து கொண்டனனும்.

### ஒரு வைத்திய சாலை.

கஞ்சா குடிப்பதனால் வருந்துவோரது ரோகத்தை நிவிர்த்தி செய்தற் பொருட்டுக் கல்கத்தாவில் ஓர் ஆஸ்பத்திரி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

இந்தியாவில் 300 மிலியன் ஜனங்களும், இங்கிலாந்தில் 4 மிலியன் ஜனங்களு மிருக்கின்றனர்.

இப்போது வருடந்தோறும் 250 பேர் சிவில் சர்விஸில்பரீட்சை செய்யப்படுகின்றனர்.

### ஆவுடையார் கோயிலுக்கு ரயில்.

மாயவரத்திலிருந்து, அரந்தாங்கி பரியந்தம் போகும் ரயில் இனி ஆவுடையார் கோயில் பரியந்தம் போடப்படும்.



### ஒரு போலியோகியின் வஞ்சகச் செய்கை

மவுண்ட் ஆபுவில் ஒரு யோகி, ஒரு பார்சி குருக்களை 3624 ரூபாய் மோசஞ் செய்தாரென்று பம்பாய் நான்காவது பிரெசிடென்சி மாஜிஸ்டிரேட் முன்னர்க்குற்றஞ் சாற்றப்பட்டனர். யோகியார் பத்திரிகைகளில் எதிர்காலசம்பவங்களைக்கூறும் சக்தியுடையவரென்று விளம்பரஞ் செய்திருந்தார். அது கண்டு ஒரு பார்சி குருக்கள் யோகியாருக்கு ரூபாய் இரண்டு கொடுத்து ரேகைசாஸ்திர வாயிலாகத் தமக்கு நேரவிருக்கும் எதிர்கால சம்பவங்களைக் கூறுமாறு கேட்டார். அதற்கு யோகியார் தமக்குச் சிறிது பொருள் கொடுத்தால் மந்திர ஜபஞ்செய்து அது வாயிலாக உமக்கு ஒரு அழகான பெண் மனைவியும், 8 லட்ச ரூபாயும், சவாரி செய்யக் குதிரை சார்ட்டும் வருமாறு செய்யப்படுமென்றும், இவ்விஷயத்தைப்பற்றி அந்நியருக்குத் தெரிவித்தால் மந்திரம் பலிதமாகாதென்றும் ஆசை வார்த்தைகூறினார். இதனை நம்பிக் குருக்கள் சிறுகச் சிறுகத் தம்மிடமிருந்த சொத்தை யெல்லாம் விற்று யோகியாருக்குக்கொடுத்தும் அதனால் தமக்கோர் அதிர்ஷ்டமும் வாராதிருக்கக்கண்டு யோகியாருடைய மோசச் செயலைப் போலீசாருக் கறிவித்தனர். கேசு விசாரணையி லிருக்கின்றது.

யோகியார் தாம் நியாயமாகப் பிழைக்கும் வழியறியாது பிறரை வஞ்சித்து ஜாண் வயிற்றை வளர்க்குந் தொழிலை மேற்கொண்டார். குருக்கள் தமக்குக் கடவுள் கொடுத்திருக்கும் பொருளில் திருப்தி யடையாது பேராசைப்பட்டதனால், அதிக நஷ்டமடைந்தனர். இஃதுலகாநுபவமாம். ஆதலின் ஒவ்வொருவரும் தமக்கு வாய்த்திருக்கும் நிலையில் திருப்தி யடைந்திருப்பதுவே பெரிய தனமாமென்று கருதுவார்களாயின், கலக்கமில்லாத வாழ்வை யடையலாம். "அழக்கொண்டதெல்லாம் அழப்போம்" என்று பெரியார் கூறுவதனால் பிறரழ நாம் கைகக்கொண்ட பொருளை, நாம் அழப் பிறர் கொண்டு போவாராதலின், பொருள் காரணமாக நாம் பிறரை வஞ்சிக்க நினைப்பதெல்லாம் துன்பமாக முடியுமேயன்றி ஒருகாலும் இன்பமாக முடிவதன்றாம். அதிக ஆசை அதிக நஷ்டமாமென்பது பற்றியும் நாம் கவனித்து நடத்தல் வேண்டும்; அங்ஙனம் கவனியாதிருப்போமாயின், வாய்த் தவிடும் போய் அடுப்பு நெருப்பு மிழந்த கதையாகும். அங்ஙனமன்றோ குருக்களின் பேராசையும், யோகியாரின் வஞ்சகச் செய்கையும் அவர்களைத் துன்பத்திற் குள்ளாக்கின.

### மீனெண்ணெய் செய்தல்.

சென்னை ராஜதானியின் மேற்குச் சமுத்திரக் கரைபோரத்தில் இப்போது மீனெண்ணெய் விசேஷமாகச் செய்யப்பட்டு வருகின்றது.

### மெட்ரிகுலேஷன் பரீட்சையிற் றேறிய ஒரு வங்காளமாது.

கல்கத்தா யூனிவர்ஸிடியில் நடந்த மெட்ரிகுலேஷன் பரீட்சையிற் றேறிய தாரணி குப்தா என்னும் ஒரு வங்காளமாது 7000-க்கு 4618 மார்க்கு வாங்கியிருக்கின்றனர்; இவ்வாறு அங்கு ஒருவரும் இதுகாறும் மார்க்கு வாங்கியதில்லையாம்.

ஸ்காட்லாந்திலுள்ள ஒருகம்பெனி கல்கத்தாவில் நீராவியால் துணிவெளுக்கும் சாலையொன்று ஸ்தாபிக்கத் தீர்மானித்திருக்கின்றது.

வங்காளத்தில் மதன்மஹோன் என்னும் 5 வயதுடைய ஒரு சிறுவன் சங்கீத வித்தையில் இணையற்ற பண்டிதனாக இருக்கின்றனன். இச்சிறுவனுக்கு எழுதப்படிக்கத் தெரியாதாம்.

### மதுபான விருத்தி

கடந்த 11-வருஷங்களில் வங்காளத்தில் 100-க்கு 24-ம், பஞ்சாபிலும்-சென்னையிலும் 100-க்கு 120-ம், பம்பாயில் 100-க்கு 90-ம் ஆக மதுபானஞ் செய்வோ ரதிகரித் திருக்கின்றனர். இவ்வாறிருப்பது தேசத்தின் க்ஷீணதசைக் கேதுவாம்.

### தோல் ஏற்றுமதி.

சென்னையிலிருந்து ஒவ்வொரு வருஷமும், ஜர்மனிக்கு $3\frac{1}{2}$ கோடி ரூபாய் மதிப்புடைய பதமிடாத தோல்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

### ஒரு வஸ்தாது இறந்துபோனார்.

சென்ற டிசம்பர் மாதம் 29 ந் தேதி விருதுப்பட்டியில் மிகப் பேர்பெற்ற ராம நாடாரென்னும் வஸ்தாது தமது 56 வது வயதில் பிடரிப்பிளவையா லிறந்து போனார்.

### ஒரு விநோதக் குழந்தை.

பர்மா-மாயின் ஜில்லா எலக்கலை கிராமத்தில் ஒரு ஸ்திரீ 5 அங்குல உயரமும் 12 அங்குல அகலமுமுள்ள ஒருகுழந்தையைப் பெற்றிருக்கின்றாளாம்.

## உறுதிமொழிகள்.

(1) இந்த உலகம் நமக்குச் சொந்த வீடல்ல; நாம் இதில் சிறிது நாளே இருப்போம்; (ஆதலால்) இறத்தலுக்குப் பயப்படாது வசிக்கவேண்டும். (ஹென்றி உட் என்னும் மாது-Miss. Henry-wood).

(2) ஒருவனது குணத்துக்குத் தக்கவாறே அவனுடைய இன்பமும் செழிப்பும் இருக்கின்றன. (ஹென்றி உட் என்னும் மாது-Miss. Henry Wood).

(3) இப்போதைய நாகரீகம், பிச்சைக்காரத் தன்மையும், பலவிதக் குற்றங்களையும் கொண்டுள்ளது; இதை நீக்க முயலும் வரை இதனை நாகரீக மென்னலாகாது-(டாக்டர் ஹர்சன்-Dr. Hurson).

(4) பலவீனமில்லாத புருடனும் இல்லை; பலவீனமில்லாத நாடும் கிடையாது. (மேல் குறித்தவர்-Dr. Hurson).

(5) எவர் முதல்வனைக் காண முயல்கின்றாரோ அவர் பிற நல்ல பொருள்களையும் வேண்டார் (சாம்-Psalm).

(6) நேர்மை இனத்தை யுயர்த்தும், ஆனால் அறிவின்மை சமூகத்தைக் கீழ்ப்படுத்தும். (பிராவர்ப்—Proverb).

(7) பிரதமத்தில் ஈஸ்வர நிலையை யடைய முயலவேண்டும்; அப்போது எல்லாப்பொருளும் தாமே வந்துசேரும். (மாத்யூ—Mathew).

(8) உலகத்தின் உண்மைகளைச் சோதித்தறிய, அமைதியோடும், தன் மறதியோடும் உபயோகிக்கப்படும் கலா ஞானம், மனிதவர்க்கத்திற்குப் பூரண சவுக்கியம், வல்லமை, மோட்சம் ஆகிய பயன்களைத் தருகின்றது. (ரஸ்கின் - J. Ruskin).

(9) உண்மையை அறிய எங்கே ஆராய்ச்சி புறப்படுகின்றதோ அங்கேதான் வாழ்க்கை ஆரம்பிக்கின்றது; எங்கே அவ்வாராய்ச்சி யில்லையோ அங்கே வாழ்க்கையு மில்லை. (மேல் குறித்தவர் — Ibid).

(10) நம்மைக் கீழ்மைப்படுத்திக் கெடுக்கின்ற பாபத்தை(அறியாமையை) ஜயித்தால் நாம் சாந்தமடையலாம், பிறவாற்றால் அதனை அடைய முடியாது. (மேற்குறித்தவர் - Ibid).

வா. ஆறுமுகசெட்டியார்,
முத்தியாலுபேட்டை, சென்னை.

## Glimses of Truth.

1. As the sun is the cause of the eyesight of every being, it is not made defective by the defect in every eye; even so the self of all is not affected by the miseries of the body, or every misery that is around you.

2. The highest heaven is here in our own souls, the greatest temple of worship is the human soul, greater than all heavens, for in no heaven anywhere can we understand the reality as distinctly and clearly as here in this life, in our own soul.

3. If I am evil the whole world is evil to me.

4. None see Him, none see His form with the eyes. It is in the mind, the pure mind, He is seen and thus immortality is gained.

5. Until you are pure it is no use going to caves or, forests, or to Benares, or to heaven, and if you have polished your mirror it does not matter where you live, you get the reality just as it is.

6. When all vain desires of the heart have been thrown out, then this very mortal becomes immortal, then here he becomes one with God. When all the knots of the heart are cut asunder, then the mortal becomes immortal, and he enjoys Brahman here, nowhere else.

7. Whatever exists in this universe, whatever is there, is to be covered with the Lord.

8. He works who is not propelled by his own desires, by any selfishness what-soever. He works who has no ulterior motive in view. He works who has nothing to gain from work.

9. This self is first to be heard, then to be thought upon, and then meditated upon.

10. Religion is a question of fact not of talk. Religion will begin when that actual realisation in our own souls begins.



11. Not believing in the glory of your own Soul is what the Vedanta calls atheism. He is an atheist who does not believe in himself.

12. This Atman is first to be listened to, to be heard. Hear day and night that you are that soul, Repeat it to yourselves day and night till it enters your very blood, till it mingles in every drop of blood, till it is in your flesh and bone, let the whole body be full of that one ideal. I am the birthless, the deathless, the blissful, the omniscient, the omnipresent, everglorious Soul.

13. Feel like Christ and you will be a Christ. Feel like Buddha and you will be a Buddha. It is the feeling that is the life, the strength, the vitality, without which no amount of intellectual activity can reach God.

## PRECEPTS OF LIFE.

Make few promises. Always speak the truth. Never speak evil of any one. Keep good company or none. Live up to your engagements. Be just before you are generous. Never play at any game of chance. Drink no kind of intoxicating liquor. Good character is above all things else. Keep your own secrets if you have any. Never borrow if you possibly can help it. Keep yourself innocent if you would be happy. Make no haste to be rich, if you would prosper. When you speak to a person look him in the face. Do not marry until you are above to support a wife. Ever live (misfortune excepted) within your income. Save when you are young to spend when you are old. Never run into debt unless you can see your way out again. Avoid temptation, through fear you may not withstand it. Good company and good conversation are the sinews of virtue. Small and steady gains have competency with a tranquil mind. Your character cannot be essentially injured by your own acts. If any one speak evil of you let your life be so that none will believe him. When you retire to bed think over what you have been doing during

the day. Never be idle; if your hand cannot be employed usefully, attend to the cultivation of your mind. Read over the above maxims carefully and thoughtfully at least once every week.

It would be well if every one read this daily as a prayer and live up to it.

Truth is mighty and will prevail, no matter what the world may say. One with God is a majority. Therefore whatever you have to do, whatever you believe to be right, do it with all your might and you will not be left alone in weakness to establish the truth. To be one with spirit, is to be co-worker with the gods. Therefore, let the world say of you what it will, you may defy it and all its rulers for truth's sake. You have to establish the kingdom of God and the spiritual light in this fair land.

God and humanity are one. There is no chasm between God and ourselves unless we create one, we can be like God by living in Him and His law. His only law is love. Let us bring it into the daily exercise of this life. Let us lead a simple life and be kind and gentle to one another.

When we see about us, men and women, whose hearts are pierced by calumny and slander, let us give them words of sympathy and comfort. Let the clasp of our hand assure them of mutual helpfulness. The strength lies within us, let us exercise it. A Heaven on earth, is necesary. A Heaven beyond, is useless to us now. A Heaven on earth, will be ours when we have earned it.



சிவப்பிரகாச

பெருந்திரட்டு.

சொருபாகந்தரால் திரட்டப்பட்டது.

இதுகாறும் வெளிவராதது.

விலை ரூபாய் மூன்று—வி. பி. முதலிய சார்ஜ் பிரத்தியேகம்.

மானேஜர், சக்ரவர்த்தினி ஆபீசு,
கோமளேசுவரன் பேட்டை, சென்னை.

**P. S. Sundram & Co.**

Electro-Platers, Gilders and
General Commission Agents.

உயர்ந்த தங்கம் வெள்ளிப் பதக்கங்களும் முதல் தரமான அநேக யோக்கியதா பத்திரங்களும் வெகுமானமாக அளிக்கப்பட்ட பெயர் பெற்ற

பி. எஸ். சுந்தரம் கம்பெனி,

எலக்டிரிக் தங்க நகை வியாபாரிகள்.

107-பெரியதெருவு திருவல்லிக்கேணி, சென்னை.

எலக்ட்ரிக் தங்கநகை விலைவிவரம்.

32" நீளம் $\frac{3}{4}$" அகலம் 150. } அரும்பு சிலங்கை கட்டிய
32" நீளம் $\frac{5}{8}$" அகலம் 210. }

| | | | |
|---|---|---|---|
| 5 வருஷம் காரண்டியுள்ள | மல்லிகை ஒட்டியாணம் | ரூ. 25 | 8 |
| | நாக ஒத்து பெரியது | 12 | 0 |
| | நாகஒத்து சிறியது | 9 | 0 |
| | காரை பெரியது | 10 | 0 |
| | காரை சிறியது | 7 | 8 |
| | வங்கி பெரியது | 10 | 0 |
| வருஷம் காரண்டியுள்ள | மல்லிகை ஒட்டியாணம் | 19 | 8 |
| | நாகஒத்து பெரியது | 9 | 0 |
| | ஷை சிறியது | 6 | 12 |
| | காரை பெரியது | 7 | 8 |
| | ஷை சிறியது | 5 | 12 |
| | வங்கி சிறியது | 8 | 0 |
| | $1\frac{1}{2}$-வருஷம் காரண்டி யுள்ள மல்லிகை ஒட்டியாணம் ... ... | 13 | 8 |
| | மல்லிகை ஒட்டியாணம் காரண்டியில்லாதது ... ... | 8 | 8 |
| | ஜாமந்திப்பூ | 1 | 8 |
| | ரோஜாப்பூ | 1 | 8 |

# கதாமஞ்சரி.

இஃதோரு மாதாந்த சஞ்சிகை. டிம்மி 24 பக்கங் கோண்ட
3 பார அளவில் மாதந்தோறும் வெளிவரும்

இதில் கதாசரித் சாகரத்தின் தமிழ்மொழிபெயர்ப்பு அடங்கியிருக்கின்றது. இக்கதை பூர்வம் உமாதேவியாரின் பிரீதியார்த்தம் பரமசிவனால் திருவாய்மலர்ந்தருளப்பட்டது. இப்பரத கண்டத்தின் வடமேற் கெல்லைப் புறத்தின்கண் காஸ்மீர தேசத்தை 800 வருடங்கட்கு முன்னர் ராஜ்ய பாரஞ் செய்துவந்த ஸ்ரீ ஹர்ஷன் என்னும் அரசன் தனது ராஜ்யத்தில் நேர்ந்த யுத்தத்தில் மரணமடைந்தனன்; மன்னனிறந்த துக்கத்திற் காற்றாத சூரியவதி யென்னும் அன்னையாரின் சோகத்தை நிவிர்த்திக்குமாறு இக்கதை சோம தேவரால் இயற்றப்பட்டது. இக்கதையின் போக்கு நவ நவமாகவும், படிப்போர்க்குப் பரமானந்தத்தைப் பயப்பிப்பதாகவு மிருக்கும். மேலும், இது தெய்வபக்தி, வைராக்கியம், நல்லொழுக்கம் முதலிய நல்லனவெல்லாம் நலமுறப் பொருந்துமாறு செய்யும். இதன் பெயருக் கேற்றவாறே கதையும் சாகரம் போன்றே விளங்கும். இது யாவரும் செவ்வித னுணருமாறு எளிய வசன நடையி லெழுதப்பட்டுள்ளது.

| சந்தாவிவரம். | | | |
|---|---|---|---|
| வருஷம் 1க்கு ரூ. | 1 | 0 | 0 |
| ஆறு மாதத்திற்கு | 0 | 10 | 0 |
| தனிப்பிரதி | 0 | 2 | 0 |
| வெளி தேசத்திற்கு | | | |
| வருஷம் 1-க்கு | 1 | 8 | 0 |
| ஆறு மாதத்திற்கு | 0 | 14 | 0 |
| தனிப்பிரதி | 0 | 3 | 0 |

| விளம்பர விகிதம் | | | |
|---|---|---|---|
| மாதம் 1க்கு பக்கத்திற்கு | 1 | 0 | 0 |
| ,, ½ பக்கத்திற்கு | 0 | 10 | 0 |
| ,, ¼ பகத்திகற்கு | 0 | 6 | 0 |
| சில்லரை விளம்பரங்களுக்கு வரி 1க்கு அணா | 0 | 1 | 0 |

திரு. அ. சுப்பிரமணி பாரதியார்,
மானேஜர், லோகோபகாரி ஆபீசு,
கோமளீசுவரன் பேட்டை, சென்னை.

இப்போது பத்து சஞ்சிகை வெளி வந்திருக்கின்றன.

## 170-பக்கப் புத்தகம் இனாம்!

இது நல்ல ஆரோக்கியமும் நீடித்த சுகவாழ்வுந் தரும்; இயற்கையாயுள்ள சில விதிகளை அனுசரிப்பதைப் பொறுத்திருக்கிறது. இச்சிறந்த புத்தகம் சுகவழியைக் காட்டி, நல்ல ஆரோக்கியத்தோடும் எப்பொழுதும் திடகாத்திரத்தோடும், நீண்ட ஆயுளோடு மிருக்கும்படி செய்து நல்ல அதிர்ஷ்டத்தைக் காட்டும். இப்புஸ்தகம் இனாமாகவும் தபாற் செலவில்லாமலும் அனுப்பப்படும்.

இப்புத்தகத்திற்கு இன்றைக்கே எழுதுங்கள்.

வைத்திய சாஸ்திரி
**மணிசங்கர் கோவிந்தஜி,**
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
22, பிராட்வே & 96. மவுண்ட்ரோட், மதராஸ்.
எஜெண்டு:—M. A. நெல்லையப்ப முதலியார்,
38 சின்னகடைத்தெருவு, திருச்சினாப்பள்ளி.

## ஆனந்த ராமாயணம்.

இதுவரையில் தமிழில் வெளிவராதது.

இது வால்மீகி மகாரிஷியால் வடமொழியில் இயற்றப்பட்டுள்ளது. இதில் வால்மீகி ராமாயணத்தில் இல்லாத அநேக விஷயங்கள் அடங்கியுள்ளன; ஸ்ரீராம லக்ஷ்மணருடைய ஜனனமும், வளர்ப்பும், சீதாதேவியினுடைய ஜனனமும், அத்தேவிக்குப் பல பெயர் வந்ததற்குக் காரணமும் விளக்கியிருப்பது வெகு இனிமையாயிருக்கும். இஃது ஆனந்த ராமாயணமென்னும் பெயருக்கேற்றவாறு படிப்போர் மனதிற்கு உற்சாகமும், ஆநந்தமும் உண்டாக்கும்; இதில் அநேக சித்திரப் படங்களடங்கியிருக்கின்றன. விலை ரூபாய் **5**. தபாற் கூலி வேறு.

மானேஜர்:—
சக்ரவர்த்தினி ஆபீஸ்,
சென்னை.

## பட்டுப் பீதாம்பர கம்பெனி, காசி.

திருப்தி யில்லாதவைகள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படும்.
பட்டுப் பீதாம்பர காட்லாக்கு இனாமாக அனுப்பப்படும்.

உருத்திராக்ஷங்கள் !!   ஜபமாலைகள் !!

பரிசுத்தமானவை.

108 உள்ள மாலை 1-க்கு 6-அணா முதல் ரூபாய் 12-வரை. விலை அதிகப் படுவதுபோல் மணிகள் சிறிதாக இருக்கும். 6-முகக் கண்டிகள் 33-உள்ளது; கண்டி 1-க்கு ரூபாய் 1-முதல் 10-வரை. 5-முகக்கண்டி 32-உள்ளது; கண்டி 1-க்கு அணா 10-முதல் ரூபா 10 வரை. விலை அதிகப்படுவது போல் மணிகள் பெரிதாக இருக்கும்.

வெண்பட்டு வேஷ்டிகள்.

சுத்தமான வெண்பட்டு வேஷ்டிகள் கோயம்புத்தூர் வேஷ்டிகள் மாதிரி சன்னகம்பி, ருத்திராக்ஷ கம்பி, ஜரிகை கம்பி போட்டவை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 முழம் | 2 அகலம் | 1-க்கு ரூபாய் | 4-8-0-முதல் | 7 | வரை |
| 6 ,, | 2½ | ,, 1-க்கு | ,, 7 | ,, 9 | ,, |
| 6 ,, | 3 | ,, 1-க்கு | ,, 10 | ,, 12 | ,, |
| 7 ,, | 2½ | ,, 1-க்கு | ,, 8 | ,, 12 | ,, |
| 7 ,, | 3 | ,, 1-க்கு | ,, 10 | ,, 14 | ,, |
| 8 ,, | 3 | ,, 1-க்கு | ,, 12 | ,, 18 | ,, |
| 9 ,, | 3 | ,, 1-க்கு | ,, 14 | ,, 20 | ,, |
| 10 ,, | 3 | ,, 1-க்கு | ,, 15 | ,, 22 | ,, |

பணி !   பணி !!   பணி !!!

பனிக்கு அடக்கமான சுத்தமான சம்பளி ரோமத்தால் செய்து உறுதியும், நைஸும், நேர்த்தியுமான கம்பளிப் போர்வைகள், 6-முழம் நீளம் 3-முழம் அகலம் சிகப்பு முதலிய சகலநிறத்திலும் தயாராக இருக்கின்றன. உருப்படி 1-க்கு ரூபாய் 5-8-0. ஷெ சிறிது 1-க்கு ரூபாய் 4-8-0. மேகவர்ணப் போர்வைக்கு ரூபாய் 6 8 0. தபாற் செலவு பிரத்தியேகம்.

காசி வயிரவர் கயிறு.

1-வது நெம்பர் 100-க்கு... 3 0 0   3-வது நெம்பர் 100-க்கு...2 0 0
2-வது நெம்பர் 100-க்கு... 2 8 0   4-வது நெம்பர் 100-க்கு...0 6 0

குழந்தைகள் !

குழந்தைகள் விளையாடக் கூடிய பித்தளை வெங்கலத்தால் செய்த செம்புக்குடம், கரண்டி முதல் 32 சாமான்கள் அடங்கிய அழகும் நேர்த்தியும் நைஸும் பளபளப்புமுள்ள அழகிய பாத்திரங்கள் 32 உள்ள சிறு செட்டு 1-க்கு ரூபாய் 2 0 0. பெரிய செட்டு 1-க்கு ரூபாய் 4 0 0.

உடனே எழுதுங்கள்.   விலாசம்—மானேஜர்,
பட்டுப் பீதாம்பர கம்பெனி, தாராநகர் தெரு,
*MANAGER,*
*Silk Petamber Co., Daranagar Street, Benares City.*



# சக்ரவர்த்தினி.

" கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்,
மற்றீண்டு வாரா நெறி".

VOL VIII. | MARCH 1913. | NO. 8.
தொகுதி அ. | மார்ச்சு மீ 1913. | பகுதி-அ.

## நடுவு நிலைமை.

" நடுவுநின் றார்க்கன்றி ஞானமு மில்லை
நடுவுநின் றார்க்கு நரகமு மில்லை
நடுவுநின் றார்நல்ல தேவரு மாவர்
நடுவுநின் றார்வழி நானுநின் றேனே."

என்று சைவத் திருமுறையுள் பத்தாவதான திருமந்திரம் கூறுவதை நோக்குமிடத்து, நடுவு நிலைமையிற்றவறு தொழுகு கின்றவர் ஞானவானவர்; நரகமடையார்; தேவராவர் என்பது பெறப்படுதலால், உயர் நிலையினை யடைந்து உத்தமராக வேண்டு மென்று முயலுகின்ற ஒவ்வொருவரும் நடுவு நிலைமையினின்று தவறு தொழுகுதல் வேண்டு மென்பது விளங்குவதாம். நடுவு நிலைமையினின் றொழுகுதல் இல்லறத்தார் துறவறத்தா ரென்னு மிரு திறத்தார்க்கு மின்றி யமையாத கடமையாம். இம்மையிற் புகழையும், மறுமையிற் சுவர்க்கப் பேற்றையும், துக்கத்தின் தொடர் பென்ப தொருசிறிது மில்லாத இன்புருவ முத்தியையும் பெற்றவர் யாவரென்று சிறி தாகித்துப் பார்ப்போமாயின், அவர் நடுவு நிலைமையிற் றவறுதொழுகி வந்தவரே யாவரென்பது மேற் காட்டிய திருமந்திரச் செய்யுளா லினிது புலனாம்.

தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் நடுவு நிலைமையை இல்லற வியலில் திருவாய்மலர்ந் தருளியதற்கேது இல்லறத்தில்

அதற்குரிய நடுவுநிலைமையில் தவறாதொழுகியவரே துறவறத்தில் அதற்குரிய நடுவுநிலைமையி னொழுகுவதற் குரியவராவரென்னும் நியமமே யாம். இல்லறத்தில் நடுவு நிலைமையினின் றொழுகுவதற் காற்ற லில்லாதவர் துறவறத்திற் சென்று, அதற்குரிய நடுவு நிலைமையை மேற்கொண் டொழுகுதல் ஒரு வாற்றானு மின்றாம். நம்மனோருட் பலர் உயர்நிலையினை யடைந்து விளங்க வேண்டுமென்னுங் கருத்துடையவராக விருக்கின்றனரேயன்றி, அவர் அதற்குரிய சாதனத்தை மேற்கொண்டொழுகு கின்றாரில்லை. ஒவ்வொருவரும் உயர்நிலையினை யடைந்து விளங்குவதற்குக் காரணம்நடுவு நிலைமையினின் றொழுகுவதா மென்று உணர்வாராயின், நடுவு நிலைமையினின் றொழுகுமொழுக்கத்தைப்பெற முயற்சி செய்வர். சாதனமின்றி யொன்றைச் சாதிப்பதொருவாற்றானுமின்மையின், நடுவு நிலைமையினின் றொழுகுவதாகிய சாதனத்தைப் பெறாதவர் உயர் நிலையினை யடைந்து விளங்குவதாகிய சாத்தியத்தினைப் பெறுவதே யில்லையாம். இம்மையில் நன்மக்கள் யாவராலும் போற்றப்படுஞ் சிறப்பையும் மறுமையில் தேவரால் போற்றப்படுஞ் சிறப்பையும் அவ்விருவராலும் போற்றப்படுஞ் சிறப்பினதாகிய முத்தியையும்பெற விரும்புகின்றவர் மிகச்சிலரேயாக விருத்தலி னவற்றிற் கேதுவாகிய நடுவு நிலைமையினின் றொழுகுவோரும் மிகச் சிலரேயாகக் காணப்படுகின்றனர். நடுவு நிலைமை யென்னும் அறநெறியிற்சென்றொழுகுவோரிடத்து ஏனைய அறங்களெல்லாம் நிலைபெற்றிருப்பனவாம். அறங்களெல்லாம் நம்மிடத்திருக்கவேண்டு மென்று விரும்புகின்றவர் நடுவுநிலைமையென்னும் அறத்திற் றவறாதொழுகமுயலுதல் வேண்டும். அறத்தின்பொது வடிவமாவது மநு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும், விலக்கியன ஒழிதலுமாம். நடுவு நிலைமை யென்னும் அறம் இல்லறந் துறவறம் என்னும் வேறுபாட்டால் இருவகைத் தாம்; அவற்றுள், இல்லறத்திற் குரிய நடுவு நிலைமையாவது பகைவர் அயலார் நண்பரென்னு மூன்று திறத்தாரிடத்தும் அறத்தின் வழுவாது ஒப்பநிற்கும் நிலைமையாம். இது "தகுதியென வொன்று நன்றே பகுதியாற், பாற்பட் டொழுகப் பெறின் (நடுவு நிலைமை யென்று சொல்லப்படும் ஓரறமுமே நன்று; பகை நொதுமல் நண்பென்னும் பகுதிதோறும் தன் முறைமையைவிடா தொழுகப்பெறின்)" என்றுபொதுமறையென்னுந் திருக்குறள் கூறுவதால் இனிது விளங்குவதாம். துறவறத்தார்க் குரிய நடுவு நிலைமையாவது இரவிற்கும் (மறப்பிற்கும்), பகலுக்கும் (நினைப்பிற்கும்) நடுவான விடத்திருந்து சமாதிபுரிவதாம். இது "இராப்பக லற்ற விடத்தே யிருந்து, பராக்கற வாநந்தத் தேறல் பருகார், இராப் பகலற்ற விறையடி யின்பத், திராப்பகல் மாயை யிரண்டிடத் தேனே" என்று திருமந்திரங் கூறுவதால் நன்குபுலனாம்.



இல்லறத்திற்குரிய நடுவு நிலைமையினின்று தவறாதொழுகுகின்றவர் இம்மையிற்புகழும், மறுமையிற் சுவர்க்கமும்பெறுதற்குரியராவர்; துறவறத்திற் குரிய நடுவு நிலைமையில் நின்று தவறாதொழுகுகின்றவர் துன்பத்தின் தொடர்பென்ப தொரு சிறிது மில்லாத வின்புருவாகிய முத்தியினைப் பெறுதற்குரியவராவரென்பதனைநன்குணர்ந்து, இல்லறத்திலிருப்போர் தமக்குரிய நடுவு நிலைமையினையும், துறவறத்திலிருப்போர் தமக்குரிய நடுவுநிலைமையினையும் மேற்கொண்டொழுகுதல் இன்றியமையாத கடமையாம். நச்சினார்க்கினியார் தொல்காப்பியம், பொருளதிகாரம் மெய்ப்பாட்டியலின் "ஆங்கவை யொருபால்" என்னுஞ் சூத்திர வுரையில் "நடுவு நிலையென்பது † ஒன்பது சுவையுள் ஒன்றென நாடகநிலையுள் வேண்டப் படுஞ் ‡ சமநிலை; அஃதாவது 'செஞ்சாந்தெறியினுஞ் § செத்தினும் ¶ போழ்தினும், நெஞ்சோர்ந் தோடா நிலைமை'. அது காம வெகுளி மயக்க நீங்கினார்க் கண்ணே நிகழ்வது" என்று கூறுதலால், துறவறத்திற் குரிய நடுவு நிலைமையைப் பொருளைத்தேடிப் போகத்தை யனுபவித்தலாகிய உலகியலைக் கடவாதவர் பெறுவது கூடாதெனப் பெறப்படுதலின், உலகியல் நெறியே யொழுகும் நம்மனோர் இன்றியமையாது மேற்கொள்ளத் தக்க அறம் இல்லறத்திற் குரிய நடுவுநிலைமையே யாம். இல்லறத்திற் குரிய நடுவு நிலைமையிற் றவறாதொழுகுபவர், இம்மையிற் பொருள் பூசைகளைப் பெறுவதோடு புகழையும் மறுமையிற் றேவர் போற்றுஞ் சிறப்பையும் பெற்று, மனைப்பரிபாக வசத்தால் துறவறத்திற் குரிய நடுவு நிலைமையைப் பெற்று, அதுவாயிலாக உயர்வற

† ஒன்பது சுவை:—வீரம், அச்சம், வியப்பு, இழிபு, காமம், அவலம், நகை, உருத்திரம், நடுவுநிலை என்பனவாம். § வருத்தினாலும். ¶ பிளந்தாலும்.

‡ "அஃது (சமநிலை) உலகியல் நீங்கினார் பெற்றியாகலின், ஈண்டு உலக வழக்கினுட்சொல்லிய திலனென்பது" என்று நச்சினார்க்கினியர்மெய்ப்பாட்டியலின் 3-ஞ் சூத்திர வுரையிற் கூறியிருக்கின்றனர்.

உயர் நலமுடைய வீட்டையும் பெறுவரென்பது வைதிக நூல்களின் தீர்மானமாயிருத்தலின், நம்மனோர் இல்லறத்திற் குரிய நடுவு நிலைமையை மேற்கொண்டொழுகுவது இன்றியமையாத கடமையாம்.

“செப்ப முடையவ னாக்கஞ் சிதைவின்றி, எச்சத்திற் கேமாப் புடைத்து (நடுவு நிலைமையை யுடையவனது செல்வம் பிறர் செல்வம்போ லழிவின்றி அவன் வழியிலுள்ளார்க்கும் வலியாதலையுடைத்து)”

என்று பொய்யில்புலவர் கூறுவதால், நடுவுநிலைமையையுடையவனதுசெல்வம் அழியாதுநின்று அவன் சந்ததியார்க்கும் பயன்படுவதாம் என்று பெறப்படுவதை நம்மனோர் கடைப்பிடித்துத் தமது மக்களது நன்மையைக் கருதியாவது நடுவு நிலைமையுடையவராக விருத்தல் வேண்டும். நடுவு நிலைமையினின்றுந் தவறினோர் உயர் நிலையினை யடைந்து விளங்கினாரில்லை யென்பதை யடிக்கடி சிந்தித்தலும் நடுவு நிலைமையை யடைதற் கேதுவாம்.

“ நடுவுநின் றானல்ல கார்முகில் வண்ணன்
நடுவுநின் றானல்ல நான்மறை யோதி
நடுவுநின் றார்சிலர் ஞானிக ளாவார்
நடுவுநின் றார்நல்ல நம்பனு மாமே”

என்னுந் திருமந்திரச் செய்யுளை நோக்குவோர்க்குக் காப்புக் கடவுளாகிய திருமாலும் படைப்புக் கடவுளாகிய பிரமனும் நடுவு நிலைமை தவறாதிருக்கின்றன ரென்பது விளங்கு மன்றோ? அவர்கள் நடுவுநிலைமையினின்றுந் தவறாதிருப்பதாற்றான் உலகம் தடுமாற்றமடையா திருக்கின்றது தடுமாற்றமடையா திருத்தற்குக் காரணமான நடுவுநிலைமையை நாம்மேற்கொள்ளா திருப்பதாற்றான் தடுமாற்றமுடையவரானோம். நாம் நடுவுநிலைமையென்னும் அறத்தின்வழியே யொழுகுந் திறத்தின ராவோமாயின், ஞானியராதற்கும் கடவுளாதற்கும் (உலகியல் கடந்த நிலையினராதற்கும்) தடையே யின்றாம். நடுவுநிலைமை எல்லாச் சிறப்பினையும் தருதற்குக் காரணமாயிருப்பது பற்றி யன்றோ அறிவுடையார் யாவரும் நடுவு நிலைமையை வியந்து பேசினர்.

நம்மனோருள் நடுவுநிலைமையினின்றுந் தவறுவோர் பெரும்பான்மையும் நியாய சபையாரும் வணிகருமாவர். அவர்கள் நடுவு



நிலைமை தவறாதிருப்பது உலகியல் செவ்வையாக நடைபெறுவதற் கேதுவாம். “இக்காலத்தில் நடுவுநிலைமையாக விருக்க முடியுமா? அஃ தந்தக்காலத்தில்” எனச் சிலர் கூறுகின்றனர். இரண்டும் இரண்டும் நான்காம்; எட்டும் எட்டும் பதினாறும் என்றற் றொடக்கத்தன எக்காலத்தும் மாறுந்தன்மையனவாகா திருத்தல்போன்று நடுவுநிலைமை யுடைமையால் நன்மைவருதலும் அதினின்றுந் தவறுதலால் தீமைவருதலும் தவறாதனவாமென்பதைச் சிறிது கவனித்து நோக்கின், அது தவறாமென்பது நன்குவிளங்கும். நடுவுநிலைமையி னின்றும் தவறினோருட் பலர் வெளிப்படையாக இம்மையிலேயே பலவகையனவாகிய அவமானத்தை யடைந்து துக்கவாழ்வினரா யிருந்து மாளுவரென்பதை நடுவுநிலைமையினின்றுந் தவறிய துரியோதனன் முதலாயினோரதுவரலாறு நன்கு விளக்குமன்றோ?

எனக்கு நடுவுநிலைமையினின்றுந் தவறாதிருப்பதே பெருஞ்செல்வமாம்; அதனால் யான் அடைதற்கரியன வெல்லாவற்றையுமடைவேனென்று நடுவுநிலைமையென்னும் அறத்தின்வழியிற் செல்பவனுக்குவரும் ஆபத்து ஆதித்தனைக்கண்ட பனிபோலொழிவதாம். மனுநீதிசோழன் தன்மகனை வீதிவிடங்கனை அவன் ஒரு பசுங்கன்றைக்கொன்ற குற்றத்திற்காகக் கொன்றானென்றுபெரியபுராணம்மநுநீதிசோழனதுநடுவு நிலைமையைக்கூறுவதைநோக்குவோமாயின், நாம் எப்போதும் நடுவுநிலைமையினின்றுந் தவறுதல் கூடாதென்பது செவ்விதாகப் புலனாம். இவ்வாறு பல சரித்திரங்கள் இராமாயணம்,பாரதம்,பாகவத முதலிய நூல்களிற் சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்றை நாம் அடிக்கடி படித்து வருவோமாயின், நமக்கொருவாறு நடுவுநிலைமையுடன் வாழவேண்டுமென்னு மெண்ணமுண்டாகும். “நினைத்தலும் செய்தலோ டொக்கும்” என்று பரிமேலழகர் கூறுகின்றவாறு அவ்வெண்ணமே நடுவுநிலைமையோடு கூடிவாழ்வதாம். இவ்வெண்ணத்தையாவது பெற நாம் பெரிது முயலுதல் வேண்டும். இல்லறவொழுக்கத்திற்கும் துறவறவொழுக்கத்திற்கும் இன்றியமையாச் சாதனமாகிய நடுவுநிலைமையை நாம் பெறுமாறு பரமேசன் நமக்கருள்புரிவாராக.

### நான்மணிக்கடிகை.

"நெஞ்சறியக், கோடாமை கோடி"
(கோடாமை-நடுவாக நிற்றல், கோடி-கொள்வாய்).

### முதுமொழிக்காஞ்சி.

"மிகுதி வேண்டுவோன் தகுதி தண்டான்".
(மிகுதி-மேன்மை; தகுதி-நடுவுநிலைமை, தண்டான்-நீங்கான்.).

### திருக்குறள்.

"கேடும் பெருக்கமு மில்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி."

### திருமந்திரம்.

"நடுவுநின் றார்சிலர் ஞானிக ளாவர்
நடுவுநின் றார்சிலர் தேவரு மாவர்
நடுவுநின் றார்சிலர் நம்பனு மாவர்
நடுவுநின் றாரொடு நானுநின் றேனே."

### சொரூபசாரம்.

"மாதிக்கு மாறி மதிகருகித் தீக்குளிர்ந்திவ்
வாதித்தன் தெற்குவடக் காணும்—சோதித்து
முன்னிலைமை யாராய்ந்த முத்தரே யெஞ்ஞான்றும்
தன்னிலைமை குன்றா தவர்".

(தன்னிலைமை-நடுவுநிலைமை).

இச்செய்யுள்க ளீண்டு நன்குணர்தற் பாலனவாம்.

---

## உறுதிமொழிகள்.

எண்ணாது செய்தல் ஏதமெல் லாந்தரும்.
மாய வாழ்க்கையை மதிப்பது தீது.
பொய்யிலான் வாழ்க்கை பொன்றா நிலைதரும்.
அகங்கார முடையா ராக்க மிழப்பார்.
பொறுமை யுடையவர் புகழினைப் பெறுவர்.
செல்வச் செருக்கு அல்லற் படுத்தும்.

## மஹோபநிஷத்.

(169-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

17-18½. அகங்காரவசத்தால் சராசரமாகிய எதுவெது என்னால் அநுபவிக்கப்பட்டனவோ அவை யெல்லாம் வஸ்துவல்ல; அகங்காரமின்மையே வஸ்து.

18½-19½. மனமானது இங்குமங்கும் ஒரேதொழிலாய்த் தாவிக்கொண்டு, கிராமத்திலுள்ள நாயைப்போல வெகு தூரம் செல்லும்.

19½-20½. திருஷ்ணை (ஆசை)யெஃகிற பார்யையுடன் கூடிய குரூரமான நாயைப்போன்ற மனதின் வசமடைந்து, ஓ பிராஹ்மணரே! நான் பீடிக்கப்பட்டவனா யிருக்கின்றேன்.

20½-21½. சித்த நிக்ரஹமானது சமுத்திரத்தைப் பானம் செய்வதைப் பார்க்கிலும், மேரு பர்வதத்தை வேருடன் பிடுங்குவதைப் பார்க்கிலும், அக்னியைச் சாப்பிடுவதைப் பார்க்கிலும் மிகவுங் கடினமானது.

21½-22½. சித்தம் பொருள்களுக்குக் காரணமாகும். சித்தமிருக்கவே மூவுலகுமுண்டு. அது க்ஷயமடையவே ஜகத்து க்ஷீணமாகும். அதனை (சித்தத்தை) பிரயத்னத்தால் நேர்மைப்படுத்த வேண்டும்.

22½-23½. ஓ முனிசிரேஷ்டரே! நான் எந்தெந்த நற்குணத்தையடைந்தாலும். அந்தந்த நற்குணத்தைச் சுண்டெலியானது தந்தியை (துண்டிப்பது) போல, திருஷ்ணையானது நாசம் செய்கின்றது.

23½-21½. எட்டாத விடத்திலும் தனக்கு ஸ்தானத்தைச் செய்துகொள்ளுகின்றது; திருப்தியடைந்தும் (பிறகு வேறு)பலத்தை (பிரயோஜனத்தை)த் தேடுகின்றது. (இவ்வாறு) திருஷ்ணையாகிய சபல சுபாவமுள்ள குரங்கு ஓரிடத்தும் நீண்டகால மிருப்பதில்லை.

24½-25. ஹிருதய பத்மத்தி (தாமரையி) லிருக்கும் திருஷ்ணை யென்னும் வண்டானது க்ஷணத்தில் பாதாளதேசத்தை யடைகின்றது; க்ஷணத்தில் ஆகாயதேசத்தை யடைகின்றது.

சர்வசம்சார துக்கங்களிலும் திருஷ்ணை ஒன்றே நீண்ட துக்கத்தைத் தருவதாகும்.

26. ஓ துவிஜரே! அந்தப்புரத்தி லிருப்பவளையும் வெகு சங்கடத்திற் சேர்க்கும் திருஷ்ணை யென்னும் விஷூசிகைக்கு (ஊழிக்காற்றுக்கு) சித்தத்தின் தியாகமே மந்திரமாகும்.

27. அற்பத்தால் ஆநந்தத்தை யடைகின்றது; அற்பத்தால் துக்கத்தை யடைகின்றது. தேகத்தைப்போலத் துக்கிக்கத் தகுந்ததும், குணமற்றதும், தாழ்வானதுமாயிருப்பது வேறொன்றுமில்லை.

28 அகங்காரமென்னும் கிருஹஸ்தனுக்குச் சரீரமே பெரிய வீடாகும். அஃது அலைந்தாலென்ன? ஸ்திரத்தை யடைந்தாலென்ன? ஏ குருவே! அதனாலெனக்கென்ன?

29. வரிசையாய்க் கட்டப்பட்ட இந்திரியங்களாகிய பசுக்களுடன் கூடியதும், தாவாநின்ற திருஷ்ணையையுடைய கிருகத்தின் † அங்கணத்தை யுடையதும், சித்தமாகிய வேலைக்காரர் நிறைந்ததுமான தேகமாகிய கிருகத்தில் எனக்கிஷ்டமில்லை.

30. நாவாகிய குரங்கால் தடுக்கப்பட்டுப் பயங்கரமாகச் செய்யப்பெற்ற முகத்துவாரத்தை யுடையதும், தெரியும்படி பல் எலும்புகளால் நிறைந்ததுமான தேகமாகியகிருஹத்தில் எனக்கு இஷ்டமில்லை.

மு. கோ. நாராயணசாமி ஐயர்,
பீ. ஏ., பீ. எல்.

## விசார சூடாமணி.

(78-வது பக்கத்தின் தொடர்ச்சி).

4. உதாரண வாயிலாக மேல் விளக்கப்பட்ட பொது நியமத்தின் காரணமாய் இது வரையிலு மிருந்தனவும் இப்போ திருப்பனவுமாகிய பல் வேறு வகைப்பட்ட மதக் கொள்கைகளும் ஒரு தீர்ப்பான உண்மையை அஸ்தி வாரமாகக் கொண்டுள்ளன வென்று நாம் யூகிக்கப் போதுமான நியாய முள்ளது. சமானதர்மங்களைக் கொண்டு பரியாலோசிக்கும் போது எம்மதமும் முற்றிலுஞ் சரியானதன்று; ஆனால், ஒவ்வொன்றும் ஏறக்குறையக் குற்றமுள்ள விஷயங்களால் மூடப்பட்ட ஏதோ ஓர் உண்மையான அம்சத்தைக் கொண்டிருக்கின்றதென அநுமானிக்க இடமுண்டு. தப்பிதமான கொள்கைகளில் அடங்கியுள்ள உண்மையான அம்சம் இதர அம்சங்களைப்போ லில்லாம லிருக்கலாம். இதர அம்சங்களைப் பார்க்கிலும் அது பொதுத் தன்மை யுள்ளதாயும் பல சாதாரண தர்மங்களுக் கப்பாற் பட்டதாயு மிருக்கலாமென்று கொள்ளப் போதுமான நியாய மிருக்கிற படியால், அது மற்ற அம்சங்களிலும் வேறாகவே யிருக்க வேண்டு மென்று கொள்ளத் தடையென்ன? ஆனால் முக்கியாம்சமாயுள்ள ஏதோ ஓர் உண்மையை நாம் தேடிக் கண்டுபிடித்தல் வேண்டும். இவ்விதமாகப் பல் வேறு வகைப்பட்ட கொள்கைகளுள் ஒவ்வொன்றும் முற்றிலும் நியாயமில்லாததென்று அபிப்பிராயப் பட்டால் எவ்வளவோ அரிய பெரிய விஷயங்களைத் தனித் தனியாகச் சாதித்துவரும் சாதாரண மானிட அறிவின்கண் குற்றங்கூறியதாகும். ஒரே வகுப்பிலடங்கிய பல வகைப்பட்ட கொள்கைகளும் ஏதோ ஓர் உண்மையை அஸ்திவாரமாகக் கொண்டுள்ளன வென்பது மாத்திர மல்லாமல் இத்தகைய கொள்கைகள் யாவும் ஆதிகாலந் தொடங்கி எத்தேசத்தும் பரவி வந்துள்ளன வென்று கொள்ளவும் போதுமான நியாய முண்டு. எவ்விதமாகவாவது ஒரு வித மதக் கொள்கை எக்காலத்தும் எவ்விடத்தும் பரவி வந்திருப்பது பிரசித்தம். மானிடருள் புத்தி விசேஷ முடைய சிலர்க்குத் தங்களைச் சுற்றிலு முள்ள பதார்த்தங்களின் உற்பத்தியைப் பற்றியும் ஏதோ ஒரு விதமான அபிப்பிராயங்கள் எக்காலத்து முண்டா யிருந்தன வென்பதை நாம் அங்கீகரித்துக் கொண்டால், அத்தகைய அபிப்பிராயங்கள் விர்த்தி யாகிக்கொண் டிருக்கும் மனித அறிவின் பயனாகும் என்று அநுமானிக்க இடமுண்டாகிறது. அபிப்பிராயங்கள் அபரிமிதமான பேத முடையனவாயிருக்கிறபடியால் அவை மேற்கூறிய உண்மையை உறுதிப்படுத்துகின்றன; மதக்கொள்கைகளின் தனித்தனி உற்பத்தியையும், எப்படி பல காலங்களிலும் பல விடங்களிலும் ஒரே வித நிலைமைகள் ஒரே வித அபிப்பிராயங்களை உற்பத்தி செய்து ஒரே வித முடிவையு மடைந்தன வென்பதையும் விளக்கிக் காட்டுகின்றன. மதங்களுக் குள்ள அத்தாட்சிகளை நாம் நடுவுநிலைமை யோடு ஆராய்ச்சி செய்யின், அவை மதக்குருக்களால் அல்லது ஆசாரியரால் கண்டு பிடிக்கப்பட்ட கட்டுக்கதைக ளல்லவென்பது செவ்விதின் விளங்கும்.

(தொடரும்)

சந்தோஷம்.

† அங்கணம்—சலதாரை.

# கிண்டர் கார்ட்டன் என்னும் பால போதனா முறை.

(186-வது பக்கத்தின் தொடர்ச்சி).

மனிதனுக்கு இரண்டு கைகள், இரண்டு கால்கள், முகம், வாலின்மை முதலிய அவயவங்களை யுடைத்தா யிருக்கும் உருவம் இருக்கிறது. இதனால் மனிதன் விலங்கினத்திலிருந்து பிரித்து அறியப்படுகிறான். இது பொது உருவம்.

மனிதனுக்கும் மனிதனுக்குமுள்ள வித்தியாசம் சிறப்பு உருவம்.

இவ்வுருவம் இருப்பதனாற்றான் தாய், தமக்கை, பெண்ஜாதி, அண்ணன், தம்பி, தகப்பன், சிநேகிதர், மற்ற உறவினர் என்று அறியச் சாத்தியமாகின்றது. உலகத்தில் ஈச்வரனால் சிருஷ்டிக்கப்பட்ட பொருள்களெல்லாம் இச்சிறப்பு உருவத்தை யுடையனவா யிருக்கின்றன. ஓர் ஆலமரத்திலுள்ள இலக்ஷக் கணக்கான இலைகளும் தம்முள் சிறப்பு உருவத்தில் ஒன்றற்கொன்று வேறுபட்டனவேயாம். நாம் மிருகங்களின் சிறப்பு உருவத்தை வர்ணபேதத்தினாலும், பரிமாணத்தினாலும், மற்ற வெளி அவயவங்களினாலும் அறிகிறோம். இது மிகவும் ஸ்தூலமானது; சரியானதன்று. அவ்விலங்குகளுக்குள்ளே ஒவ்வொன்றுக்கும் தாய், அண்ணன், தம்பி, சிநேகிதர் முதலிய முறைகளுண்டு. இதனால் நாம் எப்படி நம் சிநேகிதனைக் கண்டவுடன் அவன் வயது, உயரம், பருமை முதலியவைகளைக் கவனியாது சிநேகிதனென்று அறிகிறோமோ அப்படியே விலங்கும் தன் சிநேகிதனை அறியும்.

இங்ஙனம் அறியச் சாதனமா யிருப்பது தான் சிறப்பு உருவம். இது கண்ணிந்திரியத்தினாற்றான் கவர (அறிய)ப்படும். பொது உருவத்தைக் குருடர்கள் முழுமையும் தொட்டுப்பார்த்து ஸ்தூலமாய் (ஏறக்குறைய) அறிகிறார்கள். ஆதலால் துவக்கிந்திரியத்தாலும், கண்ணிந்திரியத்தாலும் பொது உருவம் அறியப்படும் என்பது பெறப்பட்டது.

உருவம், வடிவம், ஆகிருதி, ரூபம் என்பன ஒருபொருட் சொற்களாம்.



ஒவ்வொரு பொருளின் வடிவத்தையுங் கவனித்தல் சித்திர (Drawing) பாடத்திற்கு அத்தியாவசியகமானது.

குறிப்பு:—பற்பல வடிவமுள்ள வஸ்துக்களைப் பிள்ளைகளுக்குக் காட்டி, அது மூலமாக அவற்றின் வித்தியாசத்தை அவர்களை உணரச்செய்து அவ்விதம் சித்திரம் எழுதச்செய்தல் அவசியம்.

### நிறங்கள்.

எப்படி உலகத்திலுள்ள பொருள்களெல்லாம் வடிவத்தை யுடையனவாயிருக்கின்றனவோ அப்படியே எல்லாப்பொருள்களும் நிறத்தையு முடையனவாயிருக்கின்றன. வஸ்துக்களுக்கு நிறமில்லாவிடில் வடிவத்தை யறிதல் கூடாது. வடிவத்திற்கும் நிறத்திற்கும் நெருங்கிய சம்பந்தம் இருப்பதனாற்றான் உருவம் என்னும் பதத்திற்கு நிறம்என்றும் பொருள் செய்கிறார்கள். நிறவேறுபாடின்றி ஒருபொருளையும் அதன்வடிவம் இன்னதென்று இலகுவாய் உணரமுடியாது. கறுப்புவர்ணம்பூசிய ஒருபலகையின்மேல் அதே நிறமுள்ள (Tint) இங்கியால் ஒரு சித்திரம் எழுதினால் அச்சித்திரத்தின் உருவம் நமது கண்களுக்குப் புலப்படுமா? ஆதலால் நிறமில்லாவிடில் வடிவத்தைக்காணல்முடியாதென்பது நிரூபிக்கப்பட்டது. நிறங்கள் பற்பலவகைப்படும்; ஆனால் ஒவ்வொரு நிறத்திலும் எண்ணமுடியாத இளநிறங்கள் (Tints) உண்டு. உஷ்ணத்தை உஷ்ணமானியை (Thermometer)க் கொண்டு அளந்து இத்தனை டிக்ரீ உஷ்ணமென்று கண்டறிவதுபோலவும், சங்கீதத்தில் நாதத்தை (ஓசையை) இத்தனை மாத்திரைகளென்று ஓசையலைகளின் கால அளவைக்கொண்டு கணக்கிடுவதுபோலவும், நிறத்தில் இன்னின்ன கூட்டு நிறங்கள் இன்னின்ன அளவாகச் (Proportion) சேர்க்கப்பட்டிருக்கின்றன வென்பதைக் கண்டறியத்தகுந்த உபகரணங்கள் இல்லையாதலால் அஃது அசாத்தியம். ஆயினும், நிறங்களை ஆராய்ந்து அறிந்த சிலர் சூரிய உஷ்ணத்தினால் மாறாத சில நிறங்களை முக்கிய நிறங்களெனத் தீர்மானித்திருக்கின்றனர். அவையாவன:—(1) கறுப்பு (2) மஞ்சள் (3) சிகப்பு என்பனவாம். இந்நிறங்களின் கூட்டத்தால் எண்ணிறந்த நிறங்கள் உண்டாகின்றன. ஜலத்துளிகளின் மீது சூரிய கிரணங்கள் படுவதால் இந்திரதனுசில் (Rain bow) நாம்பார்க்கும் (1) ஊதா, (2) நீலி, (3) நீலம், (4) பச்சை,

(5) மஞ்சள், (6) கிச்சிலிப்பழ நிறம், (7) சிகப்பு முதலிய நிறங்கள் ஏற்படுகின்றன. இவற்றில் ஊதாவும் நீலமும் சேர்ந்தது நீலி, நீலமும் மஞ்சளும் சேர்ந்தது பச்சை, மஞ்சளும் சிகப்பும் சேர்ந்தது கிச்சிலிப்பழநிறமாம்; இங்ஙனமே ஊதாவும் நீலியும் சேர்க்க ஒரு புதிய நிறமும், அப்புதிய நிறமும் ஊதாவும் சேர வேறொரு புதியநிறமுமாம். இப்படியே எண்ணிறந்த நிறங்கள் உண்டாய்க்கொண்டே யிருக்கும். இங்ஙனம் பலவகைப்பட்ட நிறங்களைக் கண்டறிய ஈசுவரனால் நமக்குக் கொடுக்கப்பட்ட கண்ணிந்திரியத்தைத்தவிர மற்ற எந்த இந்திரியமும் பயன்படாது. ஆதலால் வர்ண வேறுபாடுகளை யறிவதில் பிள்ளைகளின் கண்களைத்தயார் செய்வது அத்தியாவசியகமாம். ஆதலால் சிறுபிள்ளைகளுக்குப் பற்பல நிறமான வஸ்துக்களையும், காகிதங்களையும் காட்டி, அந்நிறங்கள் எந்தெந்த நிறங்களின் சேர்க்கையால் உண்டாயினவென்னும் விஷயத்தையும் மற்றுமுள்ள பல விஷயங்களையும் போதிப்பது நலம்.

பல நிறங்களின் சேர்க்கையாலுண்டான ஒருநிறத்தையறிய மாக்ஸ் வெல் (Maxwell) என்பவர் (Colour wheel) வர்ணசக்கரம் என்னும் ஓர் உபகரணத்தைக் கண்டுபிடித்திருக்கிறார். இச்சக்கரத்தில் பாதி கறுப்பும் பாதி வெண்மையுமான இரண்டு பாதி வட்டத்துண்டுகளைச் சொருகி, சக்கரத்தின்மையத்தை ஒரு கம்பியில் கோத்துச் சக்கரத்தைச் சுழற்றினால் வெண்மையும் கறுப்பும் சேர்ந்து சாம்பல் நிறம் அச்சக்கரம் சுழலும் போதுபுலப்படும். இதனால் சாம்பல் நிறத்தில் வெண்மையும் கறுப்பும் சேர்ந்திருக்கின்றனவென்று பிரத்தியக்ஷமாய் அறியலாம். இவ்விதம் மஞ்சளும் நீலமும் சேர்ந்தால் பச்சையாய்ப் புலப்படும். மஞ்சள் முக்கால் சக்கரத்திலும் நீலம் கால் சக்கரத்திலும் வைத்துச் சுழற்றினால் அவை மஞ்சள் அதிகமான இலைப்பச்சையாய்த் தோன்றும். ஆகவே வர்ணங்களின் சேர்க்கையின் அளவைத் (Proportion) தெரிந்து கொள்ள இவ்வுபகரணம் மிக உபயோகமானது. சில வர்ணங்களுக்குஅருகேவேறு சில வர்ணங்களை வைத்தால் அவை ஒன்றோடொன்றுகலந்து வேறு நிறமாகப்புலப்படும். (Reflection of Colours).

(வரும்)

N. சுப்பிரமணிய அய்யர்,
எலிமெண்டரி ஸ்கூல் எட்மாஸ்டர்,
திருவேட்டீசுரன் பேட்டை, சென்னை.

# வல்லாள மகாராஜன் கதை.

(171-வது பக்கத்தின் தொடர்ச்சி).

நிகழ்கால நிலைமையுடன் எதிர்கால நிலைமையையும் ஆராய்ந்து சொல்பவரான அமைச்சர், அரசன் தீயனவற்றுள் ஏதேனும்புரிய நினைப்பனாயின் அதனைத்தடுத்து அவனை நல்வழியிற்செலுத்தவேண்டும்; அரசன் தம்மொழிகேளாது சினந்தானாயின் வேதாகமஇதிகாச புராணங்களிலுள்ளநீதிகளும், முன்னோர்முறைகளும், உலகநடைகளும், எடுத்துரைத்து அவ்வரசனை நல்வழியிலேயே செலுத்த முயலல்வேண்டும்; மேலும், அமைச்சர் அரசன் இயற்றும் செய்கைகளால் வரும்பயனும், அச்செய்கைகளை இயற்றும்விதமும், அவற்றை இயற்றத்தக்ககாலமும், இடமும் சீர்தூக்கிப்பார்க்கக் கூடியவரா யிருக்கவேண்டும். வேற்றரசர் தம்மை எவ்விதமொழிகளாலும் செயல்களாலும் மனங்கலக்கினும் அப்பகைவர் வயப்படாது நீதிநோக்கித் தங்கள் அரசனுக்கு நன்மைவாய்க்கச்செய்வதிலேயே கண்ணோட்டமுடையவராயும், தாங்கள் அரசன் முன்னின்று சொல்லும்போது எழுத்து, சொல் முதலியவற்றில் குற்றமறக் கூறியும், வார்த்தைகள்மிகைபடப் பயனிலாதுசொல்லாமல் சுருங்கச்சொல்லி விளங்கவைக்கும் ஆற்றலுடையவராயும் இருக்கவேண்டும்; அங்கஹீனராய் இருத்தலாகாது; பிணியில்லாமல் சுகசரீரராய் இருத்தல் வேண்டும். அரசனது அமைச்சர் இத்தகைய லக்ஷணங்கள் பொருந்தியிருக்குங் காரணத்தினாலேஇராசாங்ககாரியங்களை அவர்பால் விடுத்து அரசன் உலகபோக மொன்றிலேயே ஈடுபட்டு இராஜகாரியத்தைக் கவனியாது இருத்தலாகாது. அவ்வமைச்சருடன் அரசனுங்கலந்து அறிவனவற்றை யூகமாயறிந்து செய்வனவற்றைச் செய்யுமாறுசெய்து அரசியற்றல் தகுதி. அப்படியல்லாவிடின் அவ்வரசு அவலமாய்விடும். இது திண்ணம். அரசரேறே! இராஜ லட்சணங்கள் குறைவிலாது சம்பூர்ணமாக உன்னிடத்திற் பொருந்தியிருத்தலின், உனக்கு விரிவாய் யான் சொல்லத்தக்கது கிடையாது. ஆனால் பொதுவாய் யாவருக்கு மாமாறு இப்போது யான் மிகச் சுருக்கமாகச் சில பேசினேன். இன்னும் முக்கியமாய் ஒரு விஷயம்சொல்ல வேண்டுமென்று நினைக்கின்றேன். அதைக் கேட்டருளவேண்டும் மன்னர் மன்னவா! தன்னரசுக்குட்பட்டகுடிகள் காலபேதத்தால் வறுமையடைந்து துன்புறுங்

காலத்தில் தான் அவர்களிடத்துச் சாதாரணமாய் வாங்குகின்ற ஆறிலொருபங்காகும் ஆதாயத்தை நீதிபோலக்குறைத்து வாங்கவேண்டும்; பஞ்சகாலத்தில் தன்னிடத்திருக்கும் மூலதனத்தின் அளவுக்குத்தக்கபடி யியன்றவரையில் உதவிசெய்து அவர்களைக்காப்பாற்ற வேண்டும். ஜனங்கள் அளவுக்கு மேற்பட்டுச் சாகவும், தன்னாட்டில் எப்போதும் வந்திராத வியாதிவந்து ஜனங்களை வருத்தவும் நேரிட்டால் அவை நேரிட்ட காரணத்தையும் அவை நீங்கத்தக்க முயற்சியையு மறிந்து அவற்றை நீக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வது அரசன்கடமை. குடிகள் தங்கள் குறைகளை இராஜாங்கத்தாருக்குத் தெரிவிக்க வரின், இன்றுவா, நாளைவாவென நாள்கள் போக்காது அவர்கள் குறையை அப்போதைக்கப்போது இராஜாங்க உத்தியோகஸ்தர்கள் கேட்டறிந்து கவனித்து வருகிறார்களா வென்று அப்போதைக்கப்போது பார்க்க வேண்டும். பிழை செய்தோர் உறவினரென்றும், அயலாரென்றும், நட்டாரென்றும், ஒன்னலரென்றும், ஆடவரென்றும், மகளிரென்றும் எண்ணாது எவரெக்குற்ற மியற்றினும் தர்மாதர்மமறிந்து நடுவுநிலைமையாகத் தீர்மானித்துப் புகழ்பெறுவது ஒழுங்கு. ஞாயமற்ற செயல் செய்து பூகலத்தோர் கஷ்டப்படப் பொருள் தேடாமையே நேர்மை. புகழைப் போக்கடிக்குஞ் சூதாடலை அரசன் கனவிலும் நினையாதிருக்க வேண்டும். அறத்தைப்போதிக்கும் நூல்களையும், போர்முறையை விளக்கும் நூல்களையும் தக்கோர் பால் கற்றும் கேட்டும் அவ்வழி நடக்கும் பண்பினரோடு பழகிவரவேண்டும். செய்தக்ககடன் செய்து முடிப்பதே தகுதி. இறைவன் தன்படைப்புக்குட்பட்ட அளவற்ற ஆன்மகோடிகளை ஒருவன்பாலாக்கி அவ்வொருவனால் அவ்வுயிர்கள் காக்கப்படவேண்டுமென நியமித்ததறிந்து தக்கபடிநடப்பதல்லவோ காவலன் கடமை. இயற்கையிலேயே நீ நன்மதியுடையவனாதலின், நினக்குச் சொல்லும் நீதிகளும் உளவோ? இல்லை என்றார் முனி புங்கவர். அதுகேட்டு அரசன் வணங்கிப்புகல்வான்: கொழுந்துவிட்டெரியும் முத்தழல்வளர்க்குங் கோதிலா ஜிதேந்திரியரே! தமியேனை உய்விப்பான்வேண்டி இவற்றைத் தாங்கள்போதித்தீரென்றுதெரிகின்றது; சாந்தசீலராகியதங்கள் அருட்சகாயத்தால் இதுகாறும் இந்நீதியோடே தமியேன் செங்கோல்செலுத்தி வந்தனன்; இனியுமவ்வாறே தங்களருளால் முறைதவறாது நடந்து அறமலாதன



ஒருவி நன்மைபெறுவேனென யான் கருதுகின்றேன். பெரியோர் அருளால் பல நீதிகளைக்கேட்டறிந்துளேனாதலால் அறநெறியிற் சிறிதும் பிறழாது நடக்கவே முயல்கின்றேன். தங்களுடைய திருவுள்ளத்தில் சிறியேனையும் ஒருபொருளாக மதித்து இங்கு எழுந்தருளிய தென்னோ? தமியேன் அறியக்கூடுமோ! என்றுவினவி இறைவன் வணங்க, நாரதமுனிவருரைப்பார்: நின்னுயிர்போல மன்னுயிரைக் காக்கும் பூபாலா! இப்பூதலத்துள்ள பல திருப்பதிகளைக் கண்டு தரிசிக்கவிரும்பி வெள்ளியங்கிரிவிட்டுநீங்கினன்; மண்டலத்திலுள்ள திருப்பதிகள் பலவற்றிற்சென்று புண்யதீர்த்தங்களில் மூழ்கி ஆங்காங்குள்ள மூர்த்தங்களைத்தரிசித்துப் பலநாள்கழித்தேன்; இப்போது இப்பதியையுங் கண்டு இங்கெழுந்தருளி யிருக்கும் அயனுமரியுந்தேடிக் காணொணாத் தேவதேவனைத் தரிசிக்க விரும்பி வந்தனன். வருங்கால் இந்நாட்டில் வானளாவ உயர்ந்த துவசமொன்று என் முன்னே தோன்றிற்று; அத்துவசக் கருத்தும், அதன் வரலாறும் ஐயமற அறியலாமென்று உன்னிடம் வந்தனன்; நின்னைக்கண்டேன்; அத்துவச நாட்டியதன்கருத்து எனக்கு அறிவிக்க வேண்டும் என்றார்.

கோகிலாம்பாள் அம்மாள்.

---

பொறுமை யெவர்க்கும் பூஷண மாகும்.
இங்கிதந் தேட லின்பம் பயக்கும்.
நல்லோ ரிணக்கம் நன்மை விளைக்கும்.
வேசியர் வேட்கை வேதனை கொடுக்கும்.
அரச னீதிக் கடங்குதல் நன்று.
மறுமையை நோக்குவோர் மாசற வாழ்வர்.
நிந்தனை புரிவார் நீசரே யாவர்.
பிறர்பொருள் கவர்வார் பெருந்துய ருறுவார்.
அறமே யென்று மருந்துணை யாகும்.
அன்பிலா வாழ்க்கை யின்பந் தாராது.
ஏழைகட் கிரங்கி யீயா திருந்தென்?.
காமக் கடலைக் கடக்க நீமுயல்.
ஒற்றுமை யுடைமை யுறுதியெ லாந்தரும்.

## பகைவனைவென்ற ஒரு பராக்கிரம்சாலியின் கதை.

கொல்லப்பட்டி யென்னும் ஒருகுக்கிராமத்திலுள்ள ஒரு தெருவில் அவ்வூராரனைவரும் கும்பல் கூடி உட்கார்ந்துகொண்டிருக்கையில் ஒரு மனிதன் தன்னுடைய கையில் துணிக்கப்பட்ட காலொன்றைப் பிடித்துக்கொண்டு ஓட்டமாய் ஓடி வந்து கொண்டிருந்தான். அவனைக்கண்ட அவ்வூரார் டே டே அப்பா! இந்தக்காலேதுனக்கு? ஏண்டாப்பா! இப்படி குடல் சரிந்து போகும்படி ஓடி வருகிறாய் என்று கேட்டார்கள். அதற்கு அந்தச் சூரன் என்னுடைய பகைவனது காலை வெட்டி யெடுத்துக்கொண்டு அந்தப் பகையாளி என்னைப் பின் தொடர்ந்து பிடித்துக் கொள்ளக்கூடுமென்று பயந்து அவனுக்குப் பிடிபடாதிருக்கும் பொருட்டு இப்படி ஓடி வந்து கொண்டிருக்கிறேன் என்று பதில் சொன்னான். அதற்கவர்கள் சை! போ, எங்கும் பகைவனது தலையை நறுக்குதல் நல்ல சூரனுக்கு நியாயமே யன்றிக் காலை நறுக்குவதும் வீரமா? என்று அவனை ஏளனஞ் செய்தனர். அதற்கு அவன் நான் உங்களைப் போலப் புத்தியில்லாதவனல்ல. என் சத்துருவின் சிரத்தை இதற்குமுன்னமே கணவாய்க் கள்வர்கள் அவன் கையிலிருந்த காசைக் கொடுக்கும்படி கேட்டதற்குக் கொடேன் என்று அவன் வம்பு செய்ததினாலே, அவர்கள் கரவாள் கொண்டு அவனது தலையைத் துண்டித்துக் கொண்டு போய் விட்டார்களாம். இதைக் கேள்விப்பட்ட நான் சத்துரு ஜயத்தைப் பெறுதற்குத் தக்க சமயம் நேரிட்டதென்று நினைத்துப் போய் அவ்விடம் எவ்வளவு நேரமோ தேடித்தேடிப் பார்த்தும் தலை கண்களுக்குப் புலப்படாமையினால் காலையாவது வெட்டிக்கொண்டுபோவோமென்று நினைத்து அவனது காலைவெட்டிக் கொண்டு வந்தேன் என்றான். அது கேட்டோர் இவ்வளவு பேராண்மை யுள்ளவனா நீ! மஹா சூர தீர வீர சண்டப்பிரசண்டசூன்யபுத்தி சூடாமணி என்னும் பேர் உனக்கே பொருந்து மடா என்று அவனை மேன்மேலும் ஏளன வாழ்த்துப்பாடி மெச்சிக் கொண்டாடினார்கள். இக்கதையால் மூடர்கள் தமக்கு வரும் அவமானத்தை யெண்ணாது நடக்கின்றனரென்பது விளங்குவதாம்.

**S. K** சச்சிதாநந்தம்;
சூளை, சென்னை.

## நீதிசதகம்.

(184-வது பக்கத்தின் தொடர்ச்சி).

(67) இவ்விடத்தில் விஷ்ணு நித்திரை செய்கிறார்; இவ்விடத்தில் விஷ்ணுவுக்கு விரோதியான அஸுரர்கள் வஸிக்கிறார்கள்; இவ்விடத்தில் பர்வதங்கள் வஸிக்கின்றன; இவ்விடத்தில் ஸர்மலவர்த்தகம் என்னும் பெயருள்ள பிரளய காலமேகங்களோடு வடவாமுகாக்னி வஸிக்கிறது; ஆகையினால், ஸமுத்திரத்தினுடைய சரீரமானது அதிக விஸ்தாரமுடையதாயும் பலமுள்ளதாயும் பாரத்தை ஸஹிக்கக்கூடியதாயும் இருக்கிறது. ஆச்சரியம்!

(அ) (பரோபகாரத்தையே முக்கியமாக வுடையவர்களின் ஜன்மம் ஸபலமுடையதென்று திருஷ்டாந்தத்துடன் கூறுகிறார்.)

(68) எந்த ஆதிகூர்மத்தால் விஸ்தாரமான உலகத்தைத் தாங்கும்பொருட்டு முதுகானது கொடுக்கப்பட்டதோ அந்தக் கூர்மத்தின் ஜன்மம் ப்ரயோஜனமுடையது; எந்தத் துருவர் கிரக நக்ஷத்திராதிகளைச் சுற்றும்படி செய்கிறாரோ அவருடைய ஜன்மமும் சிலாக்யமானது; எவர்கள் பிறர்க்கு ஹிதம் பண்ணுவதில் கருத்துள்ளவர்களோ அவர்களே சிரேஷ்டமடைகிறார்கள். ஆதரவற்றவர்களான மற்றப்பிராணிகள் துருவருக்கு மேலுமில்லை, ஆதிகூர்மத்துக்குக் கீழுமில்லை. ஆனால் பிரும்மாண்டமாகிய அத்திப்பழத்துள்ள மசகம்போலப் பிறந்திறந்துவிடுகிறார்கள்.

(69) ஓ ஜனங்களே! (வைராக்கியமாகிய ஆயுதத்தால்) ஆசையாகிய கொடியை அறுங்கள்; பொறுமையை அடையுங்கள்; மதத்தை விடுங்கள்; பாபத்தில் அன்பு பாராட்டாதேயுங்கள்; ஸத்யத்தைச்சொல்லுங்கள்; நல்வழியில் நடவுங்கள்; வித்வான்களை ஸேவியுங்கள்; பூஜ்யர்களைப் பூஜைபண்ணுங்கள்; சத்ருவையும் அனுசரியுங்கள்; குரு முதலானவர்களை நன்றாக வணங்குங்கள்; கீர்த்தியைக் காப்பாற்றுங்கள்; துக்கப்பட்டவனிடத்தில் தயை செய்யுங்கள்; இவையெல்லாம் ஸாதுக்களின் கிருத்யமாம்.

(70) மனஸிலும் வாக்கிலும் சரீரத்திலும் புண்ணியமான அமிருதத்தால் பூர்ணர்களாயும் திரிபுவனத்திற்கும் அநேகவிதமா

ன உபகாரங்களாலே பிரீதியை உண்டு பண்ணுபவராயும் பிறருடைய குணலேசங்களை அதிகமாகச் சொல்லுபவராயும் எப்பொழுதும் தம்மனதில் சந்தோஷத்தை அடைந்திருப்பவராயும் உள்ள ஸாதுக்கள் எவ்வளவு பேர்கள்? (அல்பமாகத்தான் இருப்பார்களென்று கருத்து).

## தைர்ய பத்ததி.

(71) (அமிர்தத்தை யடையவேண்டுமென்னுங் கருத்துள்ள) தேவர்கள் ஸமுத்ரத்தைக் கடைய ஆரம்பித்தார்கள்; அந்த ஸமயத்தில் ரத்னம் முதலியவை உண்டாயின; அவற்றைக்கொண்டு ஸந்தோஷத்தை அடையவில்லை; அதிலிருந்து பயங்கரமான விஷமுண்டாயிற்று; அதனாலும் பயப்படவில்லை; அமிருதமுண்டாகும் வரையிற் கடைவதை நிறுத்தவுமில்லை. ஆகையால் தைரிய சாலிகள் நிச்சயித்த காரியத்திலிருந்து ஒழிவடைகிறதில்லை.

(72) அதமர்கள் இடையூறு வரும் என்றுபயந்து ஒருகாரியத்தையும் ஆரம்பிக்கிறதில்லை; மத்திமர்கள் ஒரு காரியத்தை ஆரம்பித்து விக்னம் நேரிட்டால் அந்தக் காரியத்தை முடிக்காமல் நிறுத்திவிடுவார்கள்; உத்தமர்கள் ஒரு காரியத்தை ஆரம்பித்து அநேக இடையூறுகளால் தடைகள் நேரிட்டாலும் ஆரம்பித்த காரியத்தை விடமாட்டார்கள்.

(73) காரியத்திலே திருஷ்டியுள்ள புருஷன் சில இடங்களில் பூமியில் சயனம் பண்ணிக்கொள்வன்; இன்னும் சில இடங்களில் கட்டில் முதலிய படுக்கையில் சயனம் பண்ணிக்கொள்வன்; சில இடத்தில் கீரையை ஆகாரம் பண்ணுவன்; சில இடத்தில் சம்பா அரிசி அன்னத்தை யுருசியாய்ச் சாப்பிடுவன்; சில இடத்தில் கந்தைத் துணியைத் தரித்துக்கொள்வன்; சில இடத்தில் திவ்யவஸ்திரத்தைத் தரித்துக்கொள்வன். தைரிய சாலியான காரியார்த்தி துக்கத்தையும் ஸுகத்தையும் எண்ணமாட்டான்.

(74) நீதியில் ஸமர்த்தர்கள் நிந்திக்கட்டும், அல்லது ஸ்தோத்திரம் பண்ணட்டும், ஸம்பத்தானது வரட்டும், அல்லது இஷ்டப்படி போகட்டும், இப்பொழுதே மரணம் இருக்கட்டும் அல்லது யுகாந்தத்திலாவது இருக்கட்டும், எப்படி இருந்தாலும் தீரர்கள் நியாய மார்க்கத்திலிருந்து ஒரு அடிகூடத் தவறமாட்டார்கள்.



(75) எந்தத் தைரியசாலியினுடைய சித்தமானது மங்கையரின் கடைக்கண்ணாகிய பாணங்களால் பேதிக்கப்பட இல்லையோ, கோபாக்கினி ஜ்வாலையால் தகிக்கப்படவில்லையோ, அநேக விஷயங்களையுடைய லோகபாசங்களால் ஆசைக்குள்ளாகவில்லையோ, அந்தத் தீரன் ஸகல ஜகத்தையும் ஜயித்துக்கொண்டிருக்கிறான்.

(76.) தைரியத்தோடுகூடின புருஷரை அதமர்கள் தரித்திரர்களாகச் செய்தாலும் அவர்களுடைய தைரிய குணத்தை நிவிருத்தித்தல் முடியாது. ஜ்வலிக்கிற அக்னியைத் தலைகீழாகச் செய்தாலும் அதன் ஜ்வாலை ஒருகாலும் கீழேபோவதில்லை.

(77.) இந்தச் சரீரம் அத்யுந்நதமான மலையின் கொடுமுடியிலிருந்து மேடுபள்ளமுள்ளதாயும் கடினமான கல்லுள்ளதாயுமுள்ள பிரதேசத்தில் விழுந்து சிதறட்டும்; அது சிலாக்யம். கூர்மையானபல்லுள்ள ஸர்ப்பத்தின் வாயில் கையை வைப்பதும் சிரேஷ்டம். ஜ்வலிக்கிற அக்னியில் பிரவேசிப்பதும் சிரேஷ்டம். ஆனால் நல்ல ஸ்வபாவத்தை மாத்திரம் விடுதல் கூடாது.

(78.) எந்தப்புருஷனிடத்தில் ஸகல ஜனங்களுக்கும் பிரீதிகரமான ஸத்வபாவமானது விளங்கிக்கொண்டிருக்கின்றதோ அந்தப் புருஷனுக்கு உடனே அக்னியானது ஜலம்போல ஆகும்; ஸமுத்திரம் வாய்க்கால்போல ஆகும்; மேருபர்வதம் சிறிய சிலைபோல ஆகும்; சிங்கமானது மான்போலாகும்; ஸர்ப்பமானது புஷ்பமாலைபோல ஆகும்; விஷமானது அமிருதவர்ஷம்போலாகும்.

(79.) ஒரு மரத்தை வெட்டினாலும் அது மீண்டும் உண்டாகிவிடுகின்றது. சந்திரன் கிருஷ்ணபக்ஷத்தில் க்ஷயத்தை யடைந்தாலும் மீண்டும் சுக்லபக்ஷத்தில் விருத்தி யடைகிறான் என்று ஆலோசிக்கிற ஸாதுக்கள் பந்து ஜனங்களுடைய வியோகம் நேரிட்டகாலத்து வருத்தப்படமாட்டார்கள்.

வி-ஸா-ராமச்சந்திர சாஸ்திரியார்,

விஷ்ணுபுரம்.

## சூடாலை.

(181-வது பக்கத்தின் தொடர்ச்சி)

சுமந்திரி:—சோமநாத சாஸ்திரியாரே! நீர் நேற்றிரவு நமது மகாராஜா கிருகத்தில் யாது திருடினீர்?

சோமநாத சாஸ்திரி:—அடுப்பில் நெருப்புத் தள்ளும் ஓரோட்டை யிருப்புக் கரண்டியை.

சுமந்திரி:—இருப்புக் கரண்டியா? இதனையா திருடவேண்டும்? அரண்மனையின் அந்தப் புரத்தில் பொன்னுலகத்தாரும் பெறுதற்கரிய பாத்திரவகைகள் பேராற்றங்கரையில் குழாங் கற்கள் கிடப்பன போலக் கிடக்கின்றனவே? அவற்றுள் யாதாவதொன்றனைத் திருடக் கூடாதா? உமக்குப் புத்திப்பிரம முண்டாயிருக்கலா மென்று நினைக்கின்றேன். அங்ஙனமல்லா விடத்து இருப்புக் கரண்டியைத் திருடமாட்டீர்; உண்மையில் இத்திருட்டுத் தொழிற்கும் உடன்பட மாட்டீர். நீர் எதனாற் குறைந்திருக்கின்றீர்; மகாராஜா தங்கள் தந்தையாராகிய சொக்கலிங்க சாஸ்திரியாருக்கும் உமக்கும் தந்த பொருள்களுக் களவிலவே! சொக்கலிங்க சாஸ்திரியாரைப் போலச் சிறந்த பண்டிதரா யுள்ள நீர் இவ்வினைத் தொழிற் குடன்படலாமா? (அரசனை நோக்கி) அரசரே! இவரைத் தாங்களே விசாரிக்க வேண்டும்; தலைவிதியைக் கடப்பவர் யாவர்?

சிகித்துவசன்:—(சுமதியை நோக்கி) சுமதி! அக்கரண்டியை வாங்கும் பார்ப்போம்.

சுமதி:—சோமநாத சாஸ்திரியாரே! நீர் திருடியபொருளைத் தாரும்.

(சோமநாத சாஸ்திரி அக்குளில் கந்தைத் துணியில் சுற்றி வைத்திருந்த அவ்வோட்டைக்கரண்டியை மெதுவாகவெடுத்துக் கறுப்பன் கையில் கொடுத்தார். அதனை அவன் பிரித்து, கரண்டியைச் சுமதியினிடத்தில் பணிவாகக் கொடுத்தான்.)

சுமதி:—ஆ! ஆ! இக்கரண்டி யொருகாசும் பெறாதே! இதையா இவர் திருடவேண்டும்! இவர்க்குப் பைத்தியம் பிடித்திருக்கலா மென்று நானும் நிச்சயமாக நம்புகிறேன்.



சிகி:—மருத்துவரிடத்து இவரைச் சோதனைக்கனுப்புங்கள். பைத்தியம் பிடித்திராத பட்சத்தில் இவர் இவ்விழி தொழிலைச் செய்ய ஒருகாலு முடன் படார்.

சோம:—(வெட்கத்தொடு தலைவணங்கிக் கண்ணீர் ஒழுக நின்று) ராஜாதிராஜ! எனக்குப் பைத்தியம் சிறிது மில்லை; நான் நல்லறிவோ டிருக்கிறேன்; யானவ்வோட்டைக் கரண்டியைத்திருடிய துண்மையே! என்னை மருத்துவரிடம் சோதனைக் கனுப்ப வேண்டாம்; என்னைக் குற்றத்திற்குத் தக்கபடி தண்டிக்குமாறு பிரார்த்திக்கின்றேன்.

சிகி:—சுமதி! அக்கரண்டியை மேலே தூக்கும், பார்ப்போம். (சுமதி அப்படியே செய்தான்.)

சோம:—ஆறிலொரு பங்கு குடிகளிடத்தில் வாங்கி, அவர்களை யன்னைபோல அன்புடன் காக்கும் அரசரேறே! என்னை மேலும்மேலும் அவமானப் படுத்த வேண்டாம், சட்டப்படி என்னைச் சீக்கிரமாகத் தண்டித்துவிடுங்கள்; அதுவே எனக்கிப்போது தக்க சன்மானமாம். தாங்கள் கருணையினால் என்னைத்தண்டியாது விட்டால் யான் மறுமையில் நரகதுன்பத்தைத்தவறாது அனுபவிப்பேன், "தண்டிக்கத் தகாதவர்களைப் பொருளாசையால் தண்டித்தும் தண்டிக்கத் தக்கவரைத் தாட்சண்ணியத்தால்தண்டியாதுமுள்ள அரசன் இம்மையில் அகீர்த்தியையும் மறுமையில் நரகத்தையுமடைகின்றான்" என்று மனுகூறுவதைத் தாங்கள் கவனிக்க வேண்டும். இச்சோமநாத சாஸ்திரி நாம் குருவாகப் பாவித்து வந்த சொக்கலிங்க சாஸ்திரியின் குமாரரென்று தாட்சண்ணியத்தினால் தண்டியாது விடின் எனக்கும் உமக்கும் தீராதபழிபாவம் மாறாது நிற்பன்வாம். சிறிதும் தாட்சண்யம் பாராது என்னைத் தண்டிக்குமாறு மிகப்பணிவாகப் பிரார்த்திக்கின்றேன்.

(சபையிலுள்ளார் யாவரும் இவ்வளவு தருமந்தெரிந்த விவர் இதனை யெதற்காகத் திருடினரோவென்று, அவர் மீதுள்ள அன்பால் தலைவணங்கிக் கண்ணீருகுக்கின்றனர்.)

சிகி:—(அவரது வார்த்தையைக் கேட்டு மனமிரங்கி) தருமசாஸ்திரத்தி னெல்லையைக் கண்ட சாஸ்திரியாரே! ஒருகாசளவும் பெறாத இவ்வோட்டைக் கரண்டியை யேன் திருடினீர்?

சோம:—யான் ஒன்றுமொன்று குறையாது வாழும் பெருஞ் செல்வ முடையவனா யிருந்தலின், திருடினதற்குக் காரணம் எனக்குச் செவ்விதாகத் தெரியவில்லை! என் தகப்பனார் எனக்கு அடிக்கடி ஒன்று சொல்லுவார்! அதுதான் யான் இவ்வோட்டைக் கரண்டியைத் திருடியதற்குக் காரணமாகு மென்று நினைக்கின்றேன்.

சிகி:—அஃதியாது?

சோம:—அஃதாவது அடே சோமநாதா! நீ அடிக்கடி தருமசாஸ்திரத்தைப் படித்துச் சிந்திக்க வேண்டும். உன்னுடைய ஜாதகத்தில் நீ யொருநாள் திருடுவா யென்றிருக்கின்றது. அத் திருட்டுக் குற்றத்தைச் சுலபமாக்கி உன்னைக் காப்பது தருமசாஸ்திரமாகும். இதனை மறவாதே யென்றடிக்கடி கூறுவதேயாம்.

சிகி:—சாஸ்திரியாரே! நீர் திருடியதற்குக் காரணம் உமது தந்தையார் கூறியதா? ஜாதகத்தி லமைந்திருப்பதா?

சோம:—ஜாதகத்தி லமைந்திருப்பதே!

சிகி:—அத்திருட்டிற்குத் தண்டனை விதிப்பது தவறாமோ?

சோம:—ஆகாது; தவறாது தண்டிக்கலாம்.

சிகி:—அது கிடக்கட்டும். நீர் எவ்வாறு அந்தப்புரத்திற்கு வந்தீர்.

சோ:—நேற்று மாலை அந்தப்புரத்திற்கு விகடகவி மகாராணியவர்களிடம் வேதாந்த விசாரம் செய்யச் சென்றபோது நானும் விகட கவியுடன் பேசிக்கொண்டே சென்று ஒரு பக்கத்தில்மறைந்து விட்டேன். விகடகவி இப்போது உள்விழிப் பார்வையோடிருப்பதால் பிறகென்னைக் கவனிக்கவில்லை.

சிகி:—நீர் அங்குள்ள பொன் பாத்திரம், இரத்தின பாத்திரம், சுவர்ணபாத்திரம், இரசித (வெள்ளி) பாத்திர முதலிய வற்றுள் ஒன்றையுந் திருடாது அடுப்பில் நெருப்புத் தள்ளும் இவ்வோட்டை யிருப்புக் கரண்டியைத் திருடியதன் காரணமென்ன?



சோம:—இரத்தின பாத்திர முதலியவற்றைத் திருடவேண்டுமென்னு மெண்ணத்தோடுதான் அந்தப் புரத்திற்கு வந்தேன். அங்கு யாவரும் உறக்கங்கொண்ட பின்னர், யான் முன்னர் இரத்தின பாத்திரங்களையும் சுவர்ன பாத்திரங்களையும் எடுத்தேன். எடுத்தபோது எனக்கு "மாணிக்கம், முத்து, பவளம், வைடூரிய முதலியவற்றுள் ஒன்றை ஆசையினால் திருடியவன் தட்டாரப் பூச்சியாகப்பிறப்பான்" என்னும் மனுவாக்கியம் ஞாபகத்திற்கு வந்து விட்டது. வரவே, இந்தப் பொருள்களைத் திருடி யேன் தட்டாரப்பூச்சியாகப் பிறக்கவேண்டுமென்றெண்ணித் தண்டனை குறைந்த திருட்டு யாதென்று பலவாறாகச் சிந்தித்துப் பார்த்தேன்; முடிவில் இவ்வோட்டைக் கரண்டியைத் திருடுவதேயா மென்றேற்பட்டது. அதனால் இவ்வோட்டைக் கரண்டியைத் திருடினேன். அதன் பயனாக இப்போது அவமானத்தை யடைகின்றேன். இனிக்கேள்விகள் கேட்காது விரைவாகத்தண்டிக்க வேண்டுமென்று வேண்டுகின்றேன்.

சிகி—"கற்பக் கழிமட மஃகும்", "உறுங் கவலொன்றுற்றுழி யுங்கைகொடுக்குங் கல்வியினூங் கில்லை, சிற்றுயிர்க் குற்ற துணை", "தளர்ந்துழி யுதவுங் கல்வி" என்றற் றொடக்கத்துப் பிரயோகம் உம்மிடத்துப் பயன்பட்ட தாயிற்று. உமக்குத் தருமசாஸ்திரவுணர்ச்சியில்லாத விடத்து, நீர் பெரும் பொருளைத்திருடிப் பெருந்தண்டனையைத் தவறாதடைதற்குரியவ ராவீர்; இவ்வளவு மனஸ்தாபப் பட்டதே நீர் திருடியதற்குத் தக்க தண்டனையாகும். உம்மை விடுதலை செய்கிறேன். இனி நீர் நும்பிதா கூறியவாறொழுகிவாக் கடவீராக.

சுமந்திரி:—வேந்தர் வேந்தே! அந்தப் புரத்திலிருந்து தங்களை யழைத்துப்போக ஆள் வந்திருக்கின்றான். பொழுதும் ஆயிற்று.

சிகி.—ஆம்! ஆம், எல்லாரும் போவோம்.

யாவரும் போகின்றார்கள்.

# ஒட்டகம்-(The Camel).

**தேவையானது:—ஒட்டகத்தின் படம் ஒன்று.**

இந்தப் படத்தைப் பாருங்கள். இதில் தெரிவதுதான் ஒட்டகம் என்பது. இது நமது தேசத்தில் இராது. வடஇந்தியா பாரசீகம் அரேபியா ஆப்ரிகா இந்தத் தேசங்களில்தான் இருக்கும். இவை சாதாரணமாய்க் காடுகளில் வசிப்பதில்லை. மனிதர்களின் வீடுகளிலேயே வசிக்கின்றன. நாம் ஆடுமாடுகளை வளர்ப்பதுபோல் அவ்வூர் மனிதர்கள் ஒட்டகத்தை வளர்ப்பதுண்டு. அவ்விடங்களில் அகன்ற பாலைவனங்களுண்டு. அதில் ரோடுகள் கிடையா. ரயில்வண்டியுங் கிடையாது. ஆகையால் அவ்வூர்மனிதர்கள் வியாபாரம்செய்யப் பாரமான மூட்டைகளை ஒட்டகத்தின் மேலேற்றிச் சமுத்திரம் போன்ற பாலைவனத்தின் அக்கரையிலிருக்கும் ஊர்களுக்குக் கொண்டுபோவதுண்டு. அதனால் ஒட்டகத்திற்குப் 'பாலைவனக் கப்பல்' என்று பெயர் வழங்குகிறது. இப்படி பாலைவனங்களில் கொஞ்சமேனும் களைப்படையாமல் பாரத்தைச் சுமந்துபோவதற்கு ஒட்டகம் எவ்விதம் அமைந்திருக்கிறதென்று கவனிப்போம்

**தேகம்:**—இதன் தேகம் பெரிதாயும் வலுவுள்ளதாயும் தோற்றுகிறது. கால்களோ மிகவும் நீண்டும் தூண்போல் நேர் செங்குத்தாயும் வலுவாயுமிருக்கின்றன. அதனால் பெரும்பாரத்தையும் சுமந்து நடக்கமுடியுமென்றாயிற்று. கால்கள் செங்குத்தாயிருப்பதால் ஒட்டகத்திற்கு ஓடவாவது தாவவாவது முடியாது. ஆனால் வேகமாக நடக்கமுடியும். பாரம்சுமந்த ஒட்டகம் நாளொன்றுக்கு 30 மைலும், பாரமில்லாத ஒட்டகம் 90 மைலும் கூட அலக்ஷியமாய்ச் செல்லும். இதன் உடல் குறுகியும் கால்கள் நீண்டுமிருப்பதால் நடக்கும் பொழுது தேகம் சமுத்திரத்தில் கப்பல் அசைவதுபோல் பக்கத்தில் அசைந்துகொண்டே போகும்.

பாலைவனங்களில் மணல் நிரம்பி யிருக்குமல்லவா? நடுப்பகலில் இந்த மணல் கனல்போல் சுடுமல்லவா? அப்பொழுது அதில் எந்தப்பிராணி நடக்கமுடியும்? ஒன்றாலும் முடியாது. நடந்தால் கால்வெந்து இறந்துவிடும். வெயிலில் நமது கால் சுடாமலிருக்க நாம் செருப்புப் போட்டுக்கொள்ளுகிறோமல்லவா? அதுபோல ஒட்டகத்திற்கும் செருப்பு இருக்கவேண்டுமல்லவா? அஃதென்ன? அதன் கால்களைக்கவனிப்போம். ஆடுமாடுகளுக்கிருப்பதுபோல்இரண்டேவிரல்கள்இருக்கின்றன. ஆனால்பிளவுபட்டகுளம்பு அக்காலில்இல்லை. அகன்று தட்டையான நகங்களிருக்கின்றன. விரல்களும் தனித் தனியாயில்லை. கெட்டியான ஒரு அகன்றதோல் விரல்களின் அடியைச் சுற்றியிருக்கிறது. இத்தோல் காலில் செருப்பிட்டதுபோல் கனமாயிருப்பதால் காலில் சூடுபடுவதில்லை. தவிர, அகன்றும் ரப்பர்போலு மிருப்பதால் நடக்கும் பொழுது கால் மணலில் ஆழ்ந்து போவதில்லை. அதிகதூரம் நடந்



தால் ஒட்டகமானது சிலவேளை களைப்படைவதுண்டு; அப்பொழுது ஆயாசந்தீர மணலில் சற்றுப்படுத்துக்கொள்வதுண்டு. படுக்கும்பொழுது இதன் தேகத்தில் சூடுபடாமலிருப்பதற்கு இதன் முழங்கை முழங்கால் தோள்பட்டை மார்பு இவ்விடங்களில் தோல் தடித்துப் பாதத்திலுள்ளதுபோல மெத்தென்றிருக்கின்றது. ஒட்டகத்தின் ரோமத்தைக் கவனியுங்கள்! அது கொஞ்சமாயும் குட்டையாயு மிருக்கிறது. ரோமங்கள் பூனைக்குக் கம்பளிபோல் அடர்ந்து வளர்ந்திருப்பதுபோலச் சதா உஷ்ணத்தில் வாழும் இதற்கும் இருக்கவேண்டுமா? இல்லையல்லவா?

ஒட்டகத்தின் தலையைப்பாருங்கள். நீண்டகழுத்தின் நுனியில் சிறிதான தலையிருக்கிறது. ஒட்டகத்திற்குக் கொம்பில்லை. அதனால் சத்துருக்களோடு சண்டைபோட அதற்கு முடியாது. சத்துருக்களின் கண்ணுக்கெட்டாமலிருக்கவும் அச்சத்துருக்கள் வருவதை முன்னதாகவே நன்றாக அறிந்துகொள்ளவும் இதற்குக்கூடும். இதன் நிறம்பழுப்பாய்மணல்போலிருப்பதால் ஒட்டகம் மணலிலிருப்பது எளிதில்காணப் படாது. இதன்பருத்தகண்கள் தலையின் உச்சியில்இருப்பதால், இதற்குத்தூர திருஷ்டியுண்டு; மூக்குத்துவாரங்கள் பெரிதாயும் சதா நனைந்து மிருப்பதால் மோப்பசக்தி அதிகமுண்டு. குளம் கிணறு இல்லாத பாலைவனத்தில் பூமிக்கடியில் தூரத்திலிருக்கும் ஊற்றுக்களை மோந்தறிந்து அவற்றண்டைபோகும். பாலைவனங்களில் "ஸைமூன்" என்னும் உஷ்ணமுள்ள ஒரு சுழல்காற்று திடீரென்று வந்து வீசுவதுண்டு. இது வருவதைமோப்பத்தால் அறிந்து தன் எஜமானனைத் தூக்கிக்கொண்டுபோய்ப் பத்திரமான இடங்களில் சேர்ப்பதுண்டு. காற்றில் அகப்பட்டுக்கொண்டபோதிலும் சுவாசிக்கும்பொழுது மணல் தன் மூக்கினுள் போகாமலிருப்பதற்கு ஒட்டகத்தின் மூக்கினுள் சதையாலமைந்த ஒரு உள் மூடியுண்டு. இது மணலைத் தடுத்துக் காற்றைமட்டும் சுவாசிக்கச்செய்கிறது.

**உணவு:**—தேகம் பருத்திருந்தபோதிலும் ஒட்டகம் சிறிது உணவை உண்டு திருப்தி அடைவதுண்டு. சிறிது தவிடும் தானியமும் வளர்ப்போர் இதற்குக் கொடுப்பதுண்டு. ஆனால் பாலைவனங்களில் போகும்பொழுது சிலவிடங்களில் மரத்தின் உச்சியில் இருக்கும் தழைகளையும் தரையோடுதரையாய் முளைத்திருக்கும் சில முட்செடிகளையும் ஆவலுடன் பறித்து உண்ணும். இவற்றைப் பறிப்பதற்காகவே இதன் கால்களும் கழுத்தும் மிகவும் நீண்டிருக்கின்றன. தொளதொளவென்றிருக்கும் இதன் உதடும்வாயின்உட்பக்கமும் நாக்கும் கெட்டித்தோலால்மூடப்பட்டிருப்பதால், முட்செடிகளைப் பறித்துஒடித்துச்சதைக்க அதற்குமுடிகின்றது. ஒட்டகமும்சதைத்துண்ணும் மிருகமாகும். ஆனால்மாட்டிற்கிருக்கும் மேல்பல்லுக்குப்பதிலாக இதற்கு மேல்வாயில்இரண்டுமுட்பற்களுண்டு. கடைவாய்ப்பற்களும் மாட்டின் பற்கள்போல்தட்டையான நுனியைக்கொண்டிருக்கின்றன. ஒட்டகமும்அசைபோடும். ஆடுமாடுகளின் இரைப்பைபோல் இதற்கும் உண்டு. ஆனால்ஒட்டகத்

தின் இரைப்பையில் 3 பைகள்தாம் உண்டு. இதில் இன்னொரு விசேஷம். ஒட்டையாத்திரைபோவதற்குமுன் தன்னிரைப்பையில்நீரை நிரப்பிக்கொள்ளும்.தாகமெடுக்கும்பொழுதெல்லாம் இந்நீரைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குடித்துத்தாகமாற்றிக்கொள்ளும்.ஒட்டகம்ஆகாரமில்லாமல் அதிகநாள்இருக்கும்.அக்காலங்களில்அதன்முதுகிலிருக்கும்திமிழில்நின்றும்கொழுப்பைக் கொஞ்சம் கொஞ்சமாக ஜீர்ணித்துக்கொண்டு வரும். யாத்திரைமுடிந்ததும் ஒட்டகத்தின் திமிழ் சுருங்கியிருக்கும். யாத்திரைபோவதற்கு முன் ஆகாரத்தைஏராளமாக உண்டு திமிழில் கொழுப்பைச் சேகரித்துக்கொள்ளும். அரேபியா ஆப்ரிக்கா இந்தியா தேசங்களிலுள்ள ஒட்டகத்துக்கு ஒன்றும், பார்சிகம் சீனா இவ்வூர் ஒட்டகத்திற்கு இரண்டு மூன்று திமிழ்களும் உண்டு.

மனிதர்களுக்கு ஒட்டகத்தால் இன்னும் உதவியுண்டு. அதன் பாலைக் கறந்து குடிப்பதுண்டு.அதன் சாணியால் வறட்டிசெய்வதுண்டு.இவ்விதம் உபகாரியாயிருப்பதால் ஒட்டகத்தைப்போல் அறிவுள்ளதும், பொறுமையுள்ளதுமானபிராணிவேறில்லையென்று சொல்வதுண்டு. அதுதப்பு. இதைப்போல் புத்திகெட்ட மிருகம்வேறில்லை. இஃது அறிவில்லாததனால் தான் நம்மால் அவ்வளவு பெரியமிருகமாயிருந்தும் பழக்கமுடிகிறது. யாத்திரை காலத்தில் அது தன் மனம்போல் போதுமே தவிர எஜமான் சொற்படி போகாது.

ஒட்டகம் தடவைக்கு ஒருகுட்டிபோடும். ஒருவருஷகாலம் குட்டிக்கு முலைப்பால் கொடுத்துவளர்க்கும்.

Doraysawmy Sastriar, M-A., L-T.
Professor, Presidency College, Madras.

## பாவனமான நிழல்.

முன் ஒரு காலத்தில் காட்டில் தபஸ் செய்துகொண்டு ஒரு மஹரிஷி இருந்தார். அவருடைய நற்குணங்களும் தபோ மகிமையும் தேவதைகளையும் வியக்கச்செய்வதா யிருந்தன. பிரகிருதி ஸம்பந்தமுள்ள ஒரு மனுஷன்பூரணமானநிலையைஅடைந்திருக்கக்கூடுமோஎன்னும் சங்கை அத்தேவர்களுக்கு உண்டாகா திருக்கவில்லை நக்ஷத்திரத்தில் இருந்து அதன் ஒளியும் புஷ்பத்திலிருந்து அதன் பரிமளமும் எப்படி அவற்றிற்குத் தெரியாமலே நாலாபக்கங்களிலும் வீசுகின்றனவோ அப்படியே நம் மஹரிஷியின் தூய்மைக் குணங்களும் அவரறியாமலேஅவருடைய தரிசனம்பெற்ற ஒவ்வொருவருக்கும் விளங்கிக்கொண்டிருந்தன. அவரைச் சாந்தாநந்த ஸ்வரூபரென்றே சொல்லலாம். ஒருபொழுதும் அவரை விட்டு விலகாத புன்சிரிப்பு, அன்பு, தயை, சாந்தம், பொறுமை இவற்றால் அவருடைய ஸ்வரூபம் பிரகாசித்துக்கொண்டே யிருந்தது.



இதைக் கண்ணுற்ற தேவதைகள் கடவுளை யடைந்து "ஈசா! இந்தப் பக்தனுக்கு அமானுஷியமான சக்திகளைத் தேவரீர் தந்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தார்கள்.

"நல்லது, அப்படியே ஆகட்டும். அவனுக்கு என்ன இஷ்டம் என்று தெரிந்து வாருங்கள்" என்று ஜகதீசன் அருளிச் செய்தார்.

அதன்மேல் தேவதைகள் ஒன்றுசேர்ந்து நம்மஹரிஷியினிடம் வந்து பின்வருமாறு பேசலாயினர்:—

தேவர்கள்:—"உம்முடைய ஸ்பரிசமாத்திரத்தில் மனிதர்களுடைய பிணி நீங்க உமக்கு இஷ்டமா?" என்றார்கள்.

மஹரிஷி "அஃது எல்லாம்வல்ல கடவுளுடைய சக்தி. அது எனக்கெதற்கு?"

தேவர்கள். "துன்மார்க்கத்தில் ப்ரவர்த்திக்கும் ஆன்மாக்கள் உமது தரிசனமாத்திரத்தில் நன்னெறியை யடையும் பாக்கியத்தைப்பெற உமக்கு ஸம்மதமா?"

ம. ரி. "வேண்டாம். அது பகவத் ஸாக்ஷாத்கார மடைந்த மஹா புருஷர்களுடைய கார்யம். நான் அதற்கு அநர்ஹன்."

தே. "நீர் சாந்தாநந்த ஸ்வரூபராய் உலகத்தால் மதிக்கப்பட்டுப் பாப இருள் நிறைந்த இந்தப் பிரபஞ்சத்தின் அந்தகாரத்தைப் போக்கடித்துப் பகவத் சரணங்களுக்கு வழி காட்டக்கூடிய ஒரு சுடராய் இருக்க உமக்கு ஸம்மதமா?"

ம. ரி. "மனிதர் என்னை நாடிவருவாரானால், அவர்கள் அடையவேண்டிய பகவத் பாதாரவிந்தங்களில் கவனம் குறைவுபடும். கடவுளுடைய மகிமை பிரபஞ்சத்தில் பிரகாசிப்பதற்கு எத்தனையோ வழிகள் அவர்களுக்கே தெரியும்.

தே. "ஆனால் உமக்கு என்னதான் ஸம்மதம்?"

ம. ரி. (மந்தஹாஸத்தோடு) "எனக்கு இஷ்டம் கடவுளுடைய அருள் என்னைவிட்டு ஒருபோதும் அகலாதிருக்கவேண்டியது தான். அஃது ஒன்றிருந்தால் எனக்கு வேறென்ன குறை?"

தே. (நிர்ப்பந்தமாய்) "நீர் ஏதாவது அமானுஷியமான ஒரு சக்தியை விரும்பா விட்டால், பலவந்தமாய் ஒரு சக்தி உமக்கு அளிக்கப்படும்."

ம. ரி. "நல்லது. உங்களுடைய ஸம்மதம் அப்படி யிருக்குமானால் எனக்கு ஒரே ஒரு சக்தியை அநுக்ரகியுங்கள். அஃதாவது-எனக்கு அணுவளவும் தெரியாமலே நான் ஏராளமான நன்மையைச்செய்யும் சக்தியே."

இதைக்கேட்ட தேவதைகளுக்கு மிகவும் மனக்குழப்பம் உண்டாயிற்று. அவர்கள் எல்லோரும் கூடி ஆலோசித்துப் பின்வருமாறு தீர்மானம் செய்தார்கள், அஃதாவது:—நமது மஹரிஷியின் நிழலானது பின்புறத்தி

லாவது இருபக்கங்களிலாவது அவர் கண்ணுக்குப் புலப்படாமல் எந்த வஸ்துவின்மேல் படுகிறதோ அந்த வஸ்துதன்னிடத்திலுள்ள பிணிநீங்கித் துன்பம் ஒழியவும், அதன் பாபம் நசிக்கவும்வேண்டும். அச்சக்தி அந்த நிழலுக்கு இருக்கவேண்டுமென்பதுதான். அவர்கள் தீர்மானப்படி அன்றுமுதல் அந்தமஹரிஷியின் சாயைக்கு மேற்சொன்ன பரமசக்தி ஏற்பட்டுவிட்டது. அவர் நடந்தவழி கட்டாந்தரையாயிருந்தும் பசும்புற்றரையாயிற்று; அவர் நிழலின் ஸ்பரிசம் பெற்ற பட்ட மரம் துளிர்த்தது;வறண்டகுளம் நீர் நிரம்பிற்று; பலமற்ற குழந்தைகளுக்குத் தேகதிடம் உண்டாயது; பாபிகள் பக்தர்கள் ஆனார்கள். ஆனால் நம் மஹரிஷியோ முன்போலவே தமது நித்ய கர்மங்களைச் செய்துகொண்டு வந்தாரே யொழியத் தம்மிடத்திலிருந்து ஒரு தேஜஸின் அனுக்கிரகம் உலகத்தைப் பிரகாசிப்பித்தும் பரிமளிப்பித்தும் வருகிறதென்பதை அணுவளவும் உணர்ந்தாரில்லை. இவருடைய அடக்கத்தைப் பார்த்த ஜனங்கள் இவர் மகிமையைப்பற்றி ஒரு அக்ஷரமும் அவரிடத்தில் சொல்லாமலே, மௌனமாய்அவரைப்பின்பற்றினார்கள். நாளடைவில் அவருடைய பெயர் ஒருவருக்கும் ஞாபகமின்றிப் "பாவநமான நிழல்" என்னும் ஒரு புதிய பெயர் அவருக்கு ஏற்பட்டுவிட்டது.

(ஒருமொழிபெயர்ப்பு )
K. Rangaswami Aiyangar.

## உறுதி மொழிகள்.

(1) நாம் ஈஶ்வரனது துணையைப் பற்றினால் அடையக் கூடாதது ஒன்றும் இல்லை. (ரஸ்கின்-Ruskin)

(2) மனிதன் தனது வாழ்நாளில் தான் செய்யும் நேர்மையான செய்கைகளுக்கெல்லாம் உண்மையையே அஸ்திவாரமாகக் கொள்ளல் வேண்டும். (ரஸ்கின்- Ibid)

(3) நாம் சரீராகாரமாக (சரீரமே நான் என்று) நினைத்திருக்கும் போது ஈஶ்வரனைவிட்டு நீங்கினவர்களாகின்றோம். (கொரிந்தியன்ஸ் Corinthians.)

(4) எவன் கிறிஸ்துவி (ஈஶ்வரனி) ன் தன்மையோடிருக்கின்றானோ அவனே மேலான புதிய மனிதன். அவ்வாறிருக்கத் தலைப்பட்டபோதே அவனிடத்திருந்த பழையனவெல்லாம் அவனைவிட்டு ஓடிவிடுகின்றன; குணங்களெல்லாம் புதியனவாகின்றன. (கொரிந்தியன்ஸ்-Ibid)

(5) காணப்படும் பொருள்களெல்லாம் அழிந்துபோம்; காணப்படாதன எப்பொழுதும் அழிவற்றன; நித்தியம். (கொரிந்தியன்ஸ் -Ibid)



(6) குடும்பம், பொருள் சம்பாதித்தல், அதனைச் செலவு செய்தல், வேலை செய்தல் முதலிய எல்லாவித வாழ்க்கையின் பகுதியிலேயும் எவன் தனது மனதைச் சமானமாக (அஃதாவது ஒன்றில் அதிகமாக மற்றொன்றில் குறைவாக இல்லாமல்) செலுத்துகிறானோ அவனே ஈஶ்வரத்தன்மையுடையவன்; அவனே தெய்வம்.

(7) எவன் நியாயம் என்கிற கண் பெற்றிருக்கிறானோ அவன் எல்லாவற்றின் குறிப்பையும் அறிவன்.

எவன் காமம் என்கிற கண் பெற்றிருக்கிறானோ அவன் எதையும் அறியான்.

எவன் பொறாமை யென்கிற கண் பெற்றிருக்கிறானோ அவன் பிறனது அபிவிருத்தியை மாத்திரம் பார்ப்பன்.

. எவன் பொருள்களின் விசேஷ திருஷ்டியில்லாமை (சாமானியதிருஷ்டி) என்கிற கண் பெற்றிருக்கிறானோ அவன் எல்லாவற்றையும் சுகரூபமாகப் பார்ப்பன்.

(8) மகான்களது கண்கள் மங்கலாயிருக்கின்றன; ஆனால்,அவர்களது ஞானக் கண் வேலை செய்கிறது. அவர்கள் மேலான விஷயத்தையே சிந்தித்து மனோதிடத்தை யடைகிறார்கள்; இவ்வளவோடு நில்லாது உண்மையை யறியும்வரைவேலை செய்கின்றார்கள்.

(9) எந்தக் குடும்பத்தில் அறிவில்லாத குருடர்கள் இருக்கின்றார்களோ அதுவும், எந்தக்குடும்பத்தில் சமூக விஷயத்தில் குருடராக இருப்பவர் இருக்கின்றார்களோ அதுவும், எந்தக் குடும்பத்தில் கருவம் உடையவர் இருக்கின்றார்களோ அதுவும், எந்தக் குடும்பத்தில் அகந்தை உடையவர் இருக்கின்றார்களோ அதுவும், எந்தக் குடும்பத்தில் காமிகள் இருக்கின்றார்களோ அதுவும் சீக்கிரத்தில் நசித்துவிடும் என்பது திண்ணம்.

(10) காலம் பலருக்குப் பலவிதமாய்க் கழிவதாகக் காணப்படுகிறது. சிலருக்குக் காலம் கழியாமலே யிருப்பதாகக் காணப்படுகிறது. சிலருக்கு மெல்லக் கழிவதாகக் காணப்படுகிறது; சிலருக்குச் சாதாரண ஓட்டமுடையதாகவும் மற்றும் சிலருக்கு வேகமாக ஓடுவதாகவும் காணப்படுகிறது. (ஷேக்ஸ்பியர் - Shakespear)

வா - ஆறுமுக செட்டியார்,
முத்தியாலுபேட்டை, சென்னை.

# வர்த்தமானம்.

### பம்பாய்க் கவர்னர்.

லார்ட் வெல்லிங்டன் பம்பாய்க் கவர்னராக நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

### கல்வியின் அபிவிர்த்தி.

சென்னை ராஜதானியில் $41\frac{1}{2}$ மிலியன் ஜனங்களிருக்கின்றனர். அவர்களுள் பிராமணர் $1\frac{1}{2}$ மிலியனிருக்கின்றனர். யூனிவர்சிட்டி பி. ஏ. பரீட்சையிற் றேறியிருப்பவர்களுள் ௨821 பேர் பிராமணர்கள்; அஃதாவது நூற்றுக்கு 72 விதமாம். 1882-1904-ம் வருடங்களில் சிவில் சர்விஸ்பரீட்சையிற்றேறிய 16 பேர்களுள் 15 பேர் பிராமணர்களாம். அஃதாவது நூற்றிற்குத் தொண்ணூற்று நான்கு விதமாம். மைசூர் ராஜ்யத்தில் சென்ற 20 வருடங்களில் நூற்றுக்கு 85 விதம் பிராமணர்கள் சிவில் சர்விஸ் வேலையிலமர்ந்திருக்கின்றனர்.

இந்தியாவில் கல்விகற்றோர் நூற்றுக்கு ஆறு பேராம்; கிரேட் பிரிட்டனில் நூற்றுக்கு நூறு பேராம்.

இந்தியாவில் கலாசாலைகட்குச் செல்வோர் நூற்றுக்கு ஒருவராம்; இங்கிலாந்தில் கலாசாலைக்குச் செல்வோர் நூற்றுக்கு 17-20 பேராம்.

### பஞ்சமர்க்கு வீடு கட்டிக்கொள்ள நிலந்தருதல்.

திருவாங்கூர்க் கவர்ன்மெண்டார், தம் தேசத்தில் ஸாதுஜன பரிபாலன சங்கத்தைச் சேர்ந்த பஞ்சமர்கள் வீடு கட்டிக்கொள்ள 500 ஏக்கர் நிலம் தருவதாகத் தீர்மானஞ் செய்திருக்கின்றனர். ஒரு வீடு கட்டிக்கொள்ளுவதற்கு ஒரு ஏக்கர் நிலம் விடப்படும்.

### பாஷையின் பெருக்கம்.

உலகத்தில் $4\frac{1}{2}$ கோடிபேர் பிரெஞ்சுபாஷையையும், 8 கோடிபேர் ஜர்மன் பாஷையையும், 16 கோடிபேர் இங்கிலீஷ் பாஷையையும், $2\frac{1}{2}$ கோடிபேர் தமிழ்ப் பாஷையையும், 3 கோடிபேர் தெலுங்கு பாஷையையும், $4\frac{1}{2}$ கோடிபேர் வங்காளபாஷையையும் பேசுகின்றனர்.



லண்டனில் பௌத்த சபையொன்று ஏற்படுத்த உத்தேசமாம். அதற்குச் சையாம் அரசர் போஷகராயிருப்பாராம்

### அமெரிக்கப் பெண்களின் கல்யாண முறை.

மாதமொன்றற்கு 80 அல்லது 85 பவுண்டு வருமானமுள்ளவரையே அமெரிக்க ஸ்திரீகள் கலியாணஞ்செய்து கொள்ளுதல் வேண்டுமென்று அங்குள்ள ஸ்திரீகள் சங்கங்களேற்படுத்தி அமெரிக்கப் பெண்களுக்குப் போதித்துவருகின்றார்களாம்.

### ஒரு நதியில் 60 பேர் மாண்டனர்.

சென்ற ஜனவரிமாதம் 24-ந் தேதி பர்மா நீராவிப்படகுக்கம்பெனிக்குச் சொந்தமான ஆனக்ஸபாட் என்னும் நீராவிப்படகு அட்டாஜுக்கு ஒன்றரை மைலுக்குக் கீழுள்ள எய்போவிற்கருகே கவிழ்ந்து விட்டது. அதன் மேல்தட்டில் நெல்மூட்டைகளதிகமாக இருந்தன. அதில் 100 பிரயாணிகளிருந்தனர். அவர்களுள் 60 பேர் நதியில் மூழ்கினராம்; பெரும்பான்மையோர் ஸ்திரீகளேயாம். ஓர் ஐரோப்பியர் காப்பாற்றப் பட்டனராம்.

கிரோசினுயில் பற்றிக்கொண்டால் அதில் உடனே பாலை ஊற்றவேண்டும். அவ்வாறு செய்வதால் பாலும் எண்ணெயும் குழம்பித் தீ யவிந்துபோம்.

கிரோஸினுயில் விளக்கு மிகப்பிரகாசமாக எரியவேண்டுமாயின், மேற்படி எண்ணெயில் சிறிது உப்புப்போட்டு வைக்க வேண்டும்.

வால்துாளிலிருந்து சர்க்கரை செய்யப்படும் முறை கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது.

### ஒரு தத்துவ சாஸ்திரியின் அநுமானம்.

ஏல் யூனிவர்ஸிடியில் புரொபெசராயிருக்கும் மிஸ்டர் பிஷர் என்பவர், 700 அல்லது 800 வருஷங் கழிந்த பின்னர் மனிதர் நூறுவயதிற்குள் இறக்கமாட்டார்களென்றும், 4000 ஆண்டு கழிவதற்குள் மனிதருடைய வயது 250 ஆகுமென்றும் கூறுகின்றனர். மேலும், புருஷர்களைப் பார்க்கிலும் ஸ்திரீகள் அதிக வயதிருப்பார்களென்றும், புருஷர்களுடைய ஜீவியகாலம் 5

வருடமாகவும், ஸ்திரீகளுடைய ஜீவியகாலம் 6 வருடமாகவும் நீட்டித்திருக்கின்றனவென்றும் கூறுகின்றார்.

### சித்தாமணக்கெண்ணெயின் துர்நாற்றம் நீக்குமுறை.

ஒரு அவுன்ஸ் சித்தாமணக் கெண்ணெயை ஒரு மேஜைக் கரண்டியளவு தேனுடன் ஒரு கோப்பைச் சுடுநீரி லூற்றி நன்றாக்கலக்கித் தெளிந்தபிறகு எண்ணெயைவடித்துக் கொண்டால், அதில் துர்நாற்றம் சிறிதுமிராதாம். இம்முறை சித்தாமணக்கெண்ணெ யுண்பவர்க்கு மிகவு முபயோகமானதாம்.

### பௌத்தாலயம்.

1910 வது வருடம் மார்ச்சுமாதத்தில் லார்டு மிண்டோவிடத்திருந்து வாங்கிய பௌத்ததாது அஸ்தியை மாண்டலே மலையில் சேமித்து அதற்கொரு கோயில் கட்ட ஒரு லட்சரூபாய் செலவாகுமாம். அதுபற்றிப் பொருள் சேகரஞ்செய்யப் பலருடைய உதவி வேண்டப்பட்டிருக்கின்றது.

### துருக்கியின் விஸ்தீரணமும் ஜனசங்கியையும்.

யுத்த ஆரம்பத்திற்கு முன்னர்த்துருக்கிக்கு 6535 சதுரமைல் விஸ்தீரணமுள்ள நிலமும், 6 மிலியன் ஜனத்தொகையு மிருந்தன. ஆனாலிப்போது அங்கு 1,263, 000 ஜனத்தொகைதா னிருக்கின்றது. பால்கன் கட்சியாரின் யுத்தசமாதான ஏற்பாட்டின் பிரகாரம் துருக்கிக்கு 2, 238 சதுரமைல் விஸ்தீரணமுள்ள நிலந்தான் கிடைத்தல் கூடும்.

### ஆல்ப்ஸ் மலையைக் கடந்தவர்.

சில தினங்கட்குமுன் பிலோவுகோ என்னும் ஓர் ஆகாயவிமானி தமது ஆகாயவிமானத்தில் ஸ்விட்ஸர்லாண்டு தேசத்திலேறி, ஆல்ப்ஸ் மலையைக் கடந்து அதன் தெற்குப்பக்கத்தில் 25 நிமிஷத்தில் வந்திறங்கினார்; ஆல்ப்ஸ் மலை யென்பது ஏறக்குறைய இமயகிரிபோன்றதாம். அவர் ஆல்ப்ஸ்மலையை ஆகாய விமான வாயிலாகக் கடந்து பிழைத்திறங்கியது அருமையினும் அருமையாம். முயன்றால் முடியாதது ஒன்று மின்றே.

இத்தாலியதிருப்போலி யுத்தத்தில் இத்தாலியருக்கு 24மிலியன் பவுண்டு செலவாயிருக்கின்றதாம்.

### சென்னை ராஜதானியின் ஜனனமரண விகிதம்.

சென்ற வருடம் அக்டோபர் மாதத்துடன் முடிவான ஒரு வருஷத்தில் சென்னை ராஜதானியில் 5, 999 ஆண்பிள்ளைகளும்—54, 678 பெண்பிள்ளைகளும் பிறந்தனரென்றும், 4,000 ஆண்பிள்ளைகளும், 38, 760 பெண்பிள்ளைகளும் இறந்தனரென்றும் தெரிகின்றன.

### ராஜகுடும்பச் செலவு.

பார்லிமெண்டார் நமது ஜார்ஜ் சக்கரவர்த்தி யாரவர்களது குடும்பச் செலவிற்காக வருஷத்திற்கு 92, 10, 000 ரூபாய் கொடுத்து வருகின்றனர். இத்தொகையுள் 10, 50, 090 ரூபாய் சக்கரவர்த்தியார் தமது அன்னையாருக்குக் கொடுத்து வருகின்றனர்.

இங்கிலாந்து தேசத்தில் பிரேத தகனம் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றது.

பிரிட்டனில் மிஸ்டர் வான்டீன் ஒரு நாடகசாலையில் இறந்துபோகும் வாத்தியக்காரன் வேஷத்தைப் பூண்டு நடித்துக்கொண்டிருக்கும்போது நாடகமேடையிலேயே இறந்துபோனார். இவர் தாம் கொண்டது வேஷமென்று நினையாதுபோயினர் போலும். இஃது இங்குச்சில காலத்திற்குமுன்னர் நரசிம்ம வேஷம் பூண்டவனொருவன் இரணிய வேஷக்காரனைக் கிழித்து விட்டதற் கொப்பாக விருக்கின்றது. மேலும், நாடக சாலைகளிற் செல்வோரிற் பெரும்பான்மையோர் ஆங்கு நிகழும் லோகிதாச சரித்திரம், துரோபதை துகிலுரிதல் முதலிய உருக்கமான கதைகளைக் கேட்கும்போது கண்ணீருங் கம்பலையுமாக இருப்பதைப் பார்த்துவருகின்றோம். இவ்வாறிருப்பது மனத்தினதியல்பாம். மனமானது எதை அழுத்தமாகப் பாவிக்கின்றதோ அது முற்றப் பெறுகின்றது. அதனாலன்றோ சிவத்தை ஒருவன் தானாகப் பாவிக்கின் அவன் சிவனாவன் என்று வேதங் கோஷிக்கின்றது.

### சதஞ்சீவியர் சபை.
### (நூறாயுளுடையார் சபை).

ஜப்பான் தேசத்து மந்திரியராயிருந்த கவுண்ட் ஒகூமா என்பவர்மேற்படி சபைக்குப் பிரெஸிடெண்டாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இவர் மனிதன் நெறியுடனிருப்பானாயின் 125 வருடம் ஜீவித்திருத்தல் கூடுமென்று கூறுகின்றார். இச்சபையின் அங்கத்தினர் 80 வயதுக்கு மேற்பட்டவர்களாக விருத்தல் வேண்டுமாம். இச்சபை ஜனவரி மாதத்திற்றான் கவுண்ட் ஒகூமா வீட்டில் ஸ்தாபிக்கப்பட்டது. அப்போது 500 பேர் 80 வயதிற்கு மேற்பட்டவர்கள் சேர்ந்திருந்தனர். அவர்களுள் 113 வயதுடைய நாஷிமுகா என்பவர்தாம் அதிக வயது சென்றவராம். அவர் எல்லோரினும் வயது முதிர்ந்தவர் தாமே யென்று காட்டுவதற்காகவே யமகூச்சியிலிருந்து டோக்கியோவிற்கு வந்தனராம்.

இச்சபை பகல் ஒரு மணிக்குக் கூடியது. சிலர் வண்டிகளிலும், ஜின்ரிக்ஷாக்களிலும் வந்தனர்; அநேகர் கால்நடையாகவே வந்தனர். அங்குக் கூடியிருந்தவர்களுள் நடந்த சம்பாஷணை தமக்குப் பல்லித்தனை யென்பது பற்றியும், தாம் புசிக்கும் உணவு இத்தன்மையதென்பது பற்றியும்,

பார்வையைத் திருத்தும் பொருட்டுக் கண்ணாடி போடுவது பற்றியு மாகவே பெரும்பான்மையாக இருந்தது. கடைசியில் கவுண்ட் ஒகூமா உபந்நியாசஞ் செய்தனர். அங்கிருந்தவர்களுள் பெரும்பான்மையோர் வயது சென்றவர்களா யிருந்தமையின், உபந்நியாச மொன்றும் அவர்கட்குக் கேட்கவில்லை. சபை மாலை 5 மணிக்குக் கலைந்தது.

### ஜெயில் விஷயம்.

திருவாங்கூர்க் கவர்ன்மெண்டார் திருடர்கள் ஜெயிலி னின்றும் விடுதலையான பின்னர் அவர்கள் சன்மார்க்கவழியி லொழுகு மாறு அவர்கட்கு உத்தியோகங் கொடுக்க உத்தேசித் திருக்கின்றனர். அது சிலாகிக்கத் தக்கதே. ரெபர்மேட்டரிப் பள்ளிக்கூடத்திற் கல்விகற்று வந்த ஒருவனுக்குக் கவர்ன்மெண்டில் உத்தியோகங் கொடுத்ததும், ஜெயிலிலிருக்கும் ஒருவனுக்கு அவன் விடுதலை யானதும் ஜெயில் அச்சுக் கூடத்தில் மெக்கானிக் வேலை கொடுக்க நிச்சயித் திருப்பதும் திருவாங்கூர் சமஸ்தானத்தின் திவானவர்களது மேன்மைக் குணத்தைக் காட்டுவதா கின்றன. நமது பிரிட்டிஷ் ராஜாங்கத்திலோ கைதிகள் ஜெயிலில் படும்பாடு சொல்லுந்தரத்த தன்றாம். ஈனஸ்திதியி லிருக்கும் இழிந்த ஜாதியா னொருவன் தொப்பி பூட்ஸ் போட்டுக் கொண் டிருப்பானாயின், அவன் ரொட்டி முதலிய உயர்ந்த உணவே கொடுக்கப்பட்டு மேன்மையாக நடத்தப் பட்டு வருகின்றான். உயர்ந்த அந்தஸ்தி லிருக்கும் உயர்ந்த ஜாதி இந்து ஒருவன் கால வித்தியாசத்தினால் ஜெயிலிற்குப் போக நேரிடு மாயின், அவன் குற்றத்தையே குணமாகக் கொண்டும் ஜெயில் வாசத்தையே நல்வாசமெனக் கொண்டு மிருக்கும் குற்றவாளிகளோடு சேர்க்கப் பட்டுத் தாழ்ந்த உணவே கொடுக்கப்பட்டு வருகின்றான். இவ்வாறாய வித்தியாசங்களைப் பாராட்டுவது கவர்ன் மெண்டாருக்கு நியாயமும், நடுநிலைமையு மாகா. இதுபற்றிச் சட்ட சபையில் ஆனரபில் மிஸ்டர் கேசவப்பிள்ளை பலமுறை பரிவாய்ப் பேசி யிருக்கின்றனர். இதுபற்றி ஆனரபில் மிஸ்டர் ஹாரல்ட் ஸ்டூவர்ட்டும் ஜெயிலில் கைதிகளுள் ஜாதி வித்தியாசம் பாராட்டப்பட மாட்டாதென்று உறுதிமொழி கூறியிருக்கின்றனர். அங்ஙனமிருந்தும் ஜெயி லதிகாரத்தைச் செலுத்துவோர் மேற்படி உறுதி மொழியை யநுஷ்டானத் திற்குக் கொண்டு வாரா திருப்பதற்குக் காரணந் தெரியவில்லை. சட்டசபையில் சென்னைக் கவர்ன்மெண்ட் நிர்வாகக் கவுன்சில் மெம்பர்களுள் ஒருவர் கூறிய உறுதி மொழியை அநாதரவு செய்யும் ஜெயி லதிகாரிகளைக் கவர்ன் மெண்டார் உத்தி யோகத்தில் வைத்திருப்பது தகுதி யானதாமோ?

கல்கத்தா ஐக்கோர்ட்டில் இந்தியஜட்ஜிகள் ஆறிலிருந்து ஏழுபேராக்கப்பட்டனர்; ஐரோப்பிய ஜட்ஜிகள் பன்னிரண்டி லிருந்து பதினொரு பேராக்கப் பட்டனர்.

## Glimpses of Truth.

1. As the one fire coming into the world is manifesting itself in so many forms, and yet is infinitely more besides, so is the impersonal God.

2. What are all these heaven ideas but simply modifications of the nonsensical priestcraft.

3. If you cannot love your own brother whom you have seen, how can you love God whom you have not seen.

4. Who makes us ignorant? We ourselves. We throw our hands before our eyes and weep that it is dark. Take your hands off and the light exists always for us, the self effulgent nature of the human soul.

5. What is that knowing which we know everything else?

6. What you think, that you are; what you shall think, that you shall be.

7. He who sees everyone in himself and himself in everyone, thus seeing the same God living in all, in the same manner the sage no more kills the self by the self. Know through Advaita that whenever you hurt, you hurt yourself, they are all you.

8. The secret of Advaita is believe in yourself first and then believe in anything else.

9. Send not out thoughts and words of weakness unto humanity. Know that all sins and all evils can be summed up into that one word weakness. It is weakness that is the motive power in all evil doing; it is weakness that is the motive power in all wrong acts; it is weakness that makes men do what they ought not to do; it is weakness that makes them manifest what they are not really. Let them all know what they are; let them tell it day and night that they are Sivoham. Let them suck it with their mothers' milk, this idea of strength—I am He, I am He. And then

let them think of it, and out of that thought, out of that heart will proceed works such as the world has never seen.

10. Remember the saying of the Vedas- Om, this is the great secret; Om, this is the greatest possession; he who knows the secret of this Om whatever he desires that he gets.

11. Even in this life they have conquered heaven whose minds are fixed in this sameness, for God is pure and the same to all; therefore such are said to be living in God.

## Good Manners and Sayings.

(1) Early to bed and early to rise, makes a man healthy, wealthy and wise.

(2) Keep yourself and your dress always neat and tidy.

(3) Take much excercise and moderate food.

(4) Prevention is better than cure.

(5) Work while you work and play while you play.
That is the way to be cheerful and gay.
Things done by halves are never done right.
Work while you work and play while you play.

(6) All work and no play make Rama a dull boy.
All play and no work make Rama a dull boy.

(7) One thing at a time and that done well.

(8) Never put off till tomorrow what you can do today.

(9) Never sacrifice duty for convenience.

(10) Think twice before you speak once.

(11) Never be idle; for idle hands always find some mischief to do.

(12) Be kind and merciful to one and all.

(13) Keep good company and try to earn a good name, for a good name is better than a disgraceful living and disgrace is worse than death.

(14) Obey your parents and elders.

*Streeneevasa Iyengar, Teacher, Madras.*


# பெருந்திரட்டு.

சொருபானந்தரால் திரட்டப்பட்டது.

இதுகாறும் வெளிவராதது.

விலை ரூபாய் மூன்று—வி. பி. முதலிய சார்ஜ் பிரத்தியேகம்.

மானேஜர், சக்ரவர்த்தினி ஆபீசு,
கோமளேசுவரன் பேட்டை, சென்னை.

**P. S. Sundram & Co.**

Electro-Platers, Gilders and
General Commission Agents.

உயர்ந்த தங்கம் வெள்ளிப் பதக்கங்களும் முதல் தரமான அநேக யோக்கியதா பத்திரங்களும் வெகுமானமாக அளிக்கப்பட்ட பெயர் பெற்ற

பி. எஸ். சுந்தரம் கம்பெனி,
எலக்டிரிக் தங்க நகை வியாபாரிகள்.
107-பெரியதெருவு திருவல்லிக்கேணி, சென்னை.

## எலக்ட்ரிக் தங்கநகை விலைவிவரம்.

32" நீளம் $\frac{3}{4}$" அகலம் 150. } அரும்பு சிலங்கை கட்டிய
32" நீளம் $\frac{5}{8}$" அகலம் 210. }

| | | | |
|---|---|---|---|
| 5 வருஷம் காரண்டியுள்ள | மல்லிகை ஒட்டியாணம் | ரூ. 25 | 8 |
| | நாக ஒத்து பெரியது | 12 | 0 |
| | நாகஒத்து சிறியது | 9 | 0 |
| | காரை பெரியது | 10 | 0 |
| | காரை சிறியது | 7 | 8 |
| | வங்கி பெரியது | 10 | 0 |
| 3 வருஷம் காரண்டியுள்ள | மல்லிகை ஒட்டியாணம் | 19 | 8 |
| | நாகஒத்து பெரியது | 9 | 0 |
| | ஷை சிறியது | 6 | 12 |
| | காரை பெரியது | 7 | 8 |
| | ஷை சிறியது | 5 | 12 |
| | வங்கி சிறியது | 8 | 0 |
| | 1½-வருஷம் காரண்டி யுள்ள மல்லிகை ஒட்டியாணம் … … | 13 | 8 |
| | மல்லிகை ஒட்டியாணம் காரண்டியில்லாதது … … | 8 | 8 |
| | ஜாமந்திப்பூ | 1 | 8 |
| | ரோஜாப்பூ | 1 | 8 |

# கதாமஞ்சரி.

இஃதோரு மாதாந்த சஞ்சிகை. டிம்மி 24 பக்கங் கோண்ட
3 பார அளவில் மாதந்தோறும் வெளிவரும்.

இதில் * கதாசரித் சாகரத்தின் தமிழ் மோழிபெயர்ப்பு அடங்கி யிருக்கின்றது. இக்கதை பூர்வம் உமாதேவியாரின் பிரீதியார்த்தம் பரமசிவனால் திருவாய்மலர்ந்தருளப்பட்டது. இப்பரத கண்டத்தின் வடமேற் கெல்லைப் புறத்தின்கண் காஸ்மீர தேசத்தை 800 வருடங்கட்கு முன்னர் ராஜ்ய பாரஞ் செய்துவந்த ஸ்ரீ ஹர்ஷன் என்னும் அரசன் தனது ராஜ்யத்தில் நேர்ந்த யுத்தத்தில் மரணமடைந்தனன்; மன்னனிறந்த துக்கத்திற் காற்றாத சூரியவதி யென்னும் அன்னைபாரின் சோகத்தை நிவிர்த்திக்குமாறு இக்கதை சோம தேவரால் இயற்றப்பட்டது. இக்கதையின் போக்கு நவ நவமாகவும், படிப்போர்க்குப் பரமானந்தத்தைப் பயப்பிப்பதாகவு மிருக்கும். மேலும், இது தெய்வபக்தி, வைராக்கியம், நல்லொழுக்கம் முதலிய நல்லனவெல்லாம் நலமுறப் பொருந்துமாறு செய்யும். இதன் பெயருக் கேற்றவாறே கதையும் சாகரம் போன்றே விளங்கும் இது யாவரும் செவ்வித னுணருமாறு எளிய வசன நடையி லெழுதப்பட்டுள்ளது.

| சந்தாவிவரம். | | | |
|---|---|---|---|
| வருஷம் 1க்கு | ரூ. 1 | 0 | 0 |
| ஆறு மாதத்திற்கு | 0 | 10 | 0 |
| தனிப்பிரதி | 0 | 2 | 0 |
| வெளி தேசத்திற்கு | | | |
| வருஷம் 1-க்கு | 1 | 8 | 0 |
| ஆறு மாதத்திற்கு | 0 | 14 | 0 |
| தனிப்பிரதி | 0 | 3 | 0 |

| விளம்பர விகிதம் | | | |
|---|---|---|---|
| மாதம் 1க்கு பக்கத்திற்கு | 1 | 0 | 0 |
| " ½ பக்கத்திற்கு | 0 | 10 | 0 |
| " ¼ பகத்திகற்கு | 0 | 6 | 0 |
| சில்லறை விளம்பரங்களுக்கு வரி 1க்கு அணா | 0 | 1 | 0 |

திரு. அ. சுப்பிரமணி பாரதியார்,
மானேஜர், லோகோபகாரி ஆபீசு,
கோமளேசுவரன் பேட்டை, சென்னை.

* கதாசரித் சாகரம்.

டிம்மி 8 பேஜ் அளவில் 240 - பக்கங்கோண்ட
முதல்பாகம் வெளியாய்விட்டது. விலை ரூபாய் 1-4-0.

## 170-பக்கப் புத்தகம் இனாம்!

இது நல்ல ஆரோக்கியமும் நீடித்த சுகவாழ்வுந்தரும்; இயற்கையாயுள்ள சில விதிகளை அனுசரிப்பதைப் பொறுத்திருக்கிறது. இச்சிறந்த புத்தகம் சுகவழியைக் காட்டி, நல்ல ஆரோக்கியத்தோடும் எப்பொழுதும் திடகாத்திரத்தோடும், நீண்ட ஆயுளோடு மிருக்கும்படி செய்து நல்ல அதிர்ஷ்டத்தைக் காட்டும். இப்புஸ்தகம் இனாமாகவும் தபாற் செலவில்லாமலும் அனுப்பப்படும்.

இப்புத்தகத்திற்கு இன்றைக்கே எழுதுங்கள்.

வைத்திய சாஸ்திரி
**மணிசங்கர் கோவிந்தஜி,**
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
22, பிராட்வே & 96. மவுண்ட்ரோட், மதராஸ்.
ஏஜெண்டு:—M. A. நெல்லையப்ப முதலியார்,
38 சின்னகடைத்தெருவு, திருச்சிறுப்பள்ளி.

## ஆனந்த ராமாயணம்.

இதுவரையில் தமிழில் வெளிவராதது.

இது வால்மீகி மகாரிஷியால் வடமொழியில் இயற்றப்பட்டுள்ளது. இதில் வால்மீகி ராமாயணத்தில் இல்லாத அநேக விஷயங்கள் அடங்கியுள்ளன; ஸ்ரீராம லக்ஷ்மணருடைய ஜனனமும், வளர்ப்பும், சீதாதேவியினுடைய ஜனனமும், அத்தேவிக்குப் பல பெயர் வந்ததற்குக் காரணமும் விளக்கி யிருப்பது வெகு இனிமையாயிருக்கும். இஃது ஆனந்த ராமாயணமென்னும் பெயருக்கேற்றவாறு படிப்போர் மனதிற்கு உற்சாகமும், ஆநந்தமும் உண்டாக்கும்; இதில் அநேக சித்திரப் படங்களடங்கியிருக்கின்றன. விலை ரூபாய் 5. தபாற் கூலி வேறு.

மானேஜர்:—
சக்ரவர்த்தினி ஆபீஸ்,
சென்னை.

# பட்டுப் பீதாம்பர கம்பெனி, காசி.

திருப்தி யில்லாதவைகள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படும்.

பட்டுப் பீதாம்பர காட்லாக்த இனாமாக அனுப்பப்படும்.

உருத்திராக்ஷங்கள் !! ஜபமாலைகள் !!

பரிசுத்தமானவை.

108 உள்ள மாலை 1-க்கு 6-அணா முதல் ரூபாய் 12-வரை. விலை அதிகப் படுவதுபோல் மணிகள் சிறிதாக இருக்கும். 6-முகக் கண்டிகள் 33-உள்ளது; கண்டி 1-க்கு ரூபாய் 1-முதல் 10-வரை. 5-முகக்கண்டி 32-உள்ளது; கண்டி 1-க்கு அணா 10-முதல் ரூபா 10 வரை. விலை அதிகப்படுவது போல் மணிகள் பெரிதாக இருக்கும்.

## வெண்பட்டு வேஷ்டிகள்.

சுத்தமான வெண்பட்டு வேஷ்டிகள் கோயம்புத்தூர் வேஷ்டிகள் மாதிரி சன்னகம்பி, ருத்திராக்ஷ கம்பி, ஜரிகை கம்பி போட்டவை.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | முழம் | 2 | அகலம் | 1-க்கு | ரூபாய் | 4-8-0-முதல் | | 7 | வரை |
| 6 | ,, | 2½ | , | 1-க்கு | ,, | 7 | ,, | 9 | ,, |
| 6 | ,, | 3 | ,, | 1-க்கு | ,, | 10 | ,, | 12 | ,, |
| 7 | ,, | 2½ | ,, | 1-க்கு | ,, | 8 | ,, | 12 | ,, |
| 7 | ,, | 3 | ,, | 1-க்கு | ,, | 10 | ,, | 14 | ,, |
| 8 | ,, | 3 | ,, | 1-க்கு | ,, | 12 | ,, | 18 | ,, |
| 9 | ,, | 3 | ,, | 1-க்கு | ,, | 14 | ,, | 20 | ,, |
| 10 | ,, | 3 | ,, | 1-க்கு | ,, | 15 | ,, | 22 | ,, |

## பனி ! பனி !! பனி !!!

பனிக்கு அடக்கமான சுத்தமான கம்பளி ரோமத்தால் செய்து உறுதியும், நைஸும், நேர்த்தியுமான கம்பளிப் போர்வைகள், 6-முழம் நீளம் 3-முழம் அகலம் சிகப்பு முதலிய சகலநிறத்திலும் தயாராக இருக்கின்றன. உருப்படி 1-க்கு ரூபாய் 5-8-0. ஷை சிறிது 1-க்கு ரூபாய் 4-8-0. மேக வர்ணப் போர்வைக்கு ரூபாய் 6 8 0. தபாற் செலவு பிரத்தியேகம்.

## காசி வயிரவர் கயிறு.

1-வது நெம்பர் 100-க்கு... 3 0 0 3-வது நெம்பர் 100-க்கு...2 0 (
2-வது நெம்பர் 100-க்கு... 2 8 0 4-வது நெம்பர் 100-க்கு...0 6 (

## குழந்தைகள் !

குழந்தைகள் விளையாடக் கூடிய பித்தளை வெங்கலத்தால் செய் செம்புக்குடம், கரண்டி முதல் 32 சாமான்கள் அடங்கிய அழகும் நேர்த்தி யும் நைஸும் பளபளப்புமுள்ள அழகிய பாத்திரங்கள் 32 உள்ள சி செட்டு 1-க்கு ரூபாய் 2 0 0. பெரிய செட்டு 1-க்கு ரூபாய் 4 0 0.

உடனே எழுதுங்கள். விலாசம்—மானேஜர்,
பட்டுப் பீதாம்பர கம்பெனி, தாராநகர் தெரு,

*MANAGER,*
*Silk Petamber Co., Daranagar Street, Benares City.*



OFFICE OF THE REGISTRAR
11 JUN 1913
MADRAS



# சக்ரவர்த்தினி.

" கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்,
மற்றீண்டு வாரா நெறி".

VOL VIII. | APRIL and MAY 1913. | Nos. 9-10.
தொகுதி அ. | ஏப்ரல் - மே 1913. | பகுதி. 9-10.


## செய்வன திருந்தச் செய்.

மக்கள் இன்பத்தின்நிலை யித்தன்மையதென் றுணராது துன்புற்று வருந்துவதற்குக் காரணம் தாம் இன்பமடைய வேண்டுமென்று கருதி, அது பெறுதற்பொருட்டு மேற்கொண்டு செய்யுந் தொழிலைச் செவ்வையாகச் செய்யாமையேயாம். தாம் இன்பமடையும் பொருட்டுச் செய்யுந் தொழிலைச் செவ்வையாகச் செய்யாமையாற்றான் நம்மவருட் பலர் துன்பத்திற்கே ஆளாகிச் சோர்வுற்று வாடுகின்றனர். இன்பம் இலௌகிக வின்பம், சுவர்க்க வின்பம், மோட்ச வின்பமென மூன்றுவகையதாம். இம் மூவகை யின்பத்துள் சிலர் இலௌகிக வின்பத்தையும், வேறு சிலர் சுவர்க்க வின்பத்தையும், மற்றுஞ் சிலர் மோட்ச வின்பத்தையும் அடையவிரும்பியிருத்தலின், அவர்கள் அதற்குரியசெயல்களை மேற்கொண் டொழுகுந் தன்மையரா யிருக்கின்றனர். இன்பத்தை விரும்பாதவ ருலகத்துள் ஒருவரு மின்மையின், ஒவ்வொருவர் செய்யுந் தொழிலும் இன்பத்தை நோக்கியேயாம். இன்பத்தை யடையுமாறு செய்யுந் தொழில்களுள் பல இடையூற்றினால் முற்றுப்பெறாதுபோதலின், அதனால் துன்பங்கள் கடலைபோன்று பெருகிவருகின்றன. நாம் செய்யுந் தொழில்களுக்கு இடையூறுயுள்ளவை யெவையென்று நன்காராய்ந்து, அவ்விடையூறு வராவகை

யாக மேற்கொண்ட தொழிலைச் செய்து முடிப்பவரே, இன்பத்தைத் தவறாதடைகின்றனர். மேற்கொண்டு செய்யுந் தொழில்களுக்கு இடையூறு வரும்போது மனம் சோர்வுற்றுப்போதலால், அத்தொழில் முற்றுப்பெறா தொழிகின்றது. மேற்கொண்ட தொழில் முற்றுப்பெறா தொழிந்தவிடத் துண்டாகும் மனக்கலக்கத்திற்கு அளவேயின்றாம்.

“ மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரா ரவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார். ”

என்று நீதிநெறி விளக்கங்கூறுமாறு உடம்பின் வருத்தத்தையும், பசியையும், நித்திரையையும், பிறர் செய்யும் தீமையையும், காலத்தினருமையையும், பிறர் செய்யும் அவமானத்தையுங் கருதாது மேற்கொண்ட தொழிலை முற்றுப் பெறச்செய்பவரன்றோ, தாங்கருதிய இன்பத்தினையெய்துதற் குரியவராவர்? நாம் மேற்கொண்ட இத்தொழிலால் உடம்பிற்கு மிகவும் கஷ்டமுண்டாகின்றது; குறிப்பிட்டகாலத்திற் சாப்பிடுவதொழிந்து, இத்தொழிலையேன் செய்யவேண்டும்; இத்தொழிலால் நித்திரைக்குப் பங்கமுண்டாகின்றது; நித்திரைகெட் டிதனையேன் செய்யவேண்டும்; நமக்குப் பகைவரா யிருப்பவர் சமயம்பார்த்துக் கெடுதி செய்கின்றனரே; இதனால் நாம்மேற்கொண்டுசெய்யுந் தொழில் முற்றுப்பெறுவ தெப்படி? இத்தொழில் காரணமாகக்காலம் வீணாகக்கழிகின்றதே? இதனையேன் செய்யவேண்டும்; “ இவனா இத்தொழிலைக் கடைபோகச் செய்து முடித்தற்குரியவன்; இவனுக் கென்னதெரியும்; இவனேன் இத்தொழிலை மேற்கொண் டல்லலுறுகின்றான் ” என்று பிறரவமதித்துப் பேசுகின்றனரே; நாமேன் இத்தொழில் காரணமாக அவமதிப்பைப் பெறவேண்டும் என்று சோம்பிக் கிடப்பவர் துன்பத்தினையே பெறுவரென்றுணர்ந்து மேற்கொண்ட தொழிலைச் செவ்வையாகச் செய்து முடிப்பவர் அல்லலுற்று வருந்துவது ஒருபோது மில்லையாம். “ உறுதி பயப்ப கடைபோகா வேனும், இறுவரை காறு முயல்க ” என்று பெரியார் கூறியிருத்தலைக் கவனித்து, நன்மையைத் தருஞ் செயல்கள் முடிவுபெறாதனவாகக் காணப்படினும், அவற்றை முடிவுபெறும் பரியந்தம் செய்து முடிப்பவர் தாம் இலௌ



கிக வின்பத்தையும், சுவர்க்க வின்பத்தையும், மோட்ச வின்பத்தையும் முறையே பெறுதற் குரியராவர்.

நன்மையைத் தரும் செயல்களைச் செய்யத் தொடங்கும்போது, அவை செய்தற்குரிய காலத்தையும், இடத்தையும், நன்காராய்ந் துணர்ந்து, அவற்றிற்குத் துணையாக விருப்பவரையும், மாறாக விருப்பவரையும் ஐயந்திரிபின்றி யறிந்து, அவை செய்வது பற்றித் தக்காரோடு செப்பமாக வாலோசித்துத் தெளிந்து செய்பவர் பொருள் புகழ் புண்ணிய முதலியவற்றை யடைந்து புனிதமான நிலையை யடைவ தொருதலையாம். மேற்கொண்டு செய்கின்ற வினையைத் திருத்தமாகச் செய்துவந்தவர் தாம் இதுகாறும் புகழுடம்போ டிருக்கின்றனர். “ கருதாமற் கருமங்கள் முடிக்க வேண்டாம்” என்று பெரியார் பணித்திருப்பதைக் கவனியாது, “ இது செய்யவேண்டும் ” என்று நினைத்தபோதே அதனைச் செய்ய முயன்றவர் பழிபாவங்களை யன்றிப் பொருள் புகழ் புண்ணியங்களைப் பெற்ற தெக்காலத்திலுமின்றாம். துரியோதனன் பின்வரும் பயனைக் கருதாது, துரௌபதியை ராஜசபையின்கண் துச்சாதனனைக்கொண்டழைப்பித்து, இவள் நமதுசகோதரர் மனைவி யென்பதைச் சற்று மெண்ணாம லவமதித்துப்பேசி, ஆடையைக் களையச் செய்தமையாலன்றோ தனது உடன்பிறந்தார், சுற்றத்தார் முதலாயினவரோடு மடிந்தான். செய்வினையைத் திருத்தமாகச்செய்யாதவர் தீமையுறுவது தவறுவதில்லை யென்பதை நன்கு கவனித்து நன்மைதருஞ் செயல்களைத் தடைகளுக் கஞ்சாமலூக்கத்துடன் செய்துவா அடிக்கடி யெண்ணி, நல்லோர் கூறியவாறு மேற்கொண்ட தொழில்களைப் பழிபாவங்களுக் கஞ்சிச் செய்துவருதல் ஒவ்வொருவர்க்கும் இன்றியமையாதகடமையாம்.

நம்மையாளும் ஆங்கிலேயக் கவர்ன்மெண்டார் எங்கும் புகழ்பெற்றுப்பெரும்பொருளுடையாராய் வாழ்வதற்குக் காரணம்யாது என்று சிறிது கவனித்து நோக்குவோமாயின், அஃது அவர்கள் செய்வினையைத்திருந்தச்செய்வதேயாம். செய்வினையைத் திருந்தச் செய்பவர் அதன்பயனாகிய வின்பத்தைத் தவறாதெய்துவ ரென்பதற்கு நம்மையாளும் ஆங்கிலேயக் கவர்ன்மெண்டாரே இப்போது தக்க சான்றாவர். இகலோக வின்பம், பரலோக வின்பம், மோட்ச வின்பமென்பனவற்றுள், இகலோகவின்பத்தைவிரும்புவார் பெரும்பான்மையரும், பரலோக வின்பத்தை விரும்புவார் சிறுபான்மைய

ரும், மோட்சவின்பத்தை விரும்புவார் மிகச்சிறுபான்மையருமாக விருத்தல் மிகு பிரசித்தமாம். இகலோக வின்பத்தைப் பெறுதற் கேதுவாய உழவு, வாணிகம், உத்தியோக முதலிய தொழில்களைப் பழிபாவங்களுக்குப் பயந்து செய்து, அதனை யனுபவிப்பவர் தாம் பரலோக வின்பத்தைப் பெறுதற் கேதுவாய ஈஸ்வரநாமசங்கீர்த்தனம்,ஜபம், தியான முதலியவற்றைச் செய்தற்குரியவராவர். பரலோக வின்பசாதனமாய ஈஸ்வரநாமசங்கீர்த்தன முதலியவற்றைச் செய்பவர் சிந்தையும் மொழியுஞ் செல்லா நிலைமையதாகிய மோட்ச வின்பத்தைப் பெறுதற் கேதுவாய சற்குருசேவை முதலியவற்றைச் செய்தற்குரியராவ ரென்பதற்குத் தடையென்ப தொன்றுமின்றாம்.

இன்பம் போலத்தோன்றித் துன்பத்தை யுண்டாக்கும் தொழிலை மறந்தும் செய்தல் கூடாது. அத்தகைய தொழிலைத் திருத்தமாகச் செய்யவேண்டுமென்று கருதுவதும் மடமையே யாகும்.

“ அழிவதூஉ மாவதூஉ மாகி வழிபயக்கு
மூதியமுஞ் சூழ்ந்து செயல். ”

(வினைசெய்புங்கா லப்பொழுது அதனா லழிவதனையும், அழிந்தாற்பின் னாவதனையும், ஆய்கின்று பிற்பொழுதுதரு மூதியத்தையுஞ் சீர்தூக்கி, உறுவதாயிற் செய்க)

என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவர் திருவாய்மலர்ந்தருளியிருப்பதனை நோக்குமிடத்துப் பழிபாவங்களைத் தராத செயல்களைத் திருத்தமாகச் செய்பவர்க்கு எல்லாநலனு முண்டாமென்ப தினிது விளங்குவதாம்.

“ சோம்பித் திரியேல் ” என்பதைக்கருதாது, “ சோம்ப ரென்பவர் தேம்பித் திரிவர் ” என்னும் பிரயோகத்திற் கிலக்கியமாகநின்று, மந்தபுத்தி, குதர்க்க முதலியவற்றிற் குறைவிடமாக விருப்பவர்,

“ ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும் ”

(தன்னை விலக்குதற் பொருட்டுத்தனக்கு மறுதலையாவதோருபாயத்தைச் சூழினும் தான் அவ்வுபாயமேயானும், பிறிதொன்றுனும் வழியாகவந்து அச்சூழ்ச்சியின் முற்பட்டு நிற்கும். அதனால் ஊழ்போல மிக்க வலியுடையன யாவையுள) என்று



நாயனார் கூறியுள்ளதைப் பிரமாணமாகக் காட்டி, எல்லாம் விதிப்படிமுடியும்; நானேன் யாதாவதொன்றைச் செய்யவேண்டுமென்று வாய்ஞானம் பேசி, வம்பானவற்றைச் செய்து, துன்புறுகின்றனர்.

“ ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர். ”

என்னுங் குறளின் விசேடவுரையில் பரிமேலழகர் “ ஊழ் ஒருகாலாக, இருகாலாக வல்லது விலக்க லாகாமையிற் பலகால் முயல்வார் பயனெய்துவர்” என்று கூறியிருப்பதைக் கவனிப்போர்க்கு ஊழ் (விதி) மேற்கொண்ட தொழிலை ஒருமுறை இருமுறையல்லது பலமுறை விலக்குந் தன்மையுடைய தன்றென்பது விளங்கும். இதனால் விதிப்படி முடியும் என்று செய்யத்தக்க தொழிலைச்செய்யா திருத்தல் மடமையினும் மடைமையாமென்பது நன்கு விளங்கும். ஊழை நோக்கியிராது தீமைதருஞ் செயலை மறந்துஞ் செய்வதொழிந்து, நன்மைதருந் தொழிலைத் திருத்தமாகச் செய்வோமாயின், நாம், இம்மைப் பயன், மறுமைப் பயன், மோட்சமென்னு மூன்றையுந் தவறுதடைதற் குரியவராவோம். இந்திரியங்கள் வாய்ப்பாக வுள்ளபோதே செய்யத்தக்க வினையைத் திருத்தமாகச் செய்யப் பரமேச னமக் கருள்புரிவா ராக.

திருக்குறள்.

“ செய்தக்க வல்ல செயக்கெடுஞ் செய்தக்க
செய்யாமை யானுங் கெடும். ”
“ எள்ளாத வெண்ணிச் செயல் வேண்டும். ”

திரிகடுகம்.

“ ஈதற் செய்க பொருளை யறநெறி
சேர்தற்குச் செய்க பெருநூலை—யாதும்
அருள்புரிந்து சொல்லுக சொல்லையிம் மூன்றும்
இருளுலகஞ் சேராத வாறு. ”

முதுமொழிக்காஞ்சி.

“ உறுவினை காய்வோ னுயர்வுவேண் டல்பொய்.”
(உறுவினை-பயன்தருந்தொழில்; காய்வோன்-வெறுப்பவன்).
என்றற் றொடக்கத்துப் பிரயோகங்களிங்கு நன்குணர்தற்பாலனவாம்.

## மகோபநிஷத்.

(232-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

31. ஓ முனியே! உள்ளும் புறம்பும் ரக்தமாம்ச மயமானதும், நாசமொன்றையே தர்மமாக வுடையதுமான இந்தத் தேகத்தில் ரமிக்கக்கூடிய குணமென்ன விருக்கின்றது?

32. மின்னலிலும், சரத்காலமேகத்திலும், கந்தர்வநகரத்திலும் அவை ஸ்திரமென்கிற நிச்சயம் எவனுக்கிருக்கின்றதோ அவன் சரீரத்தில் விசுவாசம் வைக்கட்டும்.

33. சிசுபர்வத்தில் குருவினிடத்தும் மாதாபிதாக்களிடத்தும் பயமாம். ஜனங்களினுலும் தன்னிலும் அதிக வயதுள்ள பாலர்களினுலும் சிசுபர்வமானது பயத்திற்கே இருப்பிடமாகும்.

34. (யௌவன பர்வத்திலோ) தன் சித்தத்தி லிருந்துகொண்டு பலவித மயக்கங்களைச் செய்யுங் காமமென்னும் பிசாசத்தால் பலாத்காரமாய் (தன்) வசமற்றவனுய்ச் செய்யப்பெற்றுத் தொந்தரவடைகின்றான்.

35. வயதால் நடுக்கமுற்றவனை வேலைக்காரர்கள், புத்திரர், ஸ்திரீகள், பந்துக்கள், ஸ்நேகிதர் எல்லாரும் பித்தடைந்த மனிதனைப்போலக் கண்டு நகைக்கின்றார்கள்.

36. வயோதிக தசையில் தைன்யமாகிய (சக்தியின்மையாகிய) தோஷம் நிறைந்ததும் சர்வ ஆபத்துக்களுக்கும் ஓரே சிநேகிதமானதும் ஹிருதயத்தில் எரிவை (துக்கத்தை)ப்பயப்பதுமான ஆசை மிகவும் நீண்டு விருத்தி யடையும்.

37. சம்சாரத்தில் சுகபாவனை யேதாவது சிறிதிருந்தாலும் அஃது ஆயுளை ஸ்தம்பமாக (ஆதாரமாக) வுடையது. அதையும் காலமானது அடைந்து துண்டித்து விடுகின்றது.

38-39½ திருணத்தையும், தூளியையும், தங்கத்தையும், மேருவையும், கடுகையும், மற்றெல்லாவற்றையும் தன்னி லடக்கிக் கொள்ள யத்னஞ்செய்யுங்காலமானது சர்வசம்ஹாரியாகும். அதனால் (காலத்தால்) மூவுலகும் பரவப்பட்டிருக்கும்.



39½-40½ நரம்பு எலும்புகளின் முடிச்சுக்களால் நிறைந்ததும் மாம்ச பதுமைபோன்றதும் யந்திரத்தா லாட்டப்பட்டதுமான ஸ்திரீகளின் அங்கமாகிய கூட்டினிடத்துச் சுகமேது? (இல்லை).

40½ - 41½ தோல், மாம்சம், ரத்தம், கண்ணீரென்னுமிவை ரம்யமாக இருக்கின்றனவாவென வெவ்வேருகப்பிரித்துப் பார். ஏன் வீணில் அவற்றினிடத்து மோகமடைகின்றாய்.

41½-43½ ஓ முனியே! ஸ்திரீகளின் ஸ்தனத்தி லிருக்கும் முத்துஹாரத்தின் உல்லாசத் தன்மையானது மேருமலைச் சிகரத்தின் தடத்தில் பிரகாசிக்கின்ற கங்காஜலத்தின் வேகத்திற்குச் சமானமாகப் பார்க்கப்படுகின்றது. அவ்வித ஸ்தரீ ஸ்தனங்களே காலக்கிரமத்தில் மயானங்களிலும், திக்குகளிலும் சிறிய அன்ன பிண்டம்போல நாய்களால் சாப்பிடப்படுகின்றன.

43½-45½ கேசத்தையும் மையையும் தரித்துப் பார்வைக்குப் பிரியமானவராயிருந்த போதிலும் தொடத்தகாதவர்களும், துஷ்ட கிருத்தியங்க ளுடையவர்களுமான ஸ்திரீகள் அக்னிஜ்வாலையானது திருணத்தை எரிப்பதுபோல மனிதரை எரிப்பார்கள்; வெகுதூரத்தி லிருந்தாலும் ஜ்வலிப்பவர்கள் (ஜ்வாலையைப்போல் எரிச்சலைக் கொடுப்பார்கள்); ரசத்தோடு கூடினவரானுலும் ரசமற்றவர்கள் (அஃதாவது சிருங்காராதி ரசத்தோடு கூடினவரானுலும் உண்மையில் சாரமற்றவர்).

மு. கோ. நாராயணசாமி ஐயர்,
பீ. ஏ., பீ. எல்.

## பெண்கல்வி.

(173-வது பக்கத்தின் தொடர்ச்சி)

### 7. பாலபோஷண மர்மங்களும் சாதாரண வைத்தியமும்.

இவை முக்கியமாய் நம் தேசத்துப் பெண்களுக்குத் தெரிந்திருப்பது அத்தியாவசியகமாம். பார்யா பர்த்தர்களாய்க் கிருகஸ்தாசிரம தர்மத்தில் பிரவர்த்தித்துள்ள நம் பெண்களுக்குச் சந்தானம் உண்டானுல், அக்குழந்தையைவளர்ப்பதில்என்ன ஆகாரங்கொடுக்க

வேண்டு மென்பதும், குழந்தைகளுக்குச் சாதாரணமாய் என்னென்ன வியாதிகள் வரக்கூடுமென்பதும், அவற்றிற்குப் பரிகாரம் எவ்வித மென்பதும், அவ்வியாதிகள்வராமலேதடுக்கத்தகுந்தசாதனங்கள் எவையென்பதும் தெரியவரும். மற்றும் குழந்தைகளின் சரீரசௌக்கியத்திற்கு இன்றியமையாதவையான நித்திரை, ஸ்நானம் உடுப்பு நல்ல ஆகாரம் முதலியவைகளும் நன்றாய்த் தெரிந்திருந்தால், அவர்கள் கூடுமானவரையில், மிகவும் அற்ப விஷயங்களுக்குக் கூட வைத்தியரைத்தேடிச் செல்லுதலைத் தடுக்கலாம். எங்ஙனம் வாழைப்பழத்தைக் குழந்தைகளுக்குக் கொடுத்தால் மாந்தம் வரும் என்று தெரிந்த தாயார் தன் குழந்தைக்கு வாழைப்பழத்தைக் கொடுக்க இஷ்டப்படமாட்டாளோ, அங்ஙனமே சிறு குழந்தைகளுக்குச் சாதாரணமாய் வரும் வியாதிகளின் காரணங்களைத் தெரிந்த தாயார் வியாதிக்குக் காரணமான ஏதாவொன்றைத் தான் செய்யாமலும் பிறரைச் செய்ய விடாமலும் இருக்கப் பிரயத்தனப்படுவாள். ஆதலால் பாலபோஷணமர்மங்களும் ரணவைத்தியமும் நம் பெண்களுக்குத் தெரிந்திருப்பது அத்தியாவசியக மென்று கூறப்பட்டது.

## 8. தேகதத்துவ சாஸ்திரம் (Physiology).

ஆரோக்கிய சாஸ்திரமும், பாலபோஷணமர்மங்களும், சாதாரண வைத்தியமும் பெண்களுக்குக்கற்பிக்கிறபோது தேகதத்துவ சாஸ்திரமும் கற்பிப்பது இன்றியமையாததாகவேமுடியும்; ஏனெனின். சரீரம் ஆரோக்கிய ஸ்திதியில் இருக்கிறபோதுதேகத்தின் பல அவயவங்கள் எங்ஙனம் வேலை செய்கின்றனவென்று தெரிந்தால்தான் அங்ஙனம் அவை வேலை செய்யாதபோது சரீரம் அசௌக்கிய மடைந்திருக்கிறதென்று ஊகிக்கச் சாத்தியமாகும். ஆதலால், சரீரம் ஆரோக்கிய ஸ்திதியிலிருக்கிறபோது ஒவ்வொரு அவயவமும் இங்ஙனம் வேலை செய்கிறதென்று கூறும் தேகதத்துவ சாஸ்திரத்தைப் பெண்களுக்குக் கற்பிப்பது அத்தியாவசியகமே.

## 9. சித்திரம் (Drawing & Painting).

“பாஷை, கணிதம், மத ஸம்பந்தமான விஷயங்கள், நல்லொழுக்கம், வைத்தியம் முதலியவைகளே பெண்களின் நல்லொழுக்கத்திற்கும், குடும்ப நிர்வாகத்திற்கும், குழந்தைகளின் போஷணைக்கும் அவசியமானவை. அவை தாம் பெண்களுக்குக் கற்பிக்கத்தக்கன. சித்திரம் ஏன் பெண்களுக்குக் கற்பிக்கவேண்டும்” என்று சிலர் சந்தேகப்படுவார்கள். ஆயினும் அவர்கள் ஒரு விஷயத்தைக் கவனிப்பார்களாயின், இச்சந்தேகம் நிவிர்த்தியாகும். நம் இந்தியாவில் கன்னியாகுமரி முதல் இமயமலை வரையிலுள்ள ஹிந்துக்கள் வீடுகளில் பிரதிதினமும் சாணத்தால் மெழுகினவுடன் பெண்கள் கோலம் போடுவது ஏனென் றுணர்வார்க்குக் கோலத்தைத் திருத்தமாய்ப்போடச்சித்திரம் சாதனமாகுமென்பது விளங்கும். சித்திரம் கற்பது கோலம் போடுவதற்கேயன்று. கோலமிட்டு வீட்டை யலங்கரிப்பதுபோலவே சித்திரத்தால் பல படங்களை யெழுதிச் சுவர்களையும் அலங்கரிக்கலாம். பாணாசுரன் மகளாகிய உஷையின் தோழியான சித்திரரேகை சித்திரமெழுதுவதில் அதிசாமர்த்தியமுள்ளவளென்று நாம் புராணங்களில் படிக்கவில்லையா? ஆதலால் முற்காலத்திலும் ஸ்திரீகளுக்குச் சித்திரம் கற்பிக்கப்பட்டிருக்கிறதென்பது பெறப்பட்டது.

## 10. தையல்.

சாதாரணமாய் நம்முடைய ஸ்திரீகள் தங்களுக்குவேண்டிய ரவிக்கை, குழந்தைகளுக்கு வேண்டிய சட்டைகள் முதலியவற்றைத் தைக்கத் தெரிந்திருப்பது ஆவசியகமென்பது யாவராலும் ஒப்புக்கொள்ளப் பட்டதேயாம். ஆதலால் தையல் வேலையைப் பெண்களுக்குக் கற்பிப்பது அவசியமாம்.

## பாக சாஸ்திரம்.

நம் தேசத்தில் பெரும்பான்மையோர் வீடுகளில் சமையல் செய்வது பெண்களேயாதலால், அவர்களுக்குச்சமையல் செய்வதில் திருத்தமாயும், நன்றாயும் இருக்கும்படியான முறை (பாகசாஸ்திரம்) கற்பிக்கப்படுவது அவசியமல்லவா?

## 12. சங்கீதம்.

தன் பர்த்தாவின் மனதிற்கும், குழந்தைகளுக்கும் சந்தோஷம் உண்டாக்குவதற்குப் பெண்களுக்குச் சங்கீதம் கற்பித்தல் அவசியமாம்.

(வரும்)

*N.* சுப்பிரமணிய அய்யர்,
ஹெட்மாஸ்டர்

# பூங்காவனம்.

(முன்தொடர்ச்சி.)

## மூன்றும் அதிகாரம்.

மந்தமாருதமாகிய பிள்ளைத் தென்றலானது மனோகரமாகப் பரிமளித்துக்கொண்டிருக்கு மொருநாள் பிற்பகலின்போது வண்ணமாபுரியின் தென்பாங்கர் வீதியில் கிழக்குப்பக்கமாக மேற்கு வாசலையுடையதும் தனக்கெனக் கூறப்பட்ட வளப்பமமைந்ததுமான ஒரு வீட்டில் விநோதமாய் அலங்கரிக்கப்பட்ட அறை மத்தியிலுள்ள சோபாவின் மீது, பரந்து விசாலித்த அதிக ஆலோசனையுடைய ஒரு கட்டழகி கபோலத்தில் மலர்க்கரத்தை வைத்தூன்றி ஒரு பக்கமாகச் சாய்ந்திருந்தாள். குறித்த அறை முழுவதும் சித்திர விற்பன சிரேஷ்டராகிய இராஜா ரவிவர்மா அவர்களால், அலங்காரமாயும் மனோகரமாயும் சிற்றின்பத்தை வெறுத்துப் பேரின்பத்தை நாடிய மகா ஞானியர்கள், பேரின்பத்தை வெறுத்துச் சிற்றின்பத்தை நாடும் அலங்கார புருஷர்கள், கடந்த ஞானிகளுங் கண்டவுடனே காமுற்று மயங்கிச்சோரும் அன்னநடை மின்னனையார், பதிவிரதா சிரோமணிகளின் உருவங்கள் தீட்டப்பட்ட பல சித்திரப் படங்கள் மாட்டி விடப்பட்டிருக்கின்றன. இவளிருந்த அறையின் கிழக்குப்பக்கச்சுவரில், வாசனையுள்ள பலவகைப் புஷ்பச்செடிகளும் பழவிருக்ஷங்களும் நிறைந்த தோட்டத்தில் அந்தரங்கமான புற்றரையின் மீது மனோகரமாக வீற்றிருக்கும் ஒரு பெண்மணியின் தோற்றம் அமைந்த சித்திரப்படமானது தொங்கவிடப்பட்டிருக்கின்றது. இந்தப்படம் குறித்த சோபாவிலிருப்பவளும் அருளானந்த முதலியாரின் புத்திரியும் நமது கதாநாயகியுமாகிய பூங்காவனத்தின் பிரதிமைப்படமேயாகும். பெண்களுக்கு அதிக அலங்காரத்தைக்கொடுக்கும் இருபது வயசுப் பிராயமுடையவளாய்ச் சாயங்கால உடைதரித்திருக்கும் இவளின் அங்க லக்ஷணமானது மனோகரமாகக் காணப்பட்டது. இவள் குறித்த சோபாவின்மீதமர்ந்திருக்கும் காட்சியானது அவயவங்களின் பூரண நிலைமையைக்காட்டுகின்றது. குறித்தபெண்மணியின் நிமிர்ந்திருக்கும் சிரோபாவனையும் அலங்காரமான கைகளும் கால்களும் அவள் உயர்ந்தசாதி இலக்கணமமைந்தவளென்பதைக் காட்டுகின்றன. அங்க



சருமமானது வில்லூதி (ஒருவகைச் சகலாத்து)ப் பட்டின் அழுத்தமாயிருந்தது. இவள் குறித்த சோபாவில் ஆலோசனையோடு அரைச்சாயலாக விருக்கும்போது, புத்தமிர்தம் நிரம்பப்பெற்றதும் பவளத்துண்டத்தைமுறித்தாலெப்படித்தோற்றுமோ அப்படிச்செந்நிறமமைந்ததுமான அதரங்கள் சற்றே நீக்கலாய் உள்ளே (ஏற்றத்தாழ்ச்சியுள்ள ஆனைத்தந்தத்தாலமைக்கப்பட்டது போன்ற) தந்த வரிசைகள் இவளது வாசனை பொருந்தியுள்ள சுவாசத்துக்குக் கதவங்களாகக் காணப்படுகின்றன. தேகசருமத்தை நிகர்த்தவில்லூதிரவிக்கை பொருந்தப்பெற்ற புஜங்கள் அதிசயப்படத்தக்க திரட்சியாயிருந்தன. இவளது விற்போன்ற புருவத்தின்மேல் நீலநிறம் பொருந்திய நரம்புகள் சாடையாய்த் தோற்றி வனப்புச் செய்தன. பேரழகியாகிய பூங்காவனமானவள் குறித்த அறையில் இருக்கும்பொழுது அருட்பிரகாசம் அவ்விடத்துக்கு வந்தான். அப்பொழுது,

பூங்காவனம்:—வருக! வருக!! அன்பரே வருக! ஏது இன்று முகவாட்டத்துடன் வந்திருக்கின்றீர்கள். தேடிவைத்த திரவியத்தைத் திருடர் கையிற் பறிகொடுத்துத் திகைப்பவர் போன்று மனச்சமாதான மற்றவராகக் காணப்படுகின்றீர்கள். அந்தோ? அடியாளங்கம் நடுநடுங்குகின்றது. இருதயம் படீரென வெடித்து விடும்போலிருக்கின்றது. யாது நிகழ்ந்தது? சீக்கிரம் சொல்லுங்கள்.

அருட்பிரகாசம்:—கண்டுமொழியாய்! காதற்பொக்கிஷமே! கிளிமொழிக்கோதாய்! கீற்றிளம்பிறை நுதலாய்! குயிற்பெடையாய்! கூழ்தலழகியே! கொண்டை விழியாய்! கேடிலாமதியுடையாய்! கைவளைநங்காய்! கொடியிடையாய்! கோதிலாக்குணத்தாய்! கௌரியை நிகர்த்த காந்தாமணியே! சொல்லவேண்டியதென்ன இருக்கின்றது? நான் கெட்டேன்! இனி ஈடேறுவதில்லை; அவ்வளவு தான்.

பூங்காவனம்:—அந்தோ! என்ன கெட்டேன் என்கின்றீர்கள்? இஃது உண்மையா? பரிகாசம் செய்யவேண்டாம்; அடியாள் தரிக்கமாட்டேன்.

அருட்பிரகாசம்:—கண்மணி! இதோபார் இக்கடிதத்தை. என்னுடைய தந்தையார் துறக்க நாடு செல்லவிருக்கின்றனராம்.

அவர் எங்களுடைய பிரிவால் எப்பாடுபடுகின்றனரோ அறியேன்! இதுகாறும் என்னையும் எனது சகோதரரையும் அருமையாக வளர்த்துக் கற்றோரவைக்களங்களில் முந்தியிருக்கும்படி செய்த தந்தையார் அந்தோ! யமனோடு வாதாடிக்கொண்டிருக்கின்றனர்! இவ்வயதில் அவரைப் பிரிய, யாது பழியைச் செய்தனமோ? காலஹரணமாகின்றது; பெண்ணே! பார்த்துவிட்டனையா கடிதத்தை. அங்ஙனமாயின் கொடுத்துவிடு. சீக்கிரம் நானும் எனது சகோதரனும் எங்கள் ஊருக்குச் செல்லுதல் வேண்டும். ஆஹா! நான் இருதலைக்கொள்ளிஎறும்புபோல உன்னைவிட்டுப்பிரிந்து சிலகாலம் இருத்தலால் உண்டாகிய துன்பம் ஒருபக்கமும், தந்தையார் எங்களைவிட்டுப்பிரிந்து விடப்போகின்றதனாலுண்டாகிய துக்கம் மற்றொருபக்கமுமாக வாட்டுகின்றன என்றான்.

பூங்காவனம்:—(நடுநடுங்கிக் கடிதத்தைக் கைநழுவவிட்டுமயங்கிச்சிறிது தேறி) அநாதரக்ஷகரே! என் அங்கம்பதறி ஆவிகுலையும்படியான இவ்வார்த்தையைக் கேட்டற்குப் பாவி என்ன பழியைச் செய்தேனோ? ஐயா! நீங்கள் சொல்லுவது உண்மையா? அடியாளைச் சோதித்தற்காக இவ்வகையான ஒரு கடிதம் எழுதிக்கொண்டு தந்து விளையாடுகின்றீர்களா? அடியாள் உம்மைவிட்டுப் பிரிந்திருக்கமாட்டேன் என்று கூறி விம்மிவிம்மி அழுது சோகபாஷ்பம் சொரிந்தனள். (அப்பொழுது நவரத்தினங்களில் விசேடம்பெற்ற வயிரத்தைக் கடைந்தெடுத்தால் எவ்வாறான பிரபையைக்கொடுக்குமோ அவ்வாறான வனப்பு வாய்ந்ததும், சரிகைக் கச்சால் மூடிமறைக்கப்பட்டு வாருண்டிருக்கி வீறுண்டதுமான ஸ்தனபாரம் உண்டான நெடுமூச்சினால் அசைந்தாடி அல்லோலகல்லோலப்படுவது சமுத்திரத்தின் மீதுண்டாகும் அலைகளின் மீது வெண்டிரை தோற்றினாற்போல விளங்கிப்பேரழகைச்செய்தது.)

அருட்பிரகாசம்:—பாவாய்! நான் எதற்காக உன்னோடு பரிகாசம் செய்தல்வேண்டும்? இக்கடிதம் உண்மையாகவே எங்கள் பெரிய தந்தையாராகிய வீரசிங்கமுதலியார் அனுப்பியது. தந்தையார் மரணப்படுக்கையிலிருப்பது நிச்சயமே. மாமாவும் இக்கடிதம் கண்டார். இச்சமயம் எனக்கு மன ஆறுதல் செய்யவேண்டிய நீ எனது பிரிவினால் கேவலம் கல்வியறிவில்லாத மூடப் பெண்களைப்போலப் புலம்பிக்கொண்டிருந்தால் நான் யாது செய்குவேன்? நீ



ஒன்றுக்கும் ஆலோசிக்க வேண்டாம்; இந்தச் சனனத்தில் எவ்வகையான இடையூறு பொருள் நஷ்டம் பகை முதலியவை வந்தாலும் உன்னையேயல்லாமல் வேறு பெண்மகளெவளையும் விவாகஞ்செய்யேன். நான் ஊருக்குச்சென்றாலும் எனது ஆன்மா இங்கேயேயிருக்கும். அதோபார், உனது தந்தையாரவர்கள் வருகின்றனர். அவருக்குச் சம்பவத்தைக்கூறி உத்தரவுபெற்றுவிட்டேன் என்று கூறுதலும், (வயோதிகராகிய அருளானந்த முதலியார் தமது புத்திரி இருக்கும் அறைக்குள் வர இருவரும் எழுந்து மரியாதை செய்யக் கிழவர் ஒரு சோபாவின் மீது சாய்ந்து புன்சிரிப்புடனே கூறுகின்றார்).

அருளானந்த முதலியார்:—தம்பி! எளியவர்களாகிய எங்களை நீர் மறந்து போதல்கூடாது. உங்களிருவருடைய காதலானது முதிர்ந்து மாறுபாடின்றி நிலையுற்றிருத்தற்காக நான் ஓர் ஏற்பாடு செய்கிறேன். அஃதாவது நீர் உமது ஊருக்குச்சென்று இரண்டு வருஷம் வரையில் எனது குமாரிக்குக்கடிதம் எழுதுதல்கூடாது. அவ்வண்ணமே இவளும் உமக்குக் கடிதம் எழுதாதபடி தடைசெய்கிறேன். இதன் காரணம் காலக்கிரமத்தில் உங்களிருவருக்கும் நன்கு விளங்கும். அன்றி இவ்வேற்பாட்டில் உமக்கு ஆட்சேபம் இருந்தால் நேரே கூறுமாறு கேட்கின்றேன் என்றார்.

அருட்பிரகாசம்:—மாமா! தாங்கள் செய்திருக்கும் ஒழுங்குக்கு அமைவாக நடக்கக்காத்திருக்கின்றேன். அவ்வண்ணமே தங்கள் குமாரியும் நடந்து கொள்வாளென நினைக்கின்றேன் என்று கூறுதலும், அருளானந்த முதலியார் வந்தனம் பெற்று அவ்விடம் விட்டு நீங்கிவிட்டார்.

அதன்பின் அருட்பிரகாசம் பூங்காவனத்தைத் தனது கைகளால் கட்டிப்பிடித்து மார்போடணைத்து அவளுடைய பிரகாசம் பொருந்திய வதனத்தில் முத்தமிட்டு அன்ன நடையாய்! என்னை நீ மறந்துவிடாதே; உனது தந்தையார் கூறிய இரண்டுவருடமும் இரண்டு நாழிகைபோல நீங்கிவிடும். "மூத்தோர்சொல் வார்த்தையமிர்தம்" என்கிறபடி நாம் நடத்தல்வேண்டும். குறித்தகாலவெல்லை முடிந்தபின் தவறாது கடிதம் எழுதுகின்றேன். நீயும் கடிதம் எழுதுதல் வேண்டும். தெரிந்ததா எனலும்,

பூங்காவனம்:—என் உள்ளத்துறையும் தேவா! தாங்கள் கூறியபடியே குறித்த இரண்டு வருடம் முடிந்தவுடன் அடியாளை மறந்துவிடாது இங்குவந்து மன்றல் முடிக்காது விடுவீர்களேல்

"பாய்பெருந்தீக் குதித்திடுவேன் மலையேறிக் கீழ்விழுவேன் பாறுங் கல்லை, ஆய்மருங்கிற் கட்டிமிக வாழமுள்ள தண்ணீரிலமிழ்வேனாவி, போய்விடுதற் கெத்தனையோ வழியுண்டு."

என்று பலவைராக்கிய வார்த்தைகளைக்கூறி மனக்கலக்கமுற்றுப் பின்சிறிதுதேறி, அருட்பிரகாசத்துக்கு உத்தரவு கொடுக்க, அவன் அவ்விடம் விட்டு நீங்கிக்கலாசாலையை யடைந்து அன்றிரவு தங்கி நற்சாட்சிப் பத்திரங்கள் முதலியயாவும் தலைமை ஆசிரியரிடம் ஏற்கெனவேபெற்றிருந்தானாதலின், மறுநாட்காலைச் சகோதரனுடனே சொந்த ஊருக்குச்சென்று தனது வீட்டையடைந்தான். அங்குப் பெரிய தந்தையாராகிய வீரசிங்கமுதலியார் தமது பின்னோனுடைய குமாரர்களைக்கண்டதும் அவர்களைத்தழுவிக் கொண்டு, இறந்த சகோதரனுக்காகத் துக்கங் கொண்டாடி அழுது புலம்பினார்.

இரண்டு மாதஞ் சென்றுவிட்டன. இவர்களின் பெரிய தந்தையார், சகோதரனாகிய மதியனை மதுரையிலுள்ள ஒரு கலாசாலைக்கு ஓர் ஆசிரியனாக நியமிப்பித்து அங்கு அனுப்பிய பின்னர் மற்றைச் சகோதரனாகிய அருட்பிரகாசத்தைச் சிங்கப்பூரின் ஒரு பகுதியாயுள்ள கோலாலம்பூர் என்னும் இடத்துக்குச் சூப்ரீம்கோர்ட் சிரேஷ்ட நீதிபதியாகச்செய்வித்து அங்கு அனுப்பிவிட்டார். அருட்பிரகாசம் அங்குச் செல்லுதற்குக் கப்பலேறும் பொழுது தனது காதலியின் பிதாவுக்குஇரகசியமாக ஒரு கடிதம் அனுப்பிவிட்டுச் சென்றுவிட்டான். இவன் சென்று ஒருவருஷமாய் விட்டது.

வண்ணமாபுரியில் ஒருநாட் சாயங்காலம் சுமார் ஐந்து மணிக்கு ஒருவயோதிகர் தம்முடையவீட்டில்சாய்வுநாற்காலியிலிருந்து கொண்டு அன்று வந்த புதின (அதிசய)ப் பத்திரிகையைப் பிரித்து வாசித்தவுடன் திடுக்கிட்டு ஆ! மகளே! என்று புலம்பி நாற்காலியிற் சாய்ந்தார்.

(இன்னும் வரும்)

மா. சிவராமலிங்கம் பிள்ளை,
"ஆறுமுகநாவலர்" வாசகசாலை.

# வல்லாள மகாராஜன் கதை.

(239-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

இது கேட்ட வல்லாளவள்ளல் வணங்கி, இந்திரிய மெல்லாம் ஒருங்கே அடங்கப் பெற்றுள்ள பெருமானே! என் தவப்பயனினாலேயோ தாங்களிதனைக் கவனித்துக் கேட்டீர். அஃது அடியேனால் காட்டப்பட்டதேயாம். "வாழையடி வாழை" என்றபடி, அடியேன் குலம் என்னோடு முடியாதிருக்க எனக்கு ஒரு மகவு இருத்தல் ஆவசியகம். அப்பேறின்மையால் அம்மகவு வேண்டி ஒரு விரதங்கொண்டேன். அவ்விரதம் இப்பதி நாடிவந்து எவர் எது கேட்பினும் அதனை இல்லையென்னாது அவர்களுக்குக் கொடுக்கப்படு மென்பதுவேயாம். இதனை யாவரும் அறிய முரசறைவித்து அதன் அறிகுறியாக இத் துவசம் தன்னிகரிலாத் தலைவன் தாள்களைப் போற்றி நாட்டியுளன். இது சங்கற்பித்த நாள் தொடங்கிச் சங்கற்பித்தவாறே இதுகாறும் தவறாது நடந்தேறி வருகிறது. இதனை ஒரு விரதமாகக் கொண்டு நடத்திவர முயல்கின்றேன். இனிச் சென்னிமேல் நீறுடைய பெருமான் செயல் யாதோ? யானறியேன். மேல் முனிபுங்கவர் தடத்தோள் வேந்தனை நோக்கிச் சொல்லுகின்றார்

நன்றேநின்கொள்கை. உலகுய்யவும், எம்மனோர் தவமோங்கவும், அருவுருவற்ற அய்யன் ஆன்மகோடிக ளுய்ய அருவுருவுபெற்று ஆங்காங்கெழுந்தருளி யிருக்கும் ஆலயப்பணிகள் செழிக்கவும் இவ்விதம் பற்பல நன்மைக்கே நீ வழிதேடுகிறாய். நீயொரு மகப்பேறு பெற வேண்டுமென்று மாத்திரம் முயன்று இத்தவம் புரிகின்றாய் அல்லை என்று எனக்குத் தோன்றுகின்றது. ஆதலால் சீரிய நின் கருத்துத் தடையின்றி முற்றுப்பெறும். நீ ஐயமுறேல். பூதலங்காக்கும் ஒரு புதல்வனை இறைவன் நினக்குத்தருவன். ஆயினும் ஒன்று கேட்கவேண்டும் "தெள்ளுற்ற நல்லறத்தின் சிரத்திலே யெந்நாளுந் தீமை வாழும்" என்பது போல இப்புண்ணியச் செயலிலும் தடை வருவதுகூடும். அவ்வாறுவரின் அதற்கு வருந்தி எடுத்தகாரியம் கைவிடாது முன்னவனை முன்னிட்டு முறை பிறழாது சொன்மொழி தவறாது கொண்டகருத்து முற்றுவிக்கவே முயலவேண்டும். நற்குல வேந்தனே! இதில் ஊக்கமா

யிருந்து சகலமும் நிறைவேற்ற முபல்வாயாக. அறிவினிற் சிறந்த நினக்கு அதிகம் யான் உரைக்க வேண்டுவதின்று.

நின்னருமைமனைவியரைக் கண்டு ஆசிகூற வேண்டுமென எண்ணுகின்றேன். அந்தப்புரமடைந்து அவர்களைக் கண்டபின்னர்க் கடிதினிற் சென்று கண்ணுதற் பெருமானைத்தரிசிக்கக் கருதுகின்றேன். வெள்ளிபங்கிரி நீங்கிப்பலநாள் ஆகிவிட்டன; போகவிடை தருவாயோவென முனிபுங்கவர் மொழிய, தரணிபதி வணங்கிச் சொல்வான். தேவரீர் அந்தப்புரமடைந்து அரசியரைக் காணக் கருதியதன் காரணம் எமது தவமும் பயன்தரத் தீர்மானித்தது போலும்.

பிறகு, "கருநிற மிடறுடைக் கடவுளைவணங்கக் கடிதினிற் செல்லுங் கால்களோ விவை" என அவரது தூய பாதங்களைப் பற்றி வணங்கிக் கண்களில் ஒற்றிக்கொண்டு "கோதிலா முனிவரரேறே! தாங்கள் கொண்ட எண்ணம் நிறைவேறாது போகுமோ? போகாதென்பதுவே உலகின் துணிபு" எனக்கூறி அவரை நோக்கி நிற்க, நாரதரும் தம்மாசனம் நீத்து விடை கொண்டு வழி நோக்கினர். அரசனும் பின்பற்றினன். நாரதர் அதுகண்டு அரசனை வாழ்த்திப் பின் தொடராது நிற்கும்படி விடை பகர்ந்து சென்றனர். அரசனும் விடைபெற்றுத் திரும்பித் தனது இருப்பிடத்தை யடைந்தனன்.

நாரதர் அந்தப்புரம்போய் அங்குள்ள வாயில் காப்போரைப் பார்த்து வாயிற் காவலரே! யான் வயதால் முதிர்ந்த வொரு பக்தன்; என்பேர் நாரதன். யான் இவண் வந்திருக்கின்றனனென்று நுமது அரசியர்க்கு அறிவிக்கவேண்டும் என்று கூறினர். வாயில் காவலாளர் அவரது அடிவணங்கி உள்ளேபோய்த்தலைவியரைத் தொழுது எம்மம்மையரே! பெருமான் அடியவர், வயதாலும் பெரியவர், பிரமதேஜசுடையவர், ஒருவர் தனியாக நம்வாயிலை அடைந்து தமதுவரவை சமூகத்திற்குத்தெரிவிக்கக்கட்டளையிட்டமையால் அடியோம் இவண் அது தெரிவிக்கவந்தோம். அவர் பேர் நாரதராம். நாங்கள் அவர்கருத்தைத் தெரிவிக்கிறதாக அவருக்குச் சொல்லியிங்கு அடைந்து சமூகத்தில் முறையிட்டனம்; உத்தரவுக் கெதிர்நோக்குகின்றோம் என வணங்கிநின்றனர். இது கேட்ட



யரசியரும் பரமனடியவராயின் நம்முன்னழைக்க யாதுதடையுளது! இதனை யறியீரோ நீவிர்! உடனே சென்று அம்முனிபுங்கவரை யிங்கு அழைத்துவருவீர், தாமதமின்றிப்போவீரெனவிடை தந்தனர். விடைகொண்டு வணங்கி மீண்டு நாரதரை யடைந்து, முனிசிரேட்டரே! தங்களுடைய வரவை அதிவிநயமாய் எதிர் நோக்குகின்றனர் எம்மரசியர் என்றனர் காவலாளர். பாங்கியருட் சிலர் அரசியரால் ஏவப்பட்டு முனிவரிடம் வந்து அரசியரின் விருப்பத்தைத் தெரிவித்து வழிகாட்டி இட்டுக்கொண்டு போயினர். நாரதர் பாங்கியர் முன்னும் தாம் பின்னுமாக நடந்து கற்பினர் வாழும் உட்புறம் அடைந்தனர். நாரதரைக்கண்ட அரசியரும் தத்தம் ஆசனம்நீத்து மநநசீலர் முன்சென்று முகமன்கூறி அழைத்துவந்து ஆசனத்திருத்தி முறையாக உபசரித்து விநயமொடு நின்றனர். பூபாலன் துணைவிகாள்! நுமக்கு மங்களம் உண்டாகுக என அவர் ஆசி பகர்ந்தனர். அரசியர் வணங்கிப் பெருமானடி அகலா அகமுடைய அருந்தவமுனி சிரேஷ்டரே! பெருந்தவத்தினர்க்கன்றி எம்மனோர்க்கும் தரிசனமளித்த தங்கள் கருணையால் யாங்கள் உய்ந்தனம்; குறைதீர்ந்தனம்.

கோகிலாம்பாள் அம்மாள்,
புரைசை, சென்னை.

## சூடாலை

(247-வது பக்கத்தின் தொடர்ச்சி)

### இரண்டாவ தங்கம்.

### மூன்றாங் காட்சி.

இடம்:—மாளவதேசத்து அந்தப்புரம்.

பாத்திரங்கள்:—சூடாலை, பதுமாவதி, சீதரன், கோவிலூர் மடாலயம் - ஸ்ரீ சுப்பய்ய சுவாமிகள், சிகித்துவசன்.

காலம்:—முற்பகல்.

(அந்தப்புரத்தில் சூடாலையும் பதுமாவதியும் தம்முள் யோக விஷயமாகப் பேசிக்கொள்ளுகின்றனர்).

சூடாலை:—(சாய்வு நாற்காலியின் மீது சோர்வாக விருந்து) பதுமாவதி! நம்முடைய மகாராஜா நாட்டைவிட்டுக் காட்டிற்குச் சென்று கடுந்தவம்புரிய விரும்பி யிருக்கின்றாரென்று அவருடைய வார்த்தையாலும் செய்கையாலும் தெரிகின்றது. அவர் நம்மைவிட்டுச் சீக்கிரமாகப் பிரிந்துபோவாரென்றெனக்குத் தோன்றுகின்றது. அவரைத் தடுப்பது நமக்கியலாதென்று யான் கருதுகின்றேன். மகாராஜா நாட்டைவிட்டுச் சென்றால் நாமெவ்வாறுயிர்வாழ்ந்திருப்பதற் குரியவராவோம். அதனையெண்ண எண்ண என்மனம் நடுக்கமுறுகின்றது. ஸ்ரீ கரபாத்திர-சிவப்பிரகாச சுவாமிகள் எனக்குபதேசித்த மௌனமுத்திரையிப்போது பயன்படா தொழிகின்றது. மனத்தின் வஞ்சகச் செய்கையெனக் கிப்போது நன்றாக விளங்குகின்றது. இனி - கோவிலூர் - மடாலயம் - ஸ்ரீ சுப்பய்ய சுவாமிகள் காசியாத்திரைபோம்போது ஸ்ரீ கரபாத்திர-சிவப்பிரகாச சுவாமிகளின் சம்மதத்தின்மீதெனக்குபதேசித்த யோகபாவனையை யப்பியசிக்கலாமென்று சிந்திக்கின்றேன். மனமென்னுமா டடங்காதவிடத்து நாம் செய்த வேதாந்த விசாரணை பயன்படுவதாமோ? நீயும் என்னைப்போன்று சோர்வாயிருப்பதற்குக் காரணமென்னை?

பதுமாவதி:—வளைப்பிற் குறைவிடமான மங்கையர்க் கரசியே! மகாராஜா நாட்டைவிட்டுக் காட்டிற்குச் சென்றுவிடுவாரென்னுங் கலக்கத்தால் அடியாளும் கலக்கமுற் றிருக்கின்றேன். இக்கலக்கத்தால் " தேகால யத்திற் சிதாகாச தேவதையை, யாகாய சாந்தி மலராலே-யேகாந்த, மந்திரத்தாற் பூசை " செய்வதுவாய்க்கா தொழிகின்றது. யாது பிரயாசப்பட்டு மனத்தை நிறுத்தினாலும், அது மருந்திற் கடங்காது வளரும் பிணிபோன்றும் நெய்விட்டெரியும் நெருப்புப்போன்றும், வசப்படாது வளர்ந்து வருகின்றது. அதனை யோகபாவனையாலன்றி வேறெதனாலும் அடக்குதல் முடியாதென் றிப்போது நினைக்கின்றேன். நான் ஜன்மாந்தரத்தில் திரியம்பகனைச் செவ்வையாகத் தியானியாத தீன்தால் இவ்வாறு தீங்குறலானேன். சாஸ்திரங்களின் முடிவைத் தக்கார் வாயிலாக வுணர்ந்துள்ள தங்களுக்கு யான் யாது சொல்லப்போகின்றேன்..

" ஏதேது வந்தாலு மேதேது செய்தாலும்
ஏதேதி லின்புற் றிருந்தாலும்—ஏதேதும்



தானாகா வண்ணந் தனியே தெரிந்திருக்கும்
ஞானாகா ரந்தானே நாம். "

என்னும் அமுதவாக்கினைச் சிந்தித்து,யோகபாவனையைச்செய்தால் நாம் எல்லாக் கவலையுமற் றின்புற்றிருப்பதாகிய சொல்லாருமுத்திச் சுகத்தைப்பெற்றுத் துயரின்றி யிருக்கலாமென்று நினைக்கின்றேன். தாங்கள் அடிக்கடி சொல்லுவதனையே இப்போது தங்களுக்குக் கூறி ஞாபகப்படுத்தினேன்; பிழையிருந்தால் மன்னித்தருளல்வேண்டும்.

சூடா:—(ஒருவாறு தெளிந்து) அடியென் கட்டிக்கரும்பே! உன்னுடைய புத்திசாலித் தனம் மிகு அழகாக விருக்கின்றது! தளர்வுவந்தபோது தக்கவாறு கூறுந்தன்மை வாய்ந்த வுன்னைத் தோழியாகவுடைய எனக் கினியென்னகுறை யிருக்கப்போகின்றது? நான் ஸ்ரீ சுப்பய்ய சுவாமிகளிடத்து யோகபாவனையைக் கேட்டு, கேட்டவாறு சிலகால மொழுகியது உனக்குத் தெரியாததன்றே? அதனை யிப்போது பூரணமாக வப்பியசித்து அணிமாதிசித்திபெற்று, அரசனை வசப்படுத்தலாமென் றெண்ணுகின்றேன்.

பது:—அவ்வாறு செய்வது தகுதியுடையதாம். அதுபற்றி யடியாள் யாது செய்யவேண்டுமோ அதனைக் கட்டளையிட்டருளல்வேண்டும்.

சூடா:—முன்னமே யோகபாவனையை நான் செய்துவந்திருந்தலால், இப்போது அதனைக் கவனித்துச் செய்தால் அணிமாதிசித்தி சீக்கிரமாக வுண்டாதல் கூடுமென்று நினைக்கின்றனன். நீயிப்போது யான்செய்யும் யோகபாவனைக்கு அந்தப்புரத்திலுள்ளவர் வாயிலாகத் தடையுண்டாகாதவாறு செய்யவேண்டும். அந்தப்புரத்திலுள்ளவர்கள் யான் உலாவுதல் செய்யாதிருப்பதுபற்றி, உன்னைவினவினாலும், என்னைக் காணவேண்டுமென்று விரும்பினாலும், அதற்குத் தக்கவாறுகூறி, என்னைப்பற்றியவர்கள் கவனியாவாறு செய்வாயென்று நம்புகின்றேன்.

பது:—உத்தமகுணமார் பத்மினி மாதே! தாங்களிடும் கட்டளைப்படி நடக்கச் சித்தமாயிருக்கிறேன். அடியாளுக் கிப்போதொரு விருப்பமுண்டா யிருக்கின்றது; உத்தரவானால் சொல்லுகிறேன்.

சூடா:—தடையில்லாது சொல்லலாம்.

பது:—மகாராணியாகிய தங்கட்குத் தோழியாகவும் சிஷ்யை யாகவுமுள்ள எனக்கு யோகபாவனையைப்பற்றியுபதேசித்து, என்னைக் கடைத்தேறச்செய்ய வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

சூடா:—பதுமாவதி! உன்னுடைய விருப்பம் நன்றாகவிருக்கின்றது. ஜன்மாந்தரத்தில் ஈசுவரோபாசனையைப் பூரணமாகச் செய்து, நன்றாக ஒருமுகப்பட்ட மனமுடையவர்கட்கு, "நினைவரிய ஒரு பிரமம் நீயே" என்னும் சற்குருமூர்த்தியி னுபதேசம், உடனே பயன்படுவதாகும். அங்ஙனஞ் செய்யாதவர்கட்கு, அம்மனது ஐயந்திரிபோடு கூடியிருக்கும். ஐயந்திரிபுடையவர் மனம் ஆடிக் காற்றிலகப்பட்ட கறங்குபோலச் சுழலுமியல்புடையதாம். அவர் அத்தியாவசியகம் யோகபாவனையை மேற்கொண்டொழுகி, அதனாற்றலைக் கெடுக்க முயலுதல்வேண்டும். மனத்தின் சுழற்சி மாறியவிடத்துத் தான் அவ்வுபதேசத்தினர்த்தம் நன்கு விளங்கும். மனத்தினாற்றலை ஸ்ரீ கரபாத்திர - சிவப்பிரகாச சுவாமிகளின் மௌனமுத்திரையுபதேசத்தால் கெடுக்க எனக்கு ஆற்றலில்லாமையால், யான் யோகபாவனையை முற்றுப்பெறச் செய்ய முயலுகின்றேன். மேலும், அம்மது அரசனையாணியத்தினின்றுந் திருப்புவதற்குத் தக்கசாதனமாமென்றுந் தீர்மானித்திருத்தலின், அதனை யான் செய்லதவசியமாகும். காமாதிதோஷங் கனவிலுமின்றிக் கன்னிகையாய்க் காலங்கழிக்குமுனக்குப் பெரும்பிரயாசத்தோடு செய்யும் யோகபாவனை யெற்றிற்கு? என்மனநிலையை யறிந்து தான் ஸ்ரீ கரபாத்திர-சிவப்பிரகாச சுவாமிகள் ஸ்ரீசுப்பய்ய சுவாமிகள் வாயிலாக யோகோபதேசம் எனக்குச் செய்வித்தார்.

"மூலக்குகையிருந்து மூச்சடக்கிப் பேச்சடக்கிச்
சாலக் கனயோகஞ் சாதிப்பார்—மேலுணர்வு
கண்டிருக்கச் சாதனையேன் காயத்தை யேவலித்திங்
குண்டிருக்க வெண்ணுகிறோ ரா."
என்னும் அமுதவாக்கு உனக்கு ஞாபகத்தி லிருக்குமே!

பது:—(முகம்வாடி) நற்றலந்திரண்ட பொறிப்புடைப் பாவாய்! தங்களையே தெய்வமாகக் கருதியிருந்த எனக்குத் தாங்களிப்போது நட்டாற்றில் கட்டுமரத்தை யழித்த கரையான்போலானீர். என்னுடையகாலம் நலமுடையதாகக் கழியவேண்டுமென்று கருதியே தங்களுக்குத்தோழியாக வமர்ந்தேன். நானொரு சிற்றரசனது செல்வப் புதல்வியென்பது தங்கட்குத் தெரியாததன்றே! குடும்பவாழ்வைக் கோதென வெறுப்பதற்கேது வேதாந்த விசாரமேயாயினும், அது மன மொருமுகப்பட்டாலன்றோ நன்றாக விளங்கும். மன மொருமுகப்படுதற் கேதுவாய யோகபாவனையைத் தமியேனுக்குபதேசிக்காவிட்டால் என்கதி அதோ கதியேயாம். என்மனம் சிலகாலமாக அம்மதாவது மகாராஜா காட்டிற்குச் சென்று கடுந்தவம்புரிய விரும்பி யிருக்கின்றாரென்னு மெண்ணமுண்டான நாள்முதலாக,ஒருமுகப்படாது பல தலைப்பட்டு விரிந்தோடுகின்றது; அடக்க அடங்காதிருக்கின்றது. தாங்கள் தோழியென்று பாராது, வெகுகாலமாகத் தொண்டுசெய்துவந்த சிஷ்யையென்று மதித்து, என்மீது கருணைபுரிய வேண்டும். (என்றுகூறி, கண்ணீர்விட் டொருபுறமாகக் காற் பெருவிரலை நோக்கி நின்றனள்).



சூடா:—(ஆ! ஆ! அதிர்ஷ்டத்தின் வசமாக நமக்கு நல்ல தோழி கிடைத்தாள். இப்போது ஸ்ரீ சுப்பய்ய சுவாமிகள் வந்திருந்தால் இவளுடைய எண்ணமும் நம்முடைய எண்ணமும்முற்றுப் பெறுவதாமே! அவர் காசிக்குச் செல்லும்போது, இவ்வைகாசி மாதத்தி லிங்குவருவதாகக் கூறினாரே! வருவாரா? என்று சிந்தித்து) பதுமாவதி! அஞ்சவேண்டாம். வாஸ்தவத்தில் அஞ்சுவதும், அஞ்சவருவதுமில்லை. ஆயினும், அவை மோகத்தால் தோன்றுகின்றன. நீ விரும்பியது தவறாதுகிடைக்கும்; பொறுமையாகவிரு.

பது:—அம்மணி! சீதரன் ஏதோ சமாச்சாரம் சொல்ல வந்திருக்கின்றான். உள்ளே விடலாமா?

சூடா:—வரச்சொல்.

சீதரன்:—(கைகுவித்துத் தலைகுனிந்துநின்று), ஜகதீசுவரி! முன்னே - ஸ்ரீகரபாத்திர - சிவப்பிரகாசசுவாமிகளோடு சில காலமிருந்து, காசிக்குச் சென்ற சாமியார் தலைவாசலில் தங்களைக்காண வந்திருக்கின்றார்.

சூடா:—பதுமாவதி! ஸ்ரீ சுப்பய்யசுவாமிகள் நம்மீதுகருணை கொண்டுவந்திருக்கின்றார். அவரைநீயும் எதிர்சென்றழைத்துவா? அடே சேவகா! துரிதமாகச் சென்று, அவரிங்கு வருமாறுசெய்.

சீத:—உத்தரவின்படியே செய்கின்றேன்.

## பிராணி சாஸ்திரம்.

(175-வது பக்கத்தின் தொடர்ச்சி).

சாகபக்ஷிணி C. தடித்ததோலுள்ள ஜெந்துக்கள்.

இவ்வினத்தில் பன்றி, காட்டுப்பன்றி, கழலைப்பன்றி, தேபர் (Tapir), நீர்யானை (Hippopotamus), காண்டாமிருகம் (Rhinoceros), யானை முதலிய மிருகங்கள் சேர்ந்தன இவை ஒன்றற்கொன்று குணத்திலும் சரீர அமைப்பிலும் வித்தியாசப்பட்டாலும் ஒரே இனமாகத்தான் கருதப்படுகின்றன; ஏனெனின், இவற்றிற்குப் பொதுவாய்த் தடித்ததோல் உண்டு. இவ்வினத்திலும் இரண்டு சிற்றினங்கள் உண்டு. அவையாவன:—

(1) ஆடுமாடு முதலியவற்றைப்போல வெட்டுக்குளம்புகளையுடையன.

(2) ஐந்து அல்லது நான்கு விரல்களை யுடையன.

இவற்றுள் முதலாவதில் பன்றி, காட்டுப்பன்றி, கழலைப்பன்றி முதலியவையும், இரண்டாவதில் தேபர், நீர்யானை, காண்டாமிருகம், யானை முதலியவையு மடங்கும்.

### பன்றி யினம்.

பன்றிகள் சாதாரணமாய் நாடுகளிலும் காடுகளிலும் வசிக்கும். நாட்டில் வசிக்கும் பன்றிக்கு நாட்டுப்பன்றி யல்லது சாதாரணப்பன்றி யென்றும், காட்டில்வசிப்பதற்குக்காட்டுப்பன்றியென்றும் பெயராம். காட்டில் வசிப்பது மனிதரால் வளர்க்கப்படாமல் சுயேச்சையாய் வளருவதால் அதிக மூர்க்ககுணமுள்ளதாயும் பிறருக்குக்கெடுதி விளைவிக்கக்கூடியதாயுமிருக்கிறது. சாதாரணப்பன்றியைக்காட்டிலும் இஃது உருவத்தில்பருத்தும், கொழுத்தும்வலிவுள்ளதாயுமிருக்கும்; இதற்குக் கோரப்பற்கள் உண்டு. இப்பற்களாலிவை தம்மைக் காப்பாற்றிக்கொள்ளும். இவை பயிர்களையழித்துச் சேதப்படுத்துவதால் வேட்டைக்காரர்கள் குதிரைகளின் மீதேறி யிவற்றை வேட்டையாடுவார்கள். சிலவேளைகளில் காட்டுப்பன்றிகள் தமது கோரப்பற்களால் குதிரைகளையும் வேட்டைகளையும் கிழித்தெறியும். இவற்றிற்கு நமக்கிருப்பதுபோலவே கடைவாய்ப்பற்கள் யிருப்பதால் வேர் கிழங்கு முதலியவற்றை மென்றுதின்னும். குதிரையைப்போலவே இருவாயிலும்(மேல்வா



யிலும் கீழ்வாயிலும்) பற்கள் இருப்பதனாலும், ஒரே இரைப்பை யிருப்பதனாலும் பன்றிகள் அசைபோடுவதில்லை. இவற்றின்மேல் உதட்டின் நுனி அகன்றுவட்டமாயிருக்கின்றது. இஃது இதற்குப் பூமியிலிருந்து கிழங்குகள் வேர்கள் தோண்டுவதற்கு மண்வெட்டியைப்போல உதவுகின்றது. இக்கடினமான ஆயுதத்தினால் தான் பன்றிகள் அதிசீக்கிரத்தில் பூமியைத் தோண்டி விடுகின்றன. இவற்றிற்குக் கண்கள் மிகச்சிறியவை; சாதாரணமாய் நாட்டுப்பன்றிகளுக்குப் பார்வைக்குறைவு மட்டம்; காட்டுப் பன்றிகளுக்கோ கூர்மையான பார்வையுண்டு. இவற்றின் தேகம் தடித்துக் கொழுத்திருக்கும்; கழுத்து வெகு குட்டையாயும் தடித்து மிருப்பதால் கழுத்தேயில்லை யென்று ஊகிக்க நேரிடும். இவை பின்னால் வரும் சத்துருவைப் பார்க்க வேண்டுமானால் உடலைத் திருப்பாமல் கழுத்தைமாத்திரம் திருப்பிப்பார்த்தல் முடியாது. ஆதலால் பின்னால்வரும் சத்துருக்களை அறிய இவற்றின் காதுகள் சப்தத்தைக் கிரகிப்பதில் அதிக கூர்மையாயும் பின்பக்கம் வளைந்து மிருக்கின்றன.

கழலைப்பன்றி யென்பது ஆப்பிரிக்காவிலுள்ள ஒருவகை ஜாதிப்பன்றி. இதற்கும் கோரப்பற்களுண்டு. இந்த ஜாதிப்பன்றிகளுக்குக் கன்னத்திலிருந்து சதை தொங்கும். மற்ற ஆகாரம் தேக அமைப்பு முதலியவை சாதாரண பன்றியைப் போலவே யிருக்கின்றன,

(வரும்)

N. சுப்பிரமணிய அய்யர்,
Head Master,
திருவேட்டேசுவரன் பேட்டை.

## இயற்கைப் பாடங்கள்.

### யானை

தேவையானவை:—யானையின் படம் ஒன்று. தோல்துண்டு ஒன்று, தந்தம் ஒன்று. தந்தத்தால் செய்த பொத்தான், டப்பா இவை. கூடுமானால் யானை யொன்றைக் காண்பிக்க.

இந்தப்படத்தைப் பாருங்கள். இதில் தெரிவதுதான் யானை. இது தரையில்வாழும் மிருகங்களில் மிகவும் பெரியதாகும். இது

சாதாரணமாய் 10 அல்லது 10½ அடி உயரம் வளரும். மூன்றுடன் கனமிருக்கும். யானையானது இந்தியா, பர்மா, சயாம், ஆப்ரிக்கா இவ்விடங்களிலுள்ள காடுகளில் வசிக்கின்றது. சில வருஷங்களுக்கு முன் யானையானது இந்தியாவில் எங்கும் காணப்பட்டுவந்தது. இப்பொழுது அது விந்தியமலை, இமயமலைச்சாரல், மைசூர், மலையாளம், ஆசாம் இவ்விடங்களிலுள்ள குன்றுகளிலும் காடுகளிலும் தான் இருக்கின்றது. அங்கே காடுகளில் 20, 30 யானைகள் சேர்ந்து கூட்டம் கூட்டமாய் வசிக்கின்றன. சில கூட்டத்தில் 100 யானைகளுமிருக்கும். கூட்டமொவ்வொன்றிற்கும், முதிர்ந்த பெண் யானைகளுள் ஒன்று தலைவியாயிருக்கும். யானைகள் காடுகளில் அகப்படும் செடி மரங்களைப்பறித்துப் புசித்து வருகின்றன. பல வேலைகளைச்செய்து கொள்ள நம்மில்பலர் யானையை வளர்ப்பதுண்டு. அப்படிக்காடுகளில் வசிக்கவும், செடிமரங்களை உண்ணவும், நமக்கு உதவியாயிருக்கவும் இதன் தேக மெவ்விதம் அமைந்திருக்கிறதென்றும் மற்றுமுள்ள விசேஷங்களையுங் கவனிப்போம்.

தேகம்:—யானையைக்கவனியுங்கள். தேகம் பருத்தும் வலுவுள்ளதாயுமிருக்கின்றதல்லவா? அதனால்தான் காடுகளில் அடர்ந்து வளர்ந்துள்ள செடிமரங்களை அங்குமிங்கும் தள்ளிக்கொண்டு சுலபமாய்ப்போக அதற்குமுடிகிறது. யானையின் இந்தத்தோல் துண்டைப் பாருங்கள். கதவின்பலகைபோலக் கெட்டியாயிருக்கின்றதல்லவா? அப்படி இருப்பதனால் யானை காடுகளில் நடமாடும் பொழுது அதன் தேகத்தில் முள், மரக்கொம்புகளுள் யாதொன்றும் தைப்பதில்லை. தோலில்ரோமம் மிகவும் கொஞ்சமாயிருப்பதைப் பாருங்கள். அங்கங்கே சிறிது ரோமங்களும் வால் நுனியில் ஒரு சிறுசெண்டும் இருக்கின்றன. யானைக்கு ரோமம் வேண்டுமென்பதில்லை. அது உஷ்ணமான தேசங்களிலே மிகுதியும் வசிக்கின்றது. தேகத்தில் அவ்வுஷ்ணம் படாமலிருப்பதற்கே யானையின் நிறம் கறுப்பாயிருக்கிறது. சில யானைகளுக்குத் தேகத்தில் அங்கங்கே வெள்ளை நிறமான பொட்டுகளுண்டு. பர்மா தேசத்தின் ஐராவதி நதியோரங்களில் ஒருவித முழு வெள்ளை யானை முன் இருந்ததாம். அதற்கு ஐராவதம் என்றுபேர் வழங்கிற்றாம். மற்றவிடங்களிலும் வெள்ளைக் குஷ்டம் பிடித்த ஒருவித யானையுண்டு. உச்சிக் காலத்தில் உஷ்ணம் பொறுக்காமல் யானை தன் தலைமேல் மண்ணைவாரிப்போட்டுக்கொள்ளும். அல்



லது தன் துதிக்கையால் ஒருகொத்துத் தழைகளைப்பறித்து அதனால் தன்னை விசிறிக்கொள்ளும். யானையின் கண்கள் மிகவும் சிறியனவாதலால் அதற்குப் பார்க்கும் சக்தி மட்டாகும். அதன் காதுகளைப்பாருங்கள்! முறம்போல அகன்றிருக்கின்றன. யானை தன் காதுகளைச்சதா ஆட்டிக்கொண்டிருக்கும்; அதனால் தூரத்திலிருந்துண்டாகும் சிறிய ஓசையையும் நன்றாகக்கேட்பதோடு தன் மேல் வந்து உட்காரும் ஈ முதலிய பூச்சிகளையும் ஓட்டிவிடுகிறது. யானைக்கு மோப்பச் சக்தி அதிகமாகும். அது தன் துதிக்கையாலேயே மோந்தறிகிறது. துதிக்கை என்பது சுமார் 10 அடி அளவு நீண்டுவளர்ந்துள்ள அதன் மூக்கே அல்லது வேறல்ல; துதிக்கையில் மிகவும் வலுவுள்ள சதை நிரம்பவுண்டு. நமதுமூக்கிலிருப்பதுபோலத் துதிக்கை நுனியில் இரண்டு வெளிமூக்குத்துவாரங்களுண்டு, மூக்கினுட்பக்கம் இரண்டு குழாய் போலிருக்கும். அவ்விடம் விசாலமாயும் சதாநனைந்துமிருப்பதால் அது தன் சத்துருக்கள் தூரத்தில் வருவதைக் காற்றுவாடையில் மோந்தறிந்துகொள்ளும்; சிறிய சத்துருக்கள் அண்டையில் வந்தால் துதிக்கை வழியே பலமாக மூச்சுவிட்டு ஊதிப் பயப்படுத்தி அச் சத்துருக்களை ஓட்டிவிடும். யானைக்குத் தொட்டறியும் உணர்வும் அதிகமாம். அதுவும் துதிக்கையில் தான் இருக்கிறது. அதன் நுனி சிறு விரல்போல நீண்டு வளைந்திருப்பதைப் பாருங்கள்! இதனாற்றான் அது பொருள்களைத் தொட்டறிகிறது. இதனால் அது ஒரு சிறு ஊசியையும்தரையிலிருந்துதேடி எடுக்குமென்று சொல்வதுண்டு.

கால்:—யானை ஓடுவதில்லை. ஏன்? அதன் கால்களைப் பாருங்கள்! பெருந்தூண்போல நான்கு கால்களும் பருத்த தேகத்தை நேர் செங்குத்தாய்த் தாங்கி நிற்கின்றன. மாடுகுதிரைகளின் கால்களிலுள்ள பாகங்கள் யானைக்குமுண்டு. ஆனால் அவையெல்லாம் வளைவாயில்லாமல் ஒரே வரிசையில் நேராக இருப்பதால் தான் யானைக்கு ஓடவும் தாவவும் முடிவதில்லை. நடக்கும் போது அதன் காலடி 6½ அடி விசாலமாய்இருந்தபோதிலும் 7 அடி அகலமுள்ள கால்வாய், பள்ளங்களைத் தாண்ட அதற்கு முடிவதில்லை. யானையின் பாதத்தைப் பாருங்கள்! விரல்கள் தனித்தனியாயில்லை. நகங்கள் மாத்திரம் வெளியில் தெரிகின்றன. அவை தட்டையாயும் முன்காலில் ஐந்தும் பின்காலில் நான்குமாக இருக்கின்றன. யானைக்கு விரல்களுண்டு. ஆனால், அவற்றை அகன்றுவட்டமான ஒரு

கெட்டித்தோல் மூடிக்கொண்டிருக்கின்றது. பாதத்தின் அடி உரலின் அடிப்புறம்போலும் மெத்தென்றுமிருப்பதால் யானைக்கு சத்தப்படுத்தாமல் நடக்கமுடியும். யானையின் மேலேறிச் சிலர் புலி வேட்டையாடுவதுண்டு. அப்பொழுது கொஞ்சமேனும் காலடிச்சப்தமில்லாமல் புலியண்டை அது போகும். யானையின் பாதம் மிகவும் வலுவுள்ளதாகும். அதனால் அது தன் சத்துருக்களை மிதித்துக்கொன்றுவிடும். முற்காலத்தில் கொலைக்குற்றவாளிகளை யானையின்காலி லிடறச்செய்துகொன்றுவந்தார்கள். யானை தான் வசிக்கும் காடுகளில் தரை ஈரமாயிருந்தால் செடிகளையும் மரங்களையும் அங்குக்கீழேபோட்டு நன்றாக மிதித்துப்பூமியைச் சமமாக்குவதுண்டு; காட்டோரங்களில் பயிர்களைவந்து உண்பதோடு அவற்றை மிதித்து அழிப்பதுமுண்டு. யானைக்கு ஓடமுடியாவிடினும் செங்குத்தாயிருக்கும் குன்றுகளிலும் மலைகளிலும் ஏறவும் இறங்கவும் அதற்குமுடியும். அது ஏறும்பொழுது முன்காலையும் இறங்கும்பொழுது பின்காலையும் மடித்துக்கொள்ளும்; அப்பொழுது பிடிகொடுத்துக்கால்களை ஊன்றுவதற்குத் தன்கால்களால் நிலத்தை உதைத்துப்பள்ளம்பறித்துக்கொள்ளும். யானை தரையில் படுப்பதில்லையென்றும் மரங்களில் சாய்ந்துகொண்டே உறங்குகிறதென்றும் சொல்வதுண்டு. அது தப்பு. ஆடுமாடுகளைப்போல் அது படுப்பதில்லை; நம்மைப்போல் படுக்கும். அதன்மேல் நாம் ஏறுவதற்கு அது குனியும்பொழுது தன் முன்காலை முன்னுக்கும் பின்காலை பின்னுக்கும் நீட்டிமடித்துக்கொள்ளும்; சிலவேளை நின்றுகொண்டே துதிக்கையால் நம்மைத் தூக்கித் தன் முதுகில் வைத்துக்கொள்ளும்.

Doraysawmy Sastriar, M-A., L-T.
Professor, Presidency College, Madras.

## கிண்டர் கார்ட்டன் என்னும் பாலபோதன முறை.

(236-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

### அவயவங்கள், Organs.

வடிவத்தையுடைய எல்லாப் பொருள்களும் ஒன்று அல்லது பல அவயவங்களை யுடைத்தாயிருக்கின்றன. பொதுவாய் அவயவமென்றால் பாகம் (Part) என்றே பொருள் செய்யவேண்டியிருக்கிறது. மிகப் பெரிய மலை முதல் மிகச்சிறிய அணுவீறாகவுள்ள எல்லாப் பொருள்களுக்கும் பாகங்கள் உண்டென்று ஒவ்வொரு பொருளையும் உற்று நோக்குவதால் தெரிந்து கொள்ளலாம்.



குறிப்பு:—பலபொருள்களைப் பிள்ளைகளுக்குக் காட்டி அவற்றின் பாகங்களை அவர்களால் சொல்லச் செய்வது அவசியம்.

### அமைப்பு (Structure)

அவயவம் அல்லது பாகத்தை (Parts) யுடைய எல்லாப் பொருள்களுக்கும் அவற்றின் அவயவங்கள் அல்லது பாகங்கள் ஒருவிதமா யமைக்கப்பட்டிருக்கின்றன. ஏன் அவ்விதம் அமைக்கப்பட்டிருக்கிறதென்பதை யுற்று நோக்குதல் அவசியம்.

குறிப்பு:—அமைப்பை (Structure) ப்பற்றி ஆராயுங்கால் இயற்கைப் பொருள்களின் அவயவ அமைப்பைப்பற்றி ஆராய்வதே நலம். இயற்கைப் பொருள்களின் அமைப்பை உற்று நோக்குவதால்தான் கடவுளின் மகிமையும் ஞானமும் பிரத்தியக்ஷமாய்ப் புலப்படும்; ஞானமும் விசாலமாகும்.

### வாஸனை (Smell).

கட்டிப்பொருள் ஜலப்பொருள் காற்றுப்பொருள் என்னும்பாகுபாட்டின்படி எல்லாப் பொருள்களுக்கும் வாஸனை யுண்டென்று சொல்வது கூடாது. ஆனால் முற்கூறிய கட்டி, ஜலம், காற்றுப் பொருள்களில் எந்தப்பொருளானாலும் பிருதிவி (மண்ணோடு) சம்பந்தப்பட்டிருப்பின், அதற்கு வாஸனை யுண்டென்று சொல்வது கூடும். ஆதலால் மண்சம்பந்தமான பொருள்களுக் கேவாஸனையின் உரிமை சித்தித்தது. சுத்தஜலத்திற்கும் சுத்தக்காற்றிற்கும் ஒருவித வாஸனையுமில்லை. ஜலமும் காற்றும் நல்ல வாஸனை யுடையனவாயினும் கெட்டவாஸனை யுடையனவாயினும், அவை அசுத்தமே.

பன்னீர் (Rosewater) எந்த மண்ணோடு சம்பந்தப்பட்டு நல்ல வாஸனையுடையதாயிருக்கிறது? என்னும் சந்தேகம் உண்டாகலாம். ரோஜா புஷ்பத்தில் வாஸனை யிருக்கிறது. அவ்வாஸனையை ஜலத்தில் பலவிதமாக ஏற்றிப் பன்னீர்செய்கிறார்கள் என்பது யாவருக்கும் தெரிந்த விஷயமே. ஆனால் வாஸனையையுடைய ரோஜா புஷ்பங்களின் இதழ்களில் மண்ணின் அம்சம் இருக்கிறது. ஆதலால்தான் அதற்குவாஸனையிருக்கிறது. எவ்விதமாயினும் ஜலம், காற்று

இவற்றிற்குச் சுத்தமான தன்மையில் (மண்ணின் அம்சத்தோடு சேராத நிலையில்) வாஸனையேயில்லை. ஒருவன் மல்லிகை புஷ்பித்திருக்கும் தோட்டத்திற்கு அருகே போகும்போதே (தான் அப்புஷ்பங்களைக் கண்ணால் பாராதிருந்தும்) அத்தோட்டத்தில் மல்லிகை புஷ்பித்திருக்கிறதென்று ஊகித்து அறிகிறான். எப்படி? மல்லிகைப் புஷ்பத்தின் இதழ்களிலிருந்து சிறியசிறிய வாஸனையணுக்கள் காற்றோடு கலந்து காற்று எத்திசையாய் அடிக்கிறதோ அத்திசையில் செல்லுகின்றன. இங்ஙனம் வாஸனை அணுக்களையுடையகாற்றை நாம் முகரும்போது "மல்லிகை வாஸனையடிக்கிறது. இங்கே மல்லிகை புஷ்பித்திருக்க வேண்டும்" என்று அநுமானிக்கிறோம். இதனால் காற்றிற்குச் சுயமாய் வாஸனை இல்லையென்பது ஏற்படுகிறது. வாஸனை யறியும் இந்திரியம்மூக்கு. மூக்கின் நுனியில் வாஸனை யறியும் சக்தியுண்டு.

குறிப்பு:—வாஸனையுடைய எல்லாப் பொருள்களையும் பிள்ளைகள் முகரும்படி செய்வதும் வாஸனையைக் கொண்டு வஸ்துவின் இருப்பை ஊகிக்கச் செய்வதும் நலம்.

### உருசி, (Taste).

நாக்கிந்திரியத்தினால் எந்த விஷயம் அறியப்படுகிறதோ அதுவே உருசி யெனப்படும்.

உருசிகள் அறுவகைப்படும்:—அவை மதுரம் (தித்திப்பு), புளிப்பு, உவர்ப்பு, கைப்பு, துவர்ப்பு, கார்ப்பு என்பன.

இவ்வுருசிகள் மண்சம்பந்தமான பிருதிவிப்பொருள்களிலும் ஜலப் பொருள்களிலும் இருப்பது யாவருக்கும் அநுபவம். ஆனால் எந்தப் பொருளில் உருசி யிருக்கிறதென்பதைச் சற்று ஆராய்வாம்.

(வரும்).

N. சுப்பிரமணிய அய்யர்,
எலிமெண்டரி ஸ்கூல் எட்மாஸ்டர்,
திருவேட்டீசுரன் பேட்டை, சென்னை.

## நீதிசதகம்.

(243-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

(80) ஐச்வர்யத்திற்கு †ஸௌஜன்யம் பூஷணமே தவிரத் துர்ஜனத்தன்மை பூஷணமன்று. சௌர்யத்திற்கு அடங்கிப் பேசுவது பூஷணமே தவிர அஸம்பந்தமாய்ப் பேசுவது அழகன்று. ஞானத்திற்கு ‡உபசமமே பூஷணமன்றிப் பேராசை கொள்வது பூஷணமன்று. படித்த சாஸ்திரத்திற்கு விநயம் பூஷணமேதவிரக் கர்வமாய்ப்பேசுவது அழகன்று; தனத்திற்குச் ஸத்பாத்திரத்தில் கொடுப்பது பூஷணமே தவிர விடர்முதலியவர்க்குக் கொடுப்பது அழகன்று. தபஸுக்குக்கோபமில்லாதிருப்பது பூஷணமே தவிரக் கோபித்துக்கொள்வது அழகன்று. ஸமர்த்தனுக்கு (பிரபுவுக்கு) க்ஷமை பூஷணமே தவிர §உதாரத்தன்மை அழகன்று. தர்மத்திற்குக் காரணமின்றி யிருப்பது பூஷணமே தவிர ஒன்றை வியாஜ்யமாக வைத்துக்கொள்வது அழகன்று. சில (ஸத்ஸ்வபாவ)ம் ஸர்வத்திற்கும் காரணமாயும் பூஷணமாயு மிருக்கின்றது.

தைர்ய பத்ததி முடிந்தது.

### தெய்வ பத்ததி.

(81) எந்த இந்திரனுக்கு ஹிதாஹிதோபதேசம் பண்ணுகிறவர் பிரஹஸ்பதியோ, ஆயுதம் வஜ்ரமோ, ஸைன்யங்கள் தேவர்களோ, கோட்டை ஸுவர்க்கமோ, விஷ்ணுவின் அனுக்கிரக மிருக்கிறதோ, யானை ஐராவதமோ அந்தஇந்திரன் இவ்வளவு ஆச்சரியகரமான பலத்தோடுகூடியிருந்தும், யுத்தத்தில் சத்துருக்களால் பராஜயத்தை (தோல்வியை) அடைந்தான். ஆகையால் ஹே ஜனங்களே! ஸ்பஷ்டமாய்த் தெய்வத்தையே சரணமாக அடையுங்கள். பௌருஷம் என்பது வியர்த்தம்; அதைத் தள்ளுங்கள்.

(தெய்வமேசரணமென்பதைத்திருஷ்டாந்தத்துடன்கூறுகிறார்).

(82) ஒரு பிடாரன் ஸர்ப்பத்தைப் பிடித்துப் பெட்டியில் அடைத்துக் கட்டிவைத்திருக்கிறான். அந்த ஸர்ப்பம் ஆகாரமின்மையால் தலைதொங்க வாயைத் திறந்துகொண் டிருக்கிறது. ஓர் எலியானது ஓரிராத்திரியில் இந்தப் பெட்டியில் நல்லஆகாரம் இரு

† அன்பு. ‡ சமாதானம். § பெருங்கொடை.

க்குமென்று எண்ணி, பெட்டியைப் பொத்தல் செய்து ஸர்ப்பத்தின் முகத்துக்கு நேராகப்பிரவேசிக்க, அப்போது ஸர்ப்பம் எலியைப் பக்ஷித்தது. ஸர்ப்பம் அதன் மாம்ஸத்தால் திருப்தி யடைந்து, அந்தப் பொத்தலின் வழியாகவே சீக்கிரமாக வெளியேசென்றுவிட்டது. ஆகையினால் பிராணிகளின் விருத்தியிலும் க்ஷயத்திலும் தெய்வமே காரணம். ஆகையினால்தெய்வத்தை நம்பி ஸொஸ்தர்களாயிருங்கள்.

(83) தெய்வத்தை நம்பின ஸாது ஒரு காரணத்தால் ஆபத்தை யடைந்தாலும் பூமியில் விழுந்த பந்துபோல உன்னத ஸ்தானத்தை யடைவான். அதமன் ஆபத்தை யடைந்தானேயானால் மிருத்பிண்டம் (மண்ணுண்டை) விழுந்ததுபோலத் திரும்பவும் உன்னத ஸ்தானத்தை யடையமாட்டான்.

(அ) (தெய்வ ஸஹாய மற்றவனுக்கு ஓரிடத்திலும் ஸௌகம் கிடைக்கமாட்டாது என்று கூறுகின்றார்.)

(84) ஒரு வழுக்கைத்தலையன் வெயிலில் சென்று ஸஞ்சரிக்குங் காலத்தில் ஸௌரிய கிரணத்தினால் அவன் தலையில் விசேஷ தாப முண்டாயிற்று. அத்தாபத்தைப் பொறுக்கமுடியாது, அது தீர நிழலுள்ள பிரதேசத்தைத் தேடினான். அக்காலத்தில் பனைமரம் தவிர வேறு நிழலுள்ளமரம் கிடைக்கவில்லை. அதினுடைய நிழலும் மரத்தினடியிலேயேயிருந்தது. அவன் அந்த நிழலில் உட்கார்ந்தான். அந்த மரத்திலிருந்தும் ஒரு பெரிய பழம் அவன் தலையில் விழுந்தது. விழுங்காலத்தில் சப்தத்தோடு சிரஸு பிளந்துவிட்டது. ஆகையினால் தெய்வ ஸஹாயமற்றவன் எந்த இடம் போனாலும்அந்த இடத்தில்ஆபத்துக்களும் கூடவே வருகின்றன.

(அ) (தெய்வமே பிரபலம் என்று என்னுடைய புத்தியிருக்கிறதென்று கூறுகிறார்.)

(85) அதிக பலமுள்ள யானை அதிக விஷமுள்ள ஸர்ப்பம் ஆகாசத்தில் ஸஞ்சரிக்கிற பக்ஷி என்னு மிவற்றின் பந்தத்தையும், சந்திர ஸௌரியர்களுக்கு ராகுவினால் உண்டான உபத்திரவத்தையும், புத்திமான்களுக்கிருக்கிற தாரித்திரத்தையும் பார்த்து, தெய்வமே பலசாலியென்று எனக்குத் தோன்றுகிறது. ஆச்சரியம்!

(86) விதியானது ஸமஸ்த நற்குணமுடையதும் பூமிக்கு அலங்காரமுடையதுமான புருஷரத்னத்தை ஸிருஷ்டிக்கிறது. ஆயினும், அந்தப் புருஷரத்னத்தை அல்பாயுஸ்ஸாய் ஸிருஷ்டிக்கும் பக்ஷத்தில் விதிக்கு அபண்டிதத்துவம் (மூடத்தன்மை) ஏற்படுகிறது. கஷ்டம்!



(அ) (ஒருகாலும் தெய்வ வசத்தை அதிக்கிரமிக்க முடியாதென்று கூறுகிறார்).

(87) இந்தச் சந்திரன் அமிருதத்துக்கு ஸ்தானம்; ஸஞ்சீவினீ முதலிய லதை(கொடி)களுக்கு நாயகன்; † சதபிஷகோடுகூடியவன்; சம்புவினுடைய சிரஸுக்கு அலங்காரமாய் இருக்கிறான். ஆனாலும், இந்தச் சந்திரனை க்ஷயரோகமானது விடுகிறதில்லை. இந்தத் தெய்வ பரிபாகத்தை யாராலே தாண்டமுடியும்.

(88) ஓ அன்புள்ள மித்ரா! (நான் சொல்லுவதைக் கேள்.) ஸமர்த்தனான குயவன் மண்ணைப் பலாத்காரத்தினால் மிதித்துப் பிசைந்து சக்கரத்தில் வைத்துச் சுற்றுவதுபோல இந்தத் துஷ்ட தெய்வம் சிந்தையாகிய சக்கரத்தில் விபத்தாகிய தண்டத்தைக் கொண்டு மனஸைச் சுற்றும்படி செய்கிறது; இனி என்ன பண்ணப்போகிறதோ? நாம் அறியோம்.

(89) ஓ மூடமான தெய்வமே! மஹாத்துக்களுக்கு ஆபத்காலத்தில் தைர்யம் நாசத்தை யடையவேண்டும்; அதைப் பார்க்கவேண்டுமென்று இச்சிக்கிறாயே; இந்தத் திருணமாகிய இந்தச்சிரமத்திலிருந்தும் ஒழிந்துவிடு. பிரளயகாலத்திலும் எல்லைகடந்த குலபர்வதங்களாவது ஸமுத்திரங்களாவது சிறியனவன்று; (ஆனாலவை கெடுகின்றன).

(90) ஸர்வ சக்தியுள்ள தெய்வம் ஜகத்தில் எவனுக்கு எந்த வஸ்து கிடைக்கவேண்டியதென்று ஏற்படுத்தியிருக்கிறதோ அந்த வஸ்து அவனுக்குக் கிடைக்கும். (இவ்விஷயத்தில் மஹாத்துக்களை ஆசரிப்பது காரணமாகாது.

வி-ஸா-ராமச்சந்திர சாஸ்திரியார்,
விஷ்ணுபுரம்.

† சதபிஷக்-சதயநக்ஷத்திரம்; சதம்-நூறு, பிஷக்கு-வைத்தியன்; இவற்றோடு கூடினவன் சந்திரன்.

Scheme of studies for Elemantary schools.

## எலிமெண்டரி பாடசாலைகளின் பாடஜாபிதா.

(175-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

### III. பொது அறிவு.

### (General knowledge.)

Psychological basis. சிறு குழந்தைகள் பற்பல நூதன விஷயங்களை யறிவதில் அதிக ஆவலுள்ளவர்களாயிருக்கிறார்களென்பது அவர்கள் தங்கள் பெற்றோரையும் உபாத்தியாயர்களையும் "அது என்ன? இது என்ன? ஏன் இப்படியிருக்க வேண்டும்? இப்படி யில்லாவிட்டால் என்ன?" என்று பற்பல கேள்விகள் கேட்பதினாலேயே நன்கு புலப்படுகின்றது. அவர்களின் மனது அதிக சுறுசுறுப்பாயிருப்பதால் இவ்வுலகத்திலுள்ள விஷயங்களை நாளாவர்த்தியில்தெரிந்து கொள்ளலாமென்னும்பொறுமை அவர்களிடத்தில் இல்லை. அவர்கள் ஏதேனும் ஒரு பொருளையோ ஜெந்துவையோ பார்த்த உடனே அதுபற்றிய விஷயங்களை யறிய விரும்புகிறார்கள். ஆதலால் சிறு பிள்ளைகளுக்கு அவர்களால் சாதாரணமாய்ப் பார்க்கப்படும் செடி,கொடிகள், ஜெந்துக்கள், கட்டடங்கள் மற்றுமுள்ள இதர விஷயங்களைப்பற்றிய சமாச்சாரம் (Information) சொல்வது அவசியம். ஆதலாற்றான் இஃதொரு பாடமாகச் சர்க்காரால் ஏற்படுத்தப்பட்டபாடப்பட்டியில் சேர்க்கப்பட்டிருக்கின்றது.

#### பாலர் வகுப்பு.

A. பிள்ளைகள் எளிதாக அப்போதைக்கப்போது பார்க்கக்கூடிய செடிகள், ஜெந்துக்கள், சீதோஷ்ண ஸ்திதியின் ஸ்தாலமான மாறுபாடுகள், ஸ்வக்கிராமத்தின் அல்லது பட்டணத்தின் முக்கிய விளைபொருள்கள், வியவசாய முறை, கைத்தொழில்முறை, பொதுக் கட்டடங்கள், முக்கிய உத்தியோகஸ்தர்கள் முதலிய விஷயங்களையும்,

B. தபால் விஷயங்களையும்,

C. சுகாதார சம்பந்தமான அதிசுலபமும் முக்கியமானதுமான சில விஷயங்களையும்,

D. நன்னடக்கை சம்பந்தமான அதிசுலபமும் முக்கியமானதுமான சில விஷயங்களையும் பிள்ளைகளுக்குச்சொல்வது அவசிய





மெனச் சர்க்காரால் வெளியிடப்பட்ட பாடப்பட்டியினால் நன்கு புலப்படுகிறது. ஆயினும் மேற்கூறிய தலைப்புக்களின் கீழ் எந்தப் பிள்ளைகளுக்கு எந்த விஷயங்களைச் சொல்வதென்பதுதான் கவனிக்கத்தக்கது. நாம் இப்போது எடுத்துக்கொண்டது பட்டணத்துப் பாடசாலையின் பாடப்பட்டியாதலால் அதுபற்றிக்கவனிப்போம். சாதாரணமாக நகரபாடசாலைகளில் படிக்கும் பாலர்கள் முக்கியமாய் வர்த்தகர்களாகவேனும், தொழிலாளிகளாகவேனும் தாழ்ந்த உத்தியோகஸ்தர்களாக வேனு மிருப்பவர்களது பிள்ளைகளாதலால் அவர்களுக்கு வேண்டிய விஷயங்களைச் சொல்வது அவசியம். சாதாரணமாய் நகரபாடசாலைகளில் பாலர் வகுப்புக்குப் போதிக்கத்தக்க விஷயங்களாவன:—

A. செடிகொடிகள்
- (1) வாழை
- (2) தென்னை
- (3) கத்திரி
- (4) மிளகாய்
- (5) வெங்காயம்
- (6) கிச்சிலிப்பழம்
- (7) மல்லிகை

ஜெந்துக்கள்
- (1) பூனை
- (2) நாய்
- (3) பசு
- (4) குரங்கு
- (5) ஆடு
- (6) கிளி
- (7) காகம்
- (8) கோழி

சீதோஷ்ணஸ்திதி
- ஒரு தினத்தில் (சூரியோதய முதல் சூரியாஸ்தமன பரியந்தம்) மாறுபடும்சீதோஷ்ணஸ்திதி.

விளைபொருள்
- (1) நெல்
- (2) கேழ்வரகு

கைத்தொழில்கள்
- (1) பானைவினைதல்
- (2) நெசவு.

பொதுக்கட்டடங்கள்
- கோயில்
- சத்திரம்.

B. தபால் விஷயங்கள் { தபாற்காரன்கடிதம்கொண்டுவருதல், கார்ட்கவர், தபால் கம்பம்.

C. சுகாதார விஷயங்கள் சுத்தம், தேகம், உடுப்பு, வீடு.

D. சன்மார்க்க விஷயங்கள் { நல்ல பிள்ளைகளின் இலக்ஷணங்கள்—(சிறுசிறு கதைகளின் மூலமாய்ப் போதிக்கவேண்டும்).

குறிப்பு:—மேற்கூறியவற்றையே போதிக்க வேண்டியதென்பது கருத்தல்ல. ஆனால் மேலேகாட்டிய தலைப்புக்களின் கீழ் அவ்வப்பாடசாலைகளுக்குத் தகுந்தவண்ணம் அவ்வவ்வுபாத்தியாயர்களே ஒரு பட்டி தயார் செய்து கொண்டு போதிக்கலாம். மேலும், கற்பிக்க வெடுத்துக்கொண்டபாடங்களிலும் எவ்வெவ் விஷயங்களைப் பிள்ளைகள் எளிதில் உற்றறிவார்களோ அவ்வவ் விஷயங்களையே போதிப்பது நலம். இவ்விஷயங்களைத்தாம் போதிக்கலாமென்று குறிப்பிடுவது கூடாததாகையால் அவை இங்கு விடுக்கப்பட்டன.

(வரும்)

N. சுப்பிரமணிய அய்யர்,
திருவேட்டீசுவரன் பேட்டை.

## பாம்புக்கடிக்கு மருந்து.

பாம்பு கடித்த விடத்தில், (கடித்த விடத்தை நன்றாய்க் கவனித்துப் பல் பட்டவிடத்தில்) பெட்டைக் கோழியை உயிருடன் கொண்டுவந்து அதன் ஆசனத்திற்கு (மலம் வெளியாகு மிடத்திற்கு)ப் பக்கத்திலுள்ள இறக்கைகளை நன்றா யெடுத்துவிட்டு அந்தக் கோழியின் ஆசனவாயை நன்றாய்ப் படியும்படி வைத்து அழுத்திப் பிடித்துக் கொள்ளவேண்டும். இவ்விதஞ் செய்யும்போது கோழிக்கு அவ்விஷமேறி அஃது இறந்துவிடும். இறந்ததும், மற்றொரு கோழியை மேற்சொன்னபடி வைக்கவேண்டும். இவ்வாறு எந்தக் கோழியானது இறந்துபோகாம லிருக்கின்றதோ, அது பரியந்தம் கோழிகளை ஒன்றன்பின் ஒன்றாக வைத்துவர வேண்டும். அப்படி வைக்கக் கோழி பிழைத்துவிட்டால், கடித்த விடத்திற் கூட விஷமில்லாமல் கடிபட்டவன் பிழைத்துவிடுவான். இம்மா



திரி செய்து பலர் பிழைத்திருக்கிறார்க ளென்பது அனுபவசித்தம். ஒரு மனிதன் பிழைக்க 2, 3 கோழி இறந்துபோகலாமா வென்று கொல்லாவிரதம் பூண்டவர்கள் கேட்கலாம். மனிதர்கள் கோழியைக்காட்டிலும் சிறந்தவர்களா யிருப்பதோடு அப்பிறவி கிடைத்தற் கரியதொன்றாகையாலும், கோழிகளைப் பெரும்பான்மையோர் உணவாக்கிக் கொள்ளுகிற படியாலும் இது குற்றமுடையதாகாது.

வேங்கட்டராமய்யர்,
ஊத்துக்காடு.

## இந்திரபீடம் - கரபாத்திரசுவாமிகளின்
### சம்பிரதாய சிந்தனாவாக்கியங்கள்.

(முன் தொடர்ச்சி).

(61) இன்னுஞ் சிருஷ்டி லய மெப்படியெனின், தான் விளங்கினாற் சகமில்லை; இது லயம். † விருத்தியானால் சிருஷ்டியான ஜகமுண்டு.

(62) சிருஷ்டியும் லயமும் எப்படியெனின், சைதன்னியத்தி லொருசுகம் மத்தியிற் பிறந்து அகண்டவறிவிலடங்கி, அஃது ஏகதேச வறிவாய் அகமிதமானது சிருஷ்டியாம்; மத்திய அகண்டவறிவில் துரியமாய் வியாபகம் விளங்கிப் போனது லயமாம்.

(63) உபக்கிரம உபசங்கார மெப்படி யெனின், முதல்முதல் சித்து விகற்பித்து அதில் தானடங்கினது பிரகிருதி; அதன் மயமடைந்தது சங்கற்பம். இதில் சிருஷ்டியாம்; அதில்தான் விளங்கிப்போனது சைதன்னியம். இது லயமாம்.

(64) உபக்கிரமமும் உபசங்காரமுந் தான் விளங்கலு மெப்படியெனின், உபக்கிரமம்-முன் தானாயிருந்த சத்தை விளங்கியது; உபசங்காரம்-பின்பிரபஞ்சம் நசித்தது; அதில் தானாசித்து விளங்கினால்தான்சரி; பசுவில் பதிவிளங்காவிடில், மலமாம். தான்விளங்குமிடத்தில் அறிவு விட்டது; அறியாமை விட்டது. அனுபூதி தானாகிய சித்துக்கு அவற்றையெல்லா நானென்று சொல்லப்பார்த்தால் அது பார்க்கப்படுவதில்லை; நானில் தானிருந்து பார்த்தால் அது பார்க்கப்படும்.

† சங்கற்பமுண்டானால்.

(65) சொரூப மிப்படி யெல்லாஞ் சகத்தாவானே னெனின், சாதிலிங்கஞ் சித்திரங்களாயது. சித்திரத்தைச் சாதிலிங்கமாய்க்கண்டால் இப்படி யெல்லா மானதில்லை; சாதிலிங்கத்தை விட்டுச் சித்திரமாய்க்கண்டால் அஃதிப்படி யெல்லாமாயது.

(66) விளக்க வியாபகமே பிரபஞ்சம்; பிரபஞ்சமென்பதொன்றில்லை யென்பதெப்படி யெனின், பாம்பு பொய்யென்று பார்த்தால் பாம்புபோனதல்ல; பழுதையைக் கண்டாற் பாம்பு பொய்யென்று சொல்லவேண்டியதில்லை; பழுதையே பாம்பாயிருக்கிறது. அதுபோலச் சகம் பொய்யென்று பார்த்தால் சகம் போனதல்ல; வியாபகத்தைக் கண்டால் சகம் பொய்யென்று சொல்லவேண்டியதில்லை. தானாயிருக்கிற வியாபக விளக்கமே சகமாயிருக்கிறது.

(67) சிருஷ்டியும் அனுக்கிரகமு மெப்படி யெனின், தானாயிருந்த மோனாதீதம் தன்சுகத்தை நினைத்துஸ்புரித்ததுமோனமாம். அதில் அறிவு உதித்தது துரியம்; அது மயக்கப்பட்டது சுழுத்தி; அதுசலனப்பட்டது சொப்பனம்; எதிரே தோன்றினது ஆகாரம். பக்குவப்பட்ட சீடனுக்குத் துரியத்தி லறிவைவிளக்கிச் சுழுத்தியாநந்தத்தையுந் துரியாதீதத்தையுந் துரியத்தில் தரிசிப்பது நிஜமாம்.

(68) ‡"எழுதுவோனு மெழுதிடமு மெதிர்காண் பொருளு மிலதாகி" என்னும் பாடலுக்கு எழுதுவோன் அறிவு; எழுதிடந் தான்; எதிர்காண்பொருள் தன்னி லெழுந்த ஆநந்தமே தடித்தது. அநுபூதியானபடியினாலே சித்திரமில்லை; அநுபூதி விளக்கமாயிருக்கின்றபடியினாலே அறிவில்லை; அறிவாநந்தந்தானா யிருக்கிற படியால் இடமில்லை. இம்மூன்றுமிருக்கவில்லை யென்பதெப்படியெனின், தானானது விளங்காதபடியினாலே பழுதுமேவியது. தன்னைப்பார்த்தால் கனவுதோன்றும்போதே கனவில்லை, நனவில் விஷயமில்லை. இந்த இரண்டு மில்லாதது சுழுத்தி.

(69) சதா பஞ்சகிருத்திய மெப்படியெனின், அதுவது தானானது சிருஷ்டி; அதுவது தானென் றறிந்து தோன்றினது திதி; ஆனதையும் அறிந்ததையும் அழுந்திக்கொண் டெழுந்த வியாபக

‡ ஞானவாசிட்டம் சுக்கிரன்கதை முதற் செய்யுள்.



பல(சேதன)மே சங்காரம்; இந்த மூன்று திரிபுடியு மில்லாதது திரோபவம்; விளங்கித் தானாயிருப்பது அநுக்கிரகமாம்.

(70) பூதார்த்த வாத மெப்படியெனின், இறந்தகால அநுபூதிக்கு அர்த்தந் தெரியவே உபாதி வாதிக்கப்பட்டுப் போயது. சர்வத்திற்கும் இறந்தகாலம் சத்தை யொட்டி வரவேண்டும்.

(71) இன்னும் அர்த்தவாதமாவ தெதுவெனின், உதித்ததிலுதியாதது விளங்குவதும், அறிந்ததி லறியாதது விளங்குவதும், பார்த்ததிற் பாராததுவிளங்குவதும், கேட்டதிற் கேளாதது விளங்குவதுமாக இப்படி விளங்கின விவை வாதிக்கப்படுவனவாம்.

(72) கேட்கக் கேட்கக் கேட்கக் கிரகிக்கப்பட இல்லை; பார்க்கப் பார்க்கப் பார்க்கப்பட இல்லை என்பதெப்படியெனின், கேட்கிறதும் பார்க்கிறது மிருந்தாலல்லவா கிரகிப்பதும் பார்ப்பதும் சிந்திப்பதும்கூடும். கேட்கிறதும் பார்க்கிறதும் சிந்திக்கிறதும் அதுவாயிருக்கின்றன. ஆகையால் தானாயறிந்ததே பிரஹ்மமாம். ஆதலாலறியப்பட்டதற்கும் அறியப்படாததற்கும் அப்பாற்பட்டது பிரஹ்மமென்றொருவேதஞ்சொல்லுகின்றது. அறியப்பட்டது தானென்பது; அறியப்படாதது தானான தென்பது.

(73) இன்னும் காரியம் காலத்திரயத்திலுமில்லை யென்பதெப்படியெனின், காரியத்திற் காரணம் வாராது; காரணத்திற்காரியமில்லை; காரியமெல்லாங்காரணமாகவே விளங்கும். இதற்குத்திருஷ்டாந்தம்:—அறிகிற அறிவிலும்நாமறிகிறோமென்னும்போதமில்லை. அறியவில்லை யென்னும் † மயமுமில்லை; அறிந்தபோதும் போதமில்லை. அறியாதபோது மயமுமில்லை. இரண்டு காலத்திலும் அது தானாகவே யிருக்கும்.

(74) காரியமெல்லாங் காரணமென்பதெப்படியெனின், சைதன்னியத்தில் ஸ்புரிப்பாகிய காரியமில்லை. ஸ்புரிப்பிற் காரணம் வாராது. ஸ்புரிப்பாகிய காரியமெல்லாம் நிறைவாய் விளங்கினால் காரியமெல்லாங் காரணமாம்.

(75) சற்காரியமாவ தேதெனின், உதித்த அறிவில் தான் விளங்கிப்போனால், அந்த அறிவுதான் சகல சாஸ்திரங்களிலும் சகல ஜகத்திலும் வாதிக்கப்படுகிறதாம்.

(76) ‡ முடிய அகமிதம் யாதெனின், தேகந் தானா யிருந்தது அகம். அப்போது விஷய மிதமா யிருந்தது. நினைப்பே

† மயம் - காரியம். ‡ முடிய - எங்கும்.

தேகமென் றறிவிக்க நினைப்பை யறியப்போகிற படியினாலே நினைப்பு இதமாயது; நினைப்புத் தானென்று சிந்திக்கச் சிந்திக்க நினைப்பிறந்து அகமாயது. அப்போது தேக மிதமாயது; அறிவே நினைப்பென் றறிவிக்க அறிவை யறியப்போகிறபடியினாலே அறிவு இதமாயது. அறிவுதானென்று சிந்திக்கச் சிந்திக்க அறிவிறந்து அகமாயது; அப்போது நினைப்பு இதமாயது. ஆநந்தமே அறிவென் றறிவிக்க ஆநந்தத்தை யறியப் போகிறபடியா லாநந்த மிதமாயது. ஆநந்தந் தானென்று சிந்திக்கச் சிந்திக்க ஆநந்தமிறந்து அகமாயது; அப்போது அறிவு இதமாயது. துரியந்தானாநந்தமென் றறிவிக்கத் துரியத்தை யறியப் போகிறபடியினாலே துரியந்தா னிதமாயது. துரியந் தானென்று சிந்திக்கச் சிந்திக்கத் துரியமிறந்து அகமாயது; அப்போது ஆநந்த மிதமாயது. மோனந்தான் துரியமென்றறிவிக்க மோனத்தை யறியப் போகிறபடியினாலே மோன மிதமாயது; மோனந்தானென்று சிந்திக்கச் சிந்திக்க மோனமிறந்து அகமாயது; அப்போது துரிய மிதமாயது. இப்படி அகமாயு மிதமாயும் புரளுவது விளக்கமும் வியாபகமுமாம். இஃது ஒன்றிலே யொன் றில்லாதபடியினாலே, அகமாயு மிதமாயு மிருந்தது மோனாதீதந்தான். (வரும்).

அகம்—நான்; இதம்—இது.

## GEMS OF WISDOM.

### உறுதிமொழிகள்.

1. "பரிவு மிடுக்கணும் பாங்குற நீக்குமின்
தெய்வந் தெளிமின் றெளிந்தோர்ப் பேணுமின்
பொய்யுரை யஞ்சுமின் புறஞ்சொற் போற்றுமின்
ஊனூண் டுறமின் உயிர்க்கொலை நீங்குமின்
தானம் செய்ம்மின் றவம்பல தாங்குமின்
செய்ந்நன்றி கொல்லன்மின் றீநட் பிகழ்மின்
பொய்க்கரி போகன்மின் பொருண்மொழி நீங்கன்மின்
அறவோ ரவைக்கள மகலா தணுகுமின்
பிறவோ ரவைக்களம் பிழைத்துப் பெயர்மின்



பிறர்மனை யஞ்சுமின் பிழையுயி ரோம்புமின்
அறமனை காமி னல்லவை கடிமின்
கள்ளும் களவும் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினி லொழிமின்
இளமையும் செல்வமும் யாக்கையு நிலையா
உளநாள் வரையா தொல்லுவ தொழியாது
செல்லுந் தேஎத்துக் குறுதுணை தேடுமின்
மல்லன்மா ஞாலத்து வாழ்வீ ரீங்கென.

"சிலப்பதிகாரம்"

### "குறைவு, மிகுதி".

2. பானத்தைக் குறைத்துச் சுவாசத்தை அதிகப்படுத்து.

சாப்பாட்டை மிதப்படுத்து; சாப்பிடும் பதார்த்தத்தை அதிகப்படுத்து.

சவாரிசெய்வதைக் குறைத்து நடப்பதை அதிகப்படுத்து.

ஸ்நானம் நன்றாய்ச்செய்; உடையை அதிகப்படுத்தாதே.

பிறர்க்கு உபத்திரவஞ்செய்வதைக் குறைத்து நீ உழைப்பதை அதிகப்படுத்து.

கொடையை அதிகப்படுத்து; வீண்செலவைக்குறை.

படிப்பதை அதிகப்படுத்து; எழுதுவதைக் குறை.

பிறருக்கு உபதேசத்தைக்குறைவாகச்செய்; உன் அனுஷ்டானத்தை அதிகப்படுத்து.

அதிகமாகக் கேள்; குறைவாகப் பேசு.

அதிகமாக நம்பு; சந்தேகத்தைக்குறை.

உட்காருவதைக்குறை; பணிவதை அதிகப்படுத்து.

ஸ்தோத்திரம் அதிகமாய்ச்செய்; முறையிடுவதைக்குறை.

அதிகமாய் நன்றிபாராட்டு; முறுமுறுப்பதைக் குறை.

### "Less and More".

"Drink less,breathe more; Eat less, chew more;Ride less, walk more; Cloth less, bathe more; Worry less, work more; Waste less, give more; Write less, read more; Preach less, practice more; Talk less, hear more; Doubt less, trust more; Sit less, kneel more; Complain less,praise more;Grumble less, thank more".

3. ஒருவன் பெரிய மனிதன் அல்லது பிரபு என்று சொல்லப்படுவதற்கு அறிகுறிகள் யாவை? சாந்தம், தர்மகுணம் விவேகம் இவைகள் எவர்களிடத்தில் பூரணமாய்க் குடிகொண்டு சமயோசிதமாய் உபயோகப்படுகின்றனவோ அவர்களே பிரபுக்கள்.

(குறிப்புக்கள்:—தர்மகுணமாவது ஸத்பாத்திரமோ அஸத்பாத்திரமோ தன்னை அண்டித் தன்னை முகஸ்துதி செய்யின், அவர்களுக்கெல்லாம் பொன் கொடுப்பதல்ல; ஆனால், எவரையும் அல்பமாய் நினையாத தர்மகுணம், பலஹீனர்களையும் ஹிம்ஸைபடுபவர்களையும் ரக்ஷிக்கும் தர்மகுணம், பிறரைப்பற்றி அவதூறான வார்த்தைகளைச் செவி கொடாதிருக்கும் தர்மகுணம், பிறருடைய வார்த்தைகளையும் செய்கைகளையும்எப்பொழுதும் நல்லனவாகவே கொள்ளும் தருமகுணம், பிறரிடத்தில் ஒருபொழுதும் சந்தேகமும் தப்பபிப்பிராயமும் கொள்ளாதிருக்கும் தருமகுணமுமே தருமகுணமாம்.)

4. நாம் நடந்து நடந்துதான் நடக்கக் கற்றுக்கொள்ளுகின்றோம்; தாண்டித் தாண்டித்தான் தாண்டக் கற்றுக்கொள்ளுகின்றோம். அம்மாதிரி நமக்குவாய்க்கும் ஒவ்வொரு சமயத்திலும் மேன்மையாய் (Nobly) நடந்து நடந்துதான் நாம் நன்னடக்கையைக் கற்றுக்கொள்ளமுடியும்.

ஸர்வசாஸ்திரங்களையும் சுருக்கித்திரட்டி ஒரு வார்த்தையில் சொல்லென்றால் "ஒருவர் நம்மிடத்தில் எம்மாதிரி நடக்கவேண்டுமென்று நாம் விரும்புகிறோமோ அம்மாதிரியாக நாம் அவர்களிடத்தில் நடந்து கொள்ளவேண்டும்" என்றே சொல்ல வேண்டும்.

K. Rangasawmi Iyengar.

## தருமகுணம்.

(1) மனிதரைக் கள்வராகச் சீக்கிரத்தில் செய்யும் ஆற்றல் அழகிய மங்கையர்க்குப் பொன்னைப்பார்க்கிலும் அதிக முண்டு. (ஷேக்ஸ்பியர் - (Shakespere).

(2) எவன் மங்கையினிடத்து ஈடுபட்டு அவளோடுமென்றாடிக் காலங் கழிக்கின்றானோ அவன் தான் தெய்வீகத்தன்மையை மறந்தவனாவன் (ஷேக்ஸ்பியர் - Ibid.)



(3) நீ பழகும் வித்தையில் முதலில் பிரியம் கொள்; இரண்டாவதாக நீ உழைக்கும்போதும் உனக்குவேண்டியனவாகி உன்னிடம் இருக்கும் பொருள்களில் பிரியம் கொள்; கடைசியாக ஆனால் முக்கியமாக நீயாருக்காக உழைக்கின்றனையோ அவர்களிடத்து அஃதாவது உனது அண்டையிலிருப்பவர்களிடத்து நீ பிரியம்கொள். (ரஸ்கின் - (Ruskin).

(4) கெடுத்து அமிழ்த்தக்கூடிய பாபச்செய்கைகளை நீக்கி அதனால் ஜயம்பெற்றால் அப்பொழுதே நாம் சாந்தமடைவோம்; பிறவாற்றால் அஃது அடையப்படமாட்டாது. (ரஸ்கின் - Ibid)

(5) இன்றையதினம் செய்யவேண்டிய காரியத்தை இன்றையதினமே செய்; இன்றைக்கு வரும் சோதனைகளோடு போரிட்டு இன்றைக்கே மீண்டுகொள்; பார்க்கக்கூடாத பொருள்களுக்கும், நீ பார்த்தாலும் அறியக்கூடாதபொருள்களுக்கும் அங்காந்து அதனால் உன்னை வலிவற்றவனாகச் செய்துகொள்ளாதே. (சார்லஸ் கிங்கிலி - Charels Kingley)

(6) கடவுளைத் துதித்தல், சத்தியவேதத்தை (பைபிலை)ப்படித்தல், கோயிலுக்குப்போய்த் துதித்தல் ஆகிய இவற்றைப்போல வாழ்க்கையின் சாதாரண நித்திய கருமங்களைச்செய்தலும் நன்மையாகத்தெய்வத்தன்மையுடையவராக முயலுபவர்களுக்குமுக்கியமே (ரெவரெண்ட் ஜே. ஆர்-மில்லர் - Rev. J. R. Miller)

(7) எது உனது நியாயத்தைக்கெடுக்கிறதோ, எது அறிவின் நொய்மையைக்கெடுக்கிறதோ, எதுகடவுளைப்பற்றி நீ கொண்டுள்ள கருத்தை மாற்றுகிறதோ, எது உன்னிடமுள்ள தெய்விக புத்தியை மாற்றுகிறதோ, சுருக்கிச்சொல்லுமிடத்தில் உனதுசரீரத்தின் ஆட்சியை விருத்திசெய்கிறதோ அதுவே உனது பாயம்(அஞ்ஞானம்). அந்த அஞ்ஞானம் எவ்வளவு ஜடமாயினும் ஆகுக. (ரெவ. ஜே. ஆர். மில்லர் - J.Rev. R. Miller).

(8) கோயிலில் ஸ்திரீகள் அமைதியாய்ச்சும்மா இருக்கட்டும். அவர்கள் அங்குப்பேசுதல்கூடாது. அவர்கள் தங்கள் கணவனுக்கு அடங்கிக்கீழ்ப்படியவேண்டும். அவர்கள் எதாவது தெரிந்துகொள்ளவேண்டுமானால் வீட்டில் தங்கள் கணவன் மூலமாய்த் தெரிந்து கொள்ளக்கடவர். (கொரிந்தியன் - Corinthian).



162413
600 008.

(9) மலைகளை அப்புறப்படுத்தக்கூடிய அளவுக்குச் சக்தி என்னிடத்திருப்பினும் என்னிடத்துத் தரும சிந்தனை இல்லையானால் யான் ஒன்றும் இல்லாதவனே. (கொரின்தியன் - Ibid)

(10) எவனிடத்து அன்பில்லையோ அவன் ஈஸ்வரனை அறியான்; அன்பே ஈஸ்வரனு (சிவமா) தலின். (ஜான்-John)

K. Rangasamy Aiyangar.

# வர்த்தமானம்.

### சுங்கச் சாவடியின் வருமானம்.

1912–13-ம் வருஷத்தில் வெளி தேசங்களிலிருந்து இந்தியாவிற்கு ஏற்றுமதியான சாமான்களின் மீது விதித்துள்ள வரியினால் சுங்கச் சாவடிக்கு 861 லட்சம் ரூபாய் வசூலாயினவாம். இதில் உப்பின் வாயிலாக வந்த வரி சேரவில்லையாம். இவ்வருமானம் 1911-12-ம் வருஷத்தைப் பார்க்கினும் 89 லட்சம் ரூபாய் அதிகமாம்; பெட்ரோலியம் வருமானத்தில் மாத்திரம் 5 லட்சம் ரூபாய் குறைவாம். ஏனைய சாமான்களால் வருமானம் அதிகமேயாம். சாராயத்தினால் 111 லட்சம்; வெள்ளியினால் 108 லட்சம்; சர்க்கரையினால் 73 லடசம்; பஞ்சியினால் 192 லட்சம்; வெளி தேசங்களுக்கு ஏற்றுமதியான அரிசியினால் 147 லட்சம்; வெளி தேசங்களுக்கு ஏற்றுமதியாகும் பஞ்சினால் 56 லட்சம்.

### இங்கிலாந்தும் பால்வியாபாரமும்.

இந்தியாவில் சுத்தமான பால் விற்பனை செய்தல் வேண்டுமென்னும் நோக்கங் கொண்டு பார்லிமெண்டில் ஒரு மசோதா கொண்டுவரப்பட்டிருக்கின்றது. இம் மசோதாவின் கருத்துச் சுத்தமான பால் விற்பனை செய்தல் வேண்டுமென்பதும் பசுக்கள் வசதியான விடங்களில் கட்டி வைத்தல் வேண்டுமென்பதுமேயாம். இந்தியாவில் நடைபெறும் பால் வியாபாரத்தின் ஆபாசத்தையும் பசுக்கள் கட்டப்படு மிடங்களின் ஆபாசத்தையும் தினந்தோறும் பார்த்துவருபவர் பாலை வாங்கி உபயோகப்படுத்தவே மாட்டார்கள். இவ்வாபாசங்களைப்பற்றி நமது தேசத்திலுள்ள முனிசிபாலிடியாரும் மாகாண கவர்ன்மெண்டாரும் கவனியாதிருப்பது விந்தையே! அதிகாரிகள் பால் வியாபார விஷ



யத்தில் கவனஞ் செலுத்தாதிருப்பதினாலேயே ஜனங்கள் பலநோய்களுக் கிரையாகிப் பரிதபிக்கின்றனர். கலப்புப் பால் விற்கப்படுவதினால் குழந்தைகள் ஆயிரக் கணக்காக மரண மடைகின்றன; ஜனங்களுக்கு அத்தியாவசியமாக வேண்டப்படும் உணவுப் பொருள்களுள் பாலும் ஒன்றாக விருப்பதால் அது சுத்தமானதாகக் கிடைத்தற் பொருட்டுக் கவர்ன்மெண்டார் தகுந்த ஏற்பாடு செய்வது ஆவசியகமாம். முனிசிபாலிடியாரோ ஜனங்களை இம்சித்து அதிகவரி வசூல் செய்து வருகின்றனர். ஆனால் அவர்களின் சுகாதார விஷயத்திலே கவலை யெடுத்துக் கொள்ளுகின்றாரில்லை.

### பம்பாயில் பால் வியாபாரம்.

பம்பாயில் சுத்தமான பால்கிடைத்தற் பொருட்டு ஜனங்களால் தகுதியான ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது. பசுக்கள் வைத்துப் பால் வியாபாரம் செய்பவர்கள் பசுக்களைச் சுகாதாரமும் தகுதியுமான இடங்களில் கட்டி வளர்ப்பது பற்றி முனிசிபாலிடியார் பெரிதும் பிரயாசைப் படுகின்றனர். அங்ஙனமிருந்தும் பசுக்களை வசதியான இடங்களில் கட்டுமாறு செய்வதும் சுத்தமான பால் கிடைக்குமாறு செய்வதும் முனிசிபாலிடியாருக்குக் கூடாமையானதைப்பற்றி டாக்டர் K. M. துபாஷ் என்பாரின் தலைமையின் கீழ் ஒரு பால்டிப்போ ஏற்பாடு செய்து ஜனங்கட்குச் சுத்தமான பால் விற்க ஏற்பாடு செய்து வருகின்றனர். இது விஷயமாக இதுகாறும் 50000 ரூபாய் வசூலாயிருக்கின்றது; சென்னை ராஜதானியில் இவ்வாறு ஏற்பாடு செய்ய ஒருவரும் முன் வருகின்றார்களில்லை.

### பம்பாயிற் றொழிற்சாலைகள்.

இப்போது பம்பாய் ராஜதானியில் 798 தொழிற்சாலைகளிருக்கின்றன; பம்பாயில் மாத்திரம் 33 நெசவுத்தொழிற் சாலைகளிருக்கின்றன இத்தொழிற் சாலைகளிற் 154,519 புருஷர்களும், 44013 ஸ்திரீகளும் வேலை செய்து வருகின்றனர்.

### ஓர் அதிசய ஆட்டுக்குட்டி.

திருநெல்வேலியில் இரண்டு மூன்று வாரங்களுக்கு முன் ஓரிடையன் வீட்டில் ஓர் ஆட்டுக்குட்டி மூன்று தலையுடனும், ஆறுகால்களுடனும் பிறந்தது; அஃதுடனே இறந்து போயது.

## ஒரு வீரதீரமான செய்கை.

சோளிங்கபுரத்தில் சுமார் 18 வயதுள்ள ஒரு பிராமணப்பிள்ளை ஆழமும் சேறும் நிறைந்துள்ள குளத்தில் தவறி விழுந்துவிட்டான். அதனைப் பார்த்திருந்த மிஸ்டர் வரதாச்சாரி என்பவர் உடனே குளத்திலிறங்கி மேற்படி பிள்ளையைத் தேடினர்; பலமுறை முழுகிப் பார்த்தும் பையன் அகப்படவில்லை; கடைசியாகச் சேற்றி லமிழ்ந்திருந்தான்; அவனை அவர் கரைக்குக் கொண்டு வந்து சேர்த்தானீரையும் சேற்றையும் அவன் வாயினின்று கக்கச்செய்து அவனுயிர் பெறுமாறு செய்தனர். தமக்குநேரும் அபாயத்தைக் கவனியாது ஒருயிரைக் காப்பாற்றிய இவருடைய செய்கை மேலதிகாரிகளால் கவனிக்கத் தக்கதே.

## காஞ்சீபுரத்தில் ஓரனியாயக் கொலை.

இம்மாதம் 1-ந்தேதி யிரவு 8 மணிக்குக் காஞ்சீபுரம் கச்சபேசுவரர் கோயிலுக்கருகே மிட்டாய்க் கடை வைத்திருக்கும்வெங்கடேச அய்யரென்பவருடைய பிள்ளையாண சுமார் 12 வயதுள்ள நடேசனென்பவன் காஞ்சிபுரம் ராஜம்பேட்டை மூங்கிலடி மண்டபத் தெருவிலிருக்கும் திருக்காமு செட்டியாருடைய வீட்டிற் கெதிரேயுள்ள வாழைத் தோட்டத்தில் கத்தியால் கழுத்தறுக்கப்பட்டிறந்து கிடந்தான். இதனைப்போலீஸாரறிந்து வந்து விசாரித்தனர். அப்போது மேற்படி அய்யர் திருக்காமு செட்டியார் ஐந்தாறு வருஷகாலமாக எனக்குக் கொடுக்க வேண்டிய 12000 ரூபாயைக் கொடுக்காமல் ஏமாற்றிய படியால் நானுலக வாழ்க்கையில் வெறுப்படைந்து என் பிள்ளையைக் கத்தியாலறுத்துக் கொன்று விட்டேன்; நானும் தற்கொலை செய்து கொள்ளப் போகின்றே னென்றீ வாக்குமூலங் கொடுத்தாரென்று தெரிகின்றது. அவர்சில காலமாகத் திருக்காமு செட்டியாரிடத்தில் நீர் நான் கொடுத்து வைத்த தொகையைக் கொடுக்காது ஏமாற்றியபடியால் உம்முடைய வீட்டு வாசற்படியில் நான் என் பிள்ளையோடு பிராணத்தியாகஞ் செய்து கொள்ளப் போகின்றேன்; இந்தப்பழி யும்மை விடாது என்று சொல்லிக்கொண்டு வந்தாரென்றும் ஒரு வதந்தி யுலாவுகின்றது. மறுநாள் அவ்வையர் நானேன் என் பிள்ளையைக் கொல்லப் பொகின்றேன், யாரோ அவனைக் கொலை செய்து விட்டனரென்று வாக்குமூலங் கொடுத்திருக்கின்றாராம். அவ்வய்யர் போலீஸார் வசத்திலிருக்கின்றார். போலீஸார் பலவிதமாக விசாரணை செய்து வருகின்றனர்.

## அன்னிபெசண் டம்மையாரது போலீஸ் வியாஜ்யம்.

(1) அன்னிபெசண் டம்மை யாரவர்கள், டாக்டர் டி. எம். நாயரவர்கள் 1911-வருஷம் பிப்ரவரி மாதத்திற் பிரசுரமான "ஆண்டிஸெப்டிக்" என்னும் மாதப் பத்திரிகையில் தம்மையும் தியாஸாபிகல் சொஸைட்டியின் மெம்பர்களையும் நிந்தித் தெழுதினரென்று தொடுத்த வியாஜ்யம் பிரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட் எஸ். வி உஸ்மான்சாகிப் பகதூர் அவர்களால் விசாரணை செய்யப்பட்டு வந்தது. அவர் இம்மாதம் 8-ந் தேதி மேற்படி வியாஜ்ஜியத்தைத் தள்ளிவிட்டார்.



(2) மேற்படி பத்திரிகையின் சொந்தக்காரராகிய மிஸ்டர் N. ராமராவ் மீது மேற்படி அம்மையார் கொண்டுவந்த வியாஜ்யமும் அதே காரணம் பற்றி மேற்படி மாஜிஸ்டிரேட்டால் தள்ளிவிடப்பட்டது.

(3) மேற்படி பத்திரிகையில் வெளியான அவ்விஷயத்தை ஹிந்து பத்திரிகையில் பிரசுரஞ் செய்தமை பற்றி, அப்பத்திரிகையின் ஆசிரியராகிய மிஸ்டர் கஸ்தூரிரங்க அய்யங்கார்மீதும், அப்பத்திரிகையை யச்சிட்டு வெளியிடும் மிஸ்டர் A. ரங்கசாமி அய்யங்கார் மீதும் தியாஸாபிகல் சொஸைட்டியின் மெம்பராகிய மிஸ்டர் V. ஷ்வார்ஸ் தொடுத்த வியாஜ்யமும் மேற்படி மாஜிஸ்டிரேட்டால், தள்ளி விடப்பட்டது. அப்போது மேற்படி மாஜிஸ்டிரேட் அப்பத்திரிகையி லெழுதிய விஷயம் மிஸ்டர் லெட் பீட்டர்மீது குறை கூறுகின்றதே யன்றி, தியாஸாபிகல் சொஸைட்டியின்மீது குறைகூற வில்லையென்று கூறினர்.

இவ் வியாஜ்ஜியங்கள் தள்ளிவிடப்பட்டது பத்திரியாசிரியர் களுக்குள்ள சுதந்தரத்தை நன்கு வெளியாக்குகின்றது. பொது விஷயங்களை மேற்கொள்பவர்கள் தாமெடுத்துக் கொண்ட விஷயங்களில் இடை யிடையே உண்டாகும் அவதூறுகளைப் பொருட் படுத்துதல் கூடாது. அன்னி பெசண்ட் அம்மையா ரவர்கள் அவ்வாறு செய்யாது பிரஹ்மஞான சங்கத்தின் மீது வெளியான அவதூறுகளை மிகுதியும் பாராட்டி, கோர்ட்டுமூலமாகப் பரிகாரந்தேட முன்வந்தது பெரும் பிசகேயாம்.

## மண்ணாசை கொண்ட மாபாவி.

ஆர்த்தர் ரோட் என்னு மிடத்திலுள்ள முனிசிபல் நிலங்களைக் குத்தகைக்கு வாங்கி அவற்றில் புல்லும், கறிகாய்களும் பயிர் செய்தவன் பொருட்டு, குண்டி ஜாதியாருக்கும் கும்பக்கார் ஜாதியாருக்கும் கட்சிப்பிரதிகட்சி நெடுங்காலமா யிருந்தது. இம்மாதம் 4-ந்தேதி காலை அங்கிருக்கும் குண்டி ஜாதியா னொருவன் சயனித்துக்கொண் டிருக்கும்போது கும்பக்கார் ஜாதியார் நால்வர் அவன் வாயையடைத்து அவனை வெளியே கொண்டுபோய்க் கொலைசெய்து விட்டனர். கொன்றவர் ஓடிப்போய் விட்டனர். ஆனால் கொலைசெய்யப் பட்டவன் வீட்டிற்கு எதிர்வீட்டி லிருக்கும் ஒருவன் தான் மேற்படி நிலங்களைக் குத்தகைக்கு வாங்கினவனென்றும், அவனைத்தான் கொல்ல உத்தேசமென்றும் தெரிகின்றன. நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கின்றது என்னும் பழமொழி பொய்யாகா தன்றோ!

## ஒரு மோட்டார் வண்டி விபத்து.

கோலாரிலிருந்து 20 மைல் தூரத்திலுள்ள ஊரிகாமில் டிப் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜனரல் மிஸ்டர் லேன் என்பவரு

அவர் மனைவியாரும் சர்கூட்டி யிருந்தனர். அவர்கள் வட ஆற்காடு கலெக்டர் மெஜாரி பாங்கஸ் என்பவருடைய விருந்தினரா யிருந்தனர். காலை போஜனமான வுடன் எல்லோரும் கூப்பம் என்னுமிடத்திலிருந்து மோட்டார் வண்டியில் பிரயாண மாயினர். அவர்கள் 15 மைல் சென்றதும் வண்டியின் ரப்பர் ஒன்று வெடித்தது. அதனால் வண்டி ரோட்டின் இடது பக்கத்தில் சரிந்தோடியது. அங்கு ஒரு மரத்தின் கிளை நீண்டிருந்தது. அது லேன் துரைசாணியின் கழுத்தில் தாக்கியது, அதனால் அவ்வம்மையார் உடனே இறந்துபோயினர். மிஸ்டர் மெஜாரிபாங்சும் வண்டியினின்றும் கீழே விழுந்து காயமடைந்தனர். இவ்விபத்தினால் நாம் ஒவ்வொரு நிமிஷமும் ஆபத்தின் வாயிலேயே யிருக்கின்றோ மென்பது நன்கு விளங்கும்.

1911- 12-வது வருஷத்தில் ரயில்வேயில் நிகழ்ந்த விபத்து.

இந்தியா முற்றுமுள்ள இருப்புப் பாதைகளில் சென்ற 1911- 12-வது வருஷத்தில் நேர்ந்துள்ள விபத்துக்களைப் பற்றிய ரயில்வே ரிப்போர்ட்டால், எதிர்பாராத சம்பவத்தால் 49 பேர் இறந்தனரென்றும், அத்தகைய சம்பவத்தால் 322 பேர் காயமடைந்தன ரென்றும், 42 கோடியே 40 லட்சம் பேர் பிரயாணஞ் செய்தன ரென்றும், ஜனங்கள் தமது சொந்த அஜாக்கிரதையினாலும் தண்டவாளத்தைக் கடந்து செல்லல் முதலிய வற்றாலும் 1711 பேரிறந்தன ரென்றும், காயமடைந்தவர் 1051 பேரென்றும் தெரிய வருகின்றன.

ஹெட்ஜாஸ் யாத்திரிகர்களுக்கு நேர்ந்த விபத்து.
800 பேர் வெள்ளத்தில் மூழ்கிப் போயினர்.

எம்போவி லிருந்து 150 ஒட்டகங்களில் சாமான்களேற்றிக்கொண்டும், மேடீனாவிலிருந்து 400 ஒட்டகங்களின் மீது சாமான்களேற்றிக்கொண்டும் வர்த்தகர்கள் வியாபார விஷயமாகச் சென்றனர். அவர்களைத் தொடர்ந்து ஏழையாத்திரி கர்களான இந்துக்களும், சௌடாணி யர்களும் சென்றனர். இவ்விரண்டு கூட்டத்தாரும் சென்ற ஜனவரிமாதம் 6-7ந் தேதிகளில் ஹெட்ஜாஸி லிருக்கும் எல்ஹம்ராவில் சந்தித்து இரண்டு மலைகளுக்கு இடையே தங்கினார்கள். திடீரென்று அங்கொருபெரு வெள்ளம்வந்து அங்கிருந்த சுமார் 800 பேரை அடித்துக்கொண்டு போய்விட்டது. இவர்களுள் பெரும் பான்மையோர் இந்துக்களே. ஒட்டகப் பாகர்கள் தமது ஒட்டகங்களைக் கூட்டிக்கொண்டு தப்பிப்பிழைத்தனர். ஒட்டகத்தின் மீது ஏறிச் சென்றவர்கள் கனவான்களாகவே யிருந்தனர். வெள்ளப்பெருக்கு



அதிமாக இருந்தமையின், வஸ்தா பத்தர் என்னும் கிராமங்களும் வெள்ளத்தில் மூழ்கிச் சேதமாயின. இதனால் 2300 பெடுயின் ஜாதியார் மரணமடைந்தனர். இவ்வெள்ளத் தினால் ஹெட்ஜாஸ் ரயில்வேயும் சேதமடைந்தது.

முதலை வயிற்றில் புதையல்.

எகிப்து தேசத்தின் கரையோரத்தில் ஓர் ஐரோப்பியன் சுட்டுக்கொன்ற 28 அடி நீளமுடைய ஒரு முதலையின் வயிற்றில் 419 பவுண்டு அடங்கிய பையொன்றிருந்தது. அது லண்டன் காட்சிச் சாலைக் கனுப்பப்பட்டது.

பெண்ணின் நேசத்தால் நேர்ந்த ஒரு பெருங்கேடு.

இரங்கூனில் காளி முத்து என்பவனைச் சிநேகஞ் செய்திருந்த மகாலட்சுமி யென்பவள் தன் புருஷன் இந்தியாவிலிருந்து வந்து விடவே அவனது சிநேகத்தை விட்டு விட்டாள். அதனால் காளி முத்திற்குக் கோபமுண்டாய், அவளைப் பத்திடத்திற் கத்தியாற்குத்திக் காயப்படுத்தி, தன்னையும் குத்திக்கொண்டான். அந்த ஸ்திரீ சென்ற மாதம் 23-ந்தேதி ஆஸ்பத்திரியிலிறந்து போனாள். காளிமுத்தோ ஆஸ்பத்திரியில் அபாயகரமான ஸ்திதியிலிருக்கின்றான்.

சண்டைப் பதக்கம் பெற்றவள்.

ஆப்பிரிக்காவில் போயர் சண்டை நடந்தபோது சேனைகளுக் குழைத்து வந்த மேரியென்னும் ஒரு ஸ்திரீக்கு யுத்த அதிகாரிகளிப்போது ஒரு சண்டைப் பதக்கம் இனாமாகக் கொடுத்தனர். இந்த ஸ்திரீ இரட்சணிய சேனையைச் சேர்ந்தவள்.

ஒரு பெண் கொலை.

கொழும்பி லுள்ள கந்தசாமி யென்பவன், தன்மனைவியோடு விறகு பொறுக்கக் காட்டிற்குச் சென்றான். அவன் அங்கவள் ஏதோ ஒருகாரணம் பற்றித்திட்டினதைப் பொறுக்கமுடியாது, அவளைத் தன்கையி லிருந்த கோடரியால் வெட்டிக்கொலை செய்துவிட்டான். அதுபற்றி அவன் அந்த 5 வருஷங் கடுங்காவற் றண்டனை விதிக்கப்பட்டான்.

102-வயதில் பாரிஸ்டர் உத்தியோகஞ் செய்யு மொருவர்.

இங்கிலாந்தி லுள்ள பிரைடன் என்னும் நகரில் 102-வயதுள்ள வில்லியம் ஹேக் என்பவர் பாரிஸ்டர் உத்தியோகஞ் செய்து வருகின்றார். இவர்க்கு க்ஷயரோகம், காசமுதலிய வியாதிகள் வருவதே யில்லையாம். இதற்குக் காரணம் மதுபானஞ் செய்யாதிருத்தலும், காலை மாலைகளில் தேகாப்பியாசஞ் செய்தலு மேயாம்.

மீன்களின் மரணம்.

அமெரிக்காவிற் கருகேயுள்ள பிரின்ஸ் ஆப்வேல்ஸ் தீவைச் சுற்றியுள்ள சமுத்திரம் மூடுபனியால் உறைந்து போயிற்று. அத

னால் அநேக லட்சம் மீன்க ளிறந்துபோயின. சமுத்திரக் கரையில் 50 அடி தூரத்திலிருந்து ஜலத்தில் 300-400 அடி வரையில் மீன்கள் உறைந்து கிடைந்தனவாம்.

ஒரு பெரியவைரச்சுரங்கம்.

தென் ஆப்பிரிக்கா—ப்டோரியா என்னும் நகரத்திற்கு 20 மைல் தூரத்தில் ப்ரீமியர் டயமண்ட் மைன் என்னும் பெயரோடுள்ள வைரச்சுரங்கமே உலகத்துள்ள வைரச்சுரங்கங்களெல்லாவற்றிலும் பெரியதாம். அங்கு நாள் தவறாது 15,300 காபிரிகள் வேலை செய்து வருகின்றனர். 1000 ஐரோப்பிய ருத்தியோகஞ் செய்து வருகின்றனர். ஒவ்வொரு வருஷமும் தென்னாப்பிரிக்காவிலிருந்து ஏற்றுமதி செய்யும் வைரங்களின் மதிப்பு 85 லட்சம் பவுண்டாம்; அவ்வைரங்களுள் நான்கிலொருபாகம் மேற்படிசுரங்கத்திலெடுக்கப் படுவதாம். அச்சுரங்கத்திலிருந்தெடுத்த 3025 காரெட் நிறையுள்ள ஒரு பெரு வைரம் டிரான்ஸ்வால் கவர்ன்மெண்டாரால் ஜார்ஜ் சக்ரவர்த்தியாருக்கு இனாமாகக் கொடுக்கப்பட்டது. அதைத் துண்டுகளாகச் செய்து அவற்றுள் ஒரு பெருந்துண்டை நமது சக்ரவர்த்தியின் கிரீடத்தில் வைத்திழைத் திருக்கின்றனர்.

குடி விலக்கு.

அமெரிக்காக் கண்டத்துள்ள ஐக்கிய மாகாணத்துப் பிரசிடெண்டாகிய மிஸ்டர் வில்ஸன் இனிச் சாராயங் குடிப்பதில்லையென்று விரதங் கொண்டிருக்கின்றனர். நம்முடைய தேசத்துக் காது குத்திய துரைகளோ சாராயங் குடியா திருப்பதில்லையென்று விரதங் கொண்டிருக்கின்றனர்.

இலங்கைக்குச் செல்லும் கூலியாட்கள்.

இலங்கைக்கு 1911 வது வருஷத்தில் 97, 803 கூலியாட்களும், 1912 ம் வருஷத்தில் 149, 042 கூலியாட்களும் கங்காணிகளின் வசப்பட்டுச் சென்றனர். இவர்களின்கதி அங்கு அதோகதியேயாம். கங்காணிகளின் பசப்பு வார்த்தையால் ஏழைகள் ஏமாந்து போகின்றனர். பாவம்.

நீண்ட ஆயுளுடையவர்.

இப்போது ஐரோப்பாவிலே 7000 பேர் நூற்றுக்குமேற் பட்ட வயதுடையவராக விருக்கின்றனர்.

லண்டன்மாநகரில் பிரசுரமாகும் தினசரி பத்திரிகைகளின் தொகை 38ஆம்



ஒரு பரிதாபமான கொள்ளை.

(ஒன்பது பேரிறந்தனர்.)

வங்காளத்தைச் சேர்ந்த மிட்னபூரிலுள்ள அமல்பூ ரென்னும் கிராமத்தில் 40 கொள்ளைக்காரர் ஈட்டி துப்பாக்கி முதலிய ஆயுதங்களுடன் வந்து, ஒரு வீட்டின் கதவை உலக்கையாலிடித்துத்திறந்து, உள்ளே சென்றனர். அதை யறிந்து அவ்வீட்டின் தலைவன் புழைக்கடை வழியாகக் கிராமத்து ஜனங்களைக் கூட்டிவர ஓடினான். கொள்ளைக்காரர்களோ அவ்வீட்டில் பெண்களும் குழந்தையுமாக விருந்த ஒன்பதுபேரை, ஒரு சிறு வீட்டிற் றள்ளிக் கதவைப் பூட்டிவிட்டுக் கொள்ளை கொள்ளத்தொடங்கினர். இவர்கள் இவ்வாறு செய்யும்போது கிராமத்து ஜனங்கள் வந்து சூழ்ந்து கொண்டனர். அக்கொள்ளைக்காரர் வீட்டில் தீ வைத்துவிட்டு, எதிர்த்தவர்களுள் பலரைப் படுகாயப் படுத்திப் போயினர். சிறு வீட்டி லடைபட்டிருந்த ஒன்பதின்மரும், நெருப்பால் வெந்து, ஆஸ்பத்திரியி லிறந்து போயினர்.

ஒரு சோற்றுக் கடைக்காரனது மோசம்.

நான்கு கூலியாட்கள் கொழும்பில் தூத்துக்குடிக்குப் போகின்ற பங்காலர் என்னும் கப்பலில் 8 டிக்கட்டுக்களைக் கப்பலுக்கும் தோணிக்குமென்று கூறி, டிக்கட்டுச்சேர்ப்பவனிடத்திற் கொடுத்தனர். அவை டிராம் வண்டி டிக்கட்டுகளாக இருந்தமை பற்றி அவன் அவர்களைப் போலீசார் வசத்து மோசஞ் செய்ய வந்தனரென்று ஒப்புவித்தனன். விசாரணையில் பிறக் கோட்டையில் சோற்றுக்கடை வைத்திருக்கு மொருவன் இவர்களிடத்துக் கப்பல் சார்ஜுகளுக்கு வேண்டிய ரூபாய்களை வாங்கிக்கொண்டு டிராம்வண்டி டிக்கட்டுக்களைக் கொடுத்தானென் றேற்பட்டது. அதுபற்றிக் கடைக்காரன் அங்கு 6 மாதம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டான்.

ஒரு பெண் பிணத்தைக் கண்டு பிடித்த ஒரு நாய்.

வார்விக்ஷயர் என்னு மூரிலுள்ள ஒரு தெரு மார்க்கமாக இரண்டைரோப்பியர் சென்றபோது, அவர்களுடன் சென்ற ஒரு நாய் திடீரென்று ஒரு பள்ளத்தில் விரைந்து சென்றது. அதுகண்டு அவர்கள் அப்பள்ளத்திற்குள் சென்றபோது அங்கொரு பெண் பிண மிருக்கக் கண்டனர். உடனே அப்பிணம் போலீஸார் விசாரணைக்கு வந்தடக்கஞ் செய்யப்பட்டது.

### ஸ்திரீ கோர்ட்.

சிக்காகோ நகரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஸ்திரீ கோர்ட்டில் ஜட்ஜி வேலை கற்றுக்கொள்ளும் ஜட்ஜி, கிளர்க், ரைட்டர், லாயர்கள், ரிப்போர்ட்டர்களெல்லாம் ஸ்திரீகளே. இக்கோர்ட்டில் ஸ்திரீகள் சம்பந்தப்பட்டிருக்கும் கேசுக்களெல்லாம் நன்கு விசாரணை செய்யப்பட்டு ஸ்திரீகளுக்கு நியாயங் கிடைக்கின்றதாம். தமது குறைகளைப் புருஷ ஜட்ஜிகளிடத்தில் வெளியிட நாணங் கொண்டிருந்த ஸ்திரீகள் யாவரும் இக்கோர்ட்டில் தமது குறைகளைக் கூறிப் பரிகாரந் தேடிக்கொள்ளுகின்றனர்.

### இரண்டு துஷ்ட ஐரோப்பியர் அபராதம் விதிக்கப்பட்டனர்.

லண்டன்மா நகரிலுள்ள ஒரு தெருவில் சென்று கொண்டிருந்த இரண்டிந்துக்கனவான்களை இரண்டு ஐரோப்பியர் பலவந்தமாகச் சென்று எதிர்த்து, ஒருவருடைய கையையும் கழுத்தையும் பிடித்துத் தள்ளிக்கொண்டு போயினர். அது கண்டு ஒரு போலீஸ் கான்ஸ்டேபில் வந்து அவர்களைப் பிடித்தபோது, அவர்கள் அக்கான்ஸ்டேபிலை நோக்கி "என்ன இந்தக்கரியனுக்காகவா" என்று கூறினார்கள். அக்குற்றத்திற்காக அத்துஷ்டர்கள் அங்கு 43 ஷிலிங் அபராதம் விதிக்கப்பட்டனர். கறுப்புத் தோலுக்கு மதிப்பில்லையென்று கருதும் வெள்ளைத் தோலர்க்கு என்று நற்புத்தியுண்டாகுமோ?

ஆஸ்திரேலியாவில் சென்ற 1912-வது வருஷத்தில் 8226 பேர் ஜனத்தொகையி லதிகரித்திருக்கின்றனர்.

### வியபிசாரத்தால் நேர்ந்தகொலை.

நாகர் கோயிலுக்குத் தெற்கே மூன்று மையில் தூரத்திலுள்ள வண்ணான்விளை என்னும் கிராமத்தில் வசிக்கும் ஒருவன் அங்குள்ள ஒரு குடும்பத்து ஸ்திரீயினிடத்துச் சிநேகம் செய்து வந்தான். இதை வெகு நாளாகக் கவனித்து வந்த அந்த ஸ்திரீயின் சொந்தக்காரனொருவன் சில தினங்கட்குமுன் அவனைச் சேர்ந்த ஒருவனது வாயிலாக அவன் சாப்பிடும் வாழைப் பழம் சர்க்கரை முதலியவற்றில் விஷத்தைக் கலக்குமாறு செய்தான். அவற்றை யுண்ட நால்வரில் ஒரு ஸ்திரீ உடனே இறந்து போனாள். மற்றை மூவர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை செய்யப்பட்டு வருகின்றனர்.



### 110 வயதிற்கு மேற்பட்ட ஒரு மனிதன்.

தஞ்சாவூர்ஜில்லா பட்டுக்கோட்டைத் தாலூக்கா காரியாவிடுதியென்னுங் கிராமத்தில் அம்பலகார ஜாதியைச் சேர்ந்த சொக்கன் பூசாரியென்னும் ஒரு கிழவனிருக்கிறான். அவன் சொல்லு மனுபவ விஷயங்களையும் அவன் பார்த்தவைகளாகச் சொல்வனவற்றையுங் கவனிக்கின், அவை ஏறக்குறைய 100-வருடத்திற்கு முன் நடந்தவையென்று தெரியவருகின்றன. அவன் அந்த விஷயங்களை தான் பார்த்தகாலத்தில் தனக்கு 15, 16 வயதிருக்குமென்று சொல்லுகிறான். இதை நோக்கினால் மேற்படியானுக்குத் தற்காலம் வயது 110க்கு மேலாகவே இருக்குமென்று ஏற்படுகிறது. இந்நிலையில் அவன் புன்செய் நிலங்களில் சாகுபடி செய்யுந் தோட்டப் பல்ன்களுக்குத் தண்ணீரிறைக்கின்றான்; ஆடு மாடுகள் மேய்த்துவருகிறான்; ஞாபகம் குறையாதிருக்கிறான். பால்ய காலம்முதல் அவன் சோம்பலின்றி வேலை செய்து வந்ததன் பயனாக அவனது சரீர மின்னும் நன்னிலையி லிருக்கின்றதென் றூகிக்கப் படுகிறது.

### இங்கிலாந்தின் கல்வி.

இங்கிலாந்து தேசத்தி லொவ்வொரு வருஷமும் சுமார் 6,00,000 பிள்ளைகள் எலிமெண்டரி பாடசாலைகளில் கற்றுத் தேறுகின்றனர்; அவர்களுள் 23 பேர்க்கொருவர் உயர்ந்த பரிட்சைக்கு வாசிக்கின்றனர்; 48 பேர்களுள் ஒருவர் சம்பளமில்லாது படிக்கின்றனர்.

### ஒரு மகம்மதியரின் அரிய செயல்.

காசியிலிருக்கும் ஒரு மகம்மதிய மூல்வி துருக்கி யுத்தத்தில் காயமடைந்தவர்களது உதவியின் பொருட்டுப் பொருளுதவி கேட்டபோது அவருக்கு ஒரு பசுங்கன்று இனாமாகக் கிடைத்தது; அதனை அவர் கோசாலைக் கனுப்பி இந்துக்களுக்கு மனஸ்தாபம் உண்டாகாவாறு செய்தார்; அங்ஙனமே மகம்மதியர்களும் செய்தல் வேண்டுமென்று தமது ஜாதியாரைக் கேட்டுக் கொண்டார்.

### ஒரு ராவணசந்நியாசி.

நாங்குநேரிக்குச் சமீபத்திலுள்ள பெரும்பற்றென்னுங் கிராமத்தில் வசிக்கும் வெள்ளையாவென்னும் ஒரு வாலிப சுவாமியார் அங்குள்ள ஒரு ஸ்திரீக்குக் கர்ப்பாதானஞ் செய்து விட்டனர். அதை அவளது கணவனறிந்து அவளை நீக்கிவிட்டான். சாமியாரை விசுவாசித்துக் கெட்ட இவள்கதி இனி எப்படியோ?

## Glimpses of Truth.

1. Many times must you sink and struggle in water before you learn swimming. So none can enjoy at once the facility of swimming calmly on the Ocean of Divine Bliss until he had made himself fit for it by wearisome struggles and trials.

2. If a man enters the world after acquiring Divine Knowledge, no stain of wealth or lust ever mars the purity of his soul.

3. What is the use of loudly crying "God", "God". Regularly practise devotion and verily you shall see God.

4. The truest worship is the yearning of the soul to liberate itself from the domination of personal appetites and personal ambitions, and to enter into the blessed freedom of harmony and unity with that universal and absolute righteousness and love whose presence and whose authority its own higher nature reveals.

5. If a man is unhaqpy, this must be his own fault, for God made all men to be happy.

6. We may have many pleasures in life, but must not let them have rule over us or they will soon hand us over to sorrow.

7. I am always content with that which happens; for I think that what God chooses is better than what I choose.

8. Seek not that things should happen as you wish; wish the things which happen to be as they are, and you will have a tranquil flow of life.

9. If you wish for anything which belongs to another you lose that which is your own.

10. To render ourselves insensible to pain we must forfeit also the possibiliiy of happiness.

11. Much of what we suffer we have brought on ourselves, if not by actual fault, at least by ignorance or thoughtlessness.

12. Too often we think only of the happiness of the moment, and sacrifice that of the life.

13. Care-worn man has sown vanity to reap despair.

14. Our remedies oft in ourselves do lie, which we ascribe to Heaven.

15. Man ought to be man and master of his fate, but children are at the mercy of those around them

16. The man who is not content with little is content with nothing.


சிவப்பிரகாசப்

# பெருந்திரட்டு.

சொருபாநந்தரால் திரட்டப்பட்டது.

இதுகாறும் வெளிவராதது.

விலை ருபாய் மூன்று—வி. பி. முதலிய சார்ஜ் பிரத்தியேகம்.

மானேஜர், சக்ரவர்த்தினி ஆபீசு,

கோமளேசுவரன் பேட்டை, சென்னை.

**P. S. Sundram & Co.**

Electro-Platers, Gilders and
General Commission Agents.

உயர்ந்த தங்கம் வெள்ளிப் பதக்கங்களும் முதல் தரமான அநேக யோக்கியதா பத்திரங்களும் வெகுமானமாக அளிக்கப்பட்ட பெயர் பெற்ற

பி. எஸ். சுந்தரம் கம்பெனி,

எலக்டிரிக் தங்க நகை வியாபாரிகள்.

107-பெரியதெருவு, திருவல்லிக்கேணி, சென்னை.

எலக்ட்ரிக் தங்கநகை விலைவிவரம்.

32" நீளம் $\frac{3}{4}$" அகலம் 150. }
32" நீளம் $\frac{5}{8}$" அகலம் 210. } அரும்பு இலங்கை கட்டிய

| | | | |
|---|---|---|---|
| 5 வருஷம் காரண்டியுள்ள | மல்லிகை ஒட்டியாணம் | ரூ. 25 | 8 |
| | நாக ஒத்து பெரியது | 12 | 0 |
| | நாகஒத்து சிறியது | 9 | 0 |
| | காரை பெரியது | 10 | 0 |
| | காரை சிறியது | 7 | 8 |
| | வங்கி பெரியது | 10 | 0 |
| வருஷம் காரண்டியுள்ள | மல்லிகை ஒட்டியாணம் | 19 | 8 |
| | நாகஒத்து பெரியது | 9 | 0 |
| | ஷை சிறியது | 6 | 12 |
| | காரை பெரியது | 7 | 8 |
| | ஷை சிறியது | 5 | 12 |
| | வங்கி சிறியது | 8 | 0 |
| 1½-வருஷம் காரண்டி யுள்ள மல்லிகை ஒட்டியாணம் | ... ... | 13 | 8 |
| மல்லிகை ஒட்டியாணம் காரண்டியில்லாதது | ... ... | 8 | 8 |
| ஜாமத்திப்பூ | | 1 | 8 |
| ரோஜாப்பூ | | 1 | 8 |

# கதாமஞ்சரி.

இஃதோரு மாதாந்த சஞ்சிகை. டிம்மி 24 பக்கங் கோண்ட
3 பார அளவில் மாதந்தோறும் வெளிவரும்.

இதில் கதாசரித் சாகரத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு அடங்
யிருக்கின்றது. இக்கதை பூர்வம் உமாதேவியாரின் பிரீதியார்த்
தம் பரமசிவனால் திருவாய்மலர்ந்தருளப்பட்டது. இப்பரத கண்
டத்தின் வடமேற் கெல்லைப் புறத்தின்கண் காஸ்மீர தேசத்தை
800 வருடங்கட்கு முன்னர் ராஜ்ய பாரஞ் செய்துவந்த ஸ்ரீ ஹ
ஷன் என்னும் அரசன் தனது ராஜ்யத்தில் நேர்ந்த யுத்தத்தி
மரணமடைந்தனன்; மன்னனிறந்த துக்கத்திற் காற்றாத சூரி
வதி யென்னும் அன்னையாரின் சோகத்தை நிவர்த்திக்குமாறு இ
கதை சோம தேவரால் இயற்றப்பட்டது. இக்கதையின் போக்
நவ நவமாகவும், படிப்போர்க்குப் பரமாநந்தத்தைப் பயப்பிப்
தாகவு மிருக்கும். மேலும், இது தெய்வபக்தி, வைராக்கியம், ந
லொழுக்கம் முதலிய நல்லனவெல்லாம் நலமுறப் பொருந்துமா
செய்யும். இதன் பெயருக் கேற்றவாறே கதையும் சாகரம் போல
று விளங்கும் இது யாவரும் செவ்விதி னுணருமாறு எளி
வசன நடையி லெழுதப்பட்டுள்ளது.

| சந்தாவிவரம். | | | |
|---|---|---|---|
| வருஷம் 1க்கு ரூ. | 1 | 0 | 0 |
| ஆறு மாதத்திற்கு | 0 | 10 | 0 |
| தனிப்பிரதி | 0 | 2 | 0 |
| வெளி தேசத்திற்கு | | | |
| வருஷம் 1-க்கு | 1 | 8 | 0 |
| ஆறு மாதத்திற்கு | 0 | 14 | 0 |
| தனிப்பிரதி | 0 | 3 | 0 |

| விளம்பர விகிதம் | | |
|---|---|---|
| மாதம் 1க்கு பக்கத்திற்கு | 1 | 0 |
| " ½ பக்கத்திற்கு | 0 | 10 |
| " ¼ பக்கத்திற்கு | 0 | 6 |
| சில்லரை விளம்பரங்களுக்கு வரி 1க்கு அணா | 0 | 1 |

திரு. அ. சுப்பிரமணி பாரதியார்,
மானேஜர், லோகோபகாரி ஆபீசு,
சோமசேகரன் பேட்டை, சென்னை.

## 170-பக்கப் புத்தகம் இனாம்!

இது நல்ல ஆரோக்கியமும் நீடித்த சுகவாழ்வும்தரும்; இயற்கையாயுள்ள சில விதிகளை அனுசரிப்பதைப் பொறுத்திருக்கிறது. இச்சிறந்த புத்தகம் சுகவழியைக் காட்டி, நல்ல ஆரோக்கியத்தோடும் எப்பொழுதும்திட காத்திரத்தோடும், நீண்ட ஆயுளோடு மிருக்கும்படி செய்து நல்ல அதிர்ஷ்டத்தைக் காட்டும். இப்புஸ்தகம் இனாமாகவும் தபாற் செலவில்லாமலும் அனுப்பப்படும்.

☞ இப்புத்தகத்திற்கு இன்றைக்கே எழுதுங்கள்.

வைத்திய சாஸ்திரி
**மணிசங்கர் கோவிந்தஜி,**
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
22, பிராட்வே & 96. மவுண்ட்ரோட், மதராஸ்.
ஏஜெண்டு:—M. A. நெல்லையப்ப முதலியார்,
38 சின்னகடைத்தெருவு, திருச்சினாப்பள்ளி.

## ஆனந்த ராமாயணம்.

இதுவரையில் தமிழில் வெளிவராதது.

இது வால்மீகி மகாரிஷியால் வடமொழியில் இயற்றப்பட்டுள்ளது. இதில் வால்மீகி ராமாயணத்தில் இல்லாத அநேக விஷயங்கள் அடங்கியுள்ளன; ஸ்ரீராம லட்சுமணருடைய ஜனனமும், வளர்ப்பும், சீதாதேவியினுடைய ஜனனமும், அத்தேவிக்குப் பல பெயர் வந்ததற்குக் காரணமும் விளக்கி யிருப்பது வெகு இனிமையாயிருக்கும். இஃது ஆனந்த ராமாயணமென்னும் பெயருக் கேற்றவாறு படிப்போர் மனதிற்கு உற்சாகமும், ஆநந்தமும் உண்டாக்கும்; இதில் அநேக சித்திரப் படங்க ளடங்கியிருக்கின்றன. விலை ரூபாய் **5.** தபாற் கூலி வேறு.

மானேஜர்:—
சக்ரவர்த்தினி ஆபீஸ்,
சென்னை.

# பட்டுப் பீதாம்பர கம்பெனி, காசி.

திருப்தி யில்லாதவைகள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படும்.

பட்டுப் பீதாம்பர காட்லாக்கு இனமாக அனுப்பப்படும்.

உருத்திராக்ஷங்கள் !! ஜபமாலைகள் !!

பரிசுத்தமானவை.

108 உள்ள மாலை 1-க்கு 6-அணா முதல் ரூபாய் 12-வரை. விலை அதிகப் படுவதுபோல் மணிகள் சிறிதாக இருக்கும். 6-முகக் கண்டிகள் 33-உள்ளது; கண்டி 1-க்கு ரூபாய் 1-முதல் 10-வரை. 5-முகக்கண்டி 32-உள்ளது; கண்டி 1-க்கு அணா 10-முதல் ரூபா 10 வரை. விலை அதிகப்படுவது போல் மணிகள் பெரிதாக இருக்கும்.

## வெண்பட்டு வேஷ்டிகள்.

சுத்தமான வெண்பட்டு வேஷ்டிகள் கோயம்புத்தூர் வேஷ்டிகள் மாதிரி சன்னகம்பி, ருத்திராக்ஷ கம்பி, ஜரிகை கம்பி போட்டவை.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | முழம் | 2 | அகலம் | 1-க்கு | ரூபாய் | 4-8-0-முதல் | | 7 | வரை |
| 6 | ,, | 2½ | ,, | 1-க்கு | ,, | 7 | ,, | 9 | ,, |
| 6 | ,, | 3 | ,, | 1-க்கு | ,, | 10 | ,, | 12 | ,, |
| 7 | ,, | 2½ | ,, | 1-க்கு | ,, | 8 | ,, | 12 | ,, |
| 7 | ,, | 3 | ,, | 1-க்கு | ,, | 10 | ,, | 14 | ,, |
| 8 | ,, | 3 | ,, | 1-க்கு | ,, | 12 | ,, | 18 | ,, |
| 9 | ,, | 3 | ,, | 1-க்கு | ,, | 14 | ,, | 20 | ,, |
| 10 | ,, | 3 | ,, | 1-க்கு | ,, | 15 | ,, | 22 | ,, |

பனி ! பனி !! பனி !!!

பனிக்கு அடக்கமான சுத்தமான சம்பளி ரோமத்தால் செய்த உறுதியும், நைஸும், நேர்த்தியுமான கம்பளிப் போர்வைகள், 6-முழம் நீளம் 3-முழம் அகலம் சிகப்பு முதலிய சகலநிறத்திலும் தயாராக இருக்கின்றன. உருப்படி 1-க்கு ரூபாய் 5-8-0. ஷை சிறிது 1-க்கு ரூபாய் 4-8-0. மேக வர்ணப் போர்வைக்கு ரூபாய் 6 8 0. தபாற் செலவு பிரத்தியேகம்.

## காசி வயிரவர் கயிறு.

1-வது நெம்பர் 100-க்கு... 3 0 0. 3-வது நெம்பர் 100-க்கு...2 0 0
2-வது நெம்பர் 100-க்கு... 2 8 0 4-வது நெம்பர் 100-க்கு...0 6 0

## குழந்தைகள் !

குழந்தைகள் விளையாடக் கூடிய பித்தளை வெங்கலத்தால் செய்த செம்புக்குடம், கரண்டி முதல் 32 சாமான்கள் அடங்கிய அழகும் நேர்த்தியும் நைஸும் பளபளப்புமுள்ள அழகிய பாத்திரங்கள் 32 உள்ள சிறு செட்டு 1-க்கு ரூபாய் 2 0 0. பெரிய செட்டு 1-க்கு ரூபாய் 4 0 0.

உடனே எழுதுங்கள். விலாசம்—மானேஜர்,
பட்டுப் பீதாம்பர கம்பெனி, தாராநகர் தெரு,

*MANAGER,*
*Silk Petamber Co., Daranagar Street, Benares City.*



# சக்ரவர்த்தினி.

" கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்,
மற்றீண்டு வாரா நெறி".

Vol VIII. தொகுதி அ. | JUNE 1913. ஜூன்மீ 1913. | No - 11 பகுதி - கக


## இராஜவிசுவாசம்.

"உப்பிட்டவரை யுள்ளளவும் நினை" என்னும் பழமொழியினை நன்கு உய்த்துணர்ந்து நோக்குமிடத்து, எப்போதாயினுமொருபகாரஞ் செய்தவரைச் சாவளவும் மறத்தல் கூடாதென்பது விளங்குவதாமன்றோ? நாம் உண்டுடுத்திப் பயமின்றி ஒழுகுவதற்கு முக்கிய காரணமாயிருந் துதவுவது யாதென்று சிறிது நோக்குவோமாயின் அஃது அரசனது நீதியேயா மென்று நன்கு புலனாவதாம்; ஆகவே, அந்நீதியையுடைய வரசனை மறப்பதொரு போதுங் கூடாதாம். அரசனது நீதியினாற்றான் குடிகள்,

"மாநிலங்கா வலனாவான் மன்னுயிர் காக்குங்காலைத், தானதனுக் கிடையூறு தன்னாற்றன் பரிசனத்தால், ஊனமிகு பகைத்திறத்தாற் கள்வரா லுயிர்தம்மால், ஆனபய மைந்துந்தீர்த் தறங்காப்பா னல்லனோ".

என்று பெரிய புராணங் கூறியவாறு ராஜாங்க உத்தியோகஸ்தர், பகையரசர், கள்வர் முதலியவராலும் துஷ்டமிருகங்களாலும் வாதையடையாது வாழ்ந்து வருகின்றனர். அரசன் தன்னாலும் தன்பரிசனமாகிய மந்திரி முதலிய உத்தியோகஸ்தராலும் பகையரசராலும் கள்வராலும், துஷ்ட மிருகங்களாலும்,

தீங்குவாரா வண்ணம் குடிகளைப் பாதுகாவாவிடின், குடிகளின் நிலைமை தடுமாற்றமுடைய தாகாது வேறென்னும்? குடிகளுக்குத் தடுமாற்ற முண்டாகாவாறு அவர்களை நீதியோடாளும் அரசனிடத்து விசுவாசமில்லாத குடிகள் இம்மையிலே யன்றி மறுமையினும் துன்பமடைவதற் குரியவராவர். அரசனது நீதியாற்றான் குடிகள் நன்னெறியி லொழுகி நன்னிலையை யடைதற் குரியவராகின்றனர்.

குடிகள் அறநெறியி லொழுகுவதற்கும் அதற்குரிய நூல்களைக் கற்பதற்கும், பொருள் நெறியி லொழுகுவதற்கும் அதற்குரிய நூல்களைக் கற்பதற்கும், கற்புடைய மனைவியோடு கூடிவாழுவதாகிய இன்பநெறியி லொழுகுவதற்கும் அதற்குரிய நூல்களைக் கற்பதற்கும், சிந்தையும் மொழியுஞ் செல்லா நிலைமையதாகிய வீட்டுநெறியி லொழுகுவதற்கும் அதற்குரிய நூல்களைக் கற்பதற்கும் காரணம் அரசனது நீதியாயிருத்தலை நோக்கி, அரசனைத் தெய்வமாகக் கொண்டாடிப் போற்றுகின்றவர்கள் தாம் உண்மையான ராஜவிசுவாசிகளாவர். எவரிடத்தும் காரணமின்றி விசுவாசமுண்டாவது கூடாமையின், காரணமிருந்தாற்றான் விசுவாசமுண்டாவதாம். பெரும்பான்மையும் குடிகள் தத்தம் வீடுகளில் அச்சமின்றி வாழுவது அரசனது பாதுகாவலாலன்றி வேறெதனாலாம் ?

“அறம்பொரு ளின்ப மான வறநெறி வழாமற் புல்லி, மறந்தடிந் தாசர்போற்ற வையகங் காக்கும்” மன்னவனைப் பெறுங் குடிகளுக்கு இராஜாங்க உத்தியோகஸ்தர் முதலியவர்களால் தீமை வருவது அற்பத்தினும் மிகு அம்பமேயாம். “முத்திலுஞ் சொத்தையுண்டு, மிளகிலும் பதருண்டு” என்னும் பழமொழிக் கிணங்க, முற்றுங் குற்றமில்லாத அரசாட்சியைப் பெறுவது எக்காலத்து மியையாததாம். நியாயாதிபதிகள், நியாயவாதிகள், நாடு நகரக்காவலர், ராணுவத்தார் முதலியோரிருப்பது எதனால்? நாடு நகரங்களில் சிறிய மீனைப்பெரிய மீன் விழுங்குவது போல எளியார் சொத்தை வலியார்கொள்ளாமலும், கள்வர் களவுசெய்யாமலும், பகைமன்னர் பிரவேசித்து வருத்தாமலு மிருத்தற்கன்றோ? அரசனுத்தியோக்ஸ்தராக நியாயவாதிகள் முதலாயினோ ரிருப்பது நாடு நகரங்களில் அக்கிரமங்கள் நிகழ்கின்றன வென்பதை யுணர்த்துவதாம். அரசன் இவ்வக்கிரமங்களைத் தலையெடுத் தோங்காவாறு செய்ய முயலும்போது சிறிது சிறிது தவறு ஓரானொரு



போதுண்டாதல் கூடும். அதுபற்றி, அவனை வெறுப்பது ஒருபோதுங் கூடாது. உத்தியோகமோ, வர்த்தகமோ, உழவோ, மற்றெதுவோ நம்மனோர் செய்யும்போது எத்தனையோ தவறுகளுண்டாகின்றன அல்லவா? சிறுசிறுகாரியஞ் செய்யும்போதே பெரிய பெரிய தவறுகளுண்டாவதாயின், தேசத்தைக் காப்பதாகிய பெருங்காரியத்தை நிர்வகித்து நடத்தும் அரசனிடத்து ஓரா னொருதவறுண்டாகாமற் போமோ? இத்தவறுபற்றி ராஜவிசுவாச மில்லாதிருப்பது நற்குடிகளின் இலக்கண மன்றாம்.

“நெல்லுமுயி ரன்றே நீருமுயி ரன்றே, மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்” என்று புறநானூறு கூறியவாறு மன்னுயிரைத் தன்னுயிராகக் கருதியாளும் அரசன் தவறுதற்கேது, குடிகளின் பொய், கொலை, களவு முதலியனவேயாம். குடிகள்பொய் பேசாதும் கொலைசெய்யாதும் களவுசெய்யாதும் மற்றுமுள்ள சூதாடுதல் முதலியவற்றைச் செய்யாதும் ஒழுகுவராயின், அரசனிடத்துத் தவறுண்டாவதற்குக் காரணமில்லா தொழியும். அரசன் ஓரா னொருசமயத்தில் தவறு செய்வதற்குக் காரணம் குடிகளின் தீயவொழுக்கங்களேயாம். குடிகள் தீயவற்றைச் செய்யாதிருப்பாராயின், அதுவே மிகப்பெரிய ராஜவிசுவாசமாம். குடிகள் செய்த தவறுகள் நாடுவிசாரணைக்கு வரும்போது நியாயவாதிகள், சான்று கூறுவார், நகரக்காவலர் முதலாயினோரது மாறுபாடான சொற்களால், பொய்மெய்யாகவும் மெய்பொய்யாகவும் விளங்குவதாகின்றன; அதனால் அரசன் செய்யுந் தீர்மானம் ஒரோவழித் தவறுடையதாகின்றது. அத்தவறு நிகழ்தற்குக் காரணம் குடிகளது தவறாக விருத்தலின், குடிகள் அரசனிடத்துத் தவறுண்டாகாதிருக்கத் தாம் தவறாக நடப்பதொழிக்கவேண்டும். குடிகள் தவறாக நடப்பதொழிவாராயின், அரசன் செய்வன: தன் பரிசனத்தைக் குடிகளுக்குத் தீமைசெய்யாவா றடக்கியாளுதலும், பகைமன்னர் தனது தேசத்திற் புகாவாறு போர்ப்படை கொண்டு தனது தேசத்தைக் காத்தலும், நாடுநகரக்காவலரைக் கொண்டு கள்வரைக் கண்டுபிடித் தடக்குதலும், துஷ்டமிருகங்களை வேட்டையாடித் தொலைத்தலுமாம். இவ்வாறு செய்துவரும் அரசனை விசுவசியாம லிகழ்பவர் பாவிகளேயாவர்!

அரசன் ஒரோவிடத்து அறிவுமயங்கித் தீமையானவற்றைச் செய்தபோது, குடிகளுள் தலைவராக விருப்பவர் அமைச்சர் (மந்

திரிகள்) முதலாயினோர் வாயிலாக நல்லனவற்றைக் கூறி, அவனைத்திருத்த முயல வேண்டுமேயன்றி அவனை வெறுப்பது தகுதியுடையதன்றாம். கை கண்ணிற் குத்தியதென்று கையையறுத்தெறிந்து விடுகின்றோமா? இல்லை! தீயனவற்றை யறிவுமயங்கிச் செய்யும் அரசனுக்கு நற்போதமுண்டாகுமாறு பொறுமையாக விருந்து தமது குறைகளைக் கூறிவரும் குடிகளின் தலைவர்க்குச் சிலசமயங்களில் கெடுதிவருவது நிச்சயமாம். அதுபற்றியும் குடிகள் அரசனை வெறுப்பது கூடாது. இவ்வரசனிப்போது நமது தீவினைவயத்தால் தீமை செய்வானாயினான்; அதுமறக்கருணைபோல்வதாம்; இவன் முன்போல நல்லறிவுடையவனாக வேண்டுமென்று குடிகள் கடவுளைநோக்கிப் பிரார்த்திக்கவேண்டுமேயன்றி, இவ்வரசன் நமக்குவேண்டாமென்று வெறுப்பதுஒருபோதுங்கூடாது. நாமே நமது மனைவிமக்கள் முதலாயினோர்க்குச் சிலசமயங்களில் தீமைசெய்வதுபோல அரசனும் சிலசமயங்களில் குடிகளுக்குத் தீமைசெய்கின்றான்;நாம் பிறகு தீமைசெய்வதொழிவதுபோல அரசனும் தீமை செய்வதொழிகின்றானென்று தீர்மானித்துச் சிலசமயத்துப் புத்திமயங்கித் தீமைசெய்யும் அரசனையும் கடவுளாய்ப் போற்றி விசுவசிக்கவேண்டும். குடிகள் தன்னிடத்து விசுவாசமாயிருக்கின்றன ரென்றறிந்த அரசன் குடிகளுக்கு ஒருபோதும் தீமை செய்யானென்பது துணிவாமாதலின், குடிகள் அரசனிடத்து எஞ்ஞான்றும் விசுவாச முடையவராக விருத்தல் அத்தியாவசியகமானதாம். அரசனிடத்துப் பூரணவிசுவாசமுடைய குடிகள் பெரும்பான்மையுந் துன்பமடைவதில்லையாம். அரசன் தன்னிடத்துக் குடிகள் விசுவாசமில்லா திருக்கின்றனரென் றறிந்த போது,அவர்களைத் தன்வசப்படுத்தப் பெரும்பான்மையுந் தண்டத்தையே யுபயோகிக்க முயலுகின்றான். இத்தண்டத்தையடைவதற் கேது விசுவாச மில்லாமையாக விருத்தலின், ராஜதண்டனைக்குட்படாது வாழவிரும்புங் குடிகள் ராஜனிடத்து விசுவாசமுடையவராக இருக்க முயலுதல் வேண்டும். தண்டமொன்றாலேயே குடிகளை யடக்கும் அரசனிடத்துக் குடிகளுக்கு விசுவாசமுண்டாவது கூடாமையின், அரசன் தன்னிடத்துக் குடிகளுக்கு விசுவாச முண்டாகக் கூடிய காரியமனைத்தையுஞ் செய்தல்வேண்டும்; இவ்வாறு செய்யுமரசனிடத்துக் குடிகளுக்குள்ள விசுவாசம் என்றும்மாறுவதில்லையாம். குடிகளைவருத்தியாளாத அரசனும்



அரசனிடத்து விசுவாசமுள்ள குடிகளுக்குள்ள தேசமே புண்ணிய தேசமாம். இப்புண்ணியதேசத்திலுள்ளோர் இகலோகவாழ்க்கை பரலோக வாழ்க்கை மோட்சமென்பனவற்றிற்குரிய ஏதுக்கள் நன்றாகச் சித்திப்பனவாம்.

அரசனில்லாது குடிகளாளும் தேசத்திலும் குடிகளுக்குத் தலைவனாக ஒருவனை யேற்படுத்தி வருவதை நோக்குவோர்க்குக் குடிகளைத் தீமையுறாது காக்கத் தலைவனொருவ னத்தியாவசியகமாகவேண்டுமென்பது பெறப்படுமன்றோ? அத்தலைவன்றான் அரசனென்பவன். அவனிடத்து விசுவாசம்வைத்தொழுகுங் குடிகள் தாம் நன்மையென்பனவற்றையெல்லாம் பெறுவதற்குரியவராவர்.

"உலகத்தி லரசனில்லாமற்போனால் பலமுள்ளவனிடத்தில் பலமில்லாதவர்கள் பயத்தாலழிந்து போவர்; ஆகையாலிவ்வுலகெல்லாமழியாதிருத்தற் பொருட்டுக் கடவுள் அரசனைப்படைத்தார்" "அவ்வரசன் சிறுவனாக விருந்தாலும் அவனை மனிதனென் றவமானஞ் செய்தல் கூடாது; ஏனெனின், 'மேலான தேவர்களின்கூட்டமே அந்த அரசனுருவமாகவிருக்கின்றதல்லவா"? என்றுமனுதர்மசாஸ்திரம் ஏழாவதத்தியாயத்திற்கூறுவதை நோக்குமிடத்து, உலகத்தைப் பாதுகாத்தற்பொருட்டுக் கடவுள் அரசனைப் படைத்தாரென்றும் அவனை அவமானஞ்செய்வது கூடாதென்றும், அவன் தேவர்கள் அம்சமானவனென்றும் பெறப்படுதலால், அரசனைக் குடிகள் தாம் நல்வாழ்வுபெற விரோதசிந்தையின்றி விசுவசித்துவரவேண்டுமென்பது விளங்குவதாம்.

இப்போது நமது தேசத்தை நம்மனோர் செய்ததவத்தின் பயனாக ஆளும் 5 வது ஜார்ஜ சக்ரவர்த்தியார் அவர்கள் "நல்லவை செய்வானரசன்" என்பதற் கிலக்கியமாக விருந்து நம்மனோரது குறைகளை யகற்றுவதிலும், நம்மனோரைத் தம்மக்களாகப் பாவித்துப் பாதுகாப்பதிலும், நம்மனோருடைய ஜாதிமதமுதலியவற்றை ரட்சிப்பதிலும், அன்னியதேசத் தரசர்வந்து நம்மை வருத்தாவாறு தேசத்தைக் கடற்படை, தரைப்படைகளைக்கொண்டு கருத்தோடு காப்பதிலும், தமது பரிவாரமாகிய தமது ஜாதி உத்தியோகஸ்தர்களுள் சிற்சிலர் பொதுநோக்கின்மையால் இவர் வெண்ணிறத்தர், இவர் கருநிறத்தரென்று வேற்றுமை புத்திகொண்டு, நம்மனோர்க்குச் சமயம்வந்தபோது செய்யு மக்கிரமங்

களை யடக்குவதிலும்பெருங்கருத்துடையவராய்,பூமாலை தொடுப்பவன் பூந்தோட்டத்தில் பூக்களைமாத்திரங் கொய்வதுபோல நம்மிடத்தில் பகுதிமாத்திரம்பெற்று வருபவராய், நற்குணநற் செய்கைகளுக் குறைவிடமா யிருத்தலினாற்றான், ஹிந்துக்களாகிய நாம் அவரிடத்துப் பூரணவிசுவாசமுடையவராக விருக்கின்றோம்.இவ் விசுவாசம் நம்மிடத்து மாறாதிருக்குமாயின், நாம் எல்லா மேன்மையும் பெறுதற்குத் தகுதியுடையவராவோம்.

ஆத்தி சூடி.

"சக்கர நெறிநில்"

கொன்றை வேந்தன்.

"கொற்றவ னறித லுற்றிடத் துதவி"
"வேந்தன் சீறி னாந்துணை யில்லை"

உலகநீதி.

கொற்றவனோ டெதிர்மாறு பேச வேண்டாம்

நீதிநெறி விளக்கம்.

"அனைவோர்க்குந் தெய்வம், இலைமுகப் பைம்பூ ணிறை"

திருக்குறள்.

"அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்
நின்றது மன்னவன் கோல்".
"கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்,
களைகட் டதனொடு நேர்"

என்றற் றொடக்கத்துப் பிரயோகங்க ளிங்கு நன்குணர்தற்பாலனவாம்.

# இயற்கைப் பாடங்கள்.

## யானை.

286-வது பக்கத்தின் தொடர்ச்சி.

உணவு:— யானையானது காடுகளில் தரையி லிருக்கும் புற்களையும் மரத்தினுச்சியி லிருக்கும் தழைகளையும் பறித்து உண்ணும். குதிரை மாடுபோல புற்களை வாயால் பறிப்பதில்லை. அப்படிப் பறிக்க வேண்டுமானால் நீண்ட கழுத் திருக்க வேண்டுமல்லவா? கழுத்து மிகவும் குட்டையா யல்லவா இருக்கின்றது? குரங்குகளைப்போல் தழைகளைக் கைகளால் பறிப்பதில்லை.ஏனென்றால் இதன் கைகால்கள் அதற்கு அமைந்தவையல்ல. ஆனால் பறிப்பதற்குக் கை ஒன்று இருக்கவேண்டுமல்லவா? ஆம். அதுதான் இதன் துதிக்கை; துதிக்கையை யானையின் நீண்டு வளர்ந்த மூக்கென்று முன் சொன்னோம். ஆனால் அதன் மூக்குமட்டுமல்ல, யானையின் உதடுகளைப் பாருங்கள்; அடியுதடு நீண்டு தொளதொளவென்று தொங்குகிறது; மேலுதடு எங்கே? காணோமே? அது யானையின் துதிக்கையோடு சேர்ந்து விட்டதால்தான் தனியாகத் தெரியவில்லை. இத்துதிக்கையால்தான் யானை மரங்களை வேரோடு பேர்த்துக் கிளைகளையும் தழைகளையும்பறித்தெடுத்து வாயில் போட்டுக்கொள்கிறது. மூங்கில்,நாணல்,வாழை,தென்னை,பனை, கரும்பு, ஆல், அரசு, இந்தச்செடி மரங்களையும், அவற்றின் தழைகளையும் யானை உண்ணும். மரத்தின் பெருத்த தண்டுகளைக் காலால் மிதித்துச் சிறு சிறு துண்டுகளாய்ப்பேர்த்துத் துதிக்கையி லெடுத்து வாயில் போட்டுக்கொள்ளும். இவ்வாறு நாளொன்றுக்குச் சுமார் 700 பவுண்டு நிறையுள்ள பச்சையான உணவை அது உண்ணுகிறது. நாம் வளர்க்கும் யானைக்குச் சோறும் தானியங்களும் கொடுப்ப துண்டு. தானியத்தைத் தனது துதிக்கைக்குள் உறிஞ்சி யெடுத்துத் துதிக்கைநுனியை வாயினுள் விட்டுப் பூவென்று பெரும் மூச்சு விடும். அப்பொழுது தானியங்கள் வாயுள் சென்றுவிடும்.

யானை தாகத்திற்குத் தண்ணீரைக் குடிப்பதுண்டு. வாயால் நீரை உறிஞ்சுவதில்லை. நீரில் துதிக்கையை நுழைத்து அதனுள் நீரை உறிஞ்சி எடுத்துப் பிறகு துதிக்கை நுனியை வாயில்நுழைத்துக்கொண்டு அந்த நீரை உறிஞ்சிக் குடிக்கும். ஆறு குளங்களில் ஸ்நானம் செய்யும்பொழுதும் நீரைத் துதிக்கை வழியே

இழுத்துக்கொண்டு மேலே வீசிக்கொள்ளும். யானையிடத்தில் இன்னொரு விசேஷமுண்டு. அதன் இரைப்பை பெரியதாயிருக்கும்; சிறு சிறு அறைகள் அதிலிருக்கும். அடிக்கடி நீரைக்குடித்து அதில் நிறப்பிக்கொள்ளும். குடிக்க நீர் அகப்படாத பொழுது துதிக்கை நுனியை வாயில் நுழைத்து வயிற்று நீரைத் தன் எச்சிலோடு துதிக்கையுள் இழுத்துக்கொள்ளும். அந்நீரை மறுபடியும் குடித்துத் தாகமாற்றிக்கொள்ளும். தன்மேல் வீசிக்கொள்ளவும் செய்யும்.

பற்கள், தந்தம்:—யானை தாவர பக்ஷணியானதால் அதற்குக் கோரைப்பற்களில்லை; கடவாய்ப் பற்களுண்டு. அவை பக்கத்திற்கு மூன்றாக மொத்தம் 12 உண்டு. அவை ஆடுமாடுகளின்கடைவாய்ப் பற்களைப்போல எல்லாம் வெளியில் நீண்டிரா. வெளியில் பக்கத்திற்கு ஒன்றுதான்தெரியும். சிலவேளை இரண்டும் தெரியும்; யானையின் ஆகிருதிக்குத் தக்கபடி இவை பெரிதாயும் உறுதியாயு மிருக்கும். இப்பற்களின் விளிம்பு கட்டையாயும் நரநரவென்று மிருக்கும். இவற்றால்தான் யானை தன் உணவை நன்றாகச் சதைத்து உண்கின்றது. உணவோடுகலந்த கற்களையும் மணலையும் சேர்த்துச் சதைப்பதால் கடவாய்ப் பற்கள் கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்ந்து கனங் குறைந்து கடைசியில் விழுந்துபோவதுண்டு. இது விழுந்ததும் பின்னிருக்கும் பற்கள் வெளிவந்து உதவுகின்றன. பெருத்த இப்பற்கள் அமைய யானையின் தலை பெரியதாயிருக்கிறது. தலையில் தலையோடும் பெரிதாயிருக்கிறது. தலை எலும்புகள் பெரிதாயிருந்தபோதிலும் அவற்றின் உட்பக்கம் போலாகவிருக்கும். அவ்விடங்களில் காற்று நிரம்பியிருக்கும். அதனால் தலை மிகவும் லேசானதாகும். யானையின் இந்தத் தலை எலும்புகள் தலைமேல் இருபக்கத்திலுமுண்டு உண்டாயிருக்கும் அவற்றிற்கு மத்தகம் என்று பெயர். அதில் முத்துக்கள் உண்டென்று சிலர் மூடத்தனமாய் நம்புவதுண்டு.

இப்பொழுது யானையின் முன் பற்களைப் பாருங்கள். அடிவாயில் ஒன்றுமில்லை. மேல்வாயில் இரண்டு பெரும் முன்பற்கள் இருக்கின்றன. இவற்றைத்தாம் அதன் தந்தம் என்பர். தந்த மிருப்பதால் யானையைத் தந்தியென்று சொல்வதுண்டு. யானையின் தந்தத்தை அதன் கொம்பென்று சொல்வதுண்டு; அது தவறு. இந்தியாவிலுள்ள யானைகளில் பெண்யானையின் தந்தம் சிறிதாயிருக்கும்.



சில ஆண்களுக்கே மிகவும் பெரிதாய் வளர்ந்திருக்கும் ஆப்பிரிக்காவில் ஆண், பெண் இரண்டிற்கும் பெரிய தந்தங்களுண்டு. சில தந்தங்கள் $10\frac{3}{4}$ அடி நீளமும் முன்வளர்ந்து 100-120 பவுண்டு கனமு மிருக்கும். இந்தத் தந்தங்கள் யானையின் தலையிலிருந்து புறப்பட்டு அதன் ஆயுள் பர்யந்தம் சதா வளர்ந்துகொண்டே இருக்கும். உண்ணும்பொழுது இப் பெரிய தந்தங்களை யானை உபயோகிப்பதில்லை. காடுகளில் தன் சத்துருக்களோடு சண்டை செய்து அவற்றைக் குத்திக் கொல்லவும், தனது துதிக்கையால் தூக்கமுடியாத பெரும் பாரத்தைத் தூக்கவும் இவை உதவுகின்றன. சிலயானைக்குத் தந்தம் மிகவும் சிறியதாக இருக்கும். அதற்கு 'டஷ்' என்றுபேர். தரையை உழுது புற் பூண்டுகளைப் போக்கவும் மரத்தின் பட்டைகளைக் குத்திக் கிழிக்கவும் சிறு மரக்கிளைகளைக் கடிக்கவும் இவை உபயோகப்படுகின்றன.

மற்ற மிருகங்களின் முன் பற்களைப் போல யானையின் தந்தம் விழுந்து முளைப்பதில்லை. அவை சதாவளைவாக வளரக்கூடியனவாதலால், எவ்விதத்திலாவது கோணிப்போனால் துதிக்கையைச்சரியாக அசைக்கவொட்டாமல் செய்துவிடும்; சிலவேளை முயலின் முன் பற்களைப்போல யானையின் தேகத்தைப் பொத்து அதைக்கொன்றுவிடும். அதனால் யானையின் தந்தம் ஸரியாய் வளர்ந்தால் அதை வாளால் அறுத்துவிடுவார்கள். யானையின் தந்தம் மிகவும்கீர்த்தியானதாகும். அதிலும் நல்ல முத்து உண்டென்று சிலர் நம்புவதுண்டு. முற்காலத்தில் அரசர்களும் தனவான்களும் தந்தத்தால் செய்த சாமான்களை உபயோகித்தார்கள். இக்காலத்தில் சகலமான பேர்களும் தந்தத்தால் செய்த டப்பா, கத்திப்பிடி, சீப்பு, தடி, புத்தான், பந்து, பொம்மைகள் வைத்திருக்கிறார்கள். அதனால் தந்தவியாபாரம் மிகவும் அதிகரித்திருக்கிறது. இங்கிலாந்திலுள்ள ஷெபீல்ட் என்னும் ஒரு பட்டணத்தில் சுமார் 50000 யானைத் தந்தங்கள் வருஷா வருஷம் செலவாகின்றன. அதனால் வருஷம் ஒன்றுக்கு 25000 யானைகள் கொல்லப்பட வேண்டுமல்லவா? இந்தியாவில் தந்தத்திற்காக யானையை அதிகமாகக் கொல்வதில்லை. ஆப்பிரிக்காவிலிருந்தே பெரும் தந்தம் அகப்படுவதால் அங்கு யானையை அதிகமாகக் கொல்லுகிறார்கள். அப்படி கொன்றபோதிலும் முயல் எலிகளைப்போல வருஷத்தில் பலதடவை அநேகம் குட்டிகளை யானை போட்டு விருத்தியாவதில்லை; ஆனால்

2-3 வருஷத்திற் கொருதடவை ஒரே குட்டிதான் போடுகிறது. அதனால் இப்பொழுது ஆப்பிரிக்காவில் யானைமிகுதியாய் அற்றுப் போய் விட்டது என்று சொல்லலாம். யானையின் தந்தம் வட ஆசியாவிலுள்ள சைபீரியா என்னும் தேசத்திலிருந்து அபரிமிதமாய் அகப்படுகிறது. அங்கு இக் காலத்தில் யானை யில்லை.

சுமார் 10000 வருஷங்களுக்கு முன் நமது தேசத்து யானைவிட மிகப் பெரியதான யானைகள் அங்கு வாழ்ந்திருந்தன. அவையெல்லாம் ஒரு காலத்தில் அதிகப் பனிக்கட்டியால் இறந்துவிட்டன. அவற்றின் தேகம் அப்படியே பனியில் புதைந்துவிட்டன. அதனால் இப்பொழுது அவற்றைப் பனியிலிருந்து வெட்டியெடுக்கிறார்கள். பனியில் புதைந்திருப்பதால் அவற்றின் தேகம் இப்பொழுது கொஞ்சமுங் கெடாமல் ரோமமுள்ள சதையோடு கூடியிருக்கின்றன. அவற்றின் தந்தம் ஒவ்வொன்றும் 15 அடி நீளமும் 250 பவுண்டு கனமுமுடையதாகவிருக்கின்றதாம். நீர்க்குதிரை, கடல்யானை, காட்டுப் பன்றி இவற்றிலிருந்தும் தந்தம் அகப்படுவதுண்டு. ஆனால் அவை சிறியனவாயிருக்கும்.

யானையின் தலைக்கு இருபக்கத்திலும் பொட்டில் ஒரு விதத் தைலப்பையுண்டு. சில ஆண் யானைகளில் சில வற்றிற்குச் சில வேளை இதில் தைலம் அதிகமாயுண்டாகும். அந்த வாசனையை மோந்த யானைகளுக்குக் குறும்பு பிடிப்பதுண்டு. அவற்றிற்கு மஸ்துயானையென்று பெயர். அப்பொழுது யானைப்பாகன் சொற்படி அடங்காமல் கட்டின கட்டை அறுத்துவிட்டுப் பயங்கரமாகக் கர்ச்சித்துக்கொண்டு தன்னிஷ்டமானபடி திரியும்; எதிரில் வருவோரைக்கொன்றுவிடும். யானை மிகவும் அறிவுள்ள மிருகமென்று சொல்வதுண்டு. ஆனால் நாய் குதிரைகளுக்குள்ள அறிவு அதற்கில்லை.

(வரும்.)

Doraisawmy Sastriar M-A., L-T.,
Professor, Presidency College, Madras.

## ஆநந்தம்.

ஆநந்தமடைய அனைவரும் விரும்பினாலும், தகுந்த வழிகளில் விடாமுயற்சி செய்து அதை யடைபவர் மிகச் சிலரே யென்பது எவரும் ஒப்பத்தக்கதே. அதிகாரம் ஐசுவரிய முதலியவை அமைந்தவர்களுங்கூட, பொதுவாகச் சந்தோஷமாயிருக்க



இயலாது பற்பல துக்கங்களுக்கும் கவலைகளுக்கும் ஆளாவதை நாம் தினந்தோறும் பார்க்கின்றோம். ஆதலின் ஒரு மனிதனை உண்மையில் சந்தோஷிக்கச் செய்வது யாதெனச் சிறிதாயினும் ஆராய்தல், ஆறறிவுடைய மக்களின் முக்கியக் கடமை யென்பது மறுத்தற்பாலதன்று.

ஆநந்தத்தின் ஆசனம் ஒவ்வொரு மனிதனுடைய மனதிலேயே யிருப்பதனால், யார்யார் மனதுக்கு நற்பயிற்சி கொடுத்து அதை ஒழுங்காய் வைத்திருக்கின்றார்களோ அவர்களெல்லோரும் சந்தோஷமாயிருக்கக் கூடுமென்பதற்கையமில்லை. நமது சுகதுக்கங்களுக்குக் காரணம் நம் எண்ணங்களேயன்றி, வெளியிலுள்ள வேறெவையுமன்றென்பது ஸ்ரீ ஜேம்ஸ் அலன் போன்ற சிறந்த மேதாவிகளின் கிரந்தங்களில் தெளிவாய் அநுபவத்துடன் கூறப்பட்டிருக்கின்றது.

ஸ்ரீ வெப்ஸ்டர் என்ற மேதாவி ஆநந்தம் ஒரு வகைத் திருப்தி (Joyful satisfaction) தான் என்கின்றனர். "ஆசைக்கோ ரளவில்லை" என்றற் றொடக்கத்தனவாகிய தாயுமானவரின் அமுதவாக்கினாலே நமக்கு அத்தகைய திருப்தியும் அதனால் சந்தோஷமும் கிடைப்பது அரிதெனப் புலப்படும். கலகம் நிரம்பிய நாட்டில் ஒருவன் சமாதானம் விரும்புவதுபோலவேயாயினும், நாம் அதிருப்தியடைய நிமித்தமில்லை; ஏன்? 'உலகத்தில் சிருஷ்டி அனைத்திலும் சிறந்தது மனித சிருஷ்டியே, அவனுள் சிறந்தது மனமே" ஆகையினால் சந்தோஷத்தைப் பெறுவதற்கு அவசியமானவைகளை ஏழு முக்கிய குணங்களாகப் பிரித்து ஒவ்வொன்றாகச் சிறிது விசாரிப்பாம்.

(1) முதலாவது இன்றியமையாதது தன் அடக்கம் (Self-control). நம் எண்ணங்களெல்லாம் வித்துக்களே செய்கைகளெல்லாம் செடிகளாக வெளிப்படுவனவாம். இதனால் நற்செய்கைகளுக்கும் தீயசெய்கைகளுக்கும் காரணம் நம் நல்லெண்ணங்களும் தீய எண்ணங்களுமென்பது பெற்றாம். நம்மனத்தில் தீயஎண்ணங்கள் இடம்பெறாது அவற்றை அடக்குவதே தன் அடக்கம் என்று இங்குச் சொல்லப்பட்டது. அம்மனத்தை அடக்குவதைப் பற்றித் தாயுமானவர் "பாழான வென்மனங் குவியவொரு தந்திரம் பண்ணுவ தெனக்கருமையோ" என முறையிடுவதை

யும் ஏனைய மகான்களும் இவ்வாறு முறையிடுவதையும் பார்த்தால், அது மிகக் கஷ்டமுள்ளதென்று வெளிப்படும். ஆயினும், "செயற்கரிய செய்வர் பெரியர் சிறியர், செயற்கரிய செய்கலாதார்" என்னும் குறளையும், 'பாடின்றிப்பலனில்லை' என்னும் பழமொழியையும் கவனித்து, நம்மால் இயன்றவரை சிறந்த பலனை அடைவதில் கஷ்டத்தைக் கவனிக்கலாகாது.

(2) துர்க்குணங்களிடத்து வெறுப்பும் நற்குணங்களிடத்து விருப்புங்கொண்டு நற்குணத்தை விருத்திசெய்வதே (Abhorrence of vice, and cultivation and love of virtue) இரண்டாவதாகவேண்டப்படுவது. கொலையாளி ஒருவன் தேசத்தின் சட்டத்திற்கிணங்கத் தண்டனை யடைவதற்கு முன்னர், "தன்மனமே தன்னைச் சுடும்" என்றபடி நாம் அடையும் துக்கத்துக்கு அளவில்லை. ஆதலால் சந்தோஷமடைய விரும்புகின்றவர் மனச்சாக்ஷி என்னும் நியாயாதிபதியின் கட்டளைகளைக் கவனமாய்க் கேட்டுக் கீழ்ப்படிதல் அவசியமானது.

(3) மூன்றாவது வேண்டியது திருப்தி (Contentment). எவ்வளவு தாழ்ந்த ஸ்திதியி லிருக்கும் ஒவ்வொருவனும் குமரகுருபரர் கூறுகின்றபடி "தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை, அம்மா பெரிதென் றகமகிழ்" தல் நன்று. ஏனென்றால் அதிருப்தியாயிருந்தால், பணக்காரனானாலும், ஏழையானாலும் வயோதிகனானாலும், இளைஞனானாலும், அதிகாரியானாலும், அடிமையானாலும் சந்தோஷ மடைதல் அசாத்தியம்.

(4) நான்காவது பொறுமை வேண்டும். கோபத்துக்கும் பொறுமைக்கும் வெகுதூரம். மேலும் கோபம் ஏனையோருக்குத் தீங்கு விளைப்பது மாத்திரமன்று. வள்ளுவர் "தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்கால், தன்னையே கொல்லுஞ் சினம்" என்று கூறுகின்றபடி கோபந் தனக் கிடங்கொடுத்தவனையுங் கெடுத்துவிடும். கோபமில்லாதவனுக்குப் பொறுமை ஏற்படுமாதலால், அவனுக்கு நேரும் கஷ்ட நஷ்டங்களெல்லாம் அவனை உன்னத நிலைக்கேற்றும் படிக்கட்டுகளேயாகும்.

(5) ஐந்தாவது கர்மவசமென்று நம்மை ஒப்புக் கொடுத்தல் (Resignation to Karma). நம்மால் தடுக்க முடியாத துன்பங்கள் வந்தபோது அவற்றை முறுமுறுக்காமல், கருணைவடிவாகிய கடவுள் நமது நன்மைக்கு அனுப்பியிருக்கும் ஏதுக்களாகவெண்ணி,



தைரியத்துடன் சகித்துக் கொள்ளவேண்டும். அப்பொழுது அவன் நல்லொழுக்கமானது (Character) சுத்தத்தையும் விருத்தியையும் அடையும்.

(6) ஆறாவது வேண்டியது தன்னயங் கருதாமை (Unselfishness). பிறர்க்கு ஆநந்தத்தை உண்டு பண்ணுவதே நாம் ஆநந்தமடையுமுபாயமாகு மென்பது நிச்சயம். பிறருடையக்ஷேமலாபாதிகளுக்கும் பொதுவாகச் சந்தோஷத்துக்கும் விரோதஞ் செய்யுமியல்புடைய சுயநயப் பிசாசை யோட்டவேண்டும். அப்படி யானால்தான் "தனக்கென வாழார் பிறர்க்குரியாளர்" என்னும் ஆன்றோர் மொழிக்கு இலக்காதலியலும்.

(7) ஏழாவது அல்லது கடைசியாக வேண்டியது அன்பு (Love). அன்பிருப்பின் அதிருப்தி தலைக்காட்டா தொழியும். நம்மால் நேசிக்கப்பட்டவர்களிடமுள்ள குற்றங் குறைகளை அன்பு பார்க்கமாட்டாது; ஆனால் சிறந்த குணங்கள் சிறிதாயிருப்பினும் பெரிதாய்க் காட்டிப் பேரின்பம் விளைப்பது அன்பேயாகும். கலகம் குழப்பம் இவற்றிற்கு ஆதிகாரணம் அன்பின்மை அல்லது அன்பின்குறைவேயாதலால், அன்பு விருத்தியாக ஆக, நியாயஸ்தலத்தில் வியாச்சியங்கள் வழக்குக்கள் சிறிது சிறிதாகக் குறையும்.

பணம் பலகாரியங்களுஞ் செய்யுமெனச் சொல்லப்பட்டாலும், அதனாலாகாதனவும் இவ்வுலகத்திலேயே சிலவுள. அவற்றைச் சரிசெய்யும் ஆற்றல் அன்பொன்றுக்கே உண்டு. அன்பின் அருமை பெருமை அளவுக்குட்படா.

விரிவஞ்சி இத்துடன் இதை நிறுத்துகின்றனன். நாம் ஒவ்வொருவரும் இக்குணங்களை இயன்றவரை இடைவிடாது விருத்தி செய்து, ஆநந்தமடைய அன்புருவங் கொண்ட கடவுள் அருள்புரிவாராக.

நெல்லை. மாணிக்கவாசகன்.

## நன்மொழிகள்-நான்கு.

Newton.

(1) நீ இன்று இயன்றவரையில் நன்றாய்ச்செய், ஒருவேளை நாளையதினம் மிகவும் நன்றாய்ச் செய்யக்கூடும்.

H. W. Beecher.

(2) எப்பொழுதும் சமாதானமா யிருக்குமென நினையாதே. புயற்காற்று அடித்தாலும் கலங்கலாகாது.

Tennyson.

(3) தன் மனத்தை அடக்கச் சக்தியற்றவன் இரும்புவளையங்களற்ற பீப்பாய் போன்று சிதறிப் போவான்.

(4) தன் மதிப்பு, ஆத்மஞானம், சித்தஸ்வாதீனம் ஆகிய மூன்றுமே ஒருவனது வாழ்நாளை உன்னத வலிமையுடையதாக்கக் கூடியவை.

நெல்லை-மாணிக்கவாசகன்.

## Short lessons in Botany.

## தாவரசாஸ்திரத்தில் சிறு பாடங்கள்.

1

### தாவரசாஸ்திரம்.

செடிகள் விருட்சங்கள் முதலானவற்றைக் குறித்துச் சொல்லும் சாஸ்திரம் தாவரசாஸ்திரமாம். இந்தச் சாஸ்திரம் படிப்பது வெகு இலகு. ஏனெனின், அதற்கு விலைபெற்ற புத்தகங்கள் வேண்டுவதில்லை. ஆனால் ஒரே ஒரு விலையற்ற புத்தகந்தான் வேண்டும். அப்புத்தகம் நம்மைச்சுற்றி யிருக்கும் உலகந்தான். அதில் பாடங்கள் ஒவ்வொரு விருட்சமுமாம். மேலும் நாம் இந்தப் பாடங்களைப் படிப்பதற்கு பொழுது ஸமயங்கள் பார்க்க வேண்டியது அவசியமில்லை. வெளியே போகும் பொழுதெல்லாம் சிறிது ஜாக்கிரதையாய்க் கண்ணைத்திறந்து கொண்டு போனால் படித்து விடலாம்.



கடவுள் நமக்குக் கொடுத்திருக்கும் வஸ்துக்களில் மிக்க உபகாரமானவைகளில் ஒன்று தாவர வஸ்துக்கள். அவை நம் நாட்டில் இயற்கையாய்க் காடுகளில் வளர்ந்திருப்பதைப் பார்த்து யாத்திரை செய்யும் வெள்ளைக்காரர்கள் அதிக ஆச்சரியமடைகிறார்கள். அவற்றின் அழகையும் அவற்றின் பூக்களின் அழகையும் கந்தத்தையும் பற்றிக் கவிகள் அவற்றைக் கண்ட விடத்தில் தானே பாட்டுகள் பாடி யிருக்கிறார்கள். இது மட்டுமல்ல. நாம் அவற்றின் குணங்களைக்குறித்து ஆராய்ந்து பார்ப்போமாயின், நாம் ஆச்சரியமடைவோம். அவை நமக்குத் தான்யம் பழம் முதலியவற்றால் ஆகாரத்தைத் தருகின்றன. நம் ஆயுள்வேத சாஸ்திரத்திலுள்ள மருந்துக்கள் அநேகமாய் ஔஷதிகளிலிருந்து தான் செய்யப் பட்டிருக்கின்றன. மேலும், செடிகளைச் செவ்வையாய் வளர்க்கும் சூட்சமங்களை யறிவதில் நாம் குழந்தைகளைச் செவ்வையாய் வளர்க்கும் வழியைத் தேடுகிறோம். கவனமில்லாமையாலும் அறிவில்லாமையினாலும் தாய்தந்தைகள் தங்கள் குழந்தைகளைக் கெட்டநடவடிக்கை கெட்டவாசனைகளுக்கு இடமாய் விடுகிறார்கள். அப்படி செய்வதனால் தங்களுக்கும், தங்கள் நாட்டுக்கும், தங்கள் குழந்தைகளுக்கும் துன்பத்தை யுண்டு பண்ணுகிறார்கள். இப்படிப் பட்ட துன்பங்க ளெல்லாம், உயிரென்பதென்னது, அவ்வுயிரைத் தாவரங்களும் ஜங்கமங்களும் எப்படி பாதுகாத்துவருகின்றன வென்று அறிந்தால், சிறிது குறைவாகு மென்பது என்னுணர்ச்சி.

இப்பொழுது தாவரங்களுக்கு உயிரிருப்பதாகக் கூறினேனே; இது வாஸ்தவம் என்று அநேகர் நம்பமாட்டார்கள். நம்பாமல் இருப்பதற்குக் காரணமுமுண்டு. ஏனென்றால், அவற்றிற்கு முதல் முதலாய் இடம் விட்டு இடம் போகும் சக்தியில்லை; பின்பு உணர்ச்சியும் இல்லை. முன்சொன்னது மெய்; பின் சொன்னது மெய்யன்று. உற்றுப்பார்ப்போமாயின் செடிகளுக்கு உணர்ச்சியுண்டு என்று அறியலாம். இந்த ஊர்களிலிருக்கும் காச மரமென்ற, ரோட்டுக்கோரமாய் நட்டிருக்கும் விருட்சமும், தொட்டாவாடியென்ற செடியும் நன்றாய் இவ்வுணர்ச்சியைக் காண்பிக்கின்றன. மேலும் செடிகள் தரையிலிருந்து ஜலத்தையும் ஆகாரத்தையும் உட்கொண்டு வளர்ந்து, பின்பு தங்கள் ஸந்ததிக்கு விரை மூலமாய் வழிகள் வைத்து மரணத்தையும் அடைகின்றன

என்பதையும் கவனிக்கும் போது ஒருவரும் செடிகளுக்கு உயிரில்லையென்று சொல்லமாட்டார்கள்.

இந்தப்பாடத்தை நாம் இப்பொழுது முடித்து விடுவோம். அதற்கு முன் தாவர சஸ்திரத்தின் நிலைமையைக் குறித்துச் சில ஸங்கதிகள் செல்லுகிறோம். தாவரசாஸ்திரம் முற்றிலும் புதிய சாஸ்திரம் என்றே சொல்லலாம். அரிஸ்டாட்டில் என்ற கிரீக்கு மகாப்பிரபு அநேக நூற்றாண்டுகளுக்கு முன் செடிகளைக்குறித்துச் சிறிது எழுதியிருந்த போதிலும் பின்பு அதை விருத்தி செய்வதற்கு ஒருவரும் முயற்சிசெய்யவில்லை. நம் நாட்டு முன்னோர்கள் வைத்தியத்துக்காக அநேகம் செடிகளின் குணங்களைப் படித்திருந்த போதிலும் அவை புத்தியில்லாத வைத்தியர்களின் மூடத்தன்மையினால் மற்றச் சாஸ்திரங்களைப்போலவே மூடிவைத்திருப்பதினால் அபிவிருத்தியையடையாதுபோயின. 17-வது நூற்றாண்டில் ஐரோப்பாவில் (Linneus) லின்னேயஸ் என்னும் ஒரு மகாவித்வான் தம்மாற் கூடியவரை ஒருவிதமாய்ச் செடிகளைப்பற்றி அநேகமாகப் படித்து அவற்றையெல்லாம் தகுதியான வகுப்புகளாகப் பிரித்துத் தாவரசாஸ்திரத்தை முன்னுக்குக் கொண்டுவந்தார்; இன்னும் நம் நாட்டில் அநேகம் விருட்சங்களும் கண்டுபிடிக்கப் படவில்லை. நம்நாட்டுத் தாவரசாஸ்திர வித்வான்களுக்குக் கீர்த்திபெற வழியிருக்கிறது. முயற்சிதான் வேண்டும்.

## எலிமெண்டரி பாடசாலைகளின் பாடஜாபிதா.

(249ம் - பக்கத்தின் தொடர்ச்சி).

### சித்திரம்-Drawing.

Psychological basis: சிறு குழந்தைகளுக்குக் கண் முதலிய ஞானேந்திரியங்களின் மூலமாய் வெளிவிஷய ஞானம் உண்டாகிறபொழுதே அவர்களின் மனதில் பார்த்தபொருள்களின் உருவம் வடிவம் முதலியவை பதிகின்றன; பதியாவிடில் ஞானமேயுண்டாகாது. இங்ஙனம் அவர்களின் மனதில் பிரதிபிம்பித்திருக்கும்பொருள்களையோ அல்லது எண்ணங்களையோ அவர்கள் தங்கள் வார்த்தையினாலும், சைகைகளினாலும், சித்திரத்தினாலும், இன்னும்



பலமுறைகளினாலும் பிறருக்கு வெளிப்படுத்துவது நம்மெல்லோருக்கும் அநுபவமல்லவா?

இவ்வநுபவம், அஃதாவது சிறு குழந்தைகள் தங்கள்மனதிலுள்ள எண்ணங்களைச் சித்திரத்தின் மூலமாய்வெளிப்படுத்துவது, அவர்கள் கையில் ஒரு பலகையையும் சீமைச்சுண்ணாம்பையும்கொடுத்தால் அவர்கள் அதில்பலவிதமாய்க் கிறுக்குவதால்பிரசித்தமாம். ஆதலால் (மனதிலுள்ள எண்ணங்களைப்பிறருக்குத் தெரிவிக்கும் முறைகளில் ஒன்றான) சித்திரபாடத்தைச் சிறுவர்களுக்குக் குழந்தைப்பருவத்திலிருந்தே கற்பிக்கலாம்.

பாலர் வகுப்பு.

சிறு குழந்தைகளுக்குச் சித்திரம் எழுதக் கற்பிக்க வேண்டுமானால், முதலில் அவர்களின் மனதில் வஸ்துக்களின் பிரதிபிம்பங்களையுண்டாக்க வேண்டும். அவர்கள் வெளிவிஷயங்களைத் தங்கள் இந்திரியங்களால் அறியும்போதே அவ்விஷயங்கள் அவர்கள் மனதில் பதியவில்லையா? நாம் ஏன் புதிதாய் உண்டாக்கவேண்டுமென்று சிலர் சந்தேகிக்கலாம். இஃது உண்மையே. ஆயினும், அவர்களின்மனதில் பதிந்தபிரதிபிம்பங்கள் அதிசீக்கிரத்தில் மழுங்கிவிடுவதால், நாம் அப்போதைக்கப்போது பிரதிபிம்பங்களையுண்டாக்கிக்கொண்டேயிருப்பது அவசியம். ஆதலால், சிறுகுழந்தைகளுக்குச் சித்திரம் கற்பிக்கும்போது முதலில் வஸ்துக்களையுற்று நோக்கும்படி செய்யவேண்டும். பிறகு உற்றுப்பார்த்த வஸ்துக்களின் பிரதிபிம்பங்களை மனதினால்(Imagine)உருப்படுத்தச்செய்ய வேண்டும். பிறகுவஸ்துக்களின்வடிவத்தைச் சித்திரத்தினால் எழுதப் பழக்க வேண்டும். ஆதலால் சிறுகுழந்தைகளுக்குச் சித்திரப் பாடம் கற்பிக்கும்போது, முதலாவது(Observation) உற்றுப்பார்த்தல், இரண்டாவது(Imagination)மனதில் உற்றுப்பார்த்தபொருள்களை உருப்படுத்தல்,மூன்றாவது(Massive expression by drawing) உற்றுப்பார்த்தவஸ்துக்களின் வடிவத்தை ஸ்தூலமாய் எழுதுதலென்னுமிவற்றை விளக்கவேண்டும். ஆகவே சிறுபிள்ளைகளுக்கு உற்றுப்பார்த்து எழுதுதல், மனோபாவத்தால் எழுதுதல் ஆகிய இரண்டுவகையான சித்திரம் கற்பிக்கத்தகும் என்பது பெறப்பட்டது. இனி அவர்களுக்கு எத்தகைய பொருள்களையுற்றுப்பார்த்தெழுதும்படி செய்யலாமென்பதைச்சற்றுக் கவனிப்போம்.

1 - பந்து-Ball

2 - முட்டை-Egg

3 - கனவடிவம்-Cube

4 - தூண்வடிவம்-Cylinder

மேற்கூறியவற்றை நன்றாய்க்கவனிக்கச் செய்யவேண்டும். ஏனென்றால், உலகத்திலுள்ள சகலமானபொருள்களும் இவற்றில் யாதேனுமொன்றை வடிவத்தில் ஒத்திருக்கும். இவைதாம் மாதிரிவடிவங்கள் (Typical forms). சாதாரணமாய் எல்லாப்பழங்களும் இலைகளும் பந்துமுட்டைதூண்முதலியவற்றின் மாதிரிவடிவத்தை (Type form) யுடையனவாயிருக்கின்றன. மேஜை நாற்காலி வீடுமுதலியவை கனவடிவத்தை யொத்திருக்கின்றன. ஆதலால் மேற்கூறிய பொருள்களின் வடிவத்தைக் கற்பிப்பது அவசியம். சாதாரணமாய்ப் பாலர் வகுப்புக்கு உற்றுப்பார்த்தல் மூலமாய்க் கற்பிக்கப்படும் பொருள்களாவன:—

சாதாரணப்பொருள்கள்.

1. வண்டிச்சக்கரம்
2. முட்டை
3. இங்கிப்புட்டி
4. டம்ளர்
5. புத்தகம்
6. விளக்கு
7. பெட்டி
8. மேஜை
9. நாற்காலி
10. மணி
11. பீப்பாய்
12. கோப்பை
13. பூட்டு
14. கத்தி
15. உரல்
16. யானை
17. குடம்
18. ராந்தல்
19. தபால்கம்பம்
20. கைகாட்டிமரம்
21. கட்டை
22. கெடியாரம்
23. தொப்பி
24. பேனாக்கத்தி
25. ஜாடி
26. ஏணி
27. சுத்தி
28. உளி
29. ரம்பம்
30. கத்திரிக்கோல்.

பழவகைகள்

(1) கிச்சிலிப்பழம்
(2) கத்திரிக்காய்
(3) மாம்பழம்
(4) மாதுளம்பழம்
(5) பூசணி
(6) தேங்காய்
(7) முந்திரிப்பழம்
(8) வாழைக்காய்
(9) அவரைக்காய்
(10) சுரைக்காய்



(11) முள்ளங்கி
(12) திராக்ஷைக்குலை
(13) வெண்டைக்காய்
(14) பீர்க்கங்காய்
(15) புளியம்பழம்

ஜெந்துக்கள்

1. கோழிக்குஞ்சு
2. பூனை
3. எலி
4. நத்தை
5. பட்டுப் பூச்சி
6. தேனீ
7. மீன்
8. ஆமை
9. வாத்து
10. பாம்பு

மேற்கூறியவற்றை அதிசுலபமான முறையிற் கற்பிக்கவேண்டும். இவற்றையே கற்பிக்க வேண்டுமென்பது கருத்தல்ல; இவற்றைப்போன்ற மற்றவற்றையும் போதிக்கலாம். (வரும்)

N. சுப்பிரமணிய ஐயர்.
திருவேட்டீசுவரன் பேட்டை.

## பிராணி சாஸ்திரம்.

(283-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

சாகபக்ஷணி C- தடித்ததோலுள்ள ஜெந்துக்கள்.

2. கால்களில் ஐந்து அல்லது நான்கு விரல்களையுடைய யானையினம்.

இவ்வினத்தில் தேபர், நீர்க்குதிரை, காண்டா மிருகம், யானை முதலியவையடங்கும்.

### தேபர் (Tapir)

தேபர் என்பது பார்வைக்குப்பன்றியைப் போலவேயிருக்கும். ஆனால், பன்றியைப் போல இதற்கு வெட்டுக்குளம்புகள் இல்லை. இதன் மூக்கு சற்று நீண்டு யானையின் துதிக்கையைப் போலத் தொங்கும். துதிக்கை யானைக்கு எப்படியுதவுகிறதோ அப்படியே தேபருக்கும் அதன் மூக்குஉதவுகிறது-இதுசதாரணமாய் மூன்று நான்கடி உயரமும் ஐந்தாறடி நீளமுமிருக்கும் இதன் தேகம் உரோமமற்றதாயும் மழமழப்பாயுமிருக்கும். இது கறுப்புக்கலந்த பழுப்புநிறமுடையது. இதற்கு முன்னங்கால்களில் நான்கு விரல்களும் பின்னங்கால்களில் மூன்று விரல்களுமுண்டு. இதுகிழங்குகள் இராந்தளிர்கள்பழங்கள் முதலியவற்றைத்தின்னும்; பகற்காலத்

தில் உறங்கி இராக்காலங்களில் இரைதேடும். இதன் தடித்த தோலுக்காக இதைமனிதர்கள் வேட்டையாடுவார்கள். எருமைகளைப் போலவே இதற்கும் ஜலத்திலேயே யிருக்க அதிகப்பிரியம். இது அமெரிக்கா, ஸுமத்ரா தீவு, மலாக்காநாடுகளில் வசிக்கின்றன. சென்னை மிருகக்காட்சிச்சாலையில் இருப்பது ஸுமத்ராநாட்டுத் தேபர்.

## நீர்க்குதிரை. (Hippopotamus).

ஹிப்போபொட்டமஸ் அல்லது நீர்க்குதிரை யென்பது ஆப்பிரிக்காக்கண்டத்துப் பெருநதிகளில் வசிக்கிற பெரியஜெந்து. இது யானையைத்தவிர மற்ற எல்லாஜெந்துக்களைக் காட்டிலும் பெரியது. இதன் தேகம் நன்றாய்க் கொழுத்துப் பருத்திருக்கும். இதன் வயிறு பூமியில் தாங்கும்படியான அவ்வளவு குட்டையாய் இதன் கால்கள் அமைந்திருக்கின்றன.

இதன் கீழ்வாயில் நீண்டகோரப்பற்கள் உண்டு; நன்றாய் வளர்ந்த கோரப்பல் சுமார் இரண்டடி நீளமுமிருக்கும். இப்பற்கள் யானையின் தந்தங்களைக்காட்டிலும் கடினமாயிருக்கும். இதன் கால்களில் நான்குவிரல்களுண்டு. இது சுண்டெலியைப்போலவெளுத்த பழுப்பு நிறமுடையது. ஆப்பிரிக்காவிலுள்ள நைல்முதலிய பெருநதிகளில் சுவாசம் விடுவதற்காகத் தலையைமேலே தூக்கிக்கொண்டு நீந்தும். இராக்காலங்களில்ஜலத்திலிருந்து மேலேயேறிப்புல்பூண்டுகளாகிய தன் ஆகாரத்தைத் தேடும். ஆற்றங்கரைகளில் கோரைகள்முளைத்த சதுப்பு நிலங்களில் தங்கிக் குட்டிபோடும். ஒரு ஈற்றுக்கு ஒரே குட்டிதான் போடும். இந்த ஜெந்துவை அதன் தடித்த தோலுக்காகவும் கடினமான தந்தத்திற்காகவும் ஆப்பிரிக்கர்கள் துப்பாக்கியால் சுட்டும் ஈட்டியால்குத்தியும் கொல்லுகிறார்கள். சுடுகிறபோதும் குத்துகிறபோதும் கண்மூக்கு முதலியமெதுவான இடங்களைப் பார்த்துச் சுட்டாலல்லது குத்தினாலன்றி இது சாகாது. ஏனெனின் இதன்தோல் சாதாரணமாய் ஓர் அங்குலகனமிருக்கும்; முதுகின்தோல் இரண்டங்குலகனமுமிருக்கும். இது போர்வீரர்களுக்குத்துப்பாக்கி ரவைகளைத்தடுக்கக் கேடகம் (Shield) ஆக உதவுகிறது.

(வரும்).

N- சுப்பிரமணி அய்யர்,
திருவேட்டீசுரன்பேட்டை.

## நேர்மை (Honesty) உலகவாழ்க்கையில் நன்மை யடைவதற்கு ஒரு தடையா?

## Is honesty a bar to Success ?

ஒருவன் தான்மகாஸத்தியஸந்தனாயிருந்ததனால்தான் தனக்கு எல்லாவித இடையூறுகளும் நேர்ந்தனவென்றும் அயோக்கியனாயிருப்பது கொண்டே தன் அயலான் உன்னதஸ்திதியை அடைந்திருக்கிறான் என்றும் மனிதர்சொல்லுவதை நாம் பன்முறைகேட்டிருக்கிறோம். "அவன் ஒருநாளும் முன்னுக்கு வரமாட்டான்" ஸமயாஸமயம் தெரியாமல் "முட்டாள்தனமாய் நிஜத்தையே பேசுகிறான்" "யதார்த்தவாதி வெகுஜனவிரோதி" என்னும் வசனங்களை எத்தனை முறை நாம் செவியுற்றிருக்கிறோம்! அதேமாதிரி "அவன்ஸாமர்த்தியசாலி, ஸமயோசிதமாய் நடந்துகொண்டு காரியத்தை எப்படியோ ஜயித்துவிடுவான்" என்றும் சொல்லுகிறார்கள். "இவன்மகாஸமர்த்தன்; குசாக்ரபுத்தியுள்ளவன்; தீரன். இவ்வளவுமிருந்தும் இவன் ஏன் முன்னுக்குவரவில்லை யென்றால் எப்போதும் நிஜத்தையேபேசிவிடுகிறான். இதுதான் இவனைமுன்னுக்கு வரவொட்டுகிறதில்லை" என்றும் சொல்லுகிறார்கள். "ஏன் திருடர்கள் தனிகராகிறார்கள் ?" என்பது பற்றி ஓர் ஐரோப்பியர்பிரஸங்கித்தாரென்றும் அப்பிரஸங்கத்தில் பலஹேதுக்களால் அயோக்யர்களும் மோசக்காரர்களும்தாம் பணமும் பதவியும் அடைகிறார்கள் என்று திருஷ்டாந்த பூர்வகமாய் எடுத்துரைத்தாரென்றும் நான்கேட்டிருக்கிறேன்.

ஜனங்களிடத்தில் இந்தமயக்கம் தோன்றுவதற்குக்காரணம் என்ன? யோக்கியன் கஷ்டமடைகிறான், அயோக்கியன் லாபமடைகிறான் என்னும் நம்பிக்கையை மயக்கம் என்று கூறாமல் வேறென்ன பெயரிட்டழைப்பது? இந்தமயக்கத்துக்குக்காரணம் என்னவென்றால் ஸாதாரணஜனங்கள் வெளித்தோற்றத்தை மாத்திரம் கவனிக்கிறார்களேயொழிய உள்ளிருக்கும் யதார்த்தத்தைக்கவனிப்பதற்கு வேண்டியபொறுமையும் அவகாசமும் அவர்களுக்கில்லை. "அயோக்யர்கள்லாபமடைவதைப்பார்த்தபோதுநான் பொறாமையடைந்தேன்; ஆனால் பகவத் ஸாக்ஷாத்காரம் பெற்ற

போது அவர்களுடைய உண்மையான கதி இன்னதென்று நான் நிதரிசனமாய்த் தெரிந்து கொண்டேன்" என்று ஸெண்ட்பால் சொல்லுகிறார்.

திருடர்கள் அல்லர்; யோக்கியர் தாம் நன்மையை யடைகிறார்கள். பொய், மோசம், கபடம், டக்குபண்ணுதல் இவையெல்லாம் சிறிதுகாலத்துக்கு லாபத்தைக்காட்டுவது போல நமக்குத்தோன்றும். ஆனால் அந்தலாபம் நீர்மேற்குமிழிக்குநேரானது. அத்தகையலாபம் அஸ்திவாரமில்லாமற் கட்டப்பட்ட ஒருமாளிகையை ஒத்தது. இன்றோநாளையோ இவையிரண்டும் தரையோடு தரையாய் உட்கார்ந்துவிடும். ஆனால் ஸத்தியம், யோக்யதை, நேர்மை இவற்றோடு கூடின செல்வமோ மலையின்மேல் கட்டப்பட்ட வீட்டுக்குநிகரானது. இதன்மேல் புயலடித்தாலும், காற்றடித்தாலும் இதன் அஸ்திவாரம்பலப்படுமேயல்லது அசையாது. எந்தக் காரியத்திலும்நாம் முடிவைக் கவனித்தபிறகுதான் அதுபற்றி நல்லதோ கெட்டதோ என்னும்அபிப்பிராயத்தைச் சொல்லலாமேயல்லது அதற்குமுன்சொல்வது ஸரியன்று. "வாழ்நாளில் யோக்கியன் பின்வாங்குவதையும்அயோக்யன் முன்னுக்கு வருவதையும் நாம் பார்த்திருக்கிறோமே. அதற்கு என்னசொல்லுகிறீர்?" என்று பலர் கேட்கலாம். இதுநிஜந்தான். யோக்யர்களும் நஷ்டமடைவதுண்டு; அயோக்யர்களும் லாபமடைவது உண்டு. ஆனால் முன்னவனுடைய நஷ்டம் அவனுடைய நன்னடக்கையின் பயனாகவும் பின்னவனுடைய ஜயம் அவனுடைய தீயசெயல்களின் பயனாகவும் வந்தனவென்று சொல்வது அறிவீனமென்று நாம் தைரியமாய்க்கூறலாம். யோக்கியனிடத்தில் தன்தொழிலுக்கு வேண்டிய அறிவு ஸாமர்த்தியம் முன்யோசனை இல்லாமலிருந்திருக்கலாம்; அவைகாரணமாக அவன்நஷ்டமடைந்திருக்கலாம். ஆனாலும், யோக்கியதையின்பயனாகஒருவன் நஷ்டப்படுகிறான் என்று சொல்வது, "நான் நெல் விதைத்தேன் முள்விளைந்தது" என்று சொல்வதை ஒக்கும்.

யோக்கியனுக்கு, அயோக்கியனுக்கு வரும் லாபத்திலும் அதிகலாபமுண்டு என்பதில் அணுவளவும் ஐயமில்லை.

இதுபற்றி ஓர் ஆங்கிலநிபுணர் மோசம்பண்ணி அதிகப் பணம் ஸம்பாதிக்க வேண்டுமென்று ஒரு யஜமான்



உத்தேசிக்கிறான்; தன்ஸாமான்களின் விலையைப்பற்றிப் பொய்யானவிலைசொல்லத்தன் வேலைக்காரர்களுக்குத் திட்டஞ் செய்கிறான்; அவர்களுடைய சகாயத்தில்செல்லாத சரக்கையெல்லாம்செல்லும்படிசெய்கிறான். இவன் நீதிதவறிநடந்ததற்குத் தண்டனை இல்லாமற்போகுமா? நெருப்பைத்தொட்டுக் கைசுடாமலிருக்க வேண்டுமென்றால் எப்படி முடியும்? முதலாவது தன் வேலைக்காரர்களுடைய நடவடிக்கையைப்பாழாக்கி விட்டான். இவனிடத்தில்கற்றுக்கொண்டமோசவித்தையை அவர்கள் தன்னிடத்தில் முதலில் பிரயோகிப்பார்களே என்பதைத் தெரிந்து கொள்ள இவனுக்கு மூளை இல்லையா?. இவன் தன்னைச் சுற்றிலும் அயோக்யர்களையே ஏற்படுத்திக் கொண்டான். இந்த உண்மையை உலகத்தார் கண்டுகொள்வது வெகுபிரயாசமா? சிறிதுநாள் உலகத்தின் கண்ணில் மண்போட்டு ஏமாற்றலாம்! குட்டு வெளியில் வராமலிருக்குமா? ஸத்தியத்துக்கும் தர்மத்துக்கும் முற்றும் குறுக்காக ஏற்படுத்தப்பட்ட இவனுடைய சொந்தச்சட்டங்கள் கடைசியில் தோல்வியடைந்து இவன் மோசம் பகிரங்கமாய் வெளியாகிவருகிறது என்றெழுதி யிருக்கின்றார்.

ஆகையால் அயோக்கியத்தனத்தால் லாபமடையப் பிரயத்தனப்படுவது நஷ்டத்தை எதிர்கொண்டழைப்பதாகவே முடியும். சீக்கிரம் லாபத்தை யடையவேண்டும் என்னும் உத்தேசத்தோடு நேர்வழியைவிட்டுக்குறுக்குவழியில் இறங்கிமுள்ளிலும்கல்லிலும் அடிபட்டுத்திகைத்து நின்றவர் எத்தனை கோடிபேர்? ஸரியாய்முதிரும்காலம்வரையில் காத்திருக்கப் பொறுமையில்லாதவன் காயைப் பறித்துத்தின்று கஷ்டப்படுவதுபோல நஷ்டமடைந்துகஷ்டப்படுகின்றனர். இதைப்பார்க்காதார்யார்? சிலநாளைக்குலாபம்வரலாம். அந்தலாபம்என்னவிலைகொடுத்து வந்திருக்கிறது? சூரியர் சந்திரருள்ளபரியந்தம் அஃது எப்போதும்வெற்றியை ஸ்வபாவமாயுள்ள ஸத்தியம் தர்மம் என்னும் விலையில்லாமாணிக்கங்களை விலையாகக் கொடுத்து வாங்கப்பட்டிருக்கிறது. இதுவா லாபம்! தான்கொடுக்கும் பொருளைவிட விலையுயர்ந்த பொருளை மாற்றிக்கொள்வதல்லவா லாபம்! அவலைக்கொடுத்து உமியை வாங்கிக் கொள்வது லாபமாகுமா?

இந்தமாதிரி மோசம்செய்வதால் நிச்சயமாய்வரவேண்டிய நஷ்டம்வந்தவுடனே இந்த நிர்ப்பாக்கியன் அடையும் நிலைமையை

என்னவென்று வர்ணிக்கலாம். அவனுடைய அப்போதைய மனோநிலைமையை வர்ணிக்க மகாகவிகளும் வல்லவராகார்.

நாம்மேற் கூறிவந்த விடயங்களையறியாதார் ஒருவருமில்லை; ஆயினும் நாம் இவ்வியாசத்தின் தலைப்பிற்கண்டபடி யோக்கியன்தான் இவ்வுலகத்தில் நஷ்டமடைகிறான் என்றும் அயோக்யன்தான் ஜயமடைகிறானென்றும் ஜனங்கள் சொல்லுகிறார்களே! இதுபற்றிநாம் என்னென்று சொல்வோம்!

“பகவத்ஸ்ருஷ்டியில் மகாமேன்மையானபொருள் ஒருயோக்யமான மனிதன்” என்று ஆங்கிலகவியாகியபோப் என்பவர் சொல்லுகிறார். இதுதானரிதென்பது. இதுதான் இவ்வுலகத்தில் மனிதன்தோன்றின நாள்முதல் நாளதுவரையில் பலதேசங்களிலும், பலகாலங்களிலும் அவதரித்து இப்பூமிக்குச் சுடர்போன்று விளங்கியமகான்களுடைய சரித்திரத்தால்விளங்குகிறது.

லாபமடைவதற்கு ஒரேவழிதான் உண்டு. அது ஸத்தியமார்க்கந்தான்: அது தவிர வேறு மார்க்கமில்லை. பலதேசத்திலும் பலகாலத்திலும் பலமாதிரி பிரயத்தனப்பட்டுத் தாங்கள் தேடியதைக்காணாது விசனத்தாலும் வெட்கத்தாலும் புத்திவந்து இனியாவது நேர்வழியில்போய்ப்பார்ப்போம் என்று வந்து அவ்வழியையடைந்து அழியாலாபத்தை யடைந்தவர்களும் நாம்மேற் சொல்லி வந்ததற்குச் சாக்ஷிகளாவர்.

K. Rangaswamy Iyengar.

## கிண்டர் கார்ட்டன் என்னும் பாலபோதனமுறை.

(288-ம் பக்கத்தின் தொடர்ச்சி).

பிருதிவிப்பொருள்களான வெல்லம் கற்கண்டு முதலியவற்றில் மதுரமும், புளி எலுமிச்சம்பழம் முதலியவற்றில் புளிப்பும், பலவித உப்புக்களில் உவர்ப்பும், வேம்பு எட்டி முதலியவற்றில் கைப்பும், கடுக்காய் மாங்கொட்டை பருப்பு முதலியவற்றில் துவர்ப்பும், மிளகாய் மிளகு முதலியவற்றில் கார்ப்பும் பிருதிவியோடுசம்பந்தப்படாத சுத்த (மழை) ஜலத்தில் அநுற்பூதமான மதுரமும் இருப்பது யாவருக்கும் அநுபவம்.



குறிப்பு:—உருசியைக் கொண்டு வஸ்துக்களைச் சிறுபிள்ளைகளுக்கு ஊகிக்கச் செய்தல் நலம்.

### ஸ்பரிசம்.

சாதாரணமாய் உலகத்திலுள்ளபொருள்களெல்லாம் சூடாகவோ, குளிர்ச்சியாகவோ, அல்லது சூடுங்குளிர்ச்சியுமின்றியோ இருக்கின்றன. இதுவரையில் ஆராய்ச்சி செய்தவிதமாகவே இதன் கீழும் பிருதிவி, ஜலம், அக்னி, வாயு, ஆகாயம் என்ற பாகுபாட்டையே அநுசரிப்போம். இவற்றுள், ஜலத்திற்குக் குளிர்ச்சியும் அக்னிக்கு வெம்மையும் பிருதிவிமுதலிய மற்றவற்றிற்கு வெம்மையுங் குளிர்ச்சியுமின்றிய தன்மையுமிருக்கின்றன. ஜலத்திற்குக் குளிர்ச்சியும் நெருப்பிற்கு வெம்மையுங் கூறுவது யாவருக்கும் சம்மதமாகவேயிருக்கும். ஆனால் பூமிக்கும் வாயு(காற்று)க்கும் யாதொரு ஸ்பரிசமுமில்லையெனின், ஒவ்வொருவரும் பிருதிவிப் பொருளான சலவைக்கல் குளிர்ச்சியா யிருக்க வில்லையா? வாயுத்தொகுதியில் சேர்ந்த தென்றல் குளிர்காற்றென்றே நமது கவிகள் புராணங்களில்வர்ணிக்க இல்லையா? ஆகையால்புராணாதிகளில் குளிர்ச்சியென்றுவர்ணிக்கப்பட்டபிருதிவிப் பொருளானசலவைக்கல், வாயுத்தொகுதியில் சேர்ந்த“தென்றல்” முதலியவற்றிற்கு வெப்பஸ்பரிசமாவது சீதஸ்பரிசமாவது கிடையாதென்றுகூறுவது தகுதியா? என்று ஆட்சேபிக்கலாம். ஆயினும் சீதோஷ்ண ஸ்பரிசங்கள் ஜலஅக்னிகளுக்கு உரிமையே யொழியப் பிருதிவிவாயுக்களுக்கு உரிமையானவையன்று. சலவைக்கல்லும் தென்றல்காற்றும் ஜலசம்பந்தத்தினாலேதான் குளிர்ச்சியா யிருக்கின்றனவேயன்றி இயற்கையில் அவற்றிற்கு யாதொருஸ்பரிசமும் கிடையாது. இவையே அக்னியின் சம்பந்தத்தினாலே உஷ்ணமாயிருக்கின்றன.

ஸ்பரிசத்தை யறியுஞ் சக்தி சரீரத்தில் உள்ளங்கால் முதல் உச்சந்தலைவரையிலும் உண்டு. ஆயினும் ஸ்பரிச உணர்வுக்கு யாவரும் சாதாரணமாய் உபயோகிப்பது கைவிரல்களின் நுனிகளே. சரீரத்தில் எல்லாப்பாகங்களின் தோலைக்காட்டிலும் கைவிரல்களின் நுனித்தோல் நுட்பமாயிருப்பதனால் சீதோஷ்ணஸ்பரிசங்களை நுட்பமாய் அறிய விரல்களின் நுனிகளையே உபயோகிப்பது சாதாரணமா யிருக்கின்றது. இவ்விரல்களின் நுனிகள்தாம்

வஸ்துக்களின் மேற்பாகத்தின் "மழமழப்பு"(Smoothness), கறடு முறடு (Roughness)த் தன்மைகளையுணர உபயோகப்படுத்தப்படுகின்றன.

(வரும்)

N. சுப்பிரமணிய அய்யர்,
Headmaster,
Corporation School,
Tiruvateeswaran pet, Madras.

## பெண் கல்வி.

(269-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

ஆகவே, நமது பெண்களுக்கு இதுகாறும் கூறியபடி ஸ்வபாஷை முதல் சங்கீதம் ஈறாக வுள்ளயாவும் கற்பிப்பது அத்தியாவசிய மென்பது பெறப்பட்டது. இனி அவர்களுக்குப் பாஷாஞானத்தை யுண்டாக்குவதற்கு வேண்டிய வாசக புஸ்தகங்கள் எங்ஙனமிருக்கவேண்டுமென்பதுபற்றிச் சற்று ஆராய்வோம். தற்காலத்திலோ ஆண் பாடசாலைகளுக்கும் பெண்பாடசாலைகளுக்கும் ஒரே விதமான வாசகபுத்தகங்களை உபயோகப்படுத்தப்படுகின்றன. பாலர்களுக்குக் கற்பிப்பதன் நோக்கத்திற்கும் பாலிகைகளுக்குக் கற்பிப்பதன் நோக்கத்திற்கும் அதிக வித்தியாசமுண்டு. முக்கியமாய்ப் பெண்களுக்குக் கல்வி கற்பிப்பதின் நோக்கம், அவர்கள் நல்லொழுக்கத்துடன் தமக்கும் தங்கள் குடும்பத்திற்கும் உபயோக முள்ளவர்களாயும் தேசக்ஷேமத்திற்குக் காரணராயும் இருக்க வேண்டு மென்பதே

ஆதலால் அந்நோக்கத்திற்குத் தக்கபடி கற்புடையஸ்திரீகளின் சரித்திரங்கள், குடும்பப் பெண்கள் அநுசரிக்க வேண்டிய முறைகள், ஒழுக்கங்கள் ஈசுவரபக்தி யென்னு மிவற்றை விர்த்தி செய்யத்தக்க உபாக்கியானங்கள் முதலியவற்றையே விஷயங்களாக உடையவாசக புத்தகங்களின் மூலமாய்ப் பெண்களுக்குப் பாஷாஞானத்தை யுண்டாக்குவது நலம். பெண்பாடசாலைகளுக்கேற்ற வாசகபுத்தகங்கள் அதிசீக்கிரத்தில் ஏற்படவேண்டும். மேற்கூறிய காரணத்தால் அவசியமாக நமது தேசக்ஷேமத்திற்கு முக்கியகாரணமாயுள்ள பெண்கல்வியில் ஊக்கமுடைய ஒவ்வொரு



வரும் அவர்களின் கல்விக்கேற்ற வாசகபுத்தகங்களை எழுதுவது அத்தியாவசியமானது. பெண்களுக்கு இலக்ஷம் கோடி முதலிய எண்மானமுள்ள கணக்குகளைப் பலகையிலோ அல்லது நோட் புஸ்தகத்திலோ அதிக சிரமப்பட்டுப் போடும்படி செய்வது அநாவசியம். அவர்களுக்குக் குடும்ப வரவுசெலவு கணக்குகளைப் பார்க்கவும், சாதாரணமாய்த் தெருவில் விற்கும் பொருள்களை விலை பேசி வாங்கவும், வேலைக்காரன் கடையிலிருந்து வாங்கிக் கொண்டுவந்த சாமான்களுக்கு விலைபோட்டு மிகுதிப் பணத்தைச் சரியாய் வாங்கிவைக்கவும் தெரிந்தால் போதுமானதாம். நான் சென்ற மாதத்தில் ஒரு பெண்பாடசாலையைப் பார்த்தபோது அதில் நான்காவது வகுப்புப் பெண்களுக்கு அவுன்ஸ், ட்ராம்ஸ் சம்பந்தமான கணக்குகளைக் கற்பித்துக்கொண்டிருந்தார்கள். இக்கணக்குகள் பெண்பிள்ளைகளுக்கேன்? இவை போதிக்கப்படும் நேரமானது வீண் பொழுது போக்காக முடியுமேயன்றி வேறல்ல; நமது பெண்கள் வாசிக்கக்கூடிய நாட்களோ மிகவும் சொற்பம். அச்சொற்ப நாட்களிலேயே அவர்கள் வாழ்நாளுக்குஉபயோகமான அநேக அரியவிஷயங்களை அவர்களுக்குப்போதிக்கவேண்டியதாயிருக்கஉபயோகமில்லாத விஷயத்தைப் போதித்து அவர்களை வீணாக்குவது பெண்கல்வி விர்த்தியாக வேண்டுமென்னும் நோக்கமுடையவருக் கழகல்ல.

ஆதலால் ஸ்வபாஷையும் கணிதமும் பெண்களுக்கு எவ்வளவு கற்பித்தால் உபயோகமாக விருக்குமோ அவ்வளவு கற்பித்து, மற்ற மதசம்பந்தமான விஷயங்கள், கிருக பரிபாலனசாஸ்திரம், பாகசாஸ்திரம், சங்கீதம் முதலிய பல அரிய விஷயங்களைப் பூரணமாயும் விளக்கமாயும் கற்பிப்பது மிகவும் நலம்.

(வரும்)

N. சுப்பிரமணிய அய்யர்,
Headmaster,
Corporation School,
Tiruvateeswaranpet, Madras.

# வர்த்தமானம்.

இரண்டு கையுமில்லாத ஒரு ஸ்திரீ:—ஈஸ்ட்போர்ன் என்னுமிடத்தில் இரண்டு கைகளுமில்லாதுள்ள ஒரு ஸ்திரீ தனது கால்விரல்களால் கரண்டியைப் பிடித்து, மிகு நன்றாகச் சாப்பிடுகின்றாளாம்.

ருஷியாவில் புருக்கள் கொல்லப்படுவதில்லையாம். அதனால் அவை கொழுத்து வளர்ந்து வருகின்றனவாம்.

முசாபிர், கெயிர்கா, ஜமீன்தார் கெஜெட் என்னும் பத்திரிகைகளின் பத்திராதிபர் மிஸ்டர் தர்மாசில் திலசிங் என்பவர் தமது பத்திரிகைகளில் ஒழுங்கீனமான விளம்பரங்களைப் பிரசுரஞ் செய்தாரென்று ஹைதராபாத் சிட்டி மாஜிஸ்டிரேட்டின் முன்னர்க்குற்றஞ் சாற்றப்பட்டனர். மாஜிஸ்டிரேட் ஷை பத்திராதிபருக்கு 50 ரூபாய் அபராதம் விதித்தனர்; ஷை விளம்பரங்களடங்கிய பத்திரிகைகளைத் தபால் ஆபீஸ் சட்டத்திற்கு விரோதமாகத் தபாலில் அனுப்பியதற்கு 5 ரூபாய் அபராதம் விதித்தார்.

ஒரு கொலை:—அலகாபாத்திற்கு 20-மைல் தூரத்திலிருக்கும் ஒரு கிராமத்தில் மிஸ்டர் லாரன்ஸ் பார்பர் என்பவர் தமது வீட்டில் சயனித்திருக்கும்போது இம்மாதம் 3-ந் தேதி இரவு கொலைசெய்யப்பட்டிருந்தார். இதற்குக் காரணம் ஜமீன்தாரியைச் சேர்ந்த வியாஜ்ஜியங்களேயாம்.

ஒரு தற்கொலை: — திருச்சியிலிருக்கும் 73-வது கர்னடிக் காலாட்படையைச் சேர்ந்த ராஜேந்திரம் என்னும் சிப்பாய் ஒரு குற்றம் செய்தான். இப்போது அதற்காக அவன் 14 நாள் காவலில் வைக்கப்பட்டான். இந்த அவமானத்தை அவன் சகிக்காது சென்ற மாதம் 10-ந்தேதி தன்னைச் சுட்டுக்கொண்டிறந்தான்.

மதமாறி வருபவர்:—ஹைதராபாத்தில் வசிக்கும் கோவர்த்தனதாஸ் என்னும் ஒரு மார்வாரிச் சாதிப்பிரபு, பத்துமாதத்திற்கு முன் மகம்மதிய மதத்திற் சேர்ந்து குலாம் மகம்மது என்னும் பேர்பெற்று மகம்மதிய மதத்தை யனுசரித்து வந்தார். சென்ற மே மாதம் 27-ந்தேதி ஆரிய சமாஜத்தாரது உபதேசத்தால் ஆரிய சமாஜத்தில் சேர்ந்து விட்டனர். இவருக்கிப்போது வயது 25-ஆம்.


சிவப்பிரகாசப்

பெருந்திரட்டு.

சொருபாநந்தரால் திரட்டப்பட்டது.

இதுகாறும் வெளிவராதது.

விலை ரூபாய் மூன்று—வி. பி. முதலிய சார்ஜ் பிரத்தியேகம்.

மானேஜர், சக்ரவர்த்தினி ஆபீசு,

கோமளேசுவரன் பேட்டை, சென்னை.

**P. S. Sundram & Co.**

Electro-Platers, Gilders and General Commission Agents.

உயர்ந்த தங்கம் வெள்ளிப் பதக்கங்களும் முதல்தரமான அநேக யோக்கியதா பத்திரங்களும் வெகுமானமாக அளிக்கப்பட்ட பெயர் பெற்ற

பி. எஸ். சுந்தரம் கம்பெனி,

எலக்டிரிக் தங்க நகை வியாபாரிகள்.

107-பெரியதெருவு, திருவல்லிக்கேணி, சென்னை

எலக்ட்ரிக் தங்கநகை விலைவிவரம்.

32" நீளம் ¾" அகலம் 150. } அரும்பு சிலங்கை கட்டிய
32" நீளம் ⅝" அகலம் 210. }

| | | ரூ. | |
|---|---|---|---|
| 5 வருஷம் காரண்டியுள்ள | மல்லிகை ஒட்டியாணம் | ரூ. 25 | 8 |
| | நாக ஒத்து பெரியது | 12 | 0 |
| | நாகஒத்து சிறியது | 9 | 0 |
| | காரை பெரியது | 10 | 0 |
| | காரை சிறியது | 7 | 8 |
| | வங்கி பெரியது | 10 | 0 |
| 3 வருஷம் காரண்டியுள்ள | மல்லிகை ஒட்டியாணம் | 19 | 8 |
| | நாகஒத்து பெரியது | 9 | 0 |
| | ஷை சிறியது | 6 | 12 |
| | காரை பெரியது | 7 | 8 |
| | ஷை சிறியது | 5 | 12 |
| | வங்கி சிறியது | 8 | 0 |
| | 1½-வருஷம் காரண்டியுள்ள மல்லிகை ஒட்டியாணம் ... ... | 13 | 8 |
| | மல்லிகை ஒட்டியாணம் காரண்டியில்லாதது ... ... | 8 | 8 |
| | ஜாமந்திப்பூ | 1 | 8 |
| | ரோஜாப்பூ | 1 | 8 |

# கதாமஞ்சரி.

இஃதோரு மாதாந்த சஞ்சிகை. டிம்மி 24 பக்கங் கோண்ட 3 பார அளவில் மாதந்தோறும் வெளிவரும்.

இதில் கதாசரித் சாகரத்தின் தமிழ் மோழிபெயர்ப்பு அடங்கியிருக்கின்றது. இக்கதை பூர்வம் உமாதேவியாரின் பிரீதியார்த்தம் பரமசிவனால் திருவாய்மலர்ந்தருளப்பட்டது. இப்பரத கண்டத்தின் வடமேற் கெல்லைப் புறத்தின்கண் காஸ்மீர தேசத்தை 800 வருடங்கட்கு முன்னர் ராஜ்ய பாரஞ் செய்துவந்த ஸ்ரீ ஹர்ஷன் என்னும் அரசன் தனது ராஜ்யத்தில் நேர்ந்த யுத்தத்தில் மரணமடைந்தனன்; மன்னனிறந்த துக்கத்திற் காற்றாத சூரியவதி யென்னும் அன்னையாரின் சோகத்தை நிவர்த்திக்குமாறு இக்கதை சோம தேவரால் இயற்றப்பட்டது. இக்கதையின் போக்கு நவ நவமாகவும், படிப்போர்க்குப் பரமானந்தத்தைப் பயப்பிப்பதாகவு மிருக்கும். மேலும், இது தெய்வபக்தி, வைராக்கியம், நல்லொழுக்கம் முதலிய நல்லனவெல்லாம் நலமுறப் பொருந்துமாறு செய்யும். இதன் பெயருக் கேற்றவாறே கதையும் சாகரம் போன்று விளங்கும் இது யாவரும் செவ்விதி னுணருமாறு எளிய வசன நடையி லெழுதப்பட்டுள்ளது.

| சந்தாவிவரம். | | | |
|---|---|---|---|
| வருஷம் 1க்கு ரூ. | 1 | 0 | 0 |
| ஆறு மாதத்திற்கு | 0 | 10 | 0 |
| தனிப்பிரதி | 0 | 2 | 0 |
| வெளித் தேசத்திற்கு | | | |
| வருஷம் 1-க்கு | 1 | 8 | 0 |
| ஆறு மாதத்திற்கு | 0 | 14 | 0 |
| தனிப்பிரதி | 0 | 3 | 0 |

| விளம்பர விகிதம் | | | |
|---|---|---|---|
| மாதம் 1க்கு பக்கத்திற்கு | 1 | 0 | 0 |
| " $\frac{1}{2}$ பக்கத்திற்கு | 0 | 10 | 0 |
| " $\frac{1}{4}$ பக்கத்திகறகு | 0 | 6 | 0 |
| சில்லரை விளம்பரங்களுக்கு வரி 1க்கு அணா | 0 | 1 | 0 |

திரு. அ. சுப்பிரமணி பாரதியார்,

மானேஜர், லோகோபகாரி ஆபீசு,

கோமளேசுவரன் பேட்டை, சென்னை.

## 170-பக்கப் புத்தகம் இனாம்!

இது நல்ல ஆரோக்கியமும் நீடித்த சுகவாழ்வும்தரும்; இயற்கையாயுள்ள சில விதிகளை அனுசரிப்பதைப் பொறுத்திருக்கிறது. இச்சிறந்த புத்தகம் சுகவழியைக் காட்டி, நல்ல ஆரோக்கியத்தோடும் எப்பொழுதும் திடகாத்திரத்தோடும், நீண்ட ஆயுளோடு மிருக்கும்படி செய்து நல்ல அதிர்ஷ்டத்தைக் காட்டும். இப்புஸ்தகம் இனாமாகவும் தபாற் செலவில்லாமலும் அனுப்பப்படும்.

இப்புத்தகத்திற்கு இன்றைக்கே எழுதுங்கள்.

வைத்திய சாஸ்திரி

**மணிசங்கர் கோவிந்தஜி,**

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

22, பிராட்வே & 96. மவுண்ட்ரோட், மதராஸ்.

ஏஜெண்டு:—M. A. நெல்லையப்ப முதலியார்,

38 சின்னகடைத்தெருவு, திருச்சினாப்பள்ளி.

## ஆனந்த ராமாயணம்.

—இதுவரையில் தமிழில் வெளிவராதது.—

இது வால்மீகி மகாரிஷியால் வடமொழியில் இயற்றப்பட்டுள்ளது. இதில் வால்மீகி ராமாயணத்தில் இல்லாத அநேக விஷயங்கள் அடங்கியுள்ளன; ஸ்ரீராம லட்சுமணருடைய ஜனனமும், வளர்ப்பும், சீதாதேவியினுடைய ஜனனமும், அத்தேவிக்குப் பல பெயர் வந்ததற்குக் காரணமும் விளக்கி யிருப்பது வெகு இனிமையாயிருக்கும். இஃது ஆனந்த ராமாயணமென்னும் பெயருக் கேற்றவாறு படிப்போர் மனதிற்கு உற்சாகமும், ஆநந்தமும் உண்டாக்கும்; இதில் அநேக சித்திரப் படங்க ளடங்கியிருக்கின்றன. விலை ரூபாய் **5.** தபாற் கூலி வேறு.

மானேஜர்:—

சக்ரவர்த்தினி ஆபீஸ்,

சென்னை.

## பட்டுப் பீதாம்பர கம்பெனி, காசி.

திருப்தி யில்லாதவைகள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படும்.
பட்டுப் பீதாம்பர காட்லாக்து இனுமாக அனுப்பப்படும்.

உருத்திராக்ஷங்கள் !! ஜபமாலைகள் !!

பரிசுத்தமானவை.

108 உள்ள மாலை 1-க்கு 6-அணு முதல் ரூபாய் 12-வரை. விலை அதிகப் படுவதுபோல் மணிகள் சிறிதாக இருக்கும். 6-முகக் கண்டிகள் 33-உள்ளது; கண்டி 1-க்கு ரூபாய் 1-முதல் 10-வரை. 5-முகக்கண்டி 32-உள்ளது; கண்டி 1-க்கு அணு 10-முதல் ரூபா 10 வரை. விலை அதிகப்படுவது போல் மணிகள் பெரிதாக இருக்கும்.

### வெண்பட்டு வேஷ்டிகள்.

சுத்தமான வெண்பட்டு வேஷ்டிகள் கோயம்புத்தூர் வேஷ்டிகள் மாதிரி சன்னகம்பி, ருத்திராக்ஷ கம்பி, ஜரிகை கம்பி போட்டவை.

| | | | | |
|---|---|---|---|---|
| 4 முழம் | 2 அகலம் | 1-க்கு | ரூபாய் 4-8-0-முதல் | 7 வரை |
| 6 ,, | $2\frac{1}{2}$ ,, | 1-க்கு | ,, 7 | ,, 9 ,, |
| 6 ,, | 3 ,, | 1-க்கு | ,, 10 | ,, 12 ,, |
| 7 ,, | $2\frac{1}{2}$ ,, | 1-க்கு | ,, 8 | ,, 12 ,, |
| 7 ,, | 3 ,, | 1-க்கு | ,, 10 | ,, 14 ,, |
| 8 ,, | 3 ,, | 1-க்கு | ,, 12 | ,, 18 ,, |
| 9 ,, | 3 ,, | 1-க்கு | ,, 14 | ,, 20 ,, |
| 10 ,, | 3 ,, | 1-க்கு | ,, 15 | ,, 22 ,, |

பனி ! பனி !! பனி !!!

பனிக்கு அடக்கமான சுத்தமான கம்பளி ரோமத்தால் செய்து உறுதியும், நைஸூம், நேர்த்தியுமான கம்பளிப் போர்வைகள், 6-முழம் நீளம் 3-முழம் அகலம் சிகப்பு முதலிய சகலநிறத்திலும் தயாராக இருக்கின்றன. உருப்படி 1-க்கு ரூபாய் 5-8-0. ஷை சிறிது 1-க்கு ரூபாய் 4-8-0. மேகவர்ணப் போர்வைக்கு ரூபாய் 6 8 0. தபாற் செலவு பிரத்தியேகம்.

### காசி வயிரவர் கயிறு.

1-வது நெம்பர் 100-க்கு... 3 0 0 3-வது நெம்பர் 100-க்கு...2 0 0
2-வது நெம்பர் 100-க்கு... 2 8 0 4-வது நெம்பர் 100-க்கு...0 6 0

### குழந்தைகள் !

குழந்தைகள் விளையாடக் கூடிய பித்தளை வெங்கலத்தால் செய்த யுசம்புக்குடம், கரண்டி முதல் 32 சாமான்கள் அடங்கிய அழகும் நேர்த்தியும் நைஸூம் பளபளப்புமுள்ள அழகிய பாத்திரங்கள் 32 உள்ள சிறு செட்டு 1-க்கு ரூபாய் 2 0 0. பெரிய செட்டு 1-க்கு ரூபாய் 4 0 0.

உடனே எழுதுங்கள். விலாசம்—மாநேஜர்,
பட்டுப் பீதாம்பர கம்பெனி, தாராநகர் தெரு,

*MANAGER,*
*Silk Petamber Co., Daranagar Street, Benares City*




OFFICE OF THE R... MADRAS

# சக்ரவர்த்தினி.

" கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்,
மற்றீண்டு வாரா நெறி".


| Vol VIII. தொகுதி அ. | July 1913. ஜூலை 1913. | No 12. பகுதி கஉ. |
|---|---|---|


## செய்ந்நன்றியறிதல்.

நம்மனோர் இம்மைக்குரிய பழிக்கும் மறுமைக்குரிய பாவத்திற்கும் ஆளாகா திருப்பதற்குப் பரமசாதனமா யிருப்பது ஒழுக்கமேயாம். ஒவ்வொருவரும் தத்தமது வருணத்திற்கும் ஆசிரமத்திற்குமுரிய ஒழுக்கத்தி லொழுகுவதற்குக் காரணமா யிருப்பன நன்றியறிதல், பொறையுடைமை, இன்சொல், இன்னு செய்யாமை, கல்வி, ஒப்புரவுடைமை, அறிவுடைமை, நல்லிணக்கமுடைமை யென்பனலாம். ஒழுக்கமுண்டாவதற்குச் சிறந்த காரணமாயிருப்பனவற்றுள், செய்ந்நன்றி யறிதல் தலைமையதாக விருத்தலின், செய்ந்நன்றி யறிதலுடையவர்தாம் இம்மைக்குரிய பயனையும் மறுமைக்குரியபயனையும் மோட்சமென்னும் பரம சுகநிலையையும் பெறுதற்குரியவராவர். ஒழுக்கமில்லாதவர் யாண்டும் ஒருபயனையும் பெறாது துக்கமே யடைதற்குரியவராக விருத்தலின், ஒழுக்கத்தின் வாயிலாக வுயர்நிலையினை யடைய விரும்புமொவ்வொருவரும் ஒழுக்கம் வருவதற்குச் சாதனங்களா யுள்ளவற்றுள் தலைமையானதாயுள்ள செய்ந்நன்றியறிதலை மறவாது மேற்கொண்டொழுக முற்படுவ தின்றியமையாததாம். செய்ந்நன்றி யறிதலென்பது இல்லறத்திருப்பார் துறவறத்திருப்பாரென்னு மிருதிறத்தாருக்கும் அத்தியாவசியகமாக வேண்டப்படுவதாம். இல்லறத்து வாழ்வார் செய்ந்நன்றி யறிதலில்லாதவராக விருப்பின், அவருடைய இல்லற வொழுக்கம் ஒரு வாற்றானும் பயன்

படுவதன்றாகும்; அங்ஙனமே அறவறத்தாருக்குமாம். செய்ந்நன்றி யறிவதில்லாதிருப்பவர் விலங்கினும் கீழ்ப்பட்டவராவர். யானை, சிங்க முதலிய விலங்குகளுள் சில மக்களிடத்துச் செய்ந்நன்றி மறவாதிருந்தனவென்பது நாம் அறிந்த விஷயமேயாம். "யானை யனையவர் நண்பொரீஇ நாயனையார், கேண்மை தழீஇக் கொளல்வேண்டும்—யானை, அறிந்திருந்தும் பாகனையே கொல்லு மெறிந்தவேல், மெய்யதா வால்குழைக்கு நாய்" என்னும் நாலடியார்ச் செய்யுள் நாயினது செய்ந்நன்றி யறிதலை நன்குவிளக்குவதாமன்றோ? நாய் தனக்குப் பிறர்செய்த நன்மையை மறவாதிருப்பதென்பது மிகு பிரசித்தமாமன்றோ? யானை ஒவ்வொரு சமயத்திற் றனக்கு நன்மை செய்தார் தீமைசெய்தால் அதை மறவாதிருந்து அவர்க்குத் தீமைசெய்வதாயினும், அவர் தீமை செய்யாதிருந்தால் அவர் தனக்குச் செய்த நன்மையை ஒருபோதும் மறப்பதே யின்றாம். எத்தனையோ யானைகள் தமது பாகர்கட்குவிபத்து நேர்ந்தவிடத்து, அவர்களை விரைந்துசென்று காப்பாற்றியிருக்கின்றன. மிருக விசேடங்கள் இங்ஙனம் செய்ந்நன்றி யறிதலை மறவாதிருப்பதை நன்குணர்ந்தவர்கள்தாம் ஒழுக்கத்திற்குத் தலைமைக் காரணமாயுள்ள செய்ந்நன்றி யறிதலை மேற்கொண்டொழுகுதற் குரியவராவர். நாம் செய்ந்நன்றி யறிதலை மேற்கொண்டொழுக முயலுவோமாயின், இம்மைக்குரிய பயனும் மறுமைக்குரிய பயனும் மாறாச்சுகவடிவ மோட்சமும் நமக்கு வாய்க்குமென்பதற்குத் தடையே யின்றாம்.

செய்ந்நன்றி யறிதலாவது பிறர்செய்த நன்மையை மறவாதிருத்தலாம். பிறர்செய்த நன்மையை மறவாதிருந்தாற்றான் பொறை (பொறுமை) யுடைமை முதலியவற்றைப் பெறுவது வாய்க்கும். நமக்கு நன்மை செய்பவர் யார்யாரென்று சிறப்புவகையாக நோக்குமிடத்து அவர்கள் அரசன், உபாத்தியாயன், தாய், தந்தை, தமையனென்னு மைவராக விருத்தலின், அவர்கள் செய்த நன்மைகளை மறப்பது ஒருபோதுங் கூடாது.

(1) அரசன் நமக்கு நன்மை செய்யாவிட்டால் நாம் ஒருவாற்றானும் சுகமாகவாழ்வது கூடாது. அரசன் நம்மை வேற்றரசர், கள்வர், தனது உத்தியோகஸ்தர் வாயிலாகவும் வனவிலங்கு முதலியவற்றின் வாயிலாகவும் துன்பம் வாராது பாதுகாப்பதே அவன்செய்யு நன்மையாம். அரசனவ்வாறு செய்யாவிட்டால், நாம்இம்மைக்குரிய



சுகத்தையும் மறுமைக்குரிய சுகத்தையும்மோட்சத்தையும் அடைவதற்குரியவராகாது, வனவிலங்குபோல அங்குமிங்கு மோடியலைந்து, அல்லல்பலவற்றை யடைந்து ஆராத்துயரந் தீராப் பிறப்பினராய் அழுதகண்ணும் சிந்தியமூக்குமாக விருப்போமென்பதற் காட்சேபமே யில்லையாம். "மழையின்றி மாநிலத்தார்க் கில்லை,—மழையும், தவமிலா ரில்வழி யில்லை—தவமும், அரசிலா ரில்வழி யில்லை" என்று சான்றோர் கூறுவதைநோக்குமிடத்து, மழைக்குக் காரணமான தவம் நிலை பெறுவதற்கு அரசன் காரணமாக விருக்கின்றானென்பது பெறப்படுமன்றோ? மழைபெய்யாவிட்டால் நாம் எவ்வாற்றால் பிழைப்போம்? முடியாதன்றோ? நம்முடைய உயிர் வாழ்க்கைக்கேதுவாகிய மழை பெய்வதற்குக் காரணமாய், நம்மை வேற்றரசர் முதலாயினோர் வாயிலாகவும் வனவிலங்கு முதலியவற்றின் வாயிலாகவும் துன்பம் வாராது பாதுகாக்கும் அரசனை நாமொருபோதும் மறப்பது கூடாது; மறந்துவிடுபவர் வனவிலங்கினுங் கொடியராவரென்ப தொருதலையாம்.

(2) உபாத்தியாயர் நமக்கு நன்மை செய்வது வித்தியாப்பியாசஞ்செய்வித்து, நம்மை நல்வழியி லொழுகுமாறு செய்வதாம். "எழுத்தறி வித்தவ னிறைவ னாகும்" என்றான்றோர் கூறுவதை யகத்தின்கணெண்ணி, உபாத்தியாயரைக் கடவுளாகப் பாவித்து, அவரை யென்றும் மறவாது வழிபாடு செய்வ தின்றியமையாததாம். அரசன் இம்மைக்குரிய பாதுகாவலைச்செய்வதுபோல உபாத்தியாயர் (குரு) மறுமைக்குரிய பாதுகாவலைச்செய்வித்து, நலங்களெல்லாவற்றையு மடையச்செய்வதால் அவர் செய்த நன்மையை மறப்பவர் அறிவிலாதாரே யாவர்? இங்குபாத்தியாயரென்பவர் பரம சற்குருமூர்த்தியுமாவர். அவர் சாவாது பிறவாதுள்ள தனிநிலையினைத் தம்மைத் தஞ்சமாகவடைந்தவர்க்குத் தத்துவஞானவாயிலாக அடைவித்துத் தமக்கொருபயன் நோக்காதிருப்பவராகலின், அவர்மாட்டுச் செய்ந்நன்றி மறவாதிருத்தல் அவர்கூறிய உபதேசநெறியி லொழுகுவதேயாம்.

"இந்த விடும்பை யுடம்புறு மேது
தந்தை யெனப்புகழ் கின்றிலர் தக்கோர்
அந்த மிலாத வகண்ட முணம்முள்
தந்தவர் தந்தை யெனச்சமை வுற்றார்."

என்று பிரமகீதை கூறுவதால் பரம சற்குருவினருமைபெருமை நன்கு விளங்குதலின், இனி உடம்பெடுக்காத நிலையினைத்தரும்

ஏகபரமாகத்த சற்குருமூர்த்தியை யென்று மறவா திருப்பவர்தாம் எல்லாநலனும் பல்லாற்றானும் பெறும்பாக்கிய முடையவராவர்.

(3) "வட்டிலிலுந்தொட்டிலிலும் மார்மேலுந் தோள்மேலும், கட்டிலிலும் வைத்துக்" காப்பாற்றி, தேனே! அமிர்தமே! செல்வத்திரவியமே! என்றற் றெடுக்கத்தனவாக வழைத்துச் சீராட்டிப் பாராட்டி வளர்த்த தாய் நமக்குச் செய்த நன்மைக்களவேயின்றாம். தாய் செய்த நன்மையை மறந்தவர் சண்டாளரினுங் கடையராவரன்றோ? முந்நூறு நாட்சுமந்து, படாதபாடுபட்டுப் பெற்றுவளர்த்த தாய் செய்த நன்மையை மறந்தவர் வேறுயார் செய்த நன்மையை மறவாதிருத்தற்குரியராவர்? "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்று அமிழ்தினுமினிய தமிழ்மணமறிந்த ஔவைப் பிராட்டியார் கூறியது தாய் யாவரினும் மேம்பட்டவளாமென்பதை விளக்குவதாமன்றோ? தன்னைப்பெற்றுவளர்த்த தாய்செய்தநன்மையைமறந்தவனுக்குச்சாமியின்கருணை சற்றேனுமுண்டாவதில்லையாம். "ஈன்றாளின், என்ன கடவுளுமில்" என்று நான்மணிக்கடிகையும், "தாயினிற் சிறந்த தெய்வமில்லை" என்று கூர்மபுராணமும் கூறுவதைக் கருத்தூன்றி நோக்குவோமாயின், தாய்செய்த நன்மையை மறந்தவர் கடவுள் செய்த நன்மையையும் மறந்தவராவரென்பது தடையின்றி விளங்குவதாம்.

(4) தந்தை செய்யும் நன்மை மைந்தரைச் சான்றோரெனயாவருஞ்சொல்லச் செய்தலாம். "சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே" என்று புறநானூறு கூறுகின்றது. "தந்தை மகற்காற்று நன்றி யவையத்து, முந்தி யிருப்பச் செயல்" என்று திருவள்ளுவர் கூறுகின்றனர்.

கல்வி யறிவு வாயிலாகத் தன்னைச்சான்றோ (கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்க மென்னு மிவற்றால் நிறைந்தவ)னாக்கிய தந்தையை மறப்பவன் தக்கோனாவதெப்படியாம். தந்தையின் செல்வமனைத்தையும் மைந்தன் பெறுவதற் குரியவனாக விருத்தலின், அவன் தந்தையை மறப்பது சற்றுந் தகுதியுடையதாகாது.

(5) தமையன் செய்யும் நன்மை தம்பியைத் தன்மைந்தனைப் போலப் பாதுகாத்துக் கல்வி முதலிய வற்றால் முற்படச் செய்வதாம். தமையன் தந்தைக் கொத்தவனென்று சாஸ்திரங் கூறுதலின், அவனை மறப்பது தந்தையை மறப்பதுபோலவாம்.

கடவுள் நமக்குச் செய்யும் நன்மைக்களவேயின்றாகலின், அவனை மறப்பது ஒருபோதும் கூடாது. கடவுள் செய்யும் நன்



மையை மறவா திருப்பவன்றான் அரசன் முதலாயினோர் செய்யும் நன்மையையும் மறவா திருத்தற் குரியவனாவன். அரசன் முதல் தமையனீறாகவுள்ளார்செய்த நன்மையையும்கடவுள் தனு (உடம்பு) கரணம் (இந்திரியம்-மனம்), புவனம் (உலகம்), போகம் (சுக துக்கங்களைப் புலப்பட வுணருதல்)களைத் தந்த நன்மையையும் மறவா தொழுகுகின்றவர் பொறையுடைமை முதலியவற்றைப் பூரணமாகப் பெற்று, ஒழுக்கத்தா லுயர்ந்து நன்மை யென்பன வற்றையெல்லாம் பெறுவதற் குரியவராவர். இவர்தாம் புருஷ ஜன்ம மெடுத்தவ ராவார்.

கர்ணன் சல்லியன் முதலாயினோர் செய்ந்நன்றி யறிதலுடையவராய்த் தம்முயிரைத் துரும்பாகக் கருதித் துரியோதனன் பொருட்டுப் போர் முகத்திற் சென்றிறந்தனரென்று ஸ்ரீ மகா ப்ாரதம் கூறுவதை அடிக்கடி சிந்தித்து நோக்குவோமாயின், நாம் செய்ந்நன்றியறித லுடையோராகப் பெரிதுமுயற்சி செய்வோம்.

இனிது நாற்பது.

"நன்றிப் பயன்றூக்கி வாழ்தல் நனியினிதே"

நான்மணிக் கடிகை.

"தனிய னெனப்படுவான் செய்தநன் றில்லான்"

திரிகடுகம்.

"நன்றிப் பயன்றூக்கா நாணிலியும்"

உலகநீதி.

"செய்த நன்றி யொருநாளு மறக்க வேண்டாம்"

திருக்குறள்.

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று"
"எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

புறநானூறு.

" ஆன்முலை யறுத்த வறனி லோர்க்கு
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கிற் கழுவாயு முளவென

நிலம்புடை பெயர்வ தாயினு மொருவன்
செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென
வறம்பா டிற்றே யாயிழை கணவ".

பழமொழி.

"நன்கொன் றறிபவர் நாழி கொடுப்பவர்க்
கென்று முறுதியே சூழ்க"

கம்ப ராமாயணம்.

"மாயா, உதவிகொன் றார்க்கென் றேனும்
ஒழிக்கலா முபாயமுண் டோ."

என்றற்றொடக்கத்துப் பிரயோகங்கள் இங்குக் கவனித்தற் குரியனவாம்.

# மகோபநிஷத்.

(முன் தொடர்ச்சி)

ஸ்திரீகள் மிகவும் கொடுமையாகிய நரகாக்னிக்கு விறகு போன்றவர்.

$45\frac{1}{2}$-$46\frac{1}{2}$. காமமென்னும் பெயரையுடைய கிராதனது வசப்பட்டு மூடபுத்தியுடைய ஸ்திரீகள் மனிதராகிய பக்ஷிகளின் அங்கங்களைக் கட்டுவதிற் சாதுர்யமுடையவர்.

$46\frac{1}{2}$-$47\frac{1}{2}$. ஜன்மமாகிய குளத்தில் சித்தமென்னும் சேற்றில் சஞ்சரிக்கும் மீன்களாகிய மனிதர்களுக்கு (அவர்களைப் பிடிக்க) துர்வாசனையே கயிறாகும். ஸ்திரீகளே தூண்டில் முனையிலுள்ள (மாம்ச)பிண்டமாவர்.

$47\frac{1}{2}$-$48\frac{1}{2}$. சகல தோஷங்களுமாகிய ரத்னங்களுக்கு ஒரு பெட்டகம் போன்றவளும் துக்கசந்ததி ரூபமானவளுமான இந்த ஸ்திரீ நமக்கு வேண்டாம்.

48. எவனுக்கு ஸ்திரீயுண்டோ அவனுக்குப் போகத்தின்கண் இச்சையுண்டாகும். ஸ்திரீயில்லாதவனுக்குப் போகஸ்தானமேது?

$49\frac{1}{2}$. ஸ்திரீயைவிட்டால் ஜகத்தை விட்டதாகும்; ஜகத்தை விட்டே சுகியாவான்.

$49\frac{1}{2}$ - $53\frac{1}{2}$. திக்குகளும் தெரியாமல் மறைந்து விடுகின்றன. தேசமும் வேறுபடுகின்றது. மலைகளும் சிதறப்படுகின்றன. நக்ஷ



த்திரங்களும் நாசமடைகின்றன. சமுத்திரங்களும் வற்றிப்போகின்றன. துருவனும் நிலையில்லாத ஜீவனத்தை யடைகின்றான். (நக்ஷத்திரங்களுள் அசைவற்ற நிலையையுடைய துருவனும் நிலைமாறிச் சலனமடைகின்றான்). சித்தர்களும் நசிக்கின்றார்கள். தானவர்முதலானவர்களும் நாசமடைகின்றார்கள். பரமேஷ்டியும் முடிவை யடைகின்றான். பிறவாதஹரியும் ஹானியடைகின்றான். ருத்திரனும் அபாவத்தை யடைகின்றான். திக்குக்களின் அதிபதிகளும் ஜீர்ணப்பட்டுப் போகிறார்கள். பிரஹ்மாவிஷ்ணு ருத்திரர்களுடன் சகலபூதஜாதிகளும் வடவாக்னியினிடத்து ஜலம் நாசமடைவது போல நாசமடைகின்றன.

$53\frac{1}{2}$–$54\frac{1}{2}$. க்ஷணத்தில் ஆபத்துக்கள் வரும். க்ஷணத்தில் சம்பத்துக்கள் வந்தடைகின்றன. க்ஷணத்தில் ஜன்மம், பிறகு மரணம்; சகலமும் நாசமுடையனவே.

54. சூரனல்லாதவனால் சூரர்கள் கொல்லப்படுகிறார்கள். ஒருவனாலும் நூறுபேர் கொல்லப்படுகின்றனர்.

55. விஷய வைஷம்யமே விஷமாகும். (சாதாரண)விஷத்தை விஷமெனச் சொல்வதில்லை, விஷயங்கள் பலஜன்மங்களைக் கொல்லும். விஷமோ ஒரு ஜன்மத்தைத்தான் போக்கும்.

56. இப்பொழுது இவ்வாறு தோஷமாகிய காட்டுத்தீயால் எரிக்கப்பட்டஎன்மனதில் கானல்நீர்த் தடாகங்கள் போன்ற இந்திரியங்களில் போக இச்சையானது ஸ்புரிக்கவேயில்லை.

57. ஆகையால் ஏ குருவே! சீக்கிரமாக எனக்குத் தத்துவ ஞானோபதேசம் செய்யவேண்டும். செய்யாவிட்டால் மௌனம் சாதித்து (அபி) மானமற்றவனாய், மாத்சர்ய மற்றவனாய், சித்திரமெழுதுபவனால் எழுதப்பட்ட பதுமையைப்போல விஷ்ணுவை மனதால் பாவித்து இருப்பேன்.

மூன்றாமத்தியாயம் முற்றும்.

மு. கே. நாராயணஸ்வாமி ஐயர், பி. ஏ., பி. எல்.,
சென்னை.

# இதோபதேசம்.

1 எல்லாவற்றிலும் பழையதெது? கடவுள்; ஏனென்றால், அவர் எப்பொழுதும் இருக்கிறவர்.

2. நம்மனத்தை விட்டு விலகாமல்எப்பொழுதும் குடிகொண்டிருப்பது எது?

தற்காலத்திலிருக்கும் ஸ்திதியை விட நல்லநிலைமைக்கு நாம் வருவோம் என்கிற தைரியம்.

3. எல்லாவற்றிலும் சிறந்ததெது? நீதி (அல்லது தர்மம்); ஏனென்றால், அதைவிடநல்ல தொன்றுமில்லை.

4. எல்லாவற்றிலும் அழகானதெது? பிரபஞ்சம்; ஏனென்றால், அது கடவுளால் உண்டாக்கப்பட்டது.

5. எல்லாவற்றிலும் மகத்தானது எது? இடம்; ஏனென்றால் அது கடவுளால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட எல்லாவற்றையும் அடக்கிக்கொண்டிருக்கிறது.

6. எல்லாவற்றிலும் அதிவேகமானதெது? எண்ணம்; ஏனென்றால், நொடிப்பொழுதில் அது பிரம்மசிருஷ்டியின் எல்லையை எட்டிவிடும்.

7. எல்லாவற்றிலும் அதிக பலமானது எது? "நிர்ப்பந்தம்" (அக்கரை); ஏனென்றால், அது மனிதரை எந்தக்கஷ்டத்தையும் ஸகித்துக் கொள்ளும்படி செய்கிறது.

8. எல்லாவற்றிலும் சுலபமானது எது? பிறருக்கு உபதேசம் செய்தல்.

9. எல்லாவற்றிலும் கஷ்டமானதெது? தன்னைத்தானறிதல்.

10. எல்லாவற்றிலும் அதிவிவேகமானதெது? காலம்; ஏனென்றால், அது எல்லா அறிவையும் நாளடைவில் வெளிப்படுத்துகிறது.

கெ. ரங்கசாமி ஐயங்கார்.

# சூடாலை.

(281-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

காவிலூர்-மடாலயம் - ஸ்ரீசுப்பய்யசுவாமிகள் - பிரவேசிக்கின்றார்.

ப்:—(தமக்குள்) என்ன ஆச்சரியம்! கரும்பிருக்க இரும்பைக் கடிப்பதுபோலவிவேகிகளும் லோகாயதமதப் பிரவர்த்தகர்களாக விருக்கின்றனரே! இவர்கள் எதற்காக! அத்தியாத்ம (ஞான) சாஸ்திரங்களைப் படித்தார்கள்? தாம் படித்தவாறு ஒழுகுபவரன்றோ உலகியலைக் கடந்து உயர்வொப்பில்லாத நிலையினை யடைந்து மாறாத இன்பவடிவினராக விளங்குதல் கூடும். தேகாபிமானத்தை மிகுதியாக உடையவரிடத்து லோகாயதமதப்பிரவிர்த்தியன்றி வேறு பிரவிர்த்தி யெவ்வாறிருத்தல்கூடும்? கரபாத்திர சிவப்பிரகாச சுவாமிகள்போல எல்லாருமிக்காலத்தில் அகண்ட ப்ரஹ்மசொரூபமாக விருத்தல் கூடுமா? எத்தனை முனிவர்கள், எவ்வளவு ரிஷிகள் காற்றால் சிதறுண்ட மேகம்போலக் காமத்தால் சிதறுண்டு நாயினுங் கடைப்பட்டுப் போயினர்; விசுவாமித்திரரே காமத்தால் மயங்கி மேனகையைக் கூடிச் சகுந்தலை யென்னுந் தையலைப்பெற்றுச் சிறிது தவத்தின் மாட்சியால் தெளிவுபெற்றுத் தனித்திருக்கச் சென்றாரென்றால், மற்றவரைப்பற்றிப் பேசுவானேன்? யோகசம்பிரதாயம் காலவேற்றுமையால் நழுவிப்போயினமையின், யோகாப்பியாசஞ் செய்வார் குறைந்துபோயினர்; அதனால் ஞானிகளென்று பேர்வைத்துக்கொண்டு வருபவருள் பலர் பிரமாதமு (சோர்வு)ம் யதேஷ்டாசாரணமு (இஷ்டப்படி யொழுகுதலு)முடையவராயிருக்கின்றனர். எவனது சித்தம் சாந்தமாகி எருதைப்போலச் சஞ்சலமற்றதாகின்றதோ அவனே தத்துவஞான வாயிலாகக் குணாதீதனாவான். இந்நிலையினைப் பெறுபவர் யோகபாவனை நழுவிப்போயினமையின், குறைந்து போயினர்.

சீதரன்-பிரவேசிக்கின்றான்.

(வெளிப்படையாய் அவனைநோக்கி) உள்ளே செல்ல உத்தரவாயிற்றா?

சீதரன்:—(கைகூப்பிவணங்கி நின்று) மகாராணியார் தங்களைத் தரிசிக்கப் பேராவலாகவிருக்கின்றார்; தங்களையெதிர்கொண்டழைக்கப் பத்மாவதிவருகின்றாள். தாங்கள் அந்தப்புரத்திற்குச் செல்லக் கருணைசெய்தல்வேண்டும்.

சுப்ப:—அப்படியா? போகின்றேன்.

பத்மாவதி எதிர்ப்படுகிறாள்.

பத்மாவதி:—(காலில் விழுந்து வணங்கி) தட்சிணாமூர்த்திபோல எழுந்தருளிய தயாநிதியே! தமியேனை மகாராணியார் தங்களை அழைத்துவருமாறனுப்பி யிருக்கின்றார்; கிருபைசெய்ய வேண்டும்.

சுப்:—அம்மணி! அப்படியே போகலாம்.

சுவாமிகள்பத்மாவதியுடன் சூடாலை யிருக்குமிடத்திற்குச் செல்லுகின்றார்.

சூடாலை:—(தனக்குள்) சுப்பையசுவாமிகள் விருப்பமற்ற நோக்கோடும், தளர்ந்த நடையோடும் ஆநந்தபரவசராகவருவது பேரழகாக விருக்கின்றது.

தனதாசனத்தினின்று மெழுந்து, தலைகுனிந்து வணங்குகின்றாள். சுவாமிகள் கையமர்த்துகின்றார்.

சுவாமிகள் வரவேண்டும்! வரவேண்டும்! நமஸ்காரம் நமஸ்காரம்! நல்லசமயத்தில் தாங்களிங்கெழுந்தருளினீர்கள். இவ்வாசனத்தெழுந்தருளுங்கள்.

சுவாமிகள் ஆசனத்தமர்கின்றார்.

மகாராஜா அவர்கள் காட்டிற்குச்சென்று கடுந்தவம் புரிந்து, உத்தம நிலையையடைய வேண்டுமென்று கருதி யிருக்கின்றார். அவர் காட்டிற்குச் சென்றுவிட்டால், அவரை யெவ்வாறு நாட்டிற்கழைத்துவரக் கூடுமென்று யோசித்துப்பார்த்தேன்; யோக பாவனையால் அணிமா தியஷ்ட ஐசுவரியம் பெற்று, அதனால் அவரையழைத்துவரக் கூடுமென்று தீர்மானித்தேன். அதனை இப்போது தாங்களனுக்கிரகஞ் செய்தருள வேண்டும்.

சுப்ப:—கற்பிற்சிறந்து, கருணையில் முதிர்ந்து, உத்தமகுணத்தால் ஓங்கிவிளங்கும் அம்மணீ! மங்களமுண்டாகுக. இவ்விடத்திலேயே மகாராஜாவைத் தத்துவஞான மடைதல் வாயிலாக உத்தமராகச்செய்யலாமே! நமது கரபாத்திர சிவப்பிரகாச சுவாமிகளே முன்பு தாங்கள் மகாராஜாவோடு தரிசிக்கவந்தபோது,



சுவாமிகள்

"புத்தோக முத்தோகம் பூரணா நந்தோகம்
சத்தோகஞ் சித்தோகஞ் சாந்தோகம்-சுத்தோகம்
ஆரணங்க டேடரிய வற்புதோ கஞ்சகல
காரணமாஞ் சைதன்யோ கம்"

என்னுந்திருவெண்பாவைக்கூறி, இது வேண்டும், அதுவேண்டாமென் றெழு மெண்ணங்களை, அவை யுண்டாகின்றபோதே வளராவாறடக்கி, புத்தன்நான், முத்தன்நான், பூரணாநந்தன்நான், சத்துநான், சித்துநான், சாந்தன்நான், சுத்தன் நான், அற்புதன்நான், சர்வகாரணன்நான், சைதன்யம் (அறிவு) நான் என்றிடைவிடாது பாவனைசெய்தால், எளிதாகத் தத்துவஞானமுண்டாகப்பெற்று உத்தமநிலையினையடையலாமென்று விளக்கியவிஷயம் என்மனதில்மறவாதிருக்கின்றது. அவ்வாறொழுகுகின்றவர் காட்டிற்குப் போவதும் கடுந்தவம்புரிவதும் அநாவசியகமாம். மகாராஜாவிற்குச் சுவாமிகள் கூறிய அவ்விஷயத்தை ஞாபகப்படுத்தி, அவரை நிறுத்தலாமே!

சூடா:—அவ்வாறு செய்வது முடியாதென்று அடிமைக்குத்தோன்றுகின்றது. அவர் இங்கிருந்து ஞானமடைவது ஊசியின் காதிலொட்டகம் நுழைவது போலுமென்று தீர்மானித்திருக்கிறார். அவரைத்தடுத்தல் ஒருவர்க்கு முடியாதென்று நினைக்கின்றேன். சுவாமிகள் எனக்கு முன்னருபதேசித்த யோகபாவனையைத் தெளிவாக இப்போது உபதேசஞ்செய்யுமாறு பிரார்த்திக்கின்றேன்.

சுப்ப:-யோகபாவனையைப்பற்றி யுபதேசிக்கின்றேன்; கவனமாய்க் கேட்கவேண்டும்.

சூடா:-சித்தத்தை வென்று சின்மயமாக விளங்குந் தேசிகமூர்த்திகளே! எனதன்பார்ந்ததோழியாகிய பத்மாவதி யென்னோடிருக்கலாமா?

சுப்ப:-அதிகாரிகளுக்குரிய லட்சணங்களெல்லாம் பத்மாவதியினிடத்து அமைந்திருத்தலால், பத்மாவதியு மிருக்கலாம்.

சூடா:-(பத்மாவதியை அன்போடு நோக்கி) பத்மாவதி! நீ யோகபாவனையை நன்குணர்ந்தொழுகுவது அத்தியாவசியகமென்றெனக்கிப்போது தோன்றுகின்றது. யான் காட்டிற்குச்சென்று மகாராஜாவோடு சிலகாலமிருந்து திரும்பிவருமளவும் நீதான் இம்மகததேசத்தை மகாராஜா போன்று வடிவெடுத்தாளவேண்டும். இனிவரும் நெகிழ்ச்சியை முன்செய்துள்ள யோகபாவனையின் வன்மையாலூகித்தறிகின்றேன். ஆதலால் நீ நற்றவவடிவச் சுப்பய்ய சுவாமிகள் நம்மீது கருணைகொண்டு கூறுவதை நன்கு கவனிக்கவேண்டும்.

ப-தி:-அமிர்தம் புசிப்பதுபற்றி யார்தாம் வெறுப்புறுவர்; தாங்கள் கூறியவாறிருக்கச் சித்தமாயிருக்கின்றேன்.

சுப்ப:—சிற்றம்பலத்தில் திருநடஞ்செய்யும் சிதம்பரநாதனது மும்மாதுள் ஒருமாதாகிய சிவகாமசுந்தரியை யொத்தாயே! யான் காசியிலிருந்திங்கிப்போது வந்தமைக்கேது உனக்கு யோகபாவனையை யுபதேசிப்பதற்கேயாம். சிகித்துவச மகாராஜா துறவறம்பூண்டு தீயவிலங்குவசிக்கும் வனத்திற்குச் சென்று செய்தற்கரிய தவஞ்செய்து சிந்தையும்மொழியுஞ் செல்லா நிலைமையதாகிய அந்தமில்நிலையினை யடையப்போகின்றதை யான் முன்னரே யோகபாவனையா லறிந்திருக்கின்றேன். அதனை யப்போதுகூறினால் மகாராணியார் மனம் வருத்தமுறுமென்றுகூறாதுவிட்டேன். ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம். தேகபாவமொழிந்தவர்க்கு அஞ்சுவதியாதொன்றுமில்லை; அஞ்சவருவதுமில்லை. யோகபாவனை இப்போது அதிகாரிகளின்மையாலும் சம்பிரதாயத்தினழுவுதலாலும்சாங்கோபாங்கமா யடைவதற்கரியதாயது. வைராக்கியமுடைய புருஷர்க்கே இது சித்திப்பதாம். யோகபாவனை செய்யும்போது மிகுவிழிப்பாக விருக்கவேண்டும். இவ்வளவும் பத்மாவதியின் பொருட்டுக் கூறினேன்.

சூடா:-பத்மாவதி! சுவாமிகள் கூறியவாறு செய்யவேண்டும். ஒன்று மறந்துபோய்விட்டேன். சீதனையழைத்து மகாராஜாவையன்றி மற்றெவரையு முள்ளேவிடவேண்டாமென்று உத்தரவு செய்.



ப-தி:-அப்படியே செய்கிறேன்.

போய்வருகின்றாள்.

சூடா:—(சுப்பய்யசுவாமிகளை நோக்கி) சித்தநிலைபெற்றுத் தீர்க்கசெனனத்தவராக விளங்குந் தேசிகமூர்த்திகளே! பத்மாவதி வாயிற்காவலனுக்கு மகாராஜாவைத்தவிர மற்றெவரையு முள்ளேவிடவேண்டாமென்று உத்தரவுசெய்துவிட்டாள். தாங்கள் கருணைகூர்ந்து யோகபாவனையைப்பற்றியுபதேசஞ் செய்தருளவேண்டும்.

சுப்ப:-அப்படியே செய்கிறேன்; புத்தியைச் சிதறவிடாமலிருக்க வேண்டும்.

## யோகோபதேசம்.

யோகம்: அடயோகம் ராஜயோகம் என இருவகைத்தாம். இவற்றுள், அடயோகம் சாதனமாம்; ராஜயோகம் சாத்தியமாம். அடயோகத்தின் அங்கம் எட்டாம்; ராஜயோகத்தின் அங்கம் பதினைந்தாம். அடயோகத்தினங்கத்தினை முன்னர்க் கூறிப் பின்னர் ராஜயோகத்தின் அங்கத்தினைக் கூறுகின்றேன்.

### அடயோக அங்கம்.

(1) இயமம், (2) நியமம், (3) ஆசனம், (4) பிராணயாமம், (5) பிராத்தியாகாரம், (6) தாரணை, (7) தியானம், (8) சமாதி என்பன அடயோகத்தினங்கங்களாம்.

1. இயமம்:—(a) கொல்லாமை, (b) உண்மையுரைத்தல், (c) கள்ளாமை, (d) பிரமசரியம், (e) பொறுமை, (f) தைரியம், (g) தயை, (h) நேர்மை, (i) மிதாகாரம், (j) சௌசம் ( சுத்தி ) எனப் பத்துவகையாம்.

2. நியமம்:—(a) தவம், [b) சந்தோஷம், (c) ஆஸ்திக்யம்(விசுவாசம்), (d) தானம், (e) ஈசுவரபூசை, (f) சித்தாந்த சிரவணம், (g) இலச்சை (நாணம்), (h) மதி, (i) ஜபம், (j) விரதமெனப் பத்துவகையாம்.

3. ஆசனம்:—ஸ்வஸ்திகம், கோமுகம், வீரம், கூர்மம், பத்மம், குக்குடம், உத்தானம், கூர்மகம், தனுஷம், மத்ஸ்யம், பச்சிமதானம், மயூரம், ஸவம், சிம்ஹம், பத்ரம், சித்தமென்றற்றொடக்கத்தனவாக எண்பத்து நான்கு வகைப்படுவனவாம்.

இவற்றினியல்பினை முன்னர்நான் நன்குவிளக்கிக் கூறியிருக்கிறேன்; அவை ஞாபகத்திலிருக்குமென்று நினைக்கின்றேன். இம்மூன்றும் நன்றாகச் சித்தியாயினபின், பிராணாயாமம் செய்யவேண்டும்.

4. பிராணாயாமம்:—பூரகம், கும்பகம், ரேசகமென்னும் பேதத்தால் மூவகைத்தாம்.

(a) முன்னர்ச்சந்திரநாடியாலும் பின்னர்ச் சூரியநாடியாலும் சுவாசத்தை நிரப்புதல் பூரகமாம்.

(b) நிரப்பிய சுவாசத்தை நிறுத்துதல் கும்பகமாம்.

(c) நிறுத்தி சுவாசத்தைத் தைரியமாக விடுதல் ரேசகமாம். மீண்டுமிது அகற்பம் சகற்பமென இருவகைத்தாம்.

(i) ஓம் என்னும் பிரணவவுச்சாரணையின்றிய பிராணாயாமம் அகற்பமாம்.

(ii) பிரணவவுச்சாரணத்தோடுகூடிய பிராணாயாமம் சகற்பமாம்.

(வரும்.)

ப - ர்.

# பூங்காவனம்.

(271 வது பக்கத்தின் தொடர்ச்சி)

"மஞ்சார்மலை வாரண மொத்தது வானினெடும்
வெஞ்சாயை யுடைக்க சிங்கதன் மீதுபாயும்
பஞ்சானன மொத்தது மற்றது பாயவெனுஞ்
செஞ்சோரி யெனப்பொலி வுற்றது செக்கர்வானம்."

இவ்வாறமைந்த ஒருநாட் சாயங்காலம் பூங்காவனம் தனது புத்தகசாலை அறையிலிருந்து இந்து சாதனம் என்னும் பத்திரிகையை வாசித்துக் கொண்டிருக்கும் பொழுது தந்தையார் ஆ! மகளே! என்று கூறிய பயங்கர வார்த்தையைக் கேட்டனள்; கேட்டவுடன் திடுக்கிட்டு விரைவாக இருந்த ஆசனத்தினின்றும் எழுந்து குழல் சோரப் பிடியானைபோலசைந்து சென்று, அவரது பயங்கரத் தோற்றத்தைக்கண்டு, சோகவாரிதியில் மூழ்கிக்கூற்றம் வந்துற்றகாலத் துயிரெனக் குலைந்து, அவரது



பரிதாபநிலைமைக் கிரங்கி வண்டுநேர்விழியில் அருவிபொழிய, செய்வதின்னதென அறியாளாய்ப் பஞ்சப்புலன்கள் தத்தம் தொழில் நிகழ்ச்சியில்லாது தடைப்பட்டிருக்க, மௌனமாக நின்றாள். அச்சமயம் கோவிந்தன் எசமானருக்குப் பலவிதச் சைத்தியோபசாரஞ்செய்து அறிவுவரப்பண்ணினன். கண்விழித்த அருளானந்த முதலியார் அழுதுகொண்டு பக்கத்தேநிற்கும் மகளைப்பார்த்துக் "குழந்தாய்! முடிந்தது நந்தமெண்ணம். மூவுலகுக்குங் கங்குல் விடிந்தது! அந்தோ! நான்யாது செய்யப் போகின்றேன் என்று கூறிப் பக்கத்தே மேசைமீதிருந்த ஆங்கிலவர்த்தமானப் பத்திரிகையைக் கொடுக்க, அவள் கலவரத்துடனே வாங்கிப் பிதாவினால் குறிக்கப்பட்ட பகுதியை வாசித்துவிட்டுப் பலவாறு அழுதுபுலம்ப அப்பொழுது அவர் சிறிது ஆறுதற் படுத்திப் "புத்திரியே! இன்றிருக்கின்னபடி யென்று அந்நாளில் அயன் சிவாஞ்ஞைகொண்டு அமைத்த அமைப்பைமாற்ற என்னாலுமில்லை உன்னாலுமில்லை; மற்றெவராலுமில்லை, மனத்தைரியத்தை விட்டுவிடாதே.

"அழுதாற் பயனென்ன நொந்தாற் பயனென்ன வாவதில்லை
தொழுதாற் பயனென்ன நின்னை யொருவர் சுடவுரைத்த
பழுதாற் பயனென்ன நன்மையுந் தீமையும் பங்கயத்தோ
னெழுதாப் படிவருமோ"

"இன்றைக்கிருப்பாரை நாளைக்கிருப்பரென் றெண்ணவோ
திடமில்லை"

பிரஜைகள் அடிமீது முடிவணங்கப் பலவகை வளங்களுடனும் அவனியை யொருகோலோச்சி யாண்ட மண்டலாதிபதிகளெங்கே? அவர்களது கீர்த்தியெங்கே? அவர்கள் முடிவில் ஒரு பிடி சாம்பராய் விட்டனர்.

"மன்னுபுகழ் பெற்றமுதல் யுகத்திலார்ந்த
மாந்தாதா வெங்கே? நீர்க் கடலடைத்துத்
தென்னிலங்கை மேவியிரா வணனைச் செற்ற
தேர்க்கதிரோன் குலத்திலக ராமனெங்கே?
இன்னுமிகற் பாண்டவரே முதலயாரு
மெய்தினரவ் விண்ணுலக மிறந்து"

நாமும் அவர்களைப் பின்பற்றியே செல்லுதல் வேண்டும். செத்துக்கிடக்கும் பிணத்தருகே யினிச் சாம்பிணங்கள் கத்தியழுவதே யன்றி வேறொன்று மில்லை. என் தவக் கொழுந்தே!

ஊற்றைச் சடலத்தை ஆபாசக் கொட்டிலை ஊன்பொதிந்த பீற்றற் றுருத்தியைச் சோறிடும் பாண்டத்தை, எரியெனக்கென்னும் புழுவுமெனக்கென்னும் இந்தமண்ணும் சரியெனக்கென்னும் பருந்தானெனக்கென்னும் உண்ணுதற் கேற்ற உணவென்று நரிதானெனக்கென்னும் புன்னாய் தனக்கென்னும் அந்தோ? யாக்கை நிலையாமையானது இத்துணைத்தென அறிந்தாம். அன்றிப் பிரபஞ்சானுபவங்கள் இதுகாறும் அனுபவித்து அத்தியிற் குழந்தையாகியும் புத்திரபாசமானது விட்டுநீங்கவில்லையே! என்செல்வமே! நடந்தது நடந்துபோயிற்று. நீ துக்கப்படவேண்டாம். என்னாற் சகிக்க முடியவில்லை. நல்லாத காலத்தில் நீ அனுபவிக்கும் சந்தோஷத்தைக் கண்டு பேரானந்த மடைதல்வேண்டு மென்றே இத்தேகத்தை வைத்திருக்கின்றேன். சென்றுபோனதைப்பற்றிச் சிந்தித்து அழுது புலம்பினால் இத்தேகத்துக்கு இடையூறு செய்வதாகும். ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் மீண்டுவரமாட்டார்கள் என்று பலவாறு கூறி ஆறுதற் படுத்தினார். ஒருவாரம் சென்றுவிட்டது. வாசகர்களே!

“ஆங்கிலப்பத்திரிகையிற் காணப்பட்டவியாசத்தைக் கண்டதந்தையும் புத்திரியும் அழுதுபுலம்பியது எதற்கோவெனின், அருளானந்த முதலியாருக்கு மருமகனாகவிருந்தவனும் நம் கதாநாயகனுமாகிய அருட்பிரகாசம் கோலாலம்பூரில்தன நண்பர்களுடனே ஒரு வங்கத்திலேறி அதை விநோதாநந்தத்துடன் செலுத்திக்கொண்டு போகும் பொழுது திடீரெனவுண்டாகிய சூறைக்காற்றின் மும்முரத்தினால் கடலிற் கொந்தளிப்புண்டாகி வங்கம் கவிழச் சிநேகிதர்களுடன் சமுத்திரத்துக்கு இரையாயினன் என்று காணப்பட்டதினாலேயே.”

ஒருநாள் இரவு பூங்காவனம் தனது படுக்கையறையில் சயனித்திருக்கும் பொழுது சொப்பனவஸ்தையில் தனது ஆசைநேசக்கண்ணாளன் தன்னுடன் இன்பமாகவார்த்தையாடியதாகக் கண்டு ஆநந்தமுற்றவள் திடீரெனக் கண்விழித்துக் கண்டது கனவெனவுணர்ந்து மூர்ச்சையடைந்து,

“சிந்தை மயக்குஞ் சிறிதகன்று தேற்றம்வர
முந்தை யிடர்வந்து முற்றுந் தனைச்சூழ்ந்து
வந்த மடமானது போழ்திற் றன்னுள்ள
நொந்துநைந்து...(தன்னுள்) நவில்கின்றாள்”



என்னுருயிரே! தேவரீர் அடியாளைக் கனவிசான்றாக வானவரோடயன் மால்காணப் பன்னருமங்கல நாண்பூட்டி மணஞ்செய்வீரென்று ஆநந்தமுற்றிருந்தேனே! ஆஹா! இதுவோ என்கதி. தேவரீருடைய சரீரம் சமுத்திரத்திற்கிரையாகி அழிந்து போயிற்றே! தங்களுடைய மரணத்தைக்கேட்டும் உயிர்தரித்திருக்கின்றேனே! என்னுடைய ஆன்மாவுக்குச் சமானமானவராகிய தாங்கள் இறந்தபின் அடியாள் தனித்திருப்பது முறையோ! அன்பரே! ஆறாதபெருந்துயரம் எனக்காக்கி எங்கேசென்று மறைந்தீரோ! அருவாகவேனும் வந்து கூறமாட்டீர்களா? என்ன பாவம் செய்தேனோ! என்போலும் மகளிர்கட்கு என்னவிடர் செய்தேனோ! முன்னையுள விதிப்பயனை யறியேனே! பொன்போலும் வதனத்தைக் காணேன்! மின்செய்பூணணிகுலவும் புயங்காணேன்! அகன்மார்பின்மேன்மைகாணேன்! அலங்காரக்கோலங்காணேன்! ஆன்மபொக்கிஷமே! என்னைவிட்டு எங்கே சென்று மறைந்தீர்கள்! என்றுபலவாறு அன்றிரவு முழுதும் புலம்பிக்கொண்டிருந்தாள்.

அருளானந்த முதலியார் தமது புத்திரியை ஆறுதற்படுத்துதற்கு யாது செய்யலாமென்று ஆலோசித்து இரத்தினபுரி என்னும் இடத்தில் வசிக்கும் மங்களம் என்னும் விதவைச்சகோதரி இருக்கும் வீட்டிற்குச்சென்று வசிக்கத் தீர்மானித்து அதைப் பூங்காவனத்துக்கு அறிவித்து அவளது சம்மதியோடு தானிருந்த வீட்டுக்காரனுக்குச் செல்லுமதியான குடிக் கூலியுடன் வீட்டையும் ஒப்படைத்து இரத்தினபுரிக்குச்சென்று விட்டனர். மங்களம் சகோதரனையும் மருமகளையும் கண்ணை இமை காப்பதுபோலப் பாதுகாத்துவந்தாள். அவ்விடத்தும் பூங்காவனம் சகித்தற்கரிய துக்கமுடையவளாயிருந்தும் தந்தையார்மீது கொண்டவிசுவாசத்தினால் அதைவெளிக்காட்டாது தன்னுடக்கிச் சீவியத்தை நடத்தி வந்தாள். இவ்வாறு ஆறுமாசம் சென்றுவிட்டது.

பொழுது நிரம்பப்பெற்ற ஒருபெண்மணி தன்மேற் போர்த்திருந்த நீலநிறம் பொருந்திய பட்டுவஸ்திரத்தைச் சிறிது சிறிதாகச் சுருட்டிக் கீழ்நிலத்தெறிந்துவிட்டு உறக்கம் நீத்துப் பிரகாசம் பொருந்திய நளிர்முகங்காட்டி எழுமாறுபோல இருட்கூட்டம் இரண்டு நிறங்குன்றிக் கடலினிடத்தே சென்றொடுங்குமாறு பாலசூரியன் உருக்கித்திரட்டிய பசும்பொன் உருண்டைபோலக் கீழ்த்திசையிலே உதிக்கவும், அத்திசையிடமெல்லாம் பொன்

னுரைத்துவிட்ட உரைக்கற்போலச் சுவர்ணரேகைகளின் வரிசைகள் அணியுடன் பொலிந்து ஒளிவீசவும், பசுமை, பொன்மை, வெண்மை, செம்மை முதலிய பல்வேறுவகையினவாகிய உலோகபேதங்கள் உருகிக் கிளைகொண்டு பாய்ந்தோடப்பெறும் பூமியினிடம்போல வானிடமெங்கணும் வர்ணபேதங்கள் பரவிப் பிரகாசமுறவும், கரியமுகிற்கூட்டங்கள் செவ்வாக்குப் பூசி வழித்ததேதார் எழினியின் தன்மைபோலவும், வெண்மேகங்கள் பொற்படாம் போலவும், அங்கங்கே எடுத்துரைத்தற்காகப் பேரெழிற்பரப்புடன் நின்றுவிளங்கவும் உலகமாகியபெண் உள்ளூற நகைக்குமாறுபோல இப்புதிய பேரழகுகள் தோன்றும் ஒருநாள்விடியற் காலத்து மங்களம் வீட்டில் பிதாவும் புத்திரியாகியபூங்காவனமும் காலைப்போசனம் அருந்திய சிறிதுநேரத்தின் பின்,அவ்வீட்டுவாயிலில் அழகிய இருவெண்புரவி பூட்டிய ஒருரப்பர்வண்டிவந்துநின்றது. அதினின்றும் ஒருபிரபுவானவர் இருசேவகர் வழிகாட்ட உள்ளேவந்து வாயிலில் நிற்கும் வேலைக்காரனாகியகோவிந்தனிடத்துத் தமது மேல்விலாசம் வரையப்பட்ட காகிதத்தைக் கொடுத்துவிட அவன்கொண்டுபோய் அருளானந்தமுதலியாரிடம் கொடுத்தான். அவர் துண்டுக்கடிதத்தை வாசித்தபோது தம்மைச் சந்தித்தற்குவந் திருப்பவர் ஒரு ஜமீன்தார் என்று அறிந்து சந்தோஷமுற்றுவந்தபிரபுவைச் சந்திப்பு அறைக்குஅழைத்துவரும்படி கோவிந்தனுக்குக் கட்டளையிட்டு இயன்றவரை தம்மை அலங்கரித்துக் கொண்டு குறித்த அறைக்குச்சென்று அங்குக்காத்திருந்தபிரபுவைக்கண்டு தகுந்தமரியாதை செய்து அவருக்குப்பக்கத்தேயிருந்த ஓர் ஆசனத்திலமர்ந்தார். க்ஷேமம் விசாரித்துச் சிறிது நேரஞ்சென்றபின் அப்பிரபு கூறுகின்றார்: ஐயா! சென்ற சுக்கிரவாரத்தன்று விநாயக முதலியார் வீட்டில் நடந்த விருந்துக்கச்சேரிக்கு வந்த ரூபலாவண்யமுள்ள ஒருபெண்மணி என் உள்ளத்தைக் கொள்ளைகொண்டு விட்டனள்; அன்றே அப்பெண்மணியாரென்றுஎனது சிநேகிதரொருவரை உசாவியபோதுஅவள் தங்கள் குமாரியாகிய பூங்காவனமென்று அறிவித்தார்.நான்சிங்கைபுர ஜமீந்தாராகவிருக்கின்றேன். விருந்து கொண்டாட்டத் தினத்தன்று கண்டவுடனே அப்பெண் மணியை எனது நாயகியாக்கிக்கொள்ளவிரும்பி அவ்வெண்ணத்தை நிறைவேற்றுதற்காகவே இப்பொழுது தங்களிடத்து வந்திருக்கிறேன் எனலும், அருளானந்தமுதலியார் பேரானந்த முற்றுப் பரமகருணாநிதியாகிய எம்



பெருமானின் திருவருளினால் இவ்விவாகம் நடைபெற்றுவிட்டால் அதுநான்செய்தபூர்வ புண்ணியமே; ஆயினும் இவ்விவாகத்தின் பேற்றினால் மரணபரியந்தம் சுகதுக்கங்களில் பங்குபற்றுபவளாகிய எனதுகுமாரியின் சம்மதத்தை அறிந்துவருகின்றேன்; தயவு செய்துதாம் சிறிதுநேரம் இங்குத்தங்கியிரும் என்று கூறிவிட்டுப் பெரிய இடத்துச்சம்பந்தங்கிடைக்கப் போகின்றதேயென்னும் பேரானந்தத்தினால் கால்பின்னி நடக்கமுடியாமற்றள்ளாடிச் சென்று சகல சம்பவத்தையும் மகளுக்குக் கூறிச் சம்மதி கேட்க அவள்வணங்கி, பிதாவே! தாங்கள் கூறுவது மிகவும் விந்தையாகவிருக்கின்றது. எப்பொழுது ஒருவரை அஃதாவது அருட்பிரகாசமாகிய ஆருயிரை எனது நாயகனாக மனம் வாக்குக் காயமொத்து வரித்தேனோ அன்றுமுதல் மரணபரியந்தம் அவரேநாயகராவர். பாவியாகிய எனது துர் அதிர்ஷ்டத்தினால் அவர்சமுத்திரத்திற்கிரையாயினர் எனச் சமாசாரப்பத்திரிகை மூலமாக அறிந்தேன்; அஃது உண்மையோ அன்றிப் பொய்யோ வென எனது சிற்றறிவினால் அறியமுடியாமலிருக்கின்றது. அஃது உண்மையாயின்,மரணபரியந்தம் விதவாவிரதத்தை அனுட்டித்துக் கொண்டிருப்பேன்;பொய்யாயின்தாங்கள் முன்னர் ஏற்படுத்திய ஏற்பாட்டின் படி இரண்டுவருடத்தவணை முடிந்தவுடன் அவர் எவ்வகையாகவேனும் வந்து அடியாளைப் பாரியாளாக்கிக் கொள்வர். அவர் இறந்துவிட்டனர் என்பது உண்மையேயாயின், குறித்த இரண்டுவருடத்தவணைமுடிந்தபின் தங்களுடையஏற்பாட்டுக்கு உடன்படுகின்றேன்;மன்னித்தருளுங்கள் என்றாள். அப்பொழுதுஅருளானந்தமுதலியார் மனச்சமாதானமுடையவராய்ச்சந்திப்பு அறையிலிருக்கும்பிரபு விடம்வந்து தமக்கும் குமாரிக்கும் நடந்தவற்றையெல்லாம் கூற அதற்கு அவர் கூறுகின்றார்:—ஐயா!ஒருவருடைய மனதைப் புண்படுத்தி ஒருகருமத்தில் சம்மதிக்கச் செய்வது எனக்கு விரோதமான காரியமாகும்;தங்களுடைய குமாரி கூறுவதும் நியாயமாகவே யிருக்கின்றது. இவ்விவாகம் நடத்தல்வேண்டுமென்று பரமகருணாநிதியின் விருப்பமிருந்தால் அதுநிச்சயமாய் நடைபெறும் என்று கூறி அவரிடம் பிரியாவிடைபெற்றுக்கொண்டுதமது ரதகவண்டியேறிச் சென்றுவிட்டனர்.

மூன்றும் அதிகாரம் முற்றிற்று.

மா. சிவராமலிங்கம் பிள்ளை,
"ஆறுமுகநாவலர்" வாசகசாலை.

# யானை.

(326 வது பக்கத்தின் தொடர்ச்சி).

யானை அறிவுள்ளதென்பதற்கு உதாரணமாக யானையும் தையற்காரனும் என்னுங்கதையைச் சொல்வதுண்டு. அந்தக்கதையை நீங்கள் கேட்டிருப்பீர்கள். அது சரியல்ல; ஏனென்றால், யானைப்பாகன் எவ்வளவோ அதை அடிக்கிறானல்லவா? அவனைமாத்திரம் ஏன் அஃது ஒன்றுஞ்செய்வதில்லை. சேற்றில்முழுகிவிளையாடும் யானைக்குச்சேற்றுநீரைத்தையற்காரன்மேலே ஊற்றினால் அவன்சந்தோஷப்படமாட்டான்; தொந்தரவுதான் அடைவானென்று எவ்வாறு அதற்குத்தோன்றும்? தோன்றாதல்லவா? புத்தியிருந்தால் அவ்வளவுபெரும் தேகமும் வலுவுமுள்ள அது ஏன்மனிதனுக்கு அடங்கி வேலை செய்கிறது. தவிர, காட்டில் வாழும்யானைகளையும் ஓடிப்போனயானைகளையும் நாம்மிகவும் சுலபமாய்ப்பிடித்துக்கட்டிப்போடுகிறோமல்லவா? அதனால் யானைக்குப் புத்திமட்டு. ஆப்பிரிக்காவில் யானையைப்பிடித்துப் பழக்குவதில்லை; இந்தியாவில் பிடித்து நமக்குப்பல வேலைகள் செய்யப் பழக்குவதுண்டு. யானை தன்பெரும் தேகத்தில் ஒரு டன் (Ton) பாரத்தைத் தூக்கிக் கொண்டுபோகும்; மலையில் வெட்டிப்போட்டபெருமரங்களைத் துதிக்கையாலிழுத்தும் தந்தத்தால்தூக்கியும்பலவிடங்களுக்குக்கொண்டுபோகும்; ரோட்டுகள் போடும்பொழுது தரையைச்சமமாக்கப் பாரமான உருண்டைக் கல்லை இழுக்கும்; சில ஊர்களில் கொத்தனைப்போல் செங்கல்களையடுக்கிக் காரைபூசிச் சுவர்கட்டுகிறதென்றும் கேட்டதுண்டு. யுத்தகாலத்தில் பாரமான பீரங்கிகளை இழுக்கவும் கோட்டைகளை இடிக்கவும் யானை உதவுகிறது. உத்ஸவகாலத்தில் யானைக்கு அலங்காரம் செய்து அதன்முதுகில் ஓர் அம்பாரியிட்டுத் தெய்வவிக்கிரகங்களை அதன் மேலேற்றிக் கொண்டு போவதுண்டு; பெரிய ரதங்களையிழுக்கவும் செய்வதுண்டு. காடுகளில் புலியை வேட்டையாட யானைமேல் சவாரிசெய்து போவதுண்டு.

பலவிதத்தில் யானையைக்காட்டிலிருந்து பிடிப்பதுண்டு. முற்காலத்தில் ஒருபெரிய குழிதோண்டி அதை ஒரு இலேசான தட்டியால் மூடிவைத்து யானை அதில்விழுந்ததும் அதைப் பிடிப்பதுண்டு. அவ்விதக் குழியில் யானை அநேகமாக விழுவதில்லை. அதனால் இப்பொழுது சாதாரணமாய்ப் பிடிக்கும் வி[illegible]

கும். சுமார் 10-மைல் சதுரத்திற்குச் சுற்றிலும் தடித்த இரண்டாள் உயரம் வேலிகட்டுவதுண்டு. இதற்குக் கெட்டா (Geddah) வென்று பேர். காட்டில்யானைகளை விரட்டினதும் அவை இந்தக் கெட்டாவில் செல்லும். சென்றதும் கேட்டை மூடிப்பழகினயானையின் மேல் சிலர் ஏறிச்சென்று புதுயானைகளைப் பெரியகயிற்றால் கட்டுவார்கள். சிலநாள்வரை புதுயானையை இரண்டு பழகியயானையின்நடுவில் விட்டுக்கொண்டு போய்ப்பழக்குவார்கள். இவ்விதம்பிடித்த யானைகளை எல்லாம் ஏலம்போட்டு விற்பதுண்டு. ஒருயானையின் விலை சுமார் ஆயிரம் ரூபாய்க்குக் குறையாது. யானைபெருத்த தேகமுடையதாலும் அதிகவலுவுள்ளதாலும் நமக்குமிகவும் உபகாரமாயிருப்பதாலும் அதைஅநேக ஹிந்துக்கள் கணேசர் என்று பூசித்து வருகிறார்கள். யானையின் வால்ரோமத்தை மோதிரமாகப் போட்டுக்கொண்டால் நினைத்தகாரியம் ஸித்திக்கு மென்றும் நம்புகிறார்கள். யானை 100-முதல் 200-வயதுவரையில்இருக்கும். பழகினயானைகள் கன்றுபோடுவதில்லை. காடுகளில்யானை 18-22-மாதம் கர்ப்பமாயிருந்து ஒருகன்றுபோடும். கன்று 3-அடி உயரமும் 200 பவுண்டுகனமு மிருக்கும்; துதிக்கை சிறிதாயிருக்கும். ஆறுமாதபரியந்தம் தாயின் பாலைக் குடித்து வளரும். தாய்க்கு மார்பில் இரண்டு முலைக்காம்புகளுண்டு. பாலை வாயால் ஊட்டிக்குடிக்கும். தாய் போகுமிடமெல்லாம் கன்றையும் அழைத்துச்செல்லும். ஆறுகளை நீந்தித்தாண்டும்பொழுது குட்டியைத் தன்துதிக்கையால் பிடித்துக்கொண்டு போகும்.

Doraisamy Sastry, M.A., L.T.

## த்ரயம் (மூன்று).

| | | |
|---|---|---|
| விரும்பத் தக்கன | மூன்றுவிஷயங்கள்- | தைரியம், சாந்தம், அன்பு. |
| வியக்கத்தக்கன | ,, | புத்தியின் வலிமை; பெருமை, காருண்யம். |
| அருவருக்கத் தக்கன | ,, | குரூரம், கருவம், செய்ந்நன்றி மறத்தல். |
| விலக்கத் தக்கன | ,, | இழிவு, நடிப்பு, பொறாமை. |
| மதிக்கத் தக்கன | ,, | தெய்வபக்தி, நீதி, சுயநலம் பாராட்டாமை. |
| இனிமையாத் தக்கன | ,, | சௌந்தரியம், கபடின்மை, சுயேச்சை. |

| | | |
|---|---|---|
| எண்ணத் தக்கன | ,, | ஞானம், சாந்தம், சித்தசுத்தி. |
| இச்சிக்கத் தக்கன | ,, | மகிழ்ச்சி, நற்குணம், மனத் திருப்தி. |
| சந்தேகிக்கத் தக்கன | ,, | வஞ்சப்புகழ்ச்சி, வஞ்சனை, காரணமற்ற அன்பு. |
| தடுக்கத் தக்கன | ,, | சோம்பல், குதர்க்கம், புத்தியற்ற பரிகசிப்பு. |
| விர்த்திசெய்யத் தக்கன | ,, | நல்ல புத்தகங்கள், நல்ல நண்பர்கள், நற்செய்கைகள். |
| முயன்று அடையத் தக்கன. | ,, | தேசம், சிநேகிதர்கள், புகழ். |
| அடக்க வேண்டுவன | ,, | குணம், வீண் உற்சாகம், நாக்கு. |
| எதிர்பார்க்க வேண்டுவன | ,, | துக்கம், அழிவு, மரணம். |

(1) எந்த ஆன்மா துர்க்குணங்களோடு கூடி யிருக்கின்றதோ அது ஞான மடையாது.

(2) எந்தச் சரீரம் துர்ச்செய்கைகளுக்கு ஈடுபட்டிருக்கிறதோ அது நற்காரியங்களைச் செய்யத் தலைப்படாது.

(3) அறம் ஒன்றே அழியாதது.

(4) எவன் ஞானத்தையும், கல்வியையும், அலட்சியம் செய்கின்றானோ அவனுடைய எண்ணங்கள் வீணாகின்றன; அவனுடைய உழைப்பு பயனற்றதாகின்றது; அவனுடைய முயற்சி வியர்த்தமாகின்றது.

(5) அதர்ம சிந்தையுள்ளவனது முடிவு மிகக் கொடூரமாக விருக்கின்றது.

(6) கொடுங்கோல் மன்னன் கீழ்ப்படுதலினும், அஞ்ஞானம், தன்யம், தீயகுணங்களுக்கு உட்படுதல் உலகத்தில் அடிமைத்தன மாகும்.

(7) உண்மையை அறிந்தவன் பிறவி யென்கிற கடலில் உழல மாட்டான்.

(8) பொறிகளைப் புலன்வழி செல்லாது காப்பவனே மோட்சத்துக்கு உரியவனாவான்.

(9) மக்களுக்குத் தர்ம சிந்தனை யினும் மேற்பட்டது ஒன்றில்லை.

## ஜப்பான்.

ஜப்பான் ஆசியாக் கண்டத்தின் கிழக்கேயுள்ள தீவுகளிலொன்று. ஜப்பான் என்னும் சொல் "சூரியன் உற்பத்தியாகுமிடம்" எனப்பொருள்படும். ஆகவே ஜப்பான் காரணப்பெயராகின்றது. ஜப்பானின் இராஜாங்கக் கொடியில், சூரியன் உற்பத்தியாகுங்கால் தன்கிரணங்களைச்சுற்றி வீசுவதுபோல் சித்திரமெழுதியுள்ளது. இக்கொடி சில வருடங்கட்குமுன்னர் ருஷியரைத் தோற்கச்செய்து உலகப்பிரசித்தியாய் விட்டது. விஸ்தீரணத்தையும் கீர்த்தியையும் அடைந்திருந்த ருஷியாதேயத்தைப் பிரசித்தியற்ற சிறிய ஜப்பான் தோற்கடித்தது அதி ஆச்சர்யசம்பவம்.

ஜப்பானும் இங்கிலாந்தும் சிலவிஷயங்களில் ஒத்திருக்கின்றன. இரண்டும் கடற்கரைக்கு அருகாமையிலிருக்கும் தீவுகள். ஐரோப்பாவில் எப்படி இங்கிலாந்து முதன்மையான ஸ்தானத்தை அடைந்திருக்கின்றதோ அப்படியே ஆசியாக்கண்டத்தில் ஜப்பான் முக்கியஸ்தானத்தை அடைந்திருக்கின்றது. இரண்டு தேயங்களும் கடற்சண்டையிலும் நிலச்சண்டையிலும் கீர்த்தி பெற்றவைகள். ஜப்பானியர்கள் தங்களைக் கிழக்கு ஐரோப்பியரென்றும், தங்களைப் பஸிபிக் பிரிட்டன் என்றும் பெருமையாகச் சொல்லிக் கொள்ளுகின்றனர்.

ஜப்பான் வீரியமுள்ள தேயங்களில் ஒன்றாகத் திடீரென்று ஆச்சர்யமாக வெளிவந்தது. சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன் ஜப்பான் பிரசித்தியற்ற தேசமாகவிருந்தது; நாகரீகமும்தாழ்ந்ததாகவே யிருந்தது. ஜப்பானியர் அன்னியர்களைத் தங்கள் தேயத்தில்பிரவேசிக்கவிடார்கள்; ஜப்பானின்கப்பற்சேனைகள் உபயோகமற்ற மரக்கலங்களாக விருந்தன. இப்பொழுதோ இரும்புத்தகடுகள் பொதிந்த மரக்கலங்களாய் ஆச்சர்யமான உருவத்துடன் தேயத்தைக் காப்பாற்றுகின்றன. போர்வீரர்கள் யுத்தப் பயிற்சியில் தேர்ந்தவர்களாக விருக்கிறார்கள். முற்காலத்தில் போர்வீரர்கள் விற்களால் போர்செய்தார்கள். இப்பொழுது எல்லாருக்கும் ஆச்சர்யத்தை விளைவிக்கும்படி இரசாயன சாஸ்திரத்தால் கண்டுபிடிக்கப்பட்ட ஆயுதங்களைக் கையாடுகின்றனர். ஐம்பது வருடங்களுக்குமுன் பிரபுக்கள் சச்சரவிட்டுக்கொண்டு தேயத்தின் அபிவிருத்தியைக் கவனியாதிருந்தார்கள். இப்பொழுது

எல்லாம் பறந்துபோய் பிரபுக்கள் தேசாபிமானிகளா யிருக்கின்றார்கள். ஜப்பானியர்கள் முதலில் மிகவும் தாழ்ந்த நாகரீகத்தையுடையவர்களாயும்தாழ்ந்த இராஜதந்திரிகளாயுமிருந்தனர். வரவர இங்கிலாந்து முதலிய தேயங்களைப்போல் பிரசித்திபெறவேண்டுமென்ற அவா உண்டாகவே ஜப்பானியர்கள் மேன்மையுடைந்த தேயங்களிலுள்ள நன்மைகளை அநுசரிக்க முயற்சிசெய்தார்கள்; தற்காலத்தின் அபிவிருத்திகளை அதிக அவாவுடன் உட்கொண்டார்கள்; இராசயனத்தின் சக்தியையும், கல்வியின் மேன்மையையும், நாகரீகத்தின் உயர்வையும் நன்குணர்ந்தார்கள்; ரயில்களாலும் தந்திகளாலும் தேயத்தை நிரப்பினார்கள்; தொழிற்சாலைகளை ஏற்படுத்தி கைதொழில்களை விருத்திசெய்தார்கள்.

ஜப்பான் மிகவும் அழகானதேயம். அஃது இயற்கைக் காட்சிகளால் நிறைந்திருக்கின்றது; இலேக்கர்களுக்கு அதிரம்மியமானவிடம். அழகாய் உயர்ந்தோங்கி யிருக்கும் மலைகளில் ஆறுகள் உருண்டு புரண்டு காதுக் கினிமையான தொனிகளுடன் ஓடுவதைப் பார்க்க ஆநந்தமா யிருக்கும். மலைகளின் அடிவாரங்களிலுள்ள சமபூமிகளும் பள்ளத்தாக்குகளும் நதிகளினால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். மலைகளின்மிகுதியாலும்சமபூமிகளின் குறைவாலும் சிறிது பாகமே பயிர்செய்யக் கூடியதாக விருக்கின்றது. ஜப்பானின் சீதோஷ்ணஸ்திதி சாதாரணமானது. அங்கு எரிமலைகள் விசேஷம். பூஜியாமா (Fusi yama) என்னும் குவிந்த வடிவமுள்ளமலை மற்றமலைகளைவிட பெரிதாயும் அழகாயுமுள்ளது. அம்மலை தெய்வசம்பந்தமாகக் கொண்டாடப்படுகிறது. ஜப்பானியர்கள் இயற்கைக் காட்சிகளைக்கண்டு வியக்கத் தக்கவர்களாதலால் அம்மலையின் படத்தை எழுத சித்திரக்காரர்கள் சிறிதும் அலுப்படையார்கள்.

(இன்னும் வரும்.)

S. Sankara Iyer, G. Town, Mrdras.

## கிண்டர்கார்ட்டன் என்னும் பாலபோதனமுறை.

(342-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

### பரிமாணம்.

சாதாரணமாய் உலகத்திலுள்ள வடிவுடைப் பொருள்களுக்கெல்லாம் பரிமாணமுண்டு. பரிமாணமென்பது அளத்தல் வியவகாரத்திற்குக் காரணமா யிருப்பது.

அது, நெடுமை குறுமை யென்றும், பருமை நுண்மை யென்றும் இருவகை. இவ்விருவகைப்பரிமாணங்களும் ஒவ்வொரு வடிவுடைப் பொருளுக்கும் உண்டு. ஆனால் இங்குக் கூறப்பட்ட இருவிதப் பரிமாணங்கள் ஒரு பொருளை மற்றொரு பொருளோடு ஒற்றுமைப் படுத்தும்போதுதான் ஒன்று மற்றொன்றைக் காட்டிலும் உயரம், குட்டை, பருமன், நுண்ணிது என்று கூறுவதற்காகும். இப்பதங்கள் சாதாரணமாய் ஒரு பொருளின் பரிமாணத்தைக் கூற எப்படி உதவுகின்றன என்று சிலர் சந்தேகிக்கலாம். இஃதுண்மையே. மேற் கூறப்பட்ட நெடுமை, குறுமை, பருமை, நுண்மைகள் முறையே எல்லாவற்றைக் காட்டிலும் உயர்ந்ததையும், எல்லாவற்றைக் காட்டிலும் தாழ்ந்ததையும் எல்லாவற்றைக் காட்டிலும் பருத்ததையும், எல்லாவற்றைக் காட்டிலும் நுண்ணியதையும் குறிக்கும். ஒன்றையொப்பிட்டுக் கூறும் பரிமாணங்களெல்லாம் இடைப்பட்ட பரிமாணமே என்று கூறலாம். இவ்விடைப்பட்ட பரிமாணமும் ஒவ்வொருவஸ்துவின் பரிமாணத்தையும் நன்றாய்க்குறிப்பித்துக் காட்டுவதில்லை. ஒரு ஐந்து பூனையைக் காட்டிலும் உயரம் நாயைக் காட்டிலும் குட்டையென்றால், அதன் பரிமாணம் ஸாமானியமாய் அறியப்படுமே யன்றி நன்றாய் அறியப்படாது. இதற்காக நம்முன்னோர்கள் சில அளத்தல் கருவிகளை யேற்படுத்தி யிருக்கிறார்கள். அவை நீட்டல் அளவுகளென்றும் முகத்தல் அளவுகளென்றும் இருவகையாம். நீட்டல் அளவுகள், அங்குலம், முழம், கெஜம் முதலிய மத்தியகத பரிமாணத்தைக் குறிக்கும். இவ்வளவுகளே ஒரு வஸ்துவின் உயரத்தையும் பருமனையும் நன்றாய்க் குறிப்பிக்கப் போதுமானவை. உதாரணமாக: ஒருவஸ்து நான்கடி உயரம் இரண்டடி பருமனென்றால், அவ்வஸ்துவின் பரிமாணம் நன்றாய் அறியப் பட்டதாம். முகத்தல் அளவைகளாவன:—படி, ஆழாக்கு, முதலியவைகள். அவை திரவப் பொருள்களான ஜலம் முதலியவைகளை யளக்க உபயோகமுள்ளனவா யிருக்கின்றன.

### கனம் (குருத்துவம்).

சாதாரணமாய் எல்லாப்பொருள்களுக்கும் எடையுண்டு. எடையில்லாதபொருளே கிடையாது. எல்லாப் பொருள்களுக்கும் ஏன் எடை யிருக்கிறதென்று சற்று ஆராய்வோமாயின், பூமியானது

எல்லாப் பொருள்களையும் தன்னிடத்திற்கு இழுத்துக் கொள்ளுஞ்சக்தியை யுடையதா யிருக்கின்றதென்று விளக்கும். இந்தச் சக்திக்கு ஆகர்ஷண சக்தி யென்று பெயர். 'பூமியின் இந்த ஆகர்ஷண சக்தியினால் தான் எல்லா வஸ்துக்களுக்கும் எடை ஏற்படுகிறது. எடை என்பது ஒவ்வொரு வஸ்துவிற்கும் பூமிக்கும் உள்ள ஆகர்ஷணசக்தியைத் தடுப்பதுதான். உதாரணமாக:—நாம் ஒரு கல்லை நம்முடையமுயற்சியால் ஆகாயத்திலெறிகிறோம்; நாம் எவ்வளவு சக்தியை உபயோகித்துக் கல்லை யெறிந்தோமோ அவ்வளவு உயரம் கல் உயரச் சென்று பிறகு அக் கல்லுக்கும் பூமிக்குமுள்ள ஆகர்ஷண சக்தியினால் அது பூமிக்கு இழுக்கப்பட்டு மிக்க வேகத்தோடு பூமியில் விழுகிறது. இவ் வேகத்தைத் தடுப்பதால்தான் நாம் அக்கல்லின் எடையை உணருகின்றோம். இதுவேயுமன்றிப் பூமியில்விழுந்துகிடக்கும் கல்லை மேலுக்கு எடுக்கிறபோதும் பூமிக்கும் அதற்கு முள்ள ஆகர்ஷண சக்தியை நாம் நம்முடைய சக்தியை உபயோகித்துத் தடுக்கிறோம். இதனாலும் நாம் அக் கல்லின் எடையை உணருகிறோம். ஆகவே எடை யென்பது வஸ்துக்களுக்கும் பூமிக்கு முள்ள ஆகர்ஷண சக்தியைத் தடுப்பதே யென்று பெறப்பட்டது. ஆனால் ஈயம் போன்ற சில வஸ்துக்கள் அதிக பளுவாயும் தக்கை போன்ற சில வஸ்துக்கள் அதிக இலேசாயும் இருப்பது நமக்கு அனுபவம். ஏன் சில கனமாயும்சில இலேசாயு மிருக்கவேண்டுமென்று யோசிக்கின், கனமா யிருக்கும் வஸ்துக்களின் அணுக்கள் இலேசாக விருக்கும் வஸ்துக்களின் அணுக்களைக்காட்டிலும் அதிக நெருக்கமா யிருப்பதனாலென்று புலப்படும். வஸ்துக்களுடைய அணுக்களின் அடர்த்திக்குத் தக்கபடியே பூமிக்கும் அவற்றிற்கு முள்ள ஆகர்ஷண சக்தியும் அதிகரிப்பதால், அடர்த்தியா யிருக்கும் அணுக்களுடைய பொருள்கள் பளுவானவையாயும் அவ்வளவு அடர்த்தியா யிராத அணுக்களையுடையபொருள்கள் இலேசானவையாயு மிருக்கின்றன. ஆதலால் தான் சில வஸ்துக்கள் இலேசானவையாயும் சில வஸ்துக்கள் கனமானவையாயுமிருக்கின்றன. வஸ்துக்களின் எடையை அறியச் சில பொதுவான நிறைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவைகள் பலம், சேர், வீசை முதலியனவாம். தராசுத் தட்டுகளில் ஒன்றில் நிறையைப்போட்டு மற்றொன்றில்நிறுக்க வேண்டிய வஸ்துவைப் போட்டு நிறுத்தால் அவ் வஸ்துவின் நிறை நன்றாய் அறியப் பட்டதாகும். வஸ்துக்களைக் கையிலெடுத்துப்பார்த்து அவற்றின் நிறையை ஸ்தூலமாய் அநுபவத்தினாலும் சொல்வது வழக்கம்.

குறிப்பு:—வஸ்துக்களின் நிறையைத் தங்கள் கைகளாலேயே மதித்துச் சொல்லப் பிள்ளைகளைப் பழக்கப் படுத்தல் வேண்டும்.

(வரும்.)

ந. சுப்பிரமணிய அய்யர்,
திருவேட்டீசுவரன்பேட்டை, சென்னை.

## ஜீவராசிகளின் ஆயுள் நிர்ணயம்.

### விருத்தம்.

அறைச ராயுசங் கட்காண்டு நூறதாம்
முறையி னண்டசங் கட்குறை முப்பது
கறையி லுற்பிசங் கட்கைந்து மாமதி
உறுசு வேதசத் திற்கோர் மதியரோ.

கருப்பையிற் பிறப்பனவாகிய ஆன்மாக்களுக்கு வயது 100 வருஷமும், முட்டையிற் பிறப்பனவாகிய ஆன்மாக்களுக்கு வயது 30 வருஷமும், நிலத்திற் பிறப்பனவாகிய ஆன்மாக்களுக்கு வயது 5 மாதமும், வியர்வையிற் பிறப்பனவாகிய ஆன்மாக்களுக்கு வயது ஒரு மாதமுமாகும்.

### ஒவ்வொரு ஜீவராசிகளின் ஆயுள் பிரமாணம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மனிதர்வயது | 100 | கொக்குவயது | 8 | கழுதைவயது | 25 |
| யாளிவயது | 100 | வண்டுவயது | 1 | கருடன்வயது | 32 |
| புலிவயது | 64 | பாம்புவயது | 1000 | குயில்வயது | 8 |
| ஒட்டகவயது | 72 | தவளைவயது | 300 | காக்கைவயது | 1000 |
| சமுத்திரத்திலுள்ள | | ஆமைவயது | 10 | ஆந்தைவயது | 12 |
| பெரியமீன்வயது | 1000 | அணில்வயது | 20 | கிளிவயது | 15 |
| எருமைவயது | 40 | ஓந்திவயது | 6 | கவுதாரிவயது | 10 |
| காட்டுப்பன்றிவயது | 100 | பல்லிவயது | 3 | பருந்துவயது | 8 |
| நாட்டுப்பன்றிவயது | 30 | எறும்புவயது | 1 | வல்லூறுவயது | 15 |
| நரிவயது | 30 | கொசுவயது மீ | 5 | புறாவயது | 10 |
| ஆட்டின்வயது | 15 | பேன்வயது மீ | 1 | குருவிவயது | 500 |
| கவரிமான்வயது | 24 | சிங்கத்தின்வயது | 100 | நீரில்வசிக்கின்ற | } 300 |
| முயல்வயது | 12 | குரங்குவயது | 300 | ஜந்துக்கள்வயது | |
| மயில்வயது | 18 | நாய்வயது | 35 | முதலைவயது | 8[illegible] |
| அன்னபக்ஷிவயது | 500 | யானைவயது | 1000 | கிரிப்பிள்ளைவயது | 2[illegible] |
| கோட்டான்வயது | 300 | பூனைவயது | 30 | உடும்புவயது | 10[illegible] |
| நாரைவயது | 12 | மான்வயது | 20 | எலிவயது | [illegible] |
| நாகணவாய்ப்புள்வயது | 8 | பசுவயது | 30 | தேள்வயது | [illegible] |
| செம்போத்துவயது | 8 | கடாவயது | 300 | மோட்டுப்பூச்சிவயது மீ | [illegible] |
| கழுகுவயது | 500 | குதிரைவயது | 32 | ஈ வயது மீ | [illegible] |
| கோழிவயது | 12 | காட்டுப்பசுவயது | 100 | கிருமிவயது நாள் | [illegible] |

V. மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார்,
Ex. முனிசிபல் கௌன்ஸிலர்,
பழனிஸ்தலம்.

# வர்த்தமானம்.

வசிய மருந்துசெய்யப் பிரேதத்தின் அங்கங்களை வெட்டி யெடுத்தவன்:—சில மாதங்கட்கு முன் பாரிசாவில் யூசப்ஆலி யென்னுமொரு மகம்மதியன் ஒரு மகம்மதியப் பிரேதத்தைப் புதைத்தவிடத்திற்குச்சென்று, புதைத்த அன்றிரவு சமாதியைத் தோண்டி, பிரேதத்தின் கால்களையும் கைகளையும் ஒருபெண்ணை வசப்படுத்தற்கு வசியமருந்து செய்ய வெட்டிக் கொண்டு போனான். மறுநாளவன் சில எலும்புகளைக் கழுவிக் கொண்டிருக்கும்போது போலீசாரால் பிடிக்கப்பட்டுத்தன் குற்றத்தை யொப்புக்கொண்டான். அக்கேஸ் அங்கு விசாரணையி லிருக்கின்றது.

ஓரற்புதப்பிள்ளையார்:—வேலூருக்கு மேற்கே 11½மைல் தூரத்துள்ள சேண்பாக்கத்தில் வருஷமொருமுறை யொருபிள்ளையார் பூமியிலிருந்து தானாகவே யுண்டாகின்றதாம். அவ்வாறுண்டான பிள்ளையார் நாள்தோறும் வளர்ந்துவருகின்றதாம். இப்பிள்ளையாரைத் தரிசிக்க வெள்ளிக்கிழமைதோறும் ஜனங்கள் மிகுதியாக வருகின்றனர்.

ஒரு பழைய நாணயத்தின் விலை மதிப்பு —ஸ்விட்ஸ்தேசத்தில் 16-வது நூற்றாண்டில் வழங்கிவந்த மூன்று ஷில்லிங்கு மதிப்புள்ள ஒரு நாணயம் ப்ராங்கு போர்ட்டில் நடந்த ஏலத்தில் 16810 ஷில்லிங்கிற்கு விற்கப்பட்டது.

பெண்கல்வி:—ஜப்பான் கவர்ன்மெண்டார் தம் தேசத்துப்பெண்கள் 6-வயது முதல் 12-வயது வரையில் கட்டாயமாக ஸ்கூல்களில் படிக்க வேண்டுமென்று சட்டமேற்படுத்தி யிருக்கின்றனர்.

பாரிஸ்டர் பரீக்ஷையில் தேறிய ஒரு மகம்மதியர்:—கொழும்பு கம்பெனித் தெருவில் வசிக்கும் சுல்தான் சாகிப் என்பவரது சகோதரர் புதல்வர் சீமைக்குச் சென்று பாரிஸ்டர் பரீட்சையிற் றேறிவந்தார்.

மின்சார உழவு:—கலிபோர்னியாவிலுள்ள விளை நிலங்களெல்லாம் மின்சார சக்தியைக் கொண்டு உழவு செய்யப்படுகின்றன.

குடிவிலக்கு:—சிலோன் கவர்ன்மெண்டில் தற்காலத்திலுள்ள சாராயக்கடைகளை விட அதிகமான கடைகளை இனியேற்படுத்துதல் கூடாதென்று 5000 புத்தகுருக்கள் கூடிக் கலோனியல் செக்ரிடரிக்கு மனுச்செய்திருக்கின்றனர்.

சிங்கங்களினின்றுந்தப்பிய இருவர்:—மத்திய ஆப்பிரிக்காவிலுள்ள ஸோம்பாவில் மிஸ்டர் யாக்டனெல்ட் என்பவர் தம்முடைய மனைவியோடு மோட்டார் வைசிகிலேறிச் சென்றபோது இரண்டு சிங்கங்கள் அவ்விருவரையுங் கொல்லச் சுமார் 5 மயில் தூரம் அவ்வண்டியைத் துறத்திச்சென்றன; முடிவில் வண்டியோடு தொடர்ந்தோடமுடியாது அவை சும்மா திரும்பிவிட்டன.

162413

சிவப்பிரகாசப்

# பெருந்திரட்டு.

சொருபாநந்தரால் திரட்டப்பட்டது.

இதுகாறும் வெளிவராதது.

விலை ரூபாய் மூன்று—வி. பி. முதலிய சார்ஜ் பிரத்தியேகம்.

மானேஜர், சக்ரவர்த்தினி ஆபீசு,

கோமளேசுவரன் பேட்டை, சென்னை.

## P. S. Sundram & Co.

Electro-Platers, Gilders and General Commission Agents.

உயர்ந்த தங்கம் வெள்ளிப் பதக்கங்களும் முதல்தரமான அநேக யோக்கியதா பத்திரங்களும் வெகுமானமாக அளிக்கப்பட்ட பெயர் பெற்ற

பி. எஸ். சுந்தரம் கம்பெனி,

எலக்டிரிக் தங்க நகை வியாபாரிகள்.

107-பெரியதெருவு, திருவல்லிக்கேணி, சென்னை

### எலக்ட்ரிக் தங்கநகை விலைவிவரம்.

32" நீளம் ¾" அகலம் 150. } அரும்பு சிலங்கை கட்டிய
32" நீளம் ⅝" அகலம் 210. }

| | | | |
|---|---|---|---|
| 5 வருஷம் காரண்டியுள்ள | மல்லிகை ஒட்டியாணம் | ரூ. 25 | 8 |
| | நாக ஒத்து பெரியது | 12 | 0 |
| | நாகஒத்து சிறியது | 9 | 0 |
| | காரை பெரியது | 10 | 0 |
| | காரை சிறியது | 7 | 8 |
| | வங்கி பெரியது | 10 | 0 |
| வருஷம் காரண்டியுள்ள | மல்லிகை ஒட்டியாணம் | 19 | 8 |
| | நாகஒத்து பெரியது | 9 | 0 |
| | ஷை சிறியது | 6 | 12 |
| | காரை பெரியது | 7 | 8 |
| | ஷை சிறியது | 5 | 12 |
| | வங்கி சிறியது | 8 | 0 |
| ௩ 1½-வருஷம் காரண்டி யுள்ள மல்லிகை ஒட்டியாணம் | ... ... | 13 | 8 |
| மல்லிகை ஒட்டியாணம் காரண்டியில்லாதது | ... ... | 8 | 8 |
| ஜாமந்திப்பூ | | 1 | |
| ரோஜாப்பூ | | 1 | 8 |

# கதாமஞ்சரி.

இஃதோரு மாதாந்த சஞ்சிகை. டிம்மி 24 பக்கங் கோண்ட 3 பார அளவில் மாதந்தோறும் வெளிவரும்.

இதில் கதாசரித் சாகரத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு அடங்கியிருக்கின்றது. இக்கதை பூர்வம் உமாதேவியாரின் பிரீதியார்த்தம் பரமசிவனால் திருவாய்மலர்ந்தருளப்பட்டது. இப்பரத கண்டத்தின் வடமேற் கெல்லைப் புறத்தின்கண் காஸ்மீர தேசத்தை 800 வருடங்கட்கு முன்னர் ராஜ்ய பாரஞ் செய்துவந்த ஸ்ரீ ஹர்ஷன் என்னும் அரசன் தனது ராஜ்யத்தில் நேர்ந்த யுத்தத்தில் மரணமடைந்தனன்; மன்னனிறந்த துக்கத்திற் காற்றாத சூரியவதி யென்னும் அன்னையாரின் சோகத்தை நிவிர்த்திக்குமாறு இக்கதை சோம தேவரால் இயற்றப்பட்டது. இக்கதையின் போக்கு நவ நவமாகவும், படிப்போர்க்குப் பரமானந்தத்தைப் பயப்பிப்பதாகவு மிருக்கும். மேலும், இது தெய்வபக்தி, வைராக்கியம், நல்லொழுக்கம் முதலிய நல்லனவெல்லாம் நலமுறப் பொருந்துமாறு செய்யும். இதன் பெயருக் கேற்றவாறே கதையும் சாகரம் போன்று விளங்கும். இது யாவரும் செவ்விதி னுணருமாறு எளிய வசன நடையி லெழுதப்பட்டுள்ளது.

| சந்தாவிவரம். | | | |
|---|---|---|---|
| வருஷம் 1க்கு ரூ. | 1 | 0 | 0 |
| ஆறு மாதத்திற்கு | 0 | 10 | 0 |
| தனிப்பிரதி | 0 | 2 | 0 |
| வெளித் தேசத்திற்கு | | | |
| வருஷம் 1க்கு | 1 | 8 | 0 |
| ஆறு மாதத்திற்கு | 0 | 14 | 0 |
| தனிப்பிரதி | 0 | 3 | 0 |

| விளம்பர விகிதம் | | | |
|---|---|---|---|
| மாதம் 1க்கு பக்கத்திற்கு | 1 | 0 | 0 |
| ,, ½ பக்கத்திற்கு | 0 | 10 | 0 |
| ,, ¼ பக்கத்திகற்கு | 0 | 6 | 0 |
| சில்லரை விளம்பரங்களுக்கு வரி 1க்கு அணு | 0 | 1 | 0 |

திரு. அ. சுப்பிரமணி பாரதியார்,
மானேஜர், லோகோபகாரி ஆபீசு,
கோமளேசுவரன் பேட்டை, சென்னை.

## 170-பக்கப் புத்தகம் இனும்!

இது நல்ல ஆரோக்கியமும் நீடித்த சுகவாழ்வும்தரும்; இயற்கையாயுள்ள சில விதிகளை அனுசரிப்பதைப் பொறுத்திருக்கிறது. இச்சிறந்த புத்தகம் சுகவழியைக் காட்டி, நல்ல ஆரோக்கியத்தோடும் எப்பொழுதும் திடகாத்திரத்தோடும், நீண்ட ஆயுளோடு மிருக்கும்படி செய்து நல்ல அதிர்ஷ்டத்தைக் காட்டும். இப்புஸ்தகம் இனமாகவும் தபாற் செலவில்லாமலும் அனுப்பப்படும்

இப்புத்தகத்திற்கு இன்றைக்கே எழுதுங்கள்.

வைத்திய சாஸ்திரி
**மணிசங்கர் கோவிந்தஜி,**
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
22, பிராட்வே & 96. மவுண்ட்ரோட், மதராஸ்.
ஏஜெண்டு:—M. A. நெல்லையப்ப முதலியார்,
38 சின்னகடைத்தெருவு, திருச்சினாப்பள்ளி.

## ஆநந்த ராமாயணம்.

இதுவரையில் தமிழில் வெளிவராதது.

இது வால்மீகி மகாரிஷியால் வடமொழியில் இயற்றப்பட்டுள்ளது. இதில் வால்மீகி ராமாயணத்தில் இல்லாத அநேக விஷயங்கள் அடங்கியுள்ளன; ஸ்ரீராம லட்சுமணருடைய ஜனனமும், வளர்ப்பும், சீதாதேவியினுடைய ஜனனமும், அத்தேவிக்குப் பல பெயர் வந்ததற்குக் காரணமும் விளக்கி யிருப்பது வெகு இனிமையாயிருக்கும். இஃது ஆநந்த ராமாயணமென்னும் பெயருக் கேற்றவாறு படிப்போர் மனதிற்கு உற்சாகமும், ஆநந்தமும் உண்டாக்கும்; இதில் அநேக சித்திரப் படங்களடங்கியிருக்கின்றன. விலை ரூபாய் 5. தபாற் கூலி வேறு.

மானேஜர்:—
சக்ரவர்த்தினி ஆபீஸ்,
சென்னை.

# பட்டுப் பீதாம்பர கம்பெனி, காசி.

**திருப்தி யில்லாதவைகள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படும்.**

**பட்டுப் பீதாம்பர காட்லாக்து இனமாக அனுப்பப்படும்.**

**உருத்திராக்ஷங்கள் !!** **ஜபமாலைகள் !!**

## பரிசுத்தமானவை.

108 உள்ள மாலை 1-க்கு 6-அணு முதல் ரூபாய் 12-வரை. விலை அதிகப் படுவதுபோல் மணிகள் சிறிதாக இருக்கும். 6-முகக் கண்டிகள் 32 உள்ளது; கண்டி 1-க்கு ரூபாய் 1-முதல் 10-வரை. 5-முகக்கண்டி 32-உள்ளது; கண்டி 1-க்கு அணு 10-முதல் ரூபா 10 வரை. விலை அதிகப்படுவது போல் மணிகள் பெரிதாக இருக்கும்.

## வெண்பட்டு வேஷ்டிகள்.

சுத்தமான வெண்பட்டு வேஷ்டிகள் கோயம்புத்தூர் வேஷ்டிகள் மாதிரி சன்னகம்பி, ருத்திராக்ஷ கம்பி, ஜரிகை கம்பி போட்டவை.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | முழம் | 2 | அகலம் | 1-க்கு | ரூபாய் | 4-8-0-முதல் | 7 | வரை |
| 6 | ,, | 2½ | ,, | 1-க்கு | ,, | 7 | ,, 9 | ,, |
| 6 | ,, | 3 | ,, | 1-க்கு | ,, | 10 | ,, 12 | ,, |
| 7 | ,, | 2½ | ,, | 1-க்கு | ,, | 8 | ,, 12 | ,, |
| 7 | ,, | 3 | ,, | 1-க்கு | ,, | 10 | ,, 14 | ,, |
| 8 | ,, | 3 | ,, | 1-க்கு | ,, | 12 | ,, 18 | ,, |
| 9 | ,, | 3 | ,, | 1-க்கு | ,, | 14 | ,, 20 | ,, |
| 10 | ,, | 3 | ,, | 1-க்கு | ,, | 15 | ,, 22 | ,, |

## பனி ! பனி !! பனி !!!

பனிக்கு அடக்கமான சுத்தமான கம்பளி ரோமத்தால் செய்து உறுதியும், நைஸும், நேர்த்தியுமான கம்பளிப் போர்வைகள், 6-முழம் நீளம் 3-முழம் அகலம் சிகப்பு முதலிய சகலநிறத்திலும் தயாராக இருக்கின்றன. உருப்படி 1-க்கு ரூபாய் 5-8-0. ஷை சிறிது 1-க்கு ரூபாய் 4-8-0. மேக வர்ணப் போர்வைக்கு ரூபாய் 6 8 0. தபாற் செலவு பிரத்தியேகம்.

## காசி வயிரவர் கயிறு.

1-வது நெம்பர் 100-க்கு... 3 0 0    3-வது நெம்பர் 100-க்கு...2 0 0
2-வது நெம்பர் 100-க்கு... 2 8 0    4-வது நெம்பர் 100-க்கு...0 6 0

## குழந்தைகள் !

குழந்தைகள் விளையாடக் கூடிய பித்தளை வெங்கலத்தால் செய்த செம்புக்குடம், கரண்டி முதல் 32 சாமான்கள் அடங்கிய அழகும் நேர்த்தியும் நைஸும் பளபளப்புமுள்ள அழகிய பாத்திரங்கள் 32 உள்ள சிறு செட்டு 1-க்கு ரூபாய் ? 0 0. பெரிய செட்டு 1-க்கு ரூபாய் 4 0 0.

உடனே எழுதுங்கள். விலாசம்—மானேஜர்,

பட்டுப் பீதாம்பர கம்பெனி, தாராநகர் தெரு,

*MANAGER,*

*Silk Petamber Co., Daranagar Street, Benares City.*